உ

முருகன் துணை

ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க !



மயிலம் பொம்மபுர ஆதீனம்

19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

நூற்றாண்டு விழா

ஆய்வுக் கோவை

(ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரியும், புதுவைப் பல்கலைக்கழகம் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலமும் இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

தொகுதி - 2

தொகுப்பு & பதிப்பு

நல்லாவூர்

முனைவர் ச. திருநாவுக்கரசு

முதல்வர்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,

கலை, அறிவியல் கல்லூரி மயிலம்

வெளியீடு

மயிலம் பொம்மபுர ஆதீனம்

2025

நூல் குறிப்பு

தலைப்பு	:	**ஆய்வுக் கோவை (தொகுதி - 2)** மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா
தொகுப்பு & பதிப்பு	:	நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு
பதிப்பு	:	முதற்பதிப்பு 2025
உரிமை &வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 604 304 தொலைபேசி எண்: 8903879223 பொம்மையபாளையம் தொலைபேசி எண்: 0413-655188
பொருள்	:	இலக்கியம்
தாள்	:	மேப்லித்தோ வெள்ளை
அளவு	:	டெம்மி
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	34 + 514 (1092-இரண்டு தொகுதிகள் சேர்த்து)
விலை	:	ரூ.800/- (இரண்டு தொகுதிகளும்)
படிகள்	:	1000
அச்சிட்டோர்	:	புரொபஷ்னல் பிரிண்டர்ஸ் புதிய எண் 9, எண். 5, பாலாஜி நகர், ஐயம்பெருமாள் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014 9443403134
ISBN எண்	:	9 789385 508226

நூலாக்கக் குழு

முனைவர் உ சிவசுப்ரமணியன், திரு. இரா. குமார், முனைவர் நீ. காஞ்சனா, முனைவர் அ. சதீஷ், முனைவர் இரா. வள்ளி, முனைவர் க. இலட்சுமிதேவி, முனைவர் கி. புஷ்பா, முனைவர் ஞ. சுபஸ்ரீ, முனைவர் ந. அய்யனார்



மயிலம் - பொம்மபுர ஆதீனம்
மயிலம் திருமடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி
தெய்வானையர் உடனுறை ஸ்ரீ முருகப்பெருமான்
மற்றும் ஸ்ரீ பாலசித்தர் - ஆதி சிவஞானி



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
1928 - 1965



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
1965 - 2011



திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்
ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
2011 முதல்



குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி.

இந்நூலை விசுவாவசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 31ஆம் நாள் (17.10.2025) வெள்ளிக்கிழமை அன்று புதுவைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் வெளியிட குன்றக்குடி ஆதீனம், தவத்திரு பொன்னம்பல அடிகளார், இரத்தினகிரி பாலமுருகன் அடிமை சுவாமிகள், புதுவைப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு இலட்சுமி நாராயணன் மற்றும் அறிஞர் பெருமக்கள் பெற்றுக் கொண்டனர்.

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை	அருளாட்சி செய்த ஆண்டுகள்	குருபூசை நட்சத்திரம்
1	ஸ்ரீ பாலசித்தர்	ஆதீனத்தைத் தோற்றுவித்த முதற்குரவர்	கி.பி.7 நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை (500 ஆண்டுகளுக்கு மேல்)	ஆனி - திருவாதிரை
2	ஆதி சிவஞானி தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	2ஆம் பட்டம்	கி.பி.1200 முதல் கி.பி. 1645 வரை	வைகாசி - விசாகம்
3	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	3ஆம் பட்டம்	கி.பி.1645 - 1695	தை - திருவாதிரை
4	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	4ஆம் பட்டம்	கி.பி.1695 - 1727	கார்த்திகை - திருவாதிரை
5	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	5ஆம் பட்டம்	கி.பி.1727 - 1733	மாசி - சதயம்
6	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	6ஆம் பட்டம்	கி.பி.1733 - 1746	வைகாசி - பூசம்
7	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	7ஆம் பட்டம்	கி.பி.1746 - 1761	மாசி - பூராடம்
8	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	8ஆம் பட்டம்	கி.பி.1761 - 1770	புரட்டாசி - கார்த்திகை
9	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	9ஆம் பட்டம்	கி.பி.1770 - 1773	வைகாசி - மூலம்
10	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	10ஆம் பட்டம்	கி.பி.1773 - 1784	மார்கழி - சித்திரை
11	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	11ஆம் பட்டம்	கி.பி.1784 - 1809	புரட்டாசி - சுவாதி
12	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	12ஆம் பட்டம்	கி.பி.1809 - 1817	வைகாசி - பூரட்டாதி
13	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	13ஆம் பட்டம்	கி.பி.1817 இல் 18 நாட்கள் மட்டும்	வைகாசி - சுவாதி
14	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	14ஆம் பட்டம்	கி.பி.1817 - 1843	புரட்டாசி - ரேவதி
15	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	15ஆம் பட்டம்	கி.பி.1843 - 1887	சித்திரை - புனர்பூசம்
16	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	16ஆம் பட்டம்	கி.பி.1887 - 1916	ஆடி - பூராடம்
17	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	17ஆம் பட்டம்	கி.பி.1916 - 1928	மாசி - அசுவினி
18	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	18ஆம் பட்டம்	கி.பி.1928 - 1965	புரட்டாசி - ஆயில்யம்
19	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	19ஆம் பட்டம்	கி.பி.1965 - 2011	ஆனி - உத்திராடம்
20	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	20ஆம் பட்டம்	கி.பி.2011 முதல்	-

உ

சிவா முருகா

சிவமயம்

ஸ்ரீபாலசி குருவே நம:



திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் & பொம்மையபாளையம், விழுப்புரம் மாவட்டம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

சீர்வளர்சீர் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

அருளிய

ஆசியுரை

அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்கும் அது
சும்மா தலைமீது சுமத்தினனால்
கைம்மாறு உளதோ கடையேன் இடையே (சிவ.பா.கலம்.பா.24)

இறையருளைப் பெறுவதற்கு சான்றோர்களாகிய பெரியவர்கள் பலவழிகளை வகுத்துள்ளனர். வழிபாட்டின் மூலம் மனிதன் நெறியான வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டு வளர்ச்சிபெற முடியும். அகவழிபாடு, புறவழிபாடு எனும் இரண்டும் சரியை, கிரியை எனப்பெற்று அவரவர் பக்குவ முதிர்ச்சிக்கு ஏற்ப பலன் தருகின்றன. மானசீகமாக இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற அருளாளர்களே குருமார்கள் எனப்பெறுகின்றனர்.

"குருபார்க்கக் கோடி நன்மை" - என்பது பெரியோர் வாக்கு. "குருவழிபாட்டு நெறி" ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உயர்ந்து சிறந்திருக்கின்றது.

ஈதலும் பல கோலால பூசையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமும் குரு சீர்பாத சேவையும் மறவாத (திருப்புகழ்)

எனும் பாடலடிகள் பூசை முறைகளின் சிறப்பையும், ஈதலின் உயர்வையும், ஓதலின் முக்கியத்துவத்தையும், குருவின் திருவடி

போற்றும் மாண்பினையும் விளக்கி நிற்கின்றன.

வீரசைவ நெறிக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் ஆற்றிய சமுதாயப் பணிகள் மற்றும் சமயப்பணிகள் சமுகத்திற்கு மாபெரும் ஏற்றத்தை பெற்றுத் தந்தன.

சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்து
அத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென்று அடிபணிவாரே (திருமந்திரம்.1578)

எனும் திருமூலர் வாக்கு குருவின் மேன்மையைச் சுட்டுகிறது.

ஊருக்கு உழைப்பதே யோகம்
அவரவர் அனுபவத்தால் எய்துவதே ஞானம்

எனக்கொண்டு சமுதாயப் பணியாற்றி, சமயநெறியில் தவ வாழ்வு வாழ்ந்தவர்கள் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள். தவஞானம் இல்லாதாரையும் தமது சிவஞானத்தால் பொலியச் செய்தவர்கள். "தன்னை மருவினரைத் தனாக்கும் சிவஞானி" எனும் சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கிற்கேற்ப மக்களோடு மக்களாகச் சென்று பழகி எளிவந்த பிரானாகி மானுடத்தை வாழவைத்தார்கள்.

குருவையும் இறைவனையும் ஒன்றெனவே எண்ணி, குருவடிவத்தில் வீற்றிருப்பது இறைவனே என்று நினைந்து பக்தி செலுத்த வேண்டும் என்று ஞான நூல்கள் குறிப்பிடுகின்றன. கருணையின் திருவுருவமாக விளங்கும் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் கம்பீரமான அருள்தோற்றம் உடையவர்கள். கலைக்களஞ்சியம் எனும் வார்த்தைக்கு உரிய பொருளை நாம் குருமகா சந்நிதானங்களுடன் உரையாடும்போது தெரிந்து கொள்ளலாம். தொலைக்காட்சி, வானொலி போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத அந்தக் காலத்திலேயே, இந்தியாவின் எந்தப் பகுதியில் உள்ள கோயில்கள் பற்றியும், அதன் தெய்வீக அம்சங்கள் குறித்தும் ஒவ்வோர் இடத்தின் சிறப்பம்சம் குறித்தும், ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம் என்று வாழ்வியல் சார்ந்த அத்தனைக் கூறுகளையும் அருமையாக விளக்கும் வல்லமை படைத்தவர்கள். ஆன்மீக நெறியில் தமக்கென ஒரு தனித்துவத்தை உண்டாக்கியவர்கள்.

முன்னைப் பழமைக்குப் பழமையாய்
பின்னைப் புதுமைக்குப் புதுமையாய்

பார்போற்றும் பாலசித்தர் பரம்பரையில், கார்முகிலாய் கலங்கரை விளக்கமாய், தெய்வத் தமிழைப் பாரின்மிசை விளங்கச்செய்த விமலர் பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் குருவருள் மரபைப் போற்றும் வகையில், சுவாமிகள் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கம் கொண்டாடப்படுகிறது.

உயர்ந்திடும் பத்தொன் பதாகிடும் பட்டம்
ஒண்மணி நீயும் நல்பீட மேறி
அயர்ந்திடும் மக்களைத் தேற்றும் குருவாய்
அகிலமும் போற்ற அருளாட் சியுமே
நயமுடன் செய்து நல்வீர சைவம்
நலம்பெறக் காத்து மக்கட் பணியும்
செயம்பெறச் செய்துவாழ் பொம்ம புரத்துச்
செல்வமே சிவஞான பாலய தேசிகரே! (சதமணி மாலை. 23)

பத்தொன்பதாம் பட்டமாகிய நல்குருபீடம் அமர்ந்து உலகம் போற்ற அருளாட்சி செய்து, வீரசைவ நெறிகாத்து மக்கட் பணியே மகேசன் பணியென பொம்மபுரத்து உறைந்திடும் செல்வமே! சிவஞானியே! என்று புலவர் பெருமக்கள் பலராலும் போற்றப் படுபவர்கள்.

வேலை உலகெல்லாம் வியக்கும் சிவஞானி" எனும் நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் சீரிய வரிகளுக்கேற்ப நம்மிடையே வாழ்ந்து இட்டலிங்கப் பரசிவத்தில் கலந்தருளி நம்மை வாழ்வித்துக் கொண்டிருக்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் சுவாமிகளின் நினைவைப் போற்றும் வகையில் கொண்டாடப்படும் நூற்றாண்டு விழாவை ஒட்டி 9 கவிதைகள் 179 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக் கோவை இரண்டு தொகுதிகளாக வெளியிடப் படுகின்றது. இந்தியா மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளைச் சார்ந்த பல்வேறு தமிழறிஞர்களும், வீரசைவ அன்பர் பெருமக்களும், சமயச் சான்றோர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும், தங்கள் படைப்புகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

இந்நூலாக்கப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. திருநாவுக்கரசு அவருக்குத் துணைநின்ற தமிழ்த்துறைப் பேராசிரியப் பெருமக்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கிறோம்.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியும், புதுவைப் பல்கலைக்கழகம் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலமும் இணைந்து நடத்தும் **19ஆம் பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு விழா பன்னாட்டு கருத்தரங்கிற்குத்** தம்மை முழுவதும் அர்ப்பணித்துக்கொண்ட அத்தனை பேருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ பாலசித்தர் சிவஞானி குருவருளும், திருமடத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் மணக்கோல மாமுருகன் திருவருளும் நிறைந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்



பதிப்புரை

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற நம்பிக்கையைத் தரும் சமயங்களுள் வீரசைவம் முன்னிற்கும் சமயமாகும். சாதி வேறுபாடுகள் அற்ற சமத்துவ சமுதாயத்தைக் காணவே வீரசைவம் வித்திட்டது. இக்கொள்கையை உயிர் நாடியாகக் கொண்டு பிறப்பால் உயர்வு தாழ்வு காண்பது கூடாது என்பதைப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயிலம் பொம்மபுர ஆதீனச் சீடர் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க - நீக்கு
பவர் ஆர் அரவின் பருமணிகண்டு என்றும்
கவரார் கடலின் கடு **(நன்னெறி.22)**

என்கிறார். எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகுக்கும் தலைவன் இறைவன். இறைவன் எவ்வுருவில் இருக்கிறான் என்று சொல்ல இயலாது. அவன் ஒருவராலும் அறியப்படாதவன் என்பதை,

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றும்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்றுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது **(அற்புதத் திருவந்தாதி)**

என்று காரைக்காலம்மையார் பாடுவார். மேலும் இறைவன் வேண்டியார்க்கு வேண்டிய வடிவில் வருபவன் என்பதை,

எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே யாம்

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

குருவருள் இன்றேல் திருவருள் இல்லை என்பார்கள். நல்லாற்றூர் சிவப்பிரகாசர் தமது ஞான குருவாகிய ஆதி சிவஞான பாலய சுவாமிகளைத் துதித்து ஐந்து நூல்களைப் பாடி அருளினார்கள். குருவருளாலேயே இறையருளைப் பெற்று எண்ணிய எண்ணியாங்கு எய்தும் வழிமுறைகளைச் சிவப்பிரகாசர் கூறுகிறார்.

கயிலை மலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயில மலை மீதிருக்கும் வள்ளல் (ஸ்ரீ.சிவ.பா.நெஞ்.தூது)

என்று சிவஞானியைப் போற்றிப் பரவுகின்றார்.

ஆன நாமம் அவனியுளோர் சிவ
ஞான தேசிகன் என்று ஏத்த நண்ணியே ஆன நாம் (பாச.பரணி)

என்று உலகமக்கள் உச்சரித்துக் கடைத்தேற்றம் பெற சிவஞான தேசிகன் என்ற திருப்பெயர் பெற்றனர் என்று உள்ளுணர்வில் உணர்ந்து வைத்தியநாத தேசிகர் பாடியுள்ளார்.

குருவின் அருளை முழுவதும் பெற்ற வைத்தியநாத தேசிகர் **சிவனே சிவஞானி** *எனும் உள்ளுணர்வினால் உந்தப்பட்டு எழுதப்பெற்ற பாசவதைப் பரணியில் சிவஞானியின் சிறப்புகள் விரித்துரைக்கப்படுகின்றன.*

மேன்மை உற்ற சிவஞான தேசிகன் இவன் எனும்
மிக்க நாமமொடு மேதினி தழைக்கும் முறையால்
மானிடப் புதிய கஞ்சுகம் அணிந்து தமிழ்தேர்
மயிலை மால்வரை வளம் பெருக வந்த பரிசும் (பாச.பரணி)

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர். அவரைத் தொடர்ந்து ஆதி சிவஞான பாலய சுவாமிகள் 2ஆம் பட்டமாக வீற்றிருந்து அருள்பாலித்தார்கள். வாழையடி வாழையென வந்த ஞானப்பரம்பரையில் பதினெட்டாம் பட்டம் சுவாமிகள் காலத்தில் தமிழ்மொழியும், வீரசைவமும் தழைத்து ஓங்கியது. அவர்களைத் தொடர்ந்து தமிழும் சைவமும் தழைத்து இனிது ஓங்குவதற்கு அருட்செங்கோலை ஏந்தியவர்கள் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் 19ஆம் பட்டம் சுவாமிகள் ஆவார்கள்.

19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அவர்கள் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களை உரையுடன் வெளியிட திட்டமிட்டு அப்பணி மூலம் உரைநூல்கள் வெளியிட்டு அருளினார்கள். பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள் பொம்மைய பாளையத்தில் சித்தர் சிவஞானி ஆடவர் கலை, அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்து கல்விக்கொடையாற்றிய வள்ளலாகத் திகழ்ந்தார்கள்.

சுவாமிகளைத் தொடர்ந்து 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் இறைபணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு சமயப் பணியையும் சமுதாயப் பணியையும் மேற்கொண்டு வருகிறார்கள். அவ்வகையில் பாலசித்தருக்கும் ஆதி சிவஞான பாலய சுவாமிகளுக்கும் திருவருள் பாலித்த மயிலம் முருகப்பெருமான் மீது புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களையும் வெளியிட்டு அருளினார்கள்.

தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், வீரசைவ மெய்யன்பர்களும் பல்வேறு சமயச் சான்றோர்களும் பேராசிரியர்களும் மாணவர்களும் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

சுவாமிகளின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி இரண்டுநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தி ஆய்வுக்கோவை வெளியிடுவது என்பது நமது கடமையாகும்.

தமிழ்க் கடவுள் எனச் சிறப்பிக்கப்பெறும் முருகப்பெருமான் திருவருளால் மயில மலையில் முருகன் குருவடிவில் வந்தமர்ந்து சித்தர் மரபைத் தோற்றுவித்து ஸ்ரீ பாலசித்தர் சிவஞான பாலய சுவாமிகளின் குருமரபு இன்றளவும் தொடர்கிறது. வீரசைவ நெறி மண்ணுலகில் தழைப்பதற்கு வந்துதித்த ஸ்ரீ பாலசித்தர் திருக்கயிலாய ஞான பரம்பரையில் இன்று அருளாட்சி புரிந்துவரும் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் அரிய பெரிய முயற்சியினால் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை சிறப்புற வெளிவருகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை, மயிலம் திருமடத்தின் தமிழ்ப் பணிகள் குருவே சிவம். சிவமே சிவஞானி, சித்திதரும் சிவஞான தேவன், சிவஞானி எனும் திருநாமம், குவலயம் போற்றும் குருவருள், சிவஞான பாலய சுவாமிகளின் திருமடத்தின் தமிழ்த்தொண்டும் கல்விப் பணியும், குருவருளும் திருவருளும், சிவன் - முருகள் - சிவஞானி, சிவப்பிரகாசரும் சிவஞானியும், மயிலம் பொம்மபுர ஆதீன சமுதாயத் தொண்டு, சிவஞான வள்ளல், சிவஞானியின் மகிமை, வண்ணச் சரபமம்

போற்றும் சிவஞானி என்று பல்வேறு தலைப்புகளில் 180க்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஆய்வுக் கோவையில் இடம்பெற்றுச் சிறப்பிக்கின்றன.

இந்நூலாக்கப் பணியில் எம்மோடு துணைநின்று முழு ஈடுபாட்டுடன் உழைத்த தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் கண்ணியம் அ. சதீஷ், முனைவர் இரா. வள்ளி ஆகியோருக்கு மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், முனைவர் க. இலட்சுமி தேவி, முனைவர் நீ. காஞ்சனா, முனைவர் உ. சிவசுப்ரமணியன், திரு. இரா. குமார், முனைவர் கி. புஷ்பா, முனைவர் ஞா. சுபஸ்ரீ, முனைவர் ந. அய்யனார் ஆகியோருக்கும் நன்றி பாராட்டுகின்றேன்.

பதிப்புப் பணியில் என்னை ஈடுபடுத்திய 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் திருவடித் தாமரையைப் பணிந்து வணங்குகின்றோம்.

நல்லாவூர்
முனைவர் ச. திருநாவுக்கரசு
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம்

ஆதீனங்களின் வாழ்த்துரைகள்



அருள் வாழ்த்துரை

சைவசமயத்தின் வளர்ச்சிப் பணிகளில் அயராது உழைத்து வரும் ஆதீனங்களுள் ஒன்றாகத் திகழ்வது மயிலம் பொம்மபுர ஆதீனம். வீரசைவ ஆதீனமாகத் திகழும் இவ்வாதீனத்தின் முதற்குருநாதர் ஸ்ரீ பாலசித்தர். அவரைத் தொடர்ந்து ஆதி சிவஞான பாலய சுவாமிகள் இரண்டாம் பட்டமாக வீற்றிருந்து அருள் பாலித்தார்கள். வாழையடி வாழையென வந்த ஞானப் பரம்பரையில் பதினெட்டாம் பட்டம் சுவாமிகள் காலத்தில் தமிழ்மொழியும் வீரசைவமும் தழைத்து ஓங்கியது. தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்து நமது ஆதீனத்தின் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் உள்ளிட்ட பலரும் தமிழ்பயில வழிவகை செய்த பெருந்தகையாளர்.

அவர்களைத் தொடர்ந்து தமிழும் சைவமும் தழைத்து இனிது ஓங்குவதற்கு அருட்செங்கோலை ஏந்தியவர்கள் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள். சுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் குருபூசை நன்னாளில் தோன்றியதால் சிவப்பிரகாசம் என்னும் இயற்பெயர் பெற்றார்கள். சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் பயின்றவர்கள்; பயின்ற கல்லூரியிலேயே முதல்வராகப் பணியாற்றியவர்கள்; கல்லூரியின் செயலராகப் பொறுப்பேற்றுத் திறம்பட நிர்வகித்தவர்கள்; சுவாமிகள் காலத்தில் தமிழ்க் கல்லூரியில் வித்துவான் என்ற பெயர் மாற்றம் செய்யப்பெற்று புலவர் பட்டம் என்று வழங்கப்பெற்றது. கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி விளையாட்டு மற்றும் பிற துறைகளில் சிறக்கும்படி பல்வேறு மாற்றங்களைச் சிறந்தமுறையில் கல்லூரியில் கொண்டு வந்தவர்கள். "அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு

எழுத்தறிவித்தல்" என்ற வாக்கிற்கேற்ப பொம்மையபாளையத்தில் சித்தர் சிவஞானி ஆடவர் கலை, அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்துக் கல்விக் கொடையாற்றிய வள்ளலாகத் திகழ்ந்தார்கள்.

மாணவர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட சந்நிதானங்கள் அவர்கள் உணவு உண்ணும் பொழுது பார்வையிட்டு, உணவு பரிமாறும் விதம், உண்ணும் விதம் ஆகியவற்றைத் திருத்தமாக எடுத்துக்கூறி நிறைவு செய்வர்கள். தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பெரும்புலவர்களைக் கொண்டு சமய வகுப்புகளை நடத்தினார்கள்.

கல்விப்பணிகளைப் போலவே சமயப் பணிகளிலும் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தவர் பத்தொன்பதாம் சந்நிதானங்கள். பதினெட்டாம் பட்டம் குருமகாசந்நிதானங்கள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மயிலம் திருமடத்தில் உள்ள விநாயகர், பாலசித்தர் மற்றும் முருகப் பெருமான் சந்நிதியில் சிறந்த வேலைப்பாட்டுடன் முன்மண்டபம் மற்றும் கற்கோயில் உருவாக்கித் திருக்குடமுழுக்கினைச் சீரும் சிறப்புமாகச் செய்து வைத்தார்கள். நல்லாற்றூர் சிவப்பிரகாசர் சமாதி பீடம் சிதிலமடைந்த நிலையில் அதனைப் புதுப்பித்துப் புதிய விமானம் எழுப்பி திருக்குடமுழுக்கினை நிகழ்த்தினார்கள். பொம்மபுரக் கடற்கரைக்குத் கீழ்த்திசையில் சமயபுரத்து அம்மன் தோற்றப் பொலிவை ஒத்த மாரியம்மன் கோயிலைக் கட்டி குடமுழுக்கு செய்தார்கள். புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் அமைந்துள்ள பல திருக்கோயில்களுக்குத் தனது திருக்கரங்களால் திருப்பணி செய்து வைத்த பெருமைக்குரியவர்கள். நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் நூல்களை அதிகளவில் பதிப்பித்ததோடு ஊர்கள்தோறும் சிவப்பிரகாசர் குறித்த கருத்தரங்குகளை நடத்திய பெருந்தகையாளர். சந்நிதானங்களின் அருளாட்சிக் காலத்தில் ஸ்ரீ பாலசித்தர் அக்னி தீர்த்த திருக்குளம் தூர்வாரப்பட்டு கருங்கல் படிக்கட்டுகள் சிறப்பாக அமைக்கப் பட்டன. பன்னிரு வழிபாட்டு மன்றம் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டன. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் தங்குவதற்குப் பெரியமண்டபம் கட்டப்பட்டு மின் வசதியும் அவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது.

சந்நிதானங்கள் கலந்து கொண்ட விழாக்களில் எல்லாம் துதிப்பாடல்கள் பாடியபின் உரையாற்றுதல் வழக்கமாகும். அவ்வாறு தமக்கே உரிய இனிய குரலில் இசையுடன் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழின் பாடல்களைப் பாடுவார்கள். நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் பல நூல்களை உரையுடன் வெளியிட்டு அருளினார்கள். தனக்குப்பின் ஆதீனத்தின் அருட்பணிகளை மிகச் சிறப்பான முறையில் ஆற்றிவரும் இருபதாம் பட்டம் சந்நிதானங்களைச் சிறந்த முறையில் உருவாக்கித் தந்தவர்கள். நமக்கு இலிங்கதாரணம் செய்தபோது கயிலைக்குருமணி அடிகள் பெருந்தகையுடன் மயிலம் பத்தொன்பதாம் சந்நிதானங்கள், கும்பகோணம் பெரியமடம் சுவாமிகள், சுந்தர சுவாமிகள் நால்வரும் இருந்து இலிங்கதாரணம் செய்தது என்றும் நம் மனதில் நீங்கா நினைவாக நிறைந்திருக்கும்.

இத்தகைய சிறப்புமிக்க சுவாமிகளின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியும் புதுவைப் பல்கலைக்கழகமும் இணைந்து சந்நிதானங்களின் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்த இருப்பது மகிழ்வுக்குரியது. அவ்வகையில் சந்நிதானங்கள் குறித்த செய்திகளை உள்ளடக்கிய கட்டுரைகளைத் தாங்கிவரும் இவ்வாய்வுக் கோவை சிறக்கவும் கருத்தரங்கம் சிறக்கவும் இவ்வாய்வுக்கோவை உருவாக உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழவும் அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளையும் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத்தந்தை நூற்றாண்டு நாயகர் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

வளமுடன் வாழ !

ஓம்
குருவே துணை

வரமருள் வேலா !!

Dr. Thavathiru Kumaragurubara Swamigal
HEAD OF THE MUTT
Siravanapuram
KAUMARA MATALAYAM



முனைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
மடாதிபதி
சிரவணபுரம்
கௌமார மடாலயம்

07.10.2025

வாழ்த்து

மயிலம் சிவஞானியைப் போற்றி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் "சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்" பாடியுள்ளார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபர், மனிதரைப் பாடுவதில்லை எனும் கொள்கையில் இருந்தவர் இருப்பினும் மயிலம் சிவஞானியை பாடியது குறிப்பிடத்தக்கது.

வண்ணச்சரபர் திருநெல்வேலியில் தோன்றிப் பல்வேறு திருத்தலங்கள் சென்று பாடல்கள் பாடி, நிறைவாக மயிலம் வந்து 15ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் காலத்தில் மயிலம் முருகன் சந்நிதியில் திருமணம் செய்து கொண்டார். 16 இலக்கியங்களை மயிலத்திற்கு அவர் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அன்று முதல் இன்று வரை மயிலத்திற்கும் சிரவை கௌமார மடாலயத்திற்கும் நீண்ட நெடிய தொடர்பு உள்ளது. சிரவையாதீன குருமுதல்வர் திருப்பெருந்திரு இராமானந்த சுவாமிகள் 18ஆம் பட்டம் சுவாமிகள் காலத்தில் மயிலம் சென்று சிறிதுகாலம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது வண்ணச்சரபர் மயிலம் முருகன் மீது பாடிய "மயிலாசக் கலம்பகம்' எனும் நூல் வெளியிடப்பட்டது.

தற்பொழுது நூற்றாண்டு விழா காணும் 19ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் காலத்தில் நமது சிரவையாதீனம் மூன்றாம் பட்டம் தவத்திரு சுந்தரசுவாமிகள் பலமுறை மயிலம் சென்றுள்ளார்கள். அதேபோல் 19 ஆம் பட்டம் சுவாமிகளும் பலமுறை சிரவையாதீனத்திற்கு எழுந்தருளிச் சிறப்பித்துள்ளார்கள்.

அன்பே வடிவம் ஆனவர், எல்லோரிடமும் மிக அமைதியாக, எளிமையாகப் பழகுவார்கள். அவர்களுடைய காலத்தில் கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசருடைய அனைத்து நூல்களும் வெளியிடப்பட்டன. அவர்கள் வழியில் இன்றைய 20ஆம் பட்டம் சுவாமிகளும் சிரவையாதீனத்துடன் அதே வழிவழி நட்புடன் உள்ளார்கள். அடிகளின் நூற்றாண்டு விழாவில் அவர்கள் செய்த அரும்பெரும் பணிகளைப் போற்றிப் பணிவோமாக.

அன்புடன்

7/10/2025

சின்னவேடம்பட்டி (அஞ்சல்), கோயமுத்தூர் - 641 049. தமிழ்நாடு. ☎ : 0422 - 2666370. ☎ : 98421 - 66373
Chinnavedampatti (PO), Coimbatore - 641 049, Tamilnadu. E-mail : kaumaramutt@gmail.com | www.kaumaramutt.in

வாழ்த்துரை

சிவத்திரு சிவ. சிவக்குமார்
செயலர், இராஷேஸ்வரி மகளி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, பொம்மையபாளையம்

தமிழக மக்களின் வாழ்வியற் சிந்தனையில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் உயர்ந்த குறிக்கோள்களாக இருந்தன. இம்மூன்றனுள் ஒவ்வொன்றையும் முதன்மைப்படுத்தி எழுந்த நூல்களும் தமிழ்மொழியில் உண்டு. இந்தியத் திருநாட்டின் மெய்ப்பொருளியற் கொள்கையாளர் அனைவரும் அஞ்ஞானத்தை நீக்கி ஞானம் பெறுதலே வாழ்க்கையின் உயர்ந்த நோக்கமாக இருக்க வேண்டும் என்று வழிநடத்தினர். அவர்களே குருவாக வந்து சமூகத்தையும் சமயத்தையும் வழநடத்துகின்றனர்.

குருவருள் இன்றேல் திருவருள் இல்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சிவஞான பாலய தேசிகரின் அற்புதச் செயல்களைப் பாசவதைப் பரணியும் தெளிவாக எடுத்துரைக்கிறது. உயிர்களின் மீது கொண்ட கருணையால் மானிட வடிவம் தாங்கிச் சிவஞான தேசிகர் எனும் பெயருடன் குருவாக வந்திருக்கும் சிவஞானியின் பெருமையைப் போற்றுகிறது.

ஊரும் படைத்தொரு மானிடப் படிவம்
ஒன்றியே வாழநா டன்றியே உயர்திருப்
பேரும் படைத்த சிவஞான தேசிகனே!

இறையருளால் உயிர்கள் தாம் செய்த வினைகளுக்கேற்ப வழங்கப்பெறும் பிறவிகளுள் மேலானதும் சிறந்ததும் மனிதப் பிறவியே ஆகும். நன்மை, தீமை ஆராய்ந்து அல்லனவற்றை நீக்கி நல்லனவற்றை நோக்கும் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு வாய்த்திருப்பதே மனிதப் பிறவியின் சிறப்பம்சமாகும். அரிது அரிது மானிடராயப் பிறத்தல் அரிது என்றார் அவ்வையார். மானுடம் பயன்பெற அருளாளர்கள் அவதரித்த புண்ணிய பூமி இந்தியத் திருநாடு. சிவகணங்களுள் ஒருவரான சங்குகன்னர் வீரசைவ நெறி தழைக்க "பாலசித்தர்" என்னும் திருப்பெயருடன் பொம்மபுரத்தில் கீழ்த்திசைக் கடலில் தோன்றினார். வரபலம் மிக்க மயிலமலையில் கடுந்தவமியற்றி மணக்கோல மாமுருகன் காட்சியைப் பெற்று, தமது ஞான மரபில் வருபவர்கள் சிவஞான பாலய சுவாமிகள் எனும் தீட்சைப் பெயரோடு சமுதாயத் தொண்டாற்றி வரம் பெற்றார்.

வீரசைவதீட்சை வழங்குதல் முதலிய சமயத்தொண்டுகள், சமயத்தின் வழிநின்று சமுதாயத் தொண்டுகள் செய்தல் குரு -

இலிங்க - சங்கம வழிபாடு, சடுத்தல சித்தாந்தம் முதலியவற்றைப் பக்குவப்பட்ட சீடர்களுக்குப் போதித்தல் என மயிலம் பொம்மர ஆதீனம் மண்ணில் தொடங்கி விண்ணளவு உயர்ந்துள்ளது.

இம்மை, மறுமை இன்பங்களையும் வீடுபேறு எனும் மேலான நிலைகளையும் வழங்கும் ஒப்பற்ற தெய்வமாக விளங்குபவன் மயிலம் முருகப்பெருமான் என்பதை "மயிலாசல மாலை" பதிவு செய்கிறது.

இம்மையே மறுமை வீடெனும் முன்றும்
இருந்தும் புரிந்திடா தவர்க்கும்
செம்மையே வழங்கும் சிறப்புறும் தெய்வம்
செறிந்துறை வரை இதென்று உணர்ந்தேன்

முருகன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் பெரிய திருமடம், வந்தாரை வாழ வைக்கும் கீர்த்தி மிக்கது. தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்த 18 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் ஏழையின் சரிப்பில் இறைவனைக் கண்டவர்கள். அவர்களைத் தொடர்ந்து குருபீடத்தை அலங்கரித்த 19 ஆம் பட்டம் சுவாமிகள் செயலிலே நேர்மை, நடையிலே கம்பீரம், அன்பு, அறிவு, ஆற்றல், கனிவு, கருணை எனும் இவற்றின் ஒட்டுமொத்த உருவமாய்த் திகழ்ந்தவர்கள். தரணி எங்கும் பரணி பாடும் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியின் மாணவராகவும், செயலராகவும் திகழ்ந்து தமிழ் மொழியைச் சிறப்பாக வளர்த்தெடுத்தவர்கள். அகிலம் போற்றும் ஆன்மீகத்தலமான மயிலமலை பாலசித்தர் வழிவந்து தற்போது 20 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகளின் அரும்பெரும் முயற்சியால் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கி சத்தமில்லால் மக்களின் மனங்களை ஆண்டு வருகிறது. 19 ஆம் பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை மனதார நன்றியுடன் நினைந்து போற்றும் வகையில் சீரும் சிறப்புமாக ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியும், புதுவைப் பல்கலைக்கழக பாரதியார் தமிழியற் புலமும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கமாக முன்னெடுத்து தமிழ் ஆர்வலர்கள், சமயச்சான்றோர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் தமிழறிஞர்கள் எனப் பலராலும் எழுதப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை இரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுவது மிக்க மகிழ்வைத் தருகிறது. 20 ஆம் பட்டம் சுவாமிகளின் பெருங்கருணையை நீளநினைந்து அவர்களின் திருவடி போற்றி வணங்குகின்றேன்.

வாழ்த்துரை

சிவத்திரு சிவ. விஸ்வநாதன்
செயலர்
ஸ்ரீ சிவப்பிரகாசர் மேல்நிலைப் பள்ளி
மயிலம், விழுப்புரம் மாவட்டம்

காலங்கள் தோறும் ஞானிகள், யோகிகள், சித்தர்கள் உலகில் தோன்றும் மக்களுக்கு மெய்ஞ்ஞான உணர்வூட்டி வாழ வைக்கின்றார்கள். இன்றளவும் வாழவைத்துக் கொண்டிருக் கின்றனர். சித்தத்தை சிவன் மீது வைத்து மானுட சமூகத்தை மேம்படுத்தும் அருளாளர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் **சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்** என்று பாடிப் பரவசப்படுகிறார். அவ்வகையில் நம் ஆதீன குரு முதல்வர் **ஸ்ரீ சங்குகன்னர்** சிவபெருமான் அருளாணையின் வண்ணம் வீரசைவ நெறியைப் பரப்பி மக்களை உய்விப்பதற்காக **பாலசித்தர்** எனும் திருப்பெயருடன் கீழ்த்திசைக் கடலருகே தோன்றி பொம்மபுரத்தை அடைந்தனர். அன்பர்களுக்கு ஞான உபதேசம் வழங்கி வீரசைவ நெறிநின்று மயிலம் மலையில் கடுந்தவம் இயற்றி முருகப்பெருமானின் தரிசனம் பெற்றார்கள்.

மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து பயன் தந்திடும் ஒன்மயிலைத் தண்மலையில் ஸ்ரீ பாலசித்தரைத் தொடர்ந்து முருகனே ஆதி சிவஞானியாக அவதரித்து மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தை அலங்கரித்து வீரசைவத்தைப் போற்றி வளர்த்து காத்து வந்தார்கள். வாழையடி வாழையென வந்த திருக்கயிலாய ஞான மரபில் பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் தமிழையும் சைவ நெறியையும் இருகண்களாகப் போற்றி வளர்த்தார்கள். இவர்களைத் தொடர்ந்து குருபீடம் அமர்ந்த பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் தமிழுக்கு முதன்மை அளித்து நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களை உரையுடன் அருளினார்கள்.

சொற்கோயிலால் பாமாலை புனைந்து தமிழ் இலக்கிய உலகில் பிரபந்த மும்மூர்த்திகளுள் ஒருவராய்த் திகழும் சிவப்பிரகாச சுவாமிகளுக்குக் கற்கோயில் எழுப்பி வழிபாடு செய்தவர்கள் பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள். குருவுக்குச் சீடர்

வழிபாடாற்றுவது மரபு. ஆனால் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தில் ஆதீனச் சீடர் சிவப்பிரகாசருக்குக் குருநாதர் குருபூசை (புரட்டாசி பௌர்ணமி) செய்வது உலகில் காணஇயலாத அற்புத நிகழ்வாகும்.

ஊருக்கு உழைப்பதையே யோகம் எனக்கொண்டு மக்கட் பணிசெய்து மகேசனோடு இட்டலிங்கப் பரசிவத்தில் கலந்தருளிய 19ஆம் பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை சிறப்பித்து மகிழும் வண்ணம் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவது மிக்க மகிழ்வைத் தருகிறது.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியும் புதுச்சேரி பல்கலைக்கழகம் பாரதியார் தமிழியற் புலமும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் இரண்டு தொகுதிகளாக ஆய்வுக்கோவை வெளியிடுவது கூடுதல் சிறப்பாகும். நூற்றாண்டு விழாப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அனைவருக்கும் குருவருளும் திருவருளும் நிறைந்து விளங்க வாழ்த்துகிறோம். பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக நடத்துவதற்கு அருள்பாலித்து வழிநடத்திவரும் இருபதாம் பட்டம் சுவாமிகளின் திருவடிகளை வணங்கிப் பணிகின்றோம்.

வாழ்த்துரை

சிவத்திரு கேப்டன் இராஜீவ் குமார் இராஜேந்திரன்
செயலர்
சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி
மயிலம், விழுப்புரம் மாவட்டம்

நம் நாடு பழமையும் பெருமையும் வாய்ந்த ஒப்பற்ற மணித்திருநாடு. பழமையைப் போற்றி, புதுமையைச் செய்யும் வித்தகர் பலரையும் ஈன்ற பெரும்பேறுடையது. மக்கள் நல்ல மனதோடு செயற்கரிய செயல்களைச் செய்வதற்கான சிந்தனைகளைப் பழக்கவழக்கங்கள் மற்றும் இறைசார் நம்பிக்கைகள் மூலமாக வாழ்க்கைக்குள் புகுத்துகின்றது. அவ்வகையில் சமயம் எனும் அமைப்பானது மனிதன் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை அவனை மனிதனாக மட்டுமின்றிப் புனிதனாகவும் வாழ வழிவகுத்திருக்கிறது எனில் அது மிகையாகாது.

சமயங்கள் மனிதனைப் பக்குவப்படுத்தும் சாதனங்களாகத் திகழ்கின்றன. ஆறுகள் பலவாக ஓடினாலும் அவை அனைத்தும் சென்று சேரும் இடம் கடல்தான். அதுபோல, உலகில் வாழும் மக்கள் வழிபடும் சமயங்கள் காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாம் எனப் பலவாக இருந்தாலும் அவை அனைத்தும் போதிக்கும் இறை தத்துவம் யாவும் ஒன்றுதான். இதன் உண்மையை அறிந்த தாயுமானவ சுவாமிகள்,

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே! நின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன.
(தாயுமான சுவாமிகள் பா-630)

எனத் திருவாய் மொழிந்திருக்கிறார்.

சமயங்கள் மனிதனை நல்வழிப்படுத்தவும், நல்லிணக்கத்தை வளர்க்கவும் செய்யும் அற நிலையங்களாகும். அவ்வகையில் வீரசைவம் எனும் சமயமானது மனிதருள் யாரையும் உயர்வு, தாழ்வு கருதக்கூடாது என்ற வள்ளுவரின் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவச் சிந்தனையும், பாரதியின் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம்

தழைக்குமாம்" என்ற உயரிய உணர்வையும் ஊட்டும் ஒப்பற்ற சமயமாகும்.

வீரசைவத் திருமடங்களில் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் சிறந்து விளங்குகிறது. கயிலை மலையின் மேற்கு வாயில் காவலராக இருந்த சங்குகன்னரை இறைவன் " நீர் பூலோகம் சென்று சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்வீராக" எனப் பணிக்க, சங்குகன்னரும் பத்து வயது பாலகனாகப் பொம்மைய பாளையக் கடற்கரையில் தோற்றம் கொண்டார். பாலையே உணவாக உண்டு பல சித்துகளையும், அதிசயங்களையும் நிகழ்த்திய பாலசித்தரின் அருளால் பச்சைக்கந்த மரபில் வந்த அம்மவை என்பவருக்குப் புத்திரப்பேறு கிட்டியது. அக்குழந்தைக்கு "சிவஞான பாலய தேசிகர்" எனப் பெயர் சூட்டி உபதேசம் வழங்கியதோடு, அம்மரபின்வழி வருபவர்களே மயிலம் மணக்கோல மாமுருகனைப் புரந்து வரவேண்டும் என்ற வரத்தையும் இறைவனால் அருளப் பெற்று, இறை சந்நிதியின் (முருகனின் தெற்கு பக்கத்தில்) அருகிலேயே ஜீவசமாதியும் அடையப்பெற்ற ஒப்பிலாப் புண்ணியத் தலமாக மயிலம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

18ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

வாழையடி வாழையெனத் தொடர்ந்து வரும் குருமரபில் 18ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் அடிப்படையில் ஆசிரியராக இருந்தவர். ஏழை எளிய மக்களும் கல்விபெற வேண்டும், வாழ்வில் உயர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டவர். இவ்எண்ணமும் சுவாமிகளின் அருளாசியுமே 1938 ஆம் ஆண்டு மயிலத்தில் "ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி" தோற்றம்பெறக் காரணமாக அமைந்தது.

19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

1965 ஆம் ஆண்டு 19ஆம் பட்டம் சுவாமிகள் ஆதீனக் கர்த்தராகப் பீடத்தில் அமர்ந்து பல திருப்பணிகளையும், கல்விப் பணிகளையும் சீரும் சிறப்புமாக மேற்கொண்டார்கள். மாணவர்கள் கற்பதற்கு இலவச உணவு, உடை, உறைவிடம் தந்து எட்டுத்திக்கும் புகழும்படி புலவர்களையும், பேராசிரியர்களையும், கவிஞர்களையும் உருவாக்கினார்கள்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் அருட்சீடரான நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு 18ஆம் பட்டம் சுவாமிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் நிலையில் நல்லாற்றூரில் ஆலயம்

எழுப்பி, குடமுழுக்கு விழா நிகழ்த்தியதோடு, ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி பௌர்ணமி நன்னாளில் மிகச் சிறப்பாகப் பூசைகள் செய்து வழிபாடு மேற்கொண்டு வந்தார்கள்.

மயிலம் திருத்தலத்தில் வெள்ளித் திருத்தேரினைப் புதுப்பித்து அத்தேரில் 18ஆம் பட்டம் சுவாமிகளின் உருவத்தை வடிவமைத்து 2012இல் குடமுழுக்கு செய்துவைத்துத் தேரோட்டத்தைச் சீரும் சிறப்புமாக நடத்திச் சிறப்பித்தார்கள். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தங்கும் வசதி, படிக்கட்டுகள் அமைத்தல், விநாயகர் குளம் சீரமைத்தல் போன்ற சமூகப் பயன்பாட்டுச் செயல்களைச் செய்து மக்களின் வழிபாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் வழி வகுத்தார்கள்.

20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

2011 ஆம் ஆண்டு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார்கள். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்ற உயரிய நோக்கத்தில் சமயப் பணியும், சமுதாயப் பணியும், நூலாக்கப் பணியும், பதிப்புப் பணியும் மேற்கொண்டு குருவடிவில் அருளும் திருவுருவாய் மயிலை மலையில் வீற்றிருந்து தம்மை நாடி வரும் அன்பர்க் கெல்லாம் நல்லாசிகளை வழங்கி வரும் ஞானாசிரியராய் காட்சியளித்து வருகிறார்கள்.

இப்படி அகமும், புறமும் சிவவடிவமாய்க் காட்சிதரும் 20ஆம் பட்டம் சுவாமிகளின் எண்ணக்கிடக்கையில் துளிர்விட்ட சிந்தனையே தற்போது அக்டோபர் மாதம் 17, 18 -ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கும் **19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நூற்றாண்டு விழா - பன்னாட்டுக் கருத்தரங்கமாகும்.** இவ்விழாவில் 19ஆம் பட்டம் சுவாமிகளைப் போற்றும் வகையில் அறிஞர் பெருமக்களால் கட்டுரை வழங்கப்பட்டு இரண்டு தொகுதிகளாக வெளியிடுவது தமிழுக்கும், சமயத்திற்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் வழங்கப்படும் பெருங்கொடை என்றே கூறலாம். அத்தகு சிறப்பிற்குரிய 19ஆம் பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கம் சீரும் சிறப்புமாக விளங்கிப் புகழ்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ பாலசித்தர். சிவஞானி குருவருளையும் மயிலம் மணக்கோல மாமுருகனையும் வணங்கி மகிழ்கிறேன்.

சிவஞான பாலயச் திருவடி வாழ்க.

ஸ்ரீமத் ஞான இராசதானி யாகிய இனாம் பொம்மைய பாளையம்
பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாச யதீச்சுர மயிலம் தேவத்தான ஆதீன
பரம்பரைத் தர்மகர்த்தத்துவம் இனாந்தார் பத்தொன்பதாவது பட்டத்து

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகட்கு

மணிவிழா நிகழ்ச்சி குரோதன யாண்டு புரட்டாசித்திங்கள் 13-ஆம் நாள்
(29—09—'85) ஞாயிற்றுக்கிழமை திருமயிலம் திருக்கோயிலில்
நிகழ்வும்பொழுது அடிபணிந்து கூறிய

பஞ்ச சாதனைக் காப்பும், வாழ்த்தும்.

பஞ்சசாதனமாவன : இலிங்கமுந் திருநீறும் உருத்திராக்கமும்
காயிடையும் பஞ்சாக்கரமும் என்ப,

திருநிலை பெற்ற முருகமர் மயிலமும்
பெருநிலை உரைக்கும் பிரமநற் புரமும்
பதியெனக் கொண்டு பத்தொன்ப தெனினும்
எண்முறை வந்த எம்குரு நாதர்
சிவஞான பாலய சீர்த்நிசால் செம்மல்
இன்று,
மணிவிழாக் கொண்டு மாண்புறப் பொலிந்தனர்;
இனியும்,
உள்ளும் புறமும் ஒளிபெற நிற்கும்
வளைல் வளரருள் இலிங்க மூர்த்தியும்,
ஒள்ளிய நிலைதரு வெள்ளிய நீறும,
தவநிலை புரக்குந் தகுஞ்சிவ மணியும்.
செக்கர் வான்போற் செவ்வொளி லீசி,
மெய்க்கன் விளங்கும் மென்துவ ராடையும்,
சிவவென நின்று, சிவய வாகி,
சிவய நமவெனச் சிறப்புடன் தோன்றி,
நமசி வாயவென நலந்தர விளங்கி
சிவசூத் திரமெனுஞ் சிறந்தமா மறையும்.
காத்தற் குரிய காவல் தெய்வமாய்க்,
கவசமாய்க், கண்ணாய்க், காப்பாய்ப், புரப்பதாய்த்
திண்மை பெறநின்று திகழ்ந்து விளங்கி
இரவும் பகலும் இருவகைச் சந்தியும்
எல்லா இடத்தும் இடர்தமைப் போக்கலால்,
திருநிலை, அமைதி தெளிவு, தூய்மை,
தருநிலைப் புகழ்மை தகவொடு விளங்க,
வாழ்க ! பொலிக ! வளத்தொடு
சூழ்க நலங்கள் சொன்லொடு பொலிந்தே.

இங்ஙனம்,
உண்மைத் தொண்டன்
திரு. அடிகளாசிரியனே.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
26—9—85.

பொருளடக்கம்

97. சிவஞான பாலய சுவாமிகள் பதிகத்தில் சிவஞானி அருட்திறம்
முனைவர் மா. முத்துராமன் **511**

98. குவலயம் போற்றும் குருவருள்
முனைவர் உ. சிவசுப்ரமணியன் **520**

99. சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியில் சித்தாந்தக் கருத்துகள்
முனைவர் து. கலைவாணி **524**

100. சமயமும் கல்வியும் சமுதாயத்தின் விழுமியங்கள்
யோகா கே. கிருஷ்ணமூர்த்தி **529**

101. சிவஞானியும் நல்லாற்றூர் சிவப்பிரகாசரும் !
கலைமாமணி கோ. கலியபெருமாள் **533**

102. பவப்பிணிக்கு மருந்து சிவஞானி
முனைவர் சே. சீனிவாசன் **540**

103. மண் விடுதலை வேண்டி மயிலம் முருகன்மேல் பண்ணிசைத்த பாவேந்தர்
முனைவர் சொ.சேதுபதி (கிருங்கை சேதுபதி) **547**

104. மயிலமலை மீதிருக்கும் வள்ளல் சிவஞானி
முனைவர் வேல். கார்த்திகேயன் **552**

105. தமிழ் வளர்த்த தவப்பெரியார்
முனைவர் சொ. அருணன் **557**

106. எனைத் தானாக்கும் தம்பிரான்": தமிழ் குருநெறி மரபும் சிவஞானபாலயதேசிகர் நெஞ்சுவிடுதூதில் குருதரிசனமும்
தினேஷ்குமார் ப., **564**

107. 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் தமிழ்ப் பணியும், சமயப் பணியும், சமுதாயப் பணியும்
முனைவர் ந. அய்யனார் **572**

108. ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அற்புதங்கள்
மு. கண்ணன் **583**

109. புலவர்கள் போற்றும் சிவஞானி
முனைவர் கி. பாலமுருகன் **589**

110. மயிலம் சுப்புரமணி சுவாமிகள் பிள்ளைத்தமிழில் வெளிப்படும் மெருமித மெய்ப்பாடு
செ. கயல்விழி **593**

111. நெஞ்சுவிடு தூது உரைக்கும் குரு நேயம்
முனைவர் ம. சித்ரகலா **598**

112. மயிலை முருகன் மீது வைத்தபக்தி
முனைவர் சி.ப்ரியா **608**

113. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் உணர்த்தும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பருவங்கள்
செள. இராஜலட்சுமி **614**

114. மயிலம் பொம்மபுர ஆதீனம், பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் வரலாறு
முனைவர் வே. விஜயரங்கம் **620**

115. அருள்மிகு மயிலம் சுப்ரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் - காப்புப் பருவத்தில் தொன்மம்
முனைவர் இரா. உஷாராணி **627**

116. சிவஞானியே துணை
முனைவர் சி. சுந்தரமூர்த்தி **637**

117. சிவலிங்கனார் போற்றும் சிவஞானி
சே. வெற்றிவேல் **643**

118. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணி
கி. மரகதவள்ளி **648**

119. பாரதிதாசனின் மயிலம் முருகப் பெருமானும் ஆதீன சிறப்பும்
முனைவர் ஏ. பிரேமா **653**

120. சிவஞானியின் திருவடி தீட்சை
முனைவர் சி. அருணா **660**

121. புலவர் போற்றும் சிவஞானி
கி. பவானி **667**

122. சதமணி மாலையின் சங்கமம்
முனைவர் பா. சரளாதேவி **671**

123. ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது உணர்த்தும் பக்திநெறி
திருமதி த. இளவரசி **676**

124. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வீரசைவம்
ப.செல்லப்பாண்டியன் **681**

125. வீரசைவநெறியின் திறவுகோல்- திருநீறு சிவஞான முனிவர்
முனைவர் த. விஜயலட்சுமி **689**

126. சான்றோர் போற்றும் மயிலம் முருகன்
அ. நித்யா **694**

127. பவப்பிணி மருத்துவனெனப்படு சிவஞான வள்ளல்
திருமதி து. சுபஸ்ரீ **697**

128. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழும் -சிவஞான பாலய சுவாமிகளும்
முனைவர் கி. அன்பு **702**

129. சிவப்பிரகாசரின் சமய நோக்கு
முனைவர் கு. சுபாஷிணி **710**

130. தற்கால முருகன் பிள்ளைத்தமிழ்
முனைவர் வினோத் வாசுதேவன் **715**

131. சிவப்பிரகாசரும் சிவஞானியும்
சு. கீர்த்தனா **722**

132. ஒளிரும் புகழ் - சிவஞானி
முனைவர் கி. புஷ்பா **726**

133. அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத் தமிழ்- உவமை நயம்
முனைவர் லெ. ஆனந்தி **733**

134 அருணகிரிநாதரின் திருப்புகழில் "முருகனே சிவஞானி"
இரா. அனுராதா 739

135. ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடு தூதின் சிறப்புகள்
முனைவர் கா. பிரேமா 742

136. சிவஞான பாலய தேசிகரும் மயிலம் கன்னித் தமிழும்
வி. நந்தகுமார் 748

137. ஸ்ரீ மயிலாசல அனுபூதியில் வினைவோடவிடும் கதிர்வேல்
செள. ஜெயா 752

138. மயிலம் முருகனும் பாரதிதாசனும்
முனைவர் ஜா.கீதா 756

139. ஒடுக்கம் - ஐம்புலன் அடக்கம்
முனைவர் த. பரமேஸ்வரன் 762

140. திருமுறையில் குரவர்களின் பார்வையில் சைவ வழிபாடு
திருமதி ம.ரேகா 770

141. மயிலம் சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ள செய்திகளும் விளக்கங்களும்
த. வினோத் 776

142. புதுவைத் தமிழ்க் கவிஞர்களின் பாக்களில் வெளிப்படும் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணி
இரா. பாரதிராஜா 781

143. சிவனுக்கு நிகர் சிவஞானியே!
முனைவர் மு. மகாலட்சுமி 785

144. சிவஞானியும் நல்லாற்றூர் சிவபிரகாசமும்
இளம்முனைவர் வ. கமலா 790

145. கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசர் போற்றிய சிவஞான பாலய சுவாமிகள்
முனைவர் மு. துர்க்கா 796

146. பண்பாட்டு நகர்த்தலில் நவீனத்தை நோக்கி (20 ஆம் பட்டம் குருமகா சன்னிதானம்)
திருமதி ப. செல்லியம்மாள் **801**

147. சிவஞானியும் நல்லாற்றூர் சிவப்பிரகாசரும்
முனைவர் ப. லாவண்யா **808**

148. போற்றிப் பஞ்சகத்தில் இறையருள்
முனைவர் க.பூங்கோதை **813**

149. வீரசைவமும் திருநீற்றின் மகிமையும்
முனைவர் ஜெ. ஜெயப்பிரதா **818**

150. சிவஞானியின் மகிமை
முனைவர் ந. மோகன்ராஜ் **823**

151. THE PHILOSOPHY OF MANNIKKAVASAKAR AS EVOKED IN NALVAR NANMANI MALI
DR. T. SEBASTHI JOHN BASKAR **827**

152. சிவஞானி தங்குமிடங்கள் (சிவப்பிரகாசர் தன் நெஞ்சிற்கு உரைத்தது)
முனைவர் சு. பிரபாவதி **830**

153. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் தமிழ்ப்பணி
முனைவர் வே. மகேஸ்வரி **835**

154. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் - காப்புப்பருவச் சிறப்பு
ச. சந்தோஷ்குமார் **842**

155. பாசத்தை வென்ற சிவஞானி
முனைவர் ஜெ. சந்திரிகா **846**

156. வீரசைவ நெறியும் பொம்மய பாளைய பால சித்த மரபும்
முனைவர் ப. வனிதா **851**

157. திருப்பள்ளியெழுச்சியில் தொன்மம்
முனைவர் சி. பாரதி **855**

158. தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அருளிய சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்
முனைவர் மா. வசந்தகுமாரி **859**

159. மயிலம் பொம்மபுர ஆதினத்தின் கொடையும் வரலாறும்
முனைவர் அ. கோகிலா 867

160. தித்திக்கும் சிவஞானி
முனைவர் ஞா. சுபஸ்ரீ 873

161. மயிலை பதியும் சிவஞானியும்
திருமதி சரிதா 880

162. தொல்காப்பியம் சுட்டும் அகத்திணைக் கருத்தாக்கமும்: மயிலம் முருகன் பிள்ளைத்தமிழும்.
சி. பூவிழி 884

163. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் தாலாட்டுப் பாடல்களில் ஆன்மீகச் சிந்தனைகள்
முனைவர் க. விஜயராகவன் 889

164. ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அறப்பணிகள்
வே.சிவா 895

165. மயிலாசல அனுபூதி' தரும் மன அமைதி
கு.திருமுருகன் 901

166. மயிலம் முருகன் மீது பாடப்பட்ட அறியப்படாத திருப்புகழ்ப் பாடல்: மயில் நடனம்
க. அருள்பாண்டியன் 905

167. மயிலம் பொம்மபுர ஆதீனங்களின் இலக்கியப் பணியும் சமுதாயப் பணியும்
இரா. குமார் 909

168. சிவ பாலய சித்தர் தொன்மை
முனைவர் தே.தேன்மொழி 912

169. மயிலம் பொம்மபுர ஆதீனமும் குருமார்களும்
முனைவர் சே. ஏழுமலை 918

170. சான்றோர் போற்றும் சிவஞானி
திருமதி ந. தவமணி 925

171. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை
திரு. பூ. தியானேஷ்வரன் 932

172. சிவப்பிரகாசர் போற்றும் சிவஞானி
ர.ரம்யா **935**

173. மயிலம் பொம்மபுர ஆதீனம்: ஆன்மிகம், தமிழ், கல்வி மற்றும் சமூக சேவையின் ஒருங்கிணைந்த மையம்- ஓர் ஆய்வு
செல்வி சு.சூரியா **940**

174. காஞ்சிப் பதியில் சிவஞானி
திருமதி. ரேணுகா பிரபாகரன் **945**

175. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை
செல்வி பெ. சுவேதா **950**

176. தவத்திரு சிவஞானி
ச. திவ்யா **954**

177. ஸ்ரீ மயிலாசல அனுபூதியில் குருவருள்
முனைவர் து. அமரதீபா **960**

178. பரம்பொருளே சிவஞானி
மா. ஷகிலா **967**

179. தமிழ்ச் சந்த மரபில் மயிலாசல அனுபூதியும் முருகத் தொன்மங்களும்
ச. வாசுதேவன் **973**

180. குவலயம் போற்றும் குருவருள்
செ.சுகந்தி **981**

181. புலவர்கள் போற்றும் சிவஞானி
வி. இளையபாரதி **985**

182. திருமயிலாசலக் கலம்பகம் காட்டும் மயில மலை முருகன் அருட்சிறப்புகள்
வி. மீனாம்பிகை **990**

183. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தமிழ் மற்றும் சமுதாயப் பணி
ம. நந்திகா **995**

184. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் கல்விப்பணி
ரே. கா. லோஹண்யா **999**

185. மயிலாசல அனுபூதியில் குருவருள்
கோ. ஜவகர் ***1003***

186. என் வாழ்வும் சிவஞானியும்
கு. சரண்யா ***1007***

187. சிவஞானியின் திருக்கரத் திருநீறு
திருமதி சிவசங்கரி ***1010***

188. மயிலம் பொம்புர ஆதீனத்தின் தொன்மை
சு.டிஷாலி ***1014***

சிவஞான பாலய சுவாமிகள் பதிகத்தில் சிவஞானி அருட்திறம்

முனைவர் மா. முத்துராமன்
விரிவுரையாளர்
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
சிவகங்கை அலைபேசி7502440770
muthuramanmanickm@gmail.com

வண்ணச்சரபம்" எனப்படுவது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளைக் குறிக்கும். இறைவனைப் போற்றுதல், தமிழைப் பேணிக் காத்தல், மனத்தை நெறிப்படுத்துதல், இயற்கையின் எழிலை எடுத்தியம்புதல், புதுமைகள் படைத்தல் ஆகிய ஐவகை நோக்கங்களை தன் குறிக்கோளாகக் கொண்டு அவற்றைப் பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தி வாழ்ந்து மறைந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். சுவாமிகள் இயற்றிய பாடல்களில் ஓலைச் சுவடியிலும், அச்சிலும் மட்டுமே 49722 பாடல்கள் உள்ளன. பாதிக்கு மேல் அச்சில் வராமல் சுவடியிலேயே, கோவை சரவணம்பட்டி கவுமார மடாலயப் பாதுகாப்பில் உள்ளன.இவர் வருக்கக் குறள், மனு நெறித் திருநூல், அருளாட்சி, அரசாட்சி நூல் போன்ற பொது நூல்களை இயற்றினார். திருவரங்கத் திருவாயிரம், சடகோபர் சதகத்தந்தாதி, அறுசமயக் கடவுள்கட்குப் பழனித் திருவாயிரம், தில்லை திருவாயிரம் எழுதினார். தமிழின் சிறப்புகளை வரலாற்றுச் சான்றுகளோடு கூறும் "தமிழலங்காரம்" என்ற பாடல் பாடி வடமொழியை விடத் தமிழே உயர்ந்தது என வாதிட்டு வடமொழி வாணர்களை வென்றார். தமிழுக்கு ஆறாவதாகப் "புலமை இலக்கணம்" என்ற ஒன்றை உருவாக்கினார். இத்தகைய சிறப்புகளை உடைய வண்ணச்சரபம், சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் ஒன்றினையும் பாடியுள்ளார். பத்து பாடல்களும் பதிகப்பயன் கூறும் ஒரு பாடலுமாய்ப் பதினொன்று பாடல்களால் அமைந்தது இப்பதிகம். இப்பதிகத்தின் வழி வெளிப்பட்டு நிற்கும் சிவஞான பாலய சுவாமிகளின் அருட்சிறப்பினையும் மயில மலையின் பெருமையினையும் ஆய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது

காப்பு வெண்பா தரும் செய்தி

முருகனை எதிர்த்துப் போரிட்ட பாவத்தைப் நீக்கிக் கொள்ள சூரபதுமன் மயில் வடிவாக இருந்து தவம் புரிந்து அருள் பெற்ற

இடம் (குன்று) என்பதால் இத்தலம் மயிலம் என்று அழைக்கப் பட்டது. தவத்தால் அனைவராலும் போற்றப்படுகின்ற சிவஞானம் உடையவர்கள், நிறைந்து இருக்கும் குளிர்ச்சி நிறைந்த மயில மலையில் வீற்றிருக்கின்ற, சிவஞான பாலயர் மீது ஒரு பதிகம் பாடித் துதித்து, பிறவிக் கடலுக்கு அப்பால் உள்ள, வீடுபேற்று வாழ்வை அடைவதற்குச் சிவபிரான் ஈன்றருளிய பவழநிற விநாயகர் துணையாவார் என்பதாய்க் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது.

"தவஞானத் தோர்பரவும் தண்மயில வெற்பில்
சிவஞானிக் கோர்பதிகம் செப்பிப் -பவவேலைக்(கு)
அப்புறத்து மெய்வாழ் வடைய அரன்ஈன்ற
துப்புறழ்மால் வேழம் துணை" (காப்புச் செய்யுள்)

மேற்கண்ட பாடல், சிவஞான பாலய சுவாமிகளைப் பதிகத்தால் பாடித் திருவடிகளைப் பரவும் செயலானது மெய்வாழ்வதனை அடைவிக்க வழியேற்படுத்தித் தரும் என்பதனை விளக்கி நிற்கின்றது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்" (குறள் 10)

என்பார் திருவள்ளுவர். சிவஞானபாலய சுவாமிகள் சிவபெரு மானே எனப் போற்றப்படுதலால் அவரின் திருவடியைத் தொழுதல் பிறவிப்பிணியை நீக்குதற்குப் பயன்படும் என்னும் கருத்து ஈண்டு வெளிப்போந்து நிற்கின்றது.

சிவஞானி உறையுமிடம்

வீரசைவர் இட்டலிங்கமாகிய சிவலிங்கத்தினை அன்றி வேறு ஒரு தெய்வத்தையும் வணங்கார் எனினும் முருகப்பெருமான் குருவாகச் சிவஞான பாலயர்க்கு விளங்கியமையின் குருவழி பாடாகச் சிவஞானியர் முருகப் பெருமானை இதயத்து வைத்துப் போற்றுகின்றனர். பாலசித்தர், தம்மிடம் சித்த கன்னியராக வந்த வள்ளி, தெய்வயானையை முருகனுக்கு மயிலமலை மீதில் திருமணம் செய்வித்து அவர் அருள் பெற்றதாலும், முருகனைக் கொண்டு பாலசித்தர் தம் சீடர் சிவஞான பாலயருக்கு உபதேசம் செய்வித்ததாலும், அவர் வழி வருவோர் மயில மலையில் சந்நிதி கொண்டுள்ள முருகப்பெருமானுக்கு நாள்தோறும் வழிபாடும் பெருவிழாவும் செய்து போற்றி வருவதாலும் மேற்கண்ட உண்மை வெளிப்பட்டு நிற்கின்றது. இத்தகைய சிந்தனையைக் கருத்தில் கொண்ட வண்ணச்சரபம், சிவஞானி தங்குமிடம் மயில மலையாம் எனத் தன் பாடல்களில் விளக்கம் செய்கின்றார்.

எவ்வே ளையுந்தன் இதயத் தெழில்வேற்கைச்
செவ்வேளை வைக்கும் சிவஞானி சேரும்இடம்
வெவ்வேளுக் கஞ்சி வியன்சாரல் எங்குநித்தம்
மைவேழம் ஆட வயங்குமயி லாசலமே. (பா. 1)

இதனுள் சுட்டப்படும் மைவேழம்என்பது கரிய கரும்பு என்பதாம். செங்கரும்பினும் கருங்கரும்பு வலிமை மிக்கதாம். கரும்பு மன்மதனின் வில்லாம் தன்மையுடைதாகும். மன்மதன், தன்னை வளைத்து, உலக மாந்தர்க்குக் காமத்தை விளைவித்து அவர்களைத் துன்புறுத்துதற்குத் தானும் ஓரு கருவியாகிய தன்மை நோக்கி அவனைவிட்டு நீங்கி, மயில மலைச்சாரலில் வந்து விளைந்து ஆடுகிறது என இலக்கிய நயம் அமையும் நோக்கில் பொருள் கொள்ளினும் ஏற்புடையதாம் என்பர் சான்றோர். மேலும் பொம்மபுரத்தையும், உலகின்கண் அமைந்துள்ள பிற ஊர்களையும் சார்ந்த மக்களைத் தனது குரு உபதேசத்தால் வீரசைவ நெறியுணரச் செய்வதன் மூலம் சடுத்தல நெறியினைக் காத்தருளுகின்ற, சிறப்புடைய தலைமையுடையராகிய, சிவஞான பாலய சுவாமிகள் மக்கள் சிறந்த பொருளாகிய வீடுபேற்றை உணருமாறு செய்தருள்கின்ற இடம் மயிலமலையாகும். இம்மலையில் பாலசித்தர் ஐக்கியப்பட்டிருத்தலும், ஆதிசிவஞான பாலய தேசிகர்க்கு உபதேசம் செய்த முருகன் எழுந்தருளியிருத்தலும் மானுடரின் பிறவி நீக்கம் என்பது சிவஞான பாலய சுவாமிகளுக்கு இயல்பாய் வந்தமைந்தது எனக் குறிக்கின்ற பாடல்,

பொம்ம புரமும் புவியும் புரந்தருளும்
செம்மல் சிவஞானி சீர்உணரச் செய்யுமிடம்
கைம்மலரால் செவ்வேற் கடவுளையே பூசிப்பார்
மம்மர் அறுப்பான் வளர்ந்தமயி லாசலமே. (பா.2)

என்பதாம்.

ஆன்ற புலவர் ஆய்ந்தறிந்து சொல்கின்ற பாடல் நிறைந்த இடம் மயிலம்

சிவஞானி தன் வாழ்வில் செய்தருளிய அருளியல் செயல்கள் எண்ணற்றவையாகும். காஞ்சி மாநகரில் விடம் தீண்டியவனை அது நீக்கி உயிருடன் எழச் செய்தார். காஞ்சியை ஆண்ட நவாபு மனைவியின் சூலை நோயைப் போக்கியருளினார். செய்யூரில் குடத்து மணலைச் சருக்கரையாக மாற்றிக் காட்டினார். மதுரையில் தையல் தொழிலாளி குழந்தைப் பேறின்றி வயது முதிர்ந்த நிலையில்

மனைவியுடன் வந்து வணங்கியபோது அவரிருவர் முதுமையைப் போக்கிப் புதல்வர்ப் பெறுமாறு அருளினார். செஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட திரியம்பக மகாராசனின் மகளின் நரைக் கூந்தலைக் கருங்கூந்தலாக மாற்றியருளினார். தம்பால் பொறாமை கொண்ட மாந்தீரிகனையும் சுவாமிகளையும் திரியம்பக மகராசன் கடலின் நடுவில்விட, மாந்தரீகன் சுறா மீனால் விழுங்கப்படச் சுவாமிகள் கரையேறினார். மேலும் அம்மாந்தரீகனைச் சுறாமீன் கக்கச் செய்து உயிர்ப்பித்தார். நடுநாடாண்ட சிதம்பர பூபதி என்பார் பகைவரால் நாடு கொள்ளப்பட்டு வறியராய்ச் சுவாமிகளையடையச் அவர்க்குப் பகை வென்று நாட்டையாள அருள் செய்தார். கூன், குருடு முதலிய நோய்களைப் போக்கியருளினார். இவை யாவற்றையும் தம் கைத்திரு நீற்றாகச் செய்தருளினார் சுவாமிகள். சுவாமிகளின் இத்தகைய அருளிச் செயல்களை,

இளைக்கும் மிடியற் குறுபொருளாம்
இறைவற் கரசாம்; கூற்றுவனை
விளிக்கும் பிணிக்கு மருந்தாகும்;
விடத்திற் கருஞ்சீர்க் கலுழனாம்;
வளைக்கும் பகைக்குப் படையாகும்;
மலடர்க் கரிய மகவாகும்.
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே. (சிவ.பா.தேசிகர் கலம்பகம் - 43)

எனக் குறிப்பார் சிவப்பிரகாசர், சிவஞானியின் இத்தகைய சிறப்புமிகு செயல்களை எல்லாம் ஆய்ந்து உரைக்கும் புலமை மிக்க புலவர்கள் பலரின் தேன் நிறைந்த பாடல்களால் போற்றப்படும் சிவஞான பாலய சுவாமிகள் அருள் செய்யுமிடம் கற்பகச் சோலைகள் நிறைந்துள்ள தேவ உலகத்தைக் காக்கின்ற, கூரிய வேலுடைய தலைவனாகிய முருகப் பெருமானின், அருள் நிறைந்த மயில மலையேயாகும் எனக் குறிக்கின்றார் வண்ணச்சரபம்.இதனை விளக்கம் செய்யும் பாடல் பின்வருமாறு

ஆன்ற புலவோர் அளவில்லார் ஆய்ந்துரைக்கும்
தேன்ததும்பு பாடல் சிவஞான சித்தரிடம்
கான்ற மதுமலர்ப்பூங் காவுலகம் காக்கும் வைவேல்
தோன்றல் அருட்சீர் துலங்குமயி லாசலமே" (பா.3)

சிவப்பிரகாசரால் பாடப்பெற்ற பெருமைமிகு சிவஞானி

ஒரு காலத்துப் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகளும் சிவப்பிரகாச

சுவாமிகளும் சிவஞான பாலயரைக் காணப் பொம்மபுரம் நோக்கி வந்தனர். அப்பொழுது புத்துப்பட்டு என்னும் ஊரை அடைந்தனர். அவ்விடத்துத் தங்கியிருந்த பொழுது சாந்தலிங்க சுவாமிகள், சிவப்பிரகாசரிடம் 'நீவிர் சிவஞான தோத்திரப் பாக்கள் இயற்றுக' என்றார், அதற்குச் சிவப்பிரகாசர், 'நான் நரரைத் துதிப்பதில்லை' என்று மறுத்துரைத்தார். அன்றிரவு இருவரும் அவ்வூர் ஐயனார் கோயில் புறத்தே துயின்றனர். சிவப்பிரகாச சுவாமிகள் கனவில் முருகப்பெருமான் மயில் வாகனராய் எழுந்தருளி, பாத்திரத்தில் இருக்கின்ற பூக்களைக் காட்டி, 'இவற்றைத் தொடுத்து எமக்கு அணிக' என்றார். உடனே கண் விழித்த சிவப்பிரகாசர் சாந்தலிங்க சுவாமிகளிடம் கனவு பற்றிக் கூறினார். சாந்தலிங்க சுவாமிகள், "இதன் கருத்தாவது, 'முருகனாகிய யாமும் சிவஞானியும் வேறல்லர்; ஆதலின் சிவஞானிக்குப் பாமாலை சூட்டுக' என்பதாகும்" என்றார். உடனே சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடுதூது பாடினார். மேலும் அவ்வப்போது தேசிகர் மீது பிள்ளைத் தமிழ், கலம்பகம், தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி எனும் நூல்களையும் இயற்றியருளினார். இத்தகைய அருட்செயல்களை மனத்துட் கொண்ட வண்ணச்சரபம்,

நீடுபுகழ்ச் செவ்வேள் நிகழ்த்துமொழி கொண்டொருவன்
பாடும் சிவஞான பாலையன் பத்தரிடம்
ஈடுரைக்க ஒண்ணா எழிலார் மயில்கோடி
ஆடும் பெருமை அவிர்ந்தமயி லாசலமே (பா.4)

என வரும் பாடலில் எடுத்துரைத்துப் போற்றுகின்றார்.

பிரமசாத்தனாய் முருகன் அருள் செய்த திறம்

கயிலாயத்துக் கந்த வெற்பில் முருகன் குழந்தையாய் இருந்த காலத்தில் ஒரு நாள், பிரமன் சிவபிரானைக் காணச் சென்றான். அவ்வாறு செல்லும் காலத்து முருகப் பெருமானைக் கண்டும் காணாதவனாய்க் கடந்து சென்றான். அதனைக் கண்ட முருகப், பெருமான் தடுத்து, யாரெனக் கேட்டபோது, தான் உலகைக் காரண, காரிய நிலையில் படைக்கும் வேதம் வல்லவனாய பிரமன் என உரைத்தான். அதனைக் கேட்ட முருகப்பெருமான் பிரமனிடம் படைக்கும் தொழில் செய்வதன் முன்கூறும் மந்திரம் யாது? என வினவ, ,பிரமன் 'ஓம்' என்பது எனக் கூற, அதன் பொருள் யாது? என வினவ, பிரமன் பொருளை மறந்து விழிக்க, 'தொடக்கத்தில் கூறும் பிரணவப் பொருளையறியாத நீ படைப்புத் தொழிலைச் செய்வது எப்படி?' என்று அவன் தலையில் குட்டிச், சிறை வைத்தார்

என்பது கந்தபுராணம் உரைக்கும் செய்தியாகும். இதனை மனத்துட் கொண்ட வண்ணச்சரபம், பிரமனின் ஆணவத்தினை ஒழித்த முருகப்பெருமான் ஆடும் இடமாகிய மயில மலையே சிவஞான பாலய சுவாமிகள் சிறப்புற அருள் செய்கின்ற இடம் எனக் குறிக்கின்றார்.இதனை உணர்த்தும் பாடல்,

பூரணமாம் உண்மைப்
பொருளுணர்ந்த புண்ணியத்தால்
சீரணமற் றுய்ந்த
சிவஞானி சீர்த்தஇடம்
காரணமும் எண்ணில்பல்
காரியமும் ஆனதென்னும்
ஆரணத்தோ னைப்புடைத்தோன்
ஆடுமயி லாசலமே **(பா.5)**

என்பதாம்.

மிலேச்சருக்கும் அருளும் சிவஞானி

சிவஞானி தன்னைக் சுண்டு பொறாமையால் வெதும்பும் இழிந்தவர்க்கும் தம்மைப் பற்றிய உண்மை நிலையை விளக்கிக் காட்டும், சிம்புள் பறவையை ஒத்தமைந்தவர் ஆவார். இதனுள் குறிக்கப்படும் சிம்புள் பறவை என்பது சிங்கத்தையும் அடக்கும் ஆற்றல் உள்ள சரபப் பறவை ஆகும். இரணியனைக் கொன்று வெறி பிடித்த நரசிங்கத்தைச் சிவபிரான் சிம்புள் பறவையாக வந்து அடக்கினார் என்பது புராணம். மாந்தரீகனை சிவஞானி அடக்கிய நிகழ்ச்சியைக் கருதி, 'மிலேச்சருக்கு மெய் விளக்கும் சிம்புள்' என்றார் வண்ணச்சரபம். சிவஞானியின் இத்தகைய சிறப்பினை விளக்கும் பாடல்,

வெம்பு குணத்து மிலேச்சருக்கு மெய்விளக்கும்
சிம்புள் அனைய சிவஞானச் செல்வர் இடம்
பம்பு கடலைப் பரித்தாடை யாவுடுத்த
அம்புவிக்கோர் ஆதரமே யானமயிலாசலமே. **(பா 6)**

என்பதாம்.

கல்லும் மணலும் கரும்பிரதம் காட்டிய சிவஞானி

சிவஞான பாலய சுவாமிகள் செய்யூர் சென்றபோது ஊர் மக்களில் சிலர் கல்லும் மணலும் கலந்து வைத்த குடத்தைக் காட்ட, அவற்றைத் தம் மந்திர உச்சரிப்பால் சர்க்கரையாக்கி மக்களைப் பார்த்து 'இதில் உள்ள சர்க்கரையை நான் தர உண்ணுங்கள்' எனக்

கொடுத்தருளினார். இதனை வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகள், கல்லும் மணலும் கரும்பிரதம் காட்டும்வண்ணம் சொல்லும் சிவஞானி சோராமல் வாழும்இடம் (7 1-2) எனக் குறித்துப் போற்று கின்றார். இதன்வழி, தன்னைச் சோதித்தார்க்கும் அருள் செய்த சிவஞானியின் அருட்திறம் வெளிப்பட்டு நிற்கின்றது. மேலும் சிவஞானி உறையும் மயில மலையானது இரவும் பகலும் அற்ற, ஆனந்த மயமான வீட்டில் இருத்தி, அன்பரைத் தன்னொடு ஐக்கியப் படுத்துகின்ற சிறப்பினைப் பெற்றதாகும். இவ்வாறு இரவும் பகலும் அற்ற ஆனந்த மயமான வீட்டில் இருத்தல் எளிதானது அன்று என்பதை,

இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே (74)

என உரைக்கும் கந்தர் அலங்காரம். மேலும் திருமந்திரம்,

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பரர்க்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத் தேனே (திருமந்திரம் 331)

எனக் குறிக்கும். இவ்வாறு அடைதற்கு எளிதல்லாத இராப்பகல் அற்ற ஆனந்த வீட்டினை எளிதில் தரும் வல்லமை பெற்றது சிவஞானி உறையும் மயில மலை என்னும் குறிப்பானது மலையின் சிறப்பினையும் சிவஞானியின் சிறப்பினையும் எடுத்துரைப்பதாகும்.

சிவஞானியே சிவபிரான் எனல்

அர்ச்சுனன் பாசுபத அஸ்திரமும் வரமும் பெறச் சிவபிரானை நோக்கித் தவம் செய்தபோது, அத்தவத்துக்கு இடையூறு செய்ய வந்த பன்றியைச், சிவபிரான் வேட்டுவ வடிவில் பின் தொடர்ந்து அம்பு எய்து வீழ்த்தினார் என்பது புராணம் ஆகும். சிவபிரானால் நிகழ்த்தப்பெற்ற இத்தகைய திருவிளையாடலை 'பன்றியின் பின் ஏகிவரும் பாலயன்' எனக் குறித்தார் வண்ணச்சரபம். ஈண்டு சிவபெருமானே சிவஞானியாய் வந்தார் எனப்படுதலின் சிவனின் திருவிளையாடல் சிவஞானியின்பால் ஏற்றி உரைக்கப்பட்டமை அறிக. இதனை விளக்கம் செய்யும் அடிகள்,

வென்றி விசையன் விரும்பும் தவத்தினுக்காப்
பன்றியின்பின் ஏகிவரும் பாலையன் பற்றும்இடம் (பா. 8 - 1-2)

என்பதாம். மேலும் சிவஞானி தன்னைப் போற்றி வழிபடும் அடியார்களுக்கு அவரவர்கட்குப் பொருந்திய சிறப்புதனைக் கொடுத்தருளும் தன்மையினர் என்பதனை,

எண்ணில்பல் சீரும்எடுத் தேத்துவார் எல்லவர்க்கும்
நண்ணியபே ரீந்தசிவ ஞானியென்றும் (பா.9 - 1-2)

எனக் குறிப்பார் வண்ணச்சரபம்.

நால்வராய் நலம் சேர்த்த சிவஞானி

சைவ சமயத்தில் நால்வர் எனப் போற்றப்படுபவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் ஆவர். சமணரால் கல்லில் பூட்டிக் கடலில் விடப்பட்டபோது கல்லே தெப்பமாகக் கரை சேர்ந்தார் அப்பரடிகள். சிவஞானியும் திரியம்பக மகராசன் தம்மையும் மாந்திரீகனையும் கடலில் விட்டபோது எளிதாக மிதந்து வந்தார். அப்பர் அப்பூதியடிகளின் விடம் தீண்டி இறந்த மகனை மீட்டார். திருமருகலில் விடந் தீண்டியிருந்த தன் காதலனை, மீட்டுத் தர அவன் காதலி இறைவனிடம் வேண்டியபோது, அங்கு வந்த திருஞானசம்பந்தர் பதிகம் பாடி மீட்டுத் தந்தார். அவ்விருவர் போலச் சிவஞானியும் காஞ்சிபுரத்தில் விடம் தீண்டி இறந்தவனை உயிர்ப்பித்தார். சுந்தரர் கல்லைப் பொன்னாக மாற்றியது போலச் சிவஞானியும் கல்லையும் மணலையும் சருக்கரையாக்கினார். முதலையுண்ட பாலனை மீட்டார் சுந்தரர்; சிவஞானியும் சுறாமீன் உண்ட மாந்திரீகனை மீட்டார். மாணிக்கவாசகர் புத்தரொடு வாதிட்டு வென்றார் . சிவஞானியும் சைனர்களை வென்று அவர்களைத் தம் அடியராக்கியுள்ளார். இதனைச் சிவப்பிரகாசர்,

மழவேறு கையான் வரினும் நீறெள்ளும்
கழவே றிகளுந்தாழ் காலான்
(சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சு விடு தூது (கண்ணி - 13)

எனச் சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூதில் குறிப்பிடு கின்றார். வண்ணச்சரபமும் இதனை,

மெய்வழக்கர் நால்வர்என வென்றிமிகும் சித்தியற்றித்
தெய்வநலம் கண்ட சிவஞானத் தேவன்இடம்
பொய்வலிமைத் தானவராம் பொல்லார்க் மென்போலும்
கய்வடிவேற் கந்தன் கவின்றமயி லாசலமே (பா.10)

எனக் குறித்துரைப்பார். இப்பதிகத்தின் கண் அமைந்துள்ள பதினோராவது பாடல் பதிகப் பயன் சொல்வதாய் அமைந்துள்ளது. இதனுள் வண்ணச்சரபம், வல்லவர்கள் துதிக்கின்ற மயில மலையையும் நல்ல புகழ் பெற்றுள்ள சிவஞான பாலய சுவாமிகளையும், இடிபோலும் பயன்தரும் ஓசையுடைய,

திருப்புகழ் வல்லவனாகிய தண்டபாணி சுவாமிகள் எனும் போற்றிச் சொல்லும் தான் பாடிய இப்பாடல் பத்தினையும், சொல்லும் அறிவுடையார்களைச் சிறிதும் துன்பம் அடையாது என நிறைவு செய்கின்றார்.

வல்லவர்கள் போற்றும் மயிலா சலத்தினையும்
நல்லபுகழ் பெற்றசிவ ஞானியையும் நாடியின்று
செல்லனைய ஓசைத் திருப்புகழோன் செப்பும்இவை
சொல்லறிஞர் தம்மைத் துகள்சிறிதும் தோயாதே (பா.11)

முருக வழிபாட்டினை அருணகிரிநாதர் போல் முன்னெடுத்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சிவஞானி பற்றித் தான் பாடிய பதிகத்தில் சிவஞானி உறையும் மயில மலையின் சிறப்புகளையும், சிவஞானி செய்தருளிய அருளிச் செயல்களையும் சிவஞானியே சிவபெருமானாய் அருள் தரும் மேன்மைகளையும் எடுத்துரைத்திருப்பதுடன் சிவஞானியைப் பற்றித் தான் பாடியருளிய பாடல்கள் பத்தினையும் பாடுவோர் பெரும் பயன்களையும் பெறுவர் என எடுத்துரைத்திருப்பதனை ஆய்வின் வழி அறிய முடிகின்றது.

துணைநூற் பட்டியல்

முதன்மை நூல்

1. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் - சிவஞான பாலய தேசிகர் பனுவல் திரட்டு - மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு- 2000

துணைமை நூல்கள்

1. திருமூலர் - திருமந்திரம் - தருமபுர ஆதீன வெளியீடு - தருமபுரம், 2011
2. திருவள்ளுவர் - திருக்குறள் - கழக வெளியீடு - திருநெல்வேலி இரண்டாம் பதிப்பு 1978
3. நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் - சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம் - மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு- 2015
4. மேலது - சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது - மயிலம் பொம்மபுர ஆதின வெளியீடு- 2015 இரண்டாம் பதிப்பு - 1995

குவலயம் போற்றும் குருவருள்

முனைவர். உ. சிவசுப்ரமணியன்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம், திண்டிவனம் வட்டம்,

தொண்டை நாட்டில், கல்விக் கரையிலாக் காஞ்சியில் வாழ்ந்த குமாரசாமி தேசிகருக்கு இறை ஆணையின் சித்தமாக மூன்று ஆண்மக்களும், ஒரு பெண் மகவும் பிறந்தனர். அவ்வகையில் மூத்தவராகத் தோன்றிய சிவப்பிரகாசர் முப்பத்து இரண்டு அகவையே வாழ்ந்தாலும் செம்மையானதொரு வாழ்வினை மேற்கொண்டார்.

சிவப்பிரகாசரின் உடன் பிறந்தோர் இல்லறத்தை ஏற்றுக் கொண்டனர் ஆனால், சிவப்பிரகாசரோ பிறவிப்பிணியிலிருந்து நீங்க ஈசனுக்குப் பணியாற்றத் துறவறத்தை மேற்கொண்டார்.

சிவப்பிரகாசர் இளமையில் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றார். மேலும், அவர் தந்தையார் தம் பிள்ளைகளை வீரசைவ சமய நெறிப்படி வளர்த்து வந்தது மட்டுமின்றிச் சமயக்கல்வியையும் அவர்களுக்குப் பயிற்றுவித்தார் . குருவின் வாயிலாக இறைவனை அடைய வேண்டும் என்பதே சைவ சமய நெறியாகும். அதற்கேற்பத் தம் வாழ்வில் சமய குரு என்றும், ஞான குரு என்றும் இருவேறு குருமார்களுடன் சிவப்பிரகாசர் தொடர்பு கொண்டார். அவ்வகையில் சிவப்பிரகாசருக்குச் சமய குருவாக விளங்கியவர்.

"திருவண்ணாமலைக் கோவில் தெற்குத் திருவீதி மடத்திலிருந்தது சாளிகந்த குருதேவர் ஆவார்" என்றும் அறிய முடிகிறது. சிவப்பிரகாச சுவாமிகள் கல்வியில் வல்லவராய் சிறந்திருந்தார். அதாவது அவரது கல்வி நாட்டம், ஞானம், அறிவு நலம் ஆகியன அவருக்கு இயல்பாகவே நிறைந்திருந்தன. சிவப்பிரகாசர் தமிழ்மொழியில் கொண்டிருந்த புலமையையும் பற்றையும் பாராட்டி வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்,

> **சிந்தையிடம் கோயில்கொளும் சிவன் அருளால் செழுந்தமிழின்**
> **விந்தைமலி கவிபாடும் விரகினனா மிளிர்ந்தானே**

என்று சிவப்பிரகாசரைப் புகழ்கிறார். மேற்கூறிய வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் சான்றின் வாயிலாகச் சிவப்பிரகாசர் தமிழ்மொழியில் பெற்ற புலமைத் தெரியவருகிறது. மேலும், பன்மொழி வித்தகராகத் திகழ்ந்த சிவப்பிரகாசர் தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார் என்பதை அவர்தம் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

சிவஞான பாலய தேசிகரின் சீடராதல்

சிவப்பிரகாசர் ஒவ்வொரு சிவத்தலமாகச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். அக்காலத்தில், கோவை பேரூரில் வீரசைவ சமயத் திருமடத்தினைச் சேர்ந்த சாந்தலிங்கர் சிவஞான பாலய தேசிகரைத் தரிசிப்பதற்காகப் பொம்மையார்பாளையம் சென்று கொண்டிருந்தார். மறுபுறம் சிவப்பிரகாசர் தில்லையை விடுத்துத் திருக்காட்டுப்பள்ளி வழியாகக் காஞ்சிக்கு வரும்போது சாந்தலிங்கரைச் சந்தித்தார். அப்போது இருவரும் புத்துப்பட்டில் தங்கினர். சாந்தலிங்கர் சிவப்பிரகாசரிடம் தான் தம்முடைய ஞான குருவாகிய சிவஞான பாலய தேசிகரைச் சந்திக்கச் செல்வதால் அவர்மீது ஏதாவது பாடல்கள் பாடுமாறு கூறினார். சிவப்பிரகாசரோ இறைவனை அன்றி மனிதரைப் பாடேன் என் மறுத்தார்.

"அன்றிரவு புத்துப்பட்டு என்ற இடத்தில் தங்கியபோது, சிவப்பிரகாசரின் கனவில் முருகப் பெருமான் தோன்றினார். ஒரு பாத்திரத்தில் சில விடுபுக்களைத் தந்து, தமக்கு மாலையாகச் சாத்துமாறு கூறி மறைந்தார். இக்கனவினைச் சிவப்பிரகாசர் சாந்தலிங்கரிடம் கூற, அவர், முருகரை வணங்கும் சிவஞான பாலய சுவாமிகளைப் பாடுமாறு முருகன் அக்கனவால் உணர்த்தினான் என்று விளக்கம் உரைத்தார்.

சிவபரம்பொருளே! சிவஞான பாலய தேசிகராக எழுந்தருளியிருப்பதை உணர்ந்த சிவப்பிரகாசர், சாந்தலிங்கர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிவஞான பாலய தேசிகர் மீது பாடல்கள் இயற்றினார். பின்னர் இருவரும் சிவஞான பாலய தேசிகரைக்கண்டு தரிசித்தனர். அன்று முதல் சிவப்பிரகாசர் தம் ஞான குருவாகச் சிவஞான பாலய தேசிகரை ஏற்றார். பின்பு அவர் மீது நெஞ்சுவிடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி ஆகிய ஐந்து சிற்றிலக்கியங்களைப் பாமாலை யாகப் பாடித் தம் ஞான குருவிற்குக் காணிக்கையாக்கினார்.

பிரபுலிங்கலீலை

சிவப்பிரகாசரது மொழிபெயர்ப்புத் திறனையும் அவரது பன்மொழி ஆற்றலையும் சுட்ட வருவோர், பிரபுலிங்க லீலையைச் சிறப்பாகக் குறிப்பிடுவர். சிவப்பிரகாசரது இலக்கியங்களில் காப்பிய வகையுள் அடங்கும் ஒரே நூல் பிரபுலிங்க லீலை .

"கி.பி.1400 அல்லது 1430 ஆம் ஆண்டைச் சார்ந்த சாமரசர் என்பவரது கன்னட மொழி மூலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப் பெற்றதே பிரபுலிங்க லீலை.

மொழிபெயர்ப்பு இலக்கியம் என்ற சுவடே தெரியாத வகையில் முதல்நூல் என்று எண்ணுமாறு சிவப்பிரகாசர் இக்காப்பியத்தைத் தமிழில் வடித்துத் தந்துள்ளார்.

வேந்தாந்த சூடாமணி

கன்னட மொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப் பெற்ற சிவப்பிரகாசரின் மற்றொரு நூல் வேதாந்த சூடாமணியாகும். இந்நூல் கன்னட மொழியில் நிஜகுண சிவயோகி என்னும் ஞானியால் செய்யப்பெற்ற விவேக சிந்தாமணி என்னும் நூலில் உள்ள வேதாந்த பரிச்சேதம் என்னும் பகுதியைத் தமிழில் எளிதில் உணர்ந்து கொள்ள, சிவப்பிரகாசரால் மொழிபெயர்க்கப்பெற்றது. எனினும், தமிழ் முதல் நூல் என்று கருதும் அளவில் சிறப்பு வாய்ந்த்தாகத் திகழ்கிறது.

இவ்வுலக மக்களுக்கு ஏற்படும் மூவகைத் துன்பங்கள், சீடன் குருவிற்குச் செய்யும் நால்வகைச் சேவைகள், எண்வகைக் குரு, சச்சிதானந்த நித்திய புரணத்தின் விவரிப்பு ஆகியவற்றை இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது.

நன்னெறி

நல்வழி நல்கும் பொருள் அடிப்படையில் பெயர்பெற்றது. நாற்பது வெண்பாக்களால் ஆன இந்நூல் மனித சமுதாத்திற்குத் தலையாய அறநெறிகளை எடுத்துரைக்கிறது. அறநெறிக் கருத்துகளை அறிவுறுத்துவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தாலும் கருத்துகளை வெளிப்படுத்தும் முறையில் ஒரு தனித்தன்மையை இந்நூலில் காண முடிகிறது. கற்பனை வளமும், கவிதைத் திறனும் நாடகப்பண்பும் நிறைந்துள்ளது. அதனால், இலக்கிய உலகில் சிறந்ததொரு நீதி இலக்கியமாகத் திகழ்கிறது. சிறந்த வாழ்க்கைக்குரிய இன்சொல், உதவி புரிதல், சினம் காத்தல்,

மெலியாரைப் போற்றல், நல்லோர் உறவு, அறத்தின் ஆற்றல், தற்புகழ்ச்சி போற்றாமை முதலிய நெறிகள் இந்நூலின்கண் இடம்பெற்றுள்ளன.

இவ்வறநெறிகளைப் பின்பற்றி உயர்ந்த குருநிலை எய்திய 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் சமூகத்திற்கு ஆற்றிவரும் பங்களுப்பு எண்ணில் அடங்காதது. பள்ளிப்படிப்பை முடித்த மாணவர்கள் உயர்கல்வி பெற்று சிறப்புடைய வேண்டும் என்பதற்காகவே கல்லூரிகளை உருவாக்கி அதில் கல்வியில் மட்டுமின்றி ஒழுக்கத்திலும் சிறந்த மாணவர்களுக்குப் பணிவாய்ப்பும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்.

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது **(குறள்.68)**

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பித்துள்ளது. மனிதர்கள் வாழும் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள இறைபக்தி முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஏதோ பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்று இல்லாமல் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும். சமயச் சிந்தனையும் பதிய வேண்டும். தொண்டு செய்யவே பிறப்பெடுத்த குருமார்களின் திருவடி சிறப்பானது கோள்களின் ஆற்றலையும் தீமை செய்யும் நாள்களின் ஆற்றலையும் கூற்றுவனின் ஆற்றலையும் அழக்கவல்லது. இத்தகைய பெரும் வலிமை உடைய குருவின் திருவடிகளில் அடைக்கலமாவதே சிறப்பிற்குரியது.

சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியில் சித்தாந்தக் கருத்துகள்

முனைவர் து.கலைவாணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தட்சசீலாப் பல்கலைக்கழகம்,
ஓங்கூர், திண்டிவனம், விழுப்புரம், தமிழ்நாடு - 604305
கைப்பேசி: 9600901764
kalai25071980@gmail.Com

முன்னுரை

தமிழ் இலக்கியம் ஆன்மீக உணர்வையும் தத்துவச் சிந்தனையையும் ஒருங்கே பிரதிபலிக்கும் தன்மையை உடையது. அதில் பக்தி இலக்கியம் ஒரு உயர்ந்த நிலையை வகிக்கிறது. சைவ சமயப் பாரம்பரியத்தில் இறைவனை விழித்தெழச் செய்வதன் மூலம் மனிதனின் உள்ளத்தையும் ஞானத்திற்குத் துயர்த்தும் வகையில் அமைந்த திருப்பள்ளி எழுச்சி எனும் இலக்கிய வகை பெருமை யுடையது. அந்த மரபில் தனித்துவம் வாய்ந்த பங்களிப்பைச் செய்தவர் சிவஞான பாலய தேசிகர் ஆவார். அவரது திருப்பள்ளி எழுச்சி பக்தியையும் தத்துவத்தையும் இணைத்த ஆழமான படைப்பாக விளங்குகிறது.

திருப்பள்ளி எழுச்சி இலக்கிய மரபு

திருப்பள்ளி எழுச்சி என்பது தமிழ் சைவ இலக்கிய மரபில் காணப்படும் ஒரு முக்கியப் பிரிவு. திருப்பள்ளி எழுச்சி என்ற சொல்லுக்கு "இறைவனை விழித்தெழச் செய்வது" என்ற பொருள் உண்டு. இதன் நோக்கம் உடல் உறக்கம் அல்ல, ஆன்மாவின் விழிப்புணர்வு ஆகும்.

இந்த வகை பாடல்களைச் சைவ, வைணவ, சக்த சமயக் கவிஞர்கள் பலர் எழுதியுள்ளனர். மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், பெரியாழ்வார் போன்றோரும் இதனைப் பாடியுள்ளனர். இந்த மரபைத் தொடர்ந்தே சிவஞான பாலய தேசிகரும் தம் தெய்வீக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அந்த வகையில் சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியில் சித்தாந்தக் கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உயிரின் நித்திய நிலை

சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் சைவ சித்தாந்தத் தத்துவத்தை எளிமையாக எடுத்துரைக்கின்றன.

நிறைந்தவொரு சச்சிதானந்த பரசிவத்தில்
நிகழுமுயிர் இப்பியிடை வெள்ளிபோல் தோன்றி
அறிந்துமயல் அசன்றிடிலொன் றன்றிவே றிலையென்று
அறைவர்சிலர் பதியினைப்போல் ஆருயிர் நித்தியமே
இறந்துமல சத்திவிடில் சிவசமா னதையாய்
இருக்குமென அறைவர் சிலர் எதுவழக்கென்றடியேம்
செறிந்தனநின் தனைவினவ எங்கள் சிவ ஞான தேசிகனே
அருண்மலையே பள்ளிஎழுந் தருளே. (பா.எண் 1)

என்ற பாடலில், உயிர், மாயை, சிவம் ஆகியவற்றின் தொடர்பைப் பிரதிபலிக்கிறது.

பரசிவம் : சத்-சித்-ஆனந்தம் நிறைந்த பரம்பொருள்.

உயிர் : பரசிவத்தில் இருந்து தோன்றும் ஒளி போல. வெள்ளியில் தோன்றும் ஒளியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

மாயை : அறிவைப் பறித்துத் தவறாகக் காணச் செய்கிறது. அது விலகினால், உயிரும் சிவனும் ஒன்றே என்பது புலப்படும்.

நித்தியம் : உயிர் அழிவற்றது; மரணத்தாலும் சக்தி இழப்பாலும் அது அழியாது.

கலைநயம் : "வெள்ளிபோல் தோன்றி" என்ற உவமை, "அசன்றிடில் ஒன்றன்றி வேறில்லை" என்ற வலியுறுத்தல் ஆகியவை பாடலின் அழகைக் காட்டுகின்றன. உயிர் பரசிவத்துடன் உடனுறவுடையது; மாயை விலகினால் சிவசமம் அடைகிறது. உயிர் அழியாத நித்தியமானது என்பதை இப்பாடல் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

பசு, பதி, பாசம் தொடர்பு

சைவ சித்தாந்தத்தில், பசுபதி என்பது இறைவனையும் (பதி), ஜீவாத்மா (பசு), மற்றும் அந்த ஆன்மாவுடன் பிணைந்துள்ள பற்றுகளையும் (பாசம்) குறிக்கிறது. பசுபதி (இறைவன்), பசு (ஆன்மா), மற்றும் பாசம் (பற்று) ஆகிய இம்மூன்றும் ஆதி முதல் உள்ளவை. பசுபதியின் தொடர்பு என்பது இறைவனும், ஜீவாத்மாவும், இந்த உலகத்தின் மீதுள்ள பற்றும் ஆகிய மூன்றின் உறவாகும் என்கிறது.

"சகலர் எனும் பசுக்களைமூ லாதாரம் என்னும்
தக்கதொழு விடைமலமாம் தாம்பினால் ஆர்த்துப்
புகலும்ஒரு நுகர்வும்இலா துறநிறுத்திப் பின்னர்
பொருந்துகளை யாம்கரத்தால் கட்டவிழுத்து விட்டே
அகலுக்கன வெனும்புரத்தில் ஓட்டியே விடய
மாகியபுல் மேய்த்துஎமக்கு இங்கு அமுதல் அருள்பவனே
திகழும்மலை மகள் நகரின் மருவுசிவஞான
தேசிகனே! அருண்மலையே பள்ளிஎழுந் தருளே" (பா.எண் 2)

என்ற பாடல், சைவ சித்தாந்தத்தில் பசு-பாச-பதி தொடர்பை விளக்கும் ஓர் உன்னதத் தத்துவக் குறிப்பதாகும். இப்பாடலில், சகல உயிர்களும் (பசுக்கள்) மூலாதாரத்தால் ஆட்கொள்ளப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகிறது. ஆணவம், கன்மம் ,மாயை ஆகிய பாசங்களால் கட்டுண்ட உயிர்கள், எவ்விதமான சுதந்திரமோ சுகமோ இன்றி, "பிணைப்பட்ட குதிரை போல" அடிமையாகின்றன. இவ்வுயிர்கள் பொருள், பாசம், புணர்ச்சி போன்ற வினைகளால் இழுக்கப்பட்டு, சுதந்திர உணர்வின்றி ஓடுகின்றன. இதனை "விடைமலமாம் தாம்பினால் ஆர்த்து புகலும்.." என்ற சொல்லாக்கம் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இந்நிலையிலிருந்து உயிர்களை விடுவிப்பவன் ஒருவனே; அவன் பரசிவன். அப்பரசிவனையே "அமுதம் அருள்பவனே" எனச் சிவஞான தேசிகர் புகழ்கிறார். உயிர்கள் பாசத்தால் கட்டுண்ட நிலையை எடுத்துரைத்தும், அதிலிருந்து விடுதலை அளிப்பவன் சிவன் என்பதையும் வலியுறுத்தும் சைவ சித்தாந்தச் சான்றாகத் திகழ்கிறது.

சிவனின் தெய்வீகத் தன்மை

சிவஞான தேசிகரின் தெய்வீகத் தன்மையைச் சிவப்பிரகாசர்,

காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கல்
கனலருகின் அரிசனப்பொற் றரசுமிசை போர்த்துக்
கோல்தொடி மென் முலை மடந்தை தனைமார்போடணைத்துக்
குளிர்க் குடை யான் உததி யிடைக் கண்துயில்வோன்எழுந்து
போற்றி நினது எதிர் குறிப்பச் சங்கொடும் வந் துற்றான்
புண்டரிகண் கரகநீர் கொண்டுஉதவ நின்றான்
சீற்றம் அறும் தவக் களிறே எங்கள் சிவ ஞான
தேசிகனே!அருண்மலையே! பள்ளிஎழுந் தருளே. (பா.எண் 3)

என்கிறார். இப்பாடல், இயற்கைச் சித்திரங்களையும் புராணக் குறிப்பு நயங்களையும் இணைத்து சிவனின் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துகிறது. பாடலில் முதலில், புயல்காற்று அடித்து கடல்

அலைகள் மோதும் காட்சியைச் சித்தரிக்கிறார் சிவப்பிரகாசர். அந்தச் சூழலில், மின்னல் மற்றும் நெருப்பு ஒளியால் மலைச் சிகரங்கள் பிரகாசிப்பதை "கனலருகின் அரிசனப் பொற்றூசு" எனக் கூறுகிறார். இதேபோல், "கோல்தொடி மென்முலை மடந்தை தனை மார் போடணைத்துக்" என்ற அடியில், கடல்சார் தேவியைத் தன் மார்பில் அணைத்துக் கொண்டு, சங்கு முழக்கம் ஒலிக்கும் தருணத்தில் கடலிலிருந்து எழும் திருமால் குறிக்கப்படுகிறார். அவர் கையில் புண்டரிகக் கண்ணாடியைப் போன்று கரகநீர் ஏந்தி நின்று, சிவனைப் போற்றி வழிபடுவதாகக் கூறப்படுகிறது. இவ்வுருவகம் மூலம், சிவனின் முன் வணங்கத் தெய்வங்களும் இயற்கைத் தன்மைகளும் கூடச் சேர்கின்றன என்பது வலியுறுத்தப்படுகிறது. கடைசியில் "சீற்றம் அறும் தவக் களிறே" எனச் சிவனின் கருணைமிகு தபோத்யான சக்தியைச் சுட்டிக்காட்டி, வழக்கமான பக்தி பாணியில் "அருண்மலையே! பள்ளி எழுந்தருளே" என்று அழைக்கிறார். இவ்வாறு, பாடல் சைவப் பக்தியும் சித்தாந்தத் தத்துவமும், இயற்கைக் காட்சியும், புராணச் சின்னங்களும் இணைந்த ஓர் அற்புதக் கவிதைச்சான்று ஆகத் திகழ்கிறது.

பக்தி தத்துவம்

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையால் எறிந்த
தொண்டன்இலை விசயனும்வில் லோடும் வந்தான் இல்லை
ஏதமறும் இயற்பகையார் கிளைஞர் கள்வந்து அடைந்தார்
இல்லைநினை மண் சுமவென்று ஒருபீரம்பால் அடித்தோன்
போதிலன்நின் திருவடியில் போதுகள் தூய்ப் பரவிப்
போற்றலுறும் அடியவரே பொருந்தினர் எம் மருங்கும்
சீதமதி துறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே அருண் மலையே பள்ளிஎழிந் தருளே. (பா. 4)

என்ற பாடல், இராமாயணக் கதைநடப்பையும் பக்தித் தத்துவத்தையும் ஒன்றிணைக்கிறது. இங்கு ராமன், சீதையை மீட்டுத் தருவேன் என்று தூதுவிட்டு வாக்குறுதி வழங்கியிருந்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தேவையான பல தடைகளும் எதிரிகளும் வந்த போதிலும், அவரைத் தடுக்கும் சக்தி எதுவும் இல்லை. இதனை "சிலையால் எறிந்த தொண்டனிலை விசயனும் வில்லோடும் வந்தான்" என்று வலியுறுத்துகிறார் சிவப்பிரகாசர். அதாவது, இராமனின் வில்லினால் சக்தி வாய்ந்த எதிரிகளும் வீழ்ந்தனர். "இல்லை ஏதமறும் இயற்பகையார்" என்ற அடியில், எதிரிகள் எத்தனை வலிமை மிக்கவர்களாக இருந்தாலும், இறுதியில்

அவர்களுக்கு இடமில்லை எனக் கூறப்படுகிறது. மேலும், "நினை மண் சுமவென்று ஒருபிரம்பால் அடித்தோன்" எனும் இடத்தில், இராமன் தனது வல்லமைக்கேற்ப எளிதாக எதிரிகளை அழிக்கின்றான் என விளங்குகிறது. இந்தக் காட்சிகளின் முடிவில், "திருவடியில் போதுகள் தூய்ப் பரவிப் போற்றலுறும் அடியவரே பொருந்தினர் எம் மருங்கும்" எனக் கூறி, இராமனை வணங்கும் பக்தர்கள் மட்டுமே உண்மையான துணையாக இருப்பார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். கடைசியில் வழக்கம்போல், "சீதமதி துறந்தமுடி மருவு சிவஞான தேசிகனே அருண்மலையே பள்ளி எழுந்தருளே" என்று இறைவனை எழுப்பிக் கூப்பிடும் பக்தி உணர்வு வெளிப்படுகிறது. இதனால் இப்பாடல், இராமாயணக் கதைக் குறிப்புகள், பக்தி உணர்வு, சித்தாந்தத் தத்துவ வலியுறுத்தல் ஆகியவை ஒன்றிணைந்த ஓர் உன்னதக் கவிதைச் சான்று எனக் கருதப்படுகின்றது.

முடிவுரை

சிவஞான பாலய தேசிகரின் திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் தமிழ் பக்தி இலக்கியத்தின் மதிப்புமிக்க ஒன்றாகும் அவை வெளிப்படையில் இறைவனை எழுப்பும் பாட்டு என்றாலும், உள்மனத்தில் மனிதனை ஞானத்திற்கு உயர்த்தும் பாடல்களாகும்.

இவை சைவ சித்தாந்தத் தத்துவத்தின் சாரத்தையும், தமிழ் கவிதை நயத்தையும் இணைத்துச் சொல்லும் பெருமைக்குரிய படைப்புகள். எனவே, சிவஞான பாலய தேசிகரின் திருப்பள்ளி எழுச்சி ஆன்மீக உணர்வைத் தூண்டும் சைவ இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாய்வு கட்டுரை, இலக்கியமும் தத்துவமும் இணையும் இடத்தில் சிவஞான பாலய தேசிகரின் படைப்புகள் எவ்வளவு ஆழமானவை என்பதைக் காட்டும் சான்றாகும்.

சமயமும் கல்வியும் சமுதாயத்தின் விழுமியங்கள்

யோகா கே. கிருஷ்ணமூர்த்தி
மேனாள் துணை ஆட்சியர்
தலைவர், தமிழ்நாடு யோகா சங்கக் கழகம்
மொபைல்: 9444172182
krishnak0206@gmail.com

சமயமும், கல்வியும் சமுதாயத்தை மேம்பட வைக்கும் விழுமியங்கள். அதுவே, நல் மதிப்பிற்கான சிகரமும் ஆகும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித வாழ்வை உயர்த்தி நிறுத்தும் மூன்று முக்கிய தூண்கள் சமயம், கல்வி, சமுதாயம் இவையாவும் ஒன்றோடுஒன்று இணைந்து இயங்கும் போது தான் முழுமையான மனித வாழ்வு உருவாகிறது.

சமயம் மனிதனுக்கு நம்பிக்கை, ஒழுக்கம், கருணை, அன்பு ஆகியவற்றை அறிவுருத்துகிறது.

கல்வி அவனுக்கு அறிவு, திறன், சிந்தனை, பொறுப்பு உணர்வு ஆகியவற்றை வளர்க்கிறது.

இவை இரண்டும் சேர்ந்து சமுதாயத்தை நாகரிகமானதாக்கும், நியாயமானதாக்கும், சமநிலையானதாக்கும்.

இன்றைய வேகமான உலகில், அறிவியல் வளர்ச்சி எவ்வளவு வேகமாக சென்றாலும் சமயம், கல்வி ஆகியவற்றின் மதிப்பை இழக்க முடியாது.

இவை இரண்டும் மனிதனை, விலங்கிலிருந்து மனிதனாகவும், மனிதனிலிருந்து மனிதாபிமானியாகவும், மாற்றும் சக்திகளாக உள்ளன.

சமயத்தின் சமூகப் பங்கு

சமயம் என்பது வெறும் வழிபாட்டு முறையல்ல, அது ஒரு வாழ்க்கை முறை. அது மனிதனின் உள்ளத்தை ஒழுங்குபடுத்தி,

அனைவரும் ஒன்றே - மதம் வேறாகலாம், ஆன்மா ஒன்றே என்று உணர்த்துகிறது. சமயம் மனித மனத்தில் நன்மை, கருணை, பொறுமை, மன்னிப்பு போன்ற மதிப்புகளை விதைக்கிறது.

அது மனிதனை சுயநலத்திலிருந்து சமூக நலத்திற்குள் நுழைய வைத்து நல்வழிப்படுத்துகிறது. உதாரணமாக,

புத்த சமயம் - அஹிம்சை, தியானம், கருணை ஆகியவற்றை உணர்த்துகிறது,

இஸ்லாம் - ஒற்றுமை, தானம், நீதிச் செயல் ஆகியவற்றை உணர்த்துகிறது,

கிறிஸ்தவம் - அன்பு, மன்னிப்பு, தியாகம் ஆகியவற்றை உணர்த்துகிறது

இந்து சமயம் - தர்மம், கர்மம், ஞானம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

இவற்றின் மையப்பொருள் ஒன்றே மனிதநேயம் . அதனால், சமயம் சமுதாயத்தில் ஒற்றுமையையும், அமைதியையும், நிலைநிறுத்தும் சக்தியாகத் திகழ்கிறது.

கல்வியின் சமூகப் பங்கு

கல்வி என்பது வெறும் புத்தக அறிவு அல்ல.
அது அறிவை நடத்தையாக மாற்றும் கலை.
அறிவு இல்லாத சமூகம், இருளில் தவிக்கும்.

கல்வியின் மூலம் மனிதன் தன்னம்பிக்கை, நியாயம், சமத்துவம் ஆகியவற்றை கற்றுக்கொள்கிறான்.

கல்வியை அடிப்படையாகக் கொண்ட சமூகம் அறிவியல் முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை அடையும். கல்வி மனிதனின் மனத்தில் பகுத்தறிவை விதைக்கிறது.

அது மதவெறி, சாதி, பாலின பேதம் ஆகியவற்றை களைய உதவுகிறது.

அதனால் தான் பாரதியின் வார்த்தைகள் இன்று கூட மிகப் பொருத்தமாகிறது அனைவரது வாழ்க்கையிலும் அதாவது எண்ணிய முடிதல் வேண்டும் , கல்வி கற்றோர் மேலானவர் ".

கல்வி பெற்ற ஒருவர் தன் குடும்பத்தை மட்டுமல்ல, சமுதாயத்தையும் உயர்த்துவார் என்பது பாரதியாரின் கூற்றுப்படி உண்மையாகிறது.

மேலும், சமயமும், கல்வியும் - இணைந்ததே சமூக நலன் ஆகும்.

சமயம் மனிதனுக்கு நெறியினை கற்றுத் தருகிறது. கல்வி அவனுக்கு நடைமுறைக்கு ஏற்ற அறிவைத் தருகிறது.

இவை இரண்டும் இணைந்தால்தான் முழுமையான சமூக முன்னேற்றத்திற்கான சாத்தியம் ஆகும். உதாரணமாக, சமயப் பள்ளிகள் (மடங்கள், குருகுலங்கள், கல்வி நிலையங்கள்) வழியாக கல்வி பரவுகிறது.

அதற்கு ஆதாரமாக செயல்பட்டு வருவது மயிலம் பொம்மபுர ஆதீனத்திரு மடம். தமிழ் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த 20ம் பட்டம் பெற்ற ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள் தமிழ் வளர்த்தால் ஆன்மீகம் வளரும் என்ற கருத்திற்கு ஏற்ப 85 ஆண்டுகளுக்கு மேலாக அதாவது 14.7.1938 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட மயிலம் தமிழ்க் கல்லூரியில் மயிலம் சுற்றியுள்ள மற்றும் இதர பகுதிகளில் உள்ள ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி பெற்று உலக அரங்கில் தமிழ் மொழியை நிலைநிறுத்தம் வண்ணம் சுவாமிகளின் செயல்திறனால் செயல்பட்டு வருகிறது.

மேலும், இங்கு படித்த மாணவர்களையும் உதாரணமாக கூறலாம். முனைவர் ஞான ஜோதி என்பவர் மயிலம் தமிழ் கல்லூரி வாயிலாக முனைவர் பட்டம் பெற்றதோடு, அவர், தான் கற்ற கல்லூரியைப் பெருமைப்படுத்தும் விதமாக விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்தை தலைமையிடமாக்கி கம்பன் கழக அறக்கட்டளையின் பொதுச் செயலாளராக செயல்பட்டுக் கொண்டு உலக மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் கம்பராமாயண பயிற்சி வகுப்புகளை நடத்துவது மிகவும் பாராட்டுக்குரிய நல்லதொரு செய்தியாகும்

பொதுவாகவே, கல்வி மனிதனுக்கு அறிவும், நெறியும் இணைந்த வாழ்க்கையை கற்றுக் கொடுக்கிறது. அதன் மூலம் சமய உண்மைகளை கல்வியின் வெளிச்சத்தில் பார்ப்பது மனிதனின் மனப்பான்மையை விரிவாக்குகிறது.

இவ்வாறு, சமயமும் கல்வியும் இணைந்து நீதியுடனும், நெறியுடனும், அறிவுடனும் கூடிய சமுதாயத்தை உருவாக்குகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இன்றைய கல்வி முறை அறிவும், நெறியும் இணையும் கல்வியே மனிதனுக்கு நன்மை தரும் கல்வியாகும்.

முடிவுரை

மனிதநேயமே உச்சமாகிறது. சமயம் மனிதனின் இதயத்தை நெகிழ்விக்கிறது. கல்வி அவனின் அறிவை விரிவாக்குகிறது. இவை இரண்டும் சேர்ந்து மனிதனை பூரண மனிதனாக ஆக்குகின்றன. சமயத்தையும், கல்வியையும் இணைக்கும் பொழுது மட்டுமே நல்லதொரு சமுதாயம் உருவாக வழியாகிறது. அதனால் தான் அன்பும், ஒற்றுமையும் நிறைந்ததாகிறது அறமும், நீதியையும் வழிநடத்தும் நிலையாகிறது, அதன் மூலமே அனைவருக்கும் சம அந்தஸ்து கிடைத்து

மனிதநேயத்தையும் உயர்த்தும் வழியாகவும் ஆகிறது. இன்றைய உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஷி போர், வெறுப்பு, அநீதி இவைகள் தான் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இவற்றிற்கான தீர்வு சமயமும், கல்வியும் இணைந்த மனிதநேயக் கல்வியிலே உள்ளது.

அதனைத்தான் இப்போது என்னால் சொல்ல முடிகிறது: அதாவது

சமயம் மனிதனின் இதயத்தை வளர்க்கிறது;
கல்வி அவனின் அறிவை வளர்க்கிறது;

இவை இரண்டும் சேர்ந்து சமுதாயத்தை நல்வழிப் படுத்துகிறது என்பதுதான் உண்மை.

சிவஞானியும் நல்லாற்றூர் சிவப்பிரகாசரும் !

கலைமாமணி கோ. கலியபெருமாள்
புதுச்சேரி. தொடர்பு : 82482 19029

மனிதர்கள் மனம் மாயையிலிருந்து ஈடேறும் பொருட்டு அவ்வப்பொழுது ஞானியர் பலர் திருவவதாரம் செய்துள்ளனர். இத்தகு ஞான பரம்பரையில் வந்தவர் ஸ்ரீ பால சித்தர், என அழைக்கப்படும் சங்குகண்ணர் ஆவார். இவர் கயிலையில் சிபெருமானுக்கு காவல் புரியும் தலைமைப் பொறுப்பில் இருந்தவராகக் கருதப்படுகிறார். சிவனுக்கு நம்பகமான அவரை வீரசைவம் தழைக்கவும், மண்ணுலகில் மாந்தர்களை உய்விக்கவும் அனுப்பப்பட்ட பேரருளாளர் ஆவார். பாலசித்தரின் அருள்பெற்று ஸ்ரீ சிவஞானி திருமடத்தின் பொறுப்பேற்றார். இவரது அருட் சீடராக விளங்கியவரே கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்.

பாலசித்தர் அவர்கள் கடல்வெளியில் தோன்றியதாகவும் கடற்கரையில் உலாவி வந்ததாகவும் பொம்மபுர மக்களால் அறியப்படுகிறது. பாலசித்தரின் சிறப்புச் செய்கைகளால் மக்களின் மனம் ஈர்க்கப்பட்டது. மேலும் அவர்தம் புகழ் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் பரவியது. அவர் மக்களுக்குச் செய்த நற்செயல்கள் மக்களால் உணரப்பட்டு ஊர்மக்களின் நம்பிக்கைக்கும் பிறர்க்கும் உரியவர் ஆகி, தெய்வத்திற்கு ஒப்பாக அவரை வழிபட்டு வந்திருக்கின்றனர்.

தனது தவவலிமையால் பலவான செயற்கரிய செயல்களைச் செய்து மக்களின் மனம் புகுந்து சித்தர் என்று அழைக்கப்படும் நிலைக்கு மக்களால் அறியப்பட்டிருக்கிறார். மேலும் பாலசித்தர் அவர்கள் வீரசைவம் தழைக்கவும் மனிதர்களிடத்து மாண்புகள் ஓங்கவும் தன்னாலான உதவிகளை வழங்கவும் உருவானதே மயிலம் பொம்மபுர ஆதினத்திருமடமாகும். இது தமிழகத்தில் உருவான வீரசைவத் திருமடங்களுள் முதன்மை பெற்றதும் இறையருளால் தோற்றுவிக்கப் பட்டதும் ஆகும்.

இத்திருமடத்தின் முதற்குரவர் பாலசித்தர் இருந்து இருக்கிறார் அடுத்து இம்மடத்தின் இரண்டாம் பட்டம் குருமகா சந்நிதானமாக விளங்கியவர் சிவனே சிவஞானியாக அருள் புரிந்த ஸ்ரீ சிவஞானி

ஆவார். இவர் ஆதி பாலசித்தரிடம் சீடராக இருந்தும் தொண்டு பல புரிந்தும் அவர் செயலுக்குப் பெருந்துணையாக இருந்தும் இருக்கிறார். இவர் தமிழில் நன்கு பாண்டித்தியம் பெற்றவராகவும் திகழ்ந்திருக்கிறார்.

சிவஞானியிடம் உடன் இருந்து ஆன்மிக ஒழுக்கங்களில் சிறந்தவராக இருந்த காலத்து தனது குருவிடம் ஞான உபதேசம் பெற்று அவருக்குச் சீடராகவும் விளங்கினார்.

நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, கலம்பகம், பிள்ளைத்தமிழ், பள்ளியெழுச்சி எனும் ஐந்து நூல்களையும் தனது குருவான ஆதி சிவஞானியின் பேரில் பாடியுள்ளார்.

ஸ்ரீ சிவப்பிரகாசர் சிவபெருமான் மீதும், அடியார்கள் மீதும் அளவற்ற பற்றுக்கொண்டவராக இருந்ததைப் போற்றும் வகையில் சமயக்குரவர் நால்வரைப் பற்றியும் அவர்தம் செய்கைகளைப் போற்றியும் நால்வர் நான்மணி மாலை எனும் சிறந்த நூலை இயற்றியுள்ளார். இந் நால்வர் நான்மணிமாலையில் வீரசைவத்தின் கோட்பாடுகள் அனைத்தும் பொதிந்து கிடக்கின்றன எனக் கூறும்படி உள்ளது. மேலும் சிவனை வணங்கிட அடையப்பெறும் மேன்மைகளைச் சிவப்பிரகாசர் கீழ்காணும் பதிவுகள் இவைகளைக் கொண்டு செய்துள்ளமையால் இன்று நாம் போற்றிப் புகழும்படியாக உள்ளதை அறிவோம்.

மேலும் சமுதாயத் தொண்டே வீரசைவத்தின் உயிர்நாடியாகும். உயிரிடத்திலுள்ள அறியாமை என்னும் ஆணவ இருளைப் போக்கி மெய்ஞானம் தருவது. இட்டலிங்க வழிபாடாகக் கருதப்படுகிறது.

வீரசைவம் மூடப்பழக்க வழக்கங்களை எதிர்க்கிறது. ஜாதி வேறுபாடுகளை நீக்குகிறது. ஆண், பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. தீட்டுகள் என்று அழைக்கப்படும் மேல் ஜாதிக்காரன் கீழ்ஜாதிக்காரன் என்பதை களைந்திட வழிகோலுகிறது. இவைகள் யாவும் இந் நால்வர் மூலமாக குறிப்பிடப்பட்ட செய்திகளின் வாயிலாக நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசரால் அடியார் நால்வரின் நிகழ்வுகளிலிருந்து நாம் அறியும் பொருட்டுத் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது.

திருஞானசம்பந்தர் மக்களை விழிப்படையச் செய்வித்தது

1. உமையம்மையிடம் ஞானப்பால் உண்ட நிகழ்வு
2. படிக்காசு பெற்ற வரலாறு

3. திருமறைக்காட்டில் கதவு திறக்கப்பாடியது
4. சமணரிடத்து அனல்வாதம், புனல்வாதம் செய்வித்தது.
5. ஆண்யானையைப் பெண்யானையாக்கியது.

திருநாவுக்கரசர் மக்களை விழிப்படையச் செய்வித்த நிகழ்வுகள் ஆவன

1. சூலை நோய் தந்து தடுத்தாட் கொள்ளப்பட்டது
2. அப்பூதியடிகள் தொடர்பு
3. திருமறைக்காட்டில் கோவில் கதவினைத் திறத்தல்
4. கல்லைத் தெப்பமாக்கிக் கரையேறிய நிகழ்வு
5. பாம்பு தீண்டிய அப்பூதி அடிகள் மகனை உயிர்ப்பித்தது.

சுந்தரர் மூலமாகச் சீரழிந்த சமுதாய உணர்வுகளை வெளிக்கொணரவும் சமுக விழிப்புணர்வை உருவாக்கியது

1. திருவெண்ணெய்நல்லூரில் தடுத்தாட்கொள்ளப்பட்டது.
2. குண்டையூரில் நெல்மலைப் பெற்றது.
3. முதலையுண்ட பாலகனை மீட்டது.
4. சுந்தரருக்காக இறைவன் பரவை நாச்சியாரிடம் தூது சென்றது.
5. சுந்தரர் வெள்ளை யானை மீதேறிக் கயிலாயம் புறப்பட்டது. இவை சமுதாயக் குறைபாடுகளையும் அற்றைய மக்களின் அறியாமையை போக்கியது பற்றியும் கூறப்படுகிறது.

மாணிக்கவாசகர்

1. வேதத்தை விடத் திருவாசகம் உயர்ந்தது
2. திருவாசகத்தை இறைவனே எழுதியது
3. மாணிக்கவாசகருக்காக சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கியது.
4. திருப்பெருந்துறையில் இறைவன் குருவாக வந்து மாணிக்கவாசகரைத் தடுத்தாட்கொண்டது.
5. மாணிக்கவாசகரைப் பற்றிப் பாடும்போது ஏனைய அடியார் பெருமக்களையும் கூறி மாணிக்க வாசகரின் தனித்தன்மை உணர்த்துவது.

இத்துணைச் சிறப்புகளும் சமுக ஒழுக்கம் மேம்படவும் திறம்படவும் மேற்கூறிய நிகழ்வுகளைக் கொண்டு எடுத்துக்காட்டப்பட்டது.

இவை அனைத்தும் மக்கள் உணர்ந்து உய்யும்பொருட்டு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மீது கொண்ட பற்றின் காரணமாக நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எழுதியது வீரசைவம் மக்களிடைப் பரவிடவும் பன்முகச் சிறப்புகளைக் கொண்ட தன்னகத்தே கொண்டு விளங்கும் நெறிகள் மெய்மைகளும் மக்களிடம் சென்றடைய வேண்டுமெனத் தனது குருவான ஸ்ரீ சிவஞானிக்கு நல்லாற்றூர் சிவப்பிரகாசர் சீடனாக இருந்து இத்தகைய அரும்பெரும் பணிகளைச் செய்து இருப்பது கண்டு அறியலாம்.

மேலும் சிவப்பிரகாசர் வீரசைவம் வளர அடியார் வழிபாடே ஆண்டவன் வழிபாடு என பெருமைப்படக் கூறியுள்ளதும் அவர் செயல் கொண்டு ஏற்றுக்கொள்ளும்படியாக விளங்குகிறது. இவ்வாறாகத் தனது குருவாகிய சித்தர் சிவஞானியின் எண்ணம் பரவ பல்வேறு வகையில் உடனிருந்து உதவிக்குரி யவராகவும், சமூகம் ஈடேறவும் நாடு நன்னிலை அடையவும், மக்கள் மாண்போடு வாழவும் வீரசைவ சமயத் தத்துவத்தோடு நாளும் வளர, இந்நால்வர் நான்மணிமாலை நூலை மாணவர்களும், பக்தர்களும் உணரும்பொருட்டு மாதந்தோறும் கிருத்திகைத் தினத்தன்று சிறப்புச் சொற்பொழிவு நடைபெற வைத்து அடியார்களுக்கு விளக்கப்பட்டு வருவது நடைமுறையில் அமைந்த 20-ஆம் பட்டத்தின் குருமகா சந்நிதானத்தின் நல்லுணர்வாக இருப்பது கண்டு போற்றும்படியுள்ளது.

1. சிவப்பிரசாகர் பாடிய முதல் பாடல் வீரசைவத்திற்குச் சாதிவேற்றுமை இல்லை எனக் கூறப்படுகிறது. மாந்தர்களை வேற்றுமை காணாது வழிநடத்தலே சமய ஒழுக்கம் என்று கூறியுள்ளார்.
2. லிங்கதாரணம் செய்து கொள்வதால் மாந்தர்கள் அனைவரும் இறைவன் நாமம் எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது இதுவே வீரசைவத்தின் நெறியாகும் எனக் கூறியுள்ளார்.
3. பெண்மைக்கு ஏற்றம் தந்து வீரசைவம் போற்றுகிறது.
4. ஆணவப்போக்கு உடையோர்களைச் சாடுவதாக உள்ளது.
5. மயிலம் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவஞான பாலய சுவாமிகளுக்கு எப்பொழுதும் ஞானப்பால் அளிக்கப் பட்டதாகச் சிவப்பிரப்பிகாசர் கூறுகிறார்.

6. இறைவனுக்கு அடிமையாதலினும் அடியவர்க்கு அடியவனாதல் ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதைக் காட்டிச் சென்றுள்ளார்.

7. இல்லறத்திலும் இறைவனைக் காணுகின்ற கொள்கையை வலியுறுத்துகிறது.

8. அங்கத்தை லிங்கமாகக் கொண்ட ஆண்மை, சிவவடிவமே என்பதைக் கூறுகிறது.

9. ஒன்றை மற்றொன்றாக மாற்றும் இறையருள் பெற்று விளங்குவதைக் குறிப்படுகிறது.

10. இறையடி போற்றும் பேறுபெரும் வீரசைவ மரபு வலியுறுத்தப்பெறுகிறது.

11. ஆணவ மலம் மறைக்கப்பெற்ற உயிர் தங்கியுள்ள உடல் லிங்கமாகும் என்பதை உணர்த்துகிறது.

12. வீரசைவத்தில் எல்லாம் வல்ல சிவபெருமானே முழு முதற்றெய்வம் எனப்போற்றுகின்றது.

13. இறைவன் புகழைப் பாடுதலே இறைவன் திருவருளைப் பெறுவதற்கான வழி என்றுரைக்கிறது.

14. இறைவன் திருவருளாலும் ஞான ஆசிரியர் வழிகாட்டு தலினாலும் ஆணவம் முற்றிலும் நீக்கப்படும்.

15. இறைவன்தான் உயிரைக் காத்து உடலைப் பிறப்பிக்கவும் இறப்பிக்கவும் செய்கிறான்.

16. வேதத்தைப் போற்றுவதைக் காட்டிலும் அங்கத்தில் அணிந்திருக்கும் லிங்கத்தை வழிபாடு செய்வித்தல் சிறப்பு என்கிறது.

17. வீரசைவ ஞானியாகிய சிவஞானி அடியவர்கட்கு அகமகிழ்ந்து அளிக்கும் திருநீறே அருளையும் பயனையும் தரும்.

18. ஞானாசியரின் உபதேசத்தைப் பெற்ற ஓர் ஆன்மா தன்னுடைய உடம்பைப் போற்றுவதில்லை.

19. சிவஞான பாலய ஞானிகளின் சித்திகளைக் கூறுகிறது.

20. வீரசைவ மரபிற்கு ஏற்ப அடியவரிடத்தில் பக்தியும் அதனால் அவர்கள் காட்டுகின்ற அன்பும் வீரசைவ மரபிற்கு இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது.

21. ஞானாசிரியரின் திருக்கண் பார்வைப்படுவதால் ஆன்மாக்களின் மலங்கள் சுட்டப்படுகின்றன.

22. ஆணவம் அழிய ஞான ஆசிரியரை வணங்கிடுக.

23. உபமன்யு முனிவரைப் போன்று சீவன் முத்தராகிய சங்கமர் ஆகவேண்டும் என அறிவுறுத்துகிறது.

24. பிற சமயங்களைப் போல வெளியில் சென்று பொருளைத் தேடுவது விடுத்து தனக்குள்ளேயே அதனை ஆய வேண்டும் என்கிறது.

25. வீரசைவத் தத்துவக் கொள்கைகள் வலியுறுத்தப்படுகிறது.

26. சி.வ. என்ற எழுத்துக்களைக் கூறியே பெண்ணாசை என்னும் பாவத்தை நீக்கிக் கொள்ளலாம் என்கிறது.

27. சிவஞானியின் அற்புத நிகழ்வுகளைக் கூறுகிறது.

28. எளிமைத் தன்மையைக் குறிப்பிட்டு வீரசைவக் கொள்கையில் ஐவகை ஒழுக்கத்தில் ஒன்றான பிருந்தியாசாரத்தை நினைவூட்டுகிறது.

29. அடியவர்கள் உண்டு எஞ்சிய பிரசாத உணவை உண்டால் பழியேதும் இல்லை என்கிறது.

30. உச்சரிப்பு முறையில் நமச்சிவாய என்றே முதலில் ஓத வேண்டும் பின்னர் சிவாயநம என்று கூறவேண்டும் எனப் போதிக்கிறது.

31. சிறுதெய்வங்களுக்கான வழிபாட்டில் முக்கியம் செலுத்த வில்லை சிவனையே வணங்க வேண்டும் எனக் கூறுகிறது.

32. உயிர்ப்பலி கொடுப்பதையும், வேதமுறையும் வீரசைவம் ஏற்றுக்கொள்வதில்லை.

33. கருவுற்ற தாய் உண்ட உணவு எப்படி கருவை அடைகிறதோ அதுபோல சிவயோகி உண்ட உணவு அனைத்து ஜீவராசிகளையும் அடையும் எனக் கூறுகிறது.

34. உயிர் முத்தியைப் பெறும் வழிபாடு வீரசைவ வழிபாடு என்கிறது.

35. பிறவி நோயை நீக்கக் குருவாகிய சிவஞான பாலய சுவாமிகளை நினைத்தாலே போதும்.

36. இத்தகைய எடுத்துக்காட்டுகள் யாவும் முத்திப்பேற்றைத் தரும் என்பதை வலியுறுத்துவதாகும்.

37. ஞானாசிரியரின் வாழ்வோடு சம்பந்தம் உற்றால் பிறவியை அறுக்கலாம் என்பதாகும்.

38. ஐவகை ஒழுக்கம் யாவருக்கும் பொது எண் வகைக் காப்பு, வீரசைவர்க்கே தனித்தன்மை தரக்கூடியது எனலாம்.

39. உறுப்புகளால் பெறுகின்ற இல்லற இன்பத்தை வீரசைவ மரபு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது.

40. திருமஞ்சனம் சூட்டிய நீரைச் சேகரித்து நீராக உண்ணுகின்ற வழக்கம் இன்றியமையாததாகும் என இன்னோரன்ன கருத்துக்கள் வீரசைவ மரபில் போற்றப்படுவதுடன் எளிதாக அதனைப் பின்பற்ற நமக்கு வழிவகுக்கிறது. இத்தகைய சிறப்பு அம்சங்களைக் கொண்டு வீரசைவம் தழைத்தோங்க வழிவகுக்கத் தாம் கற்ற கல்வியின் வாயிலாக வீரசைவ வளர்ச்சிக்குப் பெரிதும் பாலசித்தரோடு துணைநின்று மக்களுக்கு வேண்டிய வகைகளான நற்கருத்துக்களை எடுத்துச் சொல்லி நாடு நலம் பல காணவும் அமைதி வாழ்வு மக்கள் காணவும், இன்பமுடைய பெருவாழ்வு கிட்டவும் இனிதான செய்கைகளால் நல்லவைகள் மேம்படவும் மடத்தின் வளர்ச்சிக்குத் தனது குருவோடு இணைந்து செயல்பட்ட நல்லாற்றூர் சிவப்பிரகாசரை எவ்வளவு போற்றினாலும் தகும் எனக் கூறிக்கொண்டு குருவிற்கு ஏற்ற சீடனாகச் சமயம் தழைக்க உதவி புரிந்தோரைப் போற்றுவோமாக.

ஸ்ரீ பாலசித்தரை முதற் குரவராகக் கொண்டு வீரசைவம் வரை அவரது பரிபூரண அருள்பெற்ற முதலாம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் முதல் இதுநாள் வரை 20/ம் பட்டம் வரை அருளாட்சி புரியும் அடிகளாரின் திருவடி மலர்களை வணங்குகிறேன். மேலும் அளப்பரிய வீரசைவப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றிய பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் நூற்றாண்டு விழாவில் நலம் பயக்கும் நற்கருத்துகள் தாங்கிவரும் சிறப்பு மலரில் என்னை எழுதப் பணித்த குருவருளையும் திருவருளையும் நெஞ்சார வாழ்த்தி வணங்குகிறேன்.

பவப்பிணிக்கு மருந்து சிவஞானி

முனைவர் சே. சீனிவாசன்
கௌரவ விரிவுரையாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
செய்யாறு - 604407

முன்னுரை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனினும் கூன், குருடு நீங்கி பிறத்தல் அரிது என்பார் ஔவையார். அத்தகைய மனிதப் பிறவியில் பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உனை மறவாமை வேண்டும் எனப் பாடுவார் காரைக்கா லம்மையார். மனிதப் பிறவியில் இறைவனை அடைதலே உயரிய நோக்கமாக இருந்தது. அதனால்தான் பிறப்பு வேண்டாம் என மறுத்தனர் ஞானிகள். கொடிய பிறவி நிலைகுலைந்து இல்லாது போக, இவ்வுலக உயிர்கள் மீது கருணை கொண்டு இறைவனே குருவாக எழுந்தருளுவது காலம் காலமாக உள்ள வழக்கமாகும். அத்தகைய வழக்கத்தில் பிறப்பை அறுக்கும் பிணிபோக்கும் குருவாக, ஞானகுருவாக இருந்தவர் சிவஞானியே ஆவார். மேலும் சிவனே சிவஞானியாய், முருகனே சிவஞானியாய் இருந்த நிலையில், குருவே சிவஞானியாய் இருந்து பவப்பிணி போக்கிய நிலையை இக்கட்டுரையில் காணலாம்.

ஞானகுரு - சிவஞானி

உலகமக்களுக்கு நன்மை செய்வதற்காகப் பிறவியை வேரறுத்து பிறவாமை எனும் முக்திப் பேற்றை அருளுவதற்காக இறைவன் கொண்ட வடிவமே ஞானகுரு வடிவமாகும்.

நெடிய விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடிக்க அதிசயமான நிமலனாக (தூய்மையானவர்) நம்மை ஆண்டுகொண்டு அருள் புரியும் சிவஞான குருவை நாடி வந்தோம். கதவைத் திறந்திடுங்கள் என்பதை,

கொடிய பிறவிநிலை குலைய வுலகின் வரு
குருசி லருளுத்தி குறுகியே
நெடிய விழியருவி சொரிய நிரதிசய
நிமல மணையுமவர் திறமினோ **(பாச.ப. 36)**

என்னும் பாசவதைப் பரணி பாடல் சுட்டுகிறது.

ஆணவம் கன்மம் மாயை எனும் இம்மூன்று மலங்களும் குற்ற முடையன. இருள் என்ற பெயரால் இம்மலங்கள் குறிப்பிடப் பெறுகின்றன. பிறவித் துன்பத்துக்குக் காரணமான இம்மலங்களை நீக்குவதற்கு வந்த ஞானசூரியனாக சிவஞான தேசிகர் விளங்கு கின்றார். இவ்வுலகப் பொருட்களைப் பற்றி அறியும் அறிவெல்லாம் குறையுடையவை. இவ்வுலகமே எதற்காக? இவ்வுலகம் யாரால் படைக்கப்பட்டது? என்பன போன்ற வினாக்களை எழுப்பி விடை தேடும் முயற்சியே ஞானத்தைத் தரவல்லது. **பரிபூரண ஞானத்தை அருளும் நெறியினைக் காட்டுபவர் சிவஞானியே** என்பதைக் கூற அழகிய கதவினைத் திறந்திடுங்கள் என்பதை,

செறியு மலவிருள் பறிய வருசிவ
ஞான தேசிக தினகரன்
அறியு மறிவுற வருளு நெறியினை
அறைய வணிகடை திறமினோ **(பாச.ப.56)**

என்னும் கண்ணி குறிப்பிடுகிறது. இறைவனுடைய அருள் உருவமே குருவாகும். உயிர்களின் மீது கொண்ட கருணையால் இறைவன், மானிட உறவுடன் ஞானகுருவாக எழுந்தருளுவதை சமய இலக்கியங்கள் சாத்திர நூல்கள் பலவும் விரித்துரைக்கின்றன.

வீரசைவ சமய நெறி சுட்டும் தத்துவங்கள் மூன்றாகும். அவை பஞ்ச ஆசாரம், அட்டாவரணம், சடுத்தலம் எனும் மூன்றாகும். வீரசைவன் மேற்கொள்ளும் ஆன்மீக முயற்சியில் அவனுக்குப் பாதுகாப்பாக விளங்குபவை எட்டு. அவை, திருநீறு, இட்டலிங்கம், குரு, சங்கமம், பாதோதகம், மந்திரம் உருத்திராக்கம் என்பன.

அட்டாவரணங்களுள் ஒன்றாக விளங்கக்கூடிய குருவின் பெருமை அளவிடற்கரியது. குருவின் கருணையால்தான் ஆன்மாவின் பாசம் வதைக்கப்பெற்று ஆன்ம விடுதலை (முக்திபேறு) கிடைக்கப்பெற்றது. சிவஞான பாலய தேசிகர் பாசத்தை வதைத்துப் பதியோடு சேர்த்த நிலையைப் பாடவந்தோம் கதவைத் திறந்திடுங்கள் என்பதாகப் பாசவதைப் பரணி நூலில் இக்கண்ணியில் சுட்டப் பெறுகின்றது.

தெரிக்குஞ் சீர்த்திச் சிவஞான தேசி கன்றாள் சிரத்தணிந்து
மரிக்கும் பாச வதைப்பரணி பாடக் கபாடந் திறமினோ. (பாச.ப.58)

என்னும் கண்ணி தெளிந்த சீர்த்தியை (மிகு புகழ்) உடைய சிவஞான தேசிகன் திருவடிகளை என் தலைமீது சூட்டி (திருவடி தீட்சை) என்னோடு சேர்ந்திருந்த குற்றங்களை (பாசம்) எல்லாம் வதைத்த

செய்தியைப் பாட வந்தேன் கதவினைத் திறந்திடுங்கள் என்னும் செய்தியைச் சுட்டுகிறது.

பவப்பிணியைப் போக்க அழைத்தல்

சிவஞானியை மணிவிளக்கென்று உணராமல் அவனது திருநாமத்தை உச்சரிக்காமல், குரு உபதேசம் பெறாமல் அவன் முன்னிலையில் சென்று மனமுருகி பவப்பிணியைப் போக்கியருள வேண்டாமல் இருப்பவர் யாவரும்,

பவப்பிணி மருத்துவ னெனப்படு சிவஞான
வள்ளல் வந்து வண்மயிலை மலைமேல்
வாழ்தலை மணிவிளக் கெனக் கண்டு
வுள்ள நைந்து சென்றுரைக்கிலர் என்கொலோ
வுண்டுஉடுத்து உழல்வோரே **(சி.பா.தே.கலம்.9)**

என அடையாளப்படுத்தி அவர்களின் அறியாமையைப் புலப்படுத்தி குருவருள் பெற்றுய்ய வாருங்கள் என அனைவரையும் அழைக்கிறார். குறவஞ்சியிலே குறவர்கள் தாம் வாழும் மலையின்கண் வாழும் வளங்களைப் பாடுவது போல மயில மலையின்கண் வாழும் குறவர்கள் தூதுவனைப் பார்த்து தூதுவனே! வருக! நாங்கள் அகந்தையாகிய மலையை உடைக்கும் சிவஞான தேசிகரது மலையில் வாழும் குறவர்கள் என்பதை அறிவாயாக எங்களிடம் மணம் முடிக்கப் பேசி வருமாறு உன்னை அனுப்பிய கோமானிடம் சென்று இதற்கு அவன் தகுதிவாய்ந்தவனா என உணரச் செய்யுங்கள் என்று குறவர்கள் பேசுவதாகச் சிவஞானியின் பெரும் ஆற்றலை அவர் வாழும் மயில மலையின் சிறப்பை மிக அழகாகப் பதிவு செய்து நமக்கு உணர்த்தி ஞானாசிரியரின் பெருமைகளை வெகுவாகப் போற்றி மகிழ்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிவனே சிவஞானியாக இப்பூவுலகில் அவதரித்துள்ளான். அவன் திருவடியைப் பற்றினால் வள்ளுவர் கூறுவது போல பிறவிக்கடலை எளிதில் கடக்க முடியும் என்கிறார் சிவப்பிரகாசர்.

ஆன்மீக மருத்துவர் சிவஞானி

மனிதர்களுக்கு உடலின்கண் வந்துள்ள நோயை அறிய மருத்துவர் நோயாளியின் கையைப் பிடித்து நாடியை ஆராய்வர். வாத, பித்த, சிலேத்துமம் என்ற மூன்று நாடிகளில் பித்த நாடி ஏனைய இரு நாடிகளில் சென்று கொண்டிருக்குமாயின் உயிர்க்கு அழிவில்லை என்று கூறி நோயாளியைத் தேற்றுவர். ஏற்ற உணவினை உண்ணுமாறு பணிப்பர். மருந்து அருந்துதல், மேற்பூச்சு

பூசுதல் முதலிய வகைகளில் ஏற்றவாறு மருந்தினைப் பயன்படுத்துவர். மற்றும் உருத்திராக்கம் அணிவித்தும் மந்திரித்தும் பொருத்தமான வகைகளில் நோயைப் போக்க முயல்வர். இம்முறையிலேயே சிவஞான தேசிகரும், "இடகலை பிங்கலை நாடிகளில் செல்லும் வலியைத் தடுத்து சுழுமுனையாகிய நாடியிற் செலுத்தினால் உயிர் அழிவதில்லை என்று கூறி, அரிய வேத மந்திரங்களோடு சிவபெருமானைத் தியானிக்கச் செய்து திருநீற்றினை உடலிற் பூசச் செய்து உருத்திராக்க மணியை உடலிற் தருப்பித்து திருவைந்தெழுத்தாகிய மருந்தை உபதேசித்து பிறவியாகிய பிணியைப் போக்கிடும் ஆன்மீக மருத்துவராக விளங்குவதனைச் சிவப்பிரகாசர்,

கருத்தில் காண்குறு நாடிகள் முன்றையும்
கண்டுனள் நடுநாடி
கலந்து இயங்குறும் உயிர்க்கு அழிவு இல்லை எனக்
காட்டிநோ யினர்நெஞ்சம்
திருத்திக் கைப்புவிட்டு அருமறைப் பாலொடு
தீதறப் பெருமுக்கன்
தீஞ்சுவைக்கறி தன்னைஉட் கொள்கஎனத்
தெருட்டுபு முனம்கூட்டு
மருத்துப் பையினைச் சோதித்து வெண்பொடி
மருந்து எடுத்து உடல் பூசி
மணிஅ ணிந்துஅருள் அஞ்செழுத்தாகிய
மந்திரம் பிறழாமல்
உரைத்திட்டு ஓம்புறும் பவப்பிணி மருத்துவர்
உருட்டுக சிறுதேரே
உலகஅ வாம்சிவ ஞானமா முனிவரன்
உருட்டுக சிறுதேரே **(சி.பா.தே.பிள்.97)**

எனும் இப்பாடலில் அழகுற விளக்கியுள்ளார்.

உபதேசித்து ஆட்கொண்டவர் சிவஞானி

கார்மேகமானது வறுமையால் வாடுபவர்க்கு நிலத்தில் மழையைப் பொழிவது போல என்னைக் காட்டிலும் உயர்ந்த தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் மற்றும் உள்ளோரும் அவனருளை அடைவதற்கு அரிதாய் இருக்க தீவினையால் அகப்பட்டிருக்கும் எனக்கு (சிவப்பிரகாசர்) எளிதாய் உபதேசித்து ஆட்கொண்டவர் சிவஞானி என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் மற்றையோரும்
மேவரு நிலையார் ஆக வினையினேற்கு அருள் புரிந்தான்
(ஸ்ரீசிவ.ஞா.பா.தே.க.பா.7)

இவற்றால் மனித உயிர்களுக்கு இருக்கும் இருவினையும் சிவஞானியின் அருள் பெற விலகி ஓடும் என்பதை உணர முடிகின்றது.

சிவஞானியின் பார்வை

பிறவிநோய்க்குத் தக்க மருந்து சிவஞானியின் பார்வையே ஆகும். பல காலமாய்க் கொடிய பிறவிநோயில் துன்புறும் உலகத்தினர் யாவரும் அறிந்திருந்தால் ஞானியின் திருமுன்பு சென்று மனம் உருகி பவப்பிணியைப் போக்கிக் கொள்ளலாம். உணவினை உண்டு, உடை உடுத்தி உலக இன்பத்தைத் துய்க்கின்றனர். இது மனிதரின் அறியாமையால் நிகழ்வதாகும். தன்னை அடைந்த அடியார்கள் பிறவிப்பிணியைப் போக்கும் சிவஞானியாய் ஆன்மாக்களை முக்தி அடையச்செய்யும் மானிட வடிவு தாங்கி, உலகத்தில் எழுந்தருளிய சிவனோ இவர் என வியந்து உலகினர் யாவரும் கடவுள் அல்லாமல் அடியார்களின் மனமாகிய கோவிலில் வீற்றிருப்பவர் சிவஞானியே என்பதை,

பவநோய் யகற்றுஞ் சிவஞான தேசிகன் பாரில் வருஞ்
சிவனோ யிவனென் றுலகமெ லாந்தொழுந்(சிவ.பா.தே.க.பா.15)

என்ற பாடலடிகள் பிறவிநோயின் கொடுமையைப் போக்குபவர் சிவஞானி எனக் கூறுகின்றது.

பீடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணிசாரேன்
மடித்தேன் மனை வாழ்கையுள் நிற்பதுஓர் மாயையை
கொடிக் கோபுர மாடங்கள் சூழ்திருப்பேரான்
அடிச் சேர்வது எனக்கு எளிது ஆயினவாறே (திரு.வா.மொ.03)

என்ற நாலயிர திவ்யப் பிரபந்தப் பாடல் பிறவி அறும் வகையைச் சுட்டுகிறது. குருவானவர் தமது கண்களைச் சிவனது கண்களாகப் பாவித்து அவற்றால் நோக்கி சிவமாம் தன்மையை அடையச் செய்தலே நயனதீட்சை ஆகும். பிறவியைப் போக்கத்தக்க மருந்து சிவஞானியின் நயன தீட்சையே ஆகும் என்பதை,

தவப்பிணிக்கு மூலமலம் தான்மூல மாய்க்கினைக்கும்
பவப்பிணிக்கு மருந்துனது பார்வையே தானன்றோ"(சி.பா.க.1)

என்னும் பாடல் மூலம் உணரலாம். குருபூசை, காணும் பொங்கல் போன்ற நன்னாளில் நாம் திருமடத்திற்குச் சென்று குருவின் திருவடியை வணங்கும் பொழுது, குருவின் நயன தீட்சையையும் குருவின் உபதேச மொழிகளையும் பெறலாம்.

சிவஞானியின் திருவடி

உயிர்களை உய்விக்கும் மெய்யறிவை உண்டாக்குகின்ற சிவஞானியே மெய்யறிவு உற்ற உயிர்களைச் சிவமாய்ச் செய்து பிறவியை அழிக்கின்றார். புறப்பொருள்களிடத்து உள்ள ஆசையைத் திருவடிகளில் அடையச் செய்து, துன்புறுத்தி அமுதத்தை அடையச் செய்தார். இருளைப் போக்கச் செய்து, இறைவனை அடைவதற் குரிய மெய்யறிவை என்னிடத்து மலரச் செய்து, ஞானியின் உறவைப் பெற்ற அவரை அகலாது உறைபவர்களே நரகத்துன்பத்தை அனுபவிக்காதவராவர் என்பதை,

வாத மாற்று நீ
போத மாற்று நீ **(சிவ.ஞா.பா.தே.கலம்.1)**

எனக் கூறி சிவஞானியின் திருவடியை வணங்கினால் நல்வினை, தீவினையிலிருந்தும், உலகப்பொருள் பற்று நீங்கியும் இறைவனை அடையலாம் என்பதை உணர முடிகின்றது.

பசிப்பிணி மருத்துவர் சிவஞானி

பிறவிப் பிணியை போக்கும் சிவஞானியாக மட்டும் இல்லாமல் மனிதப்பிறவியில் சிக்கிப் பசிப்பிணியால் வாடும் அனைத்துவித மனிதர்களுக்கும் உணவளித்த செய்தியைப் பின்வரும் சிவப்பிரகாசர் பாடலால் அறியமுடிகிறது.

ஆற்றல் பெரியோர் ஆற்றுவார்க்கு
ஆற்றல் பசியை ஆற்றுதல்என்று
அறைந்த மொழியைக் கடந்துசிவன்
அடியார் எனும்நல் விருந்துஅழைத்துச்
சோற்றுக் குவடு தொலைத்தசிறு
தொல்லைப் பூதம் ஒருகோடி
தொலைத்தற்கு அரிய செஞ்சாலிச்
சோறும் கறியும் கைகவிப்ப
ஊற்றற்கு அமைந்த பால்தயிர்நெய்
உதிர்தீம் கனியும் முறைமுறையே
ஒழுகு பந்தி பலஇருத்தி
உவந்து படைத்துத் தீப்பசியை

மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு
வல்லாய் தாலோ தாலேலோ
மயிலை வரையில் சிவஞான
மணியே தாலோ தாலேலோ (சி.பா.தே. பிள்ளைத்தமிழ் 21)

பசியைப் பொறுத்துக்கொள்ளும் பெரியவர்களை விட அப்பசியைப்போக்கும் இல்லறத்தார் பெரியர் எனும் வள்ளுவர் மொழியை மாற்றி சிவஞானியாகிய துறவி செஞ்சாலிச்சோறும், கறியும், கனியும், பால், தயிர், நெய் எனப் பல விருந்து படைத்து தீப்பசியை மாற்றும் ஆற்றல் உடையவர் ஆகிறார்.

யாசிப்பவரின் கொடிய வறுமையைப் போக்கும் வள்ளலாகச் சிவஞானி திகழ்ந்துள்ளார்.

கொடியது கேட்கின் நெடியவெல் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
(ஔவையார். தனிப்பாடல்)

என்பார் ஔவையார். அத்தகைய கொடிய வறுமையைப் போக்கும் வள்ளல் சிவஞானி ஆவார்.

முடிவுரை

பிறவிப்பிணி நீங்க இறைவனைத் துதித்து வணங்குவதாலும், இறைவனது அருள்பெற்ற குரு பார்வை கிடைப்பதாலும், குருவின் திருவடி தொழுவதாலும் நீங்கும் என்பதை அறியமுடிகிறது.

மேலும், சிவஞானியாகிய குரு கருணையால் பலருக்கும் திருநீறளித்துக் கூன், குருடு, செவிடு, முடம் முதலிய உடற்குறைகளையும், குடர்நோய், வெப்புநோய், காசநோய் முதலிய கொடிய நோய்களையும், மந்திரவாதிகளால் நீக்கமுடியாத நிலையில் வருந்திநின்ற வலியபேய் முதலியவற்றையும் ஆதி சிவஞானி நீக்கியது போல இன்றைய 20ஆம் பட்டம் சுவாமிகளும் பிணிகளை நீக்கி அருள்புரிகின்றார்கள்.

மேலும், திருநீறு பூசிய சிவனடியார்களுக்கும், முருகப் பெருமானின் புகழ் மிகு அடியார்களுக்கும் எனப் பலரது பசிபோக்க அன்னதான மண்டபம் அமைத்து, பவப் பிணியோடு பசிப்பிணி போக்கிய மன்னராக விளங்குகின்றார். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனும் சங்க இலக்கிய வரிகளுக்குச் சான்றாகத் திகழ்பவர். மூதறிவின் வடிவான இருபதாம் பட்டத்துச் சிவஞானியின் புகழை நினைத்து, நெஞ்சம் மகிழ்கிறது.

மண் விடுதலை வேண்டி மயிலம் முருகன்மேல் பண்ணிசைத்த பாவேந்தர்

முனைவர் சொ.சேதுபதி (கிருங்கை சேதுபதி)
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
புதுச்சேரி- 605003
9443190440. 7904890080
sethukabilan@gmail.com

காலந்தோறும் கந்தவேளைத் தத்தம் சொந்த ஊர்த் தலங்களில் கண்டு கவிபாடித் துதித்த அருளாளர்கள் பலர். அவர்களுள் தலங்கள்தோறும் சென்று தமிழ்பாடி வழிபட்டவர்களும் இருக்கிறார்கள். தங்களுக்கு நேர்ந்த குறைகளை எடுத்துச் சொல்லி, தம் காலத்துப் பக்தர்களுக்கும் அருளச் சொல்லி, முருகன் அருளும் திறத்தையும் அவன் அருட்கோலத்தையும் அவன் உறையும் திருத்தலச் சிறப்பினையும் புகழ்ந்து பாடித் துதித்த பல பாடல்கள் தமிழ் உலகில் பக்திச்சுவை நல்கும் பனுவல்களாய்க் கிடக்கின்றன. அவற்றுக்கு இடையே, நாட்டு விடுதலையையும் பாட்டில் இசைத்தவர்கள் பாரதியும் அவர் தாசனும்.

மகாகவி பாரதி முருகனைப் பொதுப்படத் துதிக்கிறார். பாவேந்தர் பாரதிதாசனோ, மயிலம் முருகன் மேல் சிற்றிலக்கியம் வடிக்கிறார். இருவருக்குள் கனலும் தேசிய விடுதலைத் தாகம் அளவிற் பெரிது. அது உலக மானுடம் தழுவியது.

பாவேந்தர் இயற்றிய மயிலப் பிரபந்தங்கள்

மயில் வடிவாகிய மலைமேல் அருள்வடிவாகித் திகழும் மயிலம் முருகனைத் தமிழ் பாடித் துதித்த காலத்தில், அவர் உபாத்தியாயர் கனக. சுப்புரத்தின முதலியாராகவே அறியப் பட்டிருக்கிறார்.

பழந்தமிழ் மரபில் அவர் மயிலம் முருகன் மீது மூன்று சிற்றிலக்கியங்கள் பாடியிருக்கின்றார். அவற்றுள், முதலாவது, புகையிலைக்கடை நாராயணசாமி நாயுடு கேட்டுக்கொண்டதற் கிணங்கப் பாடிய மயிலம் ஸ்ரீஷண்முகன் வண்ணப்பாட்டு (1920), அடுத்தது, புதுவை சின்மயானந்தம் சாமிநாதபிள்ளை குமாரர் ஸ்ரீமான் ஜீர்மாணிக்கசாமி பிள்ளை விருப்பத்தின் வண்ணம்

இயற்றிய, மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்னம் (1925) மூன்றாவதாய் அமைந்த மயிலம் சுப்பிரமணியர் துதியமுது, யார் தூண்டுதலுமின்றித் தாமே பாடி, வெளியிடப் பெற்றது.

பழந்தமிழ்ப் புலமை தெறிக்கப் பாடிய அப்பனுவல்களில், மரபுமணமும், அருள்மணமும் கைகோத்துக் களிநடம் புரிகின்றன. அதே வேளையில், தற்காலத்துத் தேசநலனில் கொண்ட அக்கறையும் புலப்படுகின்றது.

தெய்வ பக்தியும் தேசபக்தியும் இணைந்தெழ, மயிலம் முருகனை மனமுருகப் பிரார்த்தனை செய்கிற இப்பாவாணருக்குள் பாரதிய மரபு இயல்பாகவே இருந்திருக்கிறது என்பதற்கு இப்பாடல்கள் சான்று.

உலக நலன் வேட்கும் உளப்பாங்கு

பிறர் வேண்டலுக்காக அவர் பாடிய போதிலும், அவருக்குள் கவிபாடும் ஆசை தனித்து இருக்கத்தான் செய்திருக்கிறது. அதனைப் பின்வருமாறு, வண்ணப்பாட்டின் காப்புச் செய்யுளிலேயே காட்டிவிடுகிறார்.

உலகுக்கு நற்பாட்டு உரைக்க எனக்கு ஆசை

தன் பாட்டுக்குப் பிறந்த அவர்தம் தமிழ்ப்பாட்டுகளில் தாய்நாட்டுத் துயரம் ஓங்கி ஒலிக்கிறது. அது தீர, முருகன் திருவருளை வேண்டி நிற்கிறது. அசுரர் துயர் கெடுத்து ஆண்ட முருகனை, அந்நியர்தமை விரட்டத் துதிக்கிறார். அதற்கு முதற்களமாகும் காமமும் காழ்ப்புமாய் எழும் அகப்பகையை அறுக்கத் துடிக்கிறார்.

ஒர்குடி மற்றோர் குடியைக் கெடப் பார்க்கும்- இந்த
உலகத்தை நினைத்திடில் உளம் வேர்க்கும்
என்று உலகு குறித்துக் கவலைப்படுகிற கவியுள்ளம், 'கொடு
மாரன்விடும் பாணம் அதிலே மனது நோக இள
மாதர் வசமாகி அலையாது

என்று காமன் வசமாகாமல் காக்கவும் குகவேளின் இரு காலைத் துணையாக எண்ணித் துதிக்கிறது.

அடிமை வாழ்வு அகற்றிட வேண்டுதல்

பின்னர் தேசபக்திப் பாடல்களில் அவர் நாட்டம் செல்கிறது, அது, தெய்வ பக்திப் பாடல்களிலும் எதிரொலிக்கின்றது.

வாழியவே எல்லா வுயிரும் இனிதாக

என வாழ்த்தி முடிக்கும், பஞ்சரத்ன நூலின் ஐந்தாம் பாடல், இப்படி அமைகிறது.

மனிதர்மனிதர்க்கடிமை ஆகுமொரு தீக்கனவு
மண்ணிடை இருப்பதில்லா
வகைக்கெனது நாட்டினர் அறப்போர் நடத்திடுவா
வாய்மையிற் பண்டை நாளில்
எனினும் எனது அன்பான நாடின்று மற்றோர்
இனத்தவர்க்கு அடிமையாதல்
என்னும்இக் கோலத்தை எண்ணி என் தோள் பார்த்து
நான் பார்த்திருக்கு நேரம்
கனிஉதடு புன்னகை கொழிக்கமுக நிலவு தொறும்
கட்டவிழ்க ழல் மொய்ப்பதைக்
கையால் விலக்கியே ஒய்யாரமாக நடை
காட்டிஎன் கைமீதிலே
கனல்மேனி இருள்கடிய வருகோலம் அதுகாணக்
கடும்பகை இருப்பதுண்டோ?
கதியிதென உலகெலாம் வதியும் எழில் மயிலம்வாழ்
கந்தா குழந்தை வேலா

என்று தன் தாய்நாட்டு அவலம் கூறி, அதுபோக்க வேண்டிக் கசிந்துருகிப் பாடுகிறது, பாவேந்தர் உள்ளம்.

நாட்டு விடுதலை வேண்டும் பாட்டு

மூன்றாவதாய் எழுந்த மயிலம் சுப்பிரமணியர் துதியமுது நூலில், பாரத நாட்டின் விடுதலை வேண்டல் என்றே தனிப்பாடல் அமைக்கிறார் பாவேந்தர்.

வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா உன் கையில் உண்டு

என்று தஞ்சம் அடைகிற கவியுள்ளம்,

வீணில் நாங்கள் பட்ட தெல்லாம் சொல்லவோ? - நின்பால்
வேண்டி நிற்பதெல்லாம் இன்பம் அல்லவோ?

என்று வேண்டுகிறார். அது தன்னலம் வேண்டிப் பெறுகிற தனி இன்பம் அல்ல, தாயகம் கெடுதலை ஒழிந்து, விடுதலை பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டும் இன்பம்.

சந்தம் கொஞ்சும் செந்தமிழ்ப் பாடலில், தெய்வ பக்தியில் தேச பக்தியும் சங்கமம் ஆகிறது.

ஆழ்கடல் புவிமேல் எனக்கு இனிது
ஆன பாரத பூமியை நீ
அட்டதிக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய்- வானில்
எட்டவே உரிமைக் கொடி தூக்குவாய்

என்று இந்திய விடுதலைப் போருக்கு விரைந்திட முருகனையும் இழுக்கிறார்.

பாழ்படச் செய்தார் இந்நாட்டினை
ஊழ்வினை தானோ அறியோம்
பாரதத்தார் கொத்தடிமை ஆயினார்- சில
பசி தொலைக்க வேறுதேசம் போயினார்- அந்தோ
ஏழ்கடல் செலும் கீர்த்தி போயினது
ஈனர் யாம்எனும் பேரும் ஆயினது

என்கிற அடிகளில் அவர்தம் இதயச்சுமை இடம் மாறி முருகன் சந்நிதி வந்து சேர்கிறது. இனி பொறுக்க மாட்டாத வேகம் அவர் கவியில் கூடுகிறது.

இக்கணம் கடைக்கண் பார்த்தால் ஓர்நொடி தனில்
எம்குலப் பகை அனைத்தும் மண்பொடி
எத்தனை உத்வேகம். முருகன்பால் அத்தனை பக்திமோகம்.

'மாகாளி பராசக்தி ருஷ்ய நாட்டில் கடைக்கண் வைத்ததாய் மகாகவி பாரதி பாடினார் என்றால், பாவேந்தர், இந்தியத் திருநாட்டின் பகைமேல் ஒருகணம் கடைக்கண் வைத்தால் போதும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். அந்த நொடியிலேயே பகை அனைத்தும் மண்பொடி எனச் சொல்லும் வேகத்தில் ஒரு விவேகம். 'தவிடு பொடி' என்று சொல்வதுதான் உலக வழக்கம். அதுகூடத் தாமதம் ஆகும். அதைவிடவும் மண் பொடி என்று சொல்வதில் விரைவு கூடும்.

மாக்கடல் நீர் தீப்படக்கை வேல்வீடும் கந்தனே- உன்னை
வழிபடும்போதும் குறை நேர்வதோ? - வீரர்
மனதிலும் பொல்லாத சோர்வு சேர்வதோ?

என ஏக்கம் போக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும். கவியுளத்தில் தேசத்தில் இருக்கும் தேக்கமும் தெரிகிறது.

வறுமை நோய்கள் அச்சம் முதலாம்
வழிமறிக்கும் இக்கலி தவிர்த்து இனி

வரவிடாதே எமது நாட்டில் கெடுதலை - சுக
வாழ்க்கையில் நல் வாழ்க்கையாகும் விடுதலை

என்று காவடிச் சிந்து மெட்டில் பாரத நாட்டின் விடுதலை வேண்டிப் பாடி முடிக்கிறது இந்தப் பாட்டு.

வேண்டியவர்க்கு வேண்டியன கொடுக்கும் மயில மலையானிடம் தனிநபர் வேண்டுதல்களை மரபுப்படி முன்வைத்தாலும், பொது நல வேண்டுதலைப் புதுமைப்பட வைக்கிறார். தொடக்க நூலில் எழும் மனித நேயம், அடுத்த நூலில் அடிமைத்தனம் போக்க வேண்டுகிறது. நிறைவாய் எழுந்த நூலில் நாட்டு விடுதலையையே தனிப் பாட்டாக்கித் தருகிறது.

விடுதலையைக் கெடுதலையாக்கிய தீய சக்திகளைச் சாடும் இப்பாவாணரின் அறச்சீற்றத்தின் ஊற்றுக்கண், இந்தப் பக்திப் பனுவல்களில் வெளிப்படக் காண முடிகிறது.

நிறைவாக..

மண்விடுதலை வேண்டி மயிலம் முருகனுக்குச் சொன்மாலை சூட்டிய பாரதிதாசனின் பக்தி மாசுமறுவற்றது, அவர்தம் புரட்சிகரப் போக்கிற்குத் தூண்டுகோல் ஆகியது என்பதற்கு அவர் பாடிய இம்மூன்று சிற்றிலக்கியங்களுமே சான்றுகள்.

மயிலமலை மீதிருக்கும் வள்ளல் சிவஞானி

முனைவர் வேல். கார்த்திகேயன்
இணைப்பேராசிரியர்- தமிழ்த்துறை
காஞ்சிமாமுனிவர் அரசினர் பட்டமேற்படிப்பு மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி - 605 008. 9444220163

தமிழுலகிலும் சமய உலகிலும் தனித்ததோர் இடத்தினைப் பெற்ற திருத்தலம் மயிலம். இம்மயிலம் இயற்கையெழில் கொஞ்சும் மலையைக் கொண்டது. இம்மலையின் தோற்றம் தூரத்திலிருந்து பார்க்கும்போது மயில் வடிவமாகவே காட்சி யளிக்கும். இத்தலத்தில் கயிலை மலையில் காணும் சிவபெருமான், மயிலந்தண் மாமலை எனும் இத்திருத்தலத்தில் சிவஞானியாக எழுந்தருளி ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளாக அருளாட்சி புரிந்து வருகிறார்கள். அவர்தம் திருக்கோலத்தையும் இறையருளையும் நினைந்து பாடியவர்கள் எண்ணிலடங்காப் புலவர்கள். அவர்களுள் மயிலம் பொம்மபுர ஆதீன அருட்சீடராக விளங்கியவர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், இராமலிங்க அடிகள், தியாகராஜக் கவிராயர், வைத்தியநாத தேசிகர், பண்ருட்டி மணி அப்பாவு அய்யர், பாரதிதாசன், ஆ. சிவலிங்கனார், வேங்கடாசல நாயகர், உருத்திரசாமி போன்றோர் இன்றுவரை பல்வகை இலக்கிய வகைகளால் சிறப்பித்துப் பல நூல்கள் பாடியுள்ளனர். மேற்காணும் புலவர் பெருமக்களுள் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் பெரும்புகழையும், அருளாட்சி புரிந்து வரும் சிவஞான பாலய சுவாமிகளின் சிறப்பினையும் வியந்து ஐந்து நூல்கள் பாடியுள்ளார். அவர்பாடிய நூல்களில் காணும் இறைச் சிறப்பினையும் இறையருளின் பாங்கினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர் இத்தரணியில் 32 ஆண்டுகள் வாழ்ந்து 34 நூல்கள் படைத்தளித்த பெருமை, இவர் ஒருவரையே சாரும். அந்த 34 நூல்களுள் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளின் அருட்சீடராய் சிவப்பிரகாசர் அவரது அருளுருவத்தினையும் அவர் வழங்கிய அருளையும் நினைந்து ஐந்து நூல்கள் பாடினார். ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, உலா, அலங்காரம், தாலாட்டு முதலியனவாம்.

சிவனே சிவஞானி

தேவலோகத்தில் தேவர்கள் அமுதுண்ணுவதற்காக விடமுண்ட சிவனது திருவருள் சிறியது எண்ணுமாறு மக்களின் இறப்பும் பிறப்பும் நீக்கிப் பிறந்தவர் சிவஞானி. மயில மலையிலிருந்து அனைவருக்கும் காட்சி கொடுத்த சிவபெருமான் தன்னை நாடிவரும் அன்பருக்கு மயில மலைமீது சிவஞானி என்னும் வள்ளலாக வீற்றிருந்து அருளைப் பொழிகின்றார். இக்கருத்தைச் சிவப்பிரகாசர் தாம் பாடிய நெஞ்சுவிடு தூதில் பின்வருமாறு பாடுகின்றார்.

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் (சி.பா.தே. நெஞ்சு. 28)

சிவஞானியின் அவதார மகிமையினைச் சிவப்பிரகாசர், அடியார் பெருமக்களின் மனதில் தோன்றும் வஞ்சத்தை நீக்குபவர் கயிலை மீதிருந்த சிவன், கண்டத்தில் விடம் இல்லாதவாறு நம் கண்ணினால் காணுமாறு மனிதவடிவில் சிவஞானியாய் எழுந்தருளி வந்துள்ளார்.

தொண்டர் நெஞ்ச வஞ்சம் தொலைக்கும் சிவஞானி
அண்டரஞ்சும் வெள்ளிமலை அண்ணல்காண் அம்மானை
அண்டரஞ்சும் வெள்ளிமலை அண்ணலே யாமாகில்
கண்ட நஞ்சம் கண்டிலம் நம் கண்ணினா லம்மானை
(சி.பா.தே. கலம்.பா.23)

கயிலை நாயகனாம் சிவபெருமான் தன் திருமேனியில் போர்த்திய யானையின் தோலும், இடையில் தரித்த புலித்தோ லாடையும், மார்பில் அணிந்திருந்த தந்தமும் திருக்கைகளில் ஏந்திய இளைய மான், தீ, மழுவும் மாலையாக அணிந்துள்ள தலைமாலையும் கங்கணமாக அணிந்துள்ள ஆதிசேடனும், தலையின்கண் தங்கியுள்ள கங்கையாறு மற்றும் வெண்திங்களையும் மிகுந்த சுமக்க முடியாத பாரம் எனக்கருதி அவற்றினைத் துறந்துவிட்டு எங்களை உய்விக்க மானுடச்சட்டை தாங்கி வந்தவர் சிவஞானி என்பதை ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ் செங்கீரைப்பருவப்பாடலில் பாடுகின்றார்

துங்கவெம் புகர்முகக் களிநல்யா னைமின்அதன்
சுமையும் பெரும்புலிதரும்
துகில்சுமையும் வெண்மருப் புச்சுமையும் இளையாது
துள்ளி ஏழ சிறுகன்றுமான்

வெங்கனல் மழுச்சுமையும் வெண்முளரி மலர்வென்ற
வெண்தலைச் சுமையும் மணிகள்
வெயில் எறித்து இருவிழுவது ஓரா யிரம்படம்
விளக்கும்அர வச்சுமையும் நீள
அங்கம் புரண்டுவலம் ஆலயம் புரியும் அவர்
அணி எனத் திரைகள் புரளும்
ஆயிரம் திருமுகக் கங்கைஅம் சுமையும்
ஒழுகு அமுதகிர ணங்குழவி வெண்
திங்கள் அம் சுமையினோடு போகட்டு உலாவும்இது
செங்கீரை ஆடி அருளே
திமிரமலம் அகல வருசிவஞான மாமுனிவ
செங்கீரை ஆடி அருளே (சி.பா.தே.பிள்ளை.11)

மேற்காணும் பாடலில் சிவபெருமான் தமக்குரிய அடையாளங்களை (பெரும் சுமையாகக் கருதி) விட்டுவிட்டு சிவஞானியாய் எழுந்தருளியமையை அருட்சீடராய் விளங்கும் சிவப்பிரகாசர் பாடியுள்ளார்.

ஆட்சியாளரும் அரசராகச் சிவஞானி

கயிலையில் சிவபெருமானாக இருந்தபோது புலித்தோலை உடுத்தியிருந்ததன் நினைவாக, மண்ணுலகில் சிவஞானதேவனாக வந்தபோதும் புலித்தோல் ஆசனத்தில் இருந்து ஆட்சி செய்யும் அரசராகச் சிவஞானி விளங்குகிறார் என்பதைச் சிவப்பிரகாசர் ஞானாசிரியாராகிய சிவஞானி மீது பாடிய நெஞ்சுவிடுதூதில் பின்வருமாறு பாடுகின்றார்.

..... பெருமான்
உடுத்திருந்த வாசனையால் ஒங்குபுலித் தோல்மேல்
அடுத்திருந்து வாழும் அரசு..... (நெஞ்சுவிடு தூது கண்ணி.56)

பவப்பிணி நீக்கும் சிவஞானி

இறைவனுடைய அருள் உருவமே குருவாகும். உலக மக்களுக்கு நன்மை செய்வதற்குக் கொண்ட வடிவமே ஞானகுரு வடிவமாகும். மேலும், உயிர்களின்மீது கொண்ட கருணையால் காகப் பிறவியை வேரறுத்து பிறவாமை எனும் முக்திப்பேற்றை அருளுவதற்காக இறைவன் மானிட உறவுடன் ஞானகுருவாக எழுந்தருளுவதை தோத்திரம் மற்றும் சாத்திர நூல்கள் பலவும் விரிவாகக் கூறும். குறிப்பாக வீரசைவ சமய நெறி காட்டும் தத்துவங்கள் மூன்றாகும். அவை பஞ்சாட்சாரம் , அட்டாவரணம், சடுத்தலம் எனும் மூன்றாகும். வீரசைவன் மேற்கொள்ளும் ஆன்மீக

முயற்சியில் அவனுக்குப் பாதுகாப்பாக விளங்குபவை எட்டு அவை திருநீறு, இட்டலிங்கம், குரு, சங்கமம், பாதோதகம், மந்திரம், உருத்திராக்கம் என்பனவாம். குருவின் கருணையால்தான் ஆன்மாவின் பாசம் வதைக்கப் பெற்று ஆன்ம விடுதலை என்னும் முத்திப்பேறு கிடைக்கும். அதுபோல் இங்கு சிவஞான பாலய தேசிகர் பாசத்தை வதைத்துப் பதியோடு சேர்த்த நிலையைப் பாடவந்தோம் கதவைத் திறந்திடுங்கள் என்பதாகப் பாசவதைப் பரணி என்னும் நூலில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஞானவிளக்கு, மணிவிளக்கு ஒளிவிளக்கு என்றெல்லாம் சிறப்பிக்கப்பெறும் சிவஞானியை நாடி திருநாமம் கூறாமலும், குருஉபதேசம் பெறாமலும் இருப்பவர்கள் கூட அறியாமையால் உழன்று கொண்டிருப்பார்கள். அவர்களையெல்லாம் தன்னை அடையாளப்படுத்தி குருவருள் பெற்றுய்ய வாருங்கள் என அழைத்து அருள்புரிவார் என்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

பவப்பிணி மருத்துவ னெனப்படு சிவஞான
வள்ளல் வந்து வண்மயிலை மலைமேல்
வாழ்தலை மணிவிளக்கெனக் கண்டு
முள்ள நைந்து சென்றுரைக்கிலர் என்கொலோ
வுண்டு உடுத்து உழல்வோரே. (சி.பா.தேசி.கலம். பா.9)

சிவஞாணி வழங்கும் திருநீற்றின் சிறப்புகள்

மயிலமலையின்கண் எழுந்தருளியுள்ள சிவஞானி தம் கரத்தால் வழங்கப்படும் திருநீற்றின் சிறப்பைக் கலம்பகத்தில் பல இடங்களில் பதிவு செய்துள்ள சிவப்பிரகாசர் சிவஞானியின் திருக்கரங்களால் திருநீறு பெற்று உடலில் நெற்றியில் பூசிக் கொள்ளும்போது கிடைக்கும் நன்மைகள் சொல்லிலும் அடங்காது எண்ணிக்கையிலும் அடங்காது. வறுமை நீங்கி செல்வம் சேரும். அரச வாழ்வு கிடைக்கும், மரணபயம் நீங்கும். கொடிய பாம்பின் நஞ்சுக்கு கருடக் கிழங்காகும். பகைக்குப் படையாகும். மலடர்க்கு பிள்ளைப்பேறு கிடைக்கும். மேற்கூறிய யாவும் கருணையே வடிவமான சிவஞானதேவன் திருக்கரத் திருநீறு அனைத்து செல்வங்களையும் ஒருசேர அளிக்கவல்லது என்பதைப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

மயிலமலை சிவஞாணி

மயிலந்தண் மாமலையில் வள்ளி தெய்வயானையரோடு மணக்கோலங் கொண்ட மாமுருகன் அழகுமிக்க கூரிய வேலினைக்

கையில் ஏந்தியவாறு காட்சிதரும் கோலத்தைக்கண்டு நாளும் தன்னுடைய மனதில் வழிபடுபவர் தவச்சீலர் சிவஞான பாலய சுவாமிகள். அவர் விரும்பி உறையும் மயிலமலையின்கண் அருளாலும் பொருளாலும் வளமும் நலமும் மிகுமாறும் பக்தர்களுக்கு மனக்கவலையினை முழுதும் நீக்குபவர். அவரது சிறப்புமிக்க அருளாட்சியால் மலையில் வாழும் உயிரினங்கள் தங்களது பகைமை மறந்து நட்புடன் பழகிக் களிப்புடன் வாழ்கின்றன. கரிய நிற யானைகள் தன்சினம் மறந்து தனித்தனி குன்றுகள் போலக் காட்சி தருகின்றன. முருகனின் வேலும் மயிலுமாகவே காட்சிதரும் மயில மலை மனிதர்களுக்கு நலம் எல்லாம் வழங்கி வாழ்வித்துக் கொண்டிருக்கிறது என்பதனைக் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழில் முத்தப்பருவத்தில் ஞானத்தை அருளும் குருநாதராக விளங்கி. மயில மலைமீதருளும் சிவஞானியே வாழ்க என்று வாழ்த்துகின்றார்.

இயலும் ஒருகுட வானை அதனுன் இருக்கவான்
என அறிவுற உபாதியற அறிவித்தல்போல
உயலும் உடலில் உள்மேவும் உயிர் பிரமத்தின் வேறு
ஒழிய ஒரு பொருளாகும் என அறிவித்தவா
செயலொடு உரைமனம் யாவும் மதிய மருட்டும் ஓர்
திலக நுதல் உமை பாகர் பணிசெய உய்த்து வாழ்
மயலில் அடியவர் நேச பணிமணி முத்தமே
மயிலை வரு சிவஞானி பணிமணி முத்தமே
(சி.பா.தே.பிள்ளைத் தமிழ் பா.50)

நிறைவாக

கயிலைமலையில் சங்குகன்னராக விளங்கியவர், மண்ணுலகில் சிவஞானியாக அவதரித்தார் என்பது மயிலம் பொம்மபுர ஆதீன அருட்சீடராக விளங்கிய சிவப்பிரகாசரின் கருத்து என்பதனை அவரது பாடல்கள்வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. சிவனே சிவஞானியாக அவதாரம் கொண்டதால் மானுடச்சட்டை தாங்கிய குருவாகத் தம் திருமேனியினை அருட்காட்சியாக நல்கியருள் புரிந்துள்ளார். குருவடிவாக வந்த சிவஞானியைப் போற்றி ஐந்து நூல்களில் விரிவாகப் பாடியுள்ளமை அறிய முடிகிறது. தவச் சீலராகவும், பவப்பிணி மருத்துவராகவும் மயிலமலை மீதாளும் சிவஞானியாகவும் விளங்குவதனை இக்கட்டுரைவழி அறிந்து உணரலாம்.

தமிழ் வளர்த்த தவப்பெரியார்

முனைவர் சொ. அருணன்
தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3, 9442379558 |
arunankapilan@gmail.com

சமயங்களில் தொன்மையானது சைவமென்றால் அதனுள் சிறந்தது வீரசைவமே. சரியையிலும் கிரியையிலும் தவழ்ந்து கொண்டிருந்த சைவத்தை நிமிரச் செய்து தொண்டுக்கு ஆட்படுத்தியது வீரசைவம்தான்.

திருத்தலங்களிலும் குருமடங்களிலும் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருந்த கடவுளை எண்ணித் துதிப்பார்தம் இதயமெல்லாம் நின்றருளக் கொண்டு வந்து சேர்த்தது வீரசைவம்தான்.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே
அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே

என்னும் பாடல் வீரசைவத்தின் வெளிப்பாடாகத்தான் தோன்றி இருக்க வேண்டும். நெஞ்சகத்தையே இடமாகக் கோயில் கொண்டருளும் இறைவனுக்கு அன்பையே மஞ்சன நீராகவும் அன்பர்களுக்குச் செய்யும் தூய தொண்டினையே இறைவனுக்குச் செய்யும் பூசையாகவும் குறிக்கிற அப்பாடலின் உண்மை விளக்கமே வீரசைவத்தின் அடிப்படை.

வீரசைவத்தின் அடிப்படையே தொண்டுதான். அதிலும் கல்வித் தொண்டும், தமிழ்த்தொண்டும் வீரசைவத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

வேதங்களும் வடமொழியும் மட்டுமே இறைவனுக்கு உகந்தது என்று எல்லாரும் நம்பிக் கொண்டிருந்த வேளையில் தேவார திருவாசகம் ஆகிய நால்வர் பாடல்களை நான்மறையாகவும் அதைப் பாடும் தேனார் தீந்தமிழைத் தெய்வீக மொழியாகவும் கண்டு காட்டி மக்கள் மனத்தில் நிலைநிறுத்தியவர்கள் வீரசைவர்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வீரசைவம் செய்திருக்கும் மறுமலர்ச்சி குறிப்பிடத் தகுந்தது. அறியாமையிலும் பேதங்களிலும் மூழ்கிக் கிடந்த அக்காலச் சமுதாயத்தை

உயிர்ப்புடைய தாக்கவும் ஆன்மலயமுடையதாகவும் ஆக்கியது வீரசைவமே.

இத்தகு பெருமையுடைய வீரசைவத்தை எல்லாரும் போற்றிப் புகழ்கின்றனர். ஆனால் வரலாற்றுப் பேரறிஞராக விளங்கும் சதாசிவப் பண்டாரத்தார் போற்றும் விதம் மிக அருமை.

அந்நியர் ஆட்சி நடைபெற்ற அக்காலப்பகுதியில் தாய்மொழி யாகிய தமிழ் அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள்ளப்படாமல் அவ்வயலாரது மொழியே அரசாங்க மொழியாக அமைந்து போயினமையால் தமிழ்மொழி ஆதரவற்ற நிலைமை எய்தியது. எனவே, அதனைப் போற்றுவாரும் கற்பாரும் கற்பிப்பாரும் மிகமிகக் குறைந்து போயினர். அக்கொடிய காலங்களிலே இளம்பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துக் கல்வி கற்பித்து வந்தவர்கள் ஊர்தோறும் வாழ்ந்து கொண்டிருந்த வீரசைவப் பெருமக்களாவர். அவர்கள் எல்லாரும் சிறந்த தமிழ்ப்புலமையும் கடவுட் கொள்கையும் சீலமுமுடையவர்களாகத் திகழ்ந்தமையால் கிராமத்திலிருந்த செல்வர்களாலும் பொது மக்களாலும் பெரிதும் மதிக்கப் பெற்று இனிது வாழ்ந்து வந்தனர் என்று வீரசைவாசிரியப் பெருமக்களைப் போற்றும் சதாசிவப் பண்டாரத்தார் மேலும் விரிவாக வரலாற்றை நமக்குப் புகட்டுகிறார்.

அன்னோர், தமிழ்மொழியோடு வாழ்க்கைக்கு இன்றியமை யாத கணக்கு முதலியவற்றையும் இளஞ்சிறார்களுக்குக் கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் உவாத்திமைத் தொழிலில் பேரூதியம் பெறுவதற்கு வாய்ப்பில்லாத அக்காலத்தில் தாம் பெற்றது கொண்டு அமைதியாகத் தூய வாழ்க்கை நடத்தி வந்தமையோடு தமிழ்த்தொண்டினை இயன்றவரையில் புரிந்து வந்தமையும் தமிழ்நாடு என்றும் மறவாமல் போற்றத்தக்கதோர் அருஞ்செயலாகும் என்று வீரசைவர்களின் அருந்தமிழ்ப்பணியைத் தமிழ்நாட்டுக்கே எடுத்துரைக்கிறார் பண்டாரத்தார்.

அவர்களுடைய தமிழ்த்தொண்டினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவ்விரண்டினுள், தம்பால் கல்வி பயின்ற சிறுவர்களுள் நுண்மதியும் ஆர்வமும் உடையவர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை எத்தகைய ஊதியமும் பெறாமல் இலவசமாகக் கற்பித்து அன்னோரைத் தமிழ்ப் புலவராக்கியமை ஒன்று- பிறிதொன்று, தாம் வாழ்ந்து வந்த ஊர்களில் திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது அந்தாதி, மாலை, கலம்பகம், உலா,

கோவை முதலியனவும் தல புராணங்களும் பாடி அரங்கேற்றி யாண்டும் தெய்வமணங்கமழச் சமயத்தொண்டு புரிந்து வந்தமையேயாம் என்று அவர்தம் தமிழ்ப் பணிகளை விவரிக்கிறார் பண்டாரத்தார்.

அப்புலவர்கள் ஊர்தோறும் நடத்தி வந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களும் குருகுலங்களுமே அந்நியர் ஆட்சியில் தாழ்வுற்றிருந்த தாய்மொழியைக் காப்பாற்றி வந்தன என்று உறுதியாகக் கூறலாம். நாட்டில் ஆங்காங்கு வாழ்ந்து கொண்டிருந்த பரம்பரைச் செல்வர்களும் அப்புலவர்களின் தன்னலமற்ற தொண்டினைப் போற்றி அன்னோரைப் புரந்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டு, அதன் பயனாக அரசாங்க உதவி பெற்ற ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் தோன்றிய காலத்தேதான் வீரசைவப் புலவர்கள் நடத்தி வந்த பழைய பள்ளிக்கூடங்கள் மறைந்து போயின என்று காலத்தின் கொடுமையை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும் அப்பள்ளிக்கூடங்கள் மறைந்தபின்னர் தமிழறிஞர்களைக் கிராமங்களில் காண்பது அரிதாயிற்று. அங்கிருந்த இளைஞர்களுள் ஆர்வமுடையவர்கள் தமிழ்ப்புலமை பெறுவதற்கும் இடமில்லாமல் போயிற்று. பிறகு, ஆங்கிலமே முதல்மொழியாகக் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் நாட்டில் ஆங்காங்கு அரசாங்க உதவிகொண்டு அமைக்கப் பெற்றன. அவற்றில் கல்வி பயின்ற மாணவர்கள், ஆங்கில மொழியை நன்கு கற்றுத் தேர்ச்சிப் பட்டமும் பதவியும் பெற்றுத் தம் தாய்மொழியாகிய தமிழில் பற்றும் பயிற்சியும் இல்லாதவர்களாகப் போய்விட்டனர். அவர்கட்குப் பண்டைத் தமிழ்நூல்களைப் படிப்பதற்குப் போதிய வாய்ப்புக் கிடைக்காமற் போயினமையால் அன்னோர் பண்டைத் தமிழரின் பண்பாடு, நாகரிகம், வீரம் முதலானவற்றை அறியாதவர்களாகவே இருந்து கொண்டு தமிழகத்தில் தன் வாழ்க்கையை நடத்தி விட்டனர். இக்குறைபாடு தாய்மொழி இலக்கியங்களைப் படிக்காமல் அந்நிய மொழி நூல்களை மாத்திரம் கற்று அவற்றில் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் உண்டாயிற்று என்பது தேற்றம் என்று மனம் பொறாமல் வருந்துகிறார் பண்டாரத்தார்.

ஆங்கிலம் ஒன்றையே கற்றார் அதற்கு ஆக்கையோ டாவியும் விற்றார்
தாங்களும் அந்நிய ரானார் செல்வத் தமிழின் தொடர்பற்றுப் போனார்

என்று ஓர் அறிஞர் கூறி வருந்தியிருத்தலாலும் நன்கறிந்து கொள்ளலாம் என ச் சான்றுப் பாடல் ஒன்றையும் தந்து விடுகிறார்.

வரலாற்றில் ஏற்பட்ட இத்தகைய மிகப்பெரிய ஊனத்துக்கு என்னதான் மாற்று என்று நாமெல்லாம் வருந்தி நோக்கினால் அதற்குத் தகுந்த மருந்தெனக் காட்டுவது எதையென்பதைப் பண்டாரத்தார் வாக்கிலேயே நாம் அறியலாம்.

இதனையுணர்ந்த பெரியோர் சிலர் இத்தகைய நிலைமை இனி ஏற்படாதவாறும் தமிழ்மொழிக்கு ஆக்கமும் ஆதரவும் தேட முற்பட்டனர். அவர்களது அரிய முயற்சியினால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழிக்கு ஓரளவு ஆதரவு கிடைத்தது என்று கூறலாம். இண்டர்மீடியட் பி.ஏ. வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாடங்கள் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும் தமிழ் வித்வான் தேர்வும் ஏற்படுத்தப்பட்டது. அத்தேர்விற்குப் பயிற்சியளிக்கும் பொருட்டுத் தமிழ்க் கல்லூரிகளும் சில இடங்களிலும் அமைக்கப் பெற்றன என்று அக்காலத்து முயற்சிகளைப் பாராட்டும் சதாசிவப் பண்டாரத்தார், முதன் முயற்சியாக நிகழ்ந்த அற்புதத்தையும் அவர் போற்றத் தவறவில்லை.

அவற்றுள் மயிலத்தில் 18ஆம் பட்டம் சுவாமிகளின் அருளாசியால் தோன்றிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிக சுவாமிகள் தமிழ்க் கல்லூரி யாவரும் பாராட்டற்குரிய பெருமையுடைய தாகும். கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்ப் புலமையோடு நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் அமையுமாறு தக்க பயிற்சியளித்து வருவது எல்லோரும் போற்றுதற்குரிய அருஞ்செய லாகும். இவர்களுடைய செயற்கரிய செயல்கள் முன்னர் ஊருக்கொரு குடியினராயிருந்து கொண்டு பல ஊர்களில் தமிழ் வளர்த்து வந்த வீரசைவப் புலவர்களின் அருந்தொண்டுகளை இந்நாளில் நம்மனோர்க்கு நினைவூட்டி மகிழ்விக்கின்றன எனலாம். கல்லூரியின் தமிழ்த்தொண்டையும் சமயத் தொண்டையும் தமிழ்நாடு என்றென்றும் மறவாமல் போற்றும் என்பது திண்ணம்.

குன்றுதோறாடலின் வழி பல்வேறு இலக்கியங்களில் பல்வேறு புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற இத்தலத்து உறையும் முருகப் பெருமான் உண்மையில் தமிழோடும் வீற்றிருப்பது இத்தலத்தில் தான் என்பது மேற்கண்ட சான்றினால் உறுதிப்படுவதோடு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வீரசைவம் எடுத்திருக்கிற முதல் முயற்சியே காலங்காலமாகத் தழைத்தோங்கிப் பன்னெடுங்காலம் பலசான்றோர்களைத் தமிழ்மொழிக்குத் தரப்போகிறது என்பதற்கான முன்முயற்சி என்பதைச் சதாசிவப் பண்டாரத்தார் போற்றத் தவறவில்லை.

வீரசைவர்களின் தமிழ்த்தொண்டு என்று அவர் தலைப்பிட்டுத் தந்திருக்கும் இக்கட்டுரை பதினெட்டாம் பட்டம் சுவாமிகளின் அறுபதாண்டு நிறைவுக்கு எழுதப்பட்ட வாழ்த்துக் கட்டுரையாகும். இதனை இவ்வாறு நிறைவு செய்கிறார் பண்டாரத்தார்.

அன்பும் அருளும் நிறைந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிக மகாசந்நிதானம் அவர்களுக்கு அறுபதாண்டு நிறைவு விழா நடைபெறுவதுணர்ந்து பெருமகிழ்ச்சியுறுகின்றேன். இவர்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பெருந் தொண்டுகள் புரிந்து பல்லாண்டுகள் வாழ்ந்தருளுமாறு திருவடிகளைப் பன்முறை வணங்குகின்றேன் என்று பணிவோடு வணங்குகிறார். இதனை மனத்தில் குறித்துத்தான், மகாகவி பாரதியார்,

இன்ன றுங்களிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

என்று சோலைகள் வளர்த்தல், குளங்கள் வெட்டுதல் அன்ன சத்திரம் வைத்தல், ஆலயம் கட்டுதல் என்னும் தருமங்களோடு சேர்த்துப் பின்னருள்ள தருமங்கள் யாவினையும் பின்தள்ளி அவற்றினும் ஆயிரம் கோடிப் புண்ணியம் என்று ஏழைக்கு எழுத்தறிவித்தலை முதன்மைப்படுத்துகிறார். அதனினும் பெரிதென்றே ஏழைக்குத் தமிழ் எழுத்தை அறிவித்தலை மேலான புண்ணியம் என்று சதாசிவப் பண்டாரத்தார் தமிழ் வளர்த்த திருத்தலமாக மயிலத்தைப் போற்றி 18 ஆம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளை நெஞ்சங் குளிர வாழ்த்துகிறார்.

அத்தகைய தமிழ் வளர்த்த திருத்தலமாகிய மயிலத்தில் 18ஆம் பட்டம் சுவாமிகளைத் தொடர்ந்து 19ஆம் பட்டம் சுவாமிகளும் தானே தமிழ் மாணவராகவும் இந்தக் கல்லூரியில் பயின்றும் கல்லூரியின் நன்னிலைக்குக் கொணர்ந்து உலகம் முழுதும் மயிலத் தமிழை விதைத்திருக்கிறார். வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு எனப் போற்றுவதாக, மயிலத்தின் குருமரபு வாழ்த்து இப்படிப் போற்றுகிறது.

"பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின் வீரசைவப் பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த சங்குகன்ன பால சித்தர்
வரமயிலார் முருக னுபதேசமுடன் வந்துகுருவாகி ஆண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற் குருமரபு சிறந்து வாழி"

இந்தக் குருமரபு தொடர்ந்து தமிழ்ப்பணிகள் செய்து வருவது காலம் உணர்த்துகிற வரலாறு. பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள் அம்மரபில் சிறந்து விளங்கியவர்கள். தவ வாழ்வின் ஒளியாகவும் சமூக வாழ்வின் வழியாகவும் திகழ்ந்து பல அருட்சாதனைகள் புரிந்தவர்கள். அருட்புலவர்கள் பாடிப் போற்றிய மயிலைத்தலத்து இலக்கியச் செல்வங்களையெல்லாம் தம்பதிப்புப் பணியின் வாயிலாக உலகறியச் செய்த உயர்சிறப்பாளர். அதிலும் கற்பனைக் களஞ்சியமாகப் போற்றப்பெறும் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய அருட்பனுவல்கள் தமிழமுது ஒத்தவை. இந்த அருள்நூல்களுக்கு உரையெழுதும் பேறுபெற்ற ஆ.சிவலிங்கனார் அவர்கள், பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகளின் அருள்திறத்தைப் பின்வருமாறு போற்றிப் பாடுவது பெருஞ்சிறப்பு.

கற்பனைக் களஞ்சி யம்குரு நாதர்க் கன்புடன் விட்டதூ ததுவும்
கற்றவர் போற்றும் வெங்கையு லாவும் கலம்பகத் துடன்முது குன்றப்
பொற்பமர் பெரிய நாயகி கலித்து றையுடன் கூவபு ராணம்
புகல்தனிப் பாடல் ஆனநூல் கட்குப் போற்றுரை எழுதச்செய் திட்ட
சொற்பதம் கடந்த பொம்மபு ரத்துப் புண்ணிய! எம்குரு நாத!
தூயஆ தீனப் புலவராம் மணிஅப் பாவையர் சுப்பிர மணியர்
அற்புடன் யாத்த அட்டகம் முதலாம். அரியநூல் களுக்குரை எழுத
ஆணையிட் டமைக்கென் புண்ணியம் நன்றாம் அணிசிவ ஞானி!வா
ழியவே.

பெரியோர்தம் தவவாழ்வு நாட்டுக்கு நலம் பயக்கும், நன்மை பெருக்கும், அருள் பரப்பும், அன்பு கொழிக்கும், அறம் விளைக்கும். இதனையே வையகத்தைத் துறக்கமாக்கும் வழியென்பர் ஆன்றோர். இவ்வாறு தவவாழ்வு வாழ்ந்த பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள் அனுபவ ஞானியாகத் துலக்கம் பெற்றவர்கள். முந்தைத் தவவலி யாலும் சார்ந்த மயிலம் பொம்மபுரம் ஆதீனத்தின் அருள் வழியாலும் நெடுபுகழ் பெற்றவர்கள். நல்லருளாளராய் விளங்கி, நாளும் தெய்வத் தமிழ் வளர்க்கும் உலகப் பணியாற்றி நிலைபெறச் செய்த அப்பெரியார்தம் தவவாழ்வு தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு ஒரு நற்காலம். இந்நூற்றாண்டில் விழா அத்தெய்வத் தமிழ்ப்

பெரியாருக்குச் செய்யும் அணிமகுடமாகவே விளங்கும் என்பதில் மாற்றில்லை.

இன்றும் அவ்வருள் வழியே தோன்றிய போற்றுதற்கும் தொழுதற்கும் உரிய 20ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகளும் தமிழ்க்கல்லூரிக்குத் தற்போது யுஜிசி (பல்கலைக்கழக மானியக்குழு) ஒப்புதலுடன் பல உயர்நிலைகளைப் பெற்றுத் தந்துள்ளார்கள். உலகளாவிய நிலையில் கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் முதலியவற்றை இக்கல்லூரி நடத்தி வருவதும் அதற்குத் தற்போதைய சுவாமிகள் உறுதுணையாக இருப்பதும் தமிழுக்குக் கிடைத்த பேறு. தமிழாய்ந்த புலவோர்கள் பலரும் தடம்பதித்த இத்தமிழ்க்கல்லூரி தற்போது தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகவும் ஏற்றம் பெற்று அறிவியல் ஞானிகளையும் உருவாக்கி வருகிறது. அதுபோலவே மயிலத்தினையும் தொடர்ந்து திருமடம் தோன்றிய பொம்மைய பாளையத்திலும் சித்தர் சிவஞானி கலை மற்றும் அறிவியல் கல்லூரி பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகளின் அருளாணையின் வண்ணம் தோற்றம் பெற்றுத் தற்போது இருபதாம் பட்டம் சுவாமிகளின் வழி சிறப்புற நடைபெற்று வருகிறது. இக்கல்லூரிகளில் பயின்று, பணியாற்றிப் பெருமை பெற்ற பலர் உலகெங்கிலும் பரவியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

தமிழ்காக்கும் இத்திருத்தலத்தையும் தமிழ்வளர்த்த பெரியார்களையும் நாமும் எந்நாளும் நினைந்தடி போற்றுவோம். அக்குருமரபில் வந்துதித்த தமிழ்ப்பெரியார் பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு விழாச் சிறக்கட்டும். அம்மரபின் நின்று செம்மைப் பணியாற்றும் இன்றைய தவஞானியாம் இருபதாம் பட்டம் சுவாமிகளும் நீடூழி நிறைந்திருந்து நூற்றாண்டு விழாக் காண வேண்டிப் பணிகின்றோம். குருவருளும் திருவருளும் முன்னின்று காக்கட்டும்.

நன்றி

1 சதாசிவப் பண்டாரத்தார் ஆராய்ச்சிக்கட்டுரைகள், தொகுப்பாசிரியர். முனைவர் அ.ம.சத்தியமூர்த்தி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113. முதற்பதிப்பு 1998.

“எனைத் தானாக்கும் தம்பிரான்”: தமிழ் குருநெறிமரபும் சிவஞானபாலயதேசிகர் நெஞ்சுவிடுதூதில் குருதரிசனமும்

தினேஷ்குமார் ப.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 605 014. +91 7305879314
thirunavukarasupalanivel@gmail.com

தமிழ் இலக்கியப் பெருவெளியில் பத்தி என்னும் இலக்கிய வகைமையே பெரும் இடத்தை வகிக்கிறது. பதிகம், புராணம், காப்பியம் எனப் பலவகைப்பட்ட நிலைகளில் பத்தி எனும் உள்ளடக்கம் தனது உருவத்தைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. இப்பனுவல் உருவாக்க உருவங்களில் சிற்றிலக்கியம் என்ற வகைமை அதிகம் பேசப்படாத பெரும்பரப்பை ஆக்கிரமித் திருக்கிறது. இடைக்காலத்தில் பல சமய தத்துவ பிரிவுகள் தமிழோடும் தமிழ் இலக்கிய நீரோட்டத்தோடும் தங்களை இணைத்துக் கொள்ள, மையப்படுத்திக் கொள்ள, தமிழ் பிரபந்தவகை இலக்கியங்களின் மூலம் முனைந்துள்ளன. இவ்வகையில் வீரசைவ சமயமானது தமிழ் - தமிழிலக்கியம் - தமிழ்ச் சமயம் ஆகியவற்றில் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியதாயினும் அதிகம் பேசப்படாததாகவே இருக்கிறது.

கர்நாடகத்தில் பசவரால் புத்துயிர் பெற்றதாக சொல்லப்படும் வீரசைவநெறி தமிழகத்தில் நிலைபெற பாலசித்தர், சிவஞான பாலய சுவாமிகள், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் போன்றவர்களின் பங்கு அளப்பரிதாகும். இவர்கள் அருளாளர்களாக அதிசயங்களை செய்ததோடு **12** வீரசைவ ஆதீன மடங்களை ஸ்தாபனம் செய்தல், அறிவுத்துறையில் சமகால சூழலின் தேவைக்கேற்ப கணிசமான இலக்கிய பங்களிப்புகளைச் செய்தல் ஆகியவற்றையும் செய்திருக்கிறார்கள் என்பதைக் கவனப்படுத்த வேண்டியுள்ளது. வீரசைவ திருமடத்துத் தலைவர்களாக அருளாட்சி செய்து வந்த இவர்களேயன்றி, இத்திருமடத்தின் சீடர்கள் செய்த பணிகளும் தமிழ்நிலத்தில் வீரசைவநெறி விளங்கியதற்கும் விளங்கி வருவதற்கும் இன்றியமையாத காரணங்களாகும். இச்சீடர்களுள் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் பங்களிப்பு தனித்துவ

மானதாகும். இவர் மயிலம்-பொம்மபுரம் ஆதீனத்தின் இரண்டாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் அருட்சீடராக விளங்கியவர். இவர் 34 நூல்களை அருளிச்செய்துள்ளார். இடைக்கால தமிழ் இலக்கிய சூழலில் குறிப்பிடத்தகுந்த சோதனை முயற்சிகள் பல செய்து வீரசைவ தமிழிலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர் கற்பனைக் களஞ்சியம். இவர் செய்த பிரபந்த வகைகளில் ஐந்து தனது குருநாதர் மீது பாடப்பட்டவை ஆகும். அவை சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு, கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், நெஞ்சுவிடு தூது.

மனிதரைப் பாடேன் என்றிருந்த நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளை முருகப்பெருமான் கனவில் ஆட்கொள்ள, சிவஞான பாலய சுவாமிகள் மீது அவரால் அருளப்பட்டது சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூதாகும். தூது இலக்கிய வகைமையில் இந்நெஞ்சுவிடுதூதின் தனித்தன்மையும் இந்நூலில் கற்பனைக் களஞ்சியம் வெளிப்படுத்தும் குருபத்தியும் இவ்விலக்கியத்தின்வழி வீரசைவநெறிகளை அவர் வெளிப்படுத்தும் பாங்கையும் உரையாடுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. முதற்கண் தூதுவகைமையுள் இச்சிவஞானபாலய சுவாமிகள் தூதின் தனித்தன்மையை அடையாளம் காண தமிழ் இலக்கியத்தில் தூது இலக்கியத்தின் செல்நெறியை அறிதல் வேண்டும்.

தமிழில் தூது - நெஞ்சுவிடுதூது:

செவ்வியல் இலக்கியமும் அதற்கு இலக்கணமான தொல்காப்பியமும் அகத்துறையில் தூது செல்வோரை "வாயில்கள்" என்று வழங்கினர். தொல்காப்பியத்தில் அகத்திணை இயல், கற்பியல், பொருளியல், களவியல் மற்றும் மெய்ப்பாட்டியல் ஆகிய பகுதிகளில் தூது இலக்கியத்தின் கூறுகள் பல இடம்பெற்றுள்ளன. " ஓதல் பகையே தூது இவை பிரிவே" (தொல்காப்பியம்-அகத்திணையில்-25) என்று பிரிவிற்கான காரணங்களுள் ஒன்றாக தூதையும் சுட்டுகிறார் தொல்காப்பியனார். செவ்வியல் காலத்திற்குப் பிறகு பத்தி இலக்கிய காலத்தில், தமிழ் அகப்பொருள் மரபை உள்வாங்கி, இறைக்காதல் கருத்தியல் வலுப்பெற்றது. அகப்பொருள் துறைகள் அத்தனையும் வைதீக சமயங்கள் தங்கள் கடவுள்களை தலைவனாக்கின. இம்முயற்சியில் தூதும் தப்பவில்லை. தலைவிகளாக மாறிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் முழுமுதற்

கடவுளைத் தலைவனாக்கி பாடினார்கள். பல பொருள்களைத் தூதாக அனுப்பினார்கள்; சைவம் ஒருபடி மேலே சென்று அந்த பரம்பொருளையே அடியவர் பொருட்டு ஒன்றுக்கு இரண்டு முறை தூதாக அனுப்பியதும் அறியக் கிடக்கிறது. நம்பியாரூரருக்காகப் பறவையாரிடம் ஆரூர் வீதிவிடங்கப் பெருமான் தூது சென்றதை நயமாகக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரே,

"படியிலா நின் பாட்டில் ஆரூரா நனி
விருப்பன் பரமன் என்பது
அடியனேன் அறிந்தனன் வான்தொழும்
ஈசன் நினைந்தடுத்தாட் கொண்டுமன்றித்
தொடியுலா மென்கைமட மாந்தர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் வினங்குமாறே"

என்று நால்வர் நான்மணி மாலையில் பாடுவதையும் காணலாம். இவ்வாறு தொல்காப்பியம், செவ்வியல் இலக்கியம், காப்பியம், நீதி நூல்கள், பத்தி பனுவல்கள் முதலிய பல்வேறு வகை இலக்கியங்களிலும் பரந்து விரவிக் கிடந்த தூதுப் பொருண்மை கி. பி. 14ஆம் நூற்றாண்டில் தனி ஒரு சிற்றிலக்கியமாக உருப்பெற்றது. இப்பிரபந்தவகைமையைத் தோற்றுவித்ததுடன் அகப்பொருள் சார்பிலும் புறப்பொருள் சார்பிலும் மட்டுமே இருந்த தூது பொருண்மையைத் தத்துவ ஆராய்ச்சி நிறைந்த அகத்துறை இலக்கிய வகைமையாக்கி வெற்றி கண்டவர் ஸ்ரீ உமாபதிசிவனார் ஆவார். இவரைத் தொடர்ந்து பல புலவர்கள் தமிழில் தூதுப் பயிரைச் செழிப்பாக வளர்த்தனர். பிற்கால இலக்கண நூல்கள் இத்தூது இலக்கியத்திற்கு இலக்கணம் கண்டன.

"பயில்தரும் கலிவெண்பா வினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறை தூது எனப்

பாட்டியல் புலவர் நாட்டினர் தெளிந்தே" என்ற இலக்கண விளக்கம்(874) தொடங்கி, நவநீதப்பாட்டியல் எனும் கலித்துறைப் பாட்டியல்(45), சிதம்பரப்பாட்டியல்(38), பிரபந்ததீபம்(76), பிரபந்தத்திரட்டு(30), பிரபந்தமரபியல்(33), முத்துவீரியம்(112) ஆகிய தமிழ் இலக்கண நூல்கள் தூதின் இலக்கணத்தை இயம்புகின்றன. தமிழில் பல்கிப் பெருகிய இவ்விலக்கிய

வகைமையுள் நெஞ்சைத் தூதாக விடும் நூல்கள் 15 என அடையாளம் காணமுடிகிறது. அவை (1) உமாபதிசிவத்தின் நெஞ்சுவிடுதூது, (2) சிவப்பிரகாசரின் சிவஞானபாலயசுவாமிகள் நெஞ்சுவிடுதூது, (3) சொரூபானந்தகுரு எனும் தத்துவராயரின் நெஞ்சுவிடுதூது (தத்துவநிச்சயம்), (4) அவினாசிநாதரின் நெஞ்சுவிடுதூது, (5) எம்பெருமானார் நெஞ்சுவிடுதூது [ஆசிரியர் அறியப்படவில்லை], (6) கச்சியப்ப முனிவர் நெஞ்சுவிடுதூது [கச்சியப்பமுனிவர் மாணாக்கர் இயற்றியது], (7) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் நெஞ்சுவிடுதூது, (8) சிதம்பர சுவாமிகள் இயற்றிய குமாரதேவர் நெஞ்சுவிடுதூது, (9) மாசிலாமணி தேசிகரின் ஞானப்பிரகாச நெஞ்சுவிடுதூது, (10) தி. செ. முருகாசப் பிள்ளையின் நெஞ்சுவிடுதூது, (11) சிவப்பிரகாசரின் பழனியாண்டவர் நெஞ்சுவிடுதூது, (12) ஸ்ரீ சட்டையப்பசுவாமிகள் செய்த ஸ்ரீ சிதம்பரஞானதேசிகர் நெஞ்சுவிடுதூது, (13) சோம. பெருமாள்சாமி எழுதிய வீரசோமசுந்தரசுவாமிகள் மீது சோமேச நெஞ்சுவிடுதூது, (14) நடேசகவுண்டர் இயற்றிய தடாகம் ஸ்ரீமத்திருமுடிசுவாமிகள் நெஞ்சுவிடுதூது, மற்றும் (15) வேங்கடசாமி ரெட்டியார் எழுதிய காந்தியடிகள் நெஞ்சுவிடுதூது என்பவைகள் ஆகும். இவ்வாறாகத் தமிழில் தூது என்னும் இலக்கிய வகைமையின் செல்நெறியையும் நெஞ்சுவிடுதூது நூல்களின் இருப்பையும் உணர முடிகிறது.

ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது: உருவம் - உள்ளடக்கம் - உரை

ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது காப்புச் செய்யுள் தனி வெண்பாவோடு 225 கண்ணிகளையுடைய கலிவெண்பாவா லானது. இந்நூற்கு பேராசிரியர் சு. குமாரசாமி மற்றும் பேராசிரியர் ஆ. சிவலிங்கனாரின் உரைகள் உண்டு. இந்நெஞ்சுவிடுதூது சிவஞானதேவனின் சிறப்பு(1-23 கண்ணிகள்), தசாங்கம்(24- 51), பவனிவருதல்(52-92), பவனி கண்டவர்கள்(93-114), தலைவி தன்னிலை கூறல்(115-131), நெஞ்சினைப் புகழ்தல்(132-172), வேண்டுகோள்(173-175), சிவஞானி தங்குமிடங்கள்(176-203), சேர்தலாகா இடங்கள்(204-215), பொம்மபுரத்து சிறப்பு(214-223) மற்றும் நெஞ்சைத் தூது சொல்ல வேண்டுதல்(224-255) ஆகிய செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூதில் சிவகுரு

தரிசனம்:

இந்நெஞ்சுவிடுதூது நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள காப்புச் செய்யுளே சிவனே சிவஞான பாலய சுவாமிகள் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" (சிவஞான போதம் - 8ஆம் சூத்திரம்) வருவர் என சிவஞானபோதத்தில் மெய்கண்டார் உணர்த்துவதை நினைவூட்டுவதாகக் கற்பனை நயத்துடன் சிவப்பிரகாசர் தம் குருவே சிவம் என உணர்த்துகிறார். திருமந்திரம் "சுத்தசிவன் குருவாய் வந்து", "குருவே சிவன் எனக் கூறினேன் நந்தி", "சிவனே சிவஞானி" (திருமந்திரம் - ஆறாம் தந்திரம்) என்று காட்டும் சிவகுரு தரிசனத்தைக் கற்பனைக் களஞ்சியம் இந்நெஞ்சுவிடுதூதின் மூலமாகத் தரிசிக்க செய்கிறார். இத்தூது நூலின் காப்புச் செய்யுளில், சுந்தரருக்காக தூது சென்ற சிவமே சிவஞானி என்ற கருத்து சிவப்பிரகாசரின் கவித்திறத்தைக் காட்டுவதாக அமைகிறது. நூலின் முதல் 23 கண்ணிகளும் இத்தகையதே. "கண் நுதலும் கண்டக் கறையும் கரந்து அருளி" (இருபாஇருபஃது-1) என்று அருள் நந்திசிவம் தமது குருநாதர் மெய்கண்டாரை மெய்காணா சிவத்தின் அவதாரம் என சாதித்ததை ஒக்கும் இந்நூலில் முதல் 23 கண்ணிகள்.

உழவர் பாய்ச்சியும் நீரைத் தன் அடியில் உறிஞ்சிப் பின் அதை இனிய சாறு எனத் தரும் கரும்பைக் காட்டிலும் பூமுடியிலே அன்பர் அபிடேக நீரை ஏற்று தமது அருளைத் தரும் கற்பகத்தரு ஒப்பானவர் சிவஞானபாலயதேசிகர் எனத் தொடங்கி, மணி மறைக்கும் நாகத்தை மறைந்து வந்த சிவம், நஞ்சிட்டு வஞ்சியாக அமுதமானவர், பின்னர்த் தோன்றிய அமுதம் போலில்லாமல், விடம் கலவாத இனிய அமுதம்; மானையும் மழுவையும் மறைத்து எம் கன்மம் மாயை ஆகியவை மறையும் படி வந்த தலைவன்; சிவநிலையில் உடுத்திருந்த நினைவால் இப்போதும் புலித்தோலாசனத் திருந்து வாழும் அரசு; அவித்தையை ஒழித்து, உடம்பு நீயில்லை என்று விலக்கி என்னைத் தானாக ஆக்குபவன்; தன்பால் வரும் மக்களுக்குப் பொன்னை வழங்கித் தன்னையே எனக்கருளும் தலைவன். மக்கள் நடத்திச் செல்லும் தேரில், செய்து வைத்த பாகனாகிய பதுமைபோல் மனையறத்தில் எம்மை நிறுத்தித் தான் இயக்குபவன்; தேவர் மேன்மையும் எம் கீழ்மையும் தோன்றா திருக்க மனித வடிவைக் கொண்டுவரும் நம்பன்; சிவபிரானே நேரில் வந்தாலும் அவனையும் திருநீற்றையும் இகழும் சமணர்களும் வந்து வணங்கும் திருவடியுடையவன்; புழுவரித்த

பயிர்போல் ஐம்புலங்களால் துன்புறும் எனக்கு உற்ற துணை ஆவான்; எலும்பில் உயிர் சேர்ந்தது போல் என்னுளத்து அன்பாக்கினான், விண்ணவர் அமுதுண்ணுவதற்காக விடமுண்ட திருவருள் சிறியது என்னும்படி எங்கள் இருவினைகளும் இறப்பும் பிறப்பும் நீங்கப் பிறந்தவன்; கயிலையிலிருந்த காட்சி போல் மயிலமலை மீதிருக்கும் வள்ளல்; மனித வடிவினன் என்றாலும் ஞானமில்லாதவராலும் 'இவன் மேலான கடவுள்' என்றுணரப் படுபவன்; பாவி முதலியவர்க்கும் அருள் புரிபவன்; சான்றோர்க்குத் தோன்றாத் துணையாகித் தோன்றும் துணையுமாகி அருள்பவன்! அறுசமயங்கட்குப் பாற்பட்டவன்; இவ்வாறாகச் சிவஞானியை சிவமெனவே நமக்குக் காட்டுகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

இக்கருத்துகள் அடங்கிய முதல் 23 அடிகள் ஸ்ரீமத் குமரகுருபரரின் பண்டாரமும்மணிக்கோவையில் சிவமே தமது குரு தருமை ஸ்ரீமாசிலாமணி ஞானசம்பந்த தேசிகராக வந்தார் என்று காட்டுவதும், உமாபதி சிவம் தனது நெஞ்சுவிடுதூது பகுதிகளோடும் ஒப்புமை உடையதாக அமைந்துள்ளன கண்டு இன்புறுத்தக்கது. திருவருட்பயன் நூலின் அருளுருநிலை அதிகாரத்திற்கு இலக்கியம் போல அமைந்துள்ளது சிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது. போற்றிப்பஃறொடையில் நடராசப் பெருமானே மறைஞான தேசிகராக எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டார் என்று சொல்லும்,

..... ஆடும் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை இடமும் பவளத்திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் - அச்சம் அற
ஆடும் அரவும் அழகார் திருநுதல் மேல்
நீடு உருவ வன்னி நெடும்கண்ணும் - கேடுஇல் லயம்
கூட்டும் தமருகமும் கோல எரியகலும்
பூட்டு அரவக் கச்சும் புலியதளும் - வீட்டுஇன்ப
வெள்ளத்து அழுத்தி விடும் தாளினும் அடியார்
உள்ளத்தினும் பிரியா ஒண்சிலம்பும் - கள்ளவினை
வென்று பிறப்புஅறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும் உருத்தோன்றாமல் உள்அடக்கி - என்றும்
இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாரும்
தார் உலாவும் புயத்துச் சம்பந்தநாதன் என்று

பேர்இலா நாதன் ஒரு பேர்புனைந்து - பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்துஒழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி (போற்றிப்பஃறொடை: 63-71)

இப்பகுதியின் விரிவாகவே கற்பனை களஞ்சியம் தன் நெஞ்சுவிடுதூது நூலைச் செய்துள்ளார். "தடுத்திருந்தது ஒன்று என்ற அவித்தை ஒழித்திட்டு உடம்பினை நீ அன்று என்று ஒழித்து எனை தானாக்குவான்" (ஸ்ரீ சிவஞானபாலயதேசிகர் நெஞ்சுவிடு தூது: 6-7) 'சிவத்தோடு ஐக்கியப்படாமல் தடுத்து இருந்தது அவித்தை என்கிற கட்டு, அதை ஒழித்திட்டு இத்தேகம் உயிர் அன்று என்று உணர்த்தி, என்னைத் தானாக்குவான்' என்கிறது இந்நூலின் ஒரு கண்ணி. 'தான் ஆதல்' என்பது முத்தியைக் குறிக்கிறது. உண்மை விளக்க ஆசிரியர் எழுப்பும் நிறைவு வினா "தான் ஏது" (உண்மை விளக்கம்: 2) என்பது; இதற்கு பொருள் தானாதல் ஏது; அதாவது சிவமாம் தன்மை பெறுதல் எவ்வாறு? என்பது. உமாபதி சிவனார் "தன்நிலைமை மண்ணுயிர்கள் சாரத் தரும் சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்பயன்:2) என்ற குறளில் தன்நிலைமை என்று குறித்தது சிவத்தின் நிலைமை என்பதாலும் தான் ஆக்குவன் என்பது சிவமாக்குவான் என்பதை உணர்த்துகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஆக, 'அந்த அனாதி சிவமே சிவஞானி எனும் அருளுரு தாங்கி வந்து எம்மை தானாக்குகிறது' என்று காட்டுகிறார் கற்பனைக் களஞ்சியம்.

சிவஞானியும் தமிழ்க் குருநெறிமரபும்:

சைவ மரபில் சிவமே குரு என வருகிறார் என்ற கருத்தை பலர் பலவாறாக வலியுறுத்திய செய்திகளை இக்கட்டுரை காட்டுகிறது. மெய்கண்டாரை அருள்நந்திசிவம் கண்டதுவும் மறைஞானதேசிகரை உமாபதிசிவம் கண்டதுவும் கமலை ஞானப்பிரகாசரைக் குருஞானசம்பந்தர் கண்டதுவும் தருமை மாசிலாமணி தேசிகரை, சிவம் எனவே குமரகுருபரர் கண்டதுவுமான இந்த தமிழ்க் குருநெறி மரபில், சிவஞான பாலய சுவாமிகளைக் கற்பனைக் களஞ்சியம் கண்டு காட்டுகிறார். இவர் காட்டிய நெறியே, துறைசை ஆதீனம் 16ஆம் பட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை சிவம் என கண்டு நெஞ்சு விடு தூது பாடுவதற்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு வழிகோலிற்று எனலாம். தமிழ் இலக்கிய சூழலில், இக்குருநெறி மரபு வீரசைவத்தில் சிவஞானியை மையமிட்டதாகவே

வளர்ந்துள்ளது, வளர்ந்து வருகிறது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற்பட்டியல்:

1. சிற்றிலக்கியச் செல்வங்கள், ந. வீ. செயராமன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001, 2016.
2. நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர் இயற்றிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது மூலமும் உரையும், ஆ.சிவலிங்கனார் (உ. ஆ), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, 1995.
3. தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும் - குறிப்பு விளக்கங்களுடன், ச. வே. சுப்பிரமணியன் (ப. ஆ.), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001, 2009.
4. வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணிமாலை, பழ. முத்தப்பன்(உ. ஆ.), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, 2022.
5. மெய்கண்டசாத்திரம் மூலமும் உரையும், காஞ்சி நாகலிங்க முதலியார் (ப. ஆ.), 1905.
6. ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பிரபந்ததிரட்டு, உ. வே. சாமிநாத ஐயர்(ப. ஆ.), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1988.

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் தமிழ்ப் பணியும், சமயப் பணியும், சமுதாயப் பணியும்

முனைவர் ந. அய்யனார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், தமிழ் கலை அறிவியல் கல்லூரி
மயிலம் - 604 304
தொடர்பு எண்: 6374223271
மின்னஞ்சல்: nayyanar2015@gmai;.com

முன்னுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம் என்பது தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் புதுவையின் எல்லையில் அமைந்துள்ள ஒரு வீரசைவத்திருமடம் ஆகும். திருமடத்தின் சிறப்பு பக்தி நெறியையும் தமிழ் மொழியையும் சிறப்புற அமைத்தும் பழங்கால ஓலைச்சுவடிகளில் உள்ள சமய இலக்கியங்களை நூல்களாகவும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இத்திருமடம் விளங்கி நிற்கிறது.

இத்தகு சிறப்பினைப் பெற்ற ஆதீனத்தை பாலசித்தர் தொடங்கி 2 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள், 3 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1643 - 1695), 4 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1696 - 1727), 5 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1728 - 1733), 6 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1734 - 1746), 7 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1747 - 1761), 8 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1762 - 1770), 9ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள்(கி.பி.1772 - 1773), 10 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1774 - 1784), 11 பட்ட குருமகா சந்நிதானங்கள் (1785 - 1809), 12 பட்ட குருமகா சந்நிதானங்கள்(1810 - 1817), 13 பட்ட குருமகா சந்நிதானங்கள், 14 பட்ட குருமகா சந்நிதானங்கள் (1818 - 1843), 15 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் (1844 - 1887), 16 பட்ட குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1998 - 1916), 17 பட்ட குருமகா சந்நிதானங்கள் ஆகிய குருமகா சந்நிதானங்கள் (கி.பி.1917 - 1927) காலத்தில் பொம்மபுர ஆதீனம் தோற்றம் பெற்று அதனைத் தொடர்ந்து 18, 19, 20 பட்டம் சுவாமிகளின் காலத்தில் எண்ணற்ற வளர்ச்சியினைப் பெற்று வந்துள்ளது.

18 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்

18 ஆம் பட்டம் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு அருளாட்சி செய்தார்கள். சுவாமிகள் திண்ணைப் பள்ளி ஆசிரியராக இருந்து தமிழ்க் கல்வியைப் பலருக்கும் போதித்தார்கள். 1938 ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ்க் கழகத்தின் வழி ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியை விழுப்பும் மாவட்டம் மயிலம் பகுதியில் தோற்றுவிக்கக் காரணமாகத் திகழ்ந்தார்கள்.

கல்லூரி மட்டும் அல்லாமல் அப்பகுதியில் உள்ள ஏழை எளிய மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஆதீனத்து அருட்சீடர் சிவப்பிரகாசர் பெயரில் மேல்நிலைப் பள்ளி ஒன்றையும் ஆரம்பித்தார்கள்.

18 ஆம் பட்டம் அருளாட்சி செய்த காலத்தில் புலவர் பெருமக்கள் பலரால் போற்றிப் புகழப்பட்டுள்ளார் என்பதற்குச் சான்றாக பின்வருகின்ற,

உலகம் உவப்ப உதித்தருள் முனிவ
பவத்திற நீங்கப் பல்வழி காட்டும்
சிவத்திரு சிவஞான பாலயச் செல்வ
பைந்தமிழ் கற்கும் பால்மொழிச் சிறார்க்குச்
செந்தமிழ் நயத்தைச் சிறக்க ஊட்டி

(ப.அப்பாசு, ப. சோமசேகரன்

என்ற பாடலால் அறியலாம்.

19 ஆம் பட்டம் குருமகா சந்நிதாணங்கள்

1965 ஆம் ஆண்டு 19 ஆம் பட்டம் சந்நிதானம் அவர்கள் பட்டம் ஏற்றார்கள். நல்ல நிறம், நல்ல உயரம், அருள் பொழியும் கண்கள், கம்பிரமான உடல்கட்டு, வித்துவான் பட்டம் பெற்றவர். இவர் நினைத்த செயல்களைத் தானே முன்னின்று நடத்தும் ஆற்றல் பெற்றவர் எனச் சிறப்புகள் பல சொல்லிக் கொண்டே போகலாம்.

1991 ஆம் ஆண்டு விநாயகர், பாலசித்தர், வள்ளி தெய்வானை உடனுறை முருகன் திருச்சந்நிதிகளுக்குக் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. 19ஆம் பட்டம் சுவாமிகள் கலந்து கொண்ட விழாக்களில் எல்லாம் துதி பாடல்கள் பாடிய பின்னும் உரையாற்றுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மேலும் இன்று புதுச்சேரிக்கு அருகில் உள்ள பொம்மய பாளையத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய சித்தர் சிவஞானி கலை அறிவியல்

கல்லூரி 19 ஆம் பட்டம் சுவாமிகள் காலக் கட்டத்தில் தோற்றம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் தொண்டாற்றிய 19 ஆம் பட்டம் சந்நிதானம் அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் இறைவனடி சேர்ந்தார்கள்.

20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்

19 ஆம் பட்டம் சுவாமிகளின் காலத்திற்குப் பிறகு 2011இல் மயிலம் பொம்மபுர ஆதீனமாகப் பொறுப்பேற்ற 20ஆம் பட்டம் சுவாமிகள் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. ஆன்மீகப் பணிகள் மற்றும் சமுதாயப் பணிகளாகப் புதிய ஆலயங்களை உருவாக்குதல், ஆலயங்களைப் புதுப்பித்தல், திருக்குடமுழுக்குப் பணி, நூலாக்கப்பணி, பதிப்புப்பணி, இதழ்ப் பணிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகின்றார்கள்.

20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பட்டம் ஏற்ற பிறகு தன் அயராத உழைப்பால் திருமடமும் திருச்சந்நிதிகளும் அழகுபெற்றன. மயிலம் மற்றும் பொம்மபுரத் திருமடங்கள் சீரமைக்கபெற்று அழகுடன் காட்சியளிக்கின்றன. 2012இல் மயிலம் திருமடத்தைத் திருப்பணி செய்தும், சந்நிதிகளைப் புதுப்பித்தும் விநாயகர், பாலசித்தர், வள்ளி தெய்வானை உடனுறை திருமுருகன் திருச்சந்நிதிகளுக்கு குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா செய்தார்கள்.

18ஆம் பட்டம் சுவாமிகள் போல உருவம் அருட்பார்வை, அன்பு, நோக்கு, சிரித்தமுகம் எல்லாவற்றிலும் ஒழுங்குமுறை இக்குணங்களைத் தன்னகத்தே கொண்டவர் தான் 20 ஆம் பட்டம் சுவாமிகளாவார்கள்.

மேலும் சாதி, மதம், இனம் பாராமல் பசவன்னர் கொள்கைப் படி சமுதாயத்தோடு இணைந்து அவர்களுக்கு நல்வழிகாட்டும் பணியும் செம்மையுற நடத்தி வருகிறார்கள். 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் பல சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றி நல்ல அறிவுரைகளை மக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் கூறுகின்றார்கள்.

மயிலம் திருமடத்தில் சமயமும் சமுதாயமும் எனும் பொருண்மையில் மாதந்தோறும் கிருத்திகைத் திருநாளில் சொற்பொழிவு நடைபெறுகிறது. அச்சொற்பொழிவில் பாலசித்தர்

என்னும் இதழும் 20ஆம்பட்டம் சுவாமிகளால் வெளியிடப் பெறுகின்றது.

வீரசைவத்தையும் சமுதாயத்தையும் உள்ளடக்கி வீரசைவ சமய சமுதாய மேம்பாட்டு இதழாக மாதந்தோறும் வெளிவருகிறது. அதில் பல அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாணவ மாணவியர்கள் எழுதும் கவிதைகள் கட்டுரைகள் வெளிவருகின்றன. மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டாக்கும் வகையில் ஆன்மீகப் பணி செம்மையுற நடைபெற்று வருகிறது.

பல காலங்களாக திருப்பணி செய்யாமல் இருந்த பொம்மைய பாளையம் திருமடத்தை 2014ஆம் ஆண்டு புதுப்பித்துக் குடமுழுக்கு விழாவைச் சிறப்புடன் செய்தார்கள்.

கிராம மக்களுக்காகக் கீழ் மயிலத்தில் ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ அரங்கநாதர், ஸ்ரீகருடன், ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகியோருக்குச் சந்நிதிகள் அமைத்து சுற்றுச்சுவருடன் கூடிய திருக்கோயிலை அமைத்து நன்னீராட்டினார்கள்.

மயில மலையில் அடிவாரத்தில் மாரியம்மன் கோயிலைப் புதுப்பித்து அதனருகில் ஸ்ரீலட்சுமி நாராயணனை எழுந்தருளச் செய்து சந்நிதி அமைத்துக் குடமுழுக்குச் செய்தார்கள். அண்மைக் கிராமங்களில் இதுவரை சுமார் 1000 திருக்கோயில்களின் குடமுழுக்கு விழாக்களைத் தலைமையேற்று நடத்தி வைத்து அருளாசி செய்துள்ளார்கள். மக்களாலும் தலைவர்களாலும் போற்றப்பெறும் நம் சந்நிதானங்கள் அறிவார்ந்த கருத்துகளை மாணவர்களுக்கு அடிக்கடி போதித்து ஆசி வழங்குவார்கள். ஆதி சிவஞானியாகவே அவதாரம் எடுத்து குருவாக இருந்து அருள்பவர் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் என்றால் மிகையாகாது.

20ஆம் பட்டம் சந்நிதானம் அருளாட்சி ஏற்ற பின்பு திருமடத்தின் பார்வை விண்ணளவு உயர்ந்தது. மண்ணளவு விரிந்தது. பாமர மக்களும் திருமடத்திற்கு அன்பர்கள் ஆனார்கள்.

20ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் ஆட்சி பீடத்தில் அமர்ந்த நாளிலிருந்து, ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற ஊர்களில் நடக்கும் குடமுழுக்கு விழாவுக்கும் சென்று, அருளாசி வழங்கி வருகின்றார்கள். குக்கிராமங்கள், சேரிகளில் நடக்கும் கோயில் விழாக்களுக்கும் சந்நிதானங்கள் சென்று, சமூக சமத்துவத்தை உருவாக்கி வருகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களும், புறக்கணிக்கப்

பட்ட மக்களும், திருமடாலயத்துக்குத் தொடர்புடையவர்கள் ஆனார்கள்.

அருளாளர்களும் அடியார்களும் மறுபிறவி வேண்டாம் என்றுதான் வேண்டுவார்கள். ஆனால், கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் மட்டும் சோணசைலனைப் பாடிப் பாமாலைத் தொடுப்பதற்கு மறுபிறவி வேண்டும் என்றார்.

விரைவிடை யிவரு நினைப்பிற வாமை
வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொன் மலர் நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் றமியே
னிரு சுடர் களுமேல் கீழ்வரை பொருந்த
விடையுறன் மணிக்குடக் காவைத்
தரையிடை யிருத்தி நிற்றனேர் சோண
சைலனே கைலை நாயகனே. (சோண.பா.39)

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வகுப்பறைகளுக்கே சென்று மாணவர்களுக்குத் தமிழுணர்வையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி வருகிறார்கள். பொம்மபுரம் கல்லூரியிலும், மயிலம் கல்லூரியிலும், நிகழ் காலத்திற்கேற்ற பாடப்பிரிவுகள் தொடங்கப் பெற்றிருக்கின்றன. இராமலட்சுமணருக்கு ஆசார்யராக அமைந்த வசிட்டரைப் போல், பஞ்சபாண்டவருக்கு ஆசார்யராக அமைந்த துரோணரைப் போல, இன்றைக்கு மயிலம் ஆதீனத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆசார்யராக விளங்குபவர், நமது 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் என்றால் அது மிகையாகாது. மயிலம் திருமடத்தில் ஒலிக்கும் தமிழ், நாடெங்கும் கேட்க வேண்டும் என்பதற்காக 8 ஆண்டுகளுக்கும் மேலாகப் 'பாலசித்தர்" எனும் தலைப்பில் மாதந்தோறும் கிருத்திகை நாளன்று "பாலசித்தரும் வீரசைவமும்" என்னும் தலைப்பில் சொற்பொழிவை நடத்தியும் அதில் இதழை வெளியிட்டும் வருகிறார்கள்.

இருபதாம் பட்டம் சுவாமிகள் தமிழ் மொழிக்கு முதன்மை கொடுப்பவர்கள். தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும். அறிவும் அறமும் ஓங்கும் சுத்த சிவானுபூதி தரவல்லது தமிழ்மொழி ஒன்றே என்பதை உணர்ந்த சுவாமிகள் சமயத்தின் வழிநின்று தமிழை உயர்த்திய பெருமைக்கு உரியவர்கள். பிறப்பினால் உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது. அறிவின் அடிப்படையிலே ஒருவனது உயர்வு

அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுவார்கள். அறிவுக்கு முதன்மை கொடுப்பவர்கள் 20 ஆம் பட்டம் சுவாமிகள்.

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் வெளிநாட்டுப் பயணம், சமுதாய, சமயப் பணிகள்

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் 20-ஆம் பட்டம் சுவாமிகள் பொறுப்பேற்றுக்கொண்ட காலத்தில்தான் திருமடத்தில் சமுதாயப் பணியும் சமயப்பணியும் இலக்கியப் பணியும் மாபெரும் வளர்ச்சியைக் கண்டுவருகிறது. திருமடத்தில் இருந்துகொண்டு செய்துவரும் திருப்பணிகள் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்குச் சென்று திருக்குடமுழுக்கு செய்வதும், நீண்ட காலங்களாக தடைப்பட்டிருந்த கோயில் திருப்பணிகளை முழுமையடையச் செய்தும் வந்துள்ளார்கள். கேரளா, கர்நாடகா, ஆந்திரா முதலான பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வீரசைவ மன்றங்கள் நிகழ்த்தும் சமயப்பணியிலும் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்கள். சமுதாயப் பணியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். வடமாநிலங்களுள் ஒன்றான மத்தியப் பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைனிக்குச் சென்று மகாகாளேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்ததோடு, அங்குள்ள சோதிர்லிங்கத்திற்குச் சிறப்பு வழிபாடும் செய்துள் ளார்கள்.

நவம்பர் மாதம் வாரணாசியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களின் தலைமையில் நடைபெற்ற காசி தமிழ்ச் சங்கமம் தொடக்க விழாவில் பல்வேறு ஆதீன கர்த்தர்களோடு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்கள்.

மலேசியா நாட்டில் உள்ள ஸ்ரீவரசித்தி விநாயகர் திருக் கோவிலுக்கும் சுவாமிகள் திருக்குடமுழுக்கு விழாவினை சீரும்சிறப்புமாக செய்தருளியிருக்கிறார்கள். மேலும், 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் தாய்மொழியான தமிழில் திருமணங்கள் நடத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், திருமணத்தின் முக்கியச் சடங்குகள் அனைத்திலும் ஓதத்தக்க தமிழ்ப்பாடல்களைத் தொகுப்பித்துத் தமிழர் திருமண முறையும் வழிபாட்டுப் பாடல்களும் என்ற பெயரில் நூல் ஒன்றை தமிழ் உலகுக்கு அளித்து பெருமைப்படுத்தியுள்ளார்கள்.

2018இல் குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரில் நடைபெற்ற இந்து ஆச்சாரியா தர்மசபா மாநாட்டில் கலந்துகொண்டது சமுதாயத்தில் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு வீரசைவப் பேரவை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விஸ்வ வீரசைவ லிங்காயத்து சங்கத்தின் சார்பாக நடைபெற்ற ஆறாவது மாநில மாநாட்டிற்கு சுவாமிகள் தலைமையை ஏற்றுள்ளார்கள்.

2019ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சார்பாகக் கந்தபுராணமும் வாழ்வியலும் என்ற பொருண்மையில் நடைபெற்ற 20ஆவது சைவ மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுத் திருமடத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

பிப்ரவரி மாதம் 2021ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி, ஆஸ்திரேலியா மெல்பான் தமிழ்ச்சங்கம், இளங்காடு நற்றமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை ஆகியன இணைந்து நடத்திய உலகத் திருக்குறள் மூன்றாவது மாநாட்டிற்கு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் 2018-ஆம் ஆண்டுக்கான "சைவ சித்தாந்தப் பெருமன்றக் காவலர்" என்ற உயரிய விருதினை 20ஆம் பட்டம் சுவாமிகளுக்கு வழங்கி கௌரவப்படுத்தியது.

இலங்கையில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாட்டிற்கு பொம்மபுர ஆதீனம் 20-ம் பட்டம் சுவாமிகள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்கள்.

2020இல் இராஜஸ்தான் மாநிலம் பாலி மாவட்டம் அனந்பூர் காலு என்ற ஊரில் நடைபெற்ற 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிவன் கோயில் திருப்பணித் தொடக்க விழாவிற்கு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அடிக்கல் நாட்டி அருளாசி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

வீரசைவச் செந்நெறி ஓங்கிச் செழித்திட "ஞானசூரியன் சுடரவிழும் மயிலம் பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் அருள்விழியின் மூலம் உயிர்களுக்கு

நல்வழிகாட்டி அடைக்கலம் வழங்கி வருகிறார்கள். "தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குக" என்ற வீரமுழக்கத்துடனும் உயரிய நோக்கத்துடனும் செயலாற்றத் துவங்கிய 20-ம் பட்டம் சுவாமிகள் செயற்கருஞ் செயல்களை செய்து வருகிறார்கள்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது **(குறள்.68)**

என்ற வள்ளுவரின் வாக்கை உணர்ந்து மெய்ப்பித்துள்ளார்கள். மனிதமும் புனிதமும் நிறைந்த பாலசித்தர் இதழைப் பல அறிஞர்களின் இல்லத்திற்கு விலையில்லாமல் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதழின் இருபுறம் உள்ள உள்பக்க அட்டைகளில் சுவாமிகள் மாதம் தோறும் பங்கேற்ற நிகழ்வுகளின் புகைப்படங்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் நடைபெறும் சந்நிதானங்களின் ஆலோசனைக் கூட்டங்களில் இருபதாம் பட்டம் சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றார்கள். சமுதாயத்தில் நலிவடைந்த நிலையிலிருந்த பல்வேறு மேடைக் கலைஞர்களைக் கௌரவப்படுத்தியும் அவர்களது வாழ்வாதாரத்திற்குப் பெரும் உதவிகள் செய்தும் உள்ளார்கள்.

குருமகா சந்நிதானங்களின் எளிமை, இனிமை, நுண்மை, புலமை ஆகிய பண்புகள் எல்லோரையும் ஆட்படுத்துவதாகும். அவர் மேற்கொண்ட அயலகப் பயணங்கள் திருமடத்தின் வளர்ச்சிக்குப் பெரும்துணையாக அமைந்துள்ளன. "துறவானாலும் தூய்மை நலமாகும், பெருமை அறனாகும், வாய்மை நலம் வாழும்" எனும் சான்றோர் வாக்கிற்கு ஏற்ப திகழும் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் என்றும் வணங்குதற்கு உரியவர்கள்.

இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவினைச் செய்துள்ளார்கள். தமிழகத்தின் பெருநகரங்கள், குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள் தொடங்கி அயலக மாநிலங்கள், அயல்நாடுகள் வரை அவர்கள் சென்று செய்த குடமுழுக்குகள் ஏராளமானவை. 20ஆம் பட்டம் சுவாமிகள், வீரசைவத்தின் புரட்சிகரமான கருத்துகள் எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவானவை ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்பதை உணர்ந்தவர்கள். எனவே, வைணவம் மற்றும் இசுலாமிய சமயத்தவர்களுடன் இணைந்து தமிழ்ப்பணியும், சமூகப் பணியும் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமயம் சார்ந்து, அறநிலையங்கள் சார்ந்து நடைபெறும் பல்வேறு விழாக்களில் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் பங்கேற்புச் சிறப்பிக்கின்றார்கள். 2023இல் நடந்த கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கிறித்துவ அன்பர்களுடன் தமது வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டபொழுது நம் சந்நிதானங்களின் முன்னிலையை விரும்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழகத்தைச் சார்ந்த பல்வேறு ஆதீனங்களுடன் நல்ல நட்பினைப் பாராட்டி வருகிறார்கள்.

ஆன்மீக உலகமும் சமய உலகமும் நன்கறிந்த மயிலம் திருமடத்தில் வேரும் வேரடி மண்ணுமாகித் திகழ்வது தமிழ் மொழியும் வீரசைவநெறியுமாகும். சிவபெருமானின் நெற்றிக் கண்போல மயிலம் பொம்மபுர ஆதீனக் குருமகா சந்நிதானங்கள் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தில் அருளாட்சி புரிந்து வருகிறார்கள். உலக மொழிகளுள் தொன்மை மிக்கது தமிழ்மொழி. இம்மொழியைப் பேசும் தமிழினம் மனித இன வரலாற்றில் தொன்மையானவர்கள் என அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ் மொழியும் தமிழ் இனமும் தொன்மையாக விளங்கிய நிலையில் இம்மரபில் தோன்றிய சமய ஒழுக்கங்களும் தொன்மையாக இருப்பதைச் சமய வரலாறுகள் தெரிவிக்கின்றன.

சைவம், வீரசைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம் எனப் பல்வேறு சமயநெறிகள் சமுதாய நன்மை கருதி தோற்றுவிக்கப்பெற்றன. இவற்றுள் திருக்கயிலாயப் பரம்பரையிலிருந்து சங்குகன்ன பாலசித்தர் வீரசைவநெறி தழைக்க புதுச்சேரிக்கு அருகேயுள்ள பொம்மபுரக் கடலருகே 10 வயது பாலகனாகத் துறவுக் கோலத்துடன் அவதரித்தார். அவரது ஞானப் பரம்பரையில் தற்போது 20ஆம் பட்டம் சுவாமிகள் வீரசைவத்தைப் பொலிவுபெறச் செய்துள்ளார்கள்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் தொடரை மெய்ப்பித்துக் காட்டிய அருளாளர்கள் தோன்றிய புண்ணிய பூமி இந்தியத் திருநாடு.

பாருக்குள்ளே நல்லநாடு எங்கள்
பாரத நாடு
ஞானத்திலே பரமோனத்திலே உயர்
மானத்திலே அன்னதானத்திலே

கானத்திலே அமுதாக நிறைந்த....
கவிதையிலே உயர்நாடு
யாகத்திலே தவவேகத்திலே தனி
யோகத்திலே பலபோகத்திலே
ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்தம்
அருளினிலே உயர்நாடு. **(பாரதி, பாரத நாடு, 41**

என்று பாரதத் திருநாட்டைப் பாடிப் பரவசப்படுகிறார் பாரதி. தெய்வ பக்தியாலும் குருபக்தியாலும் உயர்ந்த இந்திய தேசத்தில் தமிழ்நாடு தனித்துவம் மிக்கது. வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில் தொண்டை நாடு சான்றோர் உடைத்து எனப் போற்றப்படுவது.

மண்ணின் மைந்தராய் ஆலயம் அமைத்தார். அறப்பணியில் தந்தை ஆனார். கலைமகளின் தூதுவராய் கல்விச் சாலைகள் அமைத்தார். நாடும் மொழியும் இருகண்களெனக் கொண்டவர். வாழும் வாழ்க்கையை வரலாறாய் கவி அமுதமாக, கடமையின் சின்னமாக, சாதனை நாயகராக, உன்னத குருவாக, உரிமையில் காவலராக தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக தெய்வீகப் புன்னகையுடன் சமுதாயப் பணி ஆற்றியவர் 19 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்.

ஆன்மீக நெறிபரப்பும் தொண்டுள்ளம் கொண்டவர்கள் அறநெறியை மேலோங்கச் செய்யும் ஆண்டவனாய் விளங்குபவர்கள். நிறைநிலையில் நிற்கின்ற குணக்குன்றாகத் திகழ்பவர்கள். சாதி மத பேதமின்றி முறைசெய்து காக்கின்ற இறையானவர்கள். மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசன் தொண்டு என நாடிவரும் அன்பர்க்கு எல்லாம் தக்கதொரு உதவிசெய்யும் தகைமையாளர்.

சமயத்தைப் போற்றும் வகையிலும் சமுதாயத்தைப் போற்றும் வகையிலும் எளிய நடையில் அனைத்து மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையில் பல அரிய பணிகளை அருள் நிறையும் 20 ஆம் பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகள் முன்னெடுத்துச் செயல்படுத்தி வருவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. மாதந்தோறும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்தி வருதல், வீரசைவ சமய சமுதாய மேம்பாட்டுக்கான நிலையினை மக்களிடையே பரப்புதலுக்காக தமிழ், சமயம், சமுதாயம், பண்பாடு சார்ந்த கருத்துகளைக் கொண்டு சிறந்த முறையில் சங்குகன்ன பாலசித்தர் மாத இதழை நடத்தி வருதல், ஆலயங்கள் தோறும் சென்று குடமுழக்கு விழா வேள்விகள், சமய நிகழ்வுகள்

முதலானவற்றை முன்னின்று நடத்தி அருள்நெறிக் காவலராக விளங்குகின்றார். ஞானநெறியினைப் பரப்புவதில் சிவஞானிக்கு நிகர் சிவஞானியே எனக் கூறும் வகையில் 20 ஆம் பட்டம் சுவாமிகளின் பணிகள் யாவும் சிறந்து விளங்குகின்றன.

முடிவுரை

பாலய சுவாமிகள் காலகட்டத்தில் தோன்றிய ஆதீன மரபானது அன்று தொடங்கப் பெற்று எண்ணற்ற வளர்ச்சியினைப் பெற்று இன்று அதனினும் மேலாக மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தின் 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் சீரிய வழிகாட்டுதலில் கல்விப் பணியும், தமிழ்ப்பணியும், சமுதாயப் பணியும் சிறப்புற அமைந்து வருவது குறிப்பிடத்தக்கது. அத்தகைய சிறப்பினைப் பெற்று இன்றளவும் சமுதாய முன்னேற்றமே முக்கியம் என்று பணியாற்றி வருகின்ற இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் திருடிவத் தாமரைகளைப் போற்றி வணங்கி வழிபடுவோம்

துணை நூற்பட்டியல்

1. முனைவர் ச திருநாவுக்கரசு நூலாசிரியர் சிவஞானியின் மகிமை, மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 2024

2. குமாரசிவ ராசேந்திரன். (ப.ஆ) ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மும்மணிக் கோவை., பதிப்பாசிரியர்- 3.

3. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பனுவல் திரட்டு- ஆசிரியர்- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

4. நல்லாவூர் முனைவர். ச. திருநாவுக்கரசு முதல்வர் (ப.ஆ) வீர சைவ நோக்கில் நால்வர் நான்மணிமலை, மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 2022

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அற்புதங்கள்

திரு மு.கண்ணன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் - 05
தொடர்பு எண்: 7397011713.

முன்னுரை

தமிழர்களைப் பண்பட்டால் பழக்கி, அன்பால் அடக்கி, அறிவால் அகிலம் அறியச் செய்த சிறப்பு தமிழ்பக்தி இலக்கியங்களுக்கு உள்ளது எனவே தான் தமிழைப் "பக்தியின் மொழி" என் சமயம் என்னும் சொல் சமைப்பது என்னும் பொருள் உடையது. மனிதன் என்று குறிப்பிடுகின்றோம். வாழ்க்கையை நல்வழிகளில் ஈடுபடச் செய்வது, பண்படுத்தி பக்குவமாக்கி சமைப்பது சமயம் எனப்படும். உலகம் இன்பமாகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்குச் சமயம் துணைபுரிகிறது. இவ்வகையில் தமிழ் மண்ணில் மனிதனாகப் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று மாபெரும் ஆளுமையாக தனி மனித ஒழுக்கங்களோடு வாழக்கூடியர்களை சான்றோர்களாக கருதப் படுகிறது. அவற்றில் சான்றோராக மக்களை நல்வழிப்படுத்தும் விதமாக மக்களுக்கு ஆன்மீக வழியாக புதிய மாற்றத்தை மன அமைதியை ஏற்படுத்தும் வண்ணம் பல துறவிகளும், ஞானிகளும் தமிழ் மண்ணில் தோன்றினார்கள். பிறப்பு என்பது அனைத்து உயிர்களுக்கும் பொது ஆனால் சிறப்பாக வாழ்வதுதான் சுவாமிகளின் மரபு இவ்வரிசையில் ஸ்ரீ சிவஞானபாலய ஐயா அற்புதங்களின் மூலம் எப்படியெல்லாம் மனிதசமூகத்தை நலம் பெற செய்கிறார் என்பதை அறியும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

சிவஞாணபாலய சுவாமிகள் வருகை

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!
அம்மா சிவஞானி அடிக்கமலம்

மும்மாயை கடந்து முயங்குமது
சும்மா தலைமீது சுமத்தினனால்
கைம்மாறு உளதோ கடையே னிடையே (ப-2)

இவரது வருகையின் நோக்கமானது சைவம் சமயம் வளர்ச்சி அடைய மக்கள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவும், தமிழை செம்மைப்படுத்தவும் ஆன்மீகத்தை அழகுப்படுத்தவும் இப்பூவுலகில் அவதரித்தார்.

சோழநாட்டில் சீர்காழியில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் திருஞான சம்பந்தர் பெருமான்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
நெற்றில் நல்கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லது துஃறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்ற பாடலில் அற்புதக் காட்சியை கண்முன் கொணர்ந்தவர் திருஞானசம்பந்தர் பெருமான். இவரைப் போலவே சிவஞானபாலய சுவாமிக்கு முருகன் காட்சி கொடுத்தல்,

முருகப்பெருமான் பாலசித்தருக்கு அருள்புரியும் காலம் கனிந்தமையால் பிரிந்த தேவியரைத் தேடிவருவார்போல, மயில மலையை அடைந்து தேவியர் இருக்கும் இடம் இதுவெனத் துணிந்து போர்க்கோலம் கொண்ட அரசர் வடிவத்தில் அம்மாளிகையில் நுழையச் சென்றார். அங்கிருந்த பாலசித்தர், "கன்னியர் இருக்குமிடத்து ஆடவர் புகுதல் தகாது" எனத் தடுத்தும் முருகன் நுழைய முற்பட்டபோது இருவருக்கும் போர் ஏற்பட்டது. பாலசித்தர் முருகன் எய்திய படைகள் அனைத்தையும் தடுத்ததோடு, இறுதியாக முருகன் ஏவிய வேலினையும் கன்னியர் அருளால் தம்வசப்படுத்திக் கொண்டார். முடிவில், முருகப்பெருமான் படைக்கருவிகள் அற்றநிலையில் சித்தருடன் நேருக்கு நேராக மற்போர் புரியத் தொடங்கினார். பாலசித்தரது மார்பில் அறைந்து அவரைக் கீழே தள்ளியும் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரண்டும் காலால் உதைத்தும் போர் புரிந்து அருளினார்.(ப-11)

தான் நேசிக்கும் முருகனை கண்டறிய அவருடைய ஆசியை பெற பல வருடம் தவமிருந்து முருகனின் துணைவியார்களின் முயற்சியால் போர் புரிந்து முருகனைக் கண்டார்.

பாலசித்தரின் சீடர் பாலய சுவாமிகள்

ஒருநாள் பாலசித்தர் பொம்மபுரத்தை அடுத்த பெருமுக்கல் மலையில் தங்கியிருந்து வீரசைவத் திருநெறி பரப்பி வந்த காலத்தில் சிதம்பரம் பச்சைக் கந்தமரபைச் சார்ந்த அம்மவை என்பார் மகப்பேறின்றி வருந்தினர். இனிச் "சிவநெறித்தொண்டே மேற்கொள்ளற் பாலது என்னும் திண்ணிய எண்ணத்தோடே பாலசித்தரை அணுகி அவருக்குத் தம் கணவரும், தாமும் தொண்டு புரியலாயினர். அம்மவை அம்மையார்,பாலசித்தருக்குத் தாமே சதுரக்கள்ளிப்பாலைக் கறந்து வந்து கொடுக்கும் திருத் தொண்டினைச் செய்துவந்தார்.

ஒருகால் அவ்வாறு கள்ளிப் பாலைக்கறந்து தர, அதனை உண்ட பாலசித்தரின் கள்ளிப்பால் பிரசாத சேடத்தால் அம்மவையார், குருவருள்வழி ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தார். பாலசித்தருடைய அறிவுரைப்படி அவருடைய திருவருட் பார்வையில் அக்குழந்தை வளர்ந்து தொண்டு செய்துவர, அவர்தம் பக்குவநிலை உணர்த்த அவரைச் சீடராக அமைத்துக் கொண்டார் பாலசித்தர்.(ப- 13)

எந்த ஒரு மனிதனும் சீடராக பணி செய்து பின்புதான் குருவாக மாற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் சிவஞான பாலய அவர்கள். குருவின் கட்டுப்பாட்டில் அரவணைப்பில் இருந்து கல்வி கற்று அவரின் ஆசி பெற்று பின் சாமியாக மலர்ந்தார்.

சிவஞான பாலய சுவாமிகளின் அற்புதங்கள்

மணலைச் சக்கரையாய் மாற்றியருளியது

காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு வீரசைவ நெறியை விளக்கும் பொருட்டு யாத்திரை மேற்கொண்டு செய்யூரை அடைந்தனர். அங்கே வேளாளருள் சிலர் ஒரு புதுக்குடத்தில் மணல் நிறைத்து, மறைத்துக் கொண்டு வந்து தம்திருமுன்பு வைத்ததைத் தம் யோக ஆற்றலால் அறிந்து வெண்மணலைச் சருக்கரையாக்கி யாவருக்கும் அளித்தருளினார். (ப-15) இயற்கைக்கு மாறாக செய்வது அதிசயமாக கருதப்படுகிறது. அவ்வகையில் சுவாமி அவர்கள் அதிசயங்களை கூட அறவழியில் பிறர் நலம் போன்று வகையில் அதிசயங்களை நிகழ்த்தி உள்ளார். அதிசயங்களை நிகழ்த்தி வாழியடி வாழயென வந்த திரு கூட்ட மரபான சித்தர் வழியில் காட்சி தருகிறார் என்றால் அவை மிகையாகாது.

விஷம் நீக்கியருளியது

சிவஞான பாலய சுவாமிகள் காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதரைத் தரிசித்து அங்கு சிவயோகத்தில் இருந்த போது விடந்தீண்டியிறந்த ஒருவனை அன்பர்களின் வேண்டுகோளின் படித் திருநீற்றை உடலில் தடவி உயிர்ப்பித்தார். மேலும், அங்கே எக்காலத்திலும் விடவாதனை இல்லாதிருக்கவும் அருள்செய்தார்.

சூலை நோய் நீக்கியது

விடம் நீக்கிய செய்தியைக் கேட்டு அப்பகுதியை ஆண்ட நவாபு, தன் மனைவியை வாட்டி வருத்திய சூலை ஐ நோயை நீக்கியருள, சுவாமிகளிடம் வேண்டினான். ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் அந்தநவாபினை நோக்கி ஏகாம்பரநாதர் திருச்சந்நிதி முதலியவற்றில் உம்மால் குறைக்கப்பட்ட நித்திய நைமித்தியங்களை முன்போல நடத்தி வந்தால் இந்நோய் நீங்கும் என்றுரைத்துத் திருநீறளித்து நோயினைத் தீர்த்தருளினார்.

ஆதீனமும் திருமடமும்

பொம்மைய பாளையத்தை அடுத்துள்ள பெருமுக்கல் முதலிய மலைகளுக்கும் வனங்களுக்கும் தம் யோக வல்லமையால் உலாவிச் சென்று ஆங்காங்கு உள்ள சித்தர்களுக்கும் அடியார்களுக்கும் வீரசைவ ஆகம நெறிகளை உணர்த்தினார். பலவித் சித்துக்களையும் செய்தருளினார். பால வயதினராய் சித்துக்கள் பல செய்தமையால் பாலசித்தர் எனப் பெயர் கொண்டார். பிரம்ம நிலையை உணர்ந்து தங்கியிருந்தமையால் இவ்வூர் பிரம்மபுரம் என வழங்கலாயிற்று. (நாளடைவில்) பிரம்மபுரமே பொம்மபுரம் ஆயிற்று. பாலசித்தரின் தவ ஆற்றல் உலகில் பரவியதால் சீடர்கள் பலர் உருவாயினர். அச்சீடர்களின் பக்குவ நிலையறிந்து ஞான உபதேசம் செய்தருளி தாம் தங்கி சிவயோகம் புரிவதற்கு அமைத்துக்கொண்ட திருமடம் பொம்மையப் பாளையத் திருமடம் என்ற பெயரில் அழைக்கப்பட லாயிற்று.(ப-16) சுவாமி அவர்கள் மடம் அமைத்து ஆன்மீகப் பணி,தமிழ் பணி, சமூகப் பணி செய்துள்ளார்.

ஆதீனமும் பணிகளும்

பழங்கால சைவ இலக்கியங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சுக்குக் கொண்டு வரும் திருப்பணியைத் தொடங்கி வைத்தது மயிலம் பொம்மபுர ஆதீனம் எனலாம்.

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் பலவும் மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடாகவே பதிப்பிக்கப்

பெற்றுள்ளன.ஆதியில் தோன்றிய சைவ இலக்கிய நூல்களை ஓலையிலிருந்து நூலாக ஒளி பெறச் செய்து மேலும் பல அறியநூல்களை அச்சேற்றி வெளியிட்ட பெருமை நமது சாமிகளையும் மடத்தையும் சாரும்.

பசிப்பிணி அறுத்த சிவஞானி

ஆற்றல் பெரியோர் ஆற்றுவார்க்கு ஆற்றல் பசியை ஆற்றுதல்என்று அறைந்த மொழியைக் கடந்துசிவன் அடியார் எனும்நல் விருந்து அழைத்துச் சோற்றுக் குவடு தொலைத்தசிறு தொல்லைப் பூதம் ஒருகோடி தொலைத்தற்கு அரிய செஞ்சாலிச் சோறும் கறியும் கைகவிப்ப ஊற்றற்கு அமைந்த பால்தயிர்நெய் உதிர்தீம் கனியும் முறைமுறையே ஒழுகு பந்தி பலஇருத்தி உவந்து படைத்துத் தீப்பசியை மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு

வல்லாய் தாலோ தாலேலோ
மயிலை வரையில் சிவஞான
மணியே தாலோ தாலேலோ. (சி.யா.தே. பிள்ளைத்தமிழ்.21)

பசியைப் பொறுத்துக்கொள்ளும் பெரியவர்களை விட அப்பசியைப் போக்கும் இல்லறத்தார் பெரியர் எனும் வள்ளுவர் மொழியை மாற்றி சிவஞானியாகிய துறவி செஞ்சாலிச்சோறும், கறியும், கனியும், பால், தயிர், நெய் எனப் பல விருந்து படைத்து தீப்பசியை மாற்றும் ஆற்றல் உடையவர் ஆகிறார்.(ப-23)

சிவஞான பாலய சுவாமி அவர்கள் மக்களுக்கு பசிப்பிணி போக்கு விதமாக காய்கறி பழங்கள் பால், தயிர், நெய் கலந்து உணவுகளை கொடுத்து பசிப்பணியை போக்கி உள்ளார் அப் பசிப்பிணி போக்கு அரிய செயல்கள் இன்றும் நடந்து வருகிறது.

கிளைமடங்கள்

சிவஞான பாலய சுவாமிகள் இவ்வாறு வழிபாடாற்றி வருங்காலத்து மீண்டும் ஆதிபூர்வீகத் தலமாகிய பொம்மபுரத்தில் சிவயோகம் புரிய எழுந்தருளினார். இக்காலத்தில் தம் சீடர்களோடு காஞ்சிபுரம், சிதம்பரம், செய்யூர், நல்லாற்றூர், புதுவை, பெருமுக்கல், பழநி, திருக்கழுக்குன்றம். பெரும்பேற்றுக்கண்டிகை, திருவண்ணா மலை முதலிய இடங்களில் திருமடங்கள் அமைத்தும், தம்மிடம் வந்த சீடர்களுக்கு உபதேசம் புரிந்தும் தொண்டு செய்தனர்.(ப-17)

மயிலை திருமடத்தை தலைமையாக கொண்டு சிவஞான பாலய அவர்கள் ஆன்மீகப் பணியும் தமிழ் பணியில் சமூகப் பணியில்

செய்தார் அவரை பின்பற்றிய சீடர்களும் தமிழுக்கும் ஆன்மீகத்திற்கு சமூகத்திற்கும் தொண்டு செய்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது.

ஜீவசமாதி

முருகன் அருள்பெற்ற பாலசித்தரும் பாலசித்தரின் சீடராகிய சிவஞான பாலய சுவாமிகளும் பொம்மபுரத்தினின்று மயிலமலையை அடைந்தனர். தங்களின் ஆன்மார்த்தமாகிய இட்டலிங்கப் பரசிவத்துவ பூசையுடன், தமக்குக் குருவாகச் சங்கமத் திருக்கோலத்தில் எழுந்தருளித் தீட்சைசெய்தும், தம்மால் தரப்பெற்ற இருபுதல்வியர்களை ஏற்று. மணம் செய்தும் விளங்கும் முருகனை வள்ளி தெய்வானையுடன் திருமடத்தில் எழுந்தருளச் செய்து, நித்திய நைமித்தியப் பூசைகளுடன் மக்களுக்குத் தொண்டு செய்து வழிபாடாற்றி வந்த நிலையில் சிவயோகப் பெருவாழ்வு வாழ்ந்த பாலசித்தர் ஓர் ஆனிமாதத் திருவாதிரை நன்னாளில் தம் விருப்பப்படியே தம்மால் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி மகிழ்ந்த மணக்கோல முருகனின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி கூடினார்.(ப.14)

தன் உயிரை உடலை சமாதியாக மாற்றுவது தான் சித்தர்களின் அரும்பணியாக இருந்தது அவ்வகையில் சுவாமி அவர்கள் தனது உடலை இறைவனோடு கலந்து சமாதி அடைந்தார் அவர் மறைந்தாலும் அவருடைய எண்ணங்கள் அவருடைய பணிகள் என்றும் மறையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவருடைய சீடர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

முடிவுரை

சைவ சமயம் வளர்ச்சி அடைய, சமூகம் வளர்ச்சி அடையவும் தமிழ் புத்துணர்ச்சி அடையவும் கடவுளின் அருளைப் பெற்று மண்ணுலகில் அவதரித்தவர் தான் சிவஞான பாலய சுவாமி அவர்கள். மனிதனாக பிறந்து மாணவனாக, சீடனாக, அறிஞனாக, ஆன்மீக அன்பராக, சமூக சீர்திருத்தவாதியாக தன்னை மாற்றி சுவாமியாக மலர்ந்தார் என்றால் அவை மிகையாகாது. அவதரித்த நோக்கத்தை அறுவடை செய்து அறப்பணி ஆற்றியதால் அவர் மறைந்தும் என்றும் மறையாமல் மக்கள் மனதில் சீடர்களில் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிறார். சுவாமிகள் செய்த அறப்பணிகள் சாதாரண மனிதனை அறப்பணி செய்ய தூண்டு விதமாக சுவாமிகளின் நற்பணிகள் அமைந்துள்ளது.

துணை நூற்பட்டியல்

1. மயிலம் பொம்மபுர ஆதீனம் திருமட வரலாறு வெளியீடு\ மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம்- 604504.

புலவர்கள் போற்றும் சிவஞானி

முனைவர் கி. பாலமுருகன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ் ஆர் எம் கலை அறிவியல் கல்லூரி
காட்டாங்குளத்தூர்.

சூரன், பதுமன் எனும் இருவரின் ஒருடல் ஆணவன் சூரபதும். இவன் முருகப்பெருமானோடு போர் முடிந்த பொழுது முருகனது வேலினால் பிளக்கப்பட்டு சூரன் மயிலாகவும், பதுமன் கோழி யாகவும் மாறினர். மயிலாக மாறிய சூரன் முருகனிடம் தன்னை வாகனமாக கொள்ள வேண்டினான்.

மேலும் முருகப்பெருமானை நோக்கி தவம் செய்தான். அதன் பலனாக முருகன் வெளிப்பட்டு மயிலாக உள்ள சூரனை வாகனமாக ஏற்றுக் கொண்டார். சூரனின் மயில் வடிவான உடல் மலையாகி மயிலம் எனப் பெயர் பெற்றது. இம்மலையில் பால சித்தர் தவம் புரிந்து மலை ஏறி வரும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார். அப்படி அருள் புரிந்து வரும் சிவஞானியாகிய பாலசித்தரை புலவர்கள் பலவகையில் போற்றி வணங்கிய பாங்கினை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. கயிலாயத்து மேலைக் கோபுர வாயில் காவலரான சங்குகன்னர் என்பவர் சிவபிரானின் ஆணைக்கு இணங்க மானிட வடிவில் விபூதி, உருத்திராக்கம், மார்பில் இலிங்கம், சடைமுடி, காவி யாடை, கையில் மாத்திரைக் கோல் முதலியன விளங்க பால வயதினராய்ப் புதுச்சேரியையடுத்த பொம்மையபாளையம் எனும் ஊர் பக்கமாக கடலில் மிதந்து வந்து கரை யேறி அங்கிருந்து பல சித்துக்களைக் செய்து சிவஞானத்தைப் போதித்தும் சிவஞான பால சித்தர் என்ற பெயருடன் விளங்கி வந்தார். அவர் நாரதர் மூலம் மயிலத்தின் பெருமையைக் கேள்விப்பட்டு அங்கு சென்று முருகனை நோக்கிப் பன்னெடுங்காலம் தவம் இருந்தார்.

சித்தர் வள்ளி தெய்வயானையாரை பெருமானுக்கு மணம் செய்து கொடுத்த பின்னர் பெருமானிடம் தம் பார்வையில் வளரும் பிள்ளைக்கு உபதேசம் செய்த ருள வேண்டினார். பெருமானும் அவருக்கு திருநீறு, உத்திராக்கம், இட்டலிங்கம் தரிப்பித்து, ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்துக் காவியாடை உடுத்த செய்து,

பாலை மட்டும் உணவாக கொள்ளச் செய்து பால் உணவை கொள்வதால் பாலையர் என்றும், சிவஞான உபதேசம் பெற்றதால் சிவஞானி என்றும் பெயர் வழங்குக என்று கூறி மறைந்தார். முருகப்பெருமானால் உபதேசம் பெற்று பலருக்கும் தம் உபதேசம் செய்து வந்ததால் தேசிகர் என்று வழங்கப்பெற்று சிவஞான பாலய தேசிகர் என யாவராலும் போற்றப்பட்ட சிவஞானியை புலவர்கள் பலரும் புகழ்ந்து பாடியுள்ளனர். அவர்களுள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தியாகராச கவிராயர், பண்ணுருட்டி மணி சுப்பிரமணிய அய்யர், பண்வெற்றிகளையும் நல்லறன்களையும் பெற வேண்டும் என்றால் அதற்கு ஏற்ற இடமானணுருட்டி மணி அப்பாவையர் சிவலிங்கனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சிவஞானி உறையும் இடம்

நாம் வாழ்வில் மேன்மேலும் மெய்ப்பொருளை உணர்ந்த புண்ணியத்தின் பலன்கள் யாவும் சிறப்புடன் பொருந்தி காணப்படக்கூடிய சிவஞானி ஆகிய பாலசித்தர் உரையும் இடமான மைலத்திற்குச் சென்று முருகப்பெருமானையும் சிவஞானியும் வணங்கினால் செயல்கள் யாவிலும் வெற்றி பெறலாம் என அறுவகை இலக்கணத்தை இயற்றிய வண்ணச்சரவம் தண்டபாணி சுவாமிகள்,

பூரணமாம்உண்மைப்பொருள் உணர்ந்த புண்ணியத்தால்
சீரண மற்று உயர்ந்த சிவஞானி சீர்த்த இடம்
காரணமும் எண்ணில் பல் காரியமும் ஆனது என்னும்
ஆரணத்தோனைப் புடைத்தோன் ஆடு மயிலாசலமேமே
(சிவஞான பாலைய சுவாமிகள் பதிகம். 5)

என சிவஞான பாளைய சுவாமிகள் பதிகத்தில் வாயிலாக சிவஞானி உரையும் மயில மலை வேண்டியவருக்கு வெற்றி அளிக்கும் மலை என போற்றி பாடியுள்ளார்.

குருவருள் இன்றி திருவருள் இல்லை:

ஒரு ஆசிரியரின் வழிகாட்டுதலும் ஆசியுமின்றி இறைவனின் அருளை பெற முடியாது என்பதை குருவருள் இன்றி இறை அருள் இல்லை என்ற பழமொழி வலியுறுத்துகின்றது. குருவின் கருணையே நாம் இறைவனின் கருணையை அடைவதற்கு முதல் படியாக அமையும். சரியான குருவின் துணை இன்றி ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண்பது கடினமே. அவ்வகையில் பொம்மபுரத்து திருமடத்தில் இனிதுறைந்த பால சித்தர் சிவஞானியோடு அருள்

புரியும் மயில மலையில் வந்து சூரபதுமனின் உள்ளம் மகிழும்படி வள்ளி தெய்வானையருடன் இனிதமர்ந்த முருகப்பெருமானை போற்றி வணங்கி குருவருள்வழி திருவருளைப் பெறலாம் என தியாகராச கபிராயர், வளம் கொள் பொம்மமா புரத்தினில் அமைந்த நன் மாடலடயத்து

இடை வைத்துக் கிளர்ந்த இத்தலம் பிரம்மாபுரம் எனக்
உளங்களிக்க ஆடியபடி தேவியார் உடன் அமர்ந்தனர் மாதோ
(மயூரா சலபுராணம் சிவஞான தேசிகர் பிரதாபம் 14)

என்று ஆன்மீகப் பாதையில் குருவின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியம். குருவின் துணை இன்றி இறைவனை அடைவது கடினம் எனவே சிவஞானி வழி முருகப்பெருமானை அடையாளம் என்கிறார்.

சிவப்பிரகாசர் போற்றும் சிவஞானி:

கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சிற்றிலக்கிய புலவர் ஆவார். தமிழகத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட சமய குறவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் நால்வர் நான்மணி மாலை என்ற நூலை எழுதியவர்.

போரூர் செல்லும் சாந்தலிங்க சுவாமிகளை சந்தித்த சிவப்பிரகாசர் நான் சிவஞான பாலய தேசிகரை தரிசிக்க செல்வதாக கூறினார் பின்னர் இருவரும் போரூர் செல்லும் வழியில் புத்துப்பட்டு கிராமத்தில் தங்கி இருக்கும் பொழுது சிவப்பிரகாசரை நோக்கி சாத்தலிங்க சுவாமிகள் சிவஞான பாலய தேசிகரை புகழ்ந்து சில பாக்களை இயற்ற வேண்டினார். அதற்கு சிவப்பிரகாசர் யாம் மக்களை பாடுவதில்லை என மறுத்தார். இரவு உறங்கும் பொழுது முருகப்பெருமான் கனவில் தோன்றி ஒரு பாத்திரத்தில் விடுபூக்களை இட்டு இவற்றை தொடுத்து மாலையாக்கி எமக்கிடுவாயாக எனக் கூறி மறைந்ததை மறுநாள் காலை சாந்தலிங்க சுவாமிகள் இடம் கனவை கூறிய சிவப்பிரகாசர் முருகன் உத்தரவு தந்துவிட்டார் சிவஞான பாலய தேசிகரை புகழ்ந்து பாடுங்கள் என்றார். அன்று முதல் சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞான பாலய தேசிகர் மீது பல சிற்றிலக்கியங்களை படைத்துள்ளார். இத்தகைய சிறப்புடைய தமிழ் வேந்தர் ஆன நல்லாத்தூர் சிவப்பிரகாசரை போற்றிப் பாடும் ஞான நெறி காட்டிய நாயகனே துறவியார்க் கெல்லாம் திலகமாக விளங்கும் சிவ ஞான தேசிக மணியே உம்மை வணங்குகின்றோம் என பன்னுருட்டி மணி சுப்பிரமணிய அய்யர்,

இலகிடும் சீர்ச் சிவப்பிரகாசத் தமிழ் வேந்து ஏத்தும் ஒரு
நலவடிவே ஞானநெறி சொற்றிடு நாயக மணியே
குலவிடும் பாற்கடல் தோன்றும் கோவே நற்குரவர் குழாத்
திலகம் எனும் சிவஞான பாலய தேசிக மணியே
(சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் உயிர் வருக்க மணி மாலை. 3)

என்று சிவஞானியை போற்றிப்பார் என்றார் மேலும் கயிலை மலையில் பூத கணங்களுக்கு தலைவராக விளங்கிய சங்குகன்னர் இவ்வுலக மக்கள் சிவனருள் பெற்று மேன்மையடைய துறவாடை உடுத்தி, சடாமுடி தரித்து, குண்டலம் அணிந்து, விபூதிப் பூசி, சின் முத்திரை காட்டி, மந்திரக் கோல் கொண்டு விபூதிப் பையுடன் சிவலிங்கம் ஏற்று பொம்மபுரக் கடலருகே பாலசித்தராய் அவதரித்த அவரை தலைதாழ்த்தி வணங்குவோம் என பண்ணுருட்டி மணி அப்பாவையர் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கதாய் உள்ளது.

சிவஞானியின் அருள் எனக்கு கிட்டட்டும்

முதுபெரும் தமிழ் அறிஞரும் பேராசிரியருமான மயிலம் பொம்மபுர ஆதீனப்புலவர் ஆ. சிவலிங்கனார் சொல்லின் வகை அனைத்தையும் கற்றறிந்த ஞானி தூய மனத்தினர் உயர்ந்த உள்ளம் கொண்டவர் சிவப்பிரகாசர் அவர்களுக்கு எல்லை இல்லா அருளினை தம் திருவடியால் சூட்டி அருளியவர் சிவஞானி அந்த சிவஞானிகளுக்கு உபதேசம் செய்த மயிலம் முருகப்பெருமானே என்னையும் ஆட்கொண்டு அருள்வாயாக என சொல்லின் வகைதெரி நல்ஞானி தூயர் சிவப்பிரகாசர் அவர்க்கு எல்லையில் அருள் அடி தலைமேல்

புல்லன் எனையும் ஆட்கொள்கொள்க
புகழ் மயிலம் பெருமானே
(மயிலம் பெருமானே மயிலம் திருவாயிரம் 713)

சிவஞானிக்கு அருளியது போல எனக்கும் அருள் தந்து ஆட்கொள்வாய் என்கிறார் . கயிலாயத்து மேலே கோபுர வாயில் காவலரான சங்குகன்னர் மானிட வடிவில் விபூதி, உருத்திராக்கம், இட்டலிங்கம், சடைமுடி, காவியாடை, மாத்திரைக்கோல் ஆகியவை விளங்க பாலசித்தராய் அவதரித்த குருவை ஒரு ஆசிரியர் வழிகாட்டுதல் இன்றி இறைவனை எவ்வாறு அடைய முடியாதோ அதுபோல சிவஞானியின் அருள் இன்றி மயிலம் முருகப் பெருமானின் திருவடியை நாம் அடைய முடியாது என்பது புலவர்கள் கூற்று வழி அறிந்துணர முடிகிறது.

மயிலம் சுப்புரமணி சுவாமிகள் பிள்ளைத்தமிழில் வெளிப்படும் மெருமித மெய்ப்பாடு

செ.கயல்விழி
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
தட்சசீலா பல்கலைக்கழகம்
திண்டிவனம்
தொ.எண்: 7418501062
kayalvizhi1610@gmail.com

முன்னுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம், விழுப்புரம் மாவட்டக் கடலோர எல்லையில் புதுவையை ஒட்டி அமைந்துள்ள வீரசைவ மரபின் சிறப்புக் களஞ்சியமாக விளங்குகிறது. பக்தி நெறியைப் பேணிச் செழிக்கச் செய்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஊற்றாக இருந்து, மனித நிலையிலிருந்து இறைநிலைக்குத் தள்ளிச் செல்லும் ஆன்மீகப் பாதையை வெளிப்படுத்தி வரும் இவ்வாதீனம், திருக்கயிலையில் சிவபெருமானுக்குத் திசைகாவலனாக இருந்த சங்குகன்னர் சிவஆணையின் பேரில் பூமியில் அவதரித்ததில் தோற்றமுற்றது. திருநீறு, உருத்திராக்ஷம், கல்லாடை, இட்டலிங்கம் போன்ற சைவச் சின்னங்களோடு பத்து வயது பாலருருவில் தோன்றி, யோக வல்லமையால் அற்புதச் சித்திகளை நிகழ்த்தி சீடர்களுக்கு ஞான மார்க்கத்தைப் போதித்ததால், அவர் "பாலசித்தர்" எனப் போற்றப்பட்டார்.

அவரின் அருள்நிறைத் தங்குமிடம் "பொம்மயர்பாளையத் திருமடம்" என அழைக்கப்பட்டு, பின்னர் ஆதீனமாக உயர்வு பெற்றது. நாரத முனிவரின் அறிவுரையின்படி மயிலமலையில் நீண்ட தவம் மேற்கொண்ட பாலசித்தர், முருகப்பெருமானின் அருளைப் பெற்றார்; இறைவன் அவரைச் சோதித்து மற்போர் புரிந்து, இறுதியில் அருள்புரிந்து தேவியருடன் மணக்கோலத்தில் எழுந்தருளினார். அப்போது சிவபெருமான், பாலசித்தருக்கு பஞ்சநூறு ஆண்டுகள் வீரசைவ நெறியைப் பேணிச் செழிக்கச் செய்து, பின் முருகனின் வலப்பக்கத்தில் ஜீவசமாதியடையும் பாக்கியத்தை அருளினார். பாலசித்தரின் சீடரான சிவஞானபாலய தேசிகர், அவரின் ஆசாரிய பரம்பரையைத் தொடர்ந்து

வளர்த்ததால், இம்மடம் "பாலயசுவாமிகள் திருமடம்" என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறே மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆன்மீகப் பெருமை, சைவநெறி ஒளி, தமிழ் மொழியின் அழிவுறா ஒளிக்கோவையாக விளங்கி, உலகறிந்தோரை இறைஞானத்தின் உயர் நிலைக்கே வழிநடத்தி வருகிறது. இத்தகைய தெய்வச் சித்தரை பாலக வடிவில் கற்பனை செய்து, புகழ்பெற்ற புலவர் மு.வல்லாளான் அவர்கள் மைலம் சுப்புரமணிய சுவாமிகளுக்காகப் பிள்ளைத்தமிழ் இயற்றியுள்ளார். அந்தப் பாடல்களில் தொல்காப்பியர் வகுத்த எண்வகை மெய்ப்பாடுகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதையே இக்கட்டுரை ஆராய்வதாக அமைகிறது.

மெய்ப்பாடு

தமிழ் இலக்கியங்களில் வரும் ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு எனக் கூறப் பெறுகின்ற சொற்கள் எல்லாம் உலக வழக்கில் மனத்தினால் உணர முடியுமே தவிர அவற்றிற்கு வடிவு கொடுக்க இயலாது. வடிவம் இல்லாத அப்பொருள்களை மனத்தினால் உணர்வதற்கும் பொறிகள் வாயிலாக மனம் கொள்ளுவதற்கும் உடலில் ஏற்படுகிற மாற்றமே மெய்ப்பாடுகளாகும். உலக மக்களின் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் கண்ணீர் அரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், நடுக்கம் முதலிய தோற்றங்கள் அதனைக் காண்போர்க்குப் புலனாகும் தன்மையைத் தான் மெய்ப்பாடு என்பர்.

மக்கள் தங்களுக்குள் ஏற்படும் மாற்றங்களை உணர்வுகள் வழி வெளிப்படுத்தியுள்ளனர். ஒரு மனிதனின் உடலின்கண் தோன்றும் உணர்வுகளின் வெளிப்பாடே மெய்ப்பாடு ஆகும். நமது உள்ளத்தில் நிகழும் உணர்வுகளைப் புறத்தார்க்கும் புலப்படும் வண்ணம் வெளிப்படுத்தல் மெய்ப்பாடாக மிளிர்கிறது.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெயப்பா டென்ப" **(தொல்.மெய்:247)**

இவை எட்டும் ஒரு மனிதனுடைய அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானது என்று தொல்காப்பியர் கூறுகிறார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளில் முதல் நான்கு மெய்ப்பாடுக ளான (நகை, அழுகை, இளிவரல், மருட்கை) தன் கண்ணும்,

பிறன்கண்ணும் தோன்றும். மீதமுள்ள மெய்ப்பாடுகளில் அச்சம், வெகுளி, உவகை, என்னும் மூன்றும் தன் கண் மட்டுமே தோன்றும். இதில் உள்ள ஒவ்வொரு மெய்ப்பாடுகளும் தனக்கென நிலைக்களன்களைக் கொண்டு தோன்றும்.

மயிலம் சுப்பிரமணி சுவாமிகள் பிள்ளைத்தமிழில் வெளிப்படும் பெருமிதம் மெய்ப்பாடு

கல்வி, தறுகண், இசைமை, கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம்நான்கே" வெள்ளைவாரணார் 1957, பக். 155-156 என்ற தொல்காப்பிய சூத்திரம் பெருமிதத்தின் தன்மையையும் அதன் அடிப்படைகளையும் விளக்குகிறது. இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரைத் தொகுத்தபோது, "கல்வியானும், தறுகண்மையானும், புகழ்மையானும், கொடையானும் பெருமிதம் நால்வகைப் படும்" என்று கூறி, பெருமிதம் தனிமனிதன் தன்னைப் பெரியவனாக எண்ணுதல் மற்றும் பிறர் ஒருவரின் மிகுத்த வழியில் ஏற்படும் மகிழ்ச்சி என இரண்டு விதத்தில் வெளிப்படும் என்பதை எடுத்துரைத்துள்ளார். பெருமிதம் வீரம் என்ற பொருளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காக, பெருமிதம் தோன்றும் காரணங்களில் அறிவு, ஆண்மை, புகழ், கொடை ஆகியவை அடிப்படையாக அமைகின்றன. இதற்காக இளம்பூரணர் இசைமை பதிலாக புகழ்மை என்ற பாடத்தை எடுத்துக்காட்டியுள்ளார்; மற்ற உரையாசிரியர்கள் பெருமிதத்திற்கு அடிப்படையாக இசைமை என்ற சொல் பயன்படுத்து கின்றனர். பேராசிரியர் கூறும் படி, கல்வியும், தறுகண்மையும், புகழும், கொடையும் ஆகிய நான்கும் வீரத்தினால் பெருமிதமாகி, இதற்குத் தேவையான அடிப்படையான கல்வி என்பது தவம், உழைப்பு, அறிவு போன்ற விச்சைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக,

தந்தைசிவன் சக்திக்குப் பாதியுடல் தந்தாந்திரு
மகட்குமால்தன் மார்பத்தந்தான்
கலைமகட்கு நான்முகன்தன் தந்தான் இவர்களினும்
மார்சிறந்தோர் என்று பார்க்கில்
உந்தனிரு மாதர்க்கும் வலமிடமும் தத்துமெண்மை
வாழ்வுக்குப் பெருமதந்தாய்
புலவர் மு. வல்லாளன் (பாடல் 33, பக்கம் 55)

இந்தப் பாடலில் புலவர் மயிலம் சுப்பிரமணி சுவாமிகள் அவர்கள் முருகப்பெருமானை குழந்தை வடிவில் துதிக்கையில், தெய்வீகச் சித்திரம் செழுமையுடன் வெளிப்படுகிறது. இறைவன் சிவபெருமான் சக்திக்குப் பாதியுடலை அளித்தும், திருமகளுக்கு திருமால் மார்பிடத்தை வழங்கியும், கலைமகளுக்கு நான்முகன்

நாவிடத்தை அருளியும் தெய்வ ஒற்றுமையின் மூன்று பரிமாணங்களைச் சுட்டுகிறார்.

இவர்களில் யார் சிறந்தோர் எனப் பரிசீலிக்கும் போது, முருகன் இரு மாதர்க்கும் - வள்ளியும் தெய்வானையும் - வலமும் இடமும் ஆகிய இரு நிலைகளிலும் சமமான இடம் அளித்து, பெண்மையின் பெருமையை உயர்த்தியவனாகக் காட்டப்படுகிறார். இது தெய்வீக சமத்துவத்தையும், பெண் தெய்வங்களின் புனித பங்கைப் புகழும் உயரிய நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பியனார் கூறிய எண்வகை மெய்ப்பாடுகளில் "பெருமித மெய்ப்பாடு" இப்பாடலில் பளிச்சிடுகிறது. இங்கு "பெருமிதம்" என்பது தன்னைச் சார்ந்த உயர்வினால் ஏற்படும் ஆனந்தநிலை அல்லாது, இறைவனின் பரம மகிமை, பெண்மையின் புனித மதிப்பு, தெய்வீக இணைவு ஆகியவற்றில் தோன்றும் ஆன்மீகப் பெருமிதமாகும். இந்த மெய்ப்பாடு, பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் உணர்வுத்தளத்தில் ஒரு உன்னதமான உணர்வியலை பிரதிபலிக்கிறது. கலைநயமும், உவமைகளும், பாவநயமும் இணைந்த இப்பாடல், பெண்மையின் வாழ்வுக்குப் பெருமை தந்தவன் முருகன் என்ற கருத்தை இலக்கியப் பாங்கில் முத்திரை பதிக்கிறது.

"எப்பொருளும் ஆனாய் வருக" புலவர் மு. வல்லாளன் 53, பக்கம் 74 என்ற வரியில், இப்பிரபஞ்சத்தில் உறையும் அனைத்துப் பொருள்களாகவும், சகல தத்துவங்களின் சாரமாகவும், ஆதியும் அந்தமும் ஆகி நிற்கும் முருகப்பெருமானின் பரம பிரபஞ்சத் தத்துவம் புலவர் புனைவில் பாவனையோடு மெருகூட்டப்பட்டு வெளிப்படுகிறது. இப்பாடல், முருகனை ஒரே ஒரு தெய்வமாக மட்டுமல்லாது, உலகப் பொருள்களின் உயிர்மூலமும், சக்தியின் பரம்பொருளுமான பரம்பிரகாசமான ஆதிமூலமாகவும் எடுத்துரைக்கிறது. புலவர் இங்கு தெய்வத்தின் வடிவத்தை அகிலப் பரவலான சர்வவ்யாபக தத்துவமாக உயர்த்திச் சித்தரிக்கிறார். இதனால் பாடல், பக்தியையும் தத்துவ ஆழத்தையும் இணைக்கும் உன்னத ஆன்மீகப் பெருமிதம் நிறைந்த காவிய உணர்வை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

மனித வாழ்க்கையில் பெருமிதம் என்பது தனிநபரின் வளர்ச்சியையும் சமூகப் பொறுப்பையும் வெளிப்படுத்தும் உயரிய மனநிலை ஆகும். அறிவு, திறமை, புகழ், கொடை, நற்பண்பு போன்றவற்றின் அடிப்படையில் தோன்றும் பெருமிதம், மனிதனை

உயர்ந்த இலட்சியங்களுக்குத் தூண்டும் உந்துசக்தியாக விளங்குகிறது. இத்தகைய பெருமிதம் ஆணவமோ அகங்காரமோ அல்லாது, தன்னம்பிக்கை மற்றும் சாதனை உணர்வால் நிரம்பிய மனப்பாங்காக அமையும் போது அது மனித வாழ்வை சிறப்புற உயர்த்துகிறது. தொல்காப்பியனார் குறிப்பிட்ட எண்வகை மெய்ப்பாடுகளில் பெருமிதம், மனிதன் தன் சிறப்பை உணர்ந்து நற்பண்பில் நிலைத்திருக்கும் ஒரு உன்னதமான உணர்வாக வெளிப்படுகிறது. இதனைத் தொடர்ந்தே மைலம் சுப்புரமணி சுவாமிகள் பிள்ளைத்தமிழிலும் பெருமித மெய்ப்பாடு சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. அங்கு முருகன் தெய்வீக சிறப்புகளாலும், பெண்மையின் மரியாதை நிலைகளையும் உயர்த்தும் சக்தியாலும் "உலக வாழ்வுக்குப் பெருமை தந்தவன்" என்ற நிலைபெற்றவனாகக் காட்சியளிக்கின்றான். எனவே, பெருமித மெய்ப்பாடு என்பது மனிதனின் மன அழகையும் ஆளுமை மேம்பாட்டையும் பிரதிபலிக்கும் மெய்மறை உணர்ச்சி வெளிப்பாடாகவும், பிள்ளைத்தமிழ் பாடல்களில் முருகன் மேன்மையைத் திகழ்த்தும் தெய்வீக உணர்வாகவும் விளங்குகின்றது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

துணை நின்ற நூல்கள்

1. கா. வெள்ளைவாரணம், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1957, பக். 155-156
2. புலவர் மு. வல்லாளன், அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், இராஜன் பிரிண்டர்ஸ், சிவகாசி. பாடல் 33, பக்கம் 55
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1985, ப. 8
4. புலவர் மு. வல்லாளன், அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், இராஜன் பிரிண்டர்ஸ், சிவகாசி. 53, பக்கம் 74
5. கா. வெள்ளைவாரணம், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, ப. 159.
6. பேராசிரியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1985, பேராசிரியர் சுந்தரமூர்த்தி பதிப்பு, ப. 32

நெஞ்சுவிடு தூது உரைக்கும் குரு நேயம்

முனைவர் ம. சித்ரகலா,
உதவிப் போராசிரியர்,
என்.ஜீ.எம் கல்லூரி, பொள்ளாச்சி.
chitrababu1996@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

"நெஞ்சுவிடுதூது உரைக்கும் குரு நேயம்" என்ற தலைப்பி லான ஆய்வுக்கட்டுரையில் தூது இலக்கியம் பற்றிய அறிமுகத் தோடு தொடங்கி ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடுதூதுதின் வழி ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகளின் குரு நேயத்தையும், குருவானவா தனது சீடர்களுக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் நல்லருள் கொடுக்கும் சிவனாகவே திகழ்பவா? என்றும் குருவின் வழி சிற்றின்பத்திற்கு ஆட்படாமல் ஐம்புலன்களை அடக்கி வீடுபேறு அடைதல் பற்றியும், குரு சீடர்களுக்கு அருள்பாவித்த தோடு, தீருநீற்றின் மகிமையும், உத்திராட்சத்தின் சிறப்புத் தன்மையையும் சீடார்களுக்கு அருளியதும், பிறப்பறுக்கும் பெரும் உபாயத்தை கற்றுக்கொடுத்து பேராசானான விளங்கும் குருவின் சிறப்புக்களைச் சீடர்கள் கடைப்பிடிக்கும் மாண்பையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. ஆய்வின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

முன்னுரை

அன்பின் மிகைப்பாடு ஆசை. ஆசையின் மிகைப்பாடு கைப்பற்றல். கைப்பற்றா நிலைவரும்போது காதல் மிகைப்பட்டு கண்ணீர் கசிவதும், கண்கள் தேடுவதும், மனம் அலைவதும், உடல் மெலிவதும் என பல்வேறு செயல்பாடுகள் தோன்றி ஏதும் அறியா நிலைவரும். அந்நிலையில் தன்நிலை உணர்த்து எழுதும் நயமிகு எழுத்து இலக்கியமாக மலரும். அவ்வகையில் மனதில் தோன்றும் அக மற்றும் புற உணார்வுகளை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் பல. அவற்றுள் சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு உள. அவற்றுள் சிறப்புமிக்கதாக போற்றப்படும் இலக்கியங்களில் தூது இலக்கியம். அவ்விலக்கியமான ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது உணர்த்தும் குரு நேயத்தை ஸ்ரீ சிவபிரகா சுவாமிகளின் நூல்வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

ஒருவர் தெரிவிக்கும் செய்தியை மற்றவார்களுக்குச் சொல்ல அனுப்பப்படுவது தூது என்பர். பிரிவின் நிமித்தமாக தூது அமையும். தூது என்பதற்கு இருவரிடையே சந்து செய்வித்தல், கூழாங்கல், செய்தி, பகை, தானாதிபதி எனப் பல பொருள்களை வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது. இதனைத் திருமகள் அகராதி தூது மொழி என்றும் ஒரு வகை நூல் என்றும் செய்தி, கூழாங்கல் என்றும் இருவரிடையே பேச்சு நிகழ்வதற்கு உதவியாக உள்ளவர் என்றும் பொருள் தருவதோடு தூதன் என்பதற்கு ஒற்றன், செய்தியறிவிப்போன், ஏவலாளன், புதன், தேவதூதன் என்றும் தூதி என்பதற்கு தூது செல்பவள் என்றும் பொருள் தருகிறது. தொல்காப்பியத்தில் தூதாகச் செல்வதற்கு உரியவார்களைத் தொல்காப்பியர் வாயில்கள் என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்தில் தூதாகப் போவதை 'தூதாடுதல்' என்றும் கூறுவர். இதனைக் கலித்தொகைப் பாடலில் "நாடிநின் தூதாடித் துறைச் செல்லாள்" (கலித். 72) என்றும் தூது வந்தன்றே தோழி (கலித்தொகை - 32 : 18)குறிப்பிடுகின்றது. பக்தி இலக்கியத்தில் பெண்ணைத் தூதி என்று கூறுவதை "யான்விட வந்தவென் தூதியோடே" (திவ்.பெருமாள்.6.4) என்று குறிப்பிடுகின்றது. வள்ளுவப்பெருந்தகை தனது நூலில் தூது என்ற ஒரு அதிகாரமே அமைத்ததோடு, அதில் தூது செல்பவர்களின் இலக்கணம். பண்புகள் தூது முறை போன்றவற்றை வகுத்துத் தந்துள்ளார் என்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது. (குறிப்புச்சொல் வந்தன்றே - வந்தது)

சிற்றிலக்கியங்களில் தூது இலக்கியம் அகத்தூது, புறத்தூது என இரு வகைப்படும். புறத்தூது என்பது அரசன் பிற நாட்டிற்கு தூது அனுப்புதல், புலவருக்குத் தூது அனுப்புதல், புலவர்கள் வள்ளலிடத்து தூது அனுப்புதல் ஆகியவை புறத்தூதாக அமையும். புறத்தூதில் உயர்திணை, அஃறிணை இருப்பொருள்களும் தூதாக அமையும்.

காதல் வயப்பட்ட தலைவனும் தலைவியும் பிரிவுத் துன்பம் மிகுந்த காலத்தில் காம மயக்கம் காரணமாக அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்புவது அகத்தூது என்பர். இதனை இலக்கணியார் 'காம மிக்க கழிபடர் கிளவி' என்ற சொல்லால் உணர்த்துகிறார். இவ்வாறு அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்புவதால் செய்திப் பரிமாற்றம் நிகழாது என்று தெரிந்தும் அந்த காலகட்டத்தில் தூது அனுப்பினார்கள் என்றால் அக்கால மக்கள் உளவியல் நோக்கத்தோடு இலக்கியங்களை வளர்த்துள்ளனர்

என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்பும் வழக்கு புராணங்களின் இடம் பெற்றிருப்பதை, "இந்திரன் - லோமன் மகளான இந்திராணிக்கு அன்னத்தைத் தூது விட்டான். மாயவன் - அம்பரீடன் மகள் ஊடலை நீக்க வைகுண்டத்தில் தோகையைத் தூது விட்டான். இந்திரன் - அகலிகையை நெருங்கக் கிளியை அனுப்பினான், அருச்சுனன் - பாண்டியனின் மகளுக்கு மழையை அனுப்பினான், சிசுபாலன் - உருக்குமணிக்குப் பூவையைத் தூதாக அனுப்பினான், அகலோன் - சுகவாகாவினிடம் குயிலைத் தூதாக்கினான். இராமன் சீதையின் நெஞ்சமே குறியாக முயற்றி, கண் முதலியவற்றால் அறிவித்தான். இந்திரன் - திலோத்தமைக்கும் உருவசிக்கும் தென்றலைத் தூதாக விட்டான். சுவாயம்பு - பிரமனின் மகளுக்குப் பூங்கொத்தில் உள்ள வண்டினைத் தூது விடுத்தான்" என்ற செய்திகளின் மூலம் அறியமுடிகின்றது. இதனைப் பின்பற்றியே பிற இலக்கியங்களும் அஃறிணைப் பொருட்களைத் தூதாக அனுப்பினர் என அறியலாம்.

தூது நூல்களில் பெயர்கள் அமையும் முறை

தூது நூல்களில் தூது அனுப்பும் பெயர்கள் பெரும்பாலும் பெயர் முறையாக அமையும். பணவிடுதூது என்ற நூலில் பணமே தூதுப் பொருளாக அமைகின்றது. ஆக அந்நூல் பணவிடுதூது என்ற பெயரில் அமைந்துள்ளது. சில தூது நூல்களில் தூது யார் மீது விடப்படுகிறதோ அந்த தலைவன் பெயரையும், தூது செல்லும் பொருளின் பெயரையும் கொண்டு அமைகின்றன. எடுத்துக் காட்டாக மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது என்ற தூது இலக்கிய நூலில் தூது பெறுவவோர் இறைவனாகிய சொக்கநாதர், தூது செல்லும் பொருள் தமிழ். இதுபோலவே ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரின் நெஞ்சு விடு தூது அமைவது ஈங்கு குறிப்பிடத்தக்கது. இங்குத் தூது பெறும் தலைவர் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் தூது செல்லும் பொருள் நெஞ்சு ஆகும்.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது

ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள் தனது குருவான ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரின்மீது தாளாத அன்பு கொண்டு தனது நெஞ்சை தூது விடுவதாக அமைந்துள்ளது. சிறப்புப் பொருள் ஒன்றின் மேல் காதல் (இங்கு பக்தி - முக்தி) கொண்டு தூது அமைப்புவதே தூது இலக்கியத்தின் இன்றியமையாத தன்மையாகும். அவ்வகையில் சிவஞான பாலய தேசிகரின் சிறப்புக் கருதியே இந்நூல்

இயற்றப்பட்டுள்ளது என்பது சிறப்பிற்குரியதாகும். தூது என்பது தலைவன் தலைவி அவர்களின் பிரிவுத் துன்பத்தை எடுத்துச் சொல்லி தன்பால் வரச் செய்யுமாறு ஒருவரையோ ஒரு பொருளையோ தூது அனுப்புவதாகும். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தம்மை தலைவியாகவும் தம் குருநாதரை தலைவராகவும் எண்ணி அவரிடத்தில் தம் நெஞ்சினை தூதுவிடும் பாங்கில் கலிவெண்பா யாப்பில் 255 கண்ணிகளில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. இப்பாடல்கள் அனைத்தும் துறவு நிலை கருதி பாடப்பட்டிருப்பதோடு எவ்விடத்தும் காமச்சுவைபட பாடாமை குறிக்கிடத்தக்கது. இந்நூலை செந்தமிழும் சிவநெறியும் தழைத் தொங்க வேண்டி தமிழ் கல்லூரியை நிறுவிய இவ்வாதீனத்தின் பதினெட்டாம் பட்டம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள் குருபூஜை நினைவு மலராக ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது என்னும் இவ்வருள் நூலை 1966 ஆம் ஆண்டு வெளியிட்டார். ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள் ஐந்து நூல்கள் இவருடைய குருநாதரை பற்றிய இயற்றியுள்ளதில் இந்நூல் முதல் நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

குரு பக்தியில் தூது செல்லல்

'கு' (புர) என்ற வேர் "இருள்", "அறியாமை" ஆகியவற்றைக் குறிக்கிறது. 'ரு' (சுர) என்ற வேர் "அறிவு", "ஒளி", "விழிப்புணர்வு" ஆகியவற்றைக் குறிக்கிறது. 'குரு' என்பது சமஸ்கிருதச் சொல், இதன் பொருள் "இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்பவர்" அல்லது "அறியாமையிலிருந்து அறிவுக்கு இட்டுச் செல்பவர்" என்றும் பொருள்படும். குரு பக்தி என்பது குரு மீதான ஆழ்ந்த பக்தியையும் தளராத அன்பையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது. குரு பக்தி சீடர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் ஆன்மீக ஒழுக்கத்தையும் மேம்படுத்தவும் உதவுகிறது. குருவின் மேல் உள்ள நம்பிக்கையிலும் குருவின் மேல் உள்ள பற்றிலும் குருவை தெய்வமாக பாவித்து மரியாதை செலுத்தக்கூடிய சீடர்கள் வாழ்ந்த பெருமைக்குரிய பூமி இது. தெய்வம் கண்ணுக்குத் தெரிவதில்லை. குருவே என் கண்ணிற்குத் தெரிகிறார். குரு மூலமே அனைத்தையும் உணர்கிறேன் எனச் சீடர்கள் குருவைத் தெய்வமாகப் போற்றுவதை,

குரு பிரம்மா குரு விஷ்ணு குரு தேவோ மகேஸ்வர;
குரு சாஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ....

என்ற மந்திரம் உணர்த்தி நிற்கின்றது. சிவபிரானே குருவாய் எழுந்தருகிறார் என்பது ஞானிகள் கண்ட உண்மை. "சுத்த சிவன்

குருவாய் வந்து" என்றும் "குருவே சிவன் எனக் கூறினன் நந்தி என்றும், "சிவனே சிவஞானி என்று திருமூலர் தமது திருமந்திரம் ஆறாம் தந்திரத்துக் "சிவகுருதரிசனம்" என்ற தலைப்பில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு சிவனே குருவாக வந்திருப்பதாகக் கருதி சிவஞான தேவன்பால் தூது செல்கிறார்

பேரருள்

குரு தன்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்து நிலைகளிலும் தன்னை ஆட்கொண்டவர் என்றும், குரு தன்னுடைய ஆணவம் மாயை என்ற தீமைகளை மழுப்படை கொண்டு மறைத்து அழிக்க வல்லவா? என்பதை,

ஒரு மான் மழுவோடு ஒளித்து எ(ம்)மை முன் பற்றும்
இருமான் ஒளிக்க வரும் எம்மான்"(நெ. பா. 4,5)

என்றார். மேலும் பெற்ற தாய் பால் மட்டுமே தருவாள் சிவஞான தேவர் தாயைக்காட்டிலும் சிறந்தவர் என்றும் என்பிழை பொறுத்து எனக்கு வீடுபேறு நல்கும் அருள் வடிவாகத் திகழ்வதை,

.....அன்னை எனும்
உற்றான்; அமுதமே ஒப்பான்; அருள்மேனி
பெற்றான்; அடியேன் பிழைப் பொறுப்பான் (நெ. பா. 8,9)

என்றார். மேலும் பயிரை புழு அரிப்பதுபோல் ஐம்புலன்கள் அரிக்கப்பட்டு துன்பப்பட்டு வருந்தும் எனக்கு இறைவனாகிய குரு உற்றதுணையாக இருக்கிறார் என்கிறார். இக்கருத்தை மாணிக்கவாசகரும்,

எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால்
அரிப்புண்டு அலமந்த வெறுந்தமி யேனை விடுதிகண்டாய்
(நீத்தல் விண்ணமப்பம். 25)

என்று பாடியுள்ளார். மேலும் சிவபிரகாசர், கல்லாய் இருந்த தன் உள்ளத்தில் அன்பை உண்டாக்கினார் என்றும் நீங்காத ஆனந்தத்தை தேங்க வைத்தவர் என்றும் தன்னால் அருள் செய்யப்படுபவரிடத்து எந்தவொரு கைமாறும் விரும்பாதவர் என்பதை,

அடியேன் உளத்து அன்பு உண்
டாக்கினான் மாறாத ஆனந்தம் - தேக்கினான்
நாதாந்தன், வீடு உதவும் ஞானவிநோ தன் தெளிந்த
வேதாந்தன், கைம்மாறு வேண்டாதான்.. (நெ. பா. 14,15)

என்று கூறுவதிலிருந்து குருவான சிவஞான தேவர் தன்னலம்

கருதாதவர். தன்னை நாடிவருபவருக்கு நன்மையையும், நல்ல ஒளியையும், நல்லருளையும் கொடுக்க வள்ளவராகவும், அருள் கொடுப்பதில் சிவனாகவே உள்ளார் என்பதும் சிவப்பிரகாசா? பாடல்வழி அறியமுடிகிறது

பாமாலை தொடுத்தலும், தொழுதலும்

கற்றிருந்த அறிவில் சிறந்த புலவர்களும் சிவஞான தேவனை காண வரும்போது அவரைப் புகழ்ந்து பாமாலை தொடுத்து பாடி மகிழ்தல் உண்டு என்பதை

...கற்றார்
தொடுத்த தொடைக்குசைந்த தேடத்தான் தன்னை.... (நெ. பா. 9)

என்றார். அதுமட்டும் இன்றி சமணம் தான் சிறந்தது என வாதிட்டு திருஞானசம்பந்திடம் அனல் வாதம், புனல்வாதம் செய்த சமணர்கள் தோற்றதால் அவர்கள் கழுவில் ஏறினர். அவர்களைக் கழுவேறிகள் என்றும் சிவனையும், திருநீற்றையும் பழித்த சமணர்களே சிவஞான தேவனைப் பழிக்காது வணங்கினர் என்பதை "கழுஏறிகளும் தாழ்ட காலான்" (நெ. பா. 13) என்றார். மேலும் எச்சமயத்தவரும் வணங்கும் தன்மையுடையவர் சிவஞான தேவன் என்பதை,

..... முன்றால் ஃ பெருக்கும் இருசமயம் பேதித்து அறியாது
இருக்கும் நிலையின் இருப்பான்... (நெ. பா. 22,23)

குறிப்பிடும்போது சிவஞான தேவன் அனைவரிடமும் அருள் அருளி ஞானம் அளித்தார் என்பதை உணரமுடிகின்றது.

(குறிப்புச்சொல் - கழுவேறிகள் - சமணர்கள்)

திருநீற்றின் மகிமை

நீறு என்றால் சாம்பல். திருநீறு என்றால் மகிமை பொருந்திய நீறு என்பது பொருள். ஔவைப்பிராட்டி, "நீரில்லா நெற்றி பாழ் என்றார். கூன்பாண்டியனின் கூனைப் போக்கி, வெப்பு நோய் தீர்த்து, நின்றசீர்நெடுமாறனாக பாண்டியனை மாற்றிய பெருமை திருஞானசம்பந்தரின் திருநீற்றுபதிகத்தின்வழி உலகறியும்.

உலகம் ஆசை நிரம்பியது. பிறப்பெடுக்கும் அனைவரும் முடிவில் பிடி சாம்பலாகத்தான் வேண்டும் என்பதால், எதிலும் அளவுக்கு அதிகமான ஆசை வைக்காமல் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதுதே திருநீறு. அப்படிப்பட்ட திருநீறு உயிரின் உள் மாசு நீக்குவது. சந்தனம் உடலில் மாசாய் கழிவது.

அது காமத்தை வளர்ப்பது. ஆக சிவஞான தேவன் அணிவது திருநீறு. அவர் வழியினரும் உடம்பில் சந்தனம் அணிவதில்லை(பா. 52 -54) என்கிறார்.

திருநீற்றை நீர் விட்டுக் குழைத்து சுட்டு விரல், பெருவிரல், மோதிர விரல் என்னும் மூன்று விரல்களில் பதியக் கொண்டு நெற்றி முதலிய இடங்களில் பூசுவதை திரிபுண்டரகமாக அணிதல் என்பர். (நெ. பா. 66, 70) அப்படி திருநீற்று அணியும் போது இரு வழிகளின் கடைப்பகுதியளவில் அமையுமாறு அணிதல் வேண்டும். அளவு குறையின் ஆயுள் குறையும். அளவு நீளின் செய்தவம் நீங்கும். அழகாக அணியின் பிறவிப் பிணி நீங்கும். ஆக பற்றற்ற வாழ்வைப்பெற பற்றுக திருநீறு என்கிறார் குரு. அதனை சீடர்களும் அறிந்தொழுகும் பாங்கு இன்றைய காலகட்ட மக்களும் உற்றுநோக்கத்தக்கது.

உருத்திராட்சம் மகிமை

உத்திராட்சம் என்பதற்கு சிவனின் கண்கள் என்று பொருள். சிவபெருமான் சினம் கொண்டு திரிபுரத்தை எரித்த போது அவரது வியர்வை துளிகள் மண்ணில் விழுந்து ருத்ராட்ச மரங்களாக உருவாகியதாக புராணங்கள் கூறுகின்றன. ஆகவே உத்திராட்சத்தை அணிபவர்கள் ருத்ரனின் அம்சமாக கருதப்படுவதோடு அவர்கள் தீமையிலிருந்து பாதுகாக்கப்படுதோடு நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும் என்றும் நம்பப்படுகிறது. உத்திராட்சம் அணிவதன் மூலம் ஏற்படும் அறிவியல் பூர்வமான நன்மைகள் என்னவென்றால் உத்திராட்சம் அணிபவர்களுக்குப் பலவகையான நோய்கள் இல்லாமல் போகும். அது மட்டுமன்றி இரத்த அழுத்தம், கல்லீரல் கோளாறுகள், இதய நோய்கள் போன்ற பிரச்சனைகளுக்கு உத்திராட்சம் அணிவதன் மூலம் நன்மை உண்டாகிறது என்கிறார்கள். மேலும் இது உடலில் உள்ள நீர் தன்மையை சீராக்குவதோடு ஞாபக சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது.

அணிகலன்கள் பல அணிவதால் பயன் ஏதும் இல்லை. ஆனால் உத்திராட்சத்தைத் தொட்டாலே சிறப்பு என்பதை,

.....பல அணிகள் தாங்கும் அளவு அன்றித் தரும் பேறு
இலையென்றும் தீங்கில் இதை யொருவன் தீண்டுறிடும் - ஓங்கும்
உருத்திரனே ஆவன்என ஓர் உருத்தி ராக்கம்
பொருத்தம் உற உறுப்பிற்பூண்டு (நெ. பா. 53,55)

என்கிறார் அவ்வகை நலன் பயக்கும் உத்திராட்சத்தை குரு காட்டிய பெருமையை சீடன் மிகைப்புற அணிவதில் பெருமை கொள்கிறான் என்பது திண்ணம்.

பிறப்பறுத்தல்

"பிறப்பறுத்தல்" என்பது பிறவி துன்பத்திலிருந்து விடுபட என்பதாகும். பிறப்பு, இறப்பு என்ற தொடர் நிலை வாழ்வு வேண்டேன் என்ற முடிவுக்கு கொண்டுவருதல் மற்றும் வீடுபேறு அடைதல் என்பதைக் குறிக்கிறது. இதனை அடைய வள்ளுவப் பெருந்தகை,

மற்றும் தொடாப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை (குறள். 345)

என்று பிறப்புத் துயர் வேண்டேன் எனல். சிவனை முழுமுதல் கடவுளாக வணங்குபவர்கள் அன்பே சிவம் என்றும் சிவனை அடைவதே சிறப்பு என்பதை,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்; அன்பே
சிவமாவ தாரும் அறிந்தபின்; அன்பே
சிவமாய் அமர்ந்திருந்தாரே; (திருமந்திரம்)

என்றார் திருமூலர். தேவர்களைக் காக்க நஞ்சுண்டவன் சிவன். ஆனால் சிவஞான தேவரோ அளவு கடந்த புண்ணிய பாவம் செயல்களையும் அவற்றால் வரும் பிறப்புக்கள் ஒழியவும் "பிறப்பு கடிய பிறந்தான்" (நெ. பா.18) என்று சிவஞான தேவனாக பிறப்பறுக்க பிறந்தருளியவர் என்கிறார். ஆக தனது குருவை சிவனாக பாவித்து பிறவி துன்பத்தை அறுக்க வல்லவர் என்கிறார்.

தசாங்கம்

தசம் என்றால் பத்து. தசம் + அங்கம் = பத்து உறுப்புகளைப் பற்றி பாடுவது பாட்டுடைத் தலைவனை அரசனாகக் கொண்டு அவனுக்குரிய பத்து உறுப்புகளைச் சிறப்பித்துப் பாடுவது தசாங்கம் எனப்படும்.

1. *மலை - இங்கு அரசர் சிவஞான தேவன் இவரை அழிகின்ற மலைகளுக்கு ஒப்பிடாமல் கருணையை உடையவன்(26) என்று ஒப்பிடுகிறார். இவ்வாறே மாணிக்கவாசகர் சிவபெருமானை "அருள் மலை" (கீர்த்தி திருவாகவல் 124) என்று தசாங்கத்தில் பாடியுள்ளார்.*

2. ஆறு - ஒரு கெடுதலும் இல்லாமல் நில உலகத்தையும் ஆகாயத்தையும் போர்த்து வருகின்ற ஆனந்தம் என்னும் ஆற்றினை உடையவர் எமது குரு (நெ. பா. 26, 31) என்கிறார்.

3. நாடு - என்பது மூன்று மாயை இடங்களை சிவதேவனுக்கு நாடாக (நெ. பா. 31, 32) சொல்கிறார்

4. ஊர் - அன்பர்களின் உள்ளமே அவரது ஊராகச் (நெ. பா. 33) சொல்கிறார்

5. மாலை - குறைவின்றி நாவால் பாடப்படும் பாமாலையே அவரது மாலையாகக் (நெ. பா. 34, 36) கொள்கிறார்.

6. குதிரை - மரபு நிலை வலுவாத வேதமாகிய குதிரையை உடையவர் (பா. 36 39)

7. யானை- வீட்டுலகத்திற்க்கு ஆதாரமாக இருக்கின்ற ஞானமே யானையாகக் கொள்கிறார் (நெ. பா. 39,45)

8. கொடி - தருமம் ஆகிய கொடியை உடையவர் (பா. 45 48)

9. முரசு நாதமாகிய முரசை உடையவர் (பா. 48, 49) "போடி சென்ற அங்கே ஒரு பொருள் கண்டவர் நாடியில் உள்ளே நாதம் எழுப்புவர்" (திருமந்திரம்)இறை நாதம் தனது முரசு என்கிறார்.

10. ஆணை - உலகைத் தோற்றுவித்து ஐந்து செயல்களை செய்வித்தற்குரிய சக்தியாகிய ஆணை உடையவர்.

ஆக ஒரு நாட்டு மன்னன் செங்கோல் செலுத்த வளம் தரும் பொருள்கள் அனைத்தும் அழிவுத்தன்மை கொண்டதாகவும் கருணையும், தர்மமும், நிலையானவை என்றும் நாத ஒளி நிரந்தரம் என்றும் பாடுவதிலிருந்து குருவின் சிறப்பை சீடர்வழி உய்த்து உணரமுடிகின்றது.

தொகுப்புரை

மாதா, பிதா, குரு தெய்வம் என்று சொல்வார்கள். பெற்றோருக்கு அடுத்தநிலையில் இருக்கும் குரு தெய்வத்தின் முந்தையநிலையில் உள்ளார். அந்த குருவே தெய்வத்தை அடைய வழிகளையும் ஐம்புலன்களினால் ஏற்படும் துயர்களைந்து வீடுபேடு அடையச்செய்யும் நிலையையும், உலகில் நிலைத்து நிற்பவை திருநீரே என்றும் மற்றவைகளின் மீதுள்ள பற்றை விடுத்தும் நிலையில்லா உலகைக் கடந்தும், பற்றற்றானை பற்று, பரமநிலை

எய்து என குரு உபதேசத்தை கடைப்பிடிக்கும் சீடரான சிவப்பிரகாசரின் குருபக்தி வாழ்க. இன்றைய தலைமுறையினர் குருவை தனக்கு நல் செய்யும் நல்ல ஆசான் என்று மட்டும் எண்ணி குருவழி நடந்தாலே சிவப்பிரகாசர் போன்ற சீடர்களின் பக்திநெறிக்கு உலகெங்கும் பாடம் புகட்டிய சிறப்பு மேம்படும். உண்மை குருவை உணர்ந்த சிவபிரகாசர் வாழ்க. தெய்வமாக வாழ்ந்து தன்னை நாடி வந்த அனைவரையும் தெய்வ நிலை அடைய வழி காட்டிய ஸ்ரீசிவஞான பால தேசிகர் வாழ்க. வாழ்க சிவநாமம் வளர்க சிவதொண்டு....

துணை நின்ற நூல்கள்

முதன்மை நூல் ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது

1. திருக்குறள்
2. தொல்காப்பியம்
3. திருமந்திரம்
4. கலித்தொகை
5. நாலாயிர திவ்யபிரபந்தம்
6. திருமகள் அகராதி
7. வாழ்வியல் களஞ்சியம்

மயிலை முருகன் மீது வைத்தபக்தி

முனைவர். சி.ப்ரியா.
ஹோலி சில்ரன் பதின்ம
மேல்நிலைப்பள்ளி,
கவர்கல்பட்டி,வெள்ளாளகுண்டம்,
சேலம் - 636111.
தொலைப்பேசி எண் :9597385060

சங்ககாலம்

சங்க கால தமிழர் வாழ்வு இயற்கையோடு இணைந்த வாழ்வு அக்காலத்தை இயற்கை நெறிக்காலம் என்று கூறலாம். இயற்கை அமைப்பிற்கு ஏற்ப மலையும் மலை சார்ந்த இடங்கள் (குறிஞ்சி) காடும் காடும் சார்ந்த இடங்கள் (முல்லை) வயலும் வயல் சார்ந்த இடங்கள் (மருதம்) கடலும் கடல் சார்ந்த இடங்கள் (நெய்தல்) மணலும் மன சார்ந்த இடங்கள் (பாலை)என்று ஐந்து நிலங்களாக பிரித்து வாழ்ந்தனர். அந்தந்த நிலத்தில் அதன் கருப்பொருளுக்கும் ஏற்ப அந்தந்த நில மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது என்பர்.

வணிக மொழி ஆங்கிலம் இசையின் மொழி, கிரேக்கம் தத்துவத்தின் மொழி, ஜெர்மன், தூதின் மொழி பிரெஞ்சு என்றால் தமிழ் பக்தியின் மொழி என்று தனிநாயக அடிகளார் குறிப்பிடு கின்றார்.

ஆன்மீகம்

ஆன்மீகவாதிகளின்துணிவையும், அன்பையும் கருணையும் அடிப்படையாகக் கொண்டது மானுடம் முழுமைக்குமான வளர்ச்சிக்காக அவர்கள் செயல்படுகிறார்கள். ஆன்மீக தேடலின் போது சில தன்மைகளை தன்னகத்தைக் கொண்டு செயல்பட வேண்டும் பிறப்பு இறப்பு பயம் இவைகளைத் தாண்டி ஒரு தெளிவான உள்ளம் கொண்டு இருத்தல் வேண்டும் அத்தகைய ஒரு நிலைப்பாட்டையே இன்றைய ஆன்மீகவாதிகள் எடுத்துரைக் கிறார்கள் என்று 'மார்க்ட் வெயின்' கருத்தை இறையன்பு எடுத்து இயம்புகிறார்.

ஆன்மீக வாழ்க்கை

"ஆன்மீக வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும் போதே இந்த உலகம் ஆனந்த மயமாக மாறிவிடுகிறது. இலையுதிர்க் கால

மரங்களுக்கும் துறவு பூண்டிருப்பதாக தோன்றுகிறது. வெயிலில் எரியும் பொழுது கூட அவைகள் மழை வரம் வேண்டி தவம் இருப்பதாக தெரிகிறது. அவர்களுக்கு பிஞ்சிலும் இருக்கிறது பிரபஞ்சம் பாலை நிலத்திலும் பிரதிபலிக்கிறது பால்வீதி".

அக்கால வழிபாடு முறை

சேர,சோழ, பாண்டியர் என மூவேந்தர்கள் ஆண்ட காலத்தை சங்ககாலம் என்கிறோம். இக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் முதன்மையானது பாடுபொருள் அகம், புறம் என காதலும் வீரமும் பேசப்படுகின்றன. என்றாலும் இயற்கை சார்ந்த வழிபாட்டு முறைகளையும் அவ்விலக்கியங்கள் பதிவிட்டுள்ளன.

மாயோன் மேய காடுறை உலகமும்.
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வந்ணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே

எனத் தொல்காப்பியர் நிலங்களின் பிரிவையும் அவற்றிற்குரிய கடவுளையும் குறிப்பிட்டு இருக்கின்றார்.

பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியாகும். இதில் கடவுள்கள், மன்னர்கள், புலவர்கள் போன்றவர்களை குழந்தையாக பாவித்து பத்துப் பருவங்களில் பாடல்கள் பாடப்படுகின்றன. இந்த இலக்கியம் ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒவ்வொரு வகையிலும் பத்து பருவங்களும் ஒவ்வொரு பருவத்திலும் பத்து பாடல்களும் இருக்கும் என கூறுகின்றனர்.

அன்பு தருவதிலே உடையவர்
ஆகும் ஓர் தெய்வம் உண்டோ"

என்று பாடுகிறார் பாரதி. அன்பு செலுத்துவதற்கும் அந்த அன்பை பெறுவதற்கும் உரிய பருவம் குழந்தை பருவமே. புலவர்கள் தம் அன்புக்குரிய ஒருவரை குழந்தையாக வைத்து பாடி மகிழ்ந்தார்கள். இதுவே பிள்ளைத்தமிழ் ஆயிற்று என்று புலவர் பெருமக்கள் தம் அன்பிற்குரியவராகப் குறிப்பிடப்படுபவர்கள்.

இறைவன். இறைவி. இறை அடியார்கள். வள்ளல்கள். தலைவர்கள். ஆசிரியர்கள் இவர்களுள் ஒருவரை தலைவராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடப்படும். இவர்களின் குழந்தை பருவ நிகழ்ச்சிகள் மூலம் அறியப்பெரிய சாதனைகளை புலவர்கள் விளக்கிக் கூறுவர். பிள்ளைத்தமிழால் பாடுவது என்ற பொருளில் பிள்ளைத்தமிழ் என்ற பெயர் அமைந்துள்ளது.

பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் நமக்குக் கிடைக்கும் முதல் நூல் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் இது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. கிபி 12-ம் நூற்றாண்டை சேர்ந்தது. இந்நூல் இரண்டாம் குலோத்துங்க சோழனை பாட்டுடைத் தலைவனாக கொண்டது. இதன் பின்னர் பல பிள்ளைத்தமிழ் நூல்கள் இயற்றப்பட்டன. பகழிக்கூத்தர், குமரகுருபரர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலான புலவர் பெருமக்களால் பிள்ளைத்தமிழ் வளர்ச்சி அடைந்தது. இதுவரை 300-க்கும் மேற்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் இயற்றப்பட்டுள்ளதாக கு. முத்துராசன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்

உலகம் தோன்றிய நாள் தொட்டு உலக மாந்தரை வழிபடுத்த வழிபாடு தோன்றியது. இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விற்கும் இறைவனே காரணம் என்பது தெய்வம் நம்பிக்கை உடையவர்களது மேலான கொள்கை. ஆறறிவு படைத்த மனிதனால் மட்டுமே சிந்தித்து செயல்பட முடியும். ஆன்மீக வழி நின்று பிறவி பெருங்கடலைக் கடக்க இயலும் இவ்வுலக மக்கள் சீர் பெறவும் வாழ்வும் இறைவனை குருவாக வந்து அருள் புரிவது காலந்தோறும் உள்ள நிகழ்வாகும். அருணகிரிநாதரும் முருகப்பெருமானை குருவாய் வருவாய்! அருள்வாய் குகனே! எனப் போற்றியுள்ளார். திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகருக்கும் இறைவன் குருவடிவாகக் குருந்த மர நிழலில் காட்சி தந்து உபதேசம் செய்தார்.

பாலசித்தர் நாரதர் ஆலோசனையின்படி மயிலமலையில் தவம் இயற்றிய முருகன் அருளைப் பெற்றார். பால சித்தரின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது சீடராக சிவஞானிக்கு ஞான உபதேசம் புரிந்து தமது அம்சத்தை பதியச் செய்து பாலை உணவாகக் கொண்டு சீடப் பரம்பரையோடு சிவஞான பாலய தேசிகராய்த் திகழ திருவருள் பாலித்தார்.

குனித்தபுருவமும்கொவ்வைச்
செவ்வாயின் குமிண்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம் போல்.
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த
பொற்பாதமும். காணப்பெற்றால்
மனிதனைப் பிறவியும் வேண்டுவதே.
இந்த மாநிலத்தை

என்று கூறுகிறார்.

மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து
பயன் தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை

என மயிலமலையைப் போற்றிப் புகழ்ந்து பாடுகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள். மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலின் ஆசிரியர் சோழ நாட்டிலே திருவாரூரில் அபிடேகத்தார் மரபில் வன்மீகநாத தேசிகரின் மைந்தராய்த் தோன்றிய வைத்தியநாத நாவலர் ஆவார். இவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டு இவருடைய தந்தையாரும் இவர் தம் வழி தோன்றல்களும் சிறந்த தமிழ் புலவர்கள் ஆவர்கள்.

பொம்ம புரமும் புவியும் புரந்தருளும்
செம்மல் சிவஞானி சீருணரச் செய்யுமிடம்
கைம்மலரால் செவ்வேல்கடவுளையே பூசிப்பார்
மம்மர் அறுப்பான் வளர்ந்த மயிலாசலமே

என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார்.

சமுதாயம் உயர்ந்தோங்க வீர சைவ நெறி தழைக்க தமிழகத்தில் தொண்டாற்றி வரும் திருமடங்களுள் முதன்மையாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் . இவ்வாதீனத்தின் குருமகா சந்நிதானங்களாக விளங்கிய ஸ்ரீ பால சித்தர், ஆதி சிவஞானியைத் தொடர்ந்து தற்போது அருளாட்சி செய்து வரும் இருபதாம் பட்டம் சுவாமிகள் புலவர் பெருமக்களால் போற்றி பாடப் பெறும் பெருமைக்குரியவர்கள்

பாவலர் புதுவை இளங்குயில் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமணத்தைப் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

முருகப்பெருமானை வணங்குவது
பஞ்சூட்டு பதுமமும் பதுமத்து நீலமும்
நீலோற் பைக் கிழித்த
யைந்தோட்டு வள்ளையு மணந்த

குஞ்சரியைப்
பகுங்கொடிக் குற்றமா தினைச்
செஞ்சுட்டு சேவல் கொடியையொரு
நொடியிலென்
டிசையெலாஞ் சூடு மயிலம்
செவ்வேலை யார்கிட்ட வேலவன்
பணிவதே
தினம் வேலை யாகி நிற்கும்
பிஞ்சூட்டு மதியமு நறையூட்டு மத்தமும்
பினையூட்டு கங்கை யாரும்
பெட்பூட்டு பாசமிகுமுட்பூட்டுபேழ்வாய்ப்
பெரும்பாந்த ளுடனின்
நஞ்சூட்டு மணியிடம் றான்மகிழ வுமைமாது
நற்கொங்கை யமு தூட்டநீ
ணகையூட்டு மணிமாலை வளர்முக
னைப்புரவு
நந்தமிழ்க் கவி தழையவே.

பாடல் விளக்கம்

பிறைமதியையும் ஊமத்தம் பூவையும் கங்கை ஆற்றையும் அருகம்புல்லையும் பெரும்பாம்போடு அணிந்துள்ளவராகிய நீல மணிமிடற்றுச் சிவபெருமான் மகிழுமாறு, அம்பிகை தாய்ப்பா லூட்ட வளர்ப்பவராகிய மயிலம் முருகப்பெருமானைப் போற்றும் இப்பிள்ளைத் தமிழ்நூல் சிறப்படைய, செம்பட்டை தோய்ந்த தாமரைப் போலும் திருவடியையும் செந்தாமரையில் பொருந்திய நீலோற்பலம் போலத் திருமுகத்தே பொருந்திய கண்களையும் நீலோற்பலத்திற்கு இடையே எழுந்த வள்ளை போல் கண்களை எடுத்து காணப்பெரும் செவிகளைக் கொண்டு திகழும் தெய்வானை அம்மையையும், பச்சைக்கொடி போல்வராகிய வள்ளி யம்மையையும் கொடியாக திகழும் சேவையும் உலகை ஒரு நொடியில் வலம் வரவல்ல மயிலையும், செவ்வேலையும் தன் பால் அழகுற கொண்டு திகழும் முருகப்பெருமானை வணங்குவதையே நாள்தோறும் செய்யத்தக்க பணியாக நாங்கள் கடைப்பிடிப்போம்.

முருகனும் சூரியனும்

தலைஉச்சிகபாலம்ஆகும்.குண்டலினி சக்தி ஆக்ஞையில் நுழைந்து. கபாலத்தில் வழியாக மேற்சொன்றால் இறைக்காட்சி உண்டாகும். சிவனோடு ஐக்கியமுற்றுப் பிறவா நிலையை எய்தும் ஔவையார் அருளிய விநாயகர் அகவலில் இடம்பெறும்,

மூலா தாரத்தின் முன்டெழு கணலைக்
காலால் எழுப்பும் கருத்தரறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறிஞ்
இருத்தி முக்தி இனிதென கருளி (43-46,54)

ஆறாதாராத் தாமரைகளைக் கடந்து அமுது பருக அருள் புரியும் முருகனின் திருவருட்செயலையும், வண்டுகள் தேன் பருக தாமரை மலருமாறு உதிக்கும் கதிரவனின் செயலையும் ஒருங்கே கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முருகனையும், இதயகமலம் மலர வரும் சூரியன் எனச் சுட்டியுள்ளமை சிறப்புடையது. சூரியன் உதயகிரியில் தோன்றுமாறு போல முருகன் மயில மலையில் எழுந்தருளியுள்ளான். திருமுருகாற்றுப்படை

கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால் கிளர்ந்தன்ன வேழ மேற்கொண்டு

என வரும் திருமுருகாற்றுப்படையால் அறியலாம். அதன் பெயர் பிணிமுகம் என்பதாகும். திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு யானை வாகனம் அமைந்திருப்பது இங்கு எண்ணத்தக்கது. யானையின் பருமன் கெண்டை என்பது,

யானையின் கழுத்தில் கட்டப்பட்ட பருத்த கண்டாமணியை குறித்தது. முருகனுக்கு ஆட்டு வாகனமும் உண்டு. சூரபத்மனோடு போரிட்ட போது அக்னி ஆட்டு வாகனமாக அமைத்தார் என்பர்.

முடிவுரை

வேலாயுதனே உயர்ந்த மயில மலையில் எழுந்தருளியுள்ள கந்தனே, உலகில் பல கலைகள் தழைக்கவும், விண்ணுலகில் சூரியனும் சந்திரனும் நிலைபெறவும், வஞ்சக அவுணர் கூட்டம் கெடவும், கங்கையும் பார்வதி தேவியும் கண்டு களிக்கவும், எண்ணற்ற உலக உயிர்கள் நலம் பெறவும் வேதநெறி தழைக்கவும் முப்பதிரண்டு அறங்களும் எண்திசையும் வளரவும் உலகெங்கும் பலகோடி வேள்விகள் வளரவும் சிறுதேர் உருட்டியருளக.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் உணர்த்தும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பருவங்கள்

செள. இராஜலட்சுமி,
உதவிப் பேராசிரியர் - முதுகலைத் தமிழ்த்துறை,
வே. வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
Mail ID : rajalakshmi@vvvcollege.org

முன்னுரை

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகப் பிள்ளைத்தமிழ் அமைகிறது. பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தில் வழங்கும் பிரபந்த நூல் வகைகளுள் ஒன்று. புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், சான்றோர்கள், புலவர் பெருமக்கள், அரசர்கள், வள்ளல்கள், அவர் அவர்கட்கு உகந்தவர்கள், ஆகியோரைக் குழந்தையாக உருவகித்துக் கற்பனை பல அமையப் பாடப்படுவது பிள்ளைத்தமிழாகும்.

பண்ருட்டி - மணி அப்பாவு ஐயர்

பண்ருட்டி - மணி அப்பாவு ஐயர் அவர்கள் மயிலம் பொம்மபுர ஆதீன முதற்சீடர் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளைத் தம் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு "ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்" பாடியுள்ளார். இப்பிள்ளைத்தமிழில் ஒரு பருவத்திற்கு ஐந்து பாடல்கள் வீதம் ஐம்பத்தோறு பாடல்கள் இயற்றியுள்ளார். சிவப்பிரகாசராகிய குழந்தையின் செயல்களை 3 மாதம் தொடங்கி 21 மாதம் முடிய பத்துப் பருவங்களாகப் பகுத்திருக்கிறார். இந்நூலில் உள்ள பாடலுக்குத் தெளிவான உரையைப் படிக்கும் வாசகர்களுக்கு வழங்கும் விதமாக சிறப்பாக ஆய்வு செய்து "ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்" என்னும் நூலாக புலவர் வி.ச. சந்தானம் அவர்கள் எழுதியுள்ளார்.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனம் என்பது வீரசைவத் திருமடங்களுள் மிகத் தொன்மை வாய்ந்தது. இவ்வாதீன குரு முதல்வரான ஸ்ரீ பாலசித்தரின் அருளையும், உபதேசத்தையும் பெற்ற ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைக் குருவாகவும், இறைவடிவாகவும் கண்டு மகிழ்ந்து அவர் மீது மிகுந்த பற்றுகொண்டு ஐந்து நூல்களை இயற்றியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் பருவங்கள்

பிள்ளைத் தமிழ், ஆண்பால் பிள்ளைத் தமிழ் என்றும், பெண்பால் பிள்ளைத் தமிழ் என்றும் இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்மானை என்பன ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும், பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும். பொதுவாக வருவன. ஆண்பால் பிள்ளைத் தமிழின் எட்டாம் பருவம் சிற்றில், ஒன்பதாம் பருவம் சிறுபறை, பத்தாம் பருவம் சிறுதேர் எனவும், பெண்பால் பிள்ளைத் தமிழின் எட்டாம் பருவம் கழங்கு, ஒன்பதாம் பருவம் அம்மானை, பத்தாம் பருவம் ஊசல் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

காப்புப் பருவம்

காப்புப் பருவம் என்பது பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகக் கருதி, அக்குழந்தைக்கு எவ்வித இடர்ப்பாடுகளும் வராமல் பாதுகாக்க வேண்டும் என இறைவனை வேண்டுவதாகும். இந்நூலில் ஆசிரியர் பண்ருட்டி மணி - அப்பாவு ஐயர் அவர்கள் 'காப்பு ' என்பதில் முழுமுதற் கடவுளாம் ஸ்ரீ விநாயகப் பெருமானை முதற்கண் வணங்குகிறார். இதனை,

உலகினில் இலக்கண வரம்பில் ஒளிர்
உயர்திணையி தெனநாலு கரம்விளக்க,
உன்னலுறும் அஃறிணையி தெனமற்றை
நாலுகரம் ஓர்விக்க, இருவேற்றுமை (காப்பு)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

செங்கீரைப் பருவம்

குழந்தை பிறந்த ஐந்தாம் மாதத்தில் தன் தலையை நிமிர்த்தி, ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி இரு கைகளையும் தரையில் பதித்து, தண்டுக்கீரை வளைந்து ஆடுவது போன்ற சமயத்தில் சிறந்த சொற்களைப் பேசி சிரித்தல் போன்று இந்நூலாசிரியர் 'செங்கீரை ஆடியருளே' என சிவப்பிரகாச சுவாமிகளைக் குழந்தையாகவும், தன்னைத் தாயாகவும் கொண்டு பாடியுள்ளார். என்பதை,

தெளிமல்கு செந்தேன் அகும்பு மழலையின் இனிய
செங்கீரை யாடியருளே;
திகழ்வீர சைவசித் தாந்த குலதீபமே!
செங்கீரை யாடியருளே! (சி.பி. 6 : 7-8)

என்ற அடிகள் அரண்செய்கின்றன.

தாலப் பருவம்

தாலப் பருவம் (தாலாட்டுப் பாடல்) என்பது தாயானவள் தன் நாவினை அசைத்துப் பாடித் தனது குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடுவது ஆகும். சிவப்பிரகாசர் பிள்ளைத் தமிழில் வீரசைவத் திலகம் என்றும், அவருடைய தமிழ்ப் புலமை பற்றியும், இலக்கண ஐயத்தைத் தீர்த்த அவர்தம் வரலாறு பற்றியும் எடுத்துரைத்துத் தாலாட்டுப் பாடும் திறத்தினை,

தாங்கும் நல்லாற்றூர் ஒங்கும்
தலைவா தாலோ தாலேலோ
சரணர் அடிவீடு எனும் வீர
சைவா தாலோ தாலேலோ (சி.பி. 8 : 7-8)

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது..

சப்பாணிப் பருவம்

பிறந்து ஒன்பது மாதமான குழந்தை இருகைகளையும் சேர்த்துக் கொட்டி ஒலி எழுப்பும். சிவப்பிரகாசர் பிள்ளைத்தமிழில் சிவப்பிரகாசக் குழந்தையை இரு கைகளையும் சேர்த்துக் கொட்டி ஒலி எழுப்புக; ஆடுக எனக் குறிப்பிடுகிறார்.

திருவெங்கைத் தலத்தில் உள்ள பிடாரி அம்மனுக்குத் தேர்த் திருவிழா நடைபெற்றது. தேர் வலம் வரும்போது, சிவனடியார்களுக்குப் பயன்பட்டு வந்த முருங்கை மரமானது அழிந்தது. அதைக் கண்ட சிவப்பிரகாசர் மனம் வருந்தித் தாம் பாடிய ஒரு பாடலால் பிடாரியின் திருத்தேரை எரித்து அழித்தார். அவ்வளவு கவிபாடும் திறமைமிக்க சிவப்பிரகாசரே சப்பாணி கொட்டியருள்க! என்று கூறுவதை,

குலவிய ஒருகவி யால்அழிவித்தவ!
கொட்டுக சப்பாணி;
கோதறு சாதன நீதிதெ ரித்தவ!
கொட்டுக சப்பாணி. .(சி.பி. 19 : 7-8)

என்ற பாடலடிகள் சிவப்பிரகாசரின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

முத்தப் பருவம்

தொல்காப்பியத்தில்

குழவி மருங்கினும் கிழவதாகும் (தொல்.புறம் 24)

எனக் கூறப்பட்ட புறத்திணையியல் நூற்பாவே பிள்ளைத் தமிழின் தோற்றுவாயாகும்.

பாட்டுடைத் தலைவனைப் பதினோரு மாதக் குழந்தையாக்கி, அவர் தம் புகழைப்பாடி, முத்தம் பெற ஏங்கும் வகையில் பாடுவது முத்தப் பருவம் ஆகும். அவ்வகையில் இப்பிள்ளைத்தமிழின் ஆசிரியர் தன்னைத் தாயாகவும், சிவப்பிரகாசரைக் குழந்தையாகவும் கொண்டு ஏக்கமுடன், முத்தம் தர வேண்டுவதாக இம் முத்தப்பருவம் அமைந்துள்ளது.

பதிவீர சைவவிதி மதிநிரா பாரயதி!
பவளவாய் முத்தம் அருளே. (சி.பி. 21: 8)

சிவப்பிரகாச வள்ளலே! உன் பவளவாயால் முத்தம் தருகவே என ஏக்கத்துடன் சிவப்பிரகாசக் குழந்தையை வேண்டுவதாகப் பாடியுள்ளமையை அறியமுடிகிறது.

வருகைப் பருவம்

குழந்தை பிறந்த பதின்மூன்றாவது மாதத்தில் தாயானவள் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டிப் பாடுவாள். அவ்வகையில் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளைப் பாராட்டி அவர்தம் பெருமைகளை விளக்கி, இப்பிள்ளைத் தமிழில் வருக! வருக! என்பதாக அமைத்துப் பாடியுள்ளார்..

சித்தாந்த வேதாந்த சமரசநன் னிலை நிலவு
தேசிகோத் தமன்! வருகவே. (சி.பி. 26 : 8)

என்று சீராட்டிப் பாடியுள்ள திறம் வெளிப்படுகிறது.

அம்புலிப் பருவம்

குழந்தை பிறந்த பதினைந்தாம் மாதத்தில் தாயானவள் தனது குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு நிலவைக் குழந்தையுடன் விளையாட வா என அழைப்பது ஆகும். சிவப்பிரகாசரைக் குழந்தையாகக் கொண்டு, நிலவை விளையாட வரும்படி அழைப்பது போல் பாடியுள்ளதை,

வெப்பம்அக லத்திரு வருட்குளிர் பரப்புவன்; இவ்
விதம் அறிவை நீயும் அதனால்
அம்மையொடும் இம்மையும் அளிக்கும் இவ்வாரியனொடு
அம்புலி! ஆடவாவே; (சி. பி. 31: 6-7)

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது.

சிற்றில் பருவம்

குழந்தை நடை பயில்கின்ற காலம் சிற்றில் பருவம் எனப்படும். சிறுமியர்கள் தாங்கள் மணலால் கட்டும் வீடுகளைக் காலால்

அழிக்காதே! என வேண்டுவதாக அமைத்துப் பாடுவது சிற்றில் பருவம் ஆகும்.

தெரிய அரிய அருட்கதிரோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேரூர் திருவெங் கைத்தலைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே (சி. பி. 36 : 7-8)

துறவு வாழ்க்கையை மேற்கொண்டவரே! வேதனைகளை நீக்கியவரே! மனதில் சிந்தையினை ஒருநிலைப் படுத்தியவரே! தேசிகசிகாமணியே! சிவப்பிரகாசரே! சிறுமியராம் எங்களது சிறுகுடில்களைச் சேதப்படுத்த வேண்டாம் என்று கூறுவதன் வழி சிற்றில் பருவம் புலப்படுகிறது.

சிறுபறைப் பருவம்:

சிந்தனை மயக்கம் அற் றவர்தொழும் சற்குரவ
சிறுபறை முழக்கியருளே
தெய்வத் தமிழ்ப்பயிர் வளர்த்தஅருள் மேகமே
சிறுபறை முழக்கியருளே (சி. பி. 41: 7-8)

மனமயக்கம் இல்லாதவர்கள் தொழுகின்ற சற்குருவே! தெய்வத்தமிழ் எனும் பயிரை வளர்த்த மேகம் போன்றவரே! சிறுபறை முழக்கி அருள்வீராக! என வீரசைவத்தை வளர்த்த சிவப்பிரகாசரின் புகழை இப்பாடல் அடிகள் அரண்செய்கின்றன.

சிறுதேர்ப் பருவம்

ஒப்பற்ற செம்பொன்னால் ஆகிய பெருந்தேரினை உருட்டி வருகின்ற வீரத்திருமகனே! திருமகள் விளங்க வருகின்ற கந்தபுரியில் எழுந்தருளியிருக்கின்ற முத்துக் குமரப் பெருமானே! சிறுதேர் உருட்டி மகிழ்ச்சி பெறவேண்டும் என்று கூறப்படுவதை,.

திருவளர வளர்கந்த புரிவளர் இளங்குமர!
சிறுதேர் உருட்டி அருளே" (மு. மீ. பா. எ.92)

என்ற அடிகள் எடுதுரைக்கின்றன.

சேர்தலுறும் என்னத் தெருட்டியருள் ஆரிய
சிறுதேர் உருட்டியருளே. (சி. பி. 46 : 7)

ஸ்ரீ சிவப்பிரகாசரை அன்பின் மிகுதியால் குழந்தையாகப் பாவித்து, 'சிறுதேர் உருட்டுக' என்று விளக்கியுள்ளார். இப்பருவம் பிள்ளைத் தமிழில் நிறைவாக அமைந்துள்ளது.

முடிவுரை

பிள்ளைத்தமிழில் சிவப்பிரசாகர் வாழ்வியல் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. திருமடத்தின் வரலாற்றுக் குறிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. புராணச்செய்திகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அணிகலன்கள் இடம்பெற்ற விதம் குறித்து ஆராயப்பட்டுள்ளன. நல்லாற்றூர் சிவப்பிரப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழில் இடம்பெற்றுள்ள ஆண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் விளக்கப்பட்டுள்ளன. சிவப்பிரகாசரின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

துணைநூற் பட்டியல்

1. புலவர் வி.ச.சந்தானம், நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் ஆய்வு, மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், முதற்பதிப்பு 2022
2. முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், துரை. இராசாராம், சிட்டு நூலகம், முதற் பதிப்பு : 2003.
3. கு. முத்துராசன் , பிள்ளைத்தமிழ் இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம். -1984
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர், சாரதா பதிப்பகம், சென்னை.
5. சிற்றிலக்கியச் செல்வங்கள், ந.வீ.செயராமன், மணிவாசகர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு -2010.

மயிலம் பொம்மபுர ஆதீனம், பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் வரலாறு

முனைவர் வே. விஜயரங்கம்,
இணைப் பேராசிரியர்,
முதுகலை வரலாறு மற்றும் ஆராய்ச்சித்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி,
விழுப்புரம் - 605 602, தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி எண் (புலனம்): +919943063015
drvvijayarangam@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

சைவ சமயத்தை வளர்ப்பதற்காகக தமிழ் நாட்டில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆதீனங்கள் எனப்படும் சைவ மடங்கள் தோன்றின. சைவ மடங்கள் சமயத்துறையில் பெரும் பணி ஆற்றிய போதிலும் தமிழ் இலக்கியங்களைக் காப்பதிலும் பரப்புவதிலும் முனைந்திருக்கின்றன. இத்தகைய மடங்களுள் குறிப்பிடத்தக்கது மயிலம் பொம்மபுர ஆதீனம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடமாகும். இவ் ஆதீனம் பொம்மபுரத்தில் தோன்றி, மயிலத்துக்குச் சென்று இரண்டு இடங்களிலும் நிலைத்ததால் மயிலம் பொம்மபுர ஆதீனம் என்று பெயர் பெற்றது. இத்திருமடத்தைத் தோற்றுவித்தவர் இத்திருமடத்தின் முதல் பட்டமான பாலசித்தர் என்பவரே ஆவார். அவருக்குப் பின்னர் பதினெட்டு பேர் இவ்வாதீனத்தை நிர்வகித்துள்ளனர். தற்போது இருபதாம் பட்டமாக ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளாக அருளாட்சி செய்துவருகிறார். இத்திருமடத்தின் பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளின் வரலாறு பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்:

பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம்,

முன்னுரை

சைவ சமயத்தை வளர்ப்பதற்காகக தமிழ் நாட்டில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆதீனங்கள் எனப்படும் சைவ மடங்கள் தோன்றின. சைவ சமயத் தலைவர்களாலும் சைவப் பெரியோர்களாலும் தமிழ் வளர்க்கப்பட்டது போல சைவ

மடங்களும் தமிழை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. சைவ மடங்கள் சமயத்துறையில் பெரும் பணி ஆற்றிய போதிலும் தமிழ் இலக்கியங்களைக் காப்பதிலும் பரப்புவதிலும் முனைந்திருக் கின்றன. பழைய நூல்களின் அரணாகவும் புதிய நூல்களின் பிறப்பிடமாகவும் மடங்கள் விளங்கி வருகின்றன. அவற்றின் தலைவர்கள் பலர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து புலமை நிரம்பியவர்களாக விளங்கி வருகின்றனர். ஆதலின் மடங்களில் அவர்களுக்குச் சிறப்பான இடம் இருந்தது. அக்காலத்துச் சிறந்த புலவர் பலர் மடங்களில் இருந்து இலக்கியத் தொண்டு புரிந்து வந்தனர். இத்தகைய மடங்களுள் குறிப்பிடத்தக்கது மயிலம் பொம்மபுர ஆதீனம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடமாகும்.

அமைவிடம்

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் அமைந்துள்ள மயிலம் என்னும் ஊரில் புகழ்பெற்ற முருகன் தலம் அமைந்துள்ளது. இவ்வூர் திண்டிவனத்திருந்து கூட்டேரிப்பட்டு வழியாகப் புதுச்சேரிக்குச் செல்லும் வழியில் திண்டிவனத்திலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவிலும் விழுப்புரத்திலிருந்து 29 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. மயிலம் மலை, மயில் போன்ற வடிவில் அமைந்துள்ளதால் மயிலம் எனப் பெயர் பெற்றது. மயில மலையை உடையதால் ஊரும் மயிலம் எனப் பெயர் பெற்றது.

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டத்தில் புதுச்சேரியி லிருந்து சென்னைக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 7.5 கிலோமீட்டர் தொலைவில் பொம்மையபாளையம் என்னும் ஊர் அமைந்துள்ளது. பொம்மையபாளையத்துக்குப் பொம்மபுரம் என்றும் பெயர். இவ்விரு ஊர்களிலும் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடங்கள் அமைந்துள்ளன. இவ்விரு ஊர்களிலும் உள்ள திருமடங்களும் ஒன்றே. இங்குள்ள ஆதீனம் பொம்மபுரத்தில் தோன்றி, மயிலத்துக்குச் சென்று இரண்டு இடங்களிலும் நிலைத்ததால் மயிலம் பொம்மபுர ஆதினம் என்று பெயர் பெற்றது. "திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம், ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் திருமடம், மயிலம் & பொம்மபுரம்" என்பது முழுமையான பெயர்.

திருமடத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கைலாயத்தில் சிவபெருமானிடம் தொண்டராக இருந்தவர் சங்குகன்னர். சிவபெருமான் அவரை நோக்கி உலகில் சென்று

அன்பர்களுக்குச் சிவாகம நெறிகளை உபதேசிப்பாயாக என்று கட்டளையிட்டார். புதுவைக்கு அண்மையிலுள்ள கடலில் விபூதி, உருத்திராட்சம், சிவலிங்கம், கௌபீனம், கல்லாடை, சடைமுடி ஆகியவற்றுடன் பத்து வயதுடைய பாலயதினராயச் சங்குகன்னர் தோன்றி, அண்மையிலுள்ள பொம்மபுரத்தில் தங்கியிருந்து தக்கவர்களுக்குச் சிவாகமங்களை உபதேசித்ததுடன், வீரசைவ சமய நெறிகளையும் உணர்த்தினார்; அங்குச் சில காலம் தங்கியிருந்தார். பின்பு பெருமுக்கல் மலையை அடைந்து அங்குள்ள சித்தர்களுக்கு உபதேசம் புரிந்து மயிலத்தைத் தம் இடமாகக் கொண்டு, பாலவயதினராயச் சித்து விளங்க இருந்தபடியால் இவருக்குப் பாலசித்தர் என்ற பெயரும், பொம்மபுரத்தில் இவர் தங்கியிருந்த இடத்திற்குப் பாலசித்தர் மடம் என்ற பெயரும் உண்டாயின.

இவர் பல ஆண்டுகள் மயிலத்தில் முருகனை நோக்கித் தவமிருந்தார். அக்காலத்தில் சிதம்பரம் பச்சைகந்த தேசிகர் மரபில் வந்த அம்மவை என்பவர் மகப்பேறில்லாமலிருந்து வந்தார். அவர் பாலசித்தர் கருத்தின்படி சதுரக் கள்ளிப் பாலைக் கொடுத்துவந்தார். ஒருநாள் அவர் கொடுத்த பாற்பிரசாதத்தால் உதித்த ஞானப் புதல்வர் பால சித்தரின் அருகிருந்து தொண்டு செய்து கொண்டு வந்தார்.

பின்னர்ப் பாசித்தர் சிவிகையில் அமர்ந்து பல இடங்களுக்கும் சென்று வீரசைவ சமயத்தைப் பரப்பி மீண்டும் மயிலத்தை அடைந்தவர், முருகனை நோக்கி, "எம்மால் ஏற்படுத்தப்பெற்ற இத்திருமடத்தில் அடியேனுடைய சீட பரம்பரையினர் ஆச்சாரியபிடேகம் பெற்று மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம் புரிந்து கொண்டு விளங்கும்படி தங்களின் திருவருளைப் பதிவித்தல் வேண்டும்" என வேண்டிக் கொண்டார். முருகன் அவ்வாறே பாலசித்தரின் சீட பரம்பரையினராகிய அம்மவையின் புதல்வருக்கு ஆச்சாரியாபிடேகம் செய்வித்துத் தம்முடைய அம்சத்தில் ஓர் அம்சம் பதியுமாறும் செய்தார். இவரே, சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். அவ்வாறு பின்வரும் ஞானாசிரியர்களுக்கும் அமையுமாறு கட்டளையிட்டார். பின்னர் பாலசித்தர் முருகனின் சந்நிதிக்குத் தென்பால் ஆனி மாதம் திருவாதிரை நாளில் சீவ சமாதி கூடி அருள் உருவானார்.

சிவஞான பாலய சுவாமிகள் அதுகண்டு வியப்புற்று முருகப் பெருமானையும் தம் ஞானாசிரியரையும் ஒன்றாகக் கண்டு வணங்கினார். பின்னர் மயிலம் பொம்மபுரத்திலும் நடைபெற

வேண்டிய அறங்களை இவர் செவ்வனே செய்துவந்தார். சிவஞான பாலய தேசிகர் செயற்கரிய செயல்களைத் தம் தவ வன்மையால் செய்து வந்தார்.

பத்தொண்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞாணபாலய சுவாமிகள்

19 ஆம் பட்டம் சுவாமிகளின் பூர்வாசிரிம பெயர் சிவப்பிரகாசம். இவர் குரோதன ஆண்டு புரட்டாசி மாதம் 16 நாள் வியாழக் கிழமையன்று (01.10.1925) பிறந்தார். மயிலம் தமிழ்க்கல்லூரியிலேயே பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர். ஆங்கிலமும் அறிந்தவர். பதினெட்டாம் பட்டத்துச் சுவாமிகளுக்கு உறுதுணையாகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். மயிலம் தமிழ்க்கல்லூரி ஆசிரியராகவும் முதல்வராகவும் திகழ்ந்தவர். பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள் தமிழ்ப்புலமை, திருமுறைப்புலமை, வீரசைவப் புலமை மிக்கவர்கள். அவர்களது அருளாட்சியில், சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கிச் செழித்தன.

இளமைக்காலத்தில் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் ஆதீனத்திற்குச் சென்று மடாதிபதிகளாக விளங்கியவர். பூர்வாசிரமத் தந்தையார் பதினெட்டாம் பட்டம் சுவாமிகள் சிவப்பேறு பெற்றுவிட்ட நிலையில் திருப்போரூரிலிருந்து மயிலத்துக்கு வந்து பத்தொன்பதாம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகளாகக் குருமகாசந்நிதானமாக 1965-இல் பொறுப்பேற்று அருளாட்சி செய்யத் தொடங்கினார். அவர்களது அருளாட்சியில் ஆதீனம் பற்பல வகையில் அபிவிருத்தியடைந்தது. மயிலம் பொம்மபுர ஆதீனத்திற்குச் சொந்தமான புகழ்பெற்ற மயிலம் முருகன் சந்நிதி வளர்ந்தோங்கியது.

மயிலம் தலத்திற்கு விரிவான அளவில் திருப்பணி செய்து 1991-இல் குடநீராட்டுவிழா நடத்தினார்கள். மயிலம் மலைக்குப் படிக்கட்டுகள் கட்டினார்கள். திருக்குளப் பணியும் சிறப்பாகச் செய்து முடித்து நிறைவேறியுள்ளது. சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களை உரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த பணியாகும்.

பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகளின் அருளாசியோடு, சிவப்பிரகாசர் செந்தமிழ் உயராய்வு மையம் என்ற ஓர் அமைப்பைச் சென்னையில் வீரசைவ அறிஞர்கள் ஆ. திருவாசகன், முனைவர் வை. இரத்தினசபாபதி முதலியவர்கள் நடத்தி வந்தனர். மேலும் பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம், மயிலம் என்றொரு அமைப்பை அன்பர்கள் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

மாதந்தோறும் திருவாதிரை நாளில் அடியார்களின் இல்லங்களில் திருமுறை முற்றோதல் இதன் பணியாகும். 27.04.1993-இல் தொடங்கி 9 ஆண்டுகள் 120 திருவாதிரை நாள்களில் 120 திருமுறை முற்றோதல் வேள்விகள் 120 இடங்களில் அடியார்களின் இல்லங்களில் நடத்தி 18.04.2002-இல் 120-ஆவது வேள்வியை நிறைவு செய்தார்கள். 120 நிகழ்ச்சிகளில் முதலாவது தொடக்க நிகழ்ச்சியும் 120-ஆவது நிறைவு நிகழ்ச்சியும் மயிலம் சந்நிதானம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தன. இடையில் பல முறையும் எழுந்தருளிச் சிறப்பித்து ஆசியருளினார்கள். ஒருமுறை அருள்திரு ஊரன் அடிகளார் தலைமை வகித்து ஆசிவழங்கினார். பன்னிரு திருமுறை மன்றத்தாரின் இப்பெரும்பணி பெரிதும் பாராட்டத் தக்கது. பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகளின் ஆசியாலும் ஊக்குவிப்பாலும் இத்தகைய பெரும்பணிகள் பல தொடர்ந்து நடைபெற்று வந்தன.

தமிழ் நாட்டில் முதன்முதலில் தமிழ்க்கல்லூரி 18 ஆம் பட்டம் சுவாமிகள் அருளாசியினால் தோற்றம் பெற்றது. என்பத்தேழு ஆண்டுகளுக்குமுன் 1938-இல் தொடங்கப்பெற்ற ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, இவ்வென்பத்தேழு ஆண்டுகளில் படிப்படியாக வளர்ந்து பல அபிவிருத்திகளைக் கண்டு இன்று ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியாக உயர்ந்துள்ளது. முனைவர் பட்ட ஆராய்ச்சி, கணினி அறிவியல் முதலியன அண்மைக்கால வளர்ச்சி. இவற்றிற்கான கருவிகளும் கட்டடங்களும் புதிதாக அமைக்கப் பெற்றுள்ளன. அண்மைக்காலமாக இக்கல்லூரியில் மிகச் சிறந்த கருத்தரங்கங்கள் நடத்தப்பெறுகின்றன. சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப் பெறுகின்றன. சமயம் இலக்கியம் மட்டுமன்றிச் சமுதாயக் கட்டுரைகளும் ஆய்வுகளும் இடம்பெறுவது ஒரு தனிச்சிறப்பு. மேலும் தமிழ்க்கல்லூரி மட்டுமன்றி ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி என்று ஓர் உயர்நிலைப் பள்ளியையும், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தொடக்கப் பள்ளி என ஓர் தொடக்கப் பள்ளியையும் நிறுவியருளினார்கள். அண்மையில் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப் பெற்றுள்ளது. இவ்வளர்ச்சியில் பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளின் பங்கு அளவிடற்கரியது.

மயிலத்தில் பழைய கல்லூரி உள்ளது. பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அருளாசியோடு

பொம்மையபாளையத்தில் மகளிர் கற்பதற்காக இராஜேசுவரி மகளிர் கலை அறிவியல் கல்லூரி 2007-08-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. ஆதீன வளாகத்தில் புதிய கட்டடங்களுடன் சித்தர் சிவஞானி ஆடவர் கலை அறிவியல் கல்லூரி என்றொரு புதிய கல்லூரி 2008-09-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. புதுச்சேரியிலிருந்து கடற்கரை ஓரமாகவே சென்னைக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள இவ்விரு கல்லூரிகளும் அப்பகுதி மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவு செய்துள்ளன.

முதன்முதலிற் கல்லூரி தொடங்கிய இவ்வாதீனம் நூற் பதிப்பிலும் சிறந்து விளங்குகிறது. 18-ஆம் பட்டம் சுவாமிகள் காலத்திலிருந்தே நூல்வெளியீடுகள் பல வெளிவந்துள்ளன. எல்லாவற்றிலும் சிறந்தது சிவப்பிரகாச சுவாமிகள் நூல்கள் அனைத்தையும் தொகுத்து கற்பனைக்களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் என்று ஒரே புத்தகமாக பதினெட்டாம் பட்டத்துச் சுவாமிகள் 1944-இல் வெளியிட்டார்கள். தனித்தனி நூல்களாக வெவ்வேறு காலங்களில் வெளியிட்டனவற்றை ஒன்றாகச் சேர்த்து ஒரே புத்தகமாக, பெருநூலாக வெளியிட்டார்கள். அதன்பின் நாற்பது ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாதிருந்த அதனை நாற்பது ஆண்டுகளுக்குப்பின் 2004-இல் பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள் இரண்டு புத்தகங்களாக வெளியிட்டுள்ளார்கள். இரண்டு புத்தகங்களும் சேர்ந்து 1500 பக்கங்களைக் கொண்ட இந்நூல் சுவடிகள் பலவற்றை ஒப்புநோக்கி ஆராய்ந்து வெளியிடப் பெற்ற சிறப்பான பதிப்பு. இதன் பதிப்பாசிரியர் தற்போது இருபதாம் பட்டம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் சுவாமிகள் ஆவார்கள்.

பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் 15 ஜூலை 2011 வெள்ளிக்கிழமை அன்று தனது 86-வது வயதில் மகா சித்தி அடைந்தார். இதையொட்டி மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இருபதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளாக பத்தொன்பதாம் பட்டத்து சுவாமிகளின் குமாரர் சிவ. ராஜேந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முடிவுரை

இவ்வாறு மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் பத்தொன்பதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்ப்புலமை,

திருமுறைப்புலமை, வீரசைவப் புலமை மிக்கவராவார். அவர் தமக்கென வாழாத தகைமையராக, அறிவாளியாக, பொது மக்களிடம் பெருமதிப்பு பெற்று அவர்களால் வணங்கத் தக்கோராக இருந்தள்ளார். அவர்களது அருளாட்சியில் ஆதீனம் பற்பல வகையில் அபிவிருத்தியடைந்துள்ளது. தற்போது இருபதாம் பட்டமாகப் பத்தொன்பதாம் பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் அவர்களின் பூர்வாசிரம மகனார் சிவத்திரு குமார சிவ. இராசேந்திரன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளாக அருளாட்சி செய்துவருகிறார். அவரது அருளாட்சியில் சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கிச் செழித்து வருகின்றன.

பயன்பட்ட நூல்கள்

1. Kumaraswamy Achariyar, S., Mailam Thirukkovil Thirumada Varalaru, Srimath Sivagnana Balia Swamigal Tamil College, Mailam.
2. இரவிகார்த்திகேயன். ஆ., இதயவேந்தன். விழி.ப. மற்றும் அன்பாதவன் (தொகு.), விழுப்புரம் மாவட்ட ஆவணக் களஞ்சியம், விழுப்புரம் மருதம், விழுப்புரம்.
3. ஊரன் அடிகளார், வீர சைவ ஆதீனங்கள் கௌமார மடங்கள், இறையனார் பதிப்பகம், சென்னை, 2018.
4. கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956.
5. திருக்கோயில்கள் வழிகாட்டி: விழுப்புரம் மாவட்டம், இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை, 2015.
6. தினமணி, புதுச்சேரி, 17 ஜூலை 2011.
7. துரைசாமி. சி., மயிலம் திருக்கோயில் - திருமட வரலாறு, மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 1958.
8. மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் மகா சந்நிதானத்தின் மணிவிழா மலர், மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 12.08.1954.
9. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்பது, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1988.
10. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி பத்து, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1988.
11. விஜயரங்கம், வே., மயிலம் முருகன் கோயில், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2008.

அருள்மிகு மயிலம் சுப்ரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் காப்புப் பருவத்தில் தொன்மம்

முனைவர் இரா. உஷாராணி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் - 636 005 தமிழ்நாடு, இந்தியா.
அலைபேசி: 8754173476
ushaarivu24@gmail.com

முன்னுரை

பின்னைத்தமிழ் என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். புலவர் தான் விரும்பும் தெய்வத்தையோ, அரசனையோ, சான்றோரையோ குழந்தையாகப் பாவித்து பாடப்படுவது பிள்ளைத்தமிழாகும். அந்த வகையில் புலவர் மு. வல்லாளன் அவர்கள் திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதினம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தில் எழுந்தருளியுள்ள வள்ளி தெய்வானையுடன் உறையும் முருகப்பெருமான் மீது அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை இயற்றியுள்ளார். அப்பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் அழகே வடிவான மயிலம் முருகப்பெருமானை திருமால், சிவன், பிரம்மன், இந்திரன், உமையம்மை, திருமகள், கலைமகள், தமிழ், பாலசித்தர் ஆகியோர் அனைவருமும் காத்தருள வேண்டுமாறு காப்புப் பருவத்தில் மு.வல்லாளன் அவர்கள் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் அக்காப்புப் பருவத்தில் இடம்பெற்றுள்ள தொன்மம் பற்றியச் செய்திகளை மட்டும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்புப்பருவம்

பிள்ளைத்தமிழில் காப்புப்பருவம் என்பது, பாட்டுடைத் தலைவனை எந்தத் தீங்கும் நேராதவாறு காத்தருளுமாறு தேவர்களையும் வேண்டுவதாகும். இக்காப்புப் பருவம்தான் பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களில் முதன்மையானதாகும்.

தொன்மம்

தொன்மம் என்பதற்கு பழமை என்று பொருள். தொல்காப்பியர் தொன்மம் என்ற சொல்லுக்கு 'தொன்மை தானே உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே" என்று குறிப்பிடுகின்றார்.

தொன்மத்தைப் பற்றி விளாடிமிர் பிராப் அவர்கள் "தெய்வத் தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாகும்; அவர்களையும் அவர்களைப் பற்றிய இக்கதைகளையும் உண்மையென்று மக்கள் நம்புகின்றனர்." எனக் குறிப்பிடுகின்றார். (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 150)

திருமால்

காக்கும் கடவுளாக விளங்கக்கூடியவர் திருமால் . கார்மேகம் போன்ற மேனியும், செங்கமலம் போன்ற கண்களும் கொண்டு, அசுரர்களைத் தன் கடைக்கண் பார்வையாலே அழித்து, திரௌபதியின் மானத்தைக் காத்தவர் திருமால். மேலும் தூய அறிவினைத் தரும் பகவத்கீதையை உலகுக்குத் தந்த திருமாலே நீயே உன் மருமகனான முருகப்பெருமானை காத்தருள வேண்டுகிறேன் என்கிறார் புலவர். இதில் 'திரௌபதி மானங் காத்தவனை" (மயிலம்.பிள்ளை.காப்பு.1:3) என்ற வரிகள் தொன்மமாக அமைந்துள்ளன.

திரௌபதி பற்றிய தொன்மக்கதை

மகாபாரதத்தில், சூதாட்டத்தின் மூலம் பாண்டவர்கள் தங்கள் ராஜ்யத்தையும், திரௌபதியையும் கௌரவர்களிடம் இழந்தனர். துரியோதனனின் கட்டளையின் பேரில், துச்சாதனன் திரௌபதியின் ஆடைகளைக் களைந்த போது அவள் கண்ணனை அழைத்து உதவி கோரினாள். கண்ணன் அவளுக்கு முடிவில்லா ஆடைகளை அளித்து அவளைக் காக்கும் தெய்வமாகத் தோன்றினான். கண்ணனின் அருளால் திரௌபதி மானக்காக்கப்பட்டதுடன், பாண்டவர்களின் மானமும் காக்கப்பட்டது. இந்த சம்பவம், கௌரவர்களின் வீழ்ச்சிக்கும், பாண்டவர்களின் வெற்றியின் ஆரம்பத்திற்கும் காரணமாக அமைந்தது.

சிவபெருமான்

எமனை உதைத்து மார்கண்டேயனுக்கு என்றும் பதினாறு வயதினாய் வாழும் வரத்தை தந்தவன் சிவபெருமான். புலி மற்றும் யானையின் தோலினை உடுத்தியவனே. மன்மதனையும், நக்கீரனையும் நெற்றிக் கண்ணால் எரித்தவனே, உமையொரு பாகனே நீயே மயிலம் முருகனைக் காத்தருள வேண்டுகிறோம் என்கிறார்.

மார்கண்டேயன் பற்றிய தொன்மக்கதை

மறலியை உதைத்து மார்க்கண்டனை
என்றும் பதினா றெனவாழ
வரமே தந்தவர் (மயிலம்.பிள்ளை.காப்பு.2:1-3)

மார்கண்டேய முனிவரின் தந்தை மிருகண்டு முனிவர், சிவபெருமானிடம் பதினாறு ஆண்டுகள் மட்டுமே வாழக்கூடிய ஒரு மகனை வரமாகப் பெற்றார். அந்த மகன் தான் மார்க்கண்டேயர். அவருடைய 16வது வயதில், மரணத்தின் கடவுளான யமதர்ம ராஜன் அவரை எடுக்க வந்தபோது, மார்க்கண்டேயர் சிவபெருமானை நோக்கி ஓடி, அவருக்கு உரிய சிவலிங்கத்தைத் தழுவிக்கொண்டார். சிவபெருமானின் அருளால், யமன் மார்க்கண்டேயரைத் தள்ள முயன்றபோது, சிவலிங்கத்தில் மோதிவிட, சிவபெருமான் கோபமடைந்து யமனைத் தாக்கி, அவனை மீண்டும் உயிர் பெற்று வாழ அனுமதித்தார். இதனால் மார்க்கண்டேயர் சிரஞ்சீவியாக (நீண்ட காலம் வாழும் பேறு) அருளப்பட்டார்.

புலி யானைத் தோலினை ஆடையாக உடுத்தியமை
_____"தாருகாவன
முனிவர் விடுத்த புலிகரியை
உரித்துப் போர்த்தி (மயிலம். பிள்ளை. காப்பு.2: 3 - 5)

தாருகா வன முனிவர்கள் மற்றும் அவர்களுடைய மனைவியர்கள், கடவுட் கொள்கையில் நம்பிக்கையின்றி, இறைவனை மதியாது, வேள்வியே தெய்வமென மயங்கி நின்றனர். வேத நெறிகளையும் சில கடமைகளையும் மட்டுமே மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். இறைவனை மதியாத தாருகா வனத்து முனிவர் குடும்பத்தவர்களை நல்வழிப்படுத்தத் திருவுள்ளம் கொண்ட ஈசனார், திருமாலை மோகினி வேடத்தில் வரச்செய்து, தாம் பேரழகு பொலியும் இளைஞனாகக் கோலம் கொண்டு, தாருகாவனத்துள் அழகிய பிச்சாண்டவர் (பிட்சை எடுக்கும் கோலம்) கோலத்தில் சென்றார். பிச்சாண்டவரின் வடிவழகைக் கண்ட முனி பெண்டிர் காதல் வயப்பட்டு, தங்கள் கணவர்களை விட்டு விட்டு, பிச்சாண்டவர் பின்னே சென்றனர். மோகினியின் அழகில் முனிவரும் மயங்கிச் சொல்லழிந்து, ஆசைவயப்பட்டு குழம்பினர். அவர்களுக்குச் சுயநினைவு வந்தபோது, தாமும் தம் மனைவியரும் நிற்கும் கோலத்தை உணர்ந்து சீற்றமுற்று, சிவனாரை அழிக்க அபிசார வேள்வி இயற்றலாயினர். அதிலிருந்து தோன்றிய புலி, யானை, பாம்பு, சூலம், மான், பாம்பு, பூதப்படை, வெண்தலை, உடுக்கை, முதலியவைகளை ஒவ்வொன்றாகச் கொல்லுமாறு ஏவினர். ஆனால் அப்படைகள் பிச்சாண்டவரைக் கொல்லும் ஆற்றல் இல்லாது போய் பிச்சாண்டவருக்கே ஆடையாய், அணியாய், கருவியாய்

அடைக்கலம் புகுந்தன. இறுதியாக அவ்வேள்வியில் தோன்றிய முயலகனையும், வேள்வித் தீயையும் ஏவினார்கள். முயலகன் பிச்சாண்டவரின் திருவடியில் அமர்ந்தான். வேள்வித் தீ, ஒரு திருக்கையில் அமர்ந்தது. ஈசன் யாகத்தீயைக் கையிலேந்தித் திருநடம் புரிய, வந்திருப்பது முழுமுதற்பரமே என்றுணர்ந்த முனிபுங்கவர்கள் தம் தவறுணர்ந்து, நல்லறிவு பெற்று ஈசனை வணங்கினர். சிவபெருமான், தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய முயலகன், வேள்வித் தீ, உடுக்கை, மான், பாம்பு, பூத கணங்கள், புலி, சூலம் ஆகியவைகள் ஆடையாகவும், அணிகலன்களாகவும், ஆயுதங்க ளாகவும் ஏற்றுக் கொண்டார்.

மன்மதனை எரித்தல்

----------"தன் தீவிழியால்
மன்மதன் தன்னை எரித்து (மயிலம்.பிள்ளை.காப்பு.2:5 - 6)

தேவர்களின் வேண்டுகோளின்படி மன்மதன் (காமன்) சிவபெருமான் மீது மலர் அம்பு எய்ததால், தவத்தில் இருந்த சிவபெருமான் கோபமடைந்து தனது நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்து சாம்பலாக்கினார். சிவன் கோபமடைந்ததற்கு காரணம், அவர் கடுமையான தவத்தில் இருந்தபோது அவரது தவம் கலைக்கப்பட்டதே ஆகும்.

நக்கீரரை நெற்றிக்கண்ணால் சுட்டக் கதை

தமிழ்க் கீரனைச் சுட்டவன் (மயிலம்.பிள்ளை.காப்பு.2:7)

திருவிளையாடல் புராணத்தின்படி, சிவபெருமான், பாண்டிய மன்னனிடம் சென்று ஒரு பாடலை இயற்றிக் கொடுத்தார். அப்போது அங்கே இருந்த புலவர் நக்கீரர், இந்தப் பாடலில் உள்ள கருத்து தவறானது என்று கூறி, பெண்களின் கூந்தலில் இயற்கை யாகவே மணம் இல்லை என்று வாதிட்டார். இதைக்கேட்ட சிவன், கோபமடைந்து தனது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அந்த நெற்றிக்கண்ணில் இருந்து வெளியான வெப்பத்தால் நக்கீரர் உடல் எரிந்தது. வெப்பத்தைத் தாங்க முடியாமல் நக்கீரர், பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி தன்னை மறைத்துக் கொண்டார். அனைவரும் இறைவனிடம் வேண்டினர். இறைவன் தன் நெற்றிக்கண்ணை மீண்டும் மூடி, நக்கீரரின் மீது கருணைகொண்டு அவரை குளத்திலிருந்து வெளிவரச்செய்து, இலக்கணத்தை உபதேசித்தார் என்று திருவிளையாடல் புராணத்தில் கூறப்படுகிறது.

பிரம்மன்

திசைகள் எட்டும் வாயாகவும், வேதத்தினை ஓதிடும் அந்தணனாகவும், முப்புரிநூல் அணிந்தவனாகவும், அன்னத்தை வாகனமாக வும் கொண்டு. உயிர்களைப் படைக்கின்ற பிரம்மனே நீயே முருகனைக் காத்தருள வேண்டும்,

அன்னப்பறவையை வாகனமாகக் கொண்டவன்

பால்நிகர் அன்ன வாகனனை (மயிலம்.பிள்ளை.காப்பு.3:7)

பிரம்மா அன்னத்திற்கு கொடுத்த மந்திர சக்தியுடன் தொடர்பு கொண்டது. அன்னமானது பாலும் தண்ணீரும் கலந்த கலவையில் இருந்து பாலை மட்டும் பிரித்தெடுக்கும் தனித்துவமான திறனைப் பெற்றுள்ளது. இந்த திறன், எந்த ஒரு சூழ்நிலையிலும் நல்ல மற்றும் கெட்ட விஷயங்களைப் பிரித்தறியும் திறனைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. இந்த திறனைப் போற்றும் விதமாக, இந்த திறனைப் பிரம்மா தனது வாகனமாக அன்னத்தைத் தேர்ந்தெடுத்தார்.

பிரம்மாவின் நான்கு வேதங்கள்

திக்கெலாம் வாயாய்; வேதந்தினம்
ஒதிடும் நாவைக் கொண்டவனை (மயிலம்.பிள்ளை.காப்பு.3:1 - 2)

படைத்தல் தொழிலை தொடங்கிய பிறகு, பிரம்மாவுக்கு நான்கு தலைகள் ஏற்பட்டன என்றும், ஒவ்வொரு தலையும் ஒரு வேதத்தைக் குறிக்கிறது என்றும் கூறுகிறது. இந்து புராணங்களின் படி, நான்கு வேதங்களும் பிரம்மாவின் நான்கு தலைகளில் இருந்தே வெளிப்பட்டன.

இந்திரன்

கிழக்குத் திசைக்குத் தலைவனாய், ஐராவதம் எனும் யானையையும், உச்சைச்சிரவம் என்ற குதிரையினையும் கொண்டு, அமராவதிபட்டினத்தின் தலைவனாய் விளங்குகின்ற இந்திரனே முருகனை காத்தருள வேண்டும் என்கிறார் புலவர்.

இந்திரன் ஐராவதம், உச்சைச்சிரவம் பெற்ற தொன்மம்

குணதிசைக் கதிபதி வெள்ளைநிறக்
குன்றிலி வருங்கு லிசனுச்சைச்
சிரவ மெனும்பாய் மாவினுடன் (மயிலம்.பிள்ளை.காப்பு.4:1 - 3)

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காக திருப்பாற்கடலைக் கடைந்தனர். கடையும் போது, பல அரிய மற்றும் தெய்வீக பொருட்கள் கடலில் இருந்து வெளிவந்தன. இந்தத்

தெய்வீகப் பொருட்களுள் ஒன்றான, வெள்ளை நிறமும், நான்கு தந்தங்களும், ஏழு தும்பிக்கைகளும் கொண்ட ஐராவதம் என்ற யானை தோன்றியது. அதே போல், ஏழு தலைகளைக் கொண்ட உச்சைசிரவம் என்ற குதிரையும் வெளிவந்தது. இந்திரன், இந்த இரண்டு அதிசயமான உயிரினங்களையும் தனது வாகனங்களாகத் தேர்ந்தெடுத்து, ஐராவதத்தை தனது வாகனம் என்றும், உச்சை சிரவத்தை மற்றொரு வாகனம் என்றும் வைத்துக்கொண்டார். இந்த நிகழ்வு வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

உமையம்மை

சிவனின் உடம்பிலே சரிபாதியை வேண்டி தவம் புரிந்தள். உலக உயிர்கள அனைத்தையும் தாயாக இருந்து ஞாப்பாலை ஊட்டுகின்ற உமையம்மையே நீயே உன் குழந்தையாகிய முருகனைக் காத்தருள வேண்டுகிறேன்.

உமையம்மை சிவனின் இடப்பாகம் பெற்ற வரலாறு

விடையிவிர் சடையனின் மேனியிலே
வேண்டிய செம் பாதியைப் பெற்றவளாம்

(மயிலம்.பிள்ளை.காப்பு.5:1-2)

கையிலாய மலையில் சிவபெருமான் உமாதேவியாருடன் அமர்ந்து விஷ்ணு, பிரம்மா, தேவர்கள், சித்தர்கள், முனிவர்கள் ஆகியோருக்குத் தரிசனம் தந்து அருளிக் கொண்டிருந்தார். வந்தவர்கள் எல்லோரும் சென்றுவிட்ட நிலையில், ஒரு முனிவர் சிவபெருமானை மட்டும் பணிந்து வணங்கி விட்டு செல்ல ஆரம்பித்தார். அதைப் பார்த்த பார்வதி தேவி துணுக்குற்று சிவபெருமானை நோக்கி "சுவாமி! என்னைச் சிறிதும் மதியாமல் தங்களை மட்டும் வணங்கிச் செல்லும் இந்த முனிவர் யார்?" என்று வினவினார். அதற்குச் சிவன், "தேவி! சகலமும் சிவனே, அனைத்தும் சிவமயமே" என்று உறுதியாய் நினைத்துச் செயல்படும் இந்த முனிவன் பிருங்கி என்று பெயர் படைத்தவன்" என்றார்.

"எல்லாமே சிவமயமா இவனுக்கு இவன் செருக்கை அடக்குகிறேன்' என்று எண்ணிய உமை, சிவனும் தானும் தனித்தனியே இல்லாமல் ஒருவராய் இருந்தால் அந்த முனிவன் அப்போ து தன்னையும்தானே சேர்த்து வணங்கியாக வேண்டும் சிவபெருமானிடம் "உங்கள் உடலில் ஒருபாகத்தை எனக்குத் தாருங்கள்' என்று நேரடியாக கேட்க விரும்பாமல் அதற்கு வேறு ஓர் உபாயம் கண்டு பிடித்தார்.

ஒருநாள் சிவன் தனித்து வீற்றிருக்கையில் அவர் பின்புறமாக வந்த உமைவிளையாட்டாய் அவரது கண்களைப் பொத்தினார். அவ்வளவுதான், அடுத்த கணமே அண்ட சராசரமெல்லாம் ஒளியிழந்து எங்கும் ஒரே இருட்டு. உயிர்கள் அனைத்தும் தடுமாறின. தேவர்கள் அனைவரும் விழுந்தடித்துக் கொண்டு அந்த இருட்டில் தட்டுத் தடுமாறி சிவபெருமான் முன்பு விழுந்து வணங்கி உலகை உய்விக்க வேண்டினர். அப்போது சிவன் தனது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து ஒளியை உண்டாக்கினார். ஜீவராசிகள் பிழைத்தன. தான் விளையாட்டா ய் சிவனின் கண்ணைப் பொத்த அது எத்தகைய விபரீதத்தை விளைத்துவிட்டது என்பதை உணர்ந்து பதைபதைத்த உமாதேவி சிவனிடம் தனது அந்த பாவந்தீர பூமிக்குச் சென்று தவம் செய்ய விரும்புவதாய்க் கூறினார்.

அதற்குச் சிவன் புன்னகைத்த படி, "தேவி! எந்தப் பாபமும் உன்னை அணுகாது. இருப்பினும் உலகம் உய்யத் தவம் செய்ய விரும்புகிறாய் என்பது எனக்குப் புரிகிறது. மண்ணுலகில் தவம் செய்யச் சிறந்த இடம் காஞ்சியேயா கும். எனவே அங்குச் சென்று தவம் மேற்கொள்" என்கிறார்.

உமையம்மை தன் பரிவாரங்கள் சூழ கச்சியம்பதி என்று அழைக்கப்படும் காஞ்சிக்குச் சென்று, அங்கு வேதமே மாமரமாகி நிற்க, அதன்கீழ் மணலால் லிங்க உருவைப் படைத்து பெருவெள்ளம் பெருகும்படி சிவன் திருவிளை யாடல் புரிகிறார். எங்கே வெள்ளத்தில் மணல் லிங்கம் கரைந்து விடுமோ என்று அஞ்சி பதைத்த தேவி, லிங்கத்தை கட்டி அணைத்துக் கொண்டார்.

தேவியின் அன்பில் மனம் நெகிழ்ந்த சிவன் அவர் முன் தோன்ற, தேவி அவரைப் பணிந்து, பெருமானே! உமது இடப் புறத்தை தந்து என்னை உமது ஒருபாதியாக்கிக் கொள்ள வேண்டும்!" என்று வேண்ட, அதற்குச் சிவபெரு மான், "உமையே! இங்கு தவம் புரிந்ததால் கண்களைப் பொத்திய வினை கழிந்தது. ஆனால் என் இடப்பாகம் வேண்டும் என்றால் நினைக்க முக்தியளிக்கும் திருவண்ணாமலை சென்று அங்கு தவம் செய். அங்கு அதனை அருள்வோம்" என்று கூறி மறைந்தார்.

தேவிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "தனக்கு உடலில் இடது பாகத்தைத் தர ஈசன் சம்மதித்து விட்டாரே. தவம்தானே செய்ய வேண்டும்? அது என்ன பிரமாதம்? கடும் தவம் புரிந்து இடது பாகத்தையும் பெற்றுவிட்டால். பிருங்கி முனிவர், அப்போது என்ன

செய்வாய் நீ?' என தான் பெறப்போகும் மகத்தான வெற்றியை மனதில் ஓடவிட்டபடி மகா சந்தோஷத்துடன் தன் பரிவாரங்களுடன் விநாயகர், முருகர் உட்பட திருவண்ணாமலை நோக்கிப் பயணித்தார். வழியில் திருவண்ணாமலை நெருங்கும் போது ஓரிடத்தில் சற்று ஓய்வெடுத்தபோது அங்கு முருகக் கடவுள் வாழைப்பந்தல் இட்டார். பின்பு நீராடித் தூய்மை பெற தன் திருக்கரத்திலிருந்த வேலாயுதத்தை ஏவி அருகிலிருந்த மலை ஒன்றினைப் பிளந்து அதனிலிருந்து ஒரு நதியை உருவாக்கினார் ஆறுமுகப்பெருமான். சிவ, பார்வதியின் சேய் தருவித்ததால் அந்த நதி "சேயாறு' என வழங்குவதாயிற்று. "வாழைப்பந்தல்' இட்ட இடம் இன்றும் வாழைப் பந்தல் என்ற திருத்தலமாக விளங்குகிறது. உமையும் மற்றவரும் சேயாற்றில் நீராடித் தூய்மையாக திருவண்ணா மலையை அடைந்தனர். அங்கு ஏற்கெனவே தவம்புரிந்து கொண்டிருந்த கௌதம முனிவர் உமையையும் மற்றவர்களையும் மகா அன்புடன் வரவேற்று உபசரித்து உமையம்மை தவம் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் சிறப்புற செய்து தந்தார். இங்கும் அன்னை மேற்கொண்ட தவத்திற்கு இடையூறு செய்ய மகிடாசுரன் என்ற அரக்கன் தன் பெருத்த சேனைகளுடன் வந்து கலகம் விளைவித்தான். ஆனால் உமை சிறிதும் கலங்காமல் தன் சொரூபமாக துர்க்கையைத் தோற்றுவிக்க அவள் கடும் ஆவேசத்துடன் பாய்ந்து மகிடாசுரனையும் அவன் சேனைக ளையும் துவம்சம் செய்தாள். பின்பு நெடுங்காலம் உமை அங்கு தவம் புரிந்தார். கடைசியில் அந்த நாளும் வந்தது. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தன்று நீராடி அண்ணாமலையானைத் தொழுது நின்றார் உமையம்மை. அப்போது மலைமேல் கோடானுகோடி சூரியர்கள் ஒரு சேர உதித்தாற்போல் ஒரு பெரும் ஜோதிப் பிழம்பு தோன்றியது. தன்னை வணங்கி நின்ற உமையை அந்த மலையை வலம் வருமாறு ஓர் அசரீரி பணித்தது. அது கேட்ட அம்மை தன் பரிவாரங்களுடன் வேதங்கள் முழங்க அண்ணா மலையை வலம் வந்தார்.

பல திசைகளிலும் பணிந்த பின்னர் இறுதியாகக் கீழ்த்திசை வந்து தொழுதபோது சிவபெருமான் ரிஷபத்தின்மீது வீற்றிருந்தபடி காட்சி தந்து உமையம்மைக்குத் தன் உருவில் பாதியைத் தந்து கலந்தருளினார்.

முருகப்பெருமானின் தோற்றம்

சூரபதுமனும், அவனது தம்பியர்களும் உள்ளிட்ட அசுரர்களி டமிருந்து, தங்களைக் காத்துக்கொள்ள, தேவர்களின் வேண்டுகோளுக்

கிணங்கி, சிவன்தன் நெற்றிக்கண் வழி உண்டாக்கிய ஆறு தீப்பொறிகளில் வெளிப்பட்டு, குளிர்ந்த சரவணப் பொய்கையில் ஆறு தாமரை மலர்கள் மீது , உருவெடுத்து, தன்னை வணங்கியவ ராகிய கார்த்திகைப் பெண்கள் அறுவராலும் வளர்க்கப்பட்டவர் முருகப்பெருமான்.

விண்ணவர் வேண்டிட சிவன் விழியில்
மலந்த ஆறுதீப் பொறியாகித்
தண்ணிய சரவணத் துதித் தெழில்சேர்
கார்த்திகை மாதரின் பாலுண்டு
புண்ணிய பாலயர் மயிலமலை (மயிலம்.பிள்ளை.காப்பு.1:9 - 13)

சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகள் அக்னி பகவானால் கங்கை நதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அவை ஆறு குழந்தைகளாக உருவாகின. பிறகு, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு, இணைக்கப் பட்டு முருகப்பெருமானாக அவதரித்தார்கள் என்பதே சிவபெருமானின் ஆறு தீப்பொறிகளால் உருவான கதை ஆகும்.

பழனி மலை

ஞானக்கனியாம் சுவையுள்ள மாங்கனியைப் பெற முடியாத கோபத்தால் பழநி மலையில் சென்று அமர்ந்தவர் மயிலை சுப்ரமணிய முருகப்பெருமான். இதனை,

விரவிய சுவைமாங் கனியாலோற்
மலைமேல் நின்றவன் (மயிலம்.பிள்ளை.காப்பு.2:9 - 10)

ஒரு சமயம் கயிலையில் சிவ பெருமான் உமையம்மையோடு வீற்றிருந்த பொழுது, நாரதர் அங்கே வந்தார். நாரதரோடு கலகமும் சேர்ந்து தானே வரும்? இந்தத் தடவை கலகம் மாங்கனி வடிவில் வந்தது. நாரதர் ஒரு பெரிய மாங்கனியை ஐயன் கையில் கொடுத்தார்.அந்த மாங்கனியைப் பார்த்த விநாயகர், முருகன் இருவரும் தங்களுக்கே அந்தக் கனி வேண்டும் என்றனர்.

உடனே ஐயன் இருவரையும் பார்த்து, "உங்களில் யார் உலகை முதலில் சுற்றி வருகிறார்களோ அவருக்கே இந்தக்கனி என்று பந்தயம் வைத்தார். இதைக் கேட்ட முருகன் இவ்வளவு தானே, இப்பொழுதே ஒரு நொடியில் உலகை சுற்றி வந்து மாங்கனி யைப் பெறுவேன்" என்று தன் வாகனமான மயிலில் ஏறி புறப்பட்டான். தனது வாகனமான மூஞ்சூறி ஏறி உலகை வலம் வர முடியாது என்பதை உணர்ந்த விநாயகர் ஒரு யோசனை செய்தர்.

அம்மை அப்பனை மும்முறை வலம் செய்தார். "ஐயனே உலகை விட தாய் தந்தையர்கள் தானே பெரியவர்கள்? அதனால் உங்கள் இருவரையும் வலம் வந்ததால் இந்த உலகையே வலம் வந்த்தாகத் தானே பொருள்? அதனால் எனக்கே இந்த மாங்கனியைத் தர வேண்டும் என்று வாதாடினார். விநாயகர் சொல்வதில் ஆழ்ந்த பொருள் இருப்பதால் அவருக்கே அந்த மாங்கனியைக் கொடுத்தார் ஐயன்.

உலகைச் சுற்றி விட்டு வந்த முருகன் விநாயகர் கையில் மாங்கனி யிருப்பதைக் கண்டு மிகவும் அதிர்ச்சியும் கோபமும் அடைந்தான். தான் ஏமாற் றப் பட்டு விட்டதாகக் கோபம் அடைந்து மலையில் ஏறிக் குடி கொண்டான். பழம் காரணமாகக் கோபம் கொண்டு அமர்ந்த மலை பழனிமலை யாயிற்று. "முருகா, நீயே ஞானப் பழம் தானே? என்று அன்னையும் அப்பனும் சமாதானம் செய்ததார்கள். முருகன் அமர்ந்த மலை அறுபடை வீடுகளுள் ஒரு படை வீடானது! இப்படி ஐயன் குடும்பத்தில் மாங்கனியின் காரணமாக ஒரு கலகம் பிறந்து ஒரு படைவீடு உருவானது.

முடிவுரை

மனித வாழ்வில் சிக்கல் ஏற்படும் போதும் இறைவனைத் தவிர வேறு எந்தவித ஆற்றலும் துணையாக வராது என்பதை உணர்த்தும் விதமாக காப்புப் பருவம் அமைந்துள்ளது. தொன்மைக் கதைகள் மனிதனை நல்வழிப்படுத்தி சீராக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. தீமை எப்பொழுதும் நல்வழியில் செல்பவரை வெற்றிக் கொள்ள முடியாது என்பதை உணர்த்தும் விதமாக காப்புப் பருவத்தில் தொன்மங்கள் அமைந்துள்ளன.

சிவஞானியே துணை

முனைவர் சி. சுந்தரமூர்த்தி
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
சரசுவதி கலை அறிவியல் கல்லூரி,
ஒலக்கூர், திண்டிவனம் - 604 305.
தொடரபு எண்: 9629628900

முன்னுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம், சைவத் தமிழ் மரபிலும், தமிழ் ஆன்மீக வரலாற்றிலும் மிக முக்கியமான சித்தர் பீடங்களில் ஒன்றாகும். திருக்கயிலாய ஞானபரம்பரையின் வழிவந்த இந்த ஆதீனம், வீரசைவ நெறியை நிலைநிறுத்தி, தமிழ் மொழியை வளர்த்து, மக்களின் வாழ்வியல் ஒழுகலாறுகளைப் போதித்து வருகிறது. மயிலம் ஆதீனத்தின் குருவருள் மரபானது, முருகப் பெருமானின் ஞான வடிவத்தையும், சிவஞானத் தன்மையையும் மையமாகக் கொண்டுள்ளது. இந்த மரபைத் தோற்றுவித்து, வளர்த்தெடுத்தவர் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் ஆவார்.

"சிவனே சிவஞானி " எனும் கூற்றிற்கு இணங்க தனது அருட்செயலால் அன்பர் பெருமக்களை அனுதினமும் போற்றி வழிபடுமாறு செய்து பல அற்புத நிகழ்வுகளை நிகழ்த்தி காட்டியவர்கள் சிவஞானி. இத்தகைய பெருமைக்குரியவர்களைச் சான்றாண்மை மிக்க புலவர் பெருமக்கள் தங்களுடைய கவித்திறத்தால் பாமாலைகளைக் கொண்டு பாடித் துதித்துள்ளனர்.

"கற்பனைக் களஞ்சியம்" நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், அருணகிரிநாதர், வைத்தியநாத தேசிகர், தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், தியாகராஜ கவிராயர், பண்ருட்டி மணி அப்பாவு ஐயர், பாரதிதாசன், ஆ. சிவலிங்கனார், இரத்தின முதலியார், வேங்கடாசல நாயக்கர், உருத்திரசாமி எனப் பலப் புலவர் பெருமக்கள் சிவஞானியின் மகிமைகளைப் போற்றி புகழ்ந்துள்ளனர். அத்தகைய சிறப்பினைப் பெற்ற சிவஞானியின் பெருமைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நின்பேர்
அருளே துணைவே றறியேன் தெருளே!
நினது திருப்பணி நேர்ந்தநாள் தொட்டுக்
கனலின் மெழுகாய்க் கரையும் (சி.பா.தே.நெ. தூது.235 - 236)

என்ற தொடக்கந்தான் சிவஞானியிடம் சிவப்பிரகாசர் தலைவியை நெஞ்சம் அறிமுகப் படுத்தும் முதல் தகவலாகும். முதல் தகவல் அறிவிப்பில் நெஞ்சம் தலைவியை அறிமுகப்படுத்தும் சூழலில் முதலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது என்வாழ்வின் பொருளாக விளங்கிக் கொள்ளும்போது என் வாழ்வின் பொருளாக விளங்கும் சிவஞானியே! எனக் கூறத் தொடங்குகிறது நெஞ்சம்.

இத்தொடக்கம் போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே! என மணிவாசகர் திருப்பள்ளி எழுச்சியில் தொடங்கிய தொடக்கமாய் உள்ளது எனலாம். இறைவனை வாழ் முதல் என்றதான சொல்லாட்சி அதிஅற்புதமானதாகும். வாழ்க்கைக்குப் பொருளாம் முதல் தேவை. அதுதான் வாழ்வையே பொருளுடையதாக்குகிறது. இதனால் அறியப்படும் பேருண்மை யாதெனில் முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை ஸ்ன்னும் வரிகளுக்கேற்ப வாழ்க்கைக்குப் பொருள் தேவை என்றாலும் அப்பொருளால் வாழ்க்கை பொருள் உடையதாக இருக்கவேண்டும் என்பது கருத்தாகும்.

அர்த்தமுள்ள வாழ்வே தோன்றி மறையும் செல்வமாம் பொருளினும் மேம்பட்டது. இப்பொருளாழத்தின் வெளிப்பாட்டையே சிவப்பிரகாசத் தலைவி சிவஞானியே நீயே என்வாழ் முதல் என்பதாகக் குறிக்க "நின்பேரருளே துணை, வேறறியேன், தெருளே" என்றார். தெருளே என்றது தெளிபொருளே என்பதாகும். இங்ஙனம் கூறி வணங்கும் அடிப்படை பீடிகையோடு நெஞ்சம் கூறத் தொடங்குகையில், சிவஞானியே! நினது திருப்பணி நேர்ந்த நாள் தொட்டுக் கனலின் மெழுகாய்க் கரைகிறேன் என்கிறது.

"நினது திருப்பணி என்றதன் செஞ்சொற் பொருளின்பம் சொல்லி மாளாததாகும். பொதுவாகச் சந்நிதி திருப்பணி என்பது "ஆண் பெண் இருபாலார்க்கும் உரியது என்பதால்தான் மணிவாசகர் திருப்பள்ளி எழுச்சியில் எது எமை பணிகொளும் ஆறு? என்பதாகக் கூறியதோடு திருவெம்பாவையில் "கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப் பிள்ளைகாள் என்றும் கோயிற்பணியில் ஆண்பெண் இருவரின் சமன்பாட்டைக் கூறியவாறு சிவப்பிரகாசர் எனும் தலைவி சிவஞானிக்குத் திருப்பணி செய்தலைத் தொடங்கிய நாள்தொட்டுத் தொய்வின்றி நெருப்பில் கரையும் மெழுகென உருகி உருகிப் பணி செய்வான் என நெஞ்சம் - சிவஞானியிடம் பரிந்துரைப்பதாகச் சிவப்பிரகாசர் கூறுவது சமூக அனுபவத்தோடு கூறியதாகக் கருதலாம்.

தியானத்தின் அடையாளமே மெழுகு, அது தன்னைக் கரைத்துக் கொண்டு ஒளிகொடுப்பது போல் சிவஞான தேவருக்குத் தொண்டு செய்யத் தொடங்கியது தொட்டு அத்தொண்டை இடையறவின்றிச் செய்ததாகத் தலைவி பற்றிய அறிமுகம் அதிஅற்புதமாகும்.

இந்த அற்புதத்தின் தொடர்ச்சியாகவே தலைவி இரவென்றும் பகலென்றும் பாராமல் கண்ணீர் சிந்தும் மெய்ப்பாட்டுடன் விரத நிலையில் உண்டி சுருங்கியும் தன்னை அலங்காரப் படுத்திக் கொள்ளும் விருப்பமின்றியும் இருந்து சிவஞானியின் தொண்டு அல்லாமல் வேறு துணையில்லை என்றாற் போலச் சிவஞானியே! உன் மெய்ப்புகழைப் பாடியும் ஆடியும் திகைத்து எப்போதும் இருப்பேன் என்றார்.

...புனல்பெருகு
கண்ணொடு நின்று ஏங்கும் கங்குல் பகலின்றி
உண்ண உடுக்க உவப்பு ஒழியும் பண்ணொடு
பாடும் நினைமெய் பதைக்கும் நினைஎங்கும்
தேடும் உருகும் திகைத்து அலறும் வாடும்

(சி.பா.தே.நெ. தூது. 236-238)

என்றெல்லாம் தலைவி, சிவஞானிமீது கொண்ட பேரின்பக் காதலை அளவற்ற பக்திப் பிரேமையை நெஞ்சுவிடுதூதில் பதிவு செய்கிறார்.

தலைவியைச் சிவஞானிக்கு அறிமுகம் செய்யும் தொடர்ச்சியில் சிவஞானியே! என்னை உம்மிடம் தூதாக அனுப்பும் என் தலைவி இல்லற வாழ்வைச் சுமையாகக் கொள்பவளாய்த் துறவு மனப்பான்மையில் சிவத்தோடு ஐக்கியப்பட விரும்பும் நிலையில் உள்ளதால் அத்தலைவியோடு இரண்றடக் கலத்தல் செய்ய விரும்புவீராக என நெஞ்சம், சிவஞானியிடம் கெஞ்சுவதாகக் கீழ்க்கண்டவாறு காட்சியை அமைக்கிறார் சிவப்பிரகாசர்,

--தன்னோர்
உடம்பும் பொறையாய் ஒழிப்பக் கருதும்
குடும்பம் பகையாகக் கொள்ளும் அடங்க
ஒருபூ தரும் இல்லா துற்ற இடத்தே
வருபூ ரணமா மருவி ஒருபோதும்
வேறிலா தொப்ப விரும்பும் அவ்என்உயிரை
மாறிலா! ஞான மணிவிளக்கே! ஈறிலாச்

செல்வமே! எங்கள் சிவஞான தேவனே!
கல்விகொடு காணாத காட்சியே! புல்லுவாய்
(சி.பா.தே.நெ. தூது. 241-245)

இதில் என் உயிர்போன்றதாகிய என் தலைவி - என நெஞ்சம் தன்னைத் தூதாக அனுப்பிய தலைவியைக் கூறியதோடு அவள் இல்லறம் வெறுத்த நிலையில் துறவறத்தை விரும்பிச் சிவத்தோடு ஒன்றிட விரும்புவதால் சிவ அம்சமான நீ என்உயிராம் தலைவியைச் சேருவாய் எனச் சிவஞானியிடம் உரிமையுடன் கூறுவது நெஞ்சையள்ளும் செஞ்சொற் பொருளின்பமாகும்.

ஏனெனில் இங்ஙனம் கூறியதில்தான் வீரசைவ வித்தகம் வீறு கொள்கிறது எனலாம். அதாவது ஆன்மா சிவத்தை அடைவது சைவக்கொள்கை யானாலும் ஆன்மாவைச் சிவம் அடைவதே வீரசைவம் என்பதால் அக்கொள்கையை விட்டுக் கொடுக்காத வீறுடன் "புல்லுவாய்!" எனத் தூது வந்த ஆன்மா சிவஞானியைத் தலைவியிடம் செல்லத் தூண்டுவதாக உள்ளதால் எந்நிலையிலும் வீரசைவத்தை நினைப்பிக்கும் படியாகவே சிவப்பிரகாசர் சொல்லையும் சொற்றொடரையும் அவற்றின் பொருளையும் வீரசைவப் பூரிப்புடன் கூறினார்.

சிவ அம்சமாய் விளங்கும் சிவஞானியைக் கல்விகொடு காணாக் காட்சியே! என்றது இறையை உணரும் விதத்தைச் சுட்டும் இலக்கண மேல்வரிச் சட்டம் எனலாம். உலகாயதத்திற்கான பற்பல பாங்கான கல்வியால் மட்டும் இறையைக் காண முடியாதாம்! வைரத்தை வைரக் கண்கொண்டு பார்த்தல் போலச் சம்புபக்கச் சாளரத்தின் வழியேதான் சத்தியப் பொருளான சிவத்தைக் காண வேண்டும்.

சம்பக்கம் என்றது சிவஉணர்வின் வழியேதான் சிவத்தை உணரமுடியும் என்பது கருத்து. சம்பு என்ற சொல் சிவத்தைக் குறிப்பது. இதைத்தான் மணிவாசகர் அவனருளாலே அவன்தாள் வணங்கல் என்றார். இப்படியான நினைப்பின் இறுக்கம் அமையுமானால் ஆன்மாவோடு புல்லிய (ஐக்கியப்பட்ட) இறைவன் ஆன்மாவை விட்டுப் போகமாட்டான் என்பது போல இறைவனை விட்டுவிடாதபடி வள்ளுவர் கூறியாங்கு ஆன்மாவும் பற்றற்ற சிவஞானியைப் பற்றியே கிடக்கும்.

அருந்தும் அமுதின் இனியதாய்
அன்போடு அளைந்து படிறு இலதாய்

அறைந்த மொழி தத்துவமசியின்
அன்றி மாறா இயல்பினதாய்ப்
பொருந்து மறையாம் உடம்பிற்குப்
புக்க உயிராய்ப் பவக்கடற்குப்
புணையாய்க் கயிலை வழித்துணையாய்ப்
பொலிந்த திருஅஞ்செழுத்து என்னும்
பரந்த புகழ் மந்திரவேந்து
.....
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவா முத்தம் தருகவே. (சி.பா.தே.பிள்ளைத்தமிழ். 41) .

உலகில் நிறைந்த இருளானது கடல்மேல் எழுகின்ற கதிரவனால் நீங்குதலைப் போன்று தன் வடிவத்தைக் காட்டாத இருளாகிய ஆணவமலம் என்ற பிணியை நீக்குதல் உன்னை அல்லால் இயலாது என்பதை,

தன்நிலையும் எதிர்காட்டாத் தமமாகும் ஆணவநோய்
நின்னை அலது எஞ்ஞான்றும் நீங்குவது தான் அன்றே
(சி.பா.கலம்பகம் 1)

என்ற பாடல் உணர்த்துகிறது.

சிவாநுபூதிச் செல்வர் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிரகாசர் தன் ஞானாசிரியரான ஸ்ரீசிவஞான பாலய தேசிகரின் பெருமைகளைக் கற்போர் நெஞ்சம் மகிழும் வண்ணம் பல நூல்களில் மிகவும் பக்திச் சுவை நனிச் சொட்டச் சொட்டப் பாடி நமக்குக் குருவருள் கிட்டிட வேண்டுமென்கின்ற நோக்கொடு பதிவு செய்துள்ளார். அந்த வகையில் "கலம்பகம்" என்னும் சிற்றிலக்கிய வடிவிலே அவர் யாத்தருளியுள்ள பாக்களின் மையக் கருத்து "சிவனே சிவஞானி" என்பதாகும். இந்நூலுள் தம் ஞானாசிரியரின் பல்வேறு சிறப்பியல்புகள் போற்றியுரைக்கப் பட்டுள்ளதை அறியமுடிகிறது. குறிப்பாக ஞானாசிரியர் அருளும் திருநீற்றின் பெருமை, ஆதீனக் கிளை மடங்கள் பற்றிய குறிப்புகளையும் நம்மால் உணர முடிகிறது.

என்ன தவஉதவி யீதென் றுணர்கிலேன்
மன்னு சிவஞான முனி வந்துற்றான் தன்னைநிகர்
மாசங் கெடுக்கு மலர்த்தடஞ் சூழ் கச்சியிலெம்
பாசம் கெடுக்கும் படி (சி.பா.தே. கலம்.20)

தன்னை ஒத்த சங்குகள் உண்டாகின்ற மலர்களை உடைய குளங்கள் சூழ்ந்த காஞ்சிப் பதியில் எனது பாசத்தைப் போக்க சிவஞான முனிவன் தோன்றினான். யான் சிவஞானியைக் காணப்பெற்ற பேறு முற்பிறப்பில் புரிந்த தவத்தின் பயன் என்று அறிகிலேன். என்னை ஆட்கொண்ட சிவஞானியின் தரிசனம் என்னாலன்று முற்பிறப்பின் தவ வலிமை என்று தன்னடக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

முடிவுரை

ஏதோ பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்று இல்லாமல் சமயச் சிந்தனையையும், சமுதாய சிந்தனைகளையும் மனிதன் தனது உள்ளத்தில் ஆழ்ந்து பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இறைபக்தியுடன் வாழ்ந்து நல் வளமான வாழ்க்கையினைப் பெற்று வாழ வேண்டும். குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. வாழும் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள இறைபக்தி முக்கியப் பங்கு ஆற்றுகின்றது. அவ்வாறு நாம் சிறப்புடன் வாழ்வதற்கு சிவஞானியின் துணையானது நமக்கு வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிபாக உள்ளதைக் காணமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. முனைவர் ச. திருநாவுக்கரசு, சிவஞானியின் மகிமை, மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு மயிலம் - 2024.

சிவலிங்கனார் போற்றும் சிவஞானி

சே. வெற்றிவேல்
முனைவர் பட்டம் ஆய்வாளர்.
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி, மயிலம்

முன்னுரை

திருக்கயிலாய ஞானம்பரம்பரையின் வழி வந்த ஸ்ரீ மயிலம் பொம்மபுரம் ஆதினத்தின் முதற்குரவர் பாலசித்தர் ஆவார் அவருக்கு பின் அம்மரபில் வந்தவர் ஆதி சிவஞானி எனவும். இரண்டாம் பட்டம் குருமகா சந்நிதானம் எனவும் போற்றப் படுபவர் சிவஞான பாலய சுவாமிகள் ஆவார்.

சிவஞானியின் திருகரத் திருநீறு மக்களின் துன்பங்களை போக்கி நல்வாழ்வு அருளச் செய்ததும் கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசருக்கு ஞான உபதேசமும் செய்தார்கள்.

பல நூறு ஆண்டுகள் வரலாறுகள் கொண்ட நம் மயிலம் பொம்புரம் ஆதினம் திருத்தலத்தில் மயிலம் திருத்தலத்தையும் , ஆதி சிவஞானியும் அவர்களையும் கவிச்சக்ரவர்த்தி அருணகிரி பெருமான் அருளிய மயிலம் திருப்புகழ் (பாடல் எண் 546) பாடலில் காண்கிறோம்.

அருணகிரி பெருமானை தொடங்கி 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் அவர்களை தனது ஞான குருவாக சிவஞானி மீது பல பாடல்கள் பாடியுள்ளார்.

அதன் பின் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்திய நாத தேசிகரும் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதிதாசன் வரையிலான மயிலம் முருகனை பற்றியும் ஆதி சிவஞானியை பற்றியும் ஏராளமான பாடல்களும் கட்டுரை தொகுப்புகளும் வந்துள்ளன.

இவ்வாறு பலநூறு ஆண்டுகள் வரலாறு கொண்ட மயிலம் பொம்புர ஆதினத்தின் திருவருளையும் ஆதி சிவஞானியின் குருவருளையும் பாடிய நிலையில்

20 ஆம் நூற்றாண்டின் தோன்றிய தொல்காப்பிய செம்மல் ஆ. சிவலிங்கனார் அவர்கள் (1922 - 2014) ஆதி சிவஞானி

அவர்களை குறித்து பல்வேறு பார்வையில் படைப்புகள் மேற் கொண்டுள்ளார்.

இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம் மற்றும் சமய நூல்களில் ஆழ்ந்த அறிவு கொண்ட தமிழறிஞர் மற்றும் ஆய்வாளர் ஆவார்.

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் ஆதி சிவஞானி அவர்களின் பெயரால் தொடங்கப்பட்ட தமிழ்க் கல்லூரியில் (ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி) (1942 - 1972) பேராசிரியராக பணியாற்றியவர்.

இவர் சிவஞானியை பல்வேறு பார்வையில் ஆராய்ந்து ஆய்வு மற்றும் திறனாய்வு நூல்களையும், சிவஞானி மீது பாடல்கள் இயற்றியும் படைப்பு நூல்களும் , சிவஞானி மீது பாடப்பெற்றுள்ள நூல்கள் மீது உரை எழுதியும் உள்ளார்.

இவர் சிவஞானி போற்றும் விதம் குறித்தும் இவரின் மாறுபட்ட பார்வை குறித்தும் நாம் இக்கட்டுரை வாயில் காண்போம்.

இவரின் ஆய்வு மற்றும் திறனாய்வு நூல்

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழ் நூலில் தமிழ் இலக்கண உணர்வுகள் என்ற ஆய்வு நூலையும் சிவஞானி மீது படைத்துள்ளார்.

சிவஞானி குறித்த உரை நூல்கள்

1. சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சு விடு தூது
2. சிவஞான பாலய சுவாமிகள் தனிப்பாடல்
3. சிவஞான பாலய சுவாமிகள் பஞ்சகம்
4. சிவஞான பாலய சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி
5. சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்
6. சிவஞான பாலய சுவாமிகள் மும்மணிக் கோவை
7. சிவஞான பாலய சுவாமிகள் அட்டகம்

என சிவஞானி மீது எழுதப்பட்ட நூல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார்.

சிவஞானி குறித்து படைப்பு [கவிதை] நூல்கள்

1. மயிலம் கார்த்திகைக் கதம்பம்
2. மயிலக் களவியல் மாலை

3. மயிலத் திருவாயிரம்

4. பாலசித்தர் பாமாலை

5. பொம்மபுரப் புராணனம்

போன்ற நூல்களில் ஆதி சிவஞானி அவர்களை பற்றிய தனிப் பாடல்கள் அமைத்தும் ஆதி சிவஞானி அவர்களை மட்டுமே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சிவஞான பாலய தேசிகர் வாழ்த்து எனும் நூலையும் படைத்துள்ளார்.

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் மீதும் ஆதி சிவஞானி மீது அளவற்ற பக்தி கொண்டிருந்த சிவலிங்கனார் அவர்களின் வீரசைவ நெறியையும், தமிழ் இலக்கிய . இலக்கண பணிகளையும் போற்றும் விதமாக தமிழக புலவர் குழுவில் உறுப்பினராக இருந்த சிவலிங்கனாரை "மயிலம் பொம்மபுர ஆதினத்தின் புலவராக" அமைத்தனர் குரு மகா சந்நிதானங்கள்.

இவரின் உரை திறம்

சிவஞானி மீது இயற்றப்பட்ட நூலான ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மும்மணிக்கோவை எனும் நூலுக்கு இவர் உரை எழுதிய போது.

புமிசைப் புலவனும் புயல்வணத் தலைவனும்
தாம்உணர் வரிய தனிமுதல், அணு முதல்
அனைத்தையும் அங்கத் தமைத்த வங்கியின்
முனைப்பட நின்று மூடரேம் உறுர்தராது.....

எனும் பாடலுக்கு சிவலிங்கனார் அவர்கள் உரைகாணும் போது தூயதான எம் இம் மனிதப் பிறப்பு சிவஞான பாலய தேசிகன் திருவடிகளை அடைந்து வணங்குவதற்கு கிடைத்தது யாம் செய்த புண்ணியமாகும் என்று சிவஞானியின் திரவருளை போற்றி புகழ்ந்துள்ளார்.

பிறந்த பயன்கொள்வார் பேருலகிற் காணிர்
அறந்தழைக்கும் அந்தணனாய் வந்த - திறந்தெரிந் (து)
எங்கள் சிவஞானி எம்மான் கமலப்புத்
தங்கள் முடியணிந்தார் தாம்

பிறந்தனாற் பெறும் பயன் கொள்வார் யார் எனின் சிவஞானியின் சேவடிக் கமலப் புக்களைத் தம் முடிக்கணிந்தவ்வே யாவர் என்பது. என்று சிவஞானியின் திருவடிகளை போற்றி புகழ்ந்துள்ளார்.

குறுக்கக் குறுகும் பெருக்கப் பெருகும்
திறத்தவே லாவெழுத்துந் தேரின் - சிறப்புடைய
ஆதி எழுத்தொழிய ஆங்கன்றோ நீதான் இங் (கு)
ஏதில் சிவஞானி இனிது

சிவஞானியே, சிவாய நம எனும் மந்திர எழுத்தில் முதல் எழுத்தாகிய சி என்பதில்தான் நீயாகிய நான் அடங்கியுள்ளேன்.

தேசன் சிவஞான தேசி யெனை யாண்ட
ஈசன் மயிலத் திளங்கிளிகான் - பாசமுனீர்
வைத்தலிலே வைத்துடையாள் மற்றியாள் என்றெனிலை
மெய்த்திறமே சொல்வீர் விரைந்து

மயிலத்து இளங்கிளிகளே . சிவஞான தேசிகரிடம் சென்று "எம் தலைவியானவள் உம்மிடம் பாசம் கோண்டதன்றி வேறொன்றும் அறியாதவளாய் நும்மையே நினைத்து உருகியுள்ளாள்" என்று என் நிலையை எடுத்துரைப்பீர்களாக என்று சொல்லி ஒரு தலைவி சிவஞானியிடம் தூது விடுத்தான் எழுதியுள்ளார்.

ஆதி சிவஞாணியின் மீது படைத்தல்.

சிவலிங்கனார் அவர்கள் படைத்த மயிலக் களவியல் மாலை எனும் நூலில் ஆதிசிவஞானியின் மீது பாடல் பாடியுள்ளார்கள்.

பாங்கியோடு வருகென்றல் என்ற தலைப்பில் பாடல் எண் 61ல் சிவஞானி மீது பாடல்

பெறுபவர்க் கேற்பப் பக்குவம் அருளும்
பெருநிலை யெர்சிவ ஞானி
உறுமடி யவர்க்கு வேண்டுவ உதவும்
முருகனும் வாழ்மயி லத்தின்
நறுமலர்ப் பொழிலில் நீவர வேண்டும்
நல்லவள் நின்னுயிர்ச் சகியோ (டு)
உறு தொடி நல்லாய் நாளையே யென்னை
உவந்தினி தருளிட வாவே

இப்பாடலில் சிவலிங்கனார் அவர்கள் சிவஞானியை "பெறுபவர்க் கேற்ப பக்குவம் அருளும் பெருநிலை சிவஞானி என்று சிவஞானியின் திருவருளையும், குருவருளையும் போற்றி புகழ்ந்துள்ளார்.

முருகனாலும் சிவஞானியர் அருளாலும் என்றும் இகபர நலங்கள் வற்றா வளமை வளர்வதால், மயிலத்திற்கு மாளுதல் உண்டோ ?

தமிழால் சிறந்த மயிலம் என்பது ஆண்டுள்ள சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கல்லூரியாலும் சிவப்பிரகாசர், அருணகிரிநாதர் சிவலிங்கனார் போன்றொரின் பாடுபொருள் புகழ்ச்சிகளாலும் நன்குணராலம்.

இதனால் இந்நூலைத் "தில்லை பாதி திருவாசகம் பாதி" என்பது போல" வீறு தமிழ் மயிலம் பாதி வீரசைவக் குருவருள் பாதி" எனப் புகழலாம்.

முடிவுரை.

குன்றுதோறாடலில் ஒன்றான மயிலம் " செந்தமிழ் வாடாது கலை சேர்ந்துழியுலாவும் எனக்கூறும் கச்சியப்பரின் கந்தபுராணக் கூற்றுப்படி முருகனும் தமிழும், மலரும் மணமும் போல் பிரிக்க முடியாதவாறாகவுள்ள திருத்தலம்மாகும். இத்திருத்தலத்தில் முருகனுக்கும் தமிழுக்கும் பற்றாசாக உள்ளது மயிலம் - பொம்மபுர ஆதின திருமடம்.

இம்மடாலயத்தில் வீரசைவ நெறிபரப்பும் வீறுடன் வழிவழி யாக வீற்றிருந்தருளும் "சிவஞான பாலய சுவாமிகள்" சுவாமிகள் 18 ஆம் பட்டமாக வீற்றிருந்து அருளாட்ச புரிநது அதனைத் தொடர்ந்து 19 ஆம் பட்டம் சுவாமிகள் சித்தர் சிவஞானி எனும் கல்லூரியையும், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் உயர்நிலைப் பள்ளியும் தோற்றுவித்தார்கள் தற்போதயை 20 ஆம் பட்டத்துச் சுவாமிகள் "சமுதாயப்பணியே சமயப்பணி எனும் நோக்கில்" அருளாட்சி புரிந்துவருகிறார்கள்.

சிவஞான பாலய தேசிகரின் தொடர்புடைய பொம்மபுரம், காஞ்சிபுரம் போன்ற ஊர்கள் சிறப்பிக்கப்படுகின்றன. சிவஞானியைப் பற்றிக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் கூறும் கருத்துகளும் ஆங்காங்கே இவரின் நூலின் பேசப்பட்டுள்ளன.

"குருவமர் பாலசித்தரின் மரபு குறை விலா தாட்சி செய்கின்ற பெருநகர் மயிலம்" என்பது முதலாகப் பல பாடல்களில் சிவஞான பாலய சுவாமிகளின் திருவருள் நிலவும் தெய்வத் திரவருளாகவும், குருவருளாகவும் சிவஞானி அவர்கள் காட்டப்படுகிறார். வீரசைவ த்த்துவ விளங்கங்களும் ஆங்காங்நே சுட்டப்பெறுகின்றன.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணி

கி. மரகதவள்ளி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ் கலை அறிவியல் கல்லூரி
மயிலம் - 604 304

அறிமுகம்

விண்ணோடும், முகிலோடும், உடுக்களோடும், கதிரவ னோடும், கடலோடும் என்பது தமிழ் மொழியின் ஆற்றல் விரிவு ஆழம் பயன் ஆகியவற்றை விண்ணுலக பொருட்களான விண் மேகம் நட்சத்திரங்கள் சூரியன் கடல் ஆகியவற்றுடன் இணைத்து பேசும் கவிதை வரிகளின் பொருள் மயிலம் பொம்மபுர ஆதினத்தின் தமிழ்ப்பணி என்பது மேற்கூறிய கவிதை வரிகளுக்கு பொருத்தமாக உள்ள தமிழ் மொழியைப் பக்தி நெறியோடு சேர்த்து தமிழ் மொழியை வளர்ப்பதை அன்றும் இன்றும் என்றென்றும் நோக்கமாகக் கொண்டது. வீர சைவ மரபைச் சேர்ந்த தொன்மையான ஆதீனங்களில் மயிலம் பொம்மபுர ஆதினமும் ஒன்றாகும். தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதியில் புதுச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள இந்த ஆதீனம் பக்தி நெறிகளை வளர்ப்பதோடு தமிழ் மொழியைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் முக்கிய பங்காற்றி வருகிறது. "இறையனார் களவியல் உரை" முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் என்கிறது. நம் மயிலம் பொம்மபுர ஆதினமோ பக்தி நெறியுடன் தமிழை வளர்த்து வருகிறது. சைவத்தையும், தமிழையும் இரு கண்கள் எனப் போற்றி அருள் ஆட்சி செய்தவர்கள். மயிலம் பொம்மபுரத் திருமடங்களிலும் சைவத்தையும் தமிழையும் வளர்க்க புலவர் பெருமக்களை கொண்டு தானும் ஒரு புலவராகவும் நின்று பல்வேறு சொற்பொழிவுகளைக் நடத்தியுள்ளார்கள். அச்சமயத்தில் தமிழ் மீது கொண்ட பற்றினால் முருகன் செந்தமிழ் கழகத்தை கி.பி.1937ஆம் ஆண்டில் தோற்றுவித்து தமிழ்க் கல்லூரியை 1938 தொடங்க அருளாசி புரிந்தார்கள். அவர்களின் தமிழ் பணியின் சிறப்பினைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

கருச்சொற்கள்

ஆதின பழைய நூல்களை மீட்டெடுத்தல் மயிலம் பொம்மபுர வெளியீடுகள் சமய நூல்களை வெளியிடுதல் ஆய்வு மற்றும் கருத்தரங்குகளில் ஆதரவு இலக்கியங்களை பரப்புதல். - பக்தி மற்றும் மொழி வளர்ச்சி.

பழைய நூல்களை மீட்டெடுத்தல்

பொம்மபுர ஆதீனம் ஓலைச்சுவடிகளில் இருந்த அறிய சைவ இலக்கியங்களை அச்சிட்டு வெளியிடும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் பல நூற்றாண்டுகள் கடந்து மறைந்து போகும் நிலையில் இருந்த தமிழ் இலக்கிய படைப்புகள் இன்று உலகிற்கு வெளிச்சம் கண்டன. பழமையான ஓலைச்சுவடிகளை நூல்களாக வெளியிட்டு தமிழின் மறவையும் இலக்கியத்தையும் பேணுகிறது.

தொன்மையான ஆதீனங்களில் குறிப்பிடத்தக்கதாய் விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதினம் ஆகும். இம்மடம் வீர சைவத்தை முதலாவதாகப் பின்பற்றுகிறது. மேற்படி சைவமும், தமிழும் தழைத்தினிது வளர வேண்டும் என்னும் அருள் நோக்குடன் சமயப் பணிகளையும், சமுதாய பணிகளையும் ஆற்றி வருகிறது. இத்திருமடத்தின் 18ஆம் பட்ட சுவாமிகள் காலத்தில் புலவர் பெருமக்களைக் கொண்டும் தானும் ஒரு புலவராக விளங்கியும் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். தமிழின் மீது கொண்ட அளப்பரிய பற்றினால் கி.பி.1937ஆம் ஆண்டில் முருகன் செந்தமிழ் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி வைத்ததோடு 1938இல் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்னும் பெயரில் தமிழ் வளர்க்கவும் கல்லூரி ஒன்றைத் தொடங்க அருளியவர்.

தமிழகத்தில் உள்ள பழங்கால சைவ இலக்கியங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து அச்சுக்குக் கொண்டுவரும் திருப்பணி தொடங்கி வைத்தது மயிலம் பொம்மபுர ஆதீனம் நல்லாற்று சிவப்பிரகாச சுவாமிகள் நூல்கள் பலவும் மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடாகவே வரப் பெற்றுள்ளன.

சமய நூல்களை வெளியிடுதல்

சமுதாய முன்னேற்றத்தை மையமிட்டு சமயங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சமயங்களில் மிக பழமையானது சைவ சமயம். இச்சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது, சைவம் தமிழோடு தொடர்புடையது. ஆகவே தமிழ் என்று தோன்றியதோ அன்றே சிவ வழிபாடும் தோன்றியது. சிந்து சமவெளி நாகரிகம் நிலவிய மொகஞ்சதாரோ, ஹரப்பா மற்றும் வடமேற்கு இந்தியாவின் தொல்லியல் பகுதிகளில் கிடைத்த சான்றுகள் மூலம் அங்கெல்லாம் சைவம் பரவி இருந்தது என்பதையும் சைவ சமயத்தின் தொன்மையைப் பறைசாற்றுவன ஆகும். நால்வர் போற்றும் சைவத்தில் இருந்து மேம்பட்டது வீர சைவம்.

வீர சைவ தோன்றலாக இன்றளவும் சமூக நலனை முன் நிறுத்தி ஓர் இயக்கமாக இயங்கி வருகிறது. மயிலம் பொம்மபுர ஆதீனம். வீர சைவக் கொள்கைகளை இன்றும் சீரிய முறையில் உலகெங்கும் முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறது மயிலம் பொம்மபுர ஆதீனம்.

மயிலம் பொம்மபுர ஆதீன சீடரான நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் வீர சைவ கொள்கைகளை உள்ளடக்கி ஏராளமான நூல்களை எழுதி உள்ளார். மயிலை மலை பற்றியும் மயிலம் முருகனைப் பற்றியும் முருகனே குருவாக வந்து உபதேசித்துக் கொண்டிருக்கிறார் என்பது பற்றியும் எழுதியுள்ளார். மயிலை மலை திரு கயிலை மலைக்கு நிகரானது மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து பயந்தரக் கூடியது. கயிலை மலைமீது இருக்கும் வள்ளல் என்று சிவஞானி போற்றப்படுகிறார்.

அருட்கவிஞர் அருணைகிரிநாதர் முதல் பாரதிதாசன் வரையுள்ள கவிஞர்கள் பலர் மயிலம் முருகப் பெருமானை போற்றிப் பாடி மகிழ்ந்து பரவசமடைந்துள்ளனர். அவர்களுள் திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் மயிலம் முருகப் பெருமானைப் போற்றிப் பாடி மகிழ்ந்து பரவசமடைந்தார். அவர்களுள். திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் மயிலம் முருகப்பெருமானைச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகிய பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பாடி களித்துள்ளார். இவர் இயற்றிய நூல் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் பிள்ளைத்தமிழ் இலக்கியம் தமிழ் மொழியில் மட்டுமே உள்ள தனிச்சிறப்பு.

குழவி மருங்கினும் கிழவதாகும்

என்று பழம் பெறும் இலக்கண நூலான தொல்காப்பியம் இவ்விலக்கியத்திற்கு இலக்கணம் கூறியது. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் மூலம் மட்டும் 1935 இல் வெளிவந்தது. அதன் பிறகு 2013 ஆம் ஆண்டு குறிப்புரையுடன் கூடிய மதிப்பு வெளிவந்தது. அதே போல் சிவப்பிரகாசரின் பிரபந்த திரட்டு வெளிவந்து 60 ஆண்டுகள் கழித்து 2008 ஆம் ஆண்டு மீண்டும் வெளியானது சமய நூல்களை உரையுடன் வெளியிடுதல்.

தலைமுறை தலைமுறையாகத் தமிழையும் தமிழ் நூல்களை வெளிக்கொண்டு வருவதையும் தம் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் மயிலம் பொம்மபுர ஆதினம் இந்நூலை உரையோடு வெளியிடு வதில் பெருமிதம் கொள்கின்றது. வாழையடி வாழையென வந்த

திருக்கூட்ட மரபில் இருபதாம் பட்டம் சுவாமிகளின் சமுதாயப் பணியும், சமயப் பணியும், இலக்கியப் பணியும் மாபெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளன. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் எனும் நூலுக்கு திரு. வீ. குமாரசாமி அவர்கள் எழுதிய குறிப்புரையுடன் 2013 இல் இருபதாம் பட்டம் சுவாமிகள் வெளியிட்டருளினார்கள். பன்முகச் சிறப்பு மிக்க இந்நூலை பொருத்தமான விரிவுரையுடன் வெளியிட வேண்டும் எனும் சுவாமிகளின் உள்ளடக்கி கையின் வெளிப்பாடு நம் கைகளில் நூலாகத் தவழ்கிறது.

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலின் ஆசிரியர் சோழநாட்டு திருநாரூரில் அபிடேகத்தார் மரபில் வன்மீக நாதர் தேசிகரின் மஹிந்தராகத் தோன்றிய வைத்தியநாத் தேசிகராவார். சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய 17 ஆம் நூற்றாண்டே இவரது காலம். இவரது தந்தையாரும், வழி வழி மரபினரும் சிறந்த தமிழ்ப்புலமை மிக்கவர்களாவர். காதலின் என் நூல் ஆசிரியர் தமிழ் வளர்த்த மரபினராக திகழ்கின்றார்.

வைத்தியநாத தேசிகர் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் ஒத்த பெரும் புலமை உடையவர். சிறந்த இலக்கிய இலக்கணங்களைத் தமிழ் உலகிற்கு கொடையாக தந்த பெருமை உரியவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் கூறும் இலக்கண விளக்கம் எனும் நூலே இவரது இலக்கணப் புலமைக்குச் சான்றாகும். மேலும் நல்லூர் புராணம் வாட் போக்கி புராணம், திருவாரூர் பன்மணி மாலை, பாசவதைப் பரணி எனும் நூல்களும் இவர் இயற்றியது ஆகும். இவரது தமிழ் புலமையின் தொடர்ச்சியில் படிக்காசு புலவர், ஒப்பிலாமணி தேசிகர். சதாசிவ தேசிகர், திருவேங்கடநாதர் மாணவர்களைப் போன்ற பெரும் புலவர்களாக உருவாக்கிய பெருமைக்குரியவர்.

ஆய்வு மற்றும் கருத்தரங்குகளின் ஆதரவு

புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தின் சுப்ரமணிய பாரதியார் தமிழியல் புலம் நட்த்திய சித்தர் இலக்கியம் போன்ற பன்னாட்டு கருத்தரங்குளை ஆதரித்து, அவற்றின் தொடக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்று, கருத்தரங்குக்கு வந்த ஆய்வு கட்டுரைகளின் சுருக்க நூலையும் வெளியிட்டுள்ளது.

இவ்வகையான நிகழ்வுகள் மூலம், தமிழ் மற்றும் சித்தர் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளை, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆதரிவளித்து வருகிறது.

பக்தி மற்றும் மொழி வளர்ச்சி

ஆதினங்கள் தோன்றியதன் முக்கிய நோக்கம் பக்தி நெறியைத் தழைக்க செய்வதும் தமிழ் மொழியை வளர்ப்பது தான்.

மயிலம் பொம்மபுர ஆதினமும் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தமிழ் மொழி வளர்ப்பில் முக்கிய பங்காற்றி வருகின்றது.

வீர சைவ இலக்கியங்களைப் பரப்புதல்

வீர சைவ மரபைச் சேர்ந்த இந்த ஆதினம் தமிழ் இலக்கியங்கள் மற்றும் ஆன்மீக நூல்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு செய்துள்ளது.

இவ்வாறு, மயிலம் பொம்மபுர ஆதினம், தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதிலும், ஆய்வு நிகழ்ச்சிகளை ஆதரிப்பதிலும், தம்ழ் மொழி வளர்ச்சிக்குப் பங்களித்து வருவதிலும் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

முடிவுரை

ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் தமிழ் மொழியையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் ஆதினத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களில் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே அர்ச்சனைகள் நடத்தப்படுகின்றன.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. என்று பிறந்தவள் என்று அறியாத இயல்பினளாம் என்ற பாடல் வரிகள் மகாகவி பாரதியாரின் எங்கள் தாய் என்ற பாடலில் வரும் கவிதை வரிகளுக்கு ஏற்ப பாரதத் தாயின் மிக நீண்ட தொன்மையையும் மயிலம் பொம்மபுர ஆதினத்தின் தமிழ் பணியின் சிறப்பினையும் பறைசாற்றுகின்றது.

பாரதிதாசனின் மயிலம் முருகப் பெருமானும் ஆதீன சிறப்பும்

முனைவர் ஏ. பிரேமா
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்பேடு, சென்னை -107 அலைபேசி:9445770990
epremavenkat@gmail.com

முருகப்பெருமான் குன்றிருக்கும் இடமெலாம் சென்று நின்றிருக்கும் மாட்சியனராதலின், மயிலந்தன் மாமலையிலும், தவக்கோலம், கொண்ட பாலசித்தரின் உளக்கோயில் இறு மேவியதோடு வள்ளி தெய்வயானை சமேத மணக்கோலத்துடன். வீற்றிருந்தருளி அன்பர் துயரங்கள் ஆற்றியும் மாற்றியும் அருள்கின்றான். சீர்மை பொருந்திய இப்பெருமான் மீது பாவேந்தர் பாரதிதாசனால் பாடப்பெற்றது. மயிலம் சுப்பிரமணியர் துதியமுது என்னும் நூலாகும். நுண்மாண் நுழைபுலஞ் செறிந்த இவ்வரு நூல் வழங்கும் காட்சிகள் மிக நீட்சியுடையதாயினும் ஒரு சில சொல் பொருள் ஆட்சிகளையே காட்சிகளாய்க் கொண்டு இதன் மாட்சிமை நுகர்வோம்.

நூல் வரலாறு.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில், திண்டிவனத்திலிருந்து சுமார் 13 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. பாலசித்தர் என்னும் தல முனிவருக்கு அருள்புரிய வந்த முருகப் பெருமான் அவர் தம் 'வேண்டு கோறுக்கு இணங்கி. வீற்றிருந் தருளுகின்றான். கவிதைச் சிறப்பு பக்தி பெருக்கும் நிரம்பியவராய்த் துள்ளும் பிள்ளைமைப் பருவத்தே வாக்கு வல்லமையுற்றதாய். திகழ்ந்த கனக. சுப்புரத்தினம், பெருமான் மீது உளமுருகிப் பாடிய பாடல்களின் தொகுப்பே இசை மலி சுப்பிரமணிய துதியமுது என்னும் நூலாகும்.

நூல் அமைப்பும் பொருளும்

இலக்கணச் செறிவும், இலக்கிய வளமும், சந்த நலமும், பொருட்செறிவும், சொல்லமுதமாகத் திகழ்கின்றன.

1. *விநாயகர் காப்பு வெண்பா, விநாயகர் துதி சிறுபெருமான் துதி, உவமைதுதி 'திருமால் துதி சரஸ்வதி துதி எனத் துதிப் பாடல்கள் அமைந்து வண்ணப் பாடல்களாய் விளங்குகின்றன.*

2 அவையடக்கம், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு மயில மலைச் சிறப்பு எனக் காவியக் கூறுடன் திகழ்கின்றன.

3 முறையீடு, தலைவி தூது போக்கல், மனதுக்கு இனிது உரைத்தல், பாங்கியிடம் கூறல், பாரத நாட்டின் விடுதலை வேண்டல், நெஞ்சுக்கு நீதி கூறல், நெந்சுக்கு தெளிவு கூறல். என்னும் தலைப்புகளில் பல்லவி, அனுபல்லவி சரணம் கொண்டு, பாடல்கள் ராகமும் தாளமும் செறிந்து இன்னிசையுடன் திகழ்கின்றது.

மயில வேலையும், மயிலையும் புகழ்வனாகிய வெண்பாவும் வண்ணப் பாடல் களும், வாழி என்னும் நூலின் ஈற்றில் அமைந்துள்ளன. 1 மலைச் சிறப்பு,.. மாரிமுகப் தபருமை, தெய்வங் காகம், பூராண வரங்கறுகளும், வருணளைகள், . 1. கற்பனைகள், ஏகள், உலகியலும் வழிபடலும் - உறமுகுகும் வேண்டுதல், நெஞ்சுக்கு நீதி கூறுதல் என்பவனவாகச்! சில் தேர்ந்து கொண்டு நூல் ஆயப் தபறுகின்றன. தலைப்புகளை கருத்துக்கள் 7 இவண்

மயில மலைச் சிறப்பு

சீர் மணக்கும் தென் மயில் வெற்பு எனக் காப்புச் செய்யுள் தொடங்குகின்றது தென் என்பதற்கு தெற்கு என்றும் அழகு என்றும். உரையாசிரியர் பொருள் கொள்வர்.

மலையின் சிறப்பினைக் கூறுவது என்னால் இயலாது. ஆயிரம் தலை படைத்தவன் கல்வியில் கரை 1. கண்டவன் என்றெல்லாம் நாகராஜனாகிய ஆதிசேடனைக் சொல்வதுண்டு. அவனாலேயே இதன் சீர்மை சொல்ல இயலாது. என்கிறார் பாவேந்தர்.

முருகோன் அமர்ப்ரரித்த மயிலாசல நகர்ப்புகழை ஓதிடற்கு நற்றம் இல்லை சேடன் நினைக்கினும் தொல்லை. என்பது அப்பாடலடி குந்தர வஞ்சியும் மான் மடந்தையும் இருபுற ஞான வேலேந்தி முருகன் மணக்கோலத்துடன் மேறு திகழ்கின்றான் என்பதை,

குஞ்சரியோர் பாகம் குறுவள்ளி யோர்பாகம்
ஏகாஞ்சிக் கைவேல் கொட்குடானியும் தழைத்தொளிரும்
கருணை நோக்கும் குறிர்வதனம் ஈராறும்
நளிர் பதமும் கொண்ட .

என்ற அடிகளால் அறிகிறோம்.

கோயில் மாசி மகப் பெருமை

மயில் வாகனத்தில் ஆரோகணித்துக் கடல் நீராட்டு விழாவிற்கு மயிலம் முருகன் வந்ததும் அந்தத் தரிசனம் கண்டு பாசபவம் கடந்தோம் என்றும் என்றும் பாடுகின்றார்.

பாசி மயில் மிசை மாசிமகத்தன்று -நேசியருடன் நீ வந்தனை
மாசி மகோத்ஸவ மாமிந்த நாள் எங்கள் மயிலாசன னேவந்தனன்

பாசாதி பந்தம், கடந்தும் கனிந்தோம் அவ் வீசன் தரிசனம் பெற்றதினால் எனவே மாமி இருந்தாலே வீடு வேறு தரிசனம் தின்னம் கடல் ஆடல் கண்டார் மறு உடல் இல்லை என்பது உண்மைதானே தெய்வங்களும் புராண வரலாற்றுகளும் விநாயகர் உமையவள் தரும் முதல் மகன் மலைமத சரியான கஜமுகன் இன்னும் அசுரனையும் ஒரு நொடியில் முடியச் செய்தவன் என்பன. சிவபெருமான்..... நதியோடு பிறை அணிந்திடு பரம்பொருள் தோலுடையான் ஆடரவே தான் அணிவான் திரிபுரம் பொறிப்படும் பரமன் அம்பகம் விரிந்தாலே இப்போவிக்கும் எப்போக்கும் அப்பன் தேவனுக்கும் மாயனுக்கும் கிடைகளாக வஸ்து மாமலைக்குள்ளே முளைத்த ஓர் குடிக்கு நேய வஸ்து யாவருக்கும் மூல வஸ்து என குறிக்கப் பெறுகிறார் உமை:: அட்டத்துக்கு விஞ்ஞாவும் ஈன்ற அன்னை காமாட்சி சிவபெருமான் இடையிலே பரங்குடி இம்மலை மாதவ மணி சீகாழிப் பிள்ளைக்குப் பாலமுகு அருளியவன் என்பன திருமால் பாலாழி மேல் துயில்வோன் வன்துலப மாலையினன் இச்சகத்தினை களிப்புடன் படைத்து அறிந்து அழிக்கும் எயிலோன் யானைக்கு அருளியவன் பாஞ்சாலிக்கு அருளியவன்

சரஸ்வதி

கவிராணி கவிதையின் உறு ஞானம் தரும் இறைவி வெள்ளை கமல மிசை நடிப்பவள் இசை வீணை தனில் அமுதம் வடிப்பவள் கலை தெய்வீகம்

முருகன்

ஆறுபொறி வடிவாய் அவதரித்தான் பிராமண குட்டியானான் சிவனுக்கு உபதேசித்தான் அகத்தியர்க்கு அருளினான் சுறுத்தடித் தான் தாரகலை பிழைந்தான் மயூரன் பாலன் வடிவேலன் பார்வதி குமரன் அதிகுண நீதிபதி குஞ்சரி வள்ளிக்கு அதிக ஒய்யாரன் என்பன.

புராணச் செய்திகள்

கஜேந்திரன் என்னும் யானை முதலை வாய்ப்பட்டு அரியே என்று அடுத்த போது அரை கணத்தில் ஓடி வந்து அக்கரைக்கு மெய்ப்பதும் வழங்கினார் திருமால் என்ற புராண செய்திகளும் இடம் பெற்றுள்ளன

வருணனைகள்

காவியச்சாலையில் இயற்கை வருனைகள் நாட்டுச் சிறப்பின் இடம் பெற்றுள்ளன மழை வெள்ளம் பெருக்கெடுக்கிறது பள்ளம் உண்டாக்கிய இடம் பெறுகிறது மூங்கிலை பெய்கிறது மக்கள் பெருமகிழ்வுகின்றனர் இதன் சாட்சியை சொல்லும் வகை தான் எவ்வாறு மழை முத்துமாலை விழுந்ததாலே வழியற்று ஞாலம் குழுவுற்று மேலே ஒரு நதியின் சாட்சி சொல்லும் வகையறியயேனே மழைவிட்டு நீங்கி பொன் அழைப்புட்டு மூங்கினன் குலமுற்றும் வாங்கிப்பன் மலரிட்டு வேங்கையின் தலைமுட்டு நதி வெல்லமே ஏரி குளம்குட்டை எவையுள்ளமே இரு நிலமுற்றும் குதி கொள்ளுமே இவ்வருணனை சங்க காலத்து அக இலக்கியங்கள் மற்றும் திருமுருகாற்று படையின் பழமுதிர் சோலையின் வர்ணனை பகுதியும் நினைவூட்டுவதாய் உள்ளது விதைத்தல் நடுதல் கலை வெட்டுதல் அங்கே செய்தல் நத்தை தரும் முத்து இவற்றை காலால் மிதித்து அதன் மேலே பகவைப்போர் அறிவாளால் அறுந்தி எரிவார்கள் என வர்ணனை தொடர்கிறது.

விடுதலை வேண்டல் பாரத நாட்டின் விடுதலைக்கு பாரதியார் பராசக்தியிடம் வேண்டியது போல் பாரதிதாசனார் மயிலம் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். அதற்கு காரணமும் உண்டு தேவர்கள் சூரபத்மனிடம் தோல்வியுற்று அவனுக்கு அடிமைப்பட்டும் சிறையில் இருந்தும் வாடி தவித்த போது அவர்களின் தேடுதலை கண்டு உளமிறங்கி அசுரனை அழித்து தேவர்க்கு விடுதலை அளித்த பெருமான் அல்லவா கண்டப் பெருமான் எனவே இங்கும் விடுதலை அளிப்பான் அவன் என்கிறார் கொத்தெடுமை யாய் நலிக்குவார் விண்ணவர் சிறை முற்றும் அவர் மீள அருள்வான் என்றும் வரவிடாதே எமது நாட்டின் கெடுதலை ஈ . க வாழ்க்கையில் நல்வாழ்க்கை பாகும் விடுதலை என்றும் வேண்டுகிறார்.

அன்னியர் ஆட்சியில் பாரதத்தவர் சிலர் கொத்தடிமையானார் சிலர் வேறு தேசம் போனார் அவர் பெருமை கேட்டனர் பல

விதத்தும் சிறுமியுள்ளனர் என்று சொல்லி கழிவிறக்கும் கொள்கிறார் இதற்கு காரணமும் ஊடுவினையோ என்கிறார். பாழ் படச் செய் தாரின் நாட்டை ஊழிவினைதானோ அறியோம் பாரதத்தார் கோத்தடிமை ஆயினார் சிலர் பசி தொலைக்க வேறு தேசம் பயினார் அந்தோ. ஏழ் கடல் செல்லும் கீர்த்தி போயின (து) ஈனர் யாம் எனும் பேரும் ஆயினது என்னும் வேதனை வரிகளை என்னென்னச் சொல்வது?

மயிலம் திருத்தலத்தின் சிறப்புகள்

1. தவத்துக்கு உரிய திசை வடக்கு சூரபத்மன் மயிலத்தில் வடக்கு நோக்கி தவம் இருந்து முருகனின் வாகனமாக மாறியதால் அதே திசையை நோக்கியபடி அமரும் பெருமை இங்கே உள்ளே மயில் வாகனத்துக்கு கிடைத்திருக்கிறது முருகனுக்கு மிகவும் உகந்த நொச்சி மரங்கள் மயிலும் மழையில் ஏராளமாக உள்ளன.

2. மயிலம் சந்நிதியில் செவ்வாய்க்கிழமை தோறும் காலச் சந்தி பூஜையின் போது வேலாயுதத்துக்கு அர்ச்சனை செய்கிறார்கள் அதனால் கடன் தொல்லையுடன் பணம் பிரச்சனை அகலும் என்பது நம்பிக்கை

3. மகிழும் ஆலயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையானது பால சித்தர் தவம் புரியும் காலம் வரையிலும் சூர பத்மன் மலையாக நிலை கொண்டு அங்கு காத்திருந்தான் மயூராசலம் என்ற பெயர் மயிலம் என்று மருவியது என்கிறார்கள்

4. சித்ரா பௌர்ணமி வைகாசி விவாகம் ஆடி 18 ஆவணி அவிட்டம் ஆடி வெள்ளிகள் விநாயகர் சதுர்த்தி நவராத்திரி சரஸ்வதி பூஜை கார்த்திகை தீபம் மார்கழி மாத பூஜை தைப்பூசம் கிருத்திகை சஷ்டி ஆகிய விழா நாட்களில் சிறப்புப் பூஜைகள் நடத்தப்படுகின்றன.

சங்கு கண்ணர்

சங்குகண்ணர் கயிலையில் தான் இருப்பது போன்றே மண்ணுலகிலும் இறைவனுக்கு அருகில் இருக்கும் நிலையை அடைந்திருக்கு வேண்டும் என்று சிவ பெருமானிடம் வேண்டினார் அவர் வேண்டுதலை சிவபெருமான் ஏற்று முருகப்பெருமானின் அருளோடு அவருக்கருகில் சிவயோக சமாதியுற்று சிவலிங்க

ஐக்கியமாகி அடியார்களால் வணங்கப் பெறும் நிலை பெருக என்று வாழ்த்தியருளினார்.

சங்கு கண்ணர் அவதாரம்

அவளியே சங்கு கண்ணர் உலகில் கருவழி தோன்றாமல் திருநீறு உருத்திராங்கும் கல்லாடைம் இட்டலிங்கம் அணிந்த மார்பு செஞ்சடை குண்டலமணிந்த திருச்செவிகள் சின் முத்திரையுடன் கூடிய வலக்கை திருநீற்றுப்பை மாத்திர கோல் இடக்கை வீர சைவ ஆகமங்கூறும் திருவாய் அருந்தழுத்தை ஒலிக்கும் திருநாக்கு ஆகியவற்றுடன் கூடிய திருக்கோளத்துடன் பத்து வயது நிறைந்த பாலகனாக தோன்றினார்.

அப்படிப் பெருமை வாய்ந்த புதுச்சேரியில் ஒரு சித்தரால் உருவாக்கப்பட்டதே மயிலும் பொம்மை போற ஆதீனம் எனும் வீர சைவ மரபைச் சேர்ந்து அதினமாகும் இது சென்னை மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் இடையில் அமைந்துள்ளது. ஆதீனங்கள் அனைத்துமே ஆன்மீகம் மற்றும் பக்தி நெறி போன்றவற்றையும் அவற்றோடு சேர்ந்து தமிழ் மொழியிலும் வளர்க்கவே ஏற்படுத்தப் பட்டன அதனால் தான் ஆதீனங்களில் கட்டுப்பாடுகளில் உள்ள ஆலயங்களில் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன இந்த வழியில் வந்த மயிலும் பொம்மைபுற ஆதீனத்தின் ஆதீனத்தார் உடைய வரலாறும் ஆலய எழுச்சியும் சுவையானது இது ஏற்பட காரணமானவரே தேவலோகத்தில் இருந்து வந்த ஒரு சிவ கணம் என்பது இன்னும் அதிசயமானது.

திருக்கயிலையில் சிவபெருமானுக்கு மேற்கு திசை காவலராக விளங்கிய பூதக்கணங்களுள் ஒருவர் சங்கு கண்ணர் என்பவர் ஆவார் ஒருமுறை அவர் செய்த ஒரு தவறுக்காக சிவ பெருமான் அவரை சபித்து விட்டார் அதனால் மனம் வருத்தி சிவபெருமானிடம் மன்னிப்பு கேட்ட சங்கு கண்ணர் தனக்கு சபா விமர்சனம் கிடைக்க தக்க வழி கூறுமாறு சிவபெருமானிடமே கேட்டார் அதற்கு அவர் தென்னாட்டில் வீர சைவ நெறியை வளர்த்து சித்தர் பெருமைகளை பரப்பி வந்தால் உமக்கு சமம் விமோசனம் கிடைக்கும் என்று சிவபெருமான் அருள் புரிந்தார் அதற்கு சங்க கண்ணர் சம்மதித்தாலும் சிவபெருமானிடம் இன்னொரு வேண்டுகோளையும் வைத்தார் அது என்ன என்றால் கைலாய மலையின் தென் புறப்பகுதிக்கு காவலாக இருந்து

கொண்டு சிவபெருமானின் அருகிலேயே எப்படி தான் அத்தனை நாளும் இருந்தேனோ அதேபோன்ற நெருக்கமான நிலை தான் பூமிக்கு சென்றாலும் கிடைக்க வேண்டும் அங்கும் சிவபெருமானுடன் தனக்கு நெருக்கமான உறவு இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார் அவரது வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் தக்க நேரத்தில் தன்னுடைய குடும்பத்தினராக முருகனின் மூலம் சங்கு கண்ணர் விரும்பியது நிறைவேறும் என்றும் அந்த நேரம் வரும்போது முருகப்பெருமான் அவர் முன் தோன்றி அவருக்கு அருள் புரியும் போது சங்க கண்ணர் சிவலோக சமாதியை அடைந்த சிவலிங்கமாகி தன்னுடன் ஐக்கியம் ஆகிவிட்டார் என்றும் கூறி அவர் புரிந்தார் அதைக் கேட்ட சங்க கண்ணனும் பெருமகிழ்ச்சி அடைந்து பூலோகத்தில் பிறப்பு எடுக்கும் சென்றார்

முடிவுரை

பாவேந்தர் பாரதிதாசனார் நாத்திக கருத்து உடையவர் என்கிற கருத்தை உலகம் முழுவதும் அறிந்த செய்தியாய் இருக்கிறது மிக இளம் வயதிலேயே பானலம் கெழும் இசைஞானம் மிக்கவராக நிலைமையையும் தத்துவ கருத்துக்களும் பக்தியின் அவசியமும் அணிய எளிய உவாமைகளும் , உருணனைகளும் வேண்டுதல்களும் சிறிய மிக மிக அருமையான இந்நூலை யாத்துள்ளமை தமிழார் வளரும் ஆன்மீக நாட்டும் உடையவரும் எள்ளளவும் மறுக்கலாகாத உண்மை சைவ இலக்கியம் தமிழ் இலக்கியம் என்கிற வானப்பரப்பில் என்றும் நிலவிச் செஞ்சிடர் விடும் அற்புத படிப்பாக இத்துதுயமுது விலகுகின்றன சங்க இலக்கியம் புராணச் செய்திகள் அருமை கிரி திருப்புகழ் அண்ணாமலை ரெட்டியார் சென்னிகுளம் பெருமான் மீது பாடிய காவடி சிந்து இவற்றின் சொல் நலமும் பொருள் வளமும் சந்த நயங்களும் நூல் எங்ஙனம் எதிரொலிக்க பெறுவதை நம்மால் உணர முடிகிறது வடசொற்கள் மிகுதியையும் இடம் பெற்றுள்ளன மூர்த்தி சிறிது ஆயினும் கீர்த்தி பெரிது என்பது சாலப் பொருந்தும்.

நூல் விவரங்கள்

- நூல் பெயர்: மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ஆசிரியர்: பாவேந்தர் பாரதிதாசன் வெளியீட்டு ஆண்டு: 1926

சிவஞானியின் திருவடி தீட்சை

முனைவர் சி. அருணா,
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ கணேஷ் கலை & அறிவியல் கல்லூரி, சேலம் -636014.
அலைபேசி-7010492451
aruna.s2585@gmail.com

முன்னுரை

குரு பூசை என்பது சமயம் சார்ந்த திருவடி தீட்சை என்று போற்றப்படுகின்றது. சைவ சமயத்தில் சிவபெருமான் தட்சிணாமூர்த்தி எனும் குருவாகவும், வைணவ சமயத்தில் மகாவிஷ்ணு குருவாகவும், பௌத்த சமயத்தில் புத்தபிரான் குருவாகவும், கௌமாரத்தில் முருகப்பெருமான் குருவாகவும், காணாபத்யாயத்தில் விநாயகப் பெருமான் ஆதிகுருவாகவும் உள்ளதைப் புராணங்கள் எடுத்துரைக் கின்றன. மாதா, பிதா,குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்துகின்றோம். மாதாவை முதன்முதலாக வணங்குவது கருவறை என்ற இருளில் இருந்து வெளிக்கொணர்கிறாள்.பின்பு, அறியாமை என்ற இருளில் இருந்து காக்க பிதாவும், கல்லாமை என்னும் இருளில் இருந்து காக்க குருவும், இறைவன் ஒருவனே ஞான இருளில் இருந்து காக்கவும் மீட்கவும் வல்லவன் என்றும் வரிசைப்படுத்துகிறோம். இறைவனே குருவாக வந்து சீடரை ஆசீர்வதிப்பதாகவும், அவ்விதம் வரும் இறைவனைக் குருமூர்த்தம் எனவும் அழைக்கின்றோம்.அத்தகைய சிறப்புடைய குருவின் திருவடி தீட்சையின் சிறப்புகளையும், பெருமைகளையும் காண்பதே கட்டுரையின் நோக்கமாகும்.

திருவடி தீட்சை என்பதன் பொருள்

திருவடி தீட்சை என்பது ஞானகுரு ஒருவரால் பக்தரின் தலையில் தனது திருவடியைப் பதித்து,அவரது உள்ளத்தில் உள்ள அழுக்கை கொளுத்தி,பக்குவப்படுத்தி,புதிய உணர்வை பெறுவதற்கு அளிக்கும் ஆன்மீக இணைப்பாகும். இறைவன் பக்தரின் கண்களில் உள்ள ஒளியைத் தூண்டி ஆன்மாவில் புதிய உணர்வைப் பெறச் செய்வதைத் திருவடி தீட்சையாகும்.உடலுக்குச் செய்யப்படும் சடங்குகள் போல ஆன்மாவிற்குச் செய்யப்படும் சடங்கு தீட்சை என்பதாகும்.

தீட்சையின் நோக்கம்

சீடன் தன்னை வள்ளலாரின் பிள்ளையாக உணர்ந்து தன் கண்ணின் ஒளியை உணர்ந்து தவம் செய்யத் தொடங்குகின்றான்

அத்தவத்தின் பயனாக உள்ளத்து அழுக்கை தீயில் இட்டு கொளுத்துவது போல ஆணவம் கன்மம் மாயை போன்ற மூன்று மலங்களையும் அளித்து பேரின்ப வாழ்வை அடைவதே தீட்சையின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நில மிசை நீடு வாழ்வார் (குறள்-3)

அன்பர் நெஞ்சமாகிய மலரின் மேல் சென்று வீற்றிருப்பவ னுடைய சிறந்த திருவடியைச் சேர்ந்தவர்களே உலகில் நிலையாக வாழ்வார்கள் என்று எடுத்துரைக்கின்றார்.

குருவின் மகிமை

குருவின் மேன்மையை உணர்த்த, குரு மந்திரத்தில்,

குரு பிரம்மா குரு விஷ்ணு
குருதேவா மகேஸ்வர
குரு சாஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ (குருமந்திரம்-1)

என்று மந்திரத்தினால் குருவை வணங்கி அவரது அருளை பெறுகின்றோம். குருவருள் இல்லையேல் திருவருள் கிடைப்பது கடினம்.குருவின் பாத சுவடுகளை வணங்கினாலே கடவுளின் பரிபூரண ஆசையைப் பெறலாம். குருவின் பாதத்தீர்த்தமே கங்கை. கங்கையில் நீராடினால் பாவங்கள் எவ்விதம் கரையுமோ, அதுபோல குருவானவர் பாவங்களில் இருந்து நம்மை நல்வழிப்படுத்தி பக்தரின் மனதில் ஞான ஒளியை ஏற்றி ஞானத்தை அடையச் செய்வார். இறைவனுடைய அருளாலே பக்தனுக்கு ஞானத்தை அளிப்பார். இவ்வாறு செய்யும் முறையையே தீட்சை என்பர். தீட்சையில், ஆதார தீட்சை,நிராதார தீட்சை என்று இரு வகைப்படுத்துவர்.

தீட்சை அளிக்கும் சிவாச்சாரியாரின் தகமைகள்

தீட்சை அளிக்கும் சிவாசாரியார் சமய தீட்சை, விசேட தீட்சை,நிர்வாண தீட்சை ஆசாரியாபிடேகம் எனும் நான்கையும் பெற்றவராக இருக்க வேண்டும்.அவை,

சமய தீட்சை

சைவ சமயி ஆகும் உரிமையைத் தருவது சமய தீட்சை எனப்படும். சமய தீட்சை பெற்றவன் 'சமயி' என்ற பெயர் பெறுகிறான். சிவபெருமானின் பஞ்சாட்சரத்தின் மூலமாக அதனை

உணர்ந்து கணிக்கும் உரிமையையும், சரியை பாதத்தில் நிற்கும் உரிமையையும் கிடைக்கும் சிவபெருமானின் முதன்மையை உணரும் நிலை உண்டாகும்.

விசேட தீட்சை

சிவலிங்கத்தைப் பூசை செய்வதற்கான தகுதியைப் பெற்றவர் விசேட தீட்சை என்பர். விசேட தீட்சை பெற்று அதன் வழி நிற்க, ஆணவம் என்ற அகந்தை நீக்கி சிவனைச் சிவலிங்க வடிவுகண்டு வழிபட்டு கிரியை நெறியில் விருப்பு உண்டாகும். சமய தீட்சை பெற்றுக் கொண்ட ஆசாரியர்கள் அல்லது மற்றவரிடம் தீட்சை பெறலாம். சிவலிங்க மூர்த்திக்கு அகப்பூசை, புறப்பூசை செய்யும் முறைகளோடு யோக முறை செய்யும் உரிமையையும் பெறலாம்.

நிர்வாண தீட்சை

சமய தீட்சையையும், விசேட தீட்சையையும் இறுதியாக பெறும் தீட்சை நிர்வாண தீட்சை என்பர்.அத்துவாக்களை அடக்கும் கலையையும், முப்பொருள் உண்மையை உணரும் தன்மையையும், உயிரை ஞான நிலைக்கு உயிரை உய்யச் செய்யும் நிலையையும், ஞானாசிரியர்களிடமிருந்து கிடைக்கும். அவை, சத்தியம் நிவாரண தீட்சை, அசத்தியோ நிவாரண தீட்சை என இரு வகைப்படும்.

ஆசாரிய அபிடேகம்

நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குரு பட்டம் தரிப்பதற்காகச் செய்யும் கிரியையே ஆசாரிய அபிஷேகம் என்பர். அதன் பின் பிறர்க்குத் தீட்சை கொடுக்கவும், பதார்த்த பூசை செய்யவும் தகுதி உடையவர்களாக விளங்குவர்.

சிவாச்சாரியார்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

திருமணம் முடித்து இல்லறம் நடத்துபவராக இருத்தல்

உடல் உள்ளம் குற்றமற்றவராக இருத்தல்

கல்வி அறிவு ஒழுக்கம் மேம்பாட்டுடன் இருத்தல்

சீடர்களுக்கு ஒழுக்கத்தையும் சைவ சமய பாரம்பரிய

நெறிகளையும் போதித்தல்

16 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்டவர் ஆக இருத்தல்.

தீட்சையின் வகைகள்

ஆசு + இரியர் =ஆசிரியர் ஆசு என்பது குற்றம், இரியர் என்பது களைபவர் என்றும்,

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைப்பவன் நூலுரை ஆசிரியனே (நன்-26)

என்று ஆசிரியர்க்குரிய இலக்கணங்களை நன்னூல் எடுத்துரைக் கின்றது.

ஆதார தீட்சை

இறைவன் ஞானாசிரியர் ஒருவர் மூலம் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களை உடைய மனிதர்களுக்கு அளிக்கும் தீட்சை ஆதார தீட்சையாகும்.

அவை, நயன தீட்சை, பரிச தீட்சை,வாசக தீட்சை ,மானச தீட்சை, சாத்திர தீட்சை,யோக தீட்சை, ஒளத்திரி தீட்சை என ஏழு வகைப்படும்.

நயன தீட்சை

குரு தன் பார்வையால் சீடனுக்கு அருள் செய்தல். திருத் தோணிபுரத்திலே சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு அருளியது நயன தீட்சை.

கண்ணினா லின்பங் கண்டொளி பரக்குங் (தேவாரம் -4071)

கண்மணி ஒளியை எண்ணி உணர்ந்து ஞான தவம் செய்தால் இறைவனின் பேரின்பஒளியை அடையலாம் என்று சம்பந்தர் கூறுகின்றார்.

பரிச தீட்சை

குரு தனது திருக்கரங்களினால் சீடரைத் தொட்டு ஆசீர்வதித்து சீடனை ஞானம் அடையச் செய்தல்.திருவெண்ணைநல்லூரில் சுந்தரமூர்த்தியாருக்குச் சிவபெருமான் அருளியது பரிச தீட்சை.

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம்(ம்) அது பணியாம்!
ஆதன் பொருள் ஆனேன்; அறிவு இல்லேன்; அருளாளா!
தாது ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்
ஆதி! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே?

அருளாளனே, பூக்களின் மகரந்தம் நிறைந்த பெண்ணை யாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் அருள்துறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள முதல்வனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது, "அடியவன்

அல்லேன்" என எதிர் வழக்குப் பேசியது தவறு தான், அச்செய்கையைச் செய்தமையால் அறிவில்லாதவன் ஆயினேன்; அதனால், "ஆதன்" என்னும் சொல்லுக்குப் பொருளாயினேன்; ஆயினும், என்னை இகழாது உன் திருவடியை வணங்கப் பெறும் பேற்றினை அளித்தருள வேண்டும்.

வாசக தீட்சை

குரு மந்திரங்களையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் பொருந்து மாறும் மாணவனுக்கு உபதேசிப்பது வாசகதீட்சை. திருப்பெருந் துறையில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் அருளியது வாசகத் தீட்சை

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க (சிவபுராணம்-1)

மானச தீட்சை

குரு தன்னைச் சிவமாகச் பாவித்து,அந்த பாவனையுடன் மாணாக்கனது ஆன்மாவை உடலினின்று பாவனையிலிருந்து கொண்டு தனது ஆன்மாவிற்குச் சேர்த்து சிவமானதாக பாவித்து மீள ஆன்மாவை அவனது உடலில் சேர்ப்பது மானச தீட்சை.

சாத்திர தீட்சை

ஒரு மாணவனுக்கு சிவாகமங்களையும், திருமுறைகளையும் ஓதுவித்தல், சாத்திர தீட்சை என்பர். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் பதி,பசு, பாசம் போன்ற வற்றை விளக்கியது சாத்திர தீட்சை

யோக தீட்சை

குரு மாணவனுக்குச் சிவயோகம் பயிலச்செய்தல் யோக தீட்சை எனப்படும். சிவபெருமான் சனகர், சனாதனார், சனந்தனர்,சதனகுமாரர் ஆகிய நான்கு பேருக்கும் மெய்மையை புரிய வைத்தமை யோக தீட்சை ஆகும்.

ஔத்திரி தீட்சை

ஆன்மாக்களாகிய உயிர்களை வீடுபேறு அடையும் பொருட்டு ஆசாரியர்களால் அக்னி காரியத்துடன் செய்யும் அங்கி தீட்சை ஔத்திரி தீட்சை என்பர். இவை, ஞானவதி கிரியாவதி என இரு

வகைப்படும். எவையேனும் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென சிவாகமங்கள் எடுத்துரைக்கின்றன.

நிராதார தீட்சை

இறைவன் வேறொரு ஆதாரத்தையும் வேண்டாது. தானே குருவாய் நின்று ஆணவம்,கன்மம் ஆகிய இரண்டு மலங்களை உடைய பிரளயகலருக்கு முக்தி அளிக்கும் தீட்சை நிராதார தீட்சையாகும்.

பழியிலா அறங்கள் பல பயின்றாலும் உன்திருவாய்
மொழியினால் அன்றிவான் முத்தி நிலை கிடையாது
(சி. ம -பக்-139)

குரு பக்தியும் குரு உபதேசித்த உபதேச மொழியும், ஒரு மனிதனை மேம்படுத்தும். உலகில் உள்ளவற்றை ஐம்பொறிகளுள் கண்களால் மட்டுமே காண இயலும். பிறவற்றால் காண முடியாது.பல அறங்களை ஒருவன் செய்தாலும் குருவின் உபதேச மொழியைக் கேட்டாலன்றி வீடுபேறு கிட்டாது. அத்தகைய சிறப்புடைய சிவஞானியின் உபதேச மொழி வீடுபேறு உண்டாக்க வல்லது என்பதை உணர்த்துகின்றார்.

முடிவுரை

இறைவன் திருவடிகளை வணங்கி வீடுபேறு அடையும் வழிகளையும், இறைவனின் திருவடிகளைப் பற்றினால் ஆணவம்,கன்மம்,மாயை எனும் மூன்று மலங்களில் இருந்து விடுபட்டு முத்தி அடையும் தன்மைகளையும் அறிந்து இறைவனின் திருவடியை அடைய வேண்டும். குருவானவர் தெய்வதன்மை வாய்ந்தவர் என்பதை அறிந்து வாழ்வில் ஞானஒளியைப் பெற வேண்டும்.அறத்தின் வழியே சீடன் குருவிடம் பெற்ற அருள் போன்ற பண்புகளைப் பெற்று வாழ்வில் இறைவனின் திருவடியினைச் சென்றடைய வேண்டும்.

துணை நூற் பட்டியல்

1. ச.திருஞானசம்பந்தம், நன்னூல் (எழுத்து), கதிர்பதிப்பகம், திருவையாறு, முதற்பதிப்பு-2020.
2. மு. இராமலிங்கம், திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகம் மூலமும் உரையும், லிவிரிபப்ளிகேஷன் சென்னை, முதற்பதிப்பு-2021.

3. மா.செந்தில்தமிழன் சிவபுராணம் திருவாசகம் செம்மை பதிப்பகம்,முதற்பதிப்பு 2021.

4. குருபகவான் மந்திரம்,கடலங்குடி பப்ளிகேஷன், சென்னை நான்காம் பதிப்பு-1994.

5. இரா. நாராயணசாமி, திருக்குறள் இனிய உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட், சென்னை முதற்பதிப்பு-2000.

6. பி. நடராசன், பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், முல்லை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2020

7. ச.திருநாவுக்கரசு சிவஞானியின் மகிமை மயிலம் பொம்மைபுர ஆதீனம் முதற்பதிப்பு -2024.

புலவர் போற்றும் சிவஞானி

கி. பவானி
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை மற்றும் அறிவியல்
கல்லூரி மயிலம்., தொடர்பு எண் - 8015294925
bavani0112@gmail.com

முன்னுரை

பஞ்சபூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் மற்றும் சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் இவற்றோடு கூடிய எட்டு வடிவங்களை உடைய முருகப்பெருமான் மயிலத்திலும் பொம்மபுரத்திலும் உறைந்து வீர சைவத்தை வளர்த்திடும் செம்மை நலமாக விளங்குபவர் சிவஞானி. இவர் மூன்று வினைகளைச் சுட்டு பொசுக்கிட மூவா மருந்தென நெஞ்சில் நிறைந்திருப்பவர். சிவனின் உருவமானவர். திருவருளைக் குருவருளாகப் பொழியும் செல்வமானவர். இத்தகைய தன்மையுடையவர் சிவஞானி.

சிவஞானியைப் பாடிய புலவர்கள்

- நல்லாற்றூர் சிவப்பிரகாசர்
- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
- பாம்பன் சுவாமிகள்
- காயாறு ஞானசுந்தர சுவாமிகள்
- ஆ. சிவலிங்கனார்
- தியாகராசக் கவிராயர்
- பையனூர் வரதராஜ பிள்ளை

முதலான புலவர்கள் சிவஞானியின் மீது நூல்கள் பல இயற்றி, அவர் பெருமையை உலகறிய செய்துள்ளனர். அவற்றில் சிலவற்றை இக்கட்டுரையின் வழி காணலாம்.

நல்லாற்றூர் சிவப்பிரகாசர்

சிவப்பிரகாசர் தனது ஞான ஆசிரியராகிய சிவஞான பாலய சுவாமிகள் மீது

- நெஞ்சுவிடு தூது

- *தாலாட்டு,*
- *கலம்பகம்,*
- *பிள்ளைத்தமிழ்,*
- *திருப்பள்ளி எழுச்சி*

என ஐந்து நூல்கள் பாடியுள்ளார்.

உலகில் உள்ள மலைகளை எல்லாம் கைலாய மலையாகவும், சூரியனைச் சந்திரனாகவும், கடல்களைத் திருப்பாற்கடலாகவும், யானைகளை இந்திரனது ஐராவதமாகவும், பாம்புகளை ஆதிசேடனாகவும் மாற்றுகின்ற மிக்க புகழுடையவர் சிவஞானி என்று குறிப்பிட்டுள்ளார் (சி.பா.தே.க)

சிவஞான தேசிகனே! அருள் மலையே! சகலர் என்னும் பசுக்களை மூலாதாரம் என்னும் தொழுவிடை,மலமாம் தாம்பினால் ஆர்த்து நுகர்வுமில்லாது நிறுத்திப் பின்னர் சலையாம் சரத்தால் கட்டு அவிழ்த்துவிட்டு நனவுயென்னும் புரத்தில் ஓட்டி விடயமாகிய புல்லை மேய்த்து, எமக்கு அமுதம் அருள்பவனே! என்று கூறுகிறார் (சி.பா.தே.தி.எ).

சிவஞானி கடவுள் உண்மை உணராத பாவிகளுக்கும், மதிக்க வேண்டியதை மதியாதவர்க்கும், தன்னுடைய பக்தர்களுக்கும் தம்மை குருவாக ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அவர்களது உணர்வுகளோடு கலந்து ஒப்பற்ற நன்மையாகிய திருவருளைப் புரியும் மேலான குணம் கொண்டவர்.

..... ஒரு நன்றி
பாவிக்கு உதாசனர்க்குப் பித்தர்க்கு சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையான் (சி.பா.சு.நெ.தூ.21)

காயாறு ஞானசுந்தர சுவாமிகள்:

காயாறு ஞானசுந்தர சுவாமிகள், சிவஞான பாலய சுவாமிகள் மும்மணிக்கோவை என்னும் நூலில் சிவஞானியின் திருவடியாகிய கமலப் பூவினைத் தம் முடிக்கணிந்தவரே இவ்வுலகில் பிறவி எடுத்த பயனை அடைவார் என்றும் சிவஞானியின் பக்தர்களின் திருவடி திருநீற்றைப் பூசுதலை அறியாத புலவர்கள், தாமாக எதையும் உணரும் தகுதியற்றவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார் .

பிறவி என்னும் துன்பக் கடலுக்குப்படக்காகச் சிவஞானியின் திருவடிகளைச் சிக்கென பிடிக்கவில்லை என்றால் வினையாகிய சேற்றில் ஆசை என்னும் சுழல் ஆழ்த்த துன்புறுவர் என்பதை

ஒருபா லயத்தரு திருவடி சிக்கெனக்
கொள்ளில ராகில் கள்ள வெவ்வினைக்
கரும்சேற் றோசைப் பெருஞ்சுழல் அழுத்த
உய்கில ராகி நைவர் (5)

என்னும் பாடலின் வழி குறிப்பிடுகிறார்.

பையனூர் வரதராச பிள்ளை

கவலை மிக்க மனமே சிவபெருமான் தனது பிறைதாங்கிய சடை முடியையும், உமையொரு பாகத்தையும், மான், மழு முதலிய ஆயுதங்களையும் புலித்தோல் ஆடையையும், நெற்றிக்கண்ணையும் மறைத்துக் கொண்டு சிவலிங்க தாரணம் கொண்டு மயிலத்தில் எழுந்தருளி இருக்கும் இயல்பை மெய்ஞானியர்கள் காணலாமே தவிர திருமால் முதலிய தேவர்களும் கண்டு கொள்வதற்கு எளிதாகுமோ? சொல்வாயாக!

தாரணம் பரித்து மயிலம் வீற்றிருக்கும்
தன்மை மெய்ஞ் ஞானியர்க் கன்றி
நாரணன் முதலோர் கண்ணுதற் கெளிதோ
நவிலுதி கவலை கூர் நெஞ்சே (பதி. அந்.24)

பண்ணுருட்டி - மணி_ சுப்பிரமணிய ஐயர் :

பண்ணுருட்டி - மணி - சுப்பிரமணி ஐயர் அவர்கள் சிவஞான பாலய சுவாமிகள் மீது

1. உயிர்வருக்க மணிமாலை,
2. நவமணிமாலை,
3. அட்டகம்,
4. பஞ்சகம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார் .

பொறாமையை அழித்தவர்க்கே அங்கலிங்க நிலையைத் தெரிவிக்கும், செம்பொருளே! ஆராத்தியகுல மரபு சிறப்புற வருகின்ற ஒளிவிளக்கே! ஒலிமிக்க வாத்தியம் போல கடலானது கலிங்கு ஒலிக்கின்ற பொம்மய பாளையத்தில் எழுந்தருளி இருக்கும் தூயவனே நல்ல சிவன் ஞான பாலய தேசிக மணியே! என்று போற்றுகின்றார்.

ஔவியம்அ வித்தவர்க்கே அங்கலிங்க நிலை தெரிக்கும்
செவ்வியஆ ராத்திய கும்சிறக்க வருதீபகமே" (சி.பா.தே.சு.உ.மா.12)

திருஞானசம்பந்தர் தம் திருமணத்திற்கு வந்தவர் யாவருக்கும் சிவபதம் கொடுத்ததுப் போல, நின்னை அடைந்த அடியவர்களுக்கு என்றும் அச்சிவபதத்துக்குரிய நெறியை அருள் செய்கின்ற சிவஞான பாலய சுவாமிகள் எனக் கூறியுள்ளார். (சி.பா.தே.சு.ந.மா.)

சிவஞான பாலய சுவாமிகள், மடாலயத்தில் கூடிய சித்தர் முதியோரை சமாதி நிலையை அடையச் செய்தும் மறை முதலிய சாத்திர நூல் விசாரணையில் மூழ்கிப் பேர் ஆரவாரம் இடும் அடியவர்களுக்கு மூலமலம் போக்கியும் அருட்செயல் புரியும் இறைவன் ஆவான் (சி.பா.தே.சு.அ) என்று கூறுகின்றார்.

முடிவுரை

மண்ணுலக இன்பமும் விண்ணுலக சொர்க்கமும் அளிக்க வல்ல சிவஞானியின் திருவடித் தாமரை மலர்களை வணங்கிய அடியவர்களுக்கு இறைவனின் அவதாரமாக இப்பூவுலகில் அவதரித்து ஒப்பற்ற நன்மையாகிய இறையருளைக்குருவருளாக வழங்கி பொம்மயபாளையத்தில் நிலையாக வீற்றிருக்கும் போற்றுதற்குரியவர் ஆவார்.

சதமணி மாலையின் சங்கமம்

முனைவர் பா. சரளாதேவி,
உதவிப்பேராசிரியர்,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி.
devysaraham@gmail.com

ஆன்மீக ஞானத்தையும், தமிழின் சிறப்பையும் மாணவர்களுக்கு உணர்த்த விரும்பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை உருவாக்கியவர் தொன்மையான ஆதீனங்களில் ஒன்றான மயிலம் ஆதீனத்தின் தலைவரான சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். சுவாமிகளின் அர்ப்பணிப்பு தொண்டே கல்லூரிகளின் தோற்றமும், பல படைப்புகளும் தோன்ற காரணம் எனலாம். மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தலைவரான இவர், அகத்திய மாமுனிவரின் ஆசியின் காரணமாகத் தோன்றியதனால் வடமொழியும் தென் மொழியும் நன்கு கைவர பெற்றவராக விளங்கினார். பழங்கால சைவ இலக்கியங்களை "அச்சுக்கு" கொண்டுவரும் பணியை தொடங்கியவர்களாகப் பொம்மபுர ஆதீனத்தையும் அதனைச் சார்ந்தவர்களையும் குறிப்பிடலாம். 1965-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல்வேறு ஆசிரியர்களின் பல நூல்கள் வெளிவர அடித்தளமாக விளங்கியது மயிலம் ஆதீனம் என்றால் அது மிகையாகாது. தமிழையும், சைவத்தையும் வளர்க்கும் பணியில் "மயிலம் ஆதீனம்" பெரும் பங்கு ஆற்றியுள்ளது எனலாம்.

சதமணிமாலை

உமாபதி சிவாச்சாரியார் 100 சூத்திரங்களாகப் படைத்த "சதரத்ன சங்கிரசம்" எனும் வடமொழி நூலை தமிழில் சதமணி மாலை என்னும் பெயரில் நல்லாற்றூர் சிவப்பிரகாசம் அவர்கள் 100 செய்யுட்களாக அமைத்து "ஞானதீட்சை" என்ற பெயர் கொண்ட சதமணிமாலையை எழுதியுள்ளார்.

சதமணி மாலை ஆனது பசு, பதி, பாசம், (உயிர், இறைவன், பற்று) முதலியவற்றை பற்றியும், ஆன்மாவின் இருவினை பயனையும், மும்மலத்தையும் நீக்கி, உண்மை அறிவை அடைந்து, சிவகதியை அடைய வழிகாட்டுகிறது. ஆன்மாவானது பதியை அடையும் நிலை, அறிவின் சிறப்பு போன்றவற்றையும், யோக நிலையின் மூலம் சக்தியை ஒன்று திரட்டி குண்டலியின் இயல்பு எனப் பலவற்றையும்,

தெரிய ஞானம் சிறிதிற் சிறியதாம்
பெரிது தன்னில் பெரிதென நிற்குமெய் (சதமணிமாலை-67)

என விளக்கின் ஒளியைப் போன்ற உயிர் உலகோடு சேரும்போது சிறியதாகவும், இறைவனோடு சேரும்போது பெரியதாகவும் அமையும் என்று பல நிலைகளையும் விளக்கியுள்ளார் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர்

17-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் தோன்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். மயிலம் பொம்மபுர ஆதீன புலவராக விளங்கிய சிவப்பிரகாசர் 32 வயது வரை வாழ்ந்து புகழ்மிக்க 34 நூல்களை இயற்றி தமிழ் உலகிற்கு பெருமை சேர்த்துள்ளார். 1938ல் மயிலம் பொம்மபுர ஆதினத்தால் சதமணிமாலைக்கு மூலமும் உரையும் பதிப்பிக்கப்பெற்றது.

சிவப்பிரகாசர் "ஞானம் ஒன்றே முக்திக்கு உதவுவது" என்ற முறையில் ஆகமக்கருத்துக்களை ஒன்று திரட்டி, ஞானப் பெட்டகமாக, தத்துவமே உயர்ந்த வழிகாட்டியாக அமைத்து சதமணிமாலையை ஞானம், வீடுபேறு, தீக்கை, குருவருள், குண்டலிணி சக்தி, கன்மம், ஆன்மா என்று யோகத்தின் பல நிலைகளையும், இறை சக்தியைப் பெற ஞானக்கொடையை வழங்கும் நூலாகச் சிவப்பிரகாசர் சதமணிமாலையைப் படைத்துள்ளார் எனலாம்.

சிவஞானி மீது 5 நூல்களைப் படைத்து, மயிலம் பொம்மபுர ஆதீன திருமடத்திற்கும், மடாதிபதிகளுக்கும் சிறப்பான இடத்தை வழங்கினார் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். சிவனையும், சிவஞானியையும் வணங்கியே சிவப்பிரகாசர் இந்நூலினை மக்கள் படித்து பயன்பெறுவதற்காக படைத்துள்ளார் எனலாம்.

ஞாணம் - பரஞாணம்

சிவப்பிரகாசர் மனித உயிர்கள் மாயத் தன்மையைத் தரும் உடல், கருவி, உலகம், போகம் என்ற நான்கு வகை தடைகளையும் கடந்து இறைவனை அடைய குருவருளையும், திருவருளையும் நாடி ஞான தீட்சையைப் பெற்று மாயத் தன்மையை அறுத்தல் வேண்டும் என்று வழிகாட்டுகிறார். மேலும், மனித உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மன அழுக்குகளை நீக்கினால் மட்டுமே இறைஞானத்தை அடைய முடியும் என்று வழிகாட்டுகிறார்.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நில்லாவே

பசு, பதி, பாசமாகிய மூன்று மலங்களை மனதில் இருந்து நீக்கி இறைவனை சிந்தனையில் கொண்டால் சிவகதியை எளிதாக அடையலாம் என்று சிவகதியை அடைய இறை ஞானத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

ஞானத்தின் மூலம் 'அபரஞானத்தையும், பரஞானத்தையும்' பெறலாம் என்று வழிகாட்டுகிறார் சிவப்பிரகாசர். சிவாகமக் கலைகள் மூலம் அபரஞானத்தையும், இறையருள் உணர்வே பரஞானமாகிய இறையருளைத் தரும் என்று மனித மனங்களுக்கு ஞானத்தின் சிறப்புகளை எடுத்துக்காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

அபரஞானம் ஆனது சிவனது ஐந்து முகங்களின் மூலம் 1.ஈசானம் 2.தத்புருபம் 3.அகோரம் 4.வாமதேவம் 5.சத்யோஜாதம் என்ற ஐந்து கலை வடிவங்களான சிவா ஆகமங்களை இறைவன் எடுத்துக்காட்டி மனித உயிர்களுக்குச் சிற்றின்பத்தையும், பேரின்பத்தையும், எடுத்துக்காட்டுகிறார். ஞானத்தின் மற்றொரு வகையான பரஞானத்தை,

சிவநிலம் முளைத்து உயிர் சிறப்பு உணர்த்தி எம்
பவம் அறும் மருந்து எனப் பட்டு நான்கு அமை
கவையோடு முடிவுஉறில் சுகம் அளித்து அருள்
நவை அகல் இனைய விஞ்ஞானம் கொள்கவே

என்று பிறவித்துயரம் நீங்க, சிவனாகிய நிலத்தில் நின்று, பொருளின் தன்மையை உணர்ந்து, முடிவில் கொடிய பிறவியை நீக்க பரஞானமே வழி என்று மனித மனங்களுக்கு வழிகாட்டுகிறார் சிவவாக்கியர்.

சிற்சக்தி

உருவமில்லாத இறைவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந் தொழிலையும் புரிவதாக பேரறிவு மெய்ஞ்ஞானிகள் எடுத்துக் கூறுவதாகக் காட்டுகிறார். மேலும் இறைவன் தன் சக்தியின் காரணமாக உயிர்களிடம் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தையும் அழிக்கிறான்.

தானே படைத்திடும் தானே அளித்திடும்
தானே துடைத்திடும் தானே மறைந்திடும்

தானே இவை செய்து தான் முத்தி தந்திடும்
தானே வியாதி தலைவனும் ஆமே (திருமூலர்-திருமந்திரம்)

என்று இறைவனின் ஐந்து தொழில்களையும் திருமூலர் பல பாடல்களில் எடுத்துக்காட்டியுள்ளார். இக்கருத்துக்களை உள்வாங்கியே சிவப்பிரகாசரும் சதமணிமாலையில் உருவமற்ற இறைவனின் பெருமைகளை, அவனின் பலவித சக்திகளை மக்களுக்குத் தன் பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டுகிறார். "உருவிலி யாயுங் கால முதவுறு பயன் கண் டாங்கு" என்று உருவமற்ற இறைவனே இவ்வுலகத்தைச் சிற்சக்தினால் படைக்கிறான் என இறைவனின் 'சத்தன், உத்தியுத்தன், தக்கப்பிரவிருத்தன்' என மூன்றுநிலை செயல்பாடுகளை விளக்குகிறார்.

உயிர்

கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது உயிர் என்பார் வள்ளுவர். அவரின் கருத்தை அடியொற்றியே உடலுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாட்டினை

வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை

என ஒன்பது ஓட்டைகளைக் கொண்ட இந்த உடலில் உயிர் எனும் ஒரு பொருள் உலவிக் கொண்டிருப்பது புதுமை என உயிரின் வரையறையை விளக்குகிறார் சிவப்பிரகாசர். உயிருக்கு உடல் இன்றியமையாதது என்கிறார்.

முக்தியின் பொருட்டு உயிர் முன்பு உடம்புரும்
அத்தடை உடலுறாதாயின் இல்லையாம்
மெய்த்தனி வீடு உடல் மேவுறா விடின்
உய்த்துள உணர்வு மின்னுயிர் தனக்கரோ

என்று உயிர் ஆணவ மலம் நீங்கி முக்தியை அடைய உடல் வேண்டும். உடலைப் பின்பு நீக்கினால் மட்டுமே முக்தியைப் பெற முடியும் என்று உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பினைச் சிவப்பிரகாசர் விளக்குகிறார்.

உயிரானது லயம், போகம், அதிகாரம் கடந்து ஆன்மாவின் விழிப்பு நிலையில், ஆழ்நிலை உறக்கத்தை அடையுமேயாயின் அதுவே 'மெய்ஞானம்' என்று உயிர் இறுதியில் அடையும் நிலையை விளக்குகிறார்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலரின் கருத்துக்கு ஏற்ப, உடல் பெறாவிட்டால் உணர்வைப் பெற முடியாது உணர்வைப் பெறாவிட்டால் உய்த்து உணரும் அறிவு இருக்காது. உயிரானது ஆணவம், கன்மம், மாயை நீங்க உடல் அவசியம் என்கிறார். உடலானது நல்வினை, தீவினை என்ற இருவினையைப் பெறும். உயிர்க்கு விடுதலை இல்லை என்றால், அதற்கு வினையுணர்ச்சி இறைவனால் உண்டாக்கப்படும் என்று உயிர் உடலின் சிறப்பைச் சிவப்பிரகாசர் எடுத்துக்காட்டுகிறார்.

அத்துவா

சிவபதத்தை அடையும் வழியையே அத்துவா என்கிறார். ஆறு வகையான வழியை உயிருக்குக் காட்டுகிறார். அவை 1. மந்திரம் 2. பதம் 3.வண்ணம் 4. புவனம் 5. தத்துவம் 6. கலை

இந்த 6 வகையின் மூலம் மந்திரங்களின் மூலமும் பொருளாகிய சொற்கள் மூலம் வன்மம் ஆகிய அச்சுரங்களின் மூலமும் மனித குலம் முழுவதும் இந்த உலகமாக விளங்குகின்ற இறைவனைத் துதிப்பதன் மூலமும் தத்துவமாகிய வாழ்க்கையின் நோக்கமாகிய இறைவனை அடைதல் மூலமாகவும், பல கலைகளின் மூலமாகவும் இறைவனை அடையலாம் என்று வழிகாட்டுகிறார். மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழியையும் அத்வாவில் எடுத்துக்காட்டுகிறார்.

முடிவுரை

'ஞானம் ஒன்றே முக்த்திக்கு வழி' என்னும் ஞானக்கருத்தை 'சதமணி மாலையின்' மூலம் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார். உலகத்தைத் தோற்றுவிக்கின்ற குண்டலினி சக்தியை விரிவாக விளக்கி உயிருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறார். ஞானக் கொடையாகச் சதமணிமாலையை ஆசிரியர் படைத்துள்ளார். பசுபாவனை, பதிபாவனையாக ஆன்மாவின் அழுக்கினை நீக்கி, உயிர் எண்ணங்களைப் போக்கி பதியாகிய இறைவனை அடைய மனித உயிருக்கு வழிகாட்டுகிறது 'சதமணிமாலை' திரட்டு நூலான சதமணிமாலை ஆன்மா பசுத்தன்மை நீங்கி பதியை அடைய வழிமுறைகளைத் திரட்டிய நூலாக விளங்குகிறது.

துணை நூல்

1. சதமணிமாலை, மூலமும்-உரையும்.
2. நல்லாற்றுர் சிவப்பிரகாசர் - விளக்க உரை.
3. மயிலம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்- நூல்கள்.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது உணர்த்தும் பக்திநெறி

திருமதி த. இளவரசி
கௌர வரிவுரையாளர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை, டாக்டர் எம்..ஆர் அரசு மகளிர்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம் -- 605 401
தொடர்பு எண்: 9047620419

முன்னுரை

பக்தியின் மொழி என்று போற்றப்பெறும் உயரிய மொழி தமிழ் மொழி ஆகும். இம்மொழியில் எண்ணற்ற இலக்கிய இலக்கணங்கள் பல தோன்றியிருப்பினும் மனித மனதைப் பண்படுத்தும் வகையில் பாடப்பட்டதே பக்தி இலக்கியங்கள் என்பது யாவரும் உணர்ந்த ஒன்றாகும். மனிதன் தம் புலன்கள் சென்ற வழியே சென்றுவிடாது ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்தி அதனை இறைவழியினூடே செலுத்தி வீடுபேறடைய வழிகாட்டுதலால் அமைந்தது பக்தி இலக்கியம் ஆகும். இக்கால கட்டம் பக்தியோடு தமிழிசையும் இருகண்களாகப் போற்றப் படுகிறது. அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகரின் நெஞ்சுவிடுதூது உணர்த்தும் பக்தி உணர்வினை ஆய்வதாக இக்கட்டுரையானது அமைகின்றது.

தூது இலக்கியம்

தூது இலக்கியம் 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். தூது என்பது ஒருவர் தம் உள்ளக் கருத்தை வேறொருவருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தும் கருவியாகும். தூதாகச் செயல்படும் கருவி உயர்திணையாகவோ அஃறிணையாகவோ இருக்கலாம். அகப்பாடல்களில் வரும் தூது பொருட்களைப் போன்றே பக்தி இலக்கியங்களிலும் தூது பொருட்களாக நெஞ்சு, கிளி, மேகம், வண்டு போன்ற பொருட்களைத் தூதாக அனுப்பியுள்ளனர். அவற்றுள் திருஞானசம்பந்தரின் பாடல் ஒன்று களியைத் தூது அனுப்புவதாக உள்ளது. திருவரங்க கலம்பகத்திலும் மேகத்தைத் தூதாக விடுத்ததை அறியமுடிகிறது. அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த நெஞ்சுவிடு தூது போற்றுதலுக்குரியதாக விளங்கி வருகின்றது.

நூலின் சிறப்பு

மயிலம் முருகப் பெருமானின் அருள் கொண்டு பாடப்பட்ட இந்நூல் மிகச் சிறப்புடன் திகழும் ஒப்பற்ற நூலாகும். ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சிவிடுதூது என்னும் இந்நூல் உணர்த்தும் பொருள் யாதெனினல் சிவபெருமானும் குருவும் வேறல்லார் என்றும் சிவஞானியே முத்தியதத்தை அருளவல்லர் என்றும் கூறுகிறது. சிவபெருமானை சிவஞானி வடிவத்தில் வந்து அரள்பாலிப்பதாகப் போற்றியுள்ளார். இப்பாடல்களில் சிவஞானியை தலைவனாகவும் சிவப்பிரகாசர் தன்னை தலைவியாகவும் பாவித்து பாடப்பட்டுள்ளது. இறைவனின் அம்சமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின் சிறப்புகளைக் கூறி அவர் மீதுள்ள பக்தி உணர்வினை வெளிப்படுத்தியுள்ளார்.

சிவஞானியின் சிறப்புகள்

பூமுடியா னீர்கொண்டு பொங்கு மருளென்று
நாமுடியாய் வீழ்ந்திறைஞ்ச நல்குதரு - காமருதன்
தேசுணர்த்த வேண்டத் திருமுடிமேல் மேவிவாழ்
மாசுணத்தைத் தானெறித்த மாணிக்கம்

(பக்.உ.பா.7 - 10)

கரும்பானது உழவர் வழங்கும் நீரை உண்டு தன் அடிப் பகுதியில் இனிமை சுவையுடையதாகவும் மேற்பகுதி சுவை குறைந்தும் காணப்படும். ஆனால் சிவஞானியோ தன் அன்பர்கள் இடும் பூக்களையுடைய முடியால் அவர் செய்யும் அபிடேக நீர்கொண்டு பின்னர் அதை மிக்க அருள் என்ற பெயர் கொள்ளச் செய்து அன்பர்களாகிய நாம் வீழ்ந்து தலையால் வணங்கக் கொடுக்கும் கற்பகத்தரு அழகிய தனது ஒளி வடிவை உணர்த்த வேண்டித் தன் திருமுடிமேல் பொருந்தி வாழ்கின்ற பாம்பை ஒளித்து வந்துள்ள மணிக்கமாகத் திகழும் சிவனின் அம்சமாகத் திகழ்பவர் ஆவார்.

கொள்ளு மடியார் குழாததினைத்தான் வஞ்சித்துங்
கொள்ளும் விடங்கலவா வின்னமுதந் - துள்ளும்

என்ற பாடல்வரியில் தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு வஞ்சனை காட்டாது அவர்களை வாழ்விக்கும் பேரன்புமிக்கவர் வஞ்சனை என்பதே அறியாதவர் என்று போற்றப்படுவதில் அவரின் சிறப்பியல்புகள் புலப்படுகின்றன.

அடியவர்களுக்கு அருளும் விதம்

பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளும் தம்பிரான் அன்னையெனு

என்ற பாடலில் தன்னை நாடிவரும் அடியவர்க்கு வேண்டியதை அருளும் குணம் படைத்தவர் சிவஞானி என்று இப்பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன. பொன்னை வேண்டுபவருக்குப் பொன்னை அளித்தும் தன் அருளையும் அன்பையும் வேண்டுபவர்க்கு அதனை வழங்கியும் அருள்செய்யும் மாண்பினை உடையவன். மேலும் அவரின் புகழினைச் சிறப்பிக்குமிடத்து

மழுவேறு கையான் வரினும்நீ றெள்ளும்
கழுவே றிகளுந்தாழ் காலான்

என்ற பாடல்வரியில் ஞானசம்பந்த பெருமானிடம் வாதில் தோற்று தாமே கழுவேறியவர்கள் ஆதலின் அவர்களை கழுவேறியவர்கள் என்றார். சிவபெருமானை நேரில் வந்து அருள் செய்யியும் அவரை மதியாதவர்கள் சமணர்கள். அச்சமணர்களும் போற்றி வணங்கும் பண்புடையவர் சிவஞானி என்பது மிகையாத ஒன்று.

சிவஞானி வீற்றிருக்கும் இடம்

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து"
மயிலை மிதிருக்கும் வள்ளல் (சி.பா.நெ.பா.20)

என்ற பாடலில் சிவபெருமான் கயிலை மலையில் அமர்ந்து பிரம்மன் முதலானோர்க்குக் காட்சி அளித்தது போல் மயிலை மலைமீது தன்னை நாடி வரும் அடியவர்க்குக் காட்சி கொடுத்தவர் சிவஞானி என்று கூறுவதால் அவர் மயிலை மலையில் வீற்றிருந்து அருள் பாலித்தார் என்பது அறியமுடிகிறது.

சிவஞானியின் கருணை

பாவிக் குதாசனார்க்குப் பத்தர்க்கும் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையான்

என்ற பாடலில் சிவஞானியின் கருணை உள்ளம் வெளிப்பட்டு நிற்கிறது. அதாவது பாவிகட்குக் கடவுள் உணர்வை உண்டாக்கி உதாசிணர்க்குத் தம் சமயத்தில் பற்றினை ஏற்படுத்தியும் பக்தர்களுக்கு முக்தி நிலையில் விருப்புக் கொள்ளும் செய்தலும் சீடர்க்கு அவர் விரும்பும் முக்தி நிலையை எய்துதற்குரிய நெறிகளில் நிற்கும் செய்தலும் கருணையுள்ளம் கொண்டவர் என்று போற்றப் பெறுகிறார்.

வணியார் கொடையாகும் ஐந்தருநற் சிந்தா
மணியார் கருணை மலையான்

இதில் மழை வறந்த காலத்தும் தன்பால் உள்ள உயிர்கட்கு சுரந்தூட்டும் வளம் உடையதால் மிக ஆகிய கொடை பொருந்திய ஐந்து தருக்களையும் சிந்தாமணியையும் ஒத்த கருணையாகிய மலையையுடையவன் ஸ்ரீசிவஞானி கொண்ட கருணைமலை. பிற மண் மலைகள் போல் அல்ல என்பதிலிருந்து அவரின் கருணை உள்ளம் வெளிப்படையாகத் திகழ்கிறது.

வீடுபேறு அருளும் தன்மை

தவஞான மில்லாதார் சாற்றினும்வீ டெய்தும்
சிவஞான தேவெனும்பேர்ச் செல்வன்

என்ற பாடல் வரிகளில் பழம்பிறப்பிற் செய்த தவத்தால் வரும் ஞானம் இல்லாதவர் சொன்னாலும் வீட்டையும் பயன் தரும் ஸ்ரீசிவஞான தேவன் என்ற பெயருடையவன் பிறப்பறுப்பவன் என்று கூறுதிலிருந்து அவரின் வீடுபேறு அருளும் தன்மையை அறிய முடிகிறது.

அகஇருளைப் போக்குபவன்

புற இருளைப் போக்குபவன் சூரியன் என்றாலும் அக இருளைப் போக்கும் மாண்பினை உடையவன் ஸ்ரீசிவஞானி என்பதை,

பொறிக்குஞ் சரமதனைப் போகாமற் றாளின்
மறிக்குஞ் சிவஞானி வந்தான் எறிக்குந்
தினகரனால் ஆரூலால் திங்களால் போகா
மனவிருளை நீக்குவான் வந்தான் (சி.பா. தூது. பா.80)

என்ற பாடல் வரியால் உணரமுடிகிறது. பொறிக்குஞ்சரம் ஐம்பொறிகளாகிய யானைகள், தினகரன், திங்கள்ஆழல் ஆகியவை புறவிருளைப் போக்குபவை. சிவஞானி அகவிருளைப் போக்குபவர். பரிச்சினை ஞானம்பரிய அன்பாகிய அடையாளத்தை வெளிப்படுத்தும் ஞானமானது விரைந்து தோன்றும்.

காவேயென் செல்வமே கண்ணே சிவஞானத்
தேவே யெவைந் தியர்துதிப்ப

என்ற பாடலில் குளிர்ச்சி பொருந்தி சோலை உயர்ந்த செல்வமாகத் திகழும் கணணாகத் திகழும் சிவஞானத் தேவரே என்று துதித்து போற்றும் பாங்கினை உணரலாம்.

செல்வமே யெங்கள் சிவஞான தேவனே
கல்விகொடு காணாத காட்சியே

என்ற பாடல் வரியில் கல்வி அறிவுகொண்டு காணமுடியாத காட்சிப் பொருளே என்றது. உண்மை ஞானத்தாற் காணப்படும் காட்சிப் பொருளாகத் திகழ்பவனே.

வேலையுல கெல்லாம் வியக்கும் சிவஞானி
மாலைமன மேவாங்கி வா

என் நெஞ்சே! உலகு வியந்து போற்றும் சிவஞானியின் அருள் பெற்று விரைந்து வா என்று விளக்குகிறார். மேலும் தன் நெஞ்சினிடம்,

நெஞ்சமே செய்குவனால் மற்றவன்பால் தூதாக
நெஞ்சேமே செல்வீரைந்து நீ

என்ற பாடல்வரியில் நெஞ்சமே! சிவஞானி என்னுடனேயே இருப்பவன் என்றாலும் நின்னைத் தூதாக விடுத்தாய் அல்லாமல் தான் என்பால் வைத்த விருப்பத்தை மறைக்கவே செய்வான். ஆதலின் அவன்பால் அருளைப் பெற நெஞ்சை தூதாக அனுப்புகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

முடிவுரை

பக்தி இலக்கியம் என்பது கடவுளை நோக்கி எழுந்த ஆழ்ந்த பக்தி உணர்வை வெளிப்படுத்தும் ஒரு மகத்தான இலக்கியங்கள் எனலாம். பக்தியின் வழி மானிடப் பிறவி எடுத்து கடவுள் கொள்ளும் கருணை, அன்பு, அருளும் விதம் இவற்றை வெளிப்படுத்துகிறது. மனித மனங்கள் அன்பு அற்று வெள்ளமாய் பெருக்கெடுத்து மனித மனங்களின் அன்பு ஆற்று வெள்ளமாய் பெருக்கெடுத்து மனித நேயத்தை வளர்த்தெடுக்கிறது. இறைவனோடு சங்கமிக்கும் வழிகாட்டுதால் அமைந்துள்ளமையே இந்நூல் புலப்படுத்துவதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. *சிவலிங்கனார், ஆ, சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 1966.*
2. *முனைவர் சு. திருநாவுக்கரசு, சிவஞானியின் மகிமை, மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம் - 2024.*

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வீரசைவம்

ப. செல்லப்பாண்டியன்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)

நெறியாளர் முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்
பேராசிரியர் - தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல்
தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை 600 117.

ஆய்வின் தேவையும் எல்லையும்

சிவனாரின் பஞ்சமுக வெளிப்பாடான சிவலிங்க தோற்றத்திலிருந்து உருவத்திருமேனியாக வெளிப்பட்ட பஞ்சாச்சாரியார்கள் மூலம், ஆப்கானிஸ்தான், அமெரிக்கா, நேபாளம் உட்பட்ட உலகெலாம் வீரசைவத்தைப் பரப்புதற்கு, வருணாசிரமமற்ற மொழி-இன-நிறம்-பேதமற்ற சிவனியம் என்ற ஒளிவடிவமான சுயம்புலிங்க வீரசைவமே ஒப்பற்ற முழுமுதற் சமயமாகும்.

பிற்காலத்தில் தோன்றிய கிறித்துவம், முகமதியம், இசுலாமியம், சமணம், பௌத்தம் செயல்பாட்டினால், வீரசைவத்திலிருந்து உருமாறிய சித்தாந்த சைவம், அடிப்படையான/ ஆழமான காவர்த்தமானத்தினை மறைக்கப்பட்ட உண்மையை உள்ளுணர்ந்து, சமத்துவ சமயமாக ஒன்றேகடவுள் என்ற மனிதகுலத்தில் எந்தவித ஏற்றத்தாழ்வு இல்லாமல், சமநிலை நோக்குடன் உருவாக்கப்பட்டது வீரசைவம். குருலிங்க ஜங்கம வழிபாடு லிங்கதாரண தீக்கைமுறை வீரசைவத்தின் முத்திரைகளே.

பிற்கால மாற்றலால், வரலாற்றைச் சிதைத்தும் / மறைத்தும் / மறைக்கப்பட்டும், தற்போதும் வீரசைவ உயிர்மூலம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த சம்பிரதாய அடையாளம் கொண்ட குருமார்பு சார்ந்த எம்முள் ஒளிவிடும் சிவனார் ஒளிஉருவமே, இந்த உண்மையை எழுதத் தூண்டிய மூலமாகும். பண்டைக்கால தொல்பொருள் ஆராய்ச்சி இடமான மொகஞ்சதோரா, ஹரப்பா ஆகிய இடங்களில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சியில் சிறுசிறு சிவலிங்கங்கள் தோன்றி வருவதால்- உலகெலாம் வீரசைவம் பரவியுள்ளது என்தை உறுதியாக அறியலாம்.

மூவுலகமும் அறியப்பட்ட எல்லையில்லா உலகத்தில், அனைத்து பகுதிகளிலும் சிவலிங்கங்கள் வெளிப்பட்டு கொண்டுள்ளது. இதுவே உலகளாவிய மூத்தசமயம் வீரசைவம் என்பது உறுதியாகத்

தெரிவதால், வீரசைவத்தில் எல்லையில்லை என்பதை சற்றும் யோசிக்காமல் கருதலாம். நேர்பான பாசுபதசைவம், காஷ்மீர சைவம் ஆகியன வீரசைவ வழிமுறையே.

வீரசைவம்

வீரசைவம் என்பது சிவபெருமானின் ஒளிவடிவமான பஞ்சமுகத்திலிருந்து வெளியான பஞ்சாச்சாரியர்கள் ஐவர்கள் மூலம் உருவாகிய ஆதிகாலத்து சமத்துவ சமயமாகும். நதி தேவதைகளின் பாவங்களைத் தீர்ப்பதற்காகவும், நீக்குவதற்காகவும், சிவபெருமானிடம் முறையிட்டனர். தூய்மையாக்கும் அமுதக் குடத்தில், சிவபெருமான் அம்பு எய்தவுடன் அமுதக்குடம் உடைந்தது. புனிததீர்த்தம் ஐந்து இடங்களில் தெறித்து விழுந்தன. கும்பகோணம் மகாமகக் குளத்தில் வீழ்ந்த நாள் மாசிமகம். மாசிமகம் அன்று அங்குசென்று நீராடி நதிதேவைகள் பாவம் தீர்த்தது. வெளிப்பட்ட பாகங்கள் மூலம் குடமூக்கு என்ற கும்பகோணம் வீரசைவ பெரியமடமும், அதனையொட்டியுள்ள மகாமகா குளமும் புனிதமாகியது. நதி தேவதையர் பாதுகாப்புக்காக வந்த சிவபெருமானின் உருவத்திருமேனியே வீரபத்திரர். தமிழ் நாட்டிற்கு வந்த முதலாவது வீரபத்திரர் கோயில் கும்பகோணத்தில் உள்ளது. வீரசைவ மடமாக தோன்றிய திருவாவடுதுறை ஆதீனம் பிற்காலத்தில் சித்தாந்த சைவ மடமாகிய வரலாறு ஆதாரம்.

வீரசைவம் பழமையும் தொண்மையும்

எளிதானது - இறப்பு பிறப்பு சாதித் தீட்டுக்கள் இல்லாத சமயமாகும். குருவின் ஆசியாலும், தீட்ஷையாலும், இலிங்கம் அணிந்தவர் ஞானம் பெறுகிறார். வீரசைவர்களுக்குக் குரு வழிபாடே முக்கியம். திருமூலரும், மாணிக்கவாசகரும் போற்றிய தமிழக வீரசைவம், ஏராளமான திருமடங்களும் இன்றளவும் காப்பாற்றப்படும் நிலையினைக் காணலாம். வீரசைவ பாரம்பரியம் பஞ்சாச்சாரியர்களால் பரவிக்கிடக்கிறது. பசவண்ணர் காலத்தில் ஏற்பட்ட புரட்சியால் வீரசைவம் கர்நாடக மண்ணிற்கே சொந்தம் என்ற உணர்வு அனைவரிடம் தவறாக ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. ஆனால் வீரசைவம் விளைந்த தமிழகத்தில், வீரசைவ நெறியை விளைவித்தவர்கள் திருவையாறு சார்ந்த ஐந்துஊர் வீரசைவ வேளாளர்கள். ஆனால் கும்பகோணம் வீரசைவ பெரியமடத்தை உருவாக்கிய தமிழகத்தைக் காட்டிலும், இன்று கர்நாடகத்தில் அதிக வீரசைவ பற்றாளர்கள் திருநீறு, தண்டம்,

கசாயம், ருத்ராக்கம், திருவோடு உள்ளிட்ட ஐந்து பொருட்களை மட்டும் தாங்களே எடுத்துக்கொண்டு வீரசைவ வேளாள குருமார்கள் - கன்னடமொழி குருக்களிடம் கும்பகோணம் வீரசைவ பெரிய மடத்தையே ஒப்படைத்துவிட்டு வெளியேறியுள்ளனர். கன்னட மொழி யாளர்களிடம் வீரசைவ மடத்தை ஒப்படைக்கப் பட்ட உண்மை. தமிழ்கத்தின் தோன்றிய ஒன்றுபட்ட திராவிட நாடாகவே, மொழிபேதமற்ற கும்பகோணமே-வீரசைவத்தின் மூலமடமாகும். கும்பகோணம் பாரம்பரியமான மூலக் கருவறை வரலாறாகும்.

பஞ்சாச்சாரியார் மரபிற்குப் பிற்பட்டதே வேதகாலம்

பல்லாயிரம் ஆண்டுகாலத்திற்கு முற்பட்ட வீரசைவத்தை பின்னிருத்திவிட்டு, கிபி.12ஆம் நூற்றாண்டில் ஜைனமும், வைணவமும் உயர்நிலை அடைந்த நிலையினை மாற்ற ஆபத் பாந்தவர் போல் மறுமலர்ச்சி மேற்கொண்டவர், அன்றைய கன்னட மாநிலத்து அரசரின் முதலமைச்சரானவர் பசவேசர் ஆவார். பசவேசர் பிராமணராக இருப்பினும், பூணூல் தேவையற்ற சடங்கு என்றும், அதை மறுத்ததால் ஹாராலய்யா எனும் செருப்பு தைக்கும் தொழிலாளிக்குப் பூணூல் அணிவித்த புரட்சியும், ஆணும் பெண்ணும் சமம் என்பதால் தமது தமக்கைக்கும் பூணூல் அணிவிக்க எத்தனித்த நிகழ்வும் நடைபெற்ற வீரசைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். அதன்பின் தமிழ்நாட்டின் சுப்ரமணிய பாரதியார், கனகலிங்கம் என்ற அரிசன வகுப்பைப் சேர்ந்தவருக்கும் பூணூல் சூட்டியமை காணலாம்.

தற்போதைய காலத்தில் வீரசைவ பாரம்பரிய சம்பிரதாயத்தைப் பின்பற்றுபவர்கள், பண்டாரங்கள் எனும் பட்டத்துள், தம்பிரான், தேசிகர், ஓதுவார், குருக்கள், ஆதிசைவர், சிவாச்சாரி, ஐயர் என்ற பல்வேறு உட்பிரிவுகள்.

1885இல் சென்னை அருங்காட்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றிய எட்ஹர் தர்ஸ்டன் என்ற ஆங்கிலேயர் எழுதிய தென்னிந்திய குலங்களும் குடிகளும் என்ற 3000 பக்கங்கள் கொண்ட நூலில், பண்டாரம் என்ற தலைப்பில் இந்தியாவில் வாழும் பல்வேறு வகைப்பட்ட பிரிவுகள், பழக்கங்களை ஆய்ந்தறிந்து எழுதியுள்ளார். பண்டாரம் என்ற பெயர், உயர் கௌரவமாகவும், இழிந்த சொல்லாகவும் எவ்வாறெல்லாம் திரிந்து வழங்கி வந்துள்ளது

என்பதையும், கோயில் திருப்பணியாளர்கள், ஓதுவார்கள், தேசீகர்கள், தம்பிரான்கள் போன்று இறைவனுக்கு பூ-மாலை தருபவராகவும், சைவ நெறியாளராகவும், லிங்கம் அணிந்தவர்க ளாகவும் இருந்தனர் என்றும், மேலைநாடுகளின் ஐங்கமும்-கீழை நாடுகளின் பண்டாரமும் ஒரே சமயப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வீரசைவ மடத்திற்கு இதுவரை நமது மயிலம் திருமடத்தில் நடந்துவந்த லிங்கதாரணம் முதன்முறையாகச் சென்னை அன்பர்களின் வேண்டுதலுக்கு இணங்க, தமிழகத் தலைநகரில் நடத்தப்பட்டுள்ளது. வீரசைவப் பண்பாடும் ஒழுக்கமும் பின்பற்றுவதற்கு மிகவும் இனியது. இயற்கையோடு இயைந்தது. நமது ஆறாதாரக் கொள்கையே (சடுத்தல் நெறி) நக்கீரர் ஆற்றுப் படைப்பாடலாக வழிவகுத்தது. நக்கீரர் இலிங்கம் அணிந்த வீரசைவரே. எல்லோரும் எல்லா நலமும் பெற்றுவாழ இட்டலிங்கப்பெருமாள் அருள்புரிவாராக. குருவருள் என்றும் துணைநிற்கும் என்ற ஆசியுரை, தொல்காப்பியர் விருது வாங்கிய அடிகளாசிரியர் வழங்கியுள்ளார். இப் பதிவினை வீரசைவமுரசு இதழில் காணலாம்.

வீரசைவம் சாதியா-சமயமா என்ற கேள்வி எழும்போது வீரசைவம்-ஒழுக்கம், குருவழிபாட்டைச் சார்ந்தது, குருவே பிரதானம், அரசன் அன்றே கொல்வான்-தெய்வம் நின்று கொல்லும் என்பதே வழக்குமொழி. ஆனால் வீரசைவ சமயநெறி காக்கும் குருவே பாவங்களை ஏற்று மோட்சம் கொடுப்பதால், வீரசைவர்கள் உயிர்பிரிதல் கபாலமோட்சம் என்பதாகும்.

உலக நாடுகளில் வீரசைவம்

உலகெலாம் வீரசைவம் - உலகெலாம் சிவனியம்-கும்பகோணம் வீரசைவ பெரிய மடத்தின் கிளைமடமான இலங்கை கீரிமலைக்கு, அண்மையில் நேரில் சென்று களஆய்வு செய்தேன். அந்த மடம் சிதைந்த நிலையில் பராமரிப்பின்றி கிடக்கிறது. அங்கு வாழும் வீரசைவர்களை, பண்டாரங்கள் என்று அழைக்கின்றனர். அவர்கள் சைவநெறியைக் காத்து வருகின்றனர். லிங்கம் அணிந்துள்ளனர். வீரசைவ குருமார்களான பண்டாரங்கள் மூலமாக மோட்சதீபம் எடுப்பதற்கும் கோயில்களுக்குப் பூக்கள் கொடுப்பதற்கும் வழிகாட்டுகின்றனர். வீரசைவ நெறிமுறைகள் மற்றும் ஆச்சாரத்தைக் காப்பாற்றுவதில் முன்னிலையில் உள்ளனர். சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் போற்றப்படுகிறார்கள்.

கும்பகோணம் வீரசைவப் பெரிய மடத்தின் கிளை மடமான இலங்கை கீரிமலையின் சொத்துக்களின் இன்றைய நிலையினை யாராலும் அறுதியிட்டு கூற இயலாது.

வரலாற்று உண்மை

- எகிப்திய கடவுளான அம்மானின் வாகனம்கூட நந்திதான். கிரேக்கர்களின் கடவுள் பெயர் சிவன். இது சிவனிலிருந்து வந்த சொல் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அம்மான் என்பது கூட தூய தமிழ்ச்சொல் தான்.

- ஏ.கிராபவுண்ட் என்கிற வரலாற்று ஆசிரியர், இந்தியக் கோயில்களில் உள்ள சிவலிங்கத்தைப் பார்த்தால், எகிப்தியரின் பாஹ்லாஸ் போலவே இருக்கிறது எனப் பதிவு செய்துள்ளார்.

- பாபிலோனில் சிவவழிபாடு இருந்திருக்கிறது. அங்கே அவர்களுடைய கடவுளுக்கு எல்சடை என்றே பெயர் வழங்கி வந்துள்ளது. எல் என்ற சொல்லுக்குச் சூரியன் என்பதுதான் பொருள். சூரியனைத்தான் சிவன் என்று ஆதிமக்கள் வழங்கிவந்தனர். சிவனைச் செஞ்சடையோன் என்று நாம் சொல்கிறோம்-பாபிலோனில் கிடைத்த மண்பலகை சாசனங்களில் சிவன் என்ற வார்த்தை காணப்படுகிறது

- அமெரிக்காவின் கொலாரடோ நதியின் வானளாவிய கூரை ஒன்றில் ஒரு சிவன்கோயில் இருப்பதைப் பற்றிய செய்தியை 1937ஆம் ஆண்டு காவல்கேட் என்கிற லண்டன்இதழ் வெளிப்படுத்தியது. இந்தக் கொலாரடோ நதிப்பிரதேசம் வெகுகாலம் வரை, வெளி உலகிற்குத் தெரியாமலே இருந்தது. 1958ஆம் ஆண்டுதான் இவ்விடத்தில் தங்கம் இருப்பது தெரிந்தது. டென்வர் என்கிற ஊரை அடுத்த சமவெளிக்கு மக்கள் குடியேறத் துணிந்தார்கள். பிரம்மாண்டமான மலைகளை அறுத்துக்கொண்டு, அதல பாதாளத்தில் கொலாரடோ நதி ஓடுவதைக் கண்டார்கள். வெள்ளையர்கள் இங்கே வருவதற்கு முன் இரண்டு இந்திய இனமக்கள் இங்கே வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மலையில் அமைத்த சிவன்கோயில், தற்போது இல்லாமல் கோயில் அமைந்திருந்த பெரியபாறை மட்டும் இருக்கிறது. தூரத்தில் இருந்துபார்த்தால், அது நம் திருச்சி மலைக்கோட்டை போலவே இருக்கிறது. அக்கோயில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்இருந்த கோயில் என்றுதான் தொல்பொருள் ஆய்வாளர்கள் உறுதியாக சொல்கிறார்கள். இக்கோயிலைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியால்,

இழந்த உலகத்தையே கண்டுபிடித்துவிட்டோம் என்று குதூகலித்தார்கள்.

- தென்அமெரிக்காவில் உள்ள அடர்ந்த காடுகளில் மேலும் பல இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மெக்ஸிகோவில் இன்றும் இந்திய கலாச்சாரத்தைக் காட்டும் கோயில்கள் பல இருக்கின்றன.
- கிரிஸ் தீவிலும் சிவன் என்கிற பெயருடைய ஓர்ஊர் இருந்திருக்கிறது. ஆசியா மைனரிலும் சிவாஸ் என்கிற பெயரில் ஓர்ஊர் இருந்திருக்கிறது.
- மேற்குஆசியா மக்கள் தங்கள் ஆண்டின் மூன்றாவது மாதத்திற்குச் சிவன் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.
- ஜப்பானின் பழைய கடவுள்களின் ஒன்றின்பெயர் சிவோ, ஷிகாரிகளின் தெய்வமும் சிவன்தான்.
- எகிப்தியர்களும், ரோமானியர்களும், கிரேக்கர்களும் பிரியாபஸ் என்ற சிவலிங்க வடிவத்தில் உள்ள கடவுளையே வழிபாடு செய்துவந்தனர்.
- இஸ்ரவேலர்கள் என்கிற இஸ்ரேலியர்கள் ஆதியில் சிவலிங்கங்களையே வழிபட்டார்கள் என்பது வரலாறு. அங்கு சிவலிங்கத்தின் முன் உள்ள பலிபீடத்தில் சாம்பிராணி வழிபாடு மேற்கொண்டிருந்தனர். இஸ்ரேலியர்களின் சிவலிங்க, கன்று வழிபாடுகளே பிற்காலத்தில் கிறிஸ்துவத்தில் சிலுவையாக நுழைந்தது. சிலுவையின் கீழ் நீண்ட பகுதியை, முக்கால் பாகம் பூமிக்குள் புதைத்துவிட்டால் லிங்கமாகி விடும். இஸ்ரேலியர்கள், எகிப்தியர்களிடமிருந்து தங்களைக் காத்த கடவுவீளாகவே காளையைக் கருதினார்கள்.
- இங்கிலாந்தில் ஒரு கோயிலில் காளை நிஜமாகவே இருந்தது. குழந்தைப்பேறு இல்லாத பெண் குழந்தை பெற விரும்பினால், அவளையும் இந்தக்காளையையும் ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள். பின்னால் குருமார்கள் பாடிக்கொண்டே வருவார்கள். காளையுடன் சென்றால் பெண் கருத்தரிப்பாள் என்று நம்பினார்கள்.இந்த விபரங்கள் அனைத்தும் தி மதர்ஸ் என்ற நூலில் காணலாம்.
- ரோமானியர்கள் சிவலிங்கச் சின்னங்களைப் பிரான்சில்

பரப்பினார்கள். இன்றும் பிரான்சில் மாதாக் கோயில்களில் சிவலிங்கச் சின்னங்களைக் காணலாம்.

- அலெக்ஸாண்டிரியாவில் நடந்த திருவிழாவில் 129 முழு உயரமுள்ள சிவலிங்கம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட தாக தாலமி என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பு எழுதி வைத்துள்ளார். கிரிஸ் சிவலிங்கத்தை நகர்வலம் கொண்டு வரும் பழக்கம் இருந்திருக்கிறது.

- அயர்லாந்தில் கிருஸ்துவக் கோயில்களில் சிவலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. அயர்லாந்து மக்கள் கிறிஸ்துவர்கள்ஆவதற்கு முன்னால், 14ஆம் நூற்றாண்டு வரை சிவலிங்க வழிபாட்டையே செய்து வந்தனர். லிது வேனியர்களும் சிவலிங்க வழிபாடுதான் செய்து வந்தனர்.

- இத்தாலியில் இன்றும் கிறிஸ்துவக் கோயில் விழாக்களில் பழைய சிவலிங்க வடிவங்கள் காணிக்கையாகச் செலுத்தப் படுகின்றன. சிவலிங்க வழிபாட்டில் நம்பிக்கையுள்ள மக்களை, அவர்களுடைய பழக்க வழக்கங்களோடேயே, கிறிஸ்துவம் அங்கே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. பலவிதமான அளவுகளுடன்கூடிய பாலாஸ் வடிவ மெழுகு வர்த்திகள் கோயிலுக்குள் இன்றும் ஏற்றி வைக்கப்படுகின்றன.

- சிவலிங்க வழிபாடு இந்தியாவிலிருந்து எதியோபியாவுக்கும், எதியோபியாவிலிருந்து எகிப்துக்கும், எகிப்திலிருந்து ஆசியா மைனருக்கும், கிரிசுக்கும் பரவிற்று என்று ஆராய்ச்சி யாளர்கள் சொல்கிறார்கள். திபேத்திலும், ஜப்பானிலும், மெக்ஸிகோ, பெரு, ஹைட்டி முதலிய நாடுகளிலும் சிவலிங்க வழிபாடே நடந்து வந்தது.

- ஸ்பானிஷ்காரர்கள் அமெரிக்கா சென்றபோது, அவர்களுக்கு முன்பே அங்கே சிவலிங்க வழிபாடுகள் நடைபெற்று வருவதைத் கண்டார்கள். அமெரிக்காவும் இதற்கு விதிவிலக் கல்ல. டஹோமியில் எலங்பா என்ற சிவலிங்கம் இருந்து.

- இத்தாலிய, கிரேக்க தெய்வம் பக்கஸ், கிரேக்க மொழிகளில் பக்கஸ் என்றால் சிவன் என்றுதான் பொருள். ரிஷபமும், புலியும் அவருக்குப் பிரியமான வாகனங்கள். புலித்தோல் உடுத்தி, திரிசூலம் ஏந்திய கடவுள் இவர். கெபன், கெடா என்று தங்கள் தெய்வங்களை அழைத்தார்கள்.

- கெமோஸ், மொலோச், மொதோக், ஆதேனியஸ், சிபாஸியஸ், பகேநாஸ் என்கிற பெயர்களில் ஆசியா மைனரில் வணங்கப்பட்ட தெய்வங்கள் எல்லாம் சிவலிங்கமே. மெக்காவில் இப்போதுள்ள தபா கல்லும், ஆதியில் வணங்கப்பட்ட தெய்வக்கல்லே. அது சதுரவடிவமான இருக்கிறது.அதன்நடுவில் முன்வு சிவலிங்கம் இருந்திருக்க வேண்டும்.
- மொகஞ்சதோரோ அகழ்வாராய்ச்சியின்போது காளைச் சின்னம் பொறித்த மிகப் பழையகாலத்து நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.
- தற்போது ஆஸ்திரேலியாவில் சிவா என்ற சொல்லும் வழக்கத்தில் உள்ளது

நிறைவாக

வீரசைவ நெறிமுறைகளான பாதோதகம் நீரருந்துதல், சேடம் எனும் எச்சிலுண்ட பிரசாதம், சமத்துவ சமுதாயம், ஆதியந்தம் காணாத சிவ ஒழுக்கம், நேரடி மோட்சம், மறுபிறப்பில்லை, தீட்டுக்கள் இல்லை, ஐவகை ஒழுக்கம், எண்வகைக்காப்பு, ருட்ராட்சம் அணிதல், பிராணாயாமம் எனும் அயாகநிலையைக் கடைப்பிடித்தல், ஆத்ம / அங்க / இஷ்ட / இட்ட லிங்கங் வழிபாடு, சிவப்பிரகாச சுவாமிகளின் சித்தாந்த சிகாமணி மற்றும் சிவலிங்க பூஜா விதிகள் கடைப்பிடித்தல், உரிய முறையில் குளியல், ஆசனமந்திரம், சங்கல்பம் குருவழிபாடு, சிவவழிபாடு, விபூதி தாரணம், உருத்திராடசதாரணம், இஷ்டலிங்க பூஜையானம், ருத்ராபிஷேகம், வஸ்திரம் (திருவாடை), வில்வம்-பூவுமாக தூபதீபம், நைவேத்யம், நமஸ்காரம் ஸ்தோத்திரம் போன்ற எண்ணற்ற நல்லொழுக்கத்தின் அடிப்படையே வீரசைவமாகும்.

மேற்கண்ட தலைப்புகளைத் தனித்தனியாக விளக்குதல் கணக்கிலடங்கா பல நூறு பக்கங்கள் தேவைப்படும்.

துணைநூற்பட்டியல்

- ஆறுமுக நாவலர், கே., இந்து மத இணைப்பு விளக்கம், எம். எஸ். எம். அச்சுக்கூடம், சென்னை, 1964.
- இரத்தின சபாபதி. வை., வீரசைவம், பொன்விழா வெளியீடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. 1977.

வீரசைவநெறியின் திறவுகோல் திருநீறு சிவஞானி

முனைவர் த.விஜயலட்சுமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சரசுவதி கலை அறிவியல் கல்லூரி,
ஒலக்கூர், திண்டிவனம் 604305,
அலைபேசி:8610454031,
senthurmurugan129@gmail.com

முன்னுரை

ஒரு மனிதனுடைய நல்லொழுக்கத்திற்கு ஆதாரமாக சிறப்பு பெற்று பொலிவு பெற்று விளங்க பக்தியே அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது தன்னளவில் சுயநலமாக இல்லாமல் மேலான நிலையை எவர் ஒருவர் அடைகின்றார்களோ அவர்களே இப்புண்ணிய பூமி ஆனது தனது பிரபஞ்ச ஆற்றலினால் பேரின்ப பேற்றினை அடைய வைக்கிறது அவர்களின் வழியே மொழியின் அருமை பெருமைகளையும் பண்பாட்டினையும் தெளிவுற கற்கவும் முடிகிறது. அப்படி மனிதனை பண்படுத்தும் முழுமுதற் கடவுளாக, சைவ சித்தாந்த கொள்கைகள் தெள்ளிய எண்ணத்தோடு தெவிட்டாத அமுதத்தை நமக்கு தரவல்லது என்பதே திண்ணமான உண்மையே என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அவ்வகையில் ஆண்டவனின் அருளை பெற்றவரும் ஆண்டவனின் அவதாரமான முக்காலத்தையும் முழுதுணர்ந்த செம்மலான சிவஞானியின் வீர சைவ நெறியின் - திறவுகோலான திருநீற்றைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேத நாயகத் தோன்றல்

திருக்கைலாய ஞான பரம்பரையின் வழிவந்த மயிலம் பொம்மபுர ஆதீனம் மேற்கு திசையை காக்கும் காவலர்களாக சிவபெருமானின் பூத கணங்களில் ஒருவராக இருந்தவர் சங்குகன்னர், அவரை அழைத்து சிவபெருமான் தென்னாட்டில் வீர சைவநெறி தழைத்தோங்கவும்" சித்தன் வாக்கே சிவவாக்கு" என்ற கொள்கைகளை வலுப்பெற செய்யவும் ஆணையிட்டார். கயிலையில் எப்படி உங்கள் அருகில் இருக்கிறேனோ அது போலவே மண்ணுலகிலும் உங்களின் அருகில் இருக்க வேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டினார். அவ்வேண்டுதலை செவிமடுத்த சிவன் முருகப்பெருமானின் அருளோடு அவர் அருகில்

சிவயோக சமாதியுற்று சிவலிங்க வடிவம் வைத்து அடியார்களால் வணங்கப்பெறும் நிலைபெறுக என்று வாழ்த்தி அருளினார். அவ்வழியே சங்குகண்ணர் உலகில் கருவழித் தோன்றாமல் திருநீறு உருத்திராக்கம் ,கல்லாடை ,இட்ட லிங்கம் அணிந்த மார்பு, செஞ்சடை ,குண்டல மணிந்த திருச்செவிகள்,சின்முத்திரையுடன் கூடிய வலக்கை திருநீற்றுப்பை,மாத்திர கோல் இடக்கையில் வீர சைவம் ஆகமங்கள் திருவைந்தெழுத்தை ஒலிக்கும் திருநாக்கு ஆகியவற்றுடன் கூடிய திருக்கோலத்துடன் பத்து வயது நிறைந்த பாலகராக அவதரித்தார்.

ஆதீனத் தோற்றம்

தம் யோக நெறியில் பெருமுக்கல் மலைகளிலும், வனங்களிலும் உலவிக்கொண்டிருந்த சித்தர்களுக்கும் சிவ அடியவர்களுக்கும் வீர சைவ ஆகம வழிகளை உணர்த்தி அருளினார். பாலய வயதில் பல சித்துகள் புரிந்ததால் பால சித்தர் என்றும் ,பிரம்மநிலையில் இருந்ததால் இவ்வூர் பிரம்மபுரம் எனவும் வழங்கலாயிற்று. இவரின் சைவக் கொள்கைகள் பலரால் மதிக்கப்பெற்றும் ஏற்றுக்கொள்ள பெற்றும் சிவலோகத்தை அடைவதற்கு நல்ஞானமே சிறந்த வழி என்றும் அதனால் உடம்பில் இருக்கும் உயிரானது நற்வீடுப்பேறு அடையும் என்றும் உபதேசம் கூறியதால் பல சிவ அடியவர்களும் சித்தர்களும் வணங்குகின்ற சிறந்த சிவஞானியாக பொம்மைய பாலயத்தில் திருவைந்தெழுத்தை ஓதும் திரு ஒளி செம்மலாகத் திகழ்ந்தார்.

மயிலை

முப்பத்தைந்து ஆண்டுகாலம் தவநிலையில் இருந்து முருகனை வழிபட்டார் இறைவனிடம் அருளை பெற வேண்டும் என்றால் குருவின் அருளை பெற்றால் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதை பாலசித்தர் தம் சமூகத்திற்கு உணர்த்தி காட்டுகிறார்.முருகனின் நேயர்களாக இருக்கின்ற வள்ளி தெய்வானையை மகள்களாக பாதுகாத்து முருகனோடு போர் புரிந்து முருகனின் திருவருளை பெற்றவரே நம் சிவஞானி .இவருடைய ஜீவசமாதி முருகன் சந்நிதிக்கு தெற்கு பக்கத்தில் இட்ட லிங்கம் பரசிவமாகி மக்களுக்கு காட்சி கொடுத்து அருள் பாலிக்கிறார்.

சித்தி பலவாய்விளங்க தெய்வம் ஒன்று உண்டு என்று உலகம்
நத்தி உய்யச் செய்தருளும் நம் பாலசித்த முனி

நாதனை அறா அன்பின் நண்ணுனையவே நெஞ்சே நீ
வேதனை உராது என்றுமே (ஸ்ரீ பால சித்தர் துதி)

இறைவனின் கோட்பாட்டினை வலியுறுத்தி அதனையும் மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்த சிவஞானியை நித்தமும் வணங்கினால் அவரின் அன்பினை பரிபூரணமாகப் பெற்று வாழ்வில் நல்லதொரு உயர்ந்த நிலையை அடையலாம்.

வழிவந்த தோன்றல்

சைவக் கொள்கையினை பரப்புவதற்கும் முகதி நிலையின் மகத்துவத்தை விளக்கவும் பல சீடர்களைக் கொண்டு சிதம்பரத்தில் வீரசைவ நெறி வளர்த்தார்.அச்சீடர் பரம்பரை சேர்ந்த அம்மவை என்னும் அம்மையார் பிள்ளைப்பேறு கிட்டாமையால் தம் கணவருடன் சேர்ந்து பால சித்தருக்கு தினமும் தொண்டுகள் செய்தார். சித்தர் உட்கொண்ட கள்ளிப் பாலினை பிரசாதமாக அம்மையாருக்கு

கொடுத்ததின் பயனாக ஆண் மகனை பெற்றார்.பெற்ற பிள்ளைக்கு சித்தர் ஞான உபதேசங்களை கூறி தனது சீடர் ஆக்கிக் கொண்டார்.அவரே சிவஞான பாலய தேசிகர் என்றும் இத்திருமடம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் என்ற பெயரிலும் வழங்கும் எனவும் அருள் கூர்ந்தார். சுவாமிகள் பிரமபுரம் (எ)பொம்மையார் பாளையத்திலும் மயிலத்திலும் காஞ்சியிலும் தம் வீர சைவ நெறிகளை தழைக்க செய்த தகைமையாளராக தவச்சீலராக முருகனின் அருள் பெற்று இப்புவி மைந்தராக வீர சைவத்தை "மானுடத் தொண்டினையே மகேசன் தொண்டாக" கருதி தம் கடமையை ஆற்றினார்.

அவர் வழி வந்தவரே தற்போது இருக்கும் இருபதாம் பட்டம் குரு மகா சன்னிதானம் தமிழ் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் ஏராளம் அவரின் அளப்பரிய பணி கடல் கடந்தும் பேசப்படுகிறது. என்பதை எள்ளளவும் ஐயமில்லை அனைவரும் உய்யும் பேறு வகையை சமயநெறி வாயிலாக கொடுப்பதன் மூலம் அவரின் உன்னதமான உயர்வு வெளிப்படுகிறது.

பேதமற்ற பெருந்தகையாளர்
வாழும் அறநெறியின் வாய்மை தோன்றல்,
தமிழை பெற்றெடுத்த தவப்புதல்வர்

அங்ஙனம் வணங்குவதற்கு உரியவரே நம் இருபதாம் பட்டம் மகா மகான்.

வீர சைவ நெறி

"பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க சைவ நெறியை அற நெறியாக கருதி வள்ளி தெய்வானையை உடனுடன் மணக் கோலத்தில் மா முருகன் உரையும் மாமலை மயிலமலை ஆழிக்கடலாக மயிலை மலையில் அமர்ந்து துறவறம் போற்றுவோருக்கு மட்டும் இல்லாமல் இல்லத்தாருக்கும் ஆசி வழங்கும் ஞான ஆசிரியரே சித்தர் என்பதை

பிறவா நெறியை விளக்கிடவே பெண்மான் சிவஞானிக் காணக்
குறமாது அவள்வான் மகள் விளங்க கோயில் கொண்ட குருகுகனே
(மயிலை திருவாயிரம்-8)

முக்திக்கு வித்திடும் வேத பொருளாக சித்தர் சிவஞானி காட்சியளிக்கின்றார்.

திருநீற்றின் வித்தானவர்

"பலவகைப்பட்ட வாத்தியங்கள் முழங்க வீர சைவ அடியார்கள் அவரை சூழ்ந்து பாடல் பாடிவர முனிவர்கள் துதி பாட சிவனையும் முருகனையும் ஒத்த சிவஞானி மும்மலங்களையும் நீக்கும் திருநீறு பூசி உத்திராக்கம் அணிந்து காவியாடையை உடுத்திக் கொண்டு உலா வருவதனை,

வருந்து கழை
விரிதோல் மதவேளை வெல்லும் அடையாளமென
கல் தோய் துகில் மருந்தில் காட்சி தர
(சி.பா.தே.நெஞ்சு விடு தூது 56)

திருநீறு அணிந்த சிவஞானியின் திருமேனியை நினைக்கின்ற மனமே சிறந்தது. துதி பாடும் நாக்கே சிறந்தது அவர் தாமரை மலர் போன்ற திருவடியை பிடிக்கும் கைகளே சிறந்தது. மனிதர்கள் அங்கங்கள் யாவும் சிவஞானிக்கே என்றால் அவ்வங்கங்கள் எல்லாம் குற்றமற்ற அங்கங்களாகவே கருதப்படும்.

நீறுவாய் கோலம் நினை நெஞ்சமே நெஞ்சம் அவற்
கூறு நாவே மாற்றம் கூறும் நா பாறுவீழ்
வேல் பிடிக்கும் செவ்வேள் வியன் மயிலை ஞானிமலர்க்
கால் பிடிக்கும் கைகளில் கை (சி.பா. தேசிகர் கலம்பகம் 49)

வேந்தர் குலத்தோன்றல்

சிவஞானி சிருங்காரப் புன்னகையுடன் வரும்பொழுது பவப்பிணி போக்கும் திருவெண்ணீறனிந்து இடையில் கல்லாடை

காட்சி தர பல்வேறு அடியவர்கள் நடுவே வாத்தியங்கள் முழங்க திருச்சின்னங்கள் ஒலிஎழுப்ப அவரின் அன்புக்கு உரியவர்கள் ஆலவட்டம் எடுக்க வெண்கொற்றக் குடையின் கவரி வீச மலர் தூவி வானுலகத்து தேவர்கள் அனைவரும் ஞானத்தின் திருவுருவாய் பவனி வருவதனை,

தவஞானம் இல்லாதார் சாற்றிறும் வீடெய்தும்
சிவஞான தேவெறும் பேர்ச்செல்வன் பல நாசம்
முன்னொரு நாட் சாதனத்துள் முந்து திரு வெண்ணீறு
மன்னு முயிரினுறு மாசொழிக்கும் குன்று
கலவையுடன் மாசாய்க் கழியுமெனக் கூறிப்
புலவரினம் போற்ற புனைந்து பல வணிகன்
(நெஞ்சுவிடு தூது 51 முதல் 55)

வெண்கொற்றக் குடையின் கீழ் வாழும் மன்னர்களுக்கு கவரி வீசுவார்கள். ஆனால் அடியவர்கள் கொண்டாடும் அன்பான எவருக்குமே இக்கவரி வீசுதல் என்பது (சிவஞானி) பொருத்த முடைய ஒன்றேயாகும்.

முடிவுரை

மனித நிலையிலிருந்து இறைநிலையை அடைய ஒழுகலாறுகளை போதிப்பவையே ஆதீனங்கள் ஆகும் .ஆதீனங்கள் மனிதனின் அருள் வாழ்விற்கு வழிகாட்டியாகவும்,திறவுகோலாகவும் இருப்பதே நிதர்சனமான உண்மை நம் நாட்டின் பண்பாட்டினை காத்து வருகின்ற பெட்டகமாக ஆதீனங்கள் அமைகின்றன .இவ்வாய்வுக்கட்டுரையின் வழி வீர சைவ நெறியின் திறவுகோலாக திருநீற்றின் தெய்வத்தன்மையும் , பயனையும் சிவஞானி வழி நின்று விளக்குகிறது.

சான்றோர் போற்றும் மயிலம் முருகன்

அ. நித்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ் கலை அறிவியல் கல்லூரி மயிலம்.
nithya30112000@gmail.com

முன்னுரை

அழகே உருவானவன் முருகன் என்பதால்தான் வடிவேலன், முத்துக்குமரன் என்று மக்கள் அழைக்கின்றனர். முருகனுக்கு ஆலயம் அமைத்து வழிபடும் வழக்கம் பழங்காலத்தில் இருந்தே அமைந்துள்ளது. முருகன் ஆலயங்களில் மனநிம்மதி தரும் தலமாக இருப்பது மயிலம் திருக்கோவில். இறைவனை பற்றி பாடுவார் பலர். அந்த வகையில் மயிலம் முருகனை பற்றி பாடியோரை இக்கட்டுரையில் காணலாம்.

முருகன் அடியவர்கள்

அகத்தியர், நக்கீரர், ஔவையார், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர், குமரகுருபரர், பால தேவராயன், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், கிருபானந்த வாரியார் போன்றோர் முருகன் அடியவர்களில் முக்கியமானவர்கள் ஆவர். இவ்வடியவர்கள் முருகனை இலக்கியங்கள் வாயிலாக போற்றி, புகழ்ந்து, பாடி வந்தனர்.

மயிலம் முருகன்

சூரசம்ஹாரம் செய்யப்பட்டபின் சூரன் மயில் வடிவில் வந்து முருகனை வேண்டி தவமிருந்த இடமே மயிலாசலம். பின் மருவி மயிலம் என்றானது. இங்கு முருகன் வள்ளி தெய்வானையுடன் மணக்கோலத்தில் காட்சித்தருகிறார். இந்த கோவில் இராஜ கோபுரம் மயில் கொண்டைவடிவில் இருப்பதும் முருகன் வாகனமான மயில் வடதிசை நோக்கியிருப்பதும் தனிச்சிறப்பாகும்.

சான்றோர் போற்றும் மயிலம் முருகன்

இயற்கை எழில்மிகு குன்றின் மேல் இருக்கும் மயிலம் முருகனை பாடிய சான்றோர் ஏராளம். மயிலம் முருகன் மீது பிள்ளைத்தமிழ், அந்தாதி, துதி, தூது, கவிதை போன்ற சிற்றிலக்கியங்கள் வகையில் பாடல்கள் தோன்றியுள்ளன.

17-ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் மயிலம் முருகனை போற்றி "கொலை கொண்ட போர் விழி வாளோ " எனத் தொடங்கும் திருப்புகழ் பாடல் (546) பாடியுள்ளார். இது மயிலம் தண் மாமலைவாழ் வானோர் பெருமாளே என்று கடவுளின் பெருமைகளையும், பக்தர்களின் பிராத்தனைகளையும் போற்றி பாடுகிறது.

கொலை கொண்ட போர் விழி கோலோ
வாளோ விடம் மிஞ்சு
பாதக வேலோ சேலோ குறை கொண்டு
உலாவிய மீனோ
மானோ எனும் மானார்

பொருள்: கொலைதொழிலை தன்னிடத்தே அடக்கியுள்ள, சண்டை செய்யவல்ல கண்கள் அம்போ, வாளோ, விஷம் நிறைந்து பாவத்தொழிலை செய்ய வல்ல வேலாயுதமோ,சேல்மீனோ என்று கூறுகிறார்.

மயிலம் சுப்பிரமணியர் துதியமுது

புரட்சி கவி பாரதிதாசன் தொடக்க காலத்தில் எழுதிய துதி நூல் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது. தென் மயிலம் எனப்படும் மயிலம் தலத்தில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியர் மீது பாடப்பட்டது. அச்சில் வந்த பாரதிதாசனின் இரண்டாவது நூலாக கருதப்படுகிறது.

நூலின் தொடக்கத்தில் புதுச்சேரிவாழ் விநாயகர் காப்புப் செய்யுள் இடம்பெற்றுள்ளன. இவர் மயிலம்சுப்பிரமணியர் துதியமுது மட்டுமின்றி ஸ்ரீஷண்முகன் வண்ணப்பாட்டு, ஸ்ரீசிவ சண்முகம் கடவுள் பஞ்சரத்நம் போன்ற பாடல்களையும் முருகன் மீது பாடியுள்ளார்.

திரு மயிலம் வாழ்ந்தவேள் மேல்சிலசொல்
பெரியார்மணிவாக்கின்பீடு - தெரிவதற்குச்
செப்புகின்றேன் ஆதல்சிறுமைபுதல்வரின் பால்
ஒப்புதல்போல்ஒப்பஉவந்து"-துதியமுது பிள்ளைத்தமிழ்

மயிலம் முருகன் மீது திருவாரூர் வைத்தியநாததேசிகர் பாடிய நூல் "மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்"

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்

என்பதற்கேற்ப இயற்றப்பட்டது. முருகனின் குழந்தைப் பருவத்தை இரசிக்கக்கூடிய வகையில் பாடப்பட்டதாகும். அவ்வண்ணமே இப்பிள்ளைத்தமிழ் பொம்மபுர ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆதினத்திற்குட்பட்ட மயிலம் முருகனைப்புகழ்ந்து போற்றுவதாகும்.

இந்நூல்லில் மயிலம் முருகனை குழந்தையாக பாவித்து அவர் அழகையும் , இரண்டாம் பட்டத்து சுவாமிகள் காலத்துப்புலவர் பெருந்தகையாக விளக்கிய துறைமங்கலம் சிவப்பிரகாசர் சுவாமிகள் மனமுவந்து அருளியுள்ள நூல்களின் கருத்துக்களை ஏற்ற இடங்களில் அழகாக எடுத்தாளப்படுகிறது. சங்க இலக்கியக்கருத்துகளையும் பல இடங்களில் சிறிதும் மாறுபடாது எடுத்துப் போற்றுகின்ற திறன்கள் வியக்கத்தக்கதாகும்.

வருடைகுதிகொள மணிகள்சிதறிவெயில் விடுகுடுமி
மயிலை மலைதழையவருகந்தனைகக் காக்கவே

நவீன எழுத்தாளர் போற்றும்மயிலம்முருகன்

20-ம் நூற்றாண்டு செக்நாட்டு ஆய்வாளர் கமில் சுவெலபில்" திஸ் மைல் ஆப் முருகன் "(ஜிலீமீ உனீவீறீமீ ஷீயீ னீஹ்ஷுஹ்ரீணீஸீ : ஷீஸீ மீணீனீவீறீ றீவீமீமீக்ஷீணீமீஹ்ஷுக்ஷீமி ஷீயீ உஷீஹ்ஷுமீலீ மிஸீபீவீணீ) என்ற நூலில் தமிழ்நாட்டில் உள்ள முருகன் வழிபாட்டுத்தலங்களைப் பற்றி குறிப்பிடும் போது மயிலம் முருகன் குறித்தும் கோவில் தோற்றம் குறித்தும் எழுதியுள்ளார்.

"பிரான்சுவாலெர்னாவுட்" என்ற ஆய்வாளர் "Mailam : A Murugan temple at the crossroads of myth and local culture" என்ற ஆய்வுக் கட்டுரையில் மயிலம் முருகனைப்பற்றி ஆய்வு. அதில் கோவில் வரலாறு, புராணம், சிற்பக்கலைகள், உட்புறம்- வெளிப்புரம் ஆகியவை பற்றிய பகுப்பாய்வு செய்துள்ளார். மேலும் பல நவீன எழுத்தாளர்கள் மயிலம் முருகனை போற்றியும் ஆய்ந்து இருக்கிறார்கள்.

முடிவுரை

முருகனின் பேரழகை நக்கீரர், கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு என்கிறார். நாம் பேசும் பேச்சுக்குத்துணையாக இருப்பது முருகா என்னும் நாமங்கள் எனப்பன்மையால் விளிக்கிறார்அருணகிரிநாதர் " மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்". இன்னும் பல சான்றோர் பெருமக்கள் மயிலம் முருகனை போற்றி பல நூல்களை இயற்றியுள்ளார்.

பவப்பிணி மருத்துவனெனப்படு சிவஞான வள்ளல்

திருமதி து. சுபஸ்ரீ
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்-29.

ஆய்வுச் சுருக்கம்

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் இரண்டாம் பட்டம் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் அருளாட்சியின்போது ஆதீனப் புலவராக விளங்கியவர் கற்பனைக்கவிஞர் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர், சுவாமிகளைத் தீட்சா குருவாகக் கொண்டு அவரது அடிக் கீழிருந்து தமிழ்த்தொண்டாற்றியவர். இவரது தமிழ்ப்பணியின் உச்சம், சுவாமிகளைக் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு இயற்றிய ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம். இந்நூலுள் தன்னுடைய ஞானாகுருவின் சிறப்பியல்புகளைப் போற்றியுரைக்கும் தன்மையினை அறிய இயலும். சுவாமிகளது, திருநாமம், திருக்கோலம், திருவருள், திருவடி போன்றவை அருளக்கூடிய பேற்றினை இந்நூலினின்று அறிந்து உய்ய இயலும். இவை பற்றி விளக்கும் பாங்கிலேயே இக்கட்டுடையானது அமைகிறது.

திறவுச் சொற்கள்

முருகனே சிவஞானி, திருநாமம், திருவுருவம், திருவடி, திருவருள் சிறப்புகள்.

முன்னுரை

"நாரண ஆதி வணங்கும் அரும்சிவ ஞான தேசிகன்". தேவர்கள் முதலாக அனைவரும் வணங்கக் கூடிய வகையில் இந்நிலவுலகில் வாழ்ந்தவர் பொம்மபுர ஆதீன இரண்டாம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள். இவரை ஞானகுருவாக ஏற்றுக்கொண்டவர் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். இவரியற்றிய ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம், பன்னிரண்டு உறுப்புகளைக்கொண்டு சுவாமிகளின் திருப்பெருமைகளை எடுத்துரைக்கிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலினை முதன்மை நூலாகக் கொண்டும், மேலும் இந்நூலின்வழி நின்றும், சுவாமிகள் தன்னடியவர்களை நல்வழிப் படுத்தும் பாங்கினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சிவஞான பாலயரின் குருமரபு

"பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!"

சுவாமிகளின் குருமரபினை எடுத்துரைக்கும் பாடல் இது. பொம்மபுர ஆதினத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீபாலசித்தர் குருமாகா சந்நிதானங்களுக்கு அடுத்து இரண்டாம் பட்டமாக அருளாட்சி ஏற்றவர் தவத்திரு ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் ஆவார். இவர் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை அருளாட்சி செய்துவந்தார்.

சிவஞான தேசிகரும் சிவப்பிரகாசரும்

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அருளாட்சிக் காலத்தில் ஆதீனச் சீடராகவும், ஆதீனப் புலவராகவும் விளங்கியவர்கள் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், இரண்டாம்பட்டம் சுவாமிகளை தமது தீட்சா குருவாக ஏற்றுக் கொண்டவர். மேலும், தனது ஞான குருவினைப் பாட்டுடத்தலைவராகக்கொண்டு,

சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ்,
சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடு தூது,
சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு,
சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி,
சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்

என்ற ஐந்து நூல்களைப் பாடியுள்ளார் என்பது சிறப்பிற்குரியது.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம்

இந்நூலானது காப்புப்பாடல், வாழ்த்துப்பாடல் உட்பட ஆசிரிய விருத்தம் முதலாய பல யாப்பு முறைகளால் தொண்ணூற்று மூன்று பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலுள் தம் ஞானாசிரியரின் பல்வேறு சிறப்பியல்புகள் போற்றியுரைக்கப்

பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. குறிப்பாக ஞானாசிரியரின் திருநாமப் பெருமை, திருவடிப் பெருமை, திருவருட் பெருமை போன்றவை நினைந்து போற்றத்தக்கன.

முருகனே சிவஞானி

"அறிவதை அறிந்தார் மூவர்
அறுமுகக் குரவன் தன்பால்
முறைவரு வருணம் உற்று
முக்கணான் குரு என்று அன்பு
செறிகிலன் மலய வெற்புச்
செஞ்சடை முனிவன் யாக்கை
குறியவன் குறுகி லான்எம்
கோள்சிவ ஞானி தானே." **(சிவ.கலம்.93, ப.150)**

அறுமுகக் குரவனாகிய முருகப்பெருமானிடத்தல் பிரணவ மந்திரத்தின் பொருளை அறிந்தவர்கள் முருகனின் தந்தையாகிய சிவபெருமானும், பொதியமலை முனியாகிய அகத்தியரும், மயில மலையின்கண் எழுந்தருளும் சிவஞானியும் ஆகிய மூவராவர். இம்மூவருள் முருகப்பெருமானின் அம்சத்தில் ஒன்றினைப் பெற்றவர் சிவஞானியேயாவார்.

திருநாமச் சிறப்பு

"முனிப்புலி தொழசிதம் பரம்கண் உற்றவர்
முழைப்புலி முழங்கும் அவ் அருணை யம் கிரி
நினைப்பவர் அமலஆ ருர்ப்பி றப்பவர்
நிகழ்த்து உறு காசியில் சென்றுஇ றப்பவர்
தனிப்பெரு முத்தியை அடைவர் தாங்களே
தலைப்படு குவர்உயர் பதம் உன் கச்சியை
உனைப் பெயர் பகர்பவர் கேட்கின் றாரொடு
உரைப்பரும் புகழ்ச்சிவ ஞான தேவனே."(சிவ.கலம்.91, ப.148)

திருவாரூர் - பிறந்தால் முக்தி, சிதம்பரம் - காண முக்தி, திருவண்ணாமலை - நினைக்க முக்தி, காசி - இறக்க முக்தி என ஒப்பற்ற பெருமையுடைய முத்தியை பிறந்தால், கண்டால், நினைத்தால், இறந்தால் அடைவார்கள் எனும் கருத்து உளது. ஆனால் சிவஞானியின் இருப்பிடத் திருத்தலங்களுள் ஒன்றான கச்சி நகரின் பெயரையும், அவரது திருநாமத்தையும் சொல்பவர்களும், சொல்வதைக் கேட்பவர்களும் உயர்பதம் எனப்படும் வீடு பேற்றினை அடைவர் என்பதை உண்மை.

திருக்கோலச் சிறப்பு

"காலம் போயிற் றஞ்சன மன்ன கடாமீதி
லாலம் போல்வெங் காலனு மந்தோ வணுகுற்றான்
சீலங் கேண்மி னொய்யென வேநஞ் சிவஞானி
கோலங் காணுங் கொள்கை கருத்திற் குறியீரே."(சிவ.கலம்.12, ப.37)

சிவஞானியினுடைய திருக் கோலத்தைச் சிந்தித்து எண்ணத்தின் கண் கொண்டிருந்தாலோ அல்லது அவரது திருக்கோலத்தை தரிசித்தாலோ எமனது பாசக்கயிற்றினின்று அகப்படாது இருக்கலாம் என்கிறார் சிவப்பிரகாசர்.

திருவடிச் சிறப்பு

"இல்லாமை இல்லாமை எய்தலாம் நூல்முழுதும்
கல்லாமை கல்லாமை கற்கலாம்- வல்லான்
சிவஞான தேவன் திருவடியைப் போற்றத்
தவஞானம் உண்டாமின் தான்."

சிவஞான தேசிகரது திருவடியைத் துதித்தால் பேரறிவு உண்டாகப் பெறும். அப்பேரறிவு நம்மை வறுமை நிலையின்று மாற்றி உயர்வான வாழ்வைத்தரும். இங்கு வறுமை என்பது அறியாமையைக் குறிக்கும். நமது அறியாமை இருளானது அடிகளது பேரறிவு ஒளிபடின் நீங்கிவிடும். அப்பேரறிவு வாய்க்கப்பெறின் நூல்கள் யாவற்றையும் படிக்காமலே கற்றுக் கொள்ளலாம் என்பது உண்மை. ஆக, சிவஞான தேசிகரைப் போற்றப் பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் பெறலாம் என்பது திண்ணம்.

வார ணாசி சிதம்பரம் மங்கல மாதை வீழிபுகார்
சீர ணாமலை அம்பர் வலஞ்சுழி சேது மாதவன் ஊர்
ஆர ணஅடவி நின்பத பங்கயம் ஆகும் வேறு அறியேன்
நார ணஆதி வணங்கும் அரும்சிவ ஞான தேசிகனே (சிவ.க.74)

இறந்தால் முக்தி தரும் காசி, தரிசித்தால் முக்தி தரும் தில்லை, திருமங்கலம், மாதை, திருவீழிமிழலை, திருவண்ணாமலை, திருவழஞ்சுழி, இராமேஸ்வரம், திருமறைக்காடு ஆகிய தலங்களுக் கெல்லாம் சென்று இறையை தரிசித்தால் கிடைக்கும் பேறுகளைனைத்தையும் ஒருங்கே ஒரேயிடத்தில் தருவது நம் அடிகளார் அவர்களது பொன்னாற் திருவடியே ஆகும். இம்மைக்கு வேண்டிய பொருட்பேறு, மறுமைக்கு வேண்டிய பிறவாமைப் பேறு ஆகியவையை அளிப்பது ஐயனின் திருவடியே என்பதனை அடியவர்கள் உணர்தல் வேண்டும்.

திருவருட் சிறப்பு

வினையேன் எனினும் கொடியேன் எனினும் விதிவிலக்கு
நினையேன் எனினும் யானே அறங்களின் நின்று உடையேன்
அனையே அனைய சிவஞான தேவன் அருள் மிகுதி
எனையே அடைதலி னால்ஐயம் ஏதும் இதற்கு இலையே.

(சிவ.கலம்.61, ப.108)

தீயவர்களாய் இருப்பினும், செய்யத் தகுவன, அல்லாதன தெரியாதவர்களாயிருப்பினும், தாயையொத்த அன்பினை உடையசிவஞானதேசிகனது திருவருள் நம்மைச் சேர்ந்த காரணத்தால் அனைவரும் அறவொழுக்கத்தில் ஒழுகுபவர்களாகின்றோம். ஆதலின் சிவஞானி தாய்க்கு நிகரான அன்புடையவர் ஆவார் என்கிறது.இப்பாடல் மேலும்அடிகளது திருவருளானது நாம்எப்படியிருப்பினும் நம்மை நல்வழிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

எனக்கு பிறப்பு இல்லை என்றே கனல்மழு ஏந்துவன்யான்
நினக்குக் கருணைஎன் மேல் ஆதலின்நின் நிலைமை கண்டே
எனக்குப் பிறப்புஎன் பார்சிவ ஞானி இரு நிலத்தின்
நினக்குப் பிறப்பு உண்டு என்பார் அலரோஅவர்நிந்தை செய்தே.

(சிவ.கலம்.82, ப.137)

சிவஞானியின் திருவருள் நம்மேலிருந்தால் அடியவருக்குப் பிறப்பு இல்லை. இந்த பெரிய உலகில் பிறவாத நிலையைக் கொண்ட நினக்குப் பிறப்பு உண்டு என்று சொல்பவர் அறியாமையுடையவர்கள் என்கிறது இப்பாடல். இப்பாடலின் மூலம், சிவஞானிக்குப் பிறப்பில்லையெனில் அவரது திவருளை முழுமையாகப்பெற்ற அவரது அடியவர்களுக்கும் பிறப்பு என்பது கிடையாது, அவர்களும் வீடுபேற்றினை அடைவார்கள் என்பதனை அறிய முடிகிறது.

முடிவுரை

இம்மை வாழ்விற்குத் தேவையான பொருட்செல்வம், மறுமை வாழ்விற்குத் தேவையான வீடுபேறு ஆகியவற்றை அடியவர்களுக்கு அருளும் பாங்கு சுவாமிகளின் திருவடிக்கு உண்டு என்பதனை, உடனிருந்து இவைபெற்ற சிவப்பிரகாச சுவாமிகளின் பாடல்களின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. *கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிகாச சுவாமிகள், ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம் மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு - முதற்பதிப்பு, 2015.*

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழும் சிவஞான பாலய சுவாமிகளும்

முனைவர் கி அன்பு
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அகர்சந்த் மான்மல் ஷெயின் கல்லூரி
சென்னை-61.

முன்னுரை :

சமூகம் உயர்ந்தோங்க வீரசைவ நெறி தழைக்க தமிழகத்தில் தொண்டாற்றி வரும் திருமடங்களுள் முதன்மையாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் .இதன் புகழுக்குப் புகழ் சேர்க்கும் விதமாக வைத்தியநாத தேசிகர் அருளிய "மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூல் பக்தி இலக்கியத்திலும், சிற்றிலக்கியத்திலும் ஒப்புயர்வற்ற நூலாகும். சந்தமும் இதர இலக்கிய இன்பங்களோடும் திகழும் இந்நூல் வழி முருகனின் அழகையும் , மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமத்தின் கொடையும் ஆய்ந்தறிவோம் .

வைத்தியநாத தேசிகர்:

பக்திச் சுவை மிக்க ' மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' என்னும் இந்நூலின் ஆசிரியர், சோழநாட்டுத் திருவாரூரில் அபிடேகத்தார் மரபில் வன்மீகநாதர் தேசிகரின் மைந்தராகப் பிறந்த வைத்தியநாத தேசிகராவார். சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய 17ஆம் நூற்றாண்டே இவரது காலமாகும். இவரது தந்தையாரும், வழிவழி மரபினரும் சிறந்த தமிழ்ப்புலமையோடு விளங்கியவர்களாவர். அதனால் இந்நூலாசிரியர் தமிழ் வளர்த்த மரபினராகத் திகழ்கிறார்.

இவர் தமிழ்மொழி, வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமையுடையவர். சிறந்த இலக்கிய இலக்கணங்களைத் தமிழுலகிற்குக் கொடையாகத் தந்த பெருமைக்குரியவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் தமிழ் ஐந்திலக்கணங்களையும் கூறும் இலக்கண விளக்கமென்னும் நூலின் ஆசிரியரும் இவரே ஆவார். மேலும் நல்லூர் புராணம், வாட்போக்கிப் புராணம், திருவாரூர் பன்மணிமாலை, பாசவதைப் பரணி எனும் நூல்களும் இவர் இயற்றிய நூல்களாகும்.படிக்காசுப் புலவர், ஒப்பிலாமணி

தேசிகர், சதாசிவ தேசிகர், திருவேங்கடநாதர் எனும் மாணவர்களை பெரும்புலவர்களாக உருவாக்கிய பெருமைக்குரியவரும் இவரே

ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவீடா ரோநாற்பத்து
ஒன்பதின்மர் என்றே உரைப்பாரோ-இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதந் நாள்சரித்தக் கால்

சிவஞான பாலய சுவாமிகள் வீரசைவப் பெரியதிருமடம்

அன்பின் வடிவான சிவபெருமான் உறைந்திருப்பது திருக்கயிலைமலை. இங்கு மேற்குவாயில் கணத்தலைவராக விளங்கிய சங்குகன்னரை, சிவபெருமான் அழைத்து, பூவுலகில் வீரசைவ நெறிகளை வளர்க்குமாறு ஆணையிட்டருளினார். அதனை ஏற்ற சங்குகன்னர் பொம்மபுரக் கிழக்குக் கடற்கரையில் பாலகனாக அவதரித்தார். இவரது பரம்பரையில் தோன்றியதே ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் வீரசைவப் பெரியதிருமடம். பாலசித்தர் பொம்மபுரத்தில் திருமடம் அமைத்து குரு இலிங்க சங்கம வழிபாட்டினை தெளிவுபடுத்தி வந்த காலத்தில், நாரத முனிவர், முருகப்பெருமான் அருள்பெற மயிலமலை பற்றிக் கூறினார்.

முருகனின் திருவருள்

பாலசித்தர் மயிலமலை அடைந்து தவமியற்றிய காலத்தில் வள்ளி தெய்வானையார் முருகனுடன் ஊடல் கொண்டு பாலசித்தரிடம் அடைக்கலம் புகுந்தனர். பாலசித்தருக்கு அருள் புரிய வேண்டி சித்தருடன் போர்புரிந்து, தான் யார் என்பதை உணர்த்திய முருகனுக்கு தமது பாதுகாப்பில் இருந்த சித்த கன்னியரை மணம்முடித்து வைத்தார் பாலசித்தர். முருகப் பெருமான், பாலசித்தரின் வேண்டுதலுக்கு இணங்க அவரது சீடராகிய சிவஞானிக்குச் சந்நியாச்சிரமம் தந்து ஆச்சாரிய அபிடேகமும் ஞான உபதேசமும் புரிந்து தமது அம்சத்திலே ஓரம்சம் அவரிடத்திலே பதியும்படி செய்து பாலை உணவாகக் கொண்டு சீட பரம்பரையோடு சிவஞான பாலய தேசிகராய்த் திகழ திருவருள் பாலித்தார்.

பாடல் பெற்ற திருத்தலம்

சிவயோகப் பெருவாழ்வு பெற்ற பாலசித்தர் ஓர் ஆனிமாதத் திருவாதிரையில் மயிலம் மணக்கோல மாமுருகன் வலப்புறத்தில் சிவயோக சமாதி கூடினார். மயிலம் திருத்தலத்தை, கயிலை போல் சிறந்த மயிலமால் வரையும் என்றும், மந்திரம் ஒன்று ஆயிரமாய்

வளர்ந்து பயன்தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை என்றும், மயிலம் பொம்மபுர ஆதீன முதன்மைச் சீடர் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்போற்றிப் பாடியுள்ளார்.

சிகரமணி மயிலமலை முருகனுடன் அமரும் இறை என்றும், கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து மயிலமலை மீதிருக்கும் வள்ளல் என்றும் சிவஞானியையும் போற்றிப் பரவுகிறார் சிவப்பிரகாசர். மேலும் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், திருவாரூர் இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாரதிதாசன், திரு.வி.க, பன்னுருட்டி மணி அப்பாவையர் ஆ.சிவலிங்கனார் போன்ற புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற பெருமை உடையது மயில மலை ஆகும்

பாசவதைப் பரணி

வைத்தியநாததேசிகர் அவர்கள், மயிலம் பொம்மபுர வீரசைவ ஆதீன குருமகா சந்நிதானங்களாகத் தம் காலத்திருந்த சுவாமிகளின் தொடர்பைப் பெற்ற பொழுது, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாசவதைப் பரணி என்னும் சமய நூலொன்றை இயற்றினார். சொற்சுவையும் பொருட்சுவையும் சமயச் சிந்தனைகளும் பொதிந்த நூலாக பாசவதைப்பரணி அமைந்துள்ளது. இந்நூலில் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்துப் பெருமைகளும் சிவஞானியின் சொரூப நிலையும் விளக்கம் பெறுகின்றன.

குருநாதரைப் பாடிய நூலாசிரியர் மயில மலையில் மணக்கோல மாமுருகன்பால் கொண்ட அளவற்ற அன்பின் மிகுதியாலும், முருகப்பெருமான் தம் மீது சந்தத்தமிழ் பாடுக எனப் பணித்தமையாலும் வைத்தியநாத தேசிகரின் தவப்பயனால் இந்நூலைப் பாடும் வரம் கிட்டியது என்பதை இந்நூலில் வரும்.

கதலிக் கனியும் சர்க்கரை யுஞ்செங் கன்னற் பொழிபாலுங்
கருணையின் அருள்செம்திவைபோ லச்சுவைஞ்

என்று பாடியுள்ளார்

'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூலின் உட்பொருள்

வைத்தியநாததேசிகர் இந்நூலில் காப்புப் பருவம் மூன்றாம் செய்யுளிலும் ஏனைய ஒன்பது பருவங்களில் முதற்செய்யுளாக உள்ளவற்றிலும் சிவஞான பாலய தேசிகருக்கும், முருகப் பெருமானுக்கும் உள்ள தொடர்பினை விளக்கியுள்ளார்,

அச்செய்யுள்கள் முருகப்பெருமான் சிவஞானிக்கு நான்மறைப் பொருளை (வேதத்தின் உட்பொருள்) விளக்கியருளியது. தீட்சை புரிந்து அருளியது. ஒப்பற்ற மொழியான பிரணவ மந்திரத்தின் உண்மைப் பொருளை விளக்கியருளியது. உலகினரை உய்விக்க அபரஞானம் பரஞானங்களை சிவஞானிக்கு உள்நின்று உணர்த்தி யருளியது, திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், பழனிமலை, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர் சோலை முதலிய திருத்தலங்களில் முருகப் பெருமான் குடிகொண்டிருத்தல் போலச் சிவஞானியின் சிந்தையிலும் குடிகொண்டிருத்தலை விளக்கு கின்றன.

சீர் கொண்ட புகழ்மயிலைச் செல்வனைக்காங் கையனைச்..

அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என முருகன் அருள் பெற்ற சமயச் சான்றோர்களின் வரிசையில் வைத்தியநாத தேசிகருக்கும் ஒரு தனித்த இடமுண்டு என்பதை மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ் விளக்கி நிற்கின்றது. முருகனையும் சிவஞானியையும் ஒன்றாகக் கருதியே இச்சமயச் சான்றோர்கள் பாடல்களைப் புனைந்துள்ளனர்.

பொம்ம புரமும் புவியும் புரந்தருளும்
செம்மல் சிவஞானி சீருணரச் செய்யுமிடம்
கைம்மலரால் செவ்வேல் கடவுளையே பூசிப்பார்
மம்மர் அறுப்பான் வளர்ந்த மயிலாசலமே

என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார்.

முருகப்பெருமானின் தோற்றப் பொலிவு, அவரது சக்திகளாக விளங்கும் இச்சாசக்தி (வள்ளி நாச்சியார்), கிரியா சக்தி (தெய்வானை), ஞானசக்தி (வேல்) எனும் முச்சக்திகளின் விளக்கம், முருகனைப் பற்றிய புராண வரலாற்று நிகழ்வுகள், முருகப் பெருமான் சிவனுக்கும், குறுமுனி அகத்தியர்க்கும், சிவஞானிக்கும் பிரணவப் பொருள் உபதேசித்த திறம், மயில மலையின் இயற்கை வளங்கள், கடவுளர் யாவர்க்கும் முடிமணியாகத் திகழும் முருகப்பெருமானின் பெருமைகள், சைவசித்தாந்தம் உரைக்கும் 36 தத்துவங்கள் போன்ற பல்வேறு செய்திகள் இந்நூலில் விளக்கமுற தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

சமுதாயம் உயர்ந்தோங்க வீரசைவ நெறி தழைக்க தமிழகத்தில் தொண்டாற்றி வரும் திருமடங்களுள் முதன்மையாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம். இவ்வாதீனத்தின் குருமகா

சந்நிதானங்களாக விளங்கிய ஸ்ரீ பாலசித்தர், ஆதி சிவஞானியைத் தொடர்ந்து தற்போது அருளாட்சி செய்து வரும் 20ஆம் பட்டம் சுவாமிகள் புலவர் பெருமக்களால் போற்றிப் பாடப்பெறும் பெருமைக்குரியவர்கள்.

பாவலர் புதுவை இளங்குயில் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

ஆன்மீகம் வளர்ந்திட ஆல்போல் தழைத்திட
தன்னையே அளித்திடும் தருமமிகு திருமடம்
(இலக்கண விளக்கம் வ. வைத்தியநாத தேசிகர் 125)

அன்பே சிவமென ஆருயிர்க் கெல்லாம்
அன்பினை வழங்கிடும் ஆன்மீகப் பெருமடம்
எப்பிணி யாகினும் எக்குறை யாகினும்
அப்பிணி போக்கிடும் அருமருந் தாகிடும்
சுப்பிர மணியனும் சுந்தரப் பெயருடை
அப்பனை வணங்கிட அல்லலும் போய்விடும்

திருமுருகா எனில் தீர்ந்திடும் துன்பமே
உருகிடும் உள்ளமே ஊர்ந்திடும் இன்பமே
இருபதாம் பட்டமே இப்பதி ஈசனே
பருதியைப் போலவே பற்றிலி வாழியே"

எனப் புதுவைக் கவிஞர் பாவலர் சு. சங்கர், மயிலம் முருகனையும் சிவஞானியையும் போற்றிப் பாடுவதைக் காணலாம்

முருகனின் அழகு :

பஞ்சூட்டு பதுமமும் பதுமத்து நீலமும்
நீலோற் பலங் கிழித்த
பைந்தோட்டு வள்ளையு மணந்த குஞ்சரியைப்
பசுங்கொடிக் குறமா தினைச்
செஞ்சூட்டு சேவலங் கொடியையொரு நொடியிலெண்
டிசையெலாஞ் சூழ மயிலைச்
செவ்வேலை யணிகொண்ட வேலனைப் பணிவதே
தினம் வேலை யாகி நிற்பாம்.

எனும் இப்பாடலில் பிறைமதியையும் ஊமத்தம்பூவையும் கங்கை யாற்றையும் அறுகம்புல்லையும் பெரும்பாம்போடு அணிந்துள்ளவ ராகிய நீல மணிமிடற்றுச் சிவபிரான் மகிழுமாறு, அம்பிகை தாய்ப்பாலூட்ட வளர்ப்பவராகிய மயிலம் முருகப்பெருமானைப் போற்றும் இப்பிள்ளைத் தமிழ்நூல் சிறப்படைய, செம்பஞ்சு

தோய்ந்த தாமரை போலும் திருவடியையும், செந்தாமரையில் பொருந்திய நீலோற்பலம் போலத் திருமுகத்தே பொருந்திய கண்களையும் நீலோற்பலத்திற்கு இடையே எழுந்த வள்ளை போலக் கண்களையடுத்துக் காணப்பெறும் செவிகளையும் கொண்டு திகழும் தெய்வானை அம்மையையும், பச்சைக் கொடி போல்வாராகிய வள்ளியம்மையையும் கொடியாகத் திகழும் சேவலையும், உலகை ஒரு நொடியில் வலம் வரவல்ல மயிலையும், செவ்வேலையும் தன்பால் அழகுறக் கொண்டு திகழும் முருகப்பெருமானை வணங்குவதையே நாள்தோறும் செய்யத் தக்க பணியாக யாம் கடை பிடிப்போம் என்று பாடியுள்ளார் வைத்தியநாத தேசிகர்.

அழகு முருகனின் அம்புலிப்பருவம்

அம்புலிப்பருவம், பதினைந்தாம் மாதத்தில் பாடப் படுவதாகும். முருகப்பெருமான், சிவபெருமான், அகத்தியமுனிவர், சிவஞான பாலய சுவாமிகள் ஆகிய மூவர்க்கும் உபதேசித் தருளினார் என்னும் மூவர்க்கும் முறையே பிரணவப் பொருள், முத்தமிழ் விளக்கம், சமய அவிரோதம் ஆகியவற்றை அவர் உபதேசித்தார். உபதேசம் பெற்ற மூவரும் முறையே சனகாதி முனிவர்க்கும் தொல்காப்பியராதி பன்னிருவர்க்கும், அன்பர்களுக்குமாக அவற்றை உபதேசித்தல் வேண்டும் என முருகப்பெருமான் விழைந்தமையும் கீழ்க்காணும் பாடல் வழி சுட்டப் பெறுகின்றது.

ஒருபரம் பரனுக்கு மொழியொன் றுரைத்ததனை
யொருநால்வ ருக்கு ரைத்து
உற்றதொரு வடநிழலு கந்துறைதி நீயென்ன
யோதியோ தப்ப ரவைநீர்
பருகுகும் போதய முனிக்குமுத் தமிழையும்
பாலித்து மலயத் துநீ
பன்னிருவ ருக்கிசைத் தமருகென வேபணி
பணித்துப் பணிப்பா ரெலாந்
தெருளுமால் பரியவே அட்டமா சித்தியுஞ்
சின்மயா நந்தநிலையும்
தேருமெண் ணெண்கலையு நண்ணுவண் ணந்தந்து
சிவஞான தேசி கர்க்
கருள்சுரந் துதவியவ னுனைவரவ ழைத்தன
னம்புலீ யாட வாவே
யணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாட வாவே

எனும் பாடலில் ,சந்திரனே, சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்து 'இதனைச் சனசாதி முனிவர்க்கு உபதேசித்துத் தாங்கள் கல்லால நீழல் கீழ் விரும்பி வீற்றிருப்பீராக' எனக் கூறியும், கடல்நீரை குடித்த அகத்திய முனிவர்க்கு முத்தமிழை விரித்துரைத்து, 'இதனை நீவிர் பன்னிருசீடர்க்கு விளக்கியுரைத்துப் பொதியமலையில் தங்கியிருப்பீராக' எனக் கட்டளையிட்டருளியும், சிவஞான பாலய சுவாமிகளுக்கு, உலகினர்க்குப் பொருள்மயக்கம் தீர உபதேசிக்கும் பொருட்டு, அட்டமாசித்தியும், சின்மயானந்த நிலையும், அறுபத்து நான்கு கலைகளையும் எடுத்துரைத்தும் அருள்பாலித்த முருகப் பெருமான், உன்னைத் தன்னோடு விளையாட அழைத்தனன், அழகிய மயிலமலை முருகப் பெருமானோடு விளையாட வருவாயாக என்பதும் அழகுறப் பாடப்பட்டுள்ளது.

முருகணின் முத்தப் பருவம்

முத்தப்பருவமாவது, குழந்தையை அழைத்துத் தமக்கு முத்தம் தருமாறு செவிலித்தாயர் வேண்டிநிற்பதாகும். இது குழந்தையின் 11ஆம் மாதத்தில் பாடப்படுவதாகும்.

ஊனாறு கப்புவா யிப்பிமுத் துப்புறு
மும்பறரு முத்தம் மாளி
யுகிரினா லூறுபடும் வேய்முத்த மெரிகதுவும்
முரகன்வாய் முத்த மாலந்
தானாறு மதிமுத்த மறுவுண் டிருக்குஞ்
சலஞ்சலந் தருமுத்தமுந்
தாளதா மரைமுத்த மும்பங்க மெய்துமவை
தாமெவையும் யாம்வி ரும்பேந்
தேனாறு சந்தனப் பூநாறு சோலைசூழ்
தென்மயிலை தழையவந்து
சிவஞான தேசிகற் கோதுமொரு மொழியுடன்
செல்வியுமை யவள்தி ருமுலைப்
பானாறு செங்குமுத வமுதச் செழுங்கனிப்
பவளவாய் முத்த மருளே
பருதிவெயில் விடுபகங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்த மருளே.

எனும் இப்பாடலில் கதிரவன்போல் ஒளிவீசுவதும், இரத்தம் தோயப் பெற்றதுமாகிய வடிவேலினை ஏந்தியவனே, கிளிஞ்சலின் முத்து, உப்புகரிக்கும், யானையின் முத்து,சிங்கத்தின் நகம் பட்டு கீறல் உற்றிருக்கும் மூங்கிலின் முத்து, தீய்ந்த மணம் கொண்டிருக்கும்,

பாம்பின் முத்து, விட வாசனையுடையது, சந்திரனின் முத்து, களங்கமுடையதாக இருக்கும், வலம்புரி முத்தும், தாமரை முத்தும் -சேறு படிந்திருக்கும். ஆதலின் இவற்றை யாம் விரும்போம்.

தேன்மணக்கும் சந்தனமலர் சோலை சூழ்ந்த மயிலமலை தழைக்குமாறு வந்து, சிவஞான தேசிகருக்கு உபதேசித்த ஞான மொழியுடன் அம்பிகையின் திருமுலைப்பால் மணக்கும் நின் செய்தருளும் அமுதமும் கனியும் பவளமும் போன்ற திருவாயால் முத்தம் தந்தருள்வாயாக.

கங்கை யாற்றையும் அறுகம்புல்லையும் பெரும்பாம்போடு அணிந்துள்ளவராகிய நீல மணிமிடற்றுச் சிவபிரான் மகிழுமாறு, அம்பிகை தாய்ப்பாலூட்ட வளர்ப்பவராகிய மயிலம் முருகப் பெருமானைப் போற்றும் இப்பிள்ளைத் தமிழ்நூல் சிறப்படைய, செம்பஞ்சு தோய்ந்த தாமரை போலும் திருவடியையும், செந்தாமரையில் பொருந்திய நீலோற்பலம் போலத் திருமுகத்தே பொருந்திய கண்களையும் நீலோற்பலத்திற்கு இடையே எழுந்த வள்ளை போலக் கண்களையடுத்துக் காணப்பெறும் செவிகளையும் கொண்டு திகழும் தெய்வானை அம்மையையும், பச்சைக் கொடி போல்வாராகிய வள்ளியம்மையையும் கொடியாகத் திகழும் சேவலையும், உலகை ஒரு நொடியில் வலம் வரவல்ல மயிலையும், செவ்வேலையும் தன்பால் அழகுறக் கொண்டு திகழும் முருகப்பெருமானை வணங்குவதையே நாள்தோறும் செய்யத் தக்க பணியாக யாம் கடை பிடிப்போம் என்று பாடியுள்ளார்.

முடியுரை

இறை பக்தி மட்டுமன்றி ஓசை இன்பமும் பொருட்செறிவும் மிக்க பாடல் புனைந்திருக்கும் ஆசிரியருக்கு சங்க இலக்கியங்களிலும் தத்துவங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும், சிவப்பிரகாசரின் செந்தமிழ் நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியுடைமை உள்ளமையைக் குன்றின் மேலிட்ட விளக்காகக் காணமுடிகின்றது. தமிழில் மட்டுமின்றி வடமொழியிலும் தேர்ந்த பயிற்சியுடைய நூலாசிரியர் வாக்கில் தமிழோடு, வடமொழியும் தாமாக முன்வந்து செய்யுளில் இடம்பெற்றமை இந்நூலால் அறியமுடிகிறது இந்நூலும் இதன் உட்பொருளான இறைவனும் அவரின் வடிவான பொம்மபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளும் படிப்பவரின் நெஞ்சில் நீங்காது குடிகொள்வது உறுதி.

சிவப்பிரகாசரின் சமய நோக்கு

முனைவர் கு. சுபாஷிணி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த் துறை
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி,
சென்னை-29. 940801535
nideeshsuba@gmail.com

சைவ சமயம் வளர்ச்சியடைந்த நிலையில் காவிரிக்கு வடக்கு தெற்கில் எண்ணற்ற சிவன் கோயில்கள் கட்டப்பட்டன. அவை சிவபெருமானின் அருட்செயல்களைப் பின்னணியாகக் கொண்டவை. சிவனின் திருவிளையாடல்களின் அடிப்படையில் சிவனுடைய எட்டு வீரச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு வீரசைவ சமயம் தோற்றம் பெற்றது. தமிழ் இலக்கிய உலகில் சமயம் சார்ந்த இலக்கியங்களைப் படைத்தவரான சிவப்பிரகாசர் சிவபெருமானின் வீரச் செயல்களின் பால் மனம்கொண்டு வீரசைவ சமயம் சார்ந்தார்.

நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் படைப்புகளுள் திருவெங்கை இலக்கியங்களான, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா இப்படைப்புகள் கட்டுரையின் உட்தலைப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றின் வழியே சமயம் சார்ந்த கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அடியார்களுக்கு அருளும் தன்மை

இறைவன் தன்னை உண்மையான அன்புடன் வணங்கி வழிபடுபவர்களுக்கு அருள் வழங்கும் தன்மையன். இறைவனை அவன் அருள் இன்றிக் காணவோ, அறியவோ இயலாது என்கின்ற காரணத்தால், அவன் அருள்பெற வேண்டுமெனில் அவனையே நினைத்து, அவனுடைய அருட் செயல்களில் மூழ்கி, நினைக்குந் தோறும் உடல் நடுக்கம் கொண்டு, கண்ணீர் அரும்பி, நாதழுதழுக்க வணங்கல் வேண்டும்.

இவை எல்லாம் இறைவான்பால் மனம்கொண்ட அடியார்கட்கு நிகழுமே தவிரப் பிறருக்கு நிகழாத செயல்களாகும். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நாடகத்தால், அதாவது உன்னை நாடுகின்ற என் மனத்தினால் உன் அடியார்போல் நடித்து உன் அருள்பெற விழைகிறேன் என்று குறிப்பிடுகிறார். சிவப்பிரகாசர்

இயற்றிய திருவெங்கைக் கோவை சிவபெருமான் அடியார்களுக்கும் அருளும் திறத்தினை விரிவான நிலையில் எடுத்துக்கூறுகின்றது.

பிறவிகள் வெம்மையானவை. துன்பம் மிக்கவை. ஆனால் இறைவனை வழிபட்டு உய்வடையும் அடியார்கள் இறையருளால் பிறவியாகிய துன்பத்தை ஒழித்து இன்பம் அடைகின்றனர். இறைவனுடைய அருளால் அவர்களுக்கு மீண்டும் பிறவியாகிய துன்பம் ஏற்படுவது கிடையாது. இறைவனின் திருவடியைக் கண்ட அடியார்கள் மிகுந்த இன்பம் கொள்வர்.

இறைவனின் திருவடியை அடைந்தமையினைப் பெரிய பேறாகக் கருதுவர். இறையடியார்கள் இறைவனை நேரடியாகச் சென்றடைய இயலாது. நல்வழி காட்டிட இயலும். இறைவனிடம் அன்புகொண்ட இறையடியார்கட்கு நல்வழி காட்டுவதற்குக் குருவால் இயலும். அதனால் இறைவனை அடைவதற்கு நல்ல வழிகாட்டியைப் பெற வேண்டும் என்பது புலனாகிறது. இறைவன் தன் அடியார்களிடம் பற்றுக் கொண்டவன்.

அதனால் அவர்கள் அணிவிக்கும் பாமாலைகளைத் தனக்கு உரிமையாகக் கொண்டு மகிழ்பவனாவான். இறைவனின் அருள் கைகூடினால்தான் இறைவனின் தொண்டனாக இயலும். இறைவனால் தலையில் பாதம் அணிவிக்கப் பெற்றவர்கள் இறைவனின் வீடுபேற்று உலகில் இருந்து எல்லா இன்பங்களையும் அனுபவிக்கும் தன்மையராவர்.

இக் கருத்தாக்கங்களைப் பின்வரும் பாடலடிகள் தெளிவு படுத்துவதாக அமைகின்றன.

சந்தாப வெந்தழ றம்மடி யார்க்குத் தனித்தருளுஞ்
செந்தா மரைமலர்த் தாளர்தம் (திருவெங்.கோ.17)

---- ----திருவெங்கை நாயகர் தாண்மலரின்
சீர்கண்டவன்பரும் (திருவெங்.கோ.65)

அருவாயுருவழ மாம்வெங்கை வாண ரரும்பதத்தைக்
குருவா லடைபவர் போல் (திருவெங்.கோ.72)

பாமாலை கொண்ட திருவெங்கை வாணர் (திருவெங்.கோ.102)

இறைவன் தன்மேல் அன்புகொண்ட அடியார்களுக்கு அருளும் தன்மையன் என்பது இப்பகுதியால் எடுத்துக் காட்டப்படுகிறது.

இறைவன் தன்னையே நினைத்துத் தலங்கள் தோறும் சென்று நெக்குருகப் பாடிய மூவர்களின் தேவாரத்தைத் தனக்குரிய பாமாலையாகக் கொண்டான் என்னும் சிந்தனை திருவெங்கை உலா மூலமாக எடுத்துக் கூறப்படுகிறது.

---- ---- ---- நினையாமல்
வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக் குழல் செவியான் (திருவெங்.உலா.26-27)

மலங்களை அறுத்து நல்லருள் வழங்கும் தன்மை

மனிதமனம் ஆசைகளின் பாற்பட்டது. நான் தொடங்கும் போதே மனத்தில் அகங்காரம், ஆணவம் குடிகொண்டு விடுகிறது. மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவை. ஆணவம்-தான் என்னும் செருக்கு, கன்மம்-மனத்தில் தீய குற்றங்களைச் சேர விடுதல், மாயை-நாம் வாழ்கின்ற உலகும் உண்மை என்று நம்பிக் கொண்டிருப்பது. இந்த மூன்று குணங்களும் மனிதனைத் துன்பத்தின் வழியில் பயணிக்கச் செய்பவையாகும். எனவே இம்மூன்று மலங்களையும் வெல்ல வேண்டும். அப்போது தான் நன்னிலை கிட்டும். ஆனால் ஆணவம், கன்மம், மாயை என அனைத்தையும் படைப்பன் இறைவனே. அவற்றின் தன்மையை அறிந்து நல்வழி தேர்பவர்களைத் தன் அருள் வெளியில் கொண்டு காக்கின்றான். தன்னை மறந்து ஆசைகளின் வயப்பட்டு மீண்டும் மீண்டும் பிறவியில் விழுந்து உழல்கின்றனர். இறைவனை மனம்கொண்டு வணங்குவதன் வாயிலாக எல்லாத் துன்பங்களும் ஒழிந்து பிறவியும் மீண்டும் ஏற்படாமல் முடிவுக்கு வரும்.

ஊனாகி ஐம்புலக் கூட்டங்களாகி யுழல்கரணம்
----- ------- ------ -----
கோனாகி மற்றொன்று மாக திருப்பக்கை கூடியதே
(திருவெங்.கலம்.57)

இயல்பாகவே ஆணவம், கன்மம், மாயை என்னும் இவற்றின் தன்மையை அறிந்தவர்கள் இறையுலகத்தில் நுழையும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். அவர்களை எத்துன்பமும் நெருங்குவது இல்லை.

வேதங்கள் வணங்கும் தன்மையன் இறைவன்

இறைவனான சிவபெருமான் ஆதியந்தம் இல்லாதவன், தேவர்களும் மண்ணுலகோர்களும் அறிவதற்கு அரிதானவன்.

வேதங்கள் எல்லாம் இறைவனால் படைக்கப்பட்டவை. வேதங்களே உலகில் தலையாயவை. ஆனால் வேதங்களும் அறிந்து கொள்வதற்கு அரிதானவன் சிவபெருமான் என்பதைச் சிவப்பிரகாசர் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

போதந் திறைப்ப வழிறென்றல் பற்றுதல் போலவிளஞ்
பாதஞ் சிவக்கப் பொருள்வயிற் போயின பாதகரே
(திருவெங்.கோ.422)

இறைவனைக் கண்டவர்களின் நிலை

சிவபெருமானைக் கண்டவர்கள் அவனுடைய அருள் வெளியில் மூழ்கி இன்பம் பெறுவார்கள். அவ்வாறு அவர்கள் கொள்ளும் அன்பு சிவனின் திருவடியில் மனத்தை நிலைக்கச் செய்து மலங்களை அறுத்து நன்னிலை அருளும் இயல்புடையதாகும். இதனை சிவப்பிரகாசர்,

வீண்ட பூமுடி வெங்கை புரத்தனைக்
கண்ட மாதா பெறுவது காமமே **(திருவெங்.கலம்.78)**

என்னும் பகுதியால் எடுத்துரைத்திருக்கிறார்.

பிறவியில்லா நிலை கைகூடியவிதம்

சிவபெருமானை மனப்பூர்வமாக மனத்தில் நினைத்து அவன் நினைவில் மூழ்கி வணங்கினால் இறையருள் கிட்டும் இறைவன் விரைந்து வசப்படுவான் என்பதைச் சிவப்பிரகாசர் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

ஊனாகி ஐம்புலக் கூட்டங்களாகி யுழல்கரணம்
கோனாகி மற்றொன்று மாகா திருப்பக்கை கூடியதே
(திருவெங்.கோ.57)

உடலில் உள்ள ஐந்து புலன்களும், ஐந்து புலன்களின் வழியாக வருகின்ற துன்பங்களும் இறைவனால் விதிக்கப்பட்டவை. அறிவை மழுங்கச் செய்யும் மாயைகள் உயிரைத் துன்பத்தின் வழியில் செலுத்தும் இயல்புடையவை. இறையருள் மனத்தில் எழுகின்ற அத்தனை அழுக்குகளையும் நீக்கிவிடும் என்னும் சிந்தனை மேற்கண்ட பாடலால் எடுத்துக்காட்டப்படுகிறது. இறையருள் மனத்தில் உள்ள மலங்களை எல்லாம் களைகின்றபோது இறைவன் வசப்படும் என்னும் சிந்தனை தெளிவுப்படுத்தப்படுகிறது.

இறைவனை அடைந்த தன்மை

இறைவன் எளியார்க்கு அருளும் தன்மையன். தேவர்களும் முயன்று காணும் முடியைக் கொண்ட இறைவன் அடியார்களும் காணற்கு அரிதானவன் அவன் உண்மையான அடியார்களுக்கு மட்டுமே மனத்தில் ஒளியாக எழுந்தருளி அருள் புரிவான். ஆனால் முன் விதிவசத்தால் எத்தகைய கொடுமைத்தன்மை உடைய வர்களையும் நினைத்த அளவில் ஆட்கொண்டு நன்னிலை அருள்பவன் சிவபெருமான். இதனைச் சிவப்பிரகாசர்,

வலிய அடியேன் மனத்துவந் தெய்தினான்
மலியும் அமுதுணும் வானவர் தேடியே
மெலிய அணுகலா வெங்கையில் ஈசனே (திருவெங்.கலம்.71)

என்னும் பாடலின் வழி, கல்போன்ற என்னுடைய மனத்தையும் அருள்தந்து ஆட்கொண்டவன் நீ என எடுத்துக்காட்டி இருக்கிறார். சிவப்பிரகாசரின் திருவெங்கைக் கோவை, கலம்பகம், உலா ஆகிய இலக்கியங்கள் சிவன் மீது அவர் கொண்ட பற்றினை ஆழமான நிலையில் எடுத்துக்கூறுகின்றன.

முருகன் பிள்ளைத்தமிழ்

முனைவர் வினோத் வாசுதேவன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி - 605008.
மொபைல் எண். 9444900446
Email id : vinovasu@dhtepdy.edu.in

'மயக்குறும் மக்களை (புறநானூறு: 188), 'அறிவறிந்த மக்கட்பேறு' (குறள்: 61), என்றெல்லாம் செவ்வியல் காலம் தொடங்கி, 'கண்ணே வாடா மணியே வாடா (கவிஞர் வாலி: 1965) என்றும் 'கண்ணான கண்ணே! கண்ணான கண்ணே' (கவிஞர் தாமரை: 2019) என்றும் திரைப்படக் காலம்வரை குழந்தைகளைக் கொண்டாடும் பாடல்களைப் பாவலர்கள் பாடிவருகின்றனர்.

ஒரு அரசனைப் புகழும்பொழுது, குழந்தையின் பண்புகள் வழியாகவும் புகழலாம் எனத் தொல்காப்பியமும் இலக்கணம் வகுத்துள்ளது. "குழவி மருங்கினும் கிழவதாகும் (புறத்திணையியல்: 24)". பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாடிய பாடல்கள் பிற்காலப் பாட்டியல் இலக்கணத்தில் பிள்ளைத்தமிழ் வரையறையைக் கொடுக்க ஏதுவாக அமைந்தன. இடைக்காலத்தில் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் முதலான பிள்ளைத்தமிழ் நூல்கள் பல எழுந்துள்ளன.

அவற்றோடு பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைமை முடிந்து விட்டது என்றும் வசனக்கவிதைகள் மட்டுமே இக்காலத்தில் வளர்ந்துவருகின்றன என்றும் எண்ணும்பொழுது, மயிலம் பொம்மபுர ஆதீனம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் வீரமும் அருளும் பொழியும் முருகனுக்கென்று பிள்ளைத்தமிழ் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதைக் காண்கையில் உள்ளம் மகிழ்ச்சி கொண்டது.

பேரம்பாக்கம், முனைவர் மு. வல்லாளன் என்ற புலவர் தன் அரும்புலமையால் மயிலம் சுப்பிரமணிய சுவாமிகளுக்குப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களை மரபிலக்கண நெறியுடன் பாடியுள்ளார். வேலூர் கோ. சீதாராமன் என்பார் பொழிப்புரை வழங்கியுள்ளார். இப்பிள்ளைத்தமிழ் முருகனைக் குழந்தை வடிவில்

எவ்வாறெல்லாம் போற்றிப் பாடியுள்ளது என்பது தொடர்பான சிற்சில கருத்துகளை இச்சிறு கட்டுரை எடுத்துரைக்க முயல்கின்றது.

பருவங்களின் மரபு

காப்புப் பருவம்முதல் சிறுதேர்ப் பருவம்வரை உள்ள பத்துப் பருவங்களையும் புலவர் வல்லாளன் அவர்கள் பாடியுள்ளார். பருவத்திற்குப் பத்துப் பாடல்கள்வீதம் நூறு பாடல்களைப் பாடியுள்ளார்.

காப்புப்பருவம்

திருமால், சிவபெருமான், பிரம்மன், உமையம்மை, இந்திரன் முதலான தெய்வங்களின் சிறப்புகளைப் பாடி, அவர்களை வணங்கி, முருகப்பிள்ளையைக் காக்கும்படி பாடியுள்ளார்.

சிவபெருமானின் சரிபாதியாகவும் உலகத்து உயிர்களைத் தன் மடியில் வைத்துக் காப்பவளாகவும் உமையம்மை விளங்குகிறாள். இச்சிறப்புகளை உரைத்தபின், சூரனை மயிலாகவும் சேவலாகவும் மாற்றிய முருகனைக் காக்குமாறு புலவர் அவளிடம் வேண்டுகிறார்.

"விடையினின் சடையனின் மேனியிலே வேண்டிசெம் பாதியைப் பெற்றவளாம்

.... குழவியைக் காத்திடவே" (வல்லாளன்; 2022: பா.எண். 5)

இதுபோல ஏனைய தெய்வங்களின் சிறப்புகளை மரபுவழிப்படக் கூறி, முருகக்குழவியைக் காத்தருளுமாறு பாடியுள்ளார்.

செங்கீரைப் பருவம்

ஐந்தாம் திங்களில் குழந்தை கவிழ்ந்துகொள்வதற்காக, ஒரு காலை மடக்கி மற்றொரு காலைத் தூக்கி, தலையையும் தூக்கி அமையும் செங்கீரைப் பருவத்தை முருகனுக்கு அழகாகப் பாடியுள்ளார் புலவர். நெற்றிச்சுட்டித் தலைமுதல் தண்டை, சதங்கை உடைய கால்வரை செங்கீரை ஆடும் முருகக்குழந்தை தன் பன்னிரு கைகளாலும் உமையம்மையின் கூந்தல் பூ, தாலி, குண்டலம் முதலானவற்றைத் தட்டி விளையாடுகின்றது.

கார்த்திகைப்பெண்கள் அக்குழந்தையை நீராட்டி,
வாய்க்கோழையை எடுத்துவிட்டு, சொட்டுநீர் விட்ட மண் எடுத்து,
கண்ணேறு நீங்க, சுத்திப் போட்டுக் காக்கின்றனர்.

இவற்றிற்கு நடுவே, முருகக்குழந்தையின் தண்டைக் கால்களின் நற்றாள்கள் தூக்கித் தரையில் உதைக்கும்பொழுது அதற்கேற்ப

இந்தப் பேரண்டமும் உலகமும் முழுநிலவும் ஆறுகள் சேரும் கடலலைகளும் அசைந்து இயங்குகின்றது என்பதே புலவர் பாடிய செங்கீரைப் பருவத்துத் தெய்வீக நிலை:

தண்டையைச் சூடிய பாதங்கள் கொண்டுமே தரையை உதைப்பதினால்
தளரா பூமியும் அண்ட சராசரமுமே தன்னிலை பிறழ்ந்தாட.
(வல்லாளன்; 2022: பா.எண். 20)

தாலப்பருவம்

இது ஏழாம் திங்களில் தொட்டிலிட்டுத் தாலாட்டும் பருவம். இப்பிள்ளைத்தமிழில் மயிலம் என்ற சித்தர்களின் கோயிலைச் சிறப்பிக்கும் செய்திகளுடே முருகனுக்குத் தாலேலோ பாடுகிறார் புலவர்.

முருகனின் அருளைத் தவமிருந்து பெற்ற பாலச்சித்தர், சிவஞான பாலய சுவாமிகள், சிவப்பிரகாச அடிகள் முதலானவர்களுக்கு விழா எடுக்கப்படுகின்றது. பொம்மபுரம், பெரும்பாக்கம், வீடூர் ஆகிய ஊர்கள் பைந்தமிழையும் வீரசைவத்தையும் வளர்க்கின்றன. இவற்றைக் காக்கும் முருகன் கண்ணுறங்க, தாலேலோ பாடப் படுகின்றது.

சப்பாணிப்பருவம்

ஒன்பதாம் திங்களில் இரு கைகளையும் சேர்த்துத் தட்டும் இப்பருவத்தில் சிவபெருமான், உமையம்மையின் சிறப்புகளைப் பாடி, முருகப்பிள்ளையைச் சப்பாணி கொட்டச் சொல்கிறார். கடல் முகந்த முகில்கள் பெய்த மழையால் கங்கையில் அலைகள் ஆட, சிவபெருமான் கைதட்டியாட, முருகன் சப்பாணி கொட்டுகிறான். சக்தியிலிருந்து உண்டாகும் சிவம் என்பது ஆக்கல்-அழித்தல் அற்ற தன்மை கொண்டது. அச்சிவத்தை அருளும் முருகன் சப்பாணி கொட்ட வேண்டப்படுகின்றது.

முத்தப்பருவம்

முருகனின் பதினொன்றாம் திங்களில் பாடும் இப்பருவத்தில் புலவர் வல்லாளன் முருகக்குழவியின் முத்தத்திற்கு ஏங்கியேங்கிப் பாடுகிறார். சிவசக்தியின் சிறப்புகளைப் பாடிக்கொண்டு முத்தம் கேட்கிறார்.

ஆயுதவெழுத்து போன்ற முக்கண் உடைய சிவபெருமான்; இச்சா, கிரியா சக்தியுடைய உமை ஆகிய இவர்களின் பிள்ளையும் பாற்கடல் திருமாலின் மருமகனுமான முருகன்; விலை பேசி

விற்கப்படும் கரும்பு, நெல், முத்து போன்ற பண்டங்களைவிட விலையில்லா முருகனின் முத்தம்; நான் என்ற அகந்தையை அழித்தவரின் உள்ளத்திலும் பாலசித்தரின் உள்ளத்திலும் வாழும் முருகன் என்றெல்லாம் போற்றி, அவனின் முத்தத்தை வேண்டு கின்றார்.

வருகைப்பருவம்

முருகனின் பதின்மூன்றாம் திங்கள் சிவபெருமானின் அரவத்தைக் கையில் பிடித்து விளையாடும் குறும்புப் பருவம்; நெற்றிச்சுட்டிமுதல் கால்தண்டைவரை அணிகலன்கள் அணிந்த பருவம்; விநாயகரின் துதிக்கை நீட்டவும் கண்ணனின் வேய்ங்குழ லோசை அழைக்கவும் தளர்நடை இட்டு வரும் பருவம்.

முருகனடிகளான அருணகிரி நாதர் அழைப்புக்கு வந்தவன்; தினைப்பயிரைக் காத்திருந்த வள்ளியம்மையைக் களவுமணம் புரிந்தவன்; அவனுடைய மயிலம் தலத்திற்கு அடியில் பிரம்மனும் வாயில்நடையில் திருமாலும் முப்பெருந்தேவியரும் காத்திருக்க, அகந்தையை அழிப்பவன். இவ்வாறான சிறப்புகளை உடைய முருகனைத் தளர்நடையிட்டு வரவேண்டி, புலவர் பாடுகிறார்.

அம்புலிப்பருவம்

முருகனின் பதினைந்தாம் திங்களில் புலவர் நிலாவை அவனுடன் விளையாட அழைக்கிறார். உலகில் அனைவருக்கும் குளிர்ச்சி தருவது; அதனால் வணங்குவது; நீலவானம் - நீலமயில்; ஒளியுடைய வெள்ளைநிழல், ஒளியுடை வேல் என நிலவிற்கும் முருகனுக்கும் உடைய ஒற்றுமைகளைக் கூறி அழைக்கிறார்.

நிலா தேயும்; முருகனின் அருள் தேயாது. அது வெண்மை; இவனோ செம்மை என வேற்றுமைகளைக் கூறியும் நிலாவை அழைக்கிறார். முருகனுடன் விளையாடினால் தட்சனின் சாபம் நீங்கி, என்றும் தேயாதிருத்தல் என்ற நிலை கிடைக்கும் என நன்மைகளைக் கூறி அழைக்கிறார்.

வரவில்லையென்றால், வேலும் சேவலும் மயிலும் குத்தி விட்டு, சிறுவர்கள் விளையாடும் பந்தென நிலா மாறிவிடும் என்று தண்டம் பாடியும் அழைக்கிறார்.

இவை போல சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்கள் சிறப்பாகப் பாடப்படுகின்றன. இனி, ஏனைய செய்திகளைச் சிறிது காணலாம்.

இயற்கை வருணனை

மயில மலையின் இயற்கைக்காட்சிகளை, புலவர் உருவகங்கள் கொடுத்துப் பாடியுள்ளார். மணம்மிக்க மலர்கள் பூக்கும் மரங்களில் முகில் கூட்டங்கள் குழந்தையாக தொங்குவது போன்ற தேன்கூடுகள்; அவற்றிலிருந்து சிந்திய தேன்மழையால் சிற்றருவிகள் பாய்ந்து, அவை மயிலத்தின் தீர்த்த குளம் ஆயின:

துணர்மலர் பூத்திடும் தருக்களிலே தண்குளிர் மேகக்குழவியது
தன்மையில் தேங்குடம்பைத் தொங்கித் துளிர்க்கும் தேன்மழையால்
(வல்லாளன்; 2022: பா.எண்.4)

'வானரங்கள் கனிகொடுத்து' என்ற குற்றாலக் குறவஞ்சியின் தாக்கம் இப்பிள்ளைத்தமிழில் காணப்படுகின்றது. மயிலத்துப் பலாமரங்களில் இனிய சுளைகளை மந்திகள் கடுவனுக்குக் கொடுத்து மகிழ்கின்றனவாம்.

சங்க இலக்கியத்தின் மீன்கள் சார்ந்த காட்சிகளின் தாக்கமாகவும் மயிலமலைக் காட்சிகள் உள்ளன. மயிலம் திருவிழாவில் தீர்த்தகுளம் முனிவர்களின் திருமுழுக்கால், வரால்மீன்கள் பாய்ந்தெழுந்து மரத்தேனடைகளைத் தாக்க, தேன்மழை குளத்தில் பெருகுகின்றனவாம்.

மயிலம் கல்லூரியின் சிறப்புகள்

மயிலம் சிவஞான பாலய சுவாமிகளின் தமிழ்க்கல்லூரியின் மாணவர்கள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் மயிலக் குன்றுகள்மீது அமர்ந்துகொண்டு, சங்க இலக்கியம், தத்துவங்கள், முருகாற்றுப்படை என இலக்கிய இலக்கணங்களை ஆழ்ந்து கற்பார்கள். ஊர்ஊராய்ச் சென்று சைவச்சொற்பொழிவு செய்து, முருகனின் புகழைப் பரப்புவார்கள்:

நற்றமிழைக் கற்கின்ற மாணவர்கள் குன்றமர்ந்து குறுந்தொகையும்
நெடுந்தொகையும் காலையிலும் ஞ்.. படித்தறிவை மிக வளர்ப்பார்
(வல்லாளன்; 2022: பா.எண்.13))

புத்தம்புது உவமைகள்

இவை இந்நூலின் இன்றியமையாத சிறப்புகள். நீர்ப்பாசி நீங்கிய நீர்த் தூய்மை போல, அவா அறுத்த உயிரானது முருகனைக் காணும்:

அடைபாசி விலக்கினால் அருந்தநீர்
காணல்போலே ஆசையினை விலக்கினால்

ஆறுமுகா! உனைக் காணும் பாக்கியம்தான் உண்டாகுமே
(வல்லாளன்; 2022: பா.எண். 34)

இது வினையும் பயனும் கூடிய உவமை. தமிழின் வேற்றுமை இலக்கணத்தைவைத்தும் உவமை பாடியுள்ளார்:

முருகா தோன்றா எழுவாயே வருக (வல்லாளன்;2022: பா.. 53)

தமிழில் பெரும்பாலான வாக்கியங்களில் எழுவாய் வேற்றுமை வெளிப்பட வேண்டிய தேவையில்லை. ஏனென்றால், வினைமுற்று விகுதிகள் எழுவாயைப் புலப்படுத்திவிடும். சான்று: (அவள்) வந்தாள்; (அவர்கள்) வந்தார்கள். இதுவே தோன்றா எழுவாய்.

முருகனும் கண்ணுக்குப் புலப்படா ஒளியாய் உள்ளான். அதற்கு அடையாளமாய் அவனுடைய அருளை அடியவர்கள் உணர்கின்றனர். எனவே, முருகனும் வெளிப்படாமலும் கூடவே இருக்கும் தோன்றா எழுவாய் போன்று ஆகின்றான். இதை நுண்பொருள் சார்ந்த மெய் உவமையாகக் கொள்ளலாம்.

தற்காலச் செய்திகள்

புலவர் வல்லாளனின் இப்பிள்ளைத்தமிழ் பாடல்கள் முழுக்கவும் மரபுவழி பட்டவை.இவற்றின் வடிவமும் சரி; உள்ளடக்கமும் சரி மரபு வழிப்பட்டவை. என்றாலும், அண்மைக் கால நிகழ்வுகளையும் புலவர் பதிவுசெய்யத் தவறவில்லை.

இக் கலியுகத் தெய்வம் நீயே காந்தள்போல் கொத்தாக மக்கள்அழி
கொரோனாவை வடிவேலா சுவறிவிடுவாய் .....
(வல்லாளன்; 2022: பா.எண். 30)

என்றும்

அழிகபத்தின் கொரோனாவும் .....
காற்புயலில் வீழ்மரம்போல் வீழ்த்திடுவான் .....”
(வல்லாளன்; 2022: பா.எண். 67)

என்றும் 21ஆம் நூற்றாண்டின் உலகக் கொடூர நோயாய் இருந்த கொரோனாவை அழிக்கும் முருகனின் ஆற்றலை, புலவர் வேண்டியுள்ளார். இதன்மூலம், மக்களின் சமகாலத் துன்பங்களையும் நீக்கும் பொருட்டுப் பாடியதால், இந்நூல் மரபுநிலையில் தற்காலச் செய்திகளையும் பதிகின்றது.

குறிப்பிடத்தக்க சொல்லாட்சி

உமையம்மை குறித்த ஐந்தாம் எண்ணிட்ட பாடலில், “அருளைப் பொழியும் ஐயை” என்று போற்றியது குறிப்பிடத்தக்கது.

'ஐ' என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பல்பொருள்களுள் தலைவன் என்ற சங்க காலப்பொருள் மட்டுமில்லை; தலைவி என்ற பொருளும் உண்டு என்பது சிலம்பில் வரும் 'ஐயை' 'கொற்றவை' ஆகிய கதைமாந்தர்களால் உணர்ந்துள்ளோம். அதைப் புலவர் இங்கே செவ்வையாகக் கையாண்டுள்ளார். இது போல பல சொல்லாட்சிகளின் தனித்தன்மையை ஆய்வுமாணவர்கள் விரித்துப்பார்க்கலாம்.

முடிவுரை

வசனக்கவிதை உச்சம் இருக்கும் இன்றய உலகத்திலும் பிள்ளைத்தமிழ் வகைமையை மரபு குன்றாமல் பாடமுடியும் என்று புலவர் மு. வல்லாளன் அவர்கள் இந்நூலின்மூலம் உறுதி செய்துள்ளார். இது மயிலம் தலத்தில் குடிகொண்டுள்ள முருகப்பெருமானின் சிறப்புகள், அவரின் குடும்பத்துத் தெய்வங்களின் சிறப்புகள், தலத்தின் இயற்கைச் சிறப்புகள் ஆகிய அனைத்தையும் மரபார்ந்த குழவிப்பருவப் புனைவுகள்மூலம் கூறியுள்ளது.

சமகாலத் துயரங்களையும் சேர்த்தே பதிவுசெய்து, இந் நூற்றாண்டின் தனித்த பிள்ளைத்தமிழ் நூலாக அமைந்துள்ளதால், இதை வெளியிட்ட மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய்ய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி போற்றத்தக்கது. மரபைக் காத்தமையும் கல்லூரி முதல்வருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இக்கட்டுரை வணக்கம் செலுத்துகின்றது.

சிவப்பிரகாசரும் சிவஞானியும்

சு. கீர்த்தனா
முனைவர்பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள்
தமிழ் கலை அறிவியல் கல்லூரி. மயிலம், 7397633006.
Email: keerthanamhatamizl@gmail.com

முன்னுரை

"சைவமும் தமிழும் தழைத்தோங்குக" என்ற சீரியநோக்கில் இயங்கி வரும் 'மயிலம் பொம்மபுர ஆதீனத்தின்' இரண்டாம் பட்டம் 'தவத்திரு ஆதிசிவஞானிக்கும்', ஆதீனப்புலவர் 'சிவப்பிரகாசருக்குமான' உறவு நிலைக்குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

ஆதிசிவஞானி

மயிலம் பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்த பால சித்தரின் அருளாள், 'அம்மவை' அம்மையாருக்கு மகனாகப் பிறந்தவரே ஆதிசிவஞானி. இவரது காலம் கி.பி 12 முதல் கி.பி 17 ஆம் நூற்றாண்டு வரை என்று திருமட வரலாறு பதிவு செய்கிறது. மேலும், இவரே பாலசித்தரின் முதல் சீடர் மற்றும் திருமடத்தின் இரண்டாம் பட்டமும் ஆவார்.

சிவப்பிரகாசர்

'கற்பனைக்களஞ்சியம்' என்றும் 'கவிசார்வ பௌமர்' என்றும் சிவப்பிரகாசர் போற்றப்படுகிறார். இவர் அண்ணா மலையாரின் அருளால் பிறந்தவர் என்று திருமட வரலாறு பதிவு செய்துள்ளது. 32 வயது வரையே வாழ்ந்த இவர் சுமார் 34 நூல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய முதல் நூல் சோணசைல மாலை ஆகும். பிரபுலிங்கலீலை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, நால்வர் நான்மணிமாலை, நன்னெறி முதலானவை குறிப்பிடத் தக்கன. ஏசுமத நிராகரணம் என்னும் சமய மறுப்பு வகை நூலில், தற்போது நான்கு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளது, எனினும் இந்நூலில் சமகால சூழலைக்காணலாம்.

சிவப்பிரகாசர் ஆதிசிவஞானியைத் தரிசித்தல்

நல்லாற்றூர் 'சிவப்பிரகாசர்' திருத்தல யாத்திரை மேற்கொண்ட போது வழியில் 'சாந்தலிங்க சுவாமிகளைக்' கண்டதாகவும்,

அவரிடம் தாங்கள் கோவையைச் சார்ந்த 'பேருர்' என்னும் தலத்தினிறும் எதைக் கருதி எழுந்தருளியது என்று வினவ அவரும் "சிவஞான பாலய சுவாமிகளை வழிபடல் வேண்டுமென்னும் பெருங்காதலால் வந்தேன்" என்று கூற பின்னர், பொம்மைய பாளையத்துக்கு சமீபமாகிய 'புத்துப்பாட்டு' என்னும் நகரத்தை அடைந்தவுடன், 'சாந்தலிங்க சுவாமிகள்' சிவப்பிரகாசரை நோக்கி நாமிருவரும் 'சிவஞான பாலய சுவாமிகளை' வழிபட வேண்டி யிருப்பதால் அவர்கள் மீது சில தோத்திரங்கள் பாடுக என்றாராம். 'சிவப்பிரகாசர்' "நாம் மனிதரைப் பாடுவதில்லை" என்று மறுத்துவிட்டு பின் அவ்வூர் ஐயனார் கோயிலில் அன்றிரவு உறங்க, கனவில் முருகக்கடவுள் கல்லாடை, திருநீறு, உருத்திராக்கம், இட்டலிங்கத்துடன் மயில் மீது கையில் வேலுடன் காட்சி தந்து, உதிரிப்பூக்களை ஒரு பாத்திரத்தில் வைத்து "இவற்றை மாலையாகத் தொடுத்து நமக்கு அணியக்கடவாய்" என்று கூறி மறைந்தாராம். உடனே இத்தகவலை சிவப்பிரகாசர் சாந்தலிங்கசுவாமிகளிடம் கூற அவர் "சிவஞான பாலய சுவாமிகளே தங்கள் கனவில் முருகக்கடவுள் உருவில் தோன்றியுள்ளார்" என்றார்.

இந்நிலையில் அந்த சுவாமிகளின் மீது 'நெஞ்சு விடு து து' என்னும் நூலை காணிக்கையாகப் பாடி, சந்நிதானத்தில் அரங்கேற்றி வழிபாடு செய்து, ஞானோபதேசம் பெற்றார். 'சிவனே சிவஞானி' என்னும் நெறி இவர் காலத்தில் பரவலாக்கப்பட்டது.

சிவப்பிரகாசரின் படைப்புகளில் சிவஞானி

சிவப்பிரகாசர் தான் இயற்றிய 34 நூல்களில், தமது ஞானகுருவான ஆதிசிவஞானியின் மீது மட்டும் 5 நூல்களை இயற்றியுள்ளார். அவையாவன,

1) சிவஞான தேசிகர் நெஞ்சு விடு துது

2) தாலாட்டு

3) கலம்பகம்

4) பிள்ளைத்தமிழ்

5) திருப்பள்ளியெழுச்சி

நூல்களில் இடம் பெறும் பொதுவான கருத்துக்கள்

சிவனே சிவஞானி என்ற பொருண்மை

திருமடத்தின் தொன்மை மற்றும் சிறப்பு

சிவஞானியின் கொடைச்சிறப்பு
அருள்சிறப்பு
சமயம் மற்றும் சமுதாயப்பணிகள்
சிவஞானியின் மகிமைகள்
வீரசைவ நெறி
அடியார்க்கு விருந்துவைத்தல்
தீக்கையளித்தல்

எனப் பலக்கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகிறன.

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் (சிவ.நெஞ்.துது. 18)

என்றும், சிவஞானியின் மீது தனக்குள்ள பக்தியை,

அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்குமது
சும்மா தலைமீது சுமத்தினனால்
கைம்மா றுளதே கடையேனிடையே(சிவஞான. கலம்பகம். 24)

என்றும் பாடி பதிவுசெய்தமைக் குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் தனது ஞானாசிரியரது கட்டளைப்படியே தம் தங்கையாகிய 'ஞானாம்பிகையைச்' சாந்தலிங்க சுவாமிகளுக்கு மணம் செய்து கொடுத்தார்.

ஆதிசிவஞானி ஒடுக்கநிலையை அடைதல்

வைகாசி விசாகத்தன்று ஆதிசிவஞானி தமது உடலைத் திருநீற்று மயமாக்கிக் கொண்டு ஒடுக்க நிலையை அடைந்தார். இவரது ஒடுக்கம் பொம்மையபாளையத் திருமடத்தில் அமைந்துள்ளது.

நல்லாற்றூரில் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சமாதிநிலை

சிவப்பிரகாசர் 32 ஆம் வயதில், புரட்டாசி மாத பௌர்ணமி திதியில், சிவயோக சமாதி கூடினார். மயிலம் பொம்மபுர ஆதீனக் குருமகா சந்நிதானங்களால் ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசித் திங்கள் பௌர்ணமி நாளன்று குருபூசைப் பெருவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பெறுகிறது. கூரையில் இருந்த சிவப்பிரகாசரின் ஜீவசமாதியைக் கற்கோயிலாக மாற்றியமைத்தவர் 19 பட்டம் குருமகாசந்நிதானங்களாவார். சிவப்பிரகாசர் நல்லாற்நூரில் சமாதிநிலை அடைந்ததால் 'நல்லாற்றூர் சிவப்பிரகாசர்' என்று அழைக்கப்படுகிறார்.

முடிவுரை

மேற்கண்ட தரவுகளின் படி சிவப்பிரகாசர் ஆதிசிவஞானியின் மீது கொண்டிருந்த பக்தியையும், ஆதிசிவஞானி சிவப்பிரகாசர் மீது கொண்டிருந்த பேரன்பினையும் அறியமுடிகிறது. முதலில் மனிதரைப் பாடுவதில்லை என்று மறுத்த சிவப்பிரகாசர் பின்னாளில் ஆதிசிவஞானயின் மீது 5 நூல்களைப் பாடியதும், திருமடப் புலவர் ஒருவருக்கு குருமகாசந்நிதானங்களே கோயில் கட்டி குருபூசை விழா எடுப்பதும் அன்பே சிவம் என்னும் பேருண்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளது. மேலும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள். 50)

என்ற திருக்குறளுக்கு இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

ஒளிரும் புகழ் சிவஞானி

முனைவர். கி. புஷ்பா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி, மயிலம். விழுப்புரம் மாட்டம், தமிழ்நாடு.
கைபேசி -9944242089.
e-mail: pushpasbda@gmail.com.

ஆய்வுச்சுருக்கம்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளின் படைப்புகளை முப்பத்து நான்காகக் கூறுவர். அவை காப்பியம், புராணம், சிற்றிலக்கியம், நீதிநூல், சமயம், தருக்கம் எனப் பல வகையில் அமைந்துள்ளன. அவருடைய வாழ்வில் குருமார்கள் மூவர் அவர் தம் சமய கல்விக்கும், ஞான நெறிக்கும் வழிகாட்டுபவ ராக விளங்கினர். அவர்களுள் ஞான குருவாக வாய்க்கப் பெற்ற இரண்டாம் பட்டத்துச் சிவஞான பாலய தேசிகர் மட்டும் சிவப்பிரகாசரின் ஐந்து நூல்களுக்குப் பாட்டுடைத் தலைவராகும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தார். மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் தொன்மையான, புகழ்மிக்க வீரசைவத் திருமடம் ஆகும்.

இத்திருமடத்தின் குரு முதல்வராக பாலசித்தர் அவதாரம் செய்து, அருட்பெரும் தவங்களைச் செய்து, பல சித்துகளை இயற்றி, மானிடர்களைப் பக்குவப்படுத்தினார். அவ்வழியில் சீட பரம்பரையில் வந்துதித்தவர் இரண்டாம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சிவனே ஆவார். இவரின் முதன்மைச் சீடராகவும், வீரசைவ சமயப் புலவராகவும், வீரசைவ சமயக் கருத்துகளைப் பரப்பியவர் 'கற்பனைக் களஞ்சியம்' நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர். சுவாமிகள் தம் குருவின் மீது மகிழ்ந்து பாடிய நூல்களில் சிவபெருமானே சிவஞானியாக, இச்சமூகம் செழிக்க ஒளிரும் புகழாக, குருவாக எழுந்தருளியுள்ளார் என்ற கருத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ளார் என்பதை எண்ணும்போது மனம் மகிழ்கிறது.

திறவுச் சொற்கள்

அத்தன், மென்நிழல், கௌத்தி, பவப்பிணி, அதிமூடர், பொய்த்தகு, புண்ணியர்.

முன்னுரை

'மானுடரைப் பாடேன்' என்றிருந்த ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் கனவில் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் முருகப் பெருமானாகக் காட்சியளித்து, ஒரு சில விடுபூக்களை அளித்து மாலையாகத் தொடுத்துத் தமக்கு அணிவிக்கக் கேட்க, சிவஞானியின் பெருமையுணர்ந்து, நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி போன்ற நூல்களை மனமுருகிப் "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்" என அப்பரடிகள் நெஞ்சத்திடம் தஞ்சம் புகுந்து நெஞ்சக் குழைவாக சிவஞானியைப்பாடித் துதித்தார்கள் சிவப்பிரகாச சுவாமிகள். அனைத்து நூல்களிலும் சிவனே சிவஞானியாக எழுந்தருள் பாலிக்கிறார் என்பதை எல்லாவற்றிற்கும் முதன்மைக் களம் நெஞ்சே! எந்த நெஞ்சம் முதலில் மறுத்ததோ அந்த நெஞ்சே! நெஞ்சே நெஞ்சே எனப் பலமுறை பாடித்துதித்துப் போற்றும் பண்பினையும் சிவஞானி எனும் பரம்பொருளை(சிவனை) முழுவதுமாக உணரமுடியும் என்பதையும் பாடலடிகளால் புலனாகிறது.

சிவஞானியின் புகழ் பரப்பும் 20ஆம் பட்டம் சுவாமிகள்

குருவே சீடனுக்கு வழிகாட்டி அக்கால் தொடங்கி இக்காலம் வரையிலும் மாறாத மரபாக உள்ளது. இக்காலத்தில் சமுதாயத்திற்கு நல்வழிகாட்டியாக விளங்குபவர் 19ஆம் பட்டம் சுவாமிகள் (கல்விக்கு வழிகாட்டி), 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களும் (கல்விக்கும் சமுதாயத்திற்கும் வழிகாட்டி) சிவனின் அம்சமாகத் தோன்றிய சிவஞானியை உலகோர் அறியச் செய்தவர்கள் ஆவார்கள்.

அனைத்துச் செயல்பாடுகளுக்கும் குருவே முதன்மை. குரு பார்க்கக் கோடி நன்மை என்பார்கள். புராண காலத்திலும் கூட தேவர்களுக்கெல்லாம் குருவாக வியாழ பகவானும் அசுர குருவாகச் சுக்கிராச்சாரியாரும், பாண்டவர் கௌரவர்க்கு துரோணாச் சாரியாரும் குருவாக இருந்து வழிநடத்தியுள்ளார்கள் என்பதைப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. அதுபோல் கலியுகத்தில் பக்தி செலுத்தினால் முக்தி என்பது முன்னோர் மொழிபொருள். இக்காலத்தில் பக்திநெறி அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்படும் தருணம் என்பதை உணரவேண்டும். உணர்ந்துசெயல்பட உதவும் புனிதன் குருவே ஆவார். குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. தற்காலத்தில் நம்மை வழிநடத்திச்செல்லும் குருவாக "உண்டாலம்ம இவ்வுலகம்

தமக்கென முயலா நோன்தான் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" என்கிற புறநானூற்று அடிகளுக்கே உரித்தான எங்கள் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் விளங்கு கின்றார்கள்.

சுத்தசிவன் குருவாய் வந்து தூய்மை செய்து
அத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென்று அடிபணிவாரே[1] **(திருமந்திரம்.1578)**

திருமந்திரத்தின் வழி குருவின் மேன்மையை உணரமுடிகிறது.

அகத்தியர் போற்றும் சிவஞானி

"சுடர் இலை வேல் குழவி தனினும் உனையே விரும்பும் குடமுனியே" உவமை சொல்லமுடியாத ஒளிமிக்க இலைபோன்ற வேலினை உடைய முருகப்பெருமானை விட உயர்வினைத் தருகின்ற ஞான மார்க்கத்தினை உபதேசிக்கின்ற உன்னையே அகத்தியமுனிவர் பெரிதும் விரும்புவார் என்பதால் அகத்தியர் போற்றும் சிவஞானி என்பதை,

நடக்கும் மெய்ப்புகழ் மாக்கச்சி
நகர் சிவஞான தேவே
படைக்கும் அப்பெரியோன் தன்னைப்
பரவுவார் பரவுவாரே![2]

உண்மையான புகழினை உடைய பெரிய கச்சியம்பதியில் எழுந்தருளிய சிவஞானியே! உன்னைத்துதிப்போர் பிறரால் துதிக்கப்படுவர் என்பதை அகத்தியரைக் கொண்டு அறியமுடிகிறது.

மயிலைமலை மீதிருக்கும் வள்ளல்

தேவர்கள் அமுதுண்ணுவதற்காக விடமுண்ட திருவருள் சிறியது என்னும்படி மக்களின் இருவினைகளும் இறப்பும் பிறப்பும் நீங்கப் பிறந்தவன் சிவஞானி. கயிலை மலையிலிருந்து அனைவருக்கும் காட்சி கொடுத்த சிவன், இங்கு மயிலைமலை மீது சிவஞானி எனும் வள்ளலாக வீற்றிருந்து இவ்வுலகைக் காக்கின்றான் எனச் சிவப்பிரகாசர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

கயிலை மலை மீதிருந்த காட்சி போல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல்

மென்நிழல் தருவை யடைபவர் தம்மை
விடாநிழல் விட்டிடு மாபோல்
நின்னடிக் கமலம் அடைந்திடில் தொடர்ந்து
நீங்கலா வினையும் நீங் குறுமே[3]

எனும் பாடலடிகளில், இறைனுடைய திருவடியை அடைந்தால் நீங்காது தொடர்ந்து வரும் இருள்சேர் இருவினைகளும் நீங்கும் எனச் சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் குறிப்பிடும் சிவனும், மயிலை மலையில் வீற்றிருக்கும் சிவஞானியும் ஒருவரே என்பது சிவப்பிரகாசரின் கருத்தாகும்.

பவப்பிணி மருத்துவன் சிவஞானி

பிறவிக்கடலுக்கு புணையாவான் தாமரை மலர்போலும் திருவடிகளை உடைய சிவஞானி என்னுடைய பிறவிக்கடலெனும் துயரைப்போக்க வந்த புணையாவான், என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் **(குறள்.10)**

இறைவனடியைப் பற்றியவர் பிறவியெனும் கடலைக் கடப்பர் என்பது வள்ளுவர் வாக்கு. 'முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றுவாம்' எனும் தொடருக்கிணங்க வள்ளுவரின் கருத்துக்களை மிகுதியும் தம் நூல்களில் எடுத்தாண்டவர் சிவப்பிரகாசர் இதனால் வள்ளுவப்பிரகாசர் என்று போற்றப்பெற்றவர். அவ்வகையில் சிவனே சிவஞானியாக இப்பூவுலகில் அவதரித்துள்ளான். அவன் திருவடியைப் பற்றினால் வள்ளுவர் கூறுவது போல பிறவிக்கடலை எளிதில் கடக்க முடியும் என்பதை,

கொள்ளும் வன்பவப் பிணியின
ராகிய குவலயத் தவரெல்லா
மெள்ளும் வெந்துயர்ப் பவப்பிணி
மருத்துவன் எனப்படு சிவஞான
வள்ளல் வந்து வாண் மயிலைமேல்
வாழ்தலை மணிவிளக் கெனக்கண்டு[5]

சிவஞானி அளிக்கும் திருநீறு பவப்பிணியைப் போக்கவல்லது என்பதால் சிவனே சிவஞானி, 'பவப்பிணி மருத்துவன்' எனச் சிவப்பிரகாசர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வமே சிவஞான பாலய தேசிகரே!

கயிலை மலையில் இருக்கும் சிவனின் அருளால் இம் மண்ணுலகில் ஓராயிரம் இடங்கள் இருக்க பொம்மைய பாளையத்தில் உதித்தவர் சங்குகன்னர் பாலசித்தர் குருவாய் அவதரித்தார். அன்பால் உலகோரை அரவணைத்து மயிலமலையில் எழுந்தருளியவர் சிவஞான பாலய தேசிகர். சிவசின்னங்களுடன்

(விபூதி, உருத்திராக்கம், இட்டலிங்க தாரணம், சின்முத்திரை) பாலவயதினராய் பொம்மபுரக் கடலருகில் உதித்தவர் சங்குகன்ன பாலசித்தர்.

நமைக் காக்கும் சிவஞான சித்தன்

சிவனே சிவஞானியாக விளங்கும் சிவஞான சித்தனை வணங்கினால் சிவனையும் குருவையும் ஆன்மாவையும் காணலாம். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அறுக்கலாம். சிவஞானியின் அருளைப் பெற்றால் எதையும் சிவமாகக் காணும் பேற்றினைப் பெற இயலும். சிவஞானியின் அருள் பார்வை கிடைக்கும் பேறுபெற்றால் கயிலைமலைத் தலைவனையும் காணும் பேறு கிட்டுவதோடு அல்லாமல் பலபிறவிகள் எடுத்து நாம்பட்ட துன்பங்கள் அனைத்தும் சிவ சிவ என்றிட பாவங்கள் அனைத்தும் நீங்கும் என்பதை, "சோதி காணிருள் போலத் தொலைந்திடுந், தீதெலாமுஞ் சிவசிவ என்மினே" (சிவநாம மகிமை மற்றும் இறை வழிபாடு. வீ. குமாரசாமி ஐயர்) அதுபோன்று, ஆதிசிவஞானியும் நாம் முற்பிறவியில் செய்த பாவங்களை ஞான சூரியனாய் நின்றழித்து நம்மைக் காக்கும் தேவனாய் விளங்குபவர் என்பதை, "பலகோடிக் கதிராய் என்வினை அழிப்பாய், பலகாடிக் கடந்த சிவஞான பாலயரே"[6] என்பதை பாடலடிகளால் விளங்குகிறது.

நல்லதோர் பிறவிகள் நால்வகை யாகி
நானிலந்தனிலே நாயெனத் திரிந்து
அல்லதோர் அறிவும் ஆகாத நெறியும்
ஆதர வெனலே போக்கோழிந் தழிந்தேன்
சேந்தனே சிவஞான பாலய தேசிகரே![7]

நமைக்காக்கும் சக்தியாய் விளங்குபவர் சிவஞானி. சிவ ஞானியின் சிவத்தை உணரும் இப்பிறவி நாம் பெற்ற பேறு. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? என்கிற தாயுமானவரின் வரிகள் நினைவூட்டுகின்றது. மேலும், இப்பூவுலகில் பல பிறவிகள் எடுத்து நாயெனத் திரிந்து ஆகாத நெறியில் நின்று ஆதரவின்றிக் கெட்டொழியும் நிலையினில் இருந்து நமைப் பாதுகாக்கும் கடவுளே சிவஞானி என்பதை,

நம்மை உடையான் கயிலை இருந்து
நம்மை உடையான் அருளால் புவிமேல்
பெம்மான் எனவே பொம்மையப் பாளையப்

பொன்னாய்! பாலசித்தராய்! குருவாய்!
அம்மை அளிக்கும் அருமைச் சிவமே!
அன்பாய் எமையும் எடுத்தாள்! அருளாம்
செம்மை மயிலம் சிறக்கும் அமுதே![8]

மேற்கண்ட பாடலடிகளாலும்,

அப்பனே என்பிறவிக் கடலில் கெளுத்தியாம்
ஆசையும் விழுங்க அந்தோ என்செய்வேன்
செப்பினேன் நாமத்தைச் சிவஞானி காவாய்
தேவனே சிவஞான பாலய தேசிகரே[9]

பிறவிக்கடலில் ஆசை விழுங்கச் சிக்கித்தவிக்கும் நம்மைச் சிவஞானியின் திருநாமம் காத்துநிற்கும் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

மயில மலையில் முருகப் பெருமானே அன்றிப் பாலசித்தரும் அவர் அருள் பெற்ற சிவஞானதேவரும் எழுந்தருளி பல நூல்களின் சிறப்புகளையும் சிவப்பிரகாச சுவாமிகள் நமக்கு அருளியுள்ளார்கள். மனம், மொழி, மெய்களால் அறிய முடியாத இறைவன், தானே குருவாகி வந்து அருள் செய்வான் என்பதையும் அறியமுடிகிறது. மயிலமலையில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமான் பாலசித்தராக, சிவஞானியாக எழுந்தருளி அருள் பாலிப்பதால், அடியவர்கள் அளவற்ற பயனைப் பெறுவார்கள் என்பதைச் சமய நெறியின் பயனாகச் சிவப்பிரகாசர் எடுத்துக்காட்டுகிறார்.

சான்றெண் விளக்கம்

1 திருமந்திரம்.1578

2 சி. பா.தேசிகர் கலம்பகம்

3 ஸ்ரீசி.பா.தே.நெஞ்சுவிடுதூது கண்ணி. 19

4 குறள்.10

5 ஸ்ரீசி.பா.தே.தாலாட்டு. 20

6 ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சதமணிமாலை.3

7 ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சதமணிமாலை.8

8 மேலது. 1

9 மேலது.14

துணைநூற்பட்டியல்

1. இராமசாமிப்புலவர். சு. அ. 1978. சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, சென்னை: சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. திருக்குறள், பெரியண்ணன் உரை, சென்னை : வனிதா பதிப்பகம்.
3. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், 2015. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் கலம்பகம், வெளியீடு: மயிலம் பொம்மபுர ஆதினம்
4. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் 1995. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது, வெளியீடு: மயிலம் பொம்மபுர ஆதினம்.
5. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் .1992. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு, வெளியீடு: மயிலம் பொம்மபுர ஆதினம்.
6. பரமசிவம்.த.கோ., மனோன்மணி.ம., நல்லசிவம். கோ.ப., 2002. சிவப்பிரகாசர் ஆய்வுமாலை. கோவை :பேரூர் ஆதீனம்
7. சிவகுமார். சு.2022. "ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சதமணிமாலை" ஸ்ரீ.சி.பா.சு.க.அ.கல்லூரி, மயிலம்.

அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ் உவமை நயம்

முனைவர் லெ. ஆனந்தி
உதவிப்பேராசிரியர்
தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவலக் கண்ணன் செட்டி இந்துக்கல்லூரி
பட்டாபிராம் ,சென்னை புலணஎண்- 9489013693
தொலைபேசிஎண்-9361434417
ananthilakshmanan.m@gmail.com

முன்னுரை

செய்யுளுக்கு அழகும் இலக்கியச்சுவையும் கொடுப்பது உவமையாகும். உவமை நயத்தோடு அமைக்கப்பட்ட செய்யுள் படிப்பவருக்கு உள்ளுணர்வில் இன்பத்தினை அளிக்கிறது. உவமை சுவை பெற்ற பாடல்,செய்யுளை மெருகூட்டுவதோடு மட்டு மல்லாமல் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது. அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் மயிலம் மலையின் சிறப்பினையும் முருகனின் சிறப்பினையும் பல உவமை கூற்று வழியாக இலக்கியச்சுவைக் கொடுத்து ஆசிரியர் பாடி யுள்ளார். இவ் ஆய்வில் இலக்கியத்தில் உள்ள உவமை கூற்றினை ஆராயலாம்.

தொல்காப்பியத்தில் உவமையியல்

இரண்டு பொருட்களிடையே காணும் ஒப்புடைய கூறுகளை ஒப்பிட்டு காண்பது உவமையாகும். ஒப்புமை என்ற சொல்லின் திரிபே உவமை என்பர்.

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம் (தொல். பொ. உவ-1221)

என தொல்காப்பியர் உவமையியலின் முதல் நூற்பாவில் உவமை தோன்றும் இடங்களைக் கூறுகிறார். உவமம் என்பது கூறுவதற்குரிய பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமை படுத்தி வண்ணம், வடிவு, வினை (தொழில்), பயன் ஆகிய இயல்புகள் நன்கு புலப்படும்படி செய்யும் நெறியாகும். உவமையை நான்கு புலன்களுக்குள் தொல்காப்பியர் வகுத்துக் கூறுவது அவரின் துணிபாகும்.

உவமை தோன்றும் நிலைகலன்கள்

உவமை பண்பு, தொழில், பயன், வடிவம், நிறம் ஆகிய ஐந்து அடிப்படைகளில் தோன்றும். ஆனால் தொல்காப்பியர் வினை, பயன், மெய், உரு என்ற நான்குநிலை கலன்களுக்குள் உவமையை வகுக்க முடியும் என்பது தொல்காப்பியர் கூற்று. இதன் அடிப்படையில் வினைஉவமம், பயனுவமம், மெய் உவமம், உருஉவமம் என நான்காகக் கூறலாம்.

சிறப்பே நலனே காதல் வலியோடு
அன்னார் பண்பும் நிலைக்களம் என்ப
கிழக்கிடு பொருளோ டைந்தும் ஆகும். (தொல்.பொ. உவ- 1224)

என்ற நூற்பா உவமை தோன்றும் நிலன் கலன்களைச் சுட்டும். சிறப்பு,நலன், காதல், வலி, கிழக்கிடு பொருள் என்னும் ஐந்து நிலைகளன்களை அடிப்படையாக கொண்டு உவமைகள் தோன்றும். சிறப்பு என்பது உலகத்து இயல்பு வகையாக அல்லாமல் விகார வகையான பெரும் சிறப்பினையையும் சுட்டுகிறார். அதாவது மதிப்பிற்குரிய சிறப்பாகவோ அல்லது மிக அருகித் தோன்றும் நிகழ்வாகவோ இருக்கலாம்.

உவம உருபுகள்

ஒரு செய்யுளில் உவமை பயின்று வந்துள்ளதை உவம உருபுகள் வழி அறியலாம். செய்யுளில் உவம உருபுகள் வெளிப்படை யாகவோ மறைந்தோ வரும். உவம உருபுகளாக

அவைதாம்
அன்ன ஏய்ப்பு உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்ப
கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅ
புல்ல பொருவ பொற்ப போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓட புரைய என்றவை எனாஅ
ஆறா றுவமையும் அன்னவை பிறவும்
கூறும் காலைப் பல்குறிப் பினவே. (தொல்.பொ. உவ- 1231)

தொல்காப்பியர் உவமை உறுப்புகளாக மேற்கூறப்பட்ட முப்பத்தாறு சொற்களையும் இவைகளைப் போன்ற பிறவும் வழக்கிடத்திலும் செய்யுளிடத்திலும் வரும் உவமை சொற்கள் என்று விளக்குவார்.

வினை உவமம்

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை வினை அடிப்படையில் அமையும் உவமம் வினை உவமம் ஆகும்

வினைஉவம உருபுகள்

அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கோடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம் (தொல்.பொ. உவ- 1232)

அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன ,உறழ, தகைய, நோக்கு ஆகிய எட்டு உவமை உருபுகள் தொழில் நிலை சுட்டும் குறிப்புடைமையின் வினை உவமத்திற்கு உரிய உருபுகள் ஆகும் . இதில் அன்ன என்பது வேறு உவம உருபாகவும் வரும்.

அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும் (தொல்.பொ.உவ- 1233)

என்பதனை மேற்கண்ட நூற்பாவழி விளக்குவார்.

வண்டினம் சென்றுமே விருந்துக்க ழைப்பார்போல்
பூதோறும் சென்றுவருமே...
பரமனின் மகன் முழுகும் மஞ்சன நீர் அருவியெனப்
பூந்தோட்டம் சென்று பாயும். (பாடல்-15)

மேற்கண்ட பாடலில் வண்டினங்கள் செய்யும் ரீங்காரம் விருந்தினரை விருந்து உண்ண அழைக்கும் சத்தமாக இருப்பதாக உவமைப்படுத்துகிறார். மேலும் முருகனை மஞ்சள் நீரால் நீராட்டும் நீரானது அருவி போல பாய்ந்து பூஞ்செடிகளை நிரப்புவதாக கூறுகிறார். முருகனை நீராட்டும் நீரானது அருவி போல விழுவதாக கூறுகிறார்.

வானவர்கள் துயரினை ! கொதி எண்ணெய் வீழ்நீர்போல்
காத்திடும் சுடர் வேலனே! (பாடல்-32)

கொதி எண்ணெயில் விழும் நீரானது காணாமல் போவது போல் முருகனிடம் தஞ்சம் புகுபவரின் துயரானது காணாமல் போகும் என்று உவமையாக ஆசிரியர் கூறுகிறார். மேலிருந்து பாடல்களிடம் வினையை உவமையாக வைத்து கூறப்பட்டதால் வினை உவமை பயின்று வந்துள்ளது.

பயன் உவமம்

நன்மை தீமை போன்ற பயன்களை உவமையிலும் பொருளிலும் பொதுத்தன்மையாக அமையும் உவமை, பயன் உவமை ஆகும்.

பயனுவம உருபுகள்

எள்ள விழைய புல்ல பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை உவமம் (தொல்.பொ. உவ- 1234)

எள்ள, விழைய, புல்ல, பொருவ, பொற்ப கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ ஆகிய எட்டு உவமஉருபும் பயன்உவமச் சொற்களாக அமையும்.

ஆற்றில் பெருகும் பெருவெள்ளம்
அலைகடல் சேர்ந்திடும்; கற்றவர்கள்
அறிஞரை அடைவர்; உழைப்பெல்லாம்
ஆடகப்பொருளாய் ஆகிவிடும்
கூற்றம் எதிர்க்கும் நெறிமாதர்
நற்குணம் சேர்ந்திடும்; ஞானியர்பால்
பொறுமை வாழ்ந்திடும்; கருணையெலாம்
விழிகளில் வாழ்ந்திடும் வெற்றுரைகள்
ஆற்றடை கரையின் நுரை போல
ஒதுங்கும்; நெல்மணிப்பதர்போல
அன்பரின் நெஞ்சில் இறை வந்தே
வாழ்ந்திடும் உலகுயிரெலாமே
போற்றும்முன் பாதநி ழலளிக்கும்
பவனே! தாலோ தாலேலோ
பூந்தேன் பொழிமயி லாபுரீசேர்
தலைவா! தாலோ தாலேலோ

ஆற்றில் ஏற்படும் பெருவெள்ளம் இறுதியில் அலைகள் கொண்ட கடலை சென்று பயனடைவது போலக் கற்றவர்கள் அறிஞர்களைச் சென்று பயனடைவர். உழைப்பின் பயனாக வாழ்வானது பொருளாய் வந்து அமையும். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற நால்வகை குணங்களும் பொருந்தும் கற்புடை பெண்கள் எமனையும் வெற்றி பெறுவர், தவஞானிகளுக்குத் தவத்தின் பயனாக பொறுமை வந்து சேரும். வீண் பேச்சு என்பது நெல்மணியில் தூற்றிடும் பதர் போல ஒதுங்கிப் போகும். என்று ஒவ்வொரு செயலுக்கும் அதன் நன்மை தீமை பயனில் பயன் உவமையாக இப்பாடலில் எடுத்துக் கூறியுள்ளார்.

மெய் உவமம்

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை அளவு வடிவு போல்வனவற்றின் அடிப்படையில் அமையும் உவமம் மெய் உவமம் ஆகும்

மெய்உவம உருபுகள்

கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஒட்ட நிகர்ப்ப வென்று
அப்பா லெட்டே மெய்ப்பா லுவமம். (தொல்.பொ. உவ- 1235)

கடுப்ப, ஏய்ப்ப, மருள,புரைய, ஒட்ட, ஒடுங்க, ஒட்ட, நிகர்ப்ப என்ற எட்டு உவமஉருபுகள் மெய் உவம உருபுகள் ஆகும்

ஆலரசு மரத்திலைகள் ஆறுமுகன் வேலினையே
காட்டாகக் காட்டி நிற்கும்
தேன்சுவையைப் போல்தண்ணீர் பண்புமாறா நெஞ்சினிலே
அன்புப்பூ பூத்திருக்கும். (பாடல்-14)

மயிலை மலையில் நிற்கும் ஆழ அரச மரங்களின் இலைகளின் வடிவம் முருகனின் வேலின் வடிவத்தினைப் போல் ஒத்து உள்ளதாக ஆசிரியர் மெய் உருவம் படுத்தி இப்பாடலில் பாடியுள்ளார்.

உரு உவமம்

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை நிறம் பண்பு போன்றவற்றின் அடிப்படையில் அமையும் உவமம் உரு உவமம் ஆகும்.

உருபுவம உருபுகள்

போல மறுப்ப ஒப்ப காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துருவரு கிளவி யுருவி னுவமம்.(தொல்.பொ. உவ- 1236)

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய,நந்த என்று வருகின்ற சொற்கள் எட்டும் உருபு உவமத்திற்குரிய சொற்களாகும்.

குன்றிழி அருவிவெள் சுனைநீரில்
தேவரி னுலகத் தரமகளிர்
குளிர் நிறைவாவியுள் நீராடி
பெயல் தருங் கால் போல் நீண்டுள்ள
துன்றிய கருங்குழல் ஆற்றிடவும்
நீலமாம மயிலதை மேகமென
நீண்டதன் தோகை விரித்தாட
நற்சுண் ணப்பொடி மணம் நாடி

ஒன்றிய மதிமுகம் தாமரையாய்ச்
சுரும்புகள் மொய்க்கும் ;மின் மகளிர்
ஒளியைக் கண்டு வான் வில்லினையே
வளைக்கும்; எழில் சேர் நகரிலுறை
குன்றெறி வேலா குறமகளின்
கணவா! கொட்டுக சப்பாணி
பதுமன் தலையில் குட்டியவா
குருவே! கொட்டுக சப்பானி. (பாடல்-40)

மேற்கண்ட பாடலில் பெண்களின் கூந்தலை கார்மேகம் என்று மயில் கருத்தியதாகவும் ஆதலால், தன் தோகையை அதுவும் விரித்து ஆடியதாகவும் உவமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சுண்ணப்பொடியைக் கலந்து பெண்கள் முகத்தில் பூசி நீராடுகின்றனர். வண்டுகள் தாமரை மலரில் இருந்து வரும் வாசனை என்று எண்ணி அவர்கள் முகத்தினைச் சென்று மொய்கின்றன. பெண்களின் முகத்தினைத் தாமரை பூ விற்கும் சுண்ணப் பொடியினை மகரந்த வாசத்திற்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பெண்களின் உடல் அழகினை ஒளியுடன் பொருத்தி வானவில் வளைத்து நிற்கும் என்று உவமையாக ஆசிரியர் கூறுகிறார் .இப்பாடலில் நிறம் மற்றும் பண்புக்கு உவமையாக உருபுவமை உருபுகள் வந்துள்ளது அறிய முடிகிறது.

முடிவுரை

அருள்மிகு மயிலை சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் மிகவும் நுட்பமான செயலையும் எளிதாக புரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு விளக்குவதற்காக உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுவமை மேலும் செயலுக்கு அழகு சேர்க்கவும் இலக்கிய சுவையை கூட்டவும் பயன்படுகிறது. இப்பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் முருகனின் திருவிளையாடல்களையும் மயிலை மலையின் சிறப்புகளையும் உவமை நயம் சொட்ட சொட்ட கவிஞர் பாடியுள்ளார் என்பது மிகவும் சிறப்பானதாகும். மலை பல சிறப்பினைக் கூறும் பொழுது புலவர் இயற்கையோடு இணைந்த வாழ்வினையும் குறிஞ்சி நில கருப்பொருட்களையும் உவமையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இலக்கியத்தினைப் படிக்கும் பொழுது நாமும் குறிஞ்சி நிலத்திற்கே சென்று வந்தது போல் ஒரு உணர்வினையும் முருகனின் திருவிளையாடல்களைப் படிக்கும் பொழுது சிறு பருவக் குழந்தையாக முருகன் செய்யும் சிறு சிறு சேட்டைகளையும் உவமை நயத்தோடு மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் இங்கு அழகாக எடுத்துரைக்கிறார்.

அருணகிரிநாதரின் திருப்புகழில் "முருகனே சிவஞானி"

நெறியாளர்:
முனைவர் ஆர். சீனிவாசன்,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி,
மேட்டூர் - 636401

இரா. அனுராதா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) ,
சேலம் - 636007, அலைபேசி: 9566861025
anusankaran.sankaran@gmail.com

தமிழ் இந்துச் சமய மரபில், முருகப் பெருமான் என்றால் சிவஞானி எனப் போற்றப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வில், குறிப்பாக அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் மற்றும் சைவச் சித்தாந்தக் கோட்பாடுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இதனை விளக்குகிறோம். முருகனின் கருத்துவம், செயிற் தத்துவம் மற்றும் பிரணவ உபதேசம் ஆகிய மூன்றிலும் அவர் முழுமையான ஞானவடிவமாக உருவகப் படுத்தப்படுகிறார் என்பதைக் காண்போம்.

சிவஞாணம் மற்றும் சிவஞானி விளக்கம்

சிவஞானம் என்பது பிறப்பும் இறப்பும் கடந்த, ஆத்மா சிவனுடன் ஒன்றாகும் பரஒளி நிலை (முக்திக்கு) என சைவச் சித்தாந்தமும் தமிழ்ச் சனாதனச் சம்பிரதாயமும் விவரிக்கின்றன. முருகனும் சிவனும் ஒன்றாகவே வழிபடப்படுவது தமிழ் மரபில் மிக முக்கியமாகும். இது சைவகால இலக்கியங்களிலிருந்தே தோற்றமடைந்துள்ளது.

சிவஞானி என்பது பதி-பசு-பாசம் (இறைவன்-உயிர்-உலகம்) ஆகிய மூப்பொருள்களின் உண்மையை உணர்ந்து, தனது ஆனவமலத்தை நீக்கி, எந்த நிலையிலும் சிவஅனுபவத்தினைப் பெறுபவரைக் குறிக்கிறது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்

எனத் தொல்காப்பியத்தில் 'சேயோன்' என்ற பெயரில் முருகன், சிவனின் சேய் என்ற வகையில் விளக்கப்படுகிறார்.

சங்க இலக்கியங்களில் முருகன்-சிவன்

சங்க இலக்கியம், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், புறநானூறு ஆகியவற்றில் முருகன் "தமிழ்க் கடவுள்" என

அழைக்கப்பட்டுள்ளார். மிக குறிப்பாக, "சீர்கெழு செந்திலும் நீங்கா இறைவன்", "அழகன் முருகன்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் சிவன், முருகன் இருவரும் கற்றல், ஞானம், ஆன்மாவின் உயர்வு ஆகியவற்றின் தெய்வங்களை எழுதுகின்றன.

மேற்கோள்

"முருகன் அகத்தியருக்குத் தமிழையும் அதன் நுட்பங்களையும் கற்பித்ததாக கந்தபுராணம் சொல்கிறது". "முருகன், சிவஞானம் என்ற உயரிய நிலைக்கு வழிகாட்டும் ஆசிரியர்".

தத்துவ விளக்கங்கள் - சிவஞாணம் & முருகன்

சிவஞானம் "சத்து, சிது, ஆனந்தம்" என்றெனும் பரம்பொருள் அறிவதாக விளக்கியுள்ளது.

சிவஞான புண்டரிக மலர்மாது டன்கலவி
சிவபோக மன்பருக .....

திருப்புகழ் எண் 1241, "சிவஞான புண்டரிக மலர்மாதுடன்" என்ற பாடல் முருகனைச் சிவஞானத்தின் பிரதியாகவும், சிவனுடனான ஒன்றுமைக்குறிய வகையிலும் விவரிக்கிறது. இப்பாடலில் "அஞ்சல் அஞ்சல் ... கை லாசம் போன்று" என்ற வசனம் முருகனின் அருள் இல்லாமல் சிவஞானம் பெற முடியாது என வலியுறுத்தப்படுகிறது. இந்த பாடல் முருகனின் சிவஞான தரப்பிலும், புண்டரிகை மலரின் தாமரையில் வீற்றிருக்கும் சிவனுடனான ஒற்றுமையையும் விளக்குகிறது.

சிகரம் அருந்த வாழ்வது சிவஞானம்
சிதறி அலைந்து போவது செயலாசை

திருப்புகழ் எண் 654, "சிகரம் அருந்த" பாடல் முருகன்பால் பெறும் சிவஞானம் மற்றும் ஆன்மீக உயர்வு தொடர்பு பேசப்படுகிறது. இதில் சிவஞான நிலை, மூன்று மாயைகளும் (ஆணவம், கன்மம், மாயை) கடந்த உயர்நிலை அடைவது போலும் கூறுகின்றன.

தமிழ் சமயத்தில் ஆதாரங்கள்

முருகனும் சிவனும் சமயம், தத்துவம், இலக்கியம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஒன்றாகக் குறிப்பிடப்படுவர். இரட்டை அங்கங்களாக விரிவாக தமிழ்ப் பாடல்களில் திகழ்கின்றனர்.

வாகை முடித்தோய்!

மாவாய்க் கிடந்த நெடுஞ்சூருடலம் கீண்ட சுடர் வேலோய்!

எனும் சிறப்புப் பாடல்கள் முருகனின் சிவமயத் தன்மையை விளக்குகின்றன.

முருகனே சிவஞானி: முடிவுரை

- "முருகனே சிவஞானி" என்பது முருகப்பெருமான் வெறும் போர் வீரர் மட்டுமல்ல; அவர் உண்மையான ஞானத்தின் வடிவம் (சிவஞானி) என்பதை அழுத்தமாகப் பறைசாற்றுகிறது.
- இந்தக் கருத்தின்படி, முருகனின் ஒவ்வொரு அம்சமும் ஆழமான தத்துவப் பொருளைக் கொண்டுள்ளது:
- வேல்: இது முருகனின் ஞானத்தைக் குறிக்கிறது. இஃது அறியாமை என்னும் இருளைப் பிளந்து, உயிர்களுக்கு நுண்ணறிவை அளிக்கும் ஆற்றலைக் கொண்டது.
- மயில் வாகனம்: அறியாமை, ஆணவம், மாயைப் போன்றவற்றின் வடிவமானச் சூரபதுமன் ஞானவேலால் பிளவுபட்டுத் திருந்தி, முருகனின் வாகனமாகவும் கொடியாகவும் மாறினான். எனவே, மயில் என்பது திருந்திய உயிரின் உருவகம் ஆகும்.
- வள்ளி, தெய்வானை: இவர்கள் முறையே இச்சா சக்தி (ஆசை) மற்றும் கிரியா சக்தி (செயல்) ஆகியவற்றைக் குறிக்கின்றனர். ஞானத்தின் வடிவான முருகன், நம்முடைய ஆசையையும் செயலையும் நல்வழிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கிறான்.
- இவ்வாறு, முருகப்பெருமான், தான் கொண்ட திருக்கோலம், கைக்கொண்ட ஆயுதம், உடன் கொண்ட சக்திகள் என அனைத்திலும் அறிவின் (ஞானத்தின்) முழு வடிவமாகத் திகழ்கிறார். அவர் சிவபெருமானுக்கு உபதேசம் செய்தவர் என்ற மரபுச் செய்தி, அவர் சிவனிலிருந்து வேறானவர் அல்லர் என்பதையும், ஞானமே சிவன் என்பதையும் நிலைநாட்டுகிறது.
- ஆகவே, முருகனை வழிபடுவது என்பது வெறும் கடவுளை வணங்குவது மட்டுமல்ல; அஃது அறியாமையை நீக்கி, தெளிந்தச் சிவஞானத்தை நாடி நிற்பதாகும். முருகனைச் சரணடைபவர்கள், ஞானத்தின் ஒளியால் ஆட்கொள்ளப் பட்டு, நிலையான பேரின்பத்தை அடைவர் என்பதே "முருகனே சிவஞானி" என்ற கருத்தின் இறுதி முடிவு ஆகும்.

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடு தூதின் சிறப்புகள்

முனைவர் கா. பிரேமா,
உதவிப் பேராசிரியர்,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்., தொடர்பு எண் 8489674300
prema@vvvcollege.org

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று சங்க காலத்தையும் பிற்காலச் சோழர் காலத்தையும் கூறுவர். இச் சோழர்காலத்தில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. இதில் பேரிலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் இரண்டும் அடங்கும். அடிகள் குறைந்தும், கற்பனை மிகுந்தும் இயற்றப்பட்டவை சிற்றிலக்கியங்கள் ஆகும். 96 வகை சிற்றிலக்கியங்களுள் தூது இலக்கியமும் ஒன்று. தூது இலக்கியங்களின் வழி ஒருவர் தம்முடைய எண்ணத்தைத் தூதாகக் கூறுவதாகும்.

தூது

தூது என்பது ஒருவர் கருத்தை மற்றவருக்குத் தெரிவிக்க இடையே ஒருவரை அனுப்புவது. அஃது உயர்திணையாகவும் இருக்கலாம், அஃறிணையாகவும் இருக்கலாம்.

பல்வேறு இலக்கிய வகைகளுக்குரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தூது இலக்கியங்களின் இலக்கணத்தையும் கூறுகின்றன. நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சிதம்பரப் பாட்டியல், இலக்கணச் சுருக்கம் முதலிய பாட்டியல் நூல்களில் தூது இலக்கியத்தின் இலக்கணத்தைக் காண முடிகிறது.

எல்லா இலக்கிய வகைகளைப் போலவே தூது இலக்கியமும் இலக்கண இலக்கிய நூல்களில் காணப்படும் கருக்களிலிருந்து வளர்ச்சி அடைந்து தனி இலக்கிய வகையாகத் தோன்றியது. தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலியவற்றிலும் தூது குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளது.

நெஞ்சுவிடு தூது

தெய்வத்தின் அருளையும் அவ்அருளைப் பெற்றவர்களைச் சிறப்பித்துப் பாடும் நோக்கில் உமாபதி சிவாசாரியார் அவர்கள்

கிபி. 14ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் மீது பாடிய நெஞ்சுவிடு தூது என்ற நூல் தமிழில் தோன்றிய முதல் தூது நூல் என்னும் சிறப்பினைப் பெற்றதாகும்.

ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் தன்னைத் தலைவியாகவும் தம் குருநாதரைத் தலைவராகவும் நினைத்து தம் நெஞ்சினைத் தூதுவிடும் நோக்கில் பாடியுள்ளார். இவ்விலக்கியம் 255 கண்ணிகளில் பாடப்பட்டது. இந்நூல் சிவஞான பாலய தேசிகர் பற்றியது.

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் முதற் புலவரும் அருட் சீடரும் ஆகிய கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்கள் முப்பத்திரண்டு. அவற்றுள் ஐந்து நூல்கள் சிவஞான பாலய தேசிகர் பற்றியது. அவ்வைந்தனுள் முதல்நூல் சிவஞான பாலய தேசிகர் நெஞ்சு விடு தூது என்னும் இலக்கியம் ஆகும்

விநாயகர்

நூல் செய்வோர் தம் நூல் இனிது நிறைவுற வேண்டி தமக்கு ஏற்புடைய கடவுள் மீது காப்பு பாடுவர். சைவ சமயத்தவர் காப்புச் செய்யுளுக்கு ஏற்புடைய கடவுளாக விநாயகரை வழிபடுவர். அதன் பொருட்டு சிவப்பிரகாச சுவாமிகளும் இந்நூலுக்கு விநாயகருக்குக் காப்புப் பாடினார். இதில் இரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன. தாருகவனத்து முனிவர்கள் கடவுள் இல்லை என்ற கொள்கையினர் அவர்களுக்குப் புத்தி புகட்டும் வகையில் கடவுள் உண்டு என்று நம்பும்படிச் செய்தார். பின்னர் சுந்தரமூர்த்தி நாயனாருக்காகச் சிவபெருமான் பரவை நாச்சியாரிடம் தூதாகச் சென்ற கதையும் இக்காப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிவஞாணதேவன் சிறப்பு

கரும்பு அடித்துப் பிழியச் சாறுதரும். ஆனால் சிவஞான தேவனோ நாம் வணங்கினால் அருள் புரிவார். தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்த போது முதலில் அமிர்தம் வராமல் நஞ்சு வந்தது. பின் தான் அமிர்தம் வந்தது ஆனால் சிவஞானதேவனோ இறைவனிடம் அன்பு கொண்டோரை வஞ்சிக்காமல் இன்பத்தை அளிப்பவர் அடியவரை வாழ்விப்பதே சிவஞானதேவனின் சிறப்பு என்கிறார். உடம்பே உயிர் இல்லை என்பதை உணர்த்தி பதி நெறியில் நிலைக்கச் செய்வர் என்கிறார் சிவப்பிரகாசர், இதனையே வள்ளுவர்

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்கிறார். இதனையே மாணிக்கவாசகர் அவர்கள்

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்"

என்று வலியுறுத்துகிறார். கற்றறிந்த புலவரும் சிவஞான தேவன் மீது பாமாலை தொடுத்து மகிழ்வர். மக்களாகிய நாம் இல்லறம் இனிதே நடத்துவதற்கு இறைவனே உரியவன் என்கிறார் சிவப்பிரகாசர். சிவஞான தேவன் விரும்பித் தங்குமிடம் மயிலை மலை இன்றும் அவரது வழியினர் அங்கு தங்குகின்றனர்.

திருமந்திரத்தில் அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்கிறார் திருமூலர். அதுபோல் சிவப்பிரகாசரும் உள்ளத்தில் அன்பை உண்டாக்குபவர் இறைவன் என்கிறார். அறுசமயங்கள் - சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்பன. இச்சமயங்களின் கடவுளர்கள் சிவன், விஷ்ணு, கணபதி, குமரன், சக்தி, சூரியன் முதலியோர். இவர்கள் சிவஞானதேவனை வணங்குபவர். அனைத்து சமயங்களாலும் வணங்கப்படுபவர் சிவஞானதேவன். இவ்வாறு சிவஞானதேவனின் சிறப்பு கூறப்பட்டது.

தசாங்கம்

தசாங்கம் என்பது பாட்டுடைத் தலைவனை அரசனாகக் கொண்டு அவனது பத்து உறுப்புகள் இன்ன இன்ன என்று கூறி அவற்றைச் சிறப்பித்துப் பாடுவது ஆகும். அவை மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்பன. இதில் சிவஞானதேவனை அரசாகச் சிறப்பித்துக் கூறப்பட்டது.

மலை போன்ற கருணையுடையவர், ஆனந்தமாகிய ஆற்றினையுடையவர், மூவகை உயிர்கள் வாழ்வதற்கு இடமான மூன்று மாயைகளாகிய நாட்டையுடையவர், அன்பர்களின் உள்ளமே அவரது ஊர், தெளிந்த தமிழ்ச் சொற்களால் ஒன்பான் சுவையோடு பாமாலை சூடியவர், ஞானம் நிறைந்து மரபு நிலை வழுவாது உயர்ந்த வேதமாகிய அரிய குதிரையுடையவர், வேதம், ஆகமம் இரண்டையும் தாங்கி ஞானமாகிய யானையுடையவர், தருமமாகிய கொடியையுடையவர், ஆனந்தமான அழியாத முரசு

என்னும் நாத ஒலியுடையவர், நான்முகன் முதலிய தேவர்களால் உலகைத் தோற்றுவிக்கும் செய்கையால் ஆணையுடையவர் என்று தசாங்கம் குறித்துக் கூறப்படுகிறது.

திருவுலா

சந்தனம் பூசாது திருநீறு பூசுபவர், அணிகலன்களை உடம்பில் அணியாது உடல் முழுவதும் ருத்திராட்சம் அணிந்தவர், ருத்திராட்சம் அணிவதால் உடம்பில் சேரும் நீர் உடல் நோய் நீக்கும், இரத்த அழுத்தம் வராது என்கின்றனர் இக்கால அறிஞர்கள். காவிஆடையை இடுப்பில் அணிந்திருப்பார் பல்வேறு நிலையுடைய அடியவர்கள் சூழ்ந்து வருவர். என்று உலா நூலில் சிறப்பிப்பது போல் தூதிலும் தலைவன் உலா வரும் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

அடியவர்கள்

தொங்கவிடப்பட்ட உறியானது சுமை கொண்டு கயிறற்றுத் தரையில் வீழ்ந்த காலத்தில் சுமையில்லாது இருப்பது போல அடியவர்கள் தம்மிடம் வரும் துன்ப மிகுதியால் அப்பற்று அறுவர். அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ்சொல் இவை நான்கும் விடுதல் அறம் என்கிறார். மனைவாழ்க்கையைத் துறந்தவர், மாயை விலகியவர், பாவச் செயல் விட்டவர், விருப்பு வெறுப்பு இல்லாது மெய்யன்பு உடையவர், பொன், புகழ், பழி, தங்கும் குடிசை, மணிமாளிகை இவையாவும் ஒன்று என எண்ணுபவரும், ஐம்புலன்களை வென்றவர்கள், அடியவர்களின் கூட்டம் தம்மைச் சார்ந்து திரண்டு வர நமசிவாய என்னும் ஐந்தெழுத்தின் வடிவம் அவரது அடையாளமாகிய திருநீற்றை அணிந்து சிவஞான தேவன் உலாவர அடியவர்க்கு அருள் வழங்கும் உள்ளம் கொண்டவர் வந்தார், அடியவரின் பிறவிப் பிணி போக்கும் மருந்து போல்வர் வந்தார், நீலகண்டன், மயிலைமலை மீது இருப்பவர், ஞானத்தை உடையவர் வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புராணச் சிறப்புகள்

தலைவனை உயர்த்திக் கூற வேண்டி புராணக்கதைகளை அவருடன் ஒப்பிட்டு சிறப்பித்துக் கூறுவது சிற்றிலக்கியங்களில் காணப்படுகிறது. அமிர்தம் கிடைப்பதற்காகப் பாற்கடலைக் கடைந்த செய்தி, திரிபுரம் எரிக்கச் சென்ற போது திருமால் விடை வடிவமாகச் சென்று சிவபெருமானைத் தாங்கினார். சூரபதுமன் முருகனோடு எதிர்த்துப் போரிட்ட பாவம் தொலைய முருகனை

நோக்கி மயில் வடிவாக தவம் செய்ததும் அம்மயில் வடிவே மலையாக ஆனது என்றும் கூறுவர்.

திருஞானசம்பந்தர்

பாண்டிய நாட்டில் சமணர்களின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. மங்கையர்க்கரசியார் வேண்டுகோளுக்கிணங்க திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டிற்கு வந்தார். சைவ சமயத்தவருக்கும், சமணசமயத்தவருக்கும் புனல் வாதம் ஏற்பட்டது. புனல் வாதம் என்பது இருசமயத்தவர்களும் தத்தம் சமய உண்மைகளை ஏட்டில் எழுதி அதனை ஆற்று வெள்ளத்தில் இட்டு எவருடைய ஏடு வெள்ளத்தில் எதிரேறிச் செல்கின்றதோ அவரே வெற்றி பெற்றவர் என்பது. இதில் சமணர்கள் ஏடு ஆறு போன போக்கில் சென்று கடலை அடைந்தது. திருஞானசம்பந்தர் இட்ட ஏடு வைகை ஆற்றின் வெள்ளத்தைக் கிழித்து திருவேடகம் என்னும் ஊரில் உள்ள திருக்கோயிலின் முன் உள்ள தேங்கிய நீர் நடுவே வந்து நின்றது. இதனைக் கண்ட சமணர்கள் தானே கழுமரத்திலேறினர். அச்சமணர்களே சிவஞான தேவனை வணங்குவர் என்பதை "கழுஏறி களும் தாழ் காலான்" என்னும் வரிகள் வழி அறிய முடிகிறது.

----------என்பில் உயிர்
ஆக்கினான் போல அடியேன் உளத்து அன்புடன்

இதில் மயிலாப்பூரைச் சேர்ந்த சிவநேசச் செட்டியாரின் மகள் பூம்பாவை இயற்கையெய்தினார். அவர் எலும்பை சிவநேசச் செட்டியார் பாதுகாத்து வைத்திருந்து ஞானசம்பந்தர் மயிலாப்பூரில் இறைவனைத் தரிசிக்க வந்தபோது அவரிடம் மகளின் எலும்பைக் கொண்டு வந்தார். ஞானசம்பந்தர் இறைவனை வேண்டி வணங்க எலும்பு பெண்ணாயிற்று. அதாவது சடமாகிய எலும்பு உயிரானது போல் அன்பற்ற உள்ளத்தில் அன்பை உண்டாக்குபவர் சிவஞான தேவன் என்கிறார்.

தூது இலக்கியத்தில் நாவுக்கரசர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர், சேக்கிழார், திருமூலர் போன்றோரின் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

சிவஞான தேவனே துணை

உனது அருளே எனக்குத் துணை, உனக்குத் தொண்டு செய்தலே எனது கடன், நின் புகழைப் பண்ணோடு பாடுதலும், வாடும் என்னைப் பார்க்கமாட்டோரோ என்றும், சிவஞானி வரும்

வழியைப் பார்த்தலும், என்னை நினையாரோ என்று புலம்புதலும் என்னை தூதாகப் போகுமாறு செய்தனர்.

அன்பர்களிடத்து தன் உண்மைக் குணங்களை வெளிப்படுத்தும் மெய்ஞான வடிவே, அடியேன் படும் துன்பங்களை முழுமையாக அறிந்து சிவஞானதேவனோடு செல்ல நினைக்கும் மனமே, கடல் சூழ்ந்த உலகம் யாவும் வியக்கும் படியாக அமர்ந்திருக்கும் சிவஞான தேவன் அணிந்திருக்கும் மாலையை வாங்கி வருவாயாக என்கிறார். மாலை வாங்கி வா என்பது அவர் அருளைப் பெறுவதாகும்.

தொகுப்புரை

ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது இலக்கியத்தில் காப்பு பகுதி இடம்பெறுவதற்கான சிறப்பு,சிவஞான தேவனின் பெருமைகள், தசாங்கம், அடியவர்களின் பெருமைகள், அடியவர்களுக்குச் சிவஞான தேவன் அருளுதல், புராணச் செய்திகள், சைவ அடியவர்கள் குறித்த செய்திகள் முதலியவை இடம்பெற்றுள்ளன. இறுதியில் தனிபாடல் ஒன்றில் நெஞ்சமே சிவஞானி என்னுடன் இருப்பவர் என்றாலும் அவர் திருஉள்ளத்து அருளாளே அவரை அடையமுடியும். இதுபோலவே "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகரின் சிவபுராணமும் நினைவுகூரத்தக்கது.

சிவஞான பாலய தேசிகரும் மயிலம் கன்னித்தமிழும்

வி. நந்தகுமார்
முனைவவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ் கலை அறிவியல் கல்லூரி மயிலம் 604304
அலைபேசி எண். 7598135778
nanthavenba@gmail.com

முன்னுரை

சிவஞான பாலய தேசிகரும் கன்னித்தமிழும் என்ற கட்டுரை வாயிலாகச் சிவஞான பாலய தேசிகருக்கும் முருகப் பெருமானுக்கும் உள்ள தொடர்பினை விளக்கியும். ஆறுபடையிலும் முருகப் பெருமான் குடிக்கொண்டிருத்தல் போலச் சிவஞானியின் சிந்தையிலும் குடிக்கொண்டிருத்தலை விளக்குகிறது இவ்ஆய்வுக்கட்டுரை.

நயகுணவிலாசச் செருக்கினால்
நலியுமலர் ஏவைத் துரக்கும் ஓர்
செயவனிதை தாளைப் பழிச்சியே
தினமும் முடிசூடிச் செழித்துமே
அயிலை நெடுமாவைப் பிளக்கவே
அருளிவிடுவாளைத் தருக்கியே
மயிலமலை வாழ்க களிப்பினால்
வருமுருக வேளைப் புரக்கவே **(பாடல்.8)**

கடலின்கண் நெடிய மாமரமாய் நின்ற சூரனைப் பிளக்க வேலினை எறிந்தவனும் மயிலமலையில் மனமகிழ்வோடு வீற்றிருப்பவனுமாகிய முருகப்பெருமானைக் காப்பதற்கு நற்குணமும் அழகும் மகிழ்வும்மிக்கு சிவபெருமான் மீது மலர் போலும் தன் கண்பார்வையாம் அம்பினைச் செலுத்துபவருமாகிய வெற்றிக்குரிய கொற்றவையின் திருவடிகளை நாளும் போற்றி நம் தலைமாலையாக அணிந்து சிறப்போமாக

அரும்புக் கருணை மாரிசொரிந்து
அன்பு புண்டோர் அனைவருக்கு
ஆணவ ஆதிப் பாசங்கள் அகற்றித்
தாபத் திரையம்தணிய
இரும்பு போலு மனங்களையும்
இளக்கி உளக்கண் கொடுத் அருளி

ஈடேற்றுதற்கே எழுந்து அருளும்
எங்கள் செல்வச் சிவஞானி
கரும்பு பொழிந்த செழும்பாலே
கனியில் வடித்த கொழுஞ்சாறே
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுக்
களிக்கும் அமுதே என்று என்று
விரும்பி நுகரும் பேரின்ப
வினைவே தாலோ தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ (பாடல். 21)

சிவஞானி அருள்மழை பொழியும் இயல்பினர். தம்பால் அன்பு கொண்டார்க்கு மும்மலங்களையும் நீக்கியருளுபவர். மூவகைத் தாபங்களும் தணியுமாறும், இரும்பு போன்ற மனங்களும் இளகுமாறும் தம் உபதேசத்தால் அவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்த பிறவிப் பெருங் கடலினின்றும் யாவரையும் உய்விக்க எழுந்தருளியிருப்பவர். அவர் கருப்பஞ்சாறே, கனிச்சாறே, ஐம்பொறிகளாலும் சுவைக்கத்தக்க அமுதமே" எனப் பலவாறாகப் போற்றி நுகரும் பேரின்பமாக விளங்குபவனே , தாலேலோ. சிறந்த மயில மலையில் விளங்கும் விளக்கே தாலேலோ

அழுது அழுது கண்கள் விளைந்தே ஒவுபோது ஒவுபோதால்
அனைமடி இருந்து மகிழ்ந்தே பாலவா யோட நான்
எழுத அரிய திங்கள் முகம்பாரா நேராயே போர்
இபமுகன் அணைந்தே வழித்தே சோர் பால் ஆராமே
குழல் இசையை வென்று செழும்பா கோடே மாறாயே
குலவிவடிகொண்ட பசுந்தே னேபோல் ஆனாதே
மழலைமொழி கொஞ்சு குழந்தாய் தாலே தாலேலோ
மயிலைமலை வந்த கடம்பா தாலே தாலேலோ (பாடல். 29)

ஒரு சமயம் அழுதழுது கண்களைக் கையால் பிசைந்து கொண்டு, ஒருசமயம் அன்னையின் மடியில் சென்று அமர்ந்து மகிழ்ந்து, பால் வழியும் வாயுடன் அவனது திங்கள் முகம் பார்த்தும், நேரே சென்று விநாயகருடன் சேர்ந்தும், பால் வழிதல் தொடரும் வாயுடன், குழல் இசையை வென்று, பாகினைத் தோற்கடித்து, புதிய தேன் போல் அமைந்ததாய் ஓயாமல் மழலை மொழி கொஞ்சுகின்ற குழந்தையே தாலேலோ, மயில மலைக்கு வந்து வீற்றிருக்கும் கடம்பனே தாலேலோ

இந்திரன் கனிவந்து வந்தனை புரிந்த அன்பின்
எந்நாளும் மலர என்ன
இந்தீவரம் சுனைத்தந்தீவரம் பெற்ற
இசைபெறு திருத்தணியிலும்
அந்தரம் தொடுசிகரம் ஒருபரங்குன்றினும்
அலைவாயினும் சிறந்த
ஆவினன் குடியினும் ஏரகம்தன்னினும்
அருவிபாய் குன்றம் தொறும்
சிந்துரம் திரிசோலை மலையிலும் மயிலையம்
செம்பொன்மால் வரை அகத்தும்
சிவஞான தேசிகன் சிந்தையினும் எளியனேன்
சேர்த்தமிழ் மாலைதனினும்
சந்ததம் கடிகொண்டு பணிகொண்ட அருளாள
சப்பாணி கொட்டியருளே
சமரபிணிமுகவலவ குமரசரவணமுருக
சப்பாணி கொட்டி யருளே (பாடல் -31)

தேவேந்திரன் வந்து அன்போடு வழிபட்டு கருங்குவளை மலர் எக்காலத்தும் தொடர்ந்து இங்கு வளர்தல் வேண்டும் என அமைத்து வரங்கள் பல பெற்ற புகழுடைய திருத்தணியிலும், வானளாவும் சிகரம் உடைய திருப்பரங்குன்றிலும், திருச்செந்தூரிலும், திருவாவினம் குடியிலும் , திருவேரகத்திலும் அருவி பாய்கின்ற குன்றங்கள் யாவற்றினும், யானைகள் உலவும் பழமுதிர்சோலை மலையிலும், சிவஞான தேசிகர் மனத்திலும் எளியேன் தொடுத்த தமிழ்ப் பாமாலைகளிலும் எக்காலத்தும் குடிகொண்டு அடியேனை பணிகொண்ட அருளாளனே, சப்பாணி கொட்டியருளுக, குமர, போர்வல்ல பிணிமுகமாம் யானையைச் செலுத்துபவனே, முருகா, சரவணா, முருகப்பெருமானே சப்பாணி கொட்டியருளுக. அறுபடை வீடுகளிலும் மயில மலையிலும் சிவஞானி சிந்தையினும் தம் தமிழ்ப்பா மாலைகளிலும் முருகப் பெருமான் எப்போதும் வீற்றிருப்பதாக வைத்தியநாத தேசிகர் குறிப்பிடுகின்றார். திருத்தணியும், மயிலமும் குன்றுதோறாடலில் அடங்குவன எனினும், அவற்றின் சிறப்பினைத் தனித்து இயம்பக் கருதி இங்ஙனம் வேறு பரித்து ஓதினார்.

துறக்கம்வாழ் குவளை வாங்கிச்
சுனையிடைக் காலம் மூன்றாம்
முருக்கவிழ் மலர்கள் மூன்றும்
முகிழ்க்குமா நிருமித் திட்டேன்

நரைக்கடம்பு அணிந்தோய் நாளும்
நயத்தணிந்து உலக மெல்லாம்
இறக்கும்அந் நாளும் மன்னி
இருக்கஅக் கழுநீர் மாதோ (இந்திரன் அருள். 25)

இந்திரன் திருத்தணிகை முருகப் கடவுளுக்குத் தினந்தோறும் அணியும்படி மூன்று கருங்குவளை மலர்களை முன்னாளிலே சுனையில் வைத்து உண்டாக்கினான். அவற்றுள் காலையில் ஒன்றும் நண்பகலில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக மூன்று மலர்கள் என்னாளும் மலருமாற வரத்தைப் பெற்றனன் என்பது திருத்தணிகைப் புராணம்.

முடிவுரை

வைத்தியநாத தேசிகரின் மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ் நூலின் வாயிலாக மயிலம் முருகனின் அருள் சிறப்பையும், போர் சிறப்பையும், அறுபடை வீடுகளின் அழகினையும் சிவஞான பாலய தேசிகருக்கும் மயிலம் முருகப் பெருமானுக்கும் உள்ள தொடர்பினை இக்கட்டுரை வாயிலாக அறிந்தோம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீ மயிலாசல அனுபூதியில் வினைவோடவிடும் கதிர்வேல்

செள.ஜெயா
உதவிப்பேராசிரியர், முதுகலைத்தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர், 9944999169

முன்னுரை

பொதுவாக ஆதீனங்கள் பக்தி தழைக்கவும் தமிழ்மொழியை வளப்படுத்தவும் தம்பணியைச் செவ்வனேச் செய்துவருகிறது. மயிலம் பொம்மபுர ஆதீனம் வீரசைவ மரபைச்சார்ந்தது. பொம்மபுர ஆதீனம் திருக்கயிலாய ஞானப்பரம்பரையின் வழிவந்தது. பத்து வயது பாலகனாகப் பொம்மபுரக் கடற்கரையில் தோன்றி மக்களின் வினைகள் நீக்கும்பொருட்டு பல சித்துக்கள் செய்ததன் காரணத்தால் பாலசித்தர் எனப் பெயர்பெற்றார். மணக்கோலத்தில் மயிலம் மாமுருகனைத் தான் கண்டு வழிபாடு செய்து பேரின்ப நிலையை அடைந்தது போல இம்மலைக்கு வரும் பக்தர்களும் அடைய வேண்டும் எனும் நிலையில் இவ்அனுபூதி அமைந்துள்ளது.மயிலம் முருகப்பெருமானிடம் அருளைப்பெற்று அவ்விடத்திலேயே ஜீவசமாதி அடைந்தவர்தான் பாலசித்தர். மயிலம் பொம்மபுர ஆதீன திருமடத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் மணக்கோல முருகனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் ஸ்ரீ மயிலாசல அனுபூதி ஆகும்.இந்நுல் ஆன்மாக்களின் இருவினைகளையும் ஓடச்செய்யும் சிறப்பு பொருந்தியது ஆகும்.

அனுபூதி விளக்கம்

ஸ்ரீ மயிலாசல அனுபூதி என்பது நேரடியான இறை அனுபவத்தைக் குறிக்கிறது. மயிலம் +அசலம் = மயிலாசலம் . மயிலையில் விருப்பத்தோடு வீற்றிருக்கும் தலைவன் .அனுபவ அறிவு, அனுபவஞானம் என்றுபொருள். அதாவது நேரடியாக இறைவனிடம் கொள்ளும் அன்புநிலை.இறைவனை நேரடியாக அனுபவிக்கும் நிலை அதாவது பக்தி அனுபவம்.பரம்பொருளுடன் ஒன்றினைக்கும் ஆன்மீக அனுபவத்தை அடைவது.ஸ்ரீ மயிலாசல அனுபூதி 51 செய்யுட்களைக் கொண்ட மிகச்சிறிய பக்தி நூலாக இருந்தாலும் பரம்பொருளின் நிலைப்பாட்டினை மிக விரிவாகவே எடுத்துரைக்கிறது.முருகப்பெருமான் மீது அன்புள்ளம் கொண்ட

பெருமக்களுக்குப் பெரும்புதையலாக இருக்கக்கூடிய ஒரு புனித நூல் ஆகும்.

முருகப்பெருமானின் சிறப்புப்பெயர்கள்

மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் என்பது அருணகிரியின் வாக்கு. முருகப்பெருமான் நாமத்தின் சிறப்புகளை பல இடங்களிலும் சிறப்பாக எடுத்துரைக்கும் நூல். மயிலாசல சண்முகன், கந்தகிருபாகரன், கந்தப்பெருமான்,குகன், செந்நிறம் கொண்ட சேயோன், எனப் பல பெயர்கள் ஸ்ரீ மயிலாசல அனுபூதியில் வாய் மற்றும் மனம் மணக்க இடம்பெற்றுள்ளது.

அடியார் பெருமக்களைக் காக்கும் கந்தன்

நாள்தோறும் திருவடியை நம்பிக்கையோடு பற்றி நிற்கும் அடியார்க்கு அருள் வழங்கும் தன்மை பெற்றவர். தம்மை வணங்கும் அடியார் பெருமக்களுக்குக் காவல் தெய்வமாக நிற்கக் கூடியவன். கந்தக்கடவுளின் சிறப்பினைப் பல இடங்களிலும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளது.

பிறவியை வேரறுத்தல்

வினைகளைப் பொடியாக்கும் கடவுளாகத் திகழ்பவர் கந்தக்கடவுள் என்கிறது ஸ்ரீ மயிலாசல அனுபூதி. வினைகள் தொடருமாயின் பிறவிகள் தொடரும். வினைகள் காரணமாக உயிர்கள் பிறப்பையும் இறப்பையும் மாறி மாறி பெற்று உழன்று வருகின்றன. பிறவிக்கோட்பாடு என்பது வினைக்கோட்பாடுடன் தொடர்புடையது. ஆற்றும் வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் பிறக்கின்றன. வினைகளைப் பொடியாக்கி எமை ஆளும் மன்னா என்று முருகப்பெருமானைச் சுட்டுகிறது கீழ்காணும் பாடல்

முன்நாள் செயும் முற்பவம் மேலிடுகைச்
சொன்னேன் வினை தூள்படவே முறியும் (ம.அ. - 26)

உயிர்கள் பிறப்பெடுத்து இளைத்த நிலைப்பாட்டினை எடுத்துரைக்கும் நூல்கள் பல. மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் இதைக்காணலாம்.

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

இறைவனின் திருவருளினால் மட்டுமே வீடுபேறு கிடைக்கும் என்பதைப் பக்தி இலக்கியங்கள் பல இடங்களிலும் எடுத்துரைத் துள்ளது. ஸ்ரீ மயிலாசல அனுபூதியிலும் இது குறித்த செய்தி

காணப்படுகிறது. எண்ணற்ற பிறவிகள் இப்புவியில் உள்ளது. ஒவ்வொரு பிறவியும் எடுத்துரைத்து அப்பிறவியின் பயன்களை எடுத்துரைப்பின் அது நீண்டு கொண்டேச் செல்லும். இப்பிறவி சென்ற பின் எப்பிறவி வாய்க்கும் என்று பெரியோர் சிந்திப்பதும் உண்டு.அததகைய அன்பர்களுக்குப் பிறவியை வேரறுத்து பிறவாப் பேரின்பத்தை அளிக்கும் தெய்வம் கந்தக்கடவுள் என்பதைப் பின்வரும் பாடல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

சேரும் பவம் மேலிடு செய்கை அதாற்
போரும் புலனென்னோடு ஒன்றுபுகாச்
சோரும் பலனைச் சொலின் முடிவ பெறா
நேரும் கிருபை நெஞ்சினில் நின்றருளே (ம.அ. - 45)

வினைகளைத் தூளாக்குபவன்

நல்வினை தீவினை எனும் இருவினைகளைத் தூளாக்கி ஆன்மாக்களுக்குத் துணையாக வருபவன் மயிலத்து முருகன் ஆவான் என்கிறது இவ்அனுபூதி. ஒளியாகி நிறைந்து இவ்வுலகில் உள்ள காற்று, நெருப்பு, மண், நீர், ஆகாயம் என இவ்வுலகின் அனைத்துமாகி நிறைந்திருக்கும் முருகக்கடவுள் நம் வழிக்குத் துணையாக வரும் சிறப்பு கொண்டவர்.

ஒளியாய் நிறை எங்கணுமே உறையும்
வளியாய் கனன் மண்ணோடு நீர் முதலா
வெளியாய் அழியா உருவாகிய வேள்
வழியாய் வரும் மாவினை தூள்படவே (ம.அ. - 34)

உலக மாயைகளைப் போக்கி உண்மையை உணர வைப்பது வேல் ஆகும். வினைகள் தூள்பட விட்டுஎறிவேல் முருகா (ம.அ.-35) முருகன் திருக்கரத்தில் தாங்கிய வேல் இறைஅடியார்களின் வினைகளைத் தூளாக்கும் தன்மை கொண்டது என்பதை இவ்அனுபூதி பதிவு செய்துள்ளது.வேலும் மயிலும் முருகப் பெருமானின் அடையாளங்கள். வினைகளைப் பொடியாக்குவது வேல் என்கிறது அனுபூதி

வேலே வினை பொடிபட மாமயிலின்
மேலே நிலையாகிய வெற்றிதரும் (ம.அ. - 38)

தீராத வினைகள் யாவையும் தீர்க்கும் கந்தவேல் நம் சொந்தவேல் என்பார் வாரியார் சுவாமிகள்.பாரதியும் துள்ளி வருகுது வேல் பகையே சுற்றி நில்லாதே போ என்பது பாரதியின் தெய்வ வாக்கு ஆகும்.தேவர்களுக்குப் பகைவர்களாக இருந்த

அசுரர்களின் மீது அம்பினை செலுத்தி அழித்ததைப் போன்று நம்மை வந்து துன்பத்தைச் செய்யும் கொடிய தீவினைகளின் மீது ஒரு அம்பைச் செலுத்தி அது உருகி அழியும்படிசெய்துவிடு என்கிறது கீழ்க்காணும் பாடல்

புவியோர் புகழ் மாமயிலைப் புரிவாழ்
தவமேல் இடுகைச் சரம்ஒன்று உதவிப்
பவ தீவினை பட்டு உருவும்படி செய்
அவமா எனை விட்டு அகலாது அருளே **(ம.அ. - 48)**

ஐம்புல மயக்கத்தை நீக்குபவன்

இறைவன் திருவடி அருள்பெறாமல் உள்ளம் அஞ்சி நடுங்குகிறது. உலகியல் இன்பங்களில் வலியச் சென்று உழலும் ஐம்புலன்களினால் நெஞ்சம் கலக்கம் கொண்டு உயர்நிலை செல்லாமல் அல்லல் கொண்டு அலைகிறது. இந்நிலை நீங்கி நன்னிலை தந்தருள வேண்டும்.

கஞ்சப் பத சேகரம் இன்றி வினைக்கு
அஞ்சிப் பய முள்ளுடை ஐம்புலனை
நெஞ்சைப் பலமுற்றிடு நன்னிலையும்
பஞ்சப் பயல் பற்றிட வந்து அருளே **(ம.அ. - 34)**

ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுவதற்கு இறைவன் துணை வேண்டும் என்பதை இப்பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

உலக இன்பங்களில் பற்றுதல் கொள்ளாமல் இறைவனின் அருளைப்பெறுவதே முதன்மையான நெறியாகக் கொள்கிறது இவ்அனுபூதி.மும்மலங்களாகிய ஆணவம் கன்மம் மாயை ஆகியவற்றை நீக்க வேண்டும். அனுபூதிக்குத் தடையாக இருக்கும் காரணிகளை நீக்க வேண்டும்.பிறவி எடுத்த உயிர்கள் பரம் பொருளில் கலப்பதே சிறந்தது. இவ்அனுபூதியில் சொல்லப்பட்ட செய்திகளில் காலத்தால் மாறுபடாமல் என்றும் நிலைத்திருப்பது ஆகும். வினைகளை வெற்றி கொள்ள வேலனின் அருள் துணைநிற்கும் என்பதை இவ்அனுபூதி பல இடங்களிலும் வலியுறுத்துகிறது.மயிலம் மணக்கோல மாமுருகனை வழிபட பதினாறு செல்வங்களும் கிடைக்கும் என்பது மாறாத நம்பிக்கையாக இருந்துள்ளது என்பதையும் இந்நூல் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

மயிலம் முருகனும் பாரதிதாசனும்

முனைவர் ஜா .கீதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (தந்நிதிப்பிரிவு)
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை 08, 8056058845
geethram104@gmail.com

முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் முருக வழிபாடு தொன்மையான மரபாகும். சங்க இலக்கியங்களிலும் முருகன் பற்றிய குறிப்புகள் உள்ளன. பக்தி இலக்கியங்களிலும் புராணங்களிலும் முருகனின் தோற்றம் , முருகன் அசுரர்களை வதம் செய்த செயல்கள் போன்றவை காணமுடியும். முருகனுக்காகவே எழுந்த பல நூல்கள் காணப்படுகின்றன. அவற்றில் கந்தபுராணம், திருப்புகழ் போன்றவை சிறப்பு வாய்ந்தவை. பாரதியார், பாரதிதாசன் போன்ற மரபுக் கவிஞர்களும் முருகனைத் துதித்துப் பாடியுள்ளனர். மயிலம் முருகனை அருணகிரிநாதர்,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், தியாகராஜ கவிராயர், வண்ணச்சரபம் தண்ட பாணி சுவாமிகள், பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களுள் கவிஞர் பாரதிதாசன் மயிலம் முருகனைப் பற்றி மூன்று நூல்கள் பாடியுள்ளார். அந்த நூல்களை மையமாகக் கொண்டு ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

மயிலம் முருகன் திருத்தலம்

மயிலம் திண்டிவனத்திலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலும், பாண்டிச்சேரியிலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. நொச்சி மரங்கள் நிறைந்த குன்றில் இந்த முருகன் தலம் அமைந்துள்ளது.முருகன் வள்ளி, தெய்வானையுடன் கல்யாணக் கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார்.

சூரபத்மாவின் கொடூரமான ஆட்சியின் முடிவைக் கொண்டு இந்த தலத்தின் தல வரலாறு தொடங்குகிறது. சூரபூரணரின் கூற்றுப்படி, சூரபத்மா, முருகனுக்கு எதிராளியான அசுர மயோபாயத் தந்திரங்களை எல்லாம் பயன்படுத்தியும் தோல்வியுற்றார். இதன் பிறகு, சூரபத்மன் தன்னை முருகனின் வாகனமாக ஏற்றுக்கொள்ளும்படி கண்ணீர் மல்க வேண்டியதாகப்

புராணங்கள் கூறுகின்றன. கண்ணீருடனான வேண்டுதலால் மனம் மாறிய முருகக்கடவுள் மயில மலை அருகே வராக ஆற்றங்கரையில் மயில் வடிவத்தை எடுக்க மிகுந்த உறுதியுடன் தியானம் செய்யும்படி கட்டளையிட்டதாகவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மேலும், சூரபத்மன் தான் அவ்வாறு தவம் செய்து மயில் வடிவத்தைப் பெறும் போது அதே மலையில் முருகன் நிரந்தரமாக இருந்து அருள்புரிய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதாகவும் புராணங்கள் சுட்டுகின்றன. முருகன் அதற்கு இசைவு தெரிவித்ததாகவும், அதனால், இந்த மலை மயிலமலை என்றும் இந்த இடம் மயிலம் என்றும் குறிப்பிடப்படுவதாகத் தல வரலாற்றினால் அறியலாம்.

முருகனால் போரில் சூரபத்மன் தோற்கடிக்கப்பட்டபோது அவன் மனம் திருந்தி, இறையருள் வேண்டி இந்தப்பகுதிக்கு வந்து மயில் வடிவ மலையாக மாறி கடும் தவம் புரிந்ததாகவும், தவத்தில் மகிழ்ந்து முருகன் அவனுக்குக் காட்சி தந்ததாகவும், அப்போது சூரபத்மன் தன்னை முருகனின் வாகனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என முருகனிடம் வேண்டியதாகவும் மற்றொரு புராணத்தகவல் கூறுகிறது. மயில் வடிவ மலையாக இருந்து தான் தவம் புரிந்த இந்த மலைக்கு 'மயூராசலம்' எனப் பெயர் விளங்க வேண்டும் எனவும் முருகன் எந்த நாளும் இங்கு வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் புரிய வேண்டும் என்றும் சூரபத்மன் கோரிக்கை வைத்ததாகவும், அதற்கு முருகன் அவனிடம், ''எதிர் காலத்தில் பாலசித்தர் என்பவர் இங்கு தவம் புரிவார். அப்போது உன் விருப்பம் நிறைவேறும்!'' என்று கூறிவிட்டு மறைந்ததாகவும் கூறப்படுகிறது. பாலசித்தர் தவம் புரியும் காலம் வரையிலும் சூரபத்மன் மலையாக நிலை கொண்டு அங்கு காத்திருந்தான். 'மயூராசலம்' என்ற இந்தப் பெயரே பின்னர் மயிலம் என்று மருவியது என்கிறார்கள்.

பாரதிதாசனின் மூன்று படைப்புகள்

- மயிலம் ஸ்ரீ ஷண்முகக் கடவுள் பஞ்சரத்நம்
- மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு
- மயிலம் சுப்பிரமணியர் துதியமுது

இம்மூன்று படைப்புகளில் இலக்கியநோக்கு, தத்துவநோக்கு, மனிதநேயச்சிந்தனை, சமத்துவச்சிந்தனை ஆகியவை ஆராயப் படுகின்றன.

மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு

இந்நூல் பாரதிதாசனின் ஆரம்பகாலப் பக்திப் பாடல் தொகுப்பாகும். இந்நூலில் முதலில் தும்பிமுகனே காப்பாற்று உன் தம்பி குகன் மீது பாடல் பாடப்போகிறேன் என்று காப்பு பாடியுள்ளார். நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, மயிலை மலை சிறப்பும் முருகனின் காட்சியும் விழாக்கோலமும் புனையப்பட்டுள்ளது. மயிலம் முருகனைப் பலவாறு வருணித்துப் பாடியுள்ளார். இந்நூலில் இடையே பல இடங்களில் இவரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். சான்றாக,

சுப்புரத்தினம் ஒதும்
நற்கவிப் பொருள்போலும்
மலைபோல்நெல் வீடுவர இனிதின்நுகர் நாடே (45)

இந்நூலில் மயில மலையினையும் முருகனையும் இசை மெட்டுடன் பாடும் பாடலாகப் படைத்துள்ளார். பாரதிதாசன் இந்நூலின் ஒவ்வொரு பகுதிக்கும் பாடலின் மெட்டையும் ராகத்தையும் கொடுத்துள்ளார். அது மட்டுமின்றி மயில் மீது முருகன் வருவதும் அசுரர்களை வதம் செய்ததும் தந்தைக்கு மந்திரம் தந்ததையும் பின்வரும் பாடலால் அறியமுடிகிறது.

ஏறுமயில் கார்கடல் என்னும்வன்னம் துன்னும் அதில்
இலங்குகண் மீன்என மின்னும் மின்னும்
ஆறுகதிர்போல்முக மன்னும் என்நெஞ்சின்னம் அதில்
ஆவல்கெடச் சேவைசெய உன்னும்பின்னும் உன்அன்பனுக்குப்
சுந்தரி பராபரி மைந்தா எந்தாய் கந்தா அர
விந்தனை ஜயித்தவா வந்தாள் வந்தாள் வந்தாள்
தந்தைக்கு மந்திரம் உவந்தே தந்தாய் அந்தோ இங்குத்
தாசன் சுப்புரத்தின நலிந்தேன் சிந்தாகுலம் தவிர்க்க (141 -149)

பாரதிதாசன் பொன், மண், விண் போன்ற உயர் பொருள் ஏதும் வேண்டாமல் பெருவிருப்பமாக உனது அருள் வழியினைப் பினபற்றுவேன் ,

பொன்எல்லாம் இந்த மண்எலாம் உயர்
விண்எலாம் பிற எண்எலாம்
ஈகுவது ஆயினும் வேண்டேன்
இனி உனதருள் வழித்தாண்டேன் (265)

என்று வேண்டுகிறார். பாரதிதாசனின் வண்ணப்பாட்டு நூல் பாடல்களாகப் பாடி மகிழக்கூடியவை. நூலின் இறுதியாக

முருகனின் பாதங்களும் மயிலும் வேலும் சேவலும் நாடும் மறையும் விண்ணும் அறமும் ஞானமும் வாழ்க என்று வாழ்த்துவதாக அமைந்துள்ளது.

மயிலம் ஸ்ரீ ஷண்முகக் கடவுள் பஞ்சரத்நம்

இந்நூல் பன்னிரு சீர் விருத்த யாப்பில் அமைந்துள்ளது. இதில் மொத்தம் 84 வரிகள் காணப்படுகின்றன. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மயிலம் குழந்தை வேலனை அழைத்து தன் ஆசைகளைப் பாடுவதாக அமைந்துள்ளது. சான்றாக,

ஐம்பெரும் பூதங்கள் என்னைஅரசாளவும்
அவர் சொல்லில் நானாடவும்,
ஐங்குரவர் சொன்னெறிகள் திரணமாய்
எண்ணி இங்கு அல்லனபுரிந்து நெஞ்சம்
வெம்புகடல் வாய்ப்படு துரும்பாய் அலைந்துபல
வெறுமனிதர் காணில்அச்சம்
மேலாக, நாலாவிதத்திலும்இவ் ஆபத்தில்
மீளநான் வாடுநேரம்,
சம்பிரம வாடகத் தம்பமிசை ஆரமாம்
சங்கிலி இசைத்ததொட்டில்
தாலாட்ட மலைவல்லி பாலூட்டினாஅவளும்
தன்தோளை நீட்டஅன்றே
கம்பிமயில் மீதுநீட்டி எனதகம் வரல்காணில்
கனமையல் எனைஅண்டுமோ?
கான்குரவா கவணேறி வான்மோது மயிலம்வாழ்
கந்தா குழந்தைவேலா!' **(51-60)**

இந்நூலிலும் வாழிப்பாடல் முருகனின் பாதங்களும் மயிலும் வேலும் சேவலும் நாடும் மறையும் விண்ணும் அறமும் ஞானமும் வாழ்க என்று வாழ்த்துவதாக அமைந்துள்ளது. மேலும் எல்லா உயிரும் இன்பமாகவும் தமிழ் மொழி அமுதமாகவும் செழிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறது.

மயிலம் சுப்பிரமணியர் துதியமுது

இந்த நூல் பாரதிதாசனின் பக்தி இலக்கியங்களில் மிக முக்கியமானது. இந்நூலில் விநாயகர், சிவன், உமையம்மை, சரஸ்வதி, திருமால் போன்றோரின் துதி அமைந்துள்ளது. சைவ வைணவ ஒற்றுமை வெளிப்படுகிறது.

பின்னர் நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, மயிலைமலைச்சிறப்பு, தலைவி தூது போக்கல், மனதுக்கு இனிது உரைத்தல், தலைவி பாங்கியிடம் கூறல், பாரத நாட்டின் விடுதலை வேண்டுதல், நெஞ்சுக்கு உறுதி கூறல், நெஞ்சுக்கு நீதி கூறல், தலைவி வண்டினைத் தூதுபோக்கல், நெஞ்சுக்குத் தெளிவு கூறல், வேல், மயில், வாழி என்னும் தலைப்பில் உள்ளது. ஒவ்வொரு பகுதிக்குமுரிய இராகமும் தாளமும் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு பாடலும் என்ன மெட்டில் பாடவேண்டும் என்பதும் குறிக்கப்பெற்றுள்ளது. சான்றாகத் தலைவி வண்டினைத் தூது போக்கல் என்னும் பாடலை ஐயா கணபதி உந்தன் அடிமலர் துதி செய்தேனே என்ற மெட்டில் பாட வேண்டும் என்று அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இதனால் பாரதிதாசன் பல பக்திப்பாடல்களைப் படித்துப் பாடியுள்ளார் என்பது புலனாகிறது. அகத்திய முனிவருக்கும் அருணகிரிநாதருக்கு கீரனுக்கு அருள் புரிந்த ஈசனே சுப்புரத்தினம் சொல்லும் நறுங்கவிக்கு இரங்கி அருள்புரிய வேண்டுகிறார்.

பாரத நாட்டின் விடுதலை வேண்டல்

பாரதிதாசன் பாரதநாட்டின் விடுதலைக்காக வேலவனிடம் வேண்டுகிறார். வாழ்வதும் வீழ்வதும் உன் கையில் உண்டு. நாங்கள் பட்டதெல்லாம் சொல்லமுடியுமா? இதெல்லாம் ஊழ்வினையால் ஏற்பட்டதோ என்று வினா எழுப்புகிறார்.வானம் முட்டுமளவிற்கு உரிமைக் கொடி பறக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். சான்றாக,

(காவடிச்சிந்தில் பாலைவாய்க்கமுகில் என்ற மெட்டு)

வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா உன் கையிலுண்டு
வீணில் நாங்கள் பட்ட தெல்லாம் சொல்லவோ-நின்பால்
வேண்டி நிற்ப தெல்லாம் இன்ப மல்லவோ- இந்த
ஆழ்கடல் புவிமேல்எமக்கினி
தான பாரத பூமியை நீ?
அட்ட திக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய்-வானில்
எட்டவே உரிமைக்கொடி தூக்குவாய்
பாழ்படச்செய்தார்இந்நாட்டை ஊழ்வினைதானோ அறியேம்
பாரதத்தார் கொத்தடிமை ஆயினார்-சிலர்
பசி தொலைக்க வேறுதேசம் போயினார்-அந்தோ!?

(பாரத.நா.வி.வே.1)

என்பதைக் காணமுடிகிறது.

முடிவு

பாரதிதாசன் மயிலம் மலை, மயிலம் மலையினைச் சுற்றியுள்ள பகுதிகளை இன்பச் சுவை பொங்க வருணித்திருக்கிறார். இவர் வாழ்ந்த புதுச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள கோயில் ஆதலால் பல முறை தரிசனம் செய்திருக்கிறார். நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, மயிலமலை சிறப்பு கூறும் பொழுது வளம் மிகுந்த நாடாகக் காட்சிப்படுத்துகிறார். மனிதன் மனிதனுக்கு அடிமை இல்லை என்னும் சமத்துவத்தையும் போதிக்கிறார். மயிலம் முருகனின் அருளினால் உலகுக்குத்தான் அருள் வழங்குவதற்காக வேண்டுகிறார். துதியமுது என்னும் நூல் தூது நூல் பாணியில் அமைந்துள்ளது. ஆயினும் பாடி மகிழ்வதற்குரிய ராகமும் தாளமும் மெட்டும் அமைய எழுந்துள்ளது. அக்காலம் விடுதலை போராட்டக் காலம் ஆதலால் நாட்டின் விடுதலை வேண்டியும் விடுதலை கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தி நெஞ்சிற்குக் கூறிப் பாடுவதையும் காணமுடிகிறது. இந்நூல் பாட்டுக்களில் தமிழ் மொழி இனிமையானது என்பதும் அமுதமானது என்பதும் வெளிப்படுகிறது. பாரதிதாசன் தமிழ் மொழி, மக்கள், நாடு போன்றவற்றின் உயர்வு, சமத்துவம், விடுதலை அடைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். பாரதிதாசனின் முருக பக்தி என்பது வெறும் மத வழிபாடு அல்ல. அது அறிவின் பக்தி, அன்பின் வழிபாடு, தமிழ் கலாச்சாரத்தின் வெளிப்பாடு போன்றவையாக மிளிர்கிறது. மயிலம் முருகனை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட அவரது மூன்று நூல்களும் தமிழ் பக்தி இலக்கியத்தில் சிறந்த பாடல்களாகும். பாரதிதாசனின் சிந்தனை இன்று வரை தமிழரின் உள்ளங்களில் ஒலிக்கிறது. அவை மதப்பற்றுக்கு அப்பாற்பட்ட மனித உயர்வின் தத்துவக் குரல் ஆகும்.

தரவுகள்

1. https://share.google/emQwDHcDgARpuTH6Q
2. <https://share.google/JkF1BbiYD34LyZVS6>
3. மயிலம் முருகன் கோயில் - தமிழ் விக்கிப்பீடியா https://share.google/X2XJyy9yJVrSWioir

ஒடுக்கம் ஐம்புலன் அடக்கம்

முனைவர் த. பரமேஸ்வரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆரணி
செல் :8903244825
sivamparamesh95@gmail.com

முன்னுரை

ஐம்புலன்களை அடக்கி தவநிலையில் வாழ்வை முடித்து இறையின் திருவடியில் இறை வடிவில் நீக்கமற நிறைந்திருக்கும் இடங்களில் நான் கண்டுணர்ந்த இடங்கள் இரண்டு. ஒன்று மயிலம் ஒடுக்கம், மற்றொன்று பொம்மையார்பாளையம் ஒடுக்கம். அத்தகைய மயிலம் பொம்மபுரம் ஆதீன மடத்தில் அமைந்துள்ள இரண்டு தவநிலை ஒடுக்கத்தைப் பற்றி களஆய்வு முறையில் அதன் நிலைகளை எடுத்து இயம்பும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

ஒடுக்கம் - பொருள் விளக்கம்

குறுகலான இடம் ஒடுக்கம் என்று சொல்லப்படும். அடக்கத்தின் பின்னர் நிகழ்வது ஒடுக்கம். அதனால் அடக்க ஒடுக்கம் என வழக்கம் உண்டாயிற்று. "அடக்கம் அடங்கும் தன்மையைக் குறியாமல் மூச்சை முழுவதாக நிறுத்திவிடுவதைக் குறிப்பதுபோல்",1 ஒடுக்கம் ஒடுங்கிய இடத்தைக் குறியாமல் அடங்கிவிட்டவர்களை ஒடுக்கி வைக்கப்பட்ட புதை குழி மேடையையும், அதனைச் சூழ எழுந்த கட்டடப்பகுதியையும் குறித்து வழங்குவதாயிற்று. துறவியர்களின் ஒடுக்கங்கள் தமிழகத்தில் பற்பல இடங்களில் இருப்பது பலரும் அறிந்த ஒன்று.

ஆதீன ஒடுக்கம்

மயிலம் பொம்மபுர ஆதினம் வீர சைவ சமயத்தில் தனித்த இடம் பெற்ற ஆதீனமாக விளங்குகிறது அத்தகைய ஆதீனத்தின் மடங்கள் பல இடங்களில் உள்ளன. அவற்றில் ஆதின குரு முதல்வர் பாலசித்தர் ஒடுங்கிய இடமாக மயிலம் காணப்படுகிறது. அதற்கு அடுத்த நிலையில் ஆதீனத்தில் தோற்றுவாய் இடமாக இருக்கும் பொம்மையார் பாளையம் திருமடம் ஆகிய மடங்களின் ஆதீன பட்டங்கள் இதுவரை 20 ஆம் பட்டம் வரை சிறப்பான முறையில் சமய மற்றும் சமூக வளர்ச்சியிலும் மேலோங்கும் ஆட்சியை

செய்து வருகின்றனர். அத்தகைய திருமடத்தில் இருக்கும் ஒடுக்கங்களைப் பற்றி விளக்கமாகக் காண்போம்.

பொம்மையார்பாளையம் பெரிய மடம் ஒடுக்கம்

விழுப்புரம் மாவட்டம், புதுவைக்கு அருகில் உள்ள ஒரு கிராமம் பொம்மையார் பாளையம். இவ்விடத்தில் திருமடம் அமைந்துள்ளது. அத்தகைய மடத்தில் தான் 2 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீமத் ஆதி சிவஞான பாலய சுவாமிகளின் ஒடுக்கம் காணப்படுகிறது. கருவறையில் உள்ள முருகருக்குக் கீழ் நேராக பாதாளத்தில் தெற்கு திசையைப் பார்த்தவாறு அவரின் சமாதி நிலை காணப்படுகிறது. இதற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது. சுவாமிகள் வைகாசி மாதம் வருகிற விசாக நட்சத்திரத்திற்கு (முருகர் பிறந்த தினமாக உலகளவில் கொண்டாடப் படுகிறது) 48 நாட்களுக்கு முன்னர் ஒடுக்கத்தில் உள்ளே சென்று சீடர்களிடம் விசாகதிற்கு (விசாக நட்சத்திரம்) உள்ளே வந்து தரிசிக்க எனக் கூறி கதவை அடைத்துக் கொண்டு தவத்தில் அடங்கினார். பின்னர் சீடர்கள் அவ்விடம் சென்று பார்க்கையில் மேடையில் ஒளி பிழம்பாக திருநீறு வடிவில் காணப்பட்டார். சீடர்கள் அத்திருநீறை லிங்க வடிவில் வெள்ளிப் பூண் போடப்பட்டு திருநீற்றையே குருவின் வடிவாகத் தற்காலம் வரை வழிபட்டு வருகின்றனர் என்று வரலாறு கூறப்படுகிறது.

ஒடுக்க அமைப்பு

திருமடத்தின் முருகர் திருச்சந்நிதியில் மகா மண்டபத்தின் வடக்கு திசையைப் பார்த்தவாறு 2 அடி உயரமும், 1 1/2 அடி அகலம் கொண்டதான நுழைவு வாயில் அமைந்துள்ளது. அதன் வழியே மூன்று படிகளைக் கடந்து குனிந்தவாறு கீழே இரங்கி சென்றால் 5 அடி பள்ளத்தில் ஒரே ஒரு மனிதர் மட்டும் செல்லும் நிலையில் குறுகிய வழியில் மேற்கு திசையை நோக்கி நடந்து 3 அடிகளைக் கடந்த பிறகு தெற்கு திசையை நோக்கியவாறு 2 அடி உயரமும் 6 அடி அகலமும் உடைய மேடை அமைந்துள்ளது. மேடையின் நடுவே 2 1/2 அடி உயர செம்பால் செய்யப்பட்ட 8 தூண்கள் கொண்ட சப்பரத்தின் நடுவே வெள்ளி பூண் அணிவிக்கப்பட்டு மிளிரும் தன்மையில் இட்ட லிங்க (சிவ லிங்க பானம் மட்டும் கொண்டு வழிபடும் முறை) வடிவில் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் தீப ஒளியில் கட்சியளிக்கின்றார்.

நாத ஒலி ஆசி

ஆதி சிவஞான பாலய சுவாமிகள் ஒடுக்கத்தில் இருந்து அதன் பிறகு ஆட்சி செய்த சுவாமிகளின் சமாதிகள் மடத்திற்கு வலது புறத்தில் உள்ளது. அங்கு முதன்மையாக அமையும் மூன்றாம் பட்டத்து சுவாமிகளின் சமாதி வரை ஒடுக்கத்திலிருந்து செம்பு குழாய்கள் புதைக்கப்பட்டு கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. இதனை தற்போது ஆட்சி செய்து வரும் 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் மடத்தின் திருப்பணியின் போது ஏற்படுத்தி அருளினார்கள். இதன் முக்கியத்துவம் என்னவெனில் ஒடுக்கத்தில் ஒதுகின்ற மந்திர ஒலிகள் அனைத்து பட்டத்து சுவாமிகளின் சமாதிகளில் ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்தை மையமாக கொண்டு அமைத்தார்.

ஒடுக்க வழிபாடுகள்

ஒடுக்க வழிபாடானது காலை, மாலை என இரு வேளையிலும் நடைபெறுகிறது. குருமகா சன்னிதானங்கள் வழிபாடு ஆற்றுவார்கள். மடத்தில் பூத்து நறுமணம் வீசும் நாகலிங்கம் பூவை கொண்டு வழிபாடு சிறப்பாக நடைபெறும்.

வழிபாட்டு முறைகள்

ஒடுக்கம் எல்லா நேரங்களிலும் திறக்கப்படமாட்டாது. வாரந்தோறும் வியாழன் அன்று மட்டும் காலை 6.00 மணியிலிருந்து 7.30 மணிவரை திறந்து காணப்படும். மாலை நேரத்தில் யாருக்கும் அனுமதி இல்லை. வழிபடும் பக்தர்கள் காலை 6.30 மணியளவி லிருந்து வருகை புரிந்து வழிபடுகின்றனர். அவர்களுக்கான முறைகள் சில உள்ளன. அவை, ஆடவர்கள் சட்டை அணியாமல் வேட்டி துண்டும், பெண்கள் புடவையிலும் வருகை புரிய வேண்டும். இருவரும் இங்குள்ள கிணற்றுத் தண்ணீரில் நீராடிவிட்டு ஈரத் துணியுடன் மட்டுமே வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

ஒடுக்கத்தின் சிறப்பு

மனநிலையில் பாதிப்பு, மன குழப்பம், உடல்நிலை சரியில்லாதவர்கள் ஒடுக்கத்தில் வழிபாடு செய்து பயனடை கின்றனர். அங்கு அளிக்கும் திருநீறு மருந்தாகப் பயன்படுத்தப் படுகின்றது. இங்கு வந்த பலரும் நன்மை அடைந்துள்ளனர். இவ்விடம் ஒரு நேர்மறை எண்ணத்தை ஏற்படுத்துவதாக பலரும் கூறுகின்றனர்.

மயிலம் ஒடுக்கம்

மயிலம் ஆதீனத்தின் முதன்மை குருவாக விளங்கக்கூடிய பாலசித்தர் முருகனின் அருள் பெற்று இவ்விடத்தில் ஜீவ சமாதி அடைந்த தலமாக விளங்குகிறது. மயிலத்தில் 2012 ஆம் ஆண்டு திருப்பணியின் போது கண்டறியப்பட இடமாக மயிலம் ஒடுக்கம் காணப்படுகிறது. இவ்வொடுக்கம் தற்போதைய 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் ஒடுக்கத்தைக் கண்டறிந்து அவ்விடத்திற்கு ஒரு புனிதத்துவத்தைக் கொண்டுவந்தார்.

ஒடுக்கத்தின் அமைப்பு

மயிலம் ஒடுக்கமானது பாலசித்தர் தியான மண்டபத்தின் உள் இடது புறமாக 2 அடி உயரத்தில், 2 அடி அகலம் கொண்ட சிறிய வாசலில் வழியே தெற்கு நோக்கி உள் நுழைந்தால் கிழக்கு மேற்காக 8 அடி அகலத்தில் 8 நீளம் கொண்டதான 5 அடி உயரம் கொண்டதான மண்டபமும், கிழக்கு திசை நோக்கியவாறு யாழி திருவாசி மேடையும் உள்ளது. அம்மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் 2 அடி நீளம் கொண்ட கல்லாலான வழி உள்ளது. அதில் இறங்க 4 படிகள் மரத்தால் காணப்படுகிறது. மேற்கு நோக்கியவாறு உள்நுழைந்தால் பாதாளத்தை அடையலாம். அவ்விடம் சுமார் 5 அடி உயரம் மட்டுமே காணப்படும். அவற்றில் குனிந்து மட்டுமே உள்ளே செல்ல முடியும். அதன் பிறகு வடமேற்கு மூலையில் தெற்கு நோக்கியவாறு மண்ணில் (பழங்கால சுண்ணாம்பு மண்ணால் செய்யப்பட்ட தரை) அடி உயர கல் பீடத்தில் அடி உயரத்தில் சிவலிங்க திருமேனியைக் காணப்படுகிறது. லிங்கத்தின் எதிரே வலது புறமாக ஐந்து முகம் கொண்ட விளக்கில் தீபம் 24 மணி நேரமும் சுடர்விட்டு கொண்டு இருக்கும். விளக்கொளியின் எதிரே மணப்பலகை ஆசனம் காணப்படுகிறது. அதன் மீது அமர்ந்து குருமகா சந்நிதானம் அவர்கள் சிவபூஜை செய்வார். மண்டபத்தின் மேலிருந்து உள்வரை அகல் விளக்குகள் எட்டு இடங்களில் பூசை நேரத்தில் ஏற்றப் படுகிறது. அவ்விளக்கு மட்டுமே ஒளி தந்து பாதையைக் காட்டுகிறது. (குறிப்பு - பாலசித்தர் இவ்விடத்தில் சிவ பூசை செய்யப்பட்ட இடமாக இருக்கலாம் என்பதற்காகப் பால சித்தர் தியான மண்டபம் எனப் பெயர் வந்தது)

ஒடுக்க வழிபாடுகள்

ஒடுக்கமான இடத்திற்கு உள்ளே சென்று வழிபடும் நிலை சற்று சிரமம் என்பதால் பூசை செய்வோர் மட்டுமே உள்ளே சென்று வழிபட முடிகிறது. எனவே மகா சன்னிதானம் அவர்கள் மக்களும்

வழிபாடு செய்ய வேண்டும் எனக்கருதி பால சித்தரின் திருவுருவை கல்லில் சிலையாக மண்டபத்தின் வெளிப்புறத்தில் கிழக்கு திசை நோக்கியவாறு வைத்துள்ளர். இவ்விடத்தில் வழிபாடு செய்ய படுகிறது. ஒடுக்கத்தில் உள்ள சிவலிங்கத்திற்குக் காலை மாலை என இரு வேளையும் பூசைகள் நடைபெற்று பால் நெய்வேத்திய (படையல்) பொருளாகப் படைக்கப்படுகிறது. மண்டபத்தில் உள்ள பாலசித்தர் திருவுருவத்தின் எதிரே மேற்கு திசையைப் பார்த்தவாறு பக்தர்கள் அமர்ந்து தியானம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒடுக்கத்தின் சிறப்பு

மயிலம் முருகன் சந்நிதிக்கு வரும் பக்தர்கள் பலர் திருமடத்தின் வரலாற்றை அறியாமல் இருகின்றனர். பாலசித்தர் முதலில் மயிலம் வந்து சிலகாலம் மலையில் அமர்ந்து மனதை வயப்படுத்திய பிறகே முருகர் அவருக்குக் காட்சியளித்தார். குருவருளுக்கு அடுத்தே திருவருள் என்ற உயரிய கொள்கையோடு முருகரின் கட்டளையின் காரணமாக முருகர் தரிசனம் செய்வதற்கு முன்னர் பாலசித்தரின் ஜீவ சமாதியை முதலில் தரிசனம் செய்யும் நிலையில் கோயில் அமைப்பு காணப்படுகிறது. அவற்றை அறிந்த பக்தர்கள் சிலர் பாலசித்தரின் தியான மண்டபத்திற்கு வந்து அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு அதன் பிறகே முருகப் பெருமானை தரிசனம் செய்வர்.

பலர் இங்கு வந்து சிறிது நேரம் அமர்ந்தால் நேர்மறை எண்ணங்கள் தோன்றுகிறது, மனம் அமைதியாக இருக்கிறது, ஏதோ ஒரு புத்துணர்ச்சியாக உள்ளது, மன குழப்பம் தீர்கிறது எனக் கூறுகின்றனர். சிலர் இங்கு வந்து குழந்தை வரம் கேட்டேன் வேண்டுதல் பலித்து ஆண் குழந்தையும் பிறந்தது என்றும் கூறுகின்றனர். இவ்விடத்தில் பல பகுதியிலிருந்து வந்த பக்தர்கள் கூறிய தகவல்கள் ஆகும்.

ஒடுக்கத்தின் மையப்பொருள்

ஒடுக்கம் என்பது மனதையும், ஐம்புலன்களையும் அடக்கி யாளும் இடமாக அமைகிறது. அத்தகைய ஐம்புலன்களை அடக்குவதை இலக்கியத்தின் வழியாகக் கூறியதை காணலாம்.

உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்,
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்

உண்டி வினை இன்மையின், உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா" (சிவஞானபோதம் பா -3)2

உயிர்கள் செய்த வினைக்கேற்ப இறைவன் அவற்றைச் செயல்படுத்துவான் என்பதனை மெய்கண்டார் சிவஞானபோதம் இரண்டாம் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். உயிரை ஆன்மா என்பது தத்துவ மரபு. ஆன்மா உண்டு என்பதனை மூன்றாம் நூற்பாவில் நிலைநாட்டியுள்ளார்.

பாராதி பூதம் நீயல்லை - உன்னிப்
பார் இந்திரியம் கரணம் நீயல்லை
ஆராய் உணர்வு நீஎன்றான் - ஐயன்[3]

'அன்பாய் உரைத்த சொல் ஆனந்தம் தோழி' என்று தாயுமானவரும் பூதங்களால் ஆன உடல், ஐம்பொறிகள், கருவிகள் முதலியன ஆன்மா அன்று, ஆராய்ந்தறியும் அறிவே ஆன்மா என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியங்கள் மன்னுயிர், நல்லுயிர், இன்னுயிர், தொல்லுயிர் என்று குறிப்பிடுகின்றன.

ஒருமையில் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள்- 126)

இத்திருக்குறளில் திருவள்ளுவர் ஐம்புலன்களின் அடக்கத்தைப் பற்றியே கூறுகிறார். ஐம்புலன்களையும் எப்படி அடக்குவது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆமையைச் சொல்கிறார். ஆமை அலைந்து திரியும்போது அது தன் தலையையும் நான்கு கால்களையும் ஆமையோட்டிற்கு வெளியே வைத்திருக்கும். ஓய்வெடுக்கும் போதும் தற்பாதுகாப்பிற்காகத் தனது ஐந்து உறுப்புக்களையும் ஓட்டிற்குள் இழுத்து அடக்கி வைத்துக் கொள்ளும். அதுபோல் ஐம்புலன்களையும் தேவையான பொழுது தொழிற்பட வைத்தும் தேவையற்ற போது மனதால் அடக்கி வைக்கவேண்டும்.

ஐந்தடக்கல் எப்போது ஆற்றவேண்டும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆசைகளையும் இன்பங்களையும் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களே தூண்டுகின்றன. பலருடன் சேர்ந்து இருப்பதைவிட தனிமையில் இருக்கும்போது ஐம்புலன்களே எம்மை ஆட்சி செய்கின்றன. ஒன்று - ஒருமை. ஒன்று அது தனித்தது. ஒருமையில் அதாவது தனிமையில். அதனாலேயே வள்ளுவர் ஒருமையில் ஐந்தடக்கல் ஆற்றச் சொல்கின்றார்.

ஐம்புலன்களைப் பக்குவபடுத்தும் முறைமை

இசையால், பக்திப்பாடல்களால்உடலில் பரவசம். இசைக் கருவிகளால் பரவசம். மெய் சிலிர்த்தல். உடல் புளகாங்கிதம் அடைதல். இன்பப் பரவல். இன்பம் உடலில் ஊடுருவல், புத்துணர்வு மயமாதல். உடல் லேசாதல் - மூச்சுப் பயிற்சியால் உடல் பக்குவப் படல். கோயில்கள், ஞானியர் மடங்கள், ஞானியர் - யோகியர், முனிவர் சமாதிகள், புனித ஊர்கள், ஆறுகள், நூல்கள், மந்திரங்கள் ஆகியவற்றால் உடல் ஆன்மிகத் தன்மை பெற வேண்டும். கடவுள் அருள் ஏற்கும் தன்மையும் வலிமையும் உடலுக்கு வரவேண்டும். ஆங்காங்கு உள்ள உணர்வலைகள் உணரப்பட வேண்டும். இறை அருளாளர்கள் இருப்பிடம் தேடி அவர்தம் உணர்வலைகளை உடலில் ஏற்க வேண்டும்.5

தீக்கைகள் உடலுக்கு அப்பக்குவத்தைத் தொடங்கி வைக்கின்றன. இத்தகைய தீக்கையை மயிலம் ஆதினம் அவர்கள் இன்றுவரை மகா சிவராத்திரி அன்று வழங்கி வருகின்றனர்.

குண்டலினி எழுச்சியை உடல் தாங்கும் பக்குவத்தைப் பெற வேண்டும். உடல் சூடு - தலைக் கணம் - தலைக் குத்தல் - மூளைக் குத்தல் - உடல் சுறுசுறுப்பு - மயக்கம் போன்ற நிலைகளை உடல் தாங்கும் பக்குவம் பெற வேண்டும். கடும் வெப்பம் - கடுங் குளிர் இரண்டையும் சமமாக ஏற்றாக வேண்டும் நெற்றிச் சூடு போக்கவே திருநீறு திருமண் இடுதல் பழக்கங்கள் வந்தன. யோகத்தில் தேவைப்பட்ட இப் பழக்கம் அனைவருக்கும் பொதுவாகிவிட்டது. யோக நெறி புகுந்தவர்க்கு இது புரியும். உடல் மேல் எழல், உடல் பறத்தல், உடல் குளிர்ச்சி போன்ற அனுபவங்கள் உடலைப் பக்குவப் படுத்தும். உடல் அச்சம் - இறப்பு அச்சம் - பிணி அச்சம் என்பன நீங்கலே உடல் பக்குவ மேல்நிலைகள் எனலாம்.

முடிவுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம் சமயம், சமுதாயம் இரண்டையும் இரு கண்களாகப் போற்றும் ஆதீனமாக விளங்கி வருகின்றது. அத்தகைய ஆதினம் பழங்காலம் தொட்டே மேற்கொண்டுவரும் பணிகள் அனைத்தும் சமூதாய மக்களின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் பங்கு கொள்ளும் நிலையில் செயல்பட்டு வருகிறது. அத்தைகைய நிலையில் மக்களின் மனதை அடக்கும் நிலையில் மனிதனை இறை நிலைக்கும் உருவாக்கும் அரும் பணியின் ஒன்றாக ஒடுக்க வழிபாட்டின் பங்கு அமைகின்றது

அத்தைய ஒடுக்க வழிபாட்டின் மையத்தை மக்கள் பலர் அறியும் பொருட்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு

1. சொலல்வல்லன் அகராதி, (இணையம்) - ஜூன் 2021.
2. சிவஞான போதம் மூலமும் உரையும், தமிழ் இணையக் கல்விக் கழகம்.
3. சங்கம்பீடியா - தமிழ் மரபு அறக்கட்டளை.
4. குறள் திறன், இணைய உரைக் கோவை.
5. வீரசைவர்களின் வாழ்வியல் நெறிமுறைகள், செப்டம்பர் - 2012 .

திருமுறையில் குரவர்களின் பார்வையில் சைவ வழிபாடு

திருமதி ம.ரேகா
தமிழ்த்துறை. உதவிப்பேராசிரியர்.,
பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
வெப்படை, நாமக்கல்.
sivarekha2020@gmail.com

பழந்தமிழக வரலாற்றில் கி.பி ஆறாம் நூற்றாண்டு வரை இருக்கும் காலத்தைச் சங்க மருவிய காலமாகக் குறிப்பிடுவார்கள் என கூறிய கிபி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்று நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டதக்க நிகழ்வுகள் எதுவும் இல்லை. அக்காலத்தை இருண்ட காலம் என்பர். இக்காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சியும் ஆட்சியும் பல்லவர்களின் ஆட்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்காலகட்டத்தில் தொடக்கத்தில் தமிழகத்தில் சமண சமயம் புகழ்பெற்று ஓங்கி இருந்தாலும் மெல்ல மெல்ல அதன் செல்வாக்கு குறைந்து சைவ சமயம் சிறப்பாக வளரத் துவங்கியது.

சைவ சமய வளர்ச்சி

பழந்தமிழ் நாட்டில் 6 மற்றும் 7 ஆம் நூற்றாண்டுகளில் திருமுறை ஆசிரியர்களான திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய பெருமக்கள் தோன்றி சைவ சமயத்தை வளர்த்தார்கள். சைவ சமயப் பெரியோர்களால் வெற்றிப் பெற்று சைவம் தழைத்து ஓங்கியது. திருமுறைகளில் காலத்தால் முந்தியது காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் என்றாலும் நூல் வடிவில் திருமந்திரம் முதன்மை பெறுகிறது. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த திருமூலரின் பாடல்களைத் திருமந்திர நூலாகத் துவக்கப்பட்டன. அதனை அடுத்து ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியவர்கள் பாடிய தேவாரப் பாடல்களை முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டன. பின்பு மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையும் எட்டாம் திருமுறையாக தொகுக்கப்பட்டன.

திருமந்திரத்தில் சிவ வழிபாடு

பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் 9 தந்திரங்கள் என்ற நிலையில் 3000 பாடல்களைக் கொண்டது. "மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்" என்று திருமந்திரப் பாடலிலேயே இடம்பெற்று

இருந்தாலும் நூறு பாடல்கள் அதிகமாக காணப்படுவதன் காரணம் சில பாடல்கள் இரண்டு முறை மூன்று முறை நூலில் இடம் பெற்று இருப்பதாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளாக சிவ வழிபாட்டைச் சிவ ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றை தத்துவ அடிப்படையில் திருமந்திரம் கூறுகிறது. திரு மந்திரம் தான் வழிபாட்டினை தொகுத்தும் வகுத்தும் கூறுகின்ற முதல் நூலாகும்.

திருமந்திரத்தில் காணப்படும் சிவவழிபாடு *யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி யாவருக்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே. - 109 என்ற திருமந்திர பாடல் அர்ச்சனை வழிபாட்டை வலியுறுத்தல் சிவ வழிபாட்டில் ஐந்தெழுத்தை மந்திரமாக கொண்டு வழிபடும் முறையை திருமந்திரம் பெரிதும் வலியுறுத்துகிறது.

அஞ்செழுத்தே ஆகமமும்
அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம்

அனைத்தும் என்று சிவாயநம என்ற ஐந்து எழுத்து திருமந்திரம் பெருமையாக பேசுகிறது. தத்துவ அடிப்படையில் சிவபெருமான் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் வழிபட கூடியவன் என்பதை திருமந்திரம் விளக்குகிறது. பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதே சிவ வழிபாடு என்பதை.

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்

தெய்வீக உணர்வை பெறலாம் என்பது திருமந்திரத்தின் கொள்கை.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சிவ வழிபாடு

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்த பாடல்கள் தேவார பாடல்கள். திருஞானசம்பந்தர் தமிழக ஊர் தோறும் யாத்திரை சென்று அந்தந்த மக்களோடு தானும் வாழ்ந்து அங்குள்ள திருக்கோயில் இறைவர்களை பாடிய பாடல்களை தேவார திருமுறைகளாக தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு திருக்கோயில் இறைவனுக்கும் பத்து பாடல்களை கொண்ட பதிகத்தை ஞானசம்பந்தர் பாடினார். இறைவன் உயிர்களிடத்தில் உயிருக்கு உயிராய் உடனாய் நின்று காண்பன

கண்டும் காட்டியும் உதவுகிறார் என்பது ஞானசம்பந்தரின் கருத்து ஆகும்.

உயிருக்குயிராய் ஆங்காங்கே நின்றான் - (182 -4)

ஐம்பூதங்களாயும், மூன்று உருவமாகியும், ஐந்து தொழில்களை உடையவனாகவும் இறைவன் விளங்குகின்றான் என்று திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் திருநீற்றுப் பதிகம், நமச்சிவாயப் பதிகம் ஆகியவை சிவ வழிபாட்டின் தொன்மைகளை எடுத்துக்காட்டுகின்றன. "மந்திரமாவது நீறு" என்றும் "துதிக்கப் படுவது நீறு" என்றும் திருநீற்று பெருமையை ஞானசம்பந்தர் அறிவிப்பார். அதுபோல நமச்சிவாயா என்ற ஐந்து எழுத்தின் பெருமையை பலவாறு எடுத்துக்காட்டுவார் .

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்றும் அவர் போற்றுகிறார். ஞானசம்பந்தர் காலத்தில் பல்வேறு விழாக்கள் நடந்ததை அவருடைய பூம்பாவைப் பதிகத்தில் தெரிய வருகிறது. ஓணம் விழா, கார்த்திகை திருவிழா, ஆதிரை திருநாள், தைப்பூசத் திருநாள், ,பங்குனி உத்திரத்திருநாள் இதுபோன்ற விழாக்கள் நடைபெற்றன என்பது அப்பதிகத்தில் தெரிய வருகிறது. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் 16 ஆண்டு காலமே வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தேவாரப்பாக்கலில் சிவபெருமானின் தத்துவங்களும் திருக்கோயில் வழிபாடுகளும் திருநீற்று ஐந்தெழுத்தின் பெருமைகளும், திரு விழாக்களைப் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் சிவ வழிபாடு:

திருஞானசம்பந்தரோடு ஒத்த காலத்திலும் அவருக்கு முன்னே தோன்றி அவருக்கு பின்னரும் வாழ்ந்த திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் 4,5,6 திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளன. இவருடைய காலமும் 7 ஆம் நூற்றாண்டு பிற சமயத்தில் வாழ்ந்தாலும் திருவாளன் திருநீற்றை தன் சகோதரியார் அளித்ததால் திருவருள் பெற்ற திருநாவுக்கரசர் தொண்டு நெறிக்கு சான்றாக விளங்கினார். இவருடைய பாடல்களில் யோக நெறியும், ஞான நெறியும் பெரிதும் இடம் பெற்றுள்ளன. பொறி புலன்களை அடக்கி அகக்கண்ணால் இறைவனை கண்டு வழிபடுகின்ற நெறி யோகநெறி ஆகும்.

- உயிராவணம் இருந்து உற்றுநோக்கி
- உள்ளக்கிழியின் உருவெழுது
- உயிராவணம் செய்து என்பது அவர் கருத்து. அதுமட்டுமல்ல
- ஞானத்தால் தொழுவார்கள் ஞானிகள் என்றார்.
- திருக்கோயில் இல்லாத ஊர் காடு போன்றதாகும்.
- திருவெண்ணீறு பூசி வணங்காதவர் பிணத்தோடு ஒப்பர்.
- நாள்தோறும் பொழுது புலர்வதற்கு முன் திருக்கோயில் சென்று வழிபட வேண்டும்.
- பூமாலை சாற்றையும் பாமாலை பாடியும் தலையார இறைவனை வணங்க வேண்டும்.

நாமார்க்கும் குடியல்லோம் இறைவனுக்கே அடிமை யாவோம். கல்லை கட்டி கடலில் போட்டாலும் நற்றுணையாவது நமச்சிவாயவே. துன்பத்தை தீர்க்கும் மருந்து திருவைந்தெழுத்தாகும்.

நிலையாமையை உணர்ந்து இறைவனை வழிபட வேண்டும்

இறைவன் கனியை காட்டிலும் கரும்பைக் காட்டிலும் சிறந்தவன். இவ்வாறு திருநாவுக்கரசர் தேவராத்தில் சிவனின் பெருமைகளும் தத்துவங்களும் வழிபாட்டு முறைகளும் காணப் படுகின்றன.

சுந்தரர் தேவாரத்தில் சிவ வழிபாடு:

நம்பியாரூரர் எனப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் 7 திருமுறை யாக அவருடைய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இறைவனின் தோழனாக விளங்கிய சுந்தரர் இறைவனுடைய திருவருளை நேரில் அனுபவித்தவர். இறைவனின் திருவருள் நம்பியாரூரரின் வாழ்வில் இரண்டற கலந்தது என்றே கூறலாம். தேவார ஆசிரியர்கள் முன்னவர்களைப் போல தத்துவங்களையும் திருநீற்று ஐந்தெழுத்துச் சிறப்புக்களையும் இவருடைய பாடல்கள் வலியுறுத்தினாலும் இவருடைய பாடல்களில் சிறப்பிடம் பெறுவது தொண்டர்களை வழிபடுதல் ஆகும். இவருடைய திருத்தொண்டத் தொகை என்னும் பதிகம் 60 சிவனடியார்களை அடையாளம் காட்டுவதாகும். நடமாடும் தெய்வங்களாக சிவனடியார்களுக்கு தொண்டு செய்தால் அது இறைவனுக்கு செய்யும் தொண்டு என்பதை சுந்தரமூர்த்தி நாயனார் வலியுறுத்துகிறார். இவருடைய பாடல்கள் தனித் தன்மை வாய்ந்தது. எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் முதலாக அகரம் இருப்பது போல உலகத்துக்கு முதல்வனாக இறைவன் உள்ளான். இறைவன்

பால் அன்பில்லாதவன் அவனுடைய திருவடி ஞானத்தை பெற முடியாது என்றெல்லாம் பலவாறு இறைவனின் பெருமைகளை சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்களில் காண இயலும்.

உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

என்கிறார். குற்றமே செயினும் குணமாகக் கொள்ளும் இறைவ னிடத்தில் தீராத அன்பு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது சுந்தரரின் வழிபாட்டு நெறி.

குண்டையூர் சில நெல்லுப் பெற்றேன் அவை அட்டித்தரப் பணியே என்று அவர் கூறுகின்ற திருவாக்கால் அறியலாம்.

நலமில்லாதானை நல்லனேயென்றும் நரைத்த மாந்தரை இளையனே
குலமிலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பாரிலை
புலமெலாம் வெறிகமழும் பூம்புகலூரைப் பாடுமின் புலவீர்காள்!!
அலமராது அமரருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவுஇல்லையே புலமெலாம்
(தேவாரம் 7569)

சிவன் எல்லாம் தருவான் .எனவே மானிடரைப் புகழ்ந்து நலியாதீர். சிவனை வழிபட்டு உயர்வு பெறுங்கள் என்று மற்றையோரைச் சுந்தரர் அறிவுறுத்தும் அழகிய பாடல் இது.

மாணிக்கவாசகர் பாடல்களில் சிவ வழிபாடு:

திருவாதவூரார் என்றழைக்கப்படும் மாணிக்கவாசக பெருமான் 9 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர். சேர்ந்தவர். திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. இறைவனின் பெருமைகளை அவருடைய முதல் பதிகமான சிவபுராணம் ஒவ்வொரு அடியிலும் தத்துவங்களாக காணப்படும்.

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி

என்று அருள் பெற்றவர் மாணிக்கவாசகப் பெருமான். சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து சொல்லி வழிபட வேண்டும் என்று கூறியவர்.

- வினைப் பிறவி சாராமல் காப்பவன் சிவன் என்று கூறியவர்.
- பாசமாம் பற்றை அறுப்பவன். மலங்களை அறுக்கின்றவன்.
- வேத ஆகமங்களில் காணப்படுபவன்.
- இமைப்பொழுதும் நெஞ்சத்தை விட்டு அகலாமல் இருப்பவன்.
- கறந்த பால் கண்ணலோடு நெய் கலந்து போல அடியார்களின் உள்ளத்தில் வாசம் புரிபவன்.

- *இன்று பலவாறு சிவபுராணம் எடுத்துக்காட்டுகிறது.*
- *வேண்டத்தக்கது அறியோய் நீ!!*
- *வேண்ட முழுதும் தருவாய் நீ!*

வேண்டும் அயன்மாற்கு அரியதோர் நீ!
வேண்டி என்னை பணி கொண்டாய்!
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே!!

இறைவனிடத்தில் உண்மையான அடியவர் இறைவன் தரும் எதையும் ஏற்றுக் கொள்வர்!

"**மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து**"

இந்த பாடல் மூலம் இறைவனின் திருவடியை வணங்கினால் திருவருள் எளிதில் பெறலாம் என்பது மாணிக்கவாசகர் காட்டும் வழிபாடாகும்.

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சால அன்பு காட்டுகின்ற இறைவனை நீரும், பூவும் கொண்டு வழிபட்டால் முக்தி கிடைக்கும் என்பது மாணிக்கவாசகர் கூறும் வழிமுறையாகும். வானாக, மண்ணாக, காற்றாக, விளங்கும் இறைவனை ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லிச் சொல்லி வழிபட்டால் திருவருளை பெறலாம் என்பது மாணிக்கவாசகர் காட்டும் வழிபாடு.

முக்தி நெறி அறியாத மூர்க்கர்களை பக்தி நெறி அறிவிக்க செய்து வினைகளை எல்லாம் மாற்றி அருள் புரிகின்ற இறைவனை நாயகன் நாயகி பாவத்தில் வழிபடுகின்ற முறையினை திருகோவையார் மூலம் மாணிக்கவாசகர் புலப்படுத்துகிறார்.

குருத்த மரத்தடியில் ஞான ஆசிரியரால் அருள்ஞானம் பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் ஞான நெறியை பின்பற்றி 32 ஆண்டுகளே வாழ்ந்தவர் திருவாதவூரர். அவருடைய காலத்தில் சிவ வழிபாட்டு முறையை பலவாறாக சித்தரித்துக் காட்டியுள்ளார்.

பார்வை நூல்கள்

1. *சைவ சமய வரலாறு பன்னிரு திருமுறை வரலாறும் சித்தாந்த வித்தியாசாகரம் கு. வைத்தியநாதன்*
2. *சைவமும் தமிழும் - ந. சுப்புரெட்டியார்*

மயிலம் சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ள செய்திகளும் விளக்கங்களும்

த. வினோத்,
தொல்லியல் ஆய்வாளர்,
தென்கூடல் வரலாற்று ஆய்வு மையம் -மதுரை
கைபேசி -7094110092
vinoththangapandi01@gmail.com

முன்னுரை

இவ்வுலகில் தோன்றிய மாந்தர்களின் மரபு நெறிகளில் ஒன்று இறை கொள்கையாகும். தனக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருப்பதனையும் அதனால் தம் வாழ்வு வசப்படுகிறது என்கிற நம்பிக்கையில் அவரவர் விருப்பத்தின்படி தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். இவற்றை முன்னிறுத்தி மொழி என்னும் இணைப்பு கருவியின் மூலமாக இத்தகைய தெய்வ நிலைப்பாட்டை முன்னிறுத்தி அவற்றை வரலாற்றுடன் படைக்கப்படும் படைப்பே இலக்கியம் என்பதாகும். இத்தகைய வகையானது ஒவ்வொரு காலகட்டத்திலும் அதற்கான காலச் சூழலுக்கேற்ப இறைக் கொள்கை, பண்பாடு, கலாச்சாரம், மரபுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அறிவில் தேர்ச்சி பெற்ற புலவர்களால் தத்தம் படைப்புகளை அந்தந்த நாட்டில் உயர்ந்த நிலையில் இருக்கப் பெறும் இறைவன் போன்ற உயர்வான தலைவனான மன்னனிடம் பாடி பரிசில் பெற்று மொழியினையும் இறைப்பற்றினையும் காலந்தோறும் காத்து வந்திருக்கின்றனர். அவை, நாளடைவில் இறை வழிபாட்டின் மூலமாக பக்தி சார்ந்த இலக்கியங்களையும், மனித வாழ்வியல் தொடர்பான நூல்களும் அறமடங்களால் படைக்கப்பட்டு மதத்தினையும், நெறிகளையும் வளர்த்து வந்திருக்கின்றனர்.

இத்தகைய சிறப்புக்குரிய மடங்களில் ஒன்றாக மயிலம் பொம்மபுர ஆதினம் இருந்து வருகிறது. இது ஒரு சைவ சமய அறமடமாகும். இம்மடமானது கிபி-7ம் நூற்றாண்டில் தொடங்கப் பட்டு தற்போது வரை இறைப்பணியும், இலக்கியப் பணியையும் சீரோடும் சிறப்போடும் செய்து வருகின்றது. மயிலத்தில் வீற்றிருக்கின்ற சுப்பிரமணிய சுவாமியை முழுமுதற் கடவுளாக வணங்கி இறைபாதம் அடைந்த சந்நிதானமான அருள்புரிகின்ற

குரு முதல்வர் பால சித்தரால் இம்மடம் தோற்றுவிக்கப்பட்டு அரும்பணியை ஆற்று வருகின்றது.சுப்பிரமணியர் = சு என்றால் உயர்ந்த என்றும் பிரஹ்மண்யம் என்றால் சக்தியான உருவம் அதாவது உயர்ந்திருக்கின்றவர் என்று பொருள்படும்.இவை முருகப்பெருமானை குறிக்கிறது.முருகன் என்றால் இளமை, அழகு, கடவுட்டண்மை என்ற பொருள் இடம்பெறும். அழகில் அழியாத நிலை இறைவனுக்கு உண்டு என்ற கருத்தினை உள்ளடக்கியதாக இப்பெயர் அமைகிறது. இப்படிப்பட்ட இறைவனுக்கு பல்வேறு இலக்கியங்கள் இருப்பினும் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்த வகைக்கு சிறந்த நிலை உண்டு எனவே,மயிலம் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ள செய்திகளையும் அதன் விளக்கங்களையும் பற்றி இக்கட்டுரை உணர்த்த இருக்கிறது.

பிள்ளைத்தமிழின் தோற்றச் சிறப்புகள்

உலகில் நமக்கு கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பிரபந்தத்தை பற்றியான குறிப்புகள் உள்ளன. இதனை சிற்றிலக்கியம் என்று கூறுவர். இவ்விலக்கிய வகைகளில் முதன்மையான ஒன்று பிள்ளைத்தமிழ் என்பதாகும். இவை தாம் விரும்பும் தெய்வங்களையோ,வள்ளல்களையோ, அரசர்களையோ, தலைவர்களையோ,குழந்தைகளாக கருதிப் பாடும் வகையினைச் சார்ந்ததாகும். இதற்குப் பிள்ளைபாட்டு,பிள்ளைக்கவி பிள்ளை கவிதை,பிள்ளை திருநாமம்,பிள்ளை பிரபந்தம் என்கின்ற வேறு பெயர்களும் உண்டு. இவை பத்து பருவங்களை உள்ளடக்கியும் பாலினங்கள் அடிப்படையில் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவிலும் இயற்றப்பட்டு இருக்கின்றது.

இவ்விலக்கியத்திற்கான இலக்கண குறிப்புகளை பன்னிரு பாட்டியல்,நவநீத பாட்டியல்,பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம் முத்து வீரியம், சாமிநாதம், பிரபந்த தீபிகை ஆகிய நூல்கள் கூறுகின்றன.

சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழில் இடம்பெறும் செய்திகள்

தமிழ்நில வேந்தனாக போற்றப்படும் முருகனைப் பற்றியான செய்திகளை பாமாலைகளைகளால் சூட்டப்பற்ற குறிப்புகளை இந்நூல் உணர்த்துகின்றது. யாமிருக்க பயமேன் என்ற சூட்சும தத்துவத்திற்கு செயல்பாட்டுக்குரியவனாக முருகப்பெருமான் விளங்குகிறார். இவ்விறைவனுக்கு பல்வேறு விதமான

திருநாமங்களால் உண்டான பெயர்கள் மூலமாக இவரின் பெருமைகள் உணர்த்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக குமரன், குகன், சரவணன் வேலன், கந்தன், சுவாமிநாதன், சன்முகன், கதிர்காமன் என்றெல்லாம் இவரை அழைக்கப்படுகின்றனர்.

இந்து சமயத்தில் பல்வேறு விதமான தெய்வ வழிபாடுகள் இருந்தாலும் முருகனுக்கு என்று தனி இடம் உண்டு. இவரின் வழிபாட்டினை கௌமாரம் என்று கூறுவர். நாட்டார் வழக்காறுகளில் சுக்குக்கு மிஞ்சிய பொருளுமில்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை என்ற சொலவடை ஒன்று இடம்பெறுகிறது. இப்படிப்பட்ட இறைவனின் திருப்பாதத்தை அடைந்து இறைவனான சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் அருட்சிறப்பை புகழ்ந்து பாடும் வடிவமாக இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் அமைகிறது. பாமாலைகளாக சூட்டப் பட்டு இந்நூலுக்கு மேலும் அழகு சேர்த்த வண்ணமே உள்ளன. இந்நூலில் முதல் பாடலாக விநாயகர் துதியோடு தொடங்கியும் மொழி, நாட்டு வளம் தெய்வத் தனித்தன்மையை வெளிப்படுத்தியும் இப்பாமலைக்கு அணி சேர்க்க வேண்டும் எனவும் உலக உயிர்களுக்கெல்லாம் அருள் புரிய வேண்டும் என்று மாலை தொடுக்கப்படுகிறது.

முத்தொழில் புரியும் சிவபெருமானின் அவதாரக் கூறுகளையும் அருட் செயல்களையும் புராணப்போக்குகள் வாயிலாகவும் இத்தலத்தில் வீற்றிருக்கின்ற இறைவனனான மயிலம் முருகனுக்கு அருளாசி வேண்டி விண்ணப்பம் செய்வதாகவும் மருத நில கடவுளான இந்திரனின் சிறப்புகளையும் நில அமைப்புகளையும் சிவபெருமானால் அடைந்த நன்மைகளையும் பற்றியும்

உமையம்மையின் அருளானது மயிலம் வேலப்பருக்கு கிடைக்க வேண்டியும் திருமகள், கலைமகள் ஆகிய தெய்வச் சிறப்புகளையும் தமிழ் மொழியின் விளக்கக் கூறுகளையும் அம்மொழித் தலைவனான முருகப்பெருமான் மழலை மொழியில் பேச வேண்டும் எனவும் மயிலம் ஆதீனத்தின் குருவான பால சித்தரின் வரலாற்றினையும் இவ்வுலக உயிருக்கு ஆசி கிடைக்க வேண்டும் என்று ஆண்பாற் பிள்ளைத்தமிழில் உள்ளடக்கிய பருவங்களுக்கு ஒன்றிற்கு பத்து பாடல்கள் விதம் நூறு பாடல்களை கொண்டு இவ்விலக்கியம் அமைந்துள்ளது.

பிள்ளைத்தமிழில் இடம்பெற்றுள்ள பாடலடிகளின் விளக்கங்கள்

ஒரு பச்சிளம் குழந்தை எத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுமோ அத்தகைய நிலைபாட்டில் எடுத்துக்காட்டாக வாயில் உமிழ்நீர் ஒழுகுவது,கை கால்களை அசைப்பது போன்று மழலை மனம் கமழும்படியாக உள்ள குழந்தையை கார்த்திகை பெண்கள் ஆற்றப்படுத்துவதாகவும் செங்கீரையாடி அருளவும் வேலவனை புகழுவும் சிவனின் சிறப்பம்சத்தை விளக்ககிக்கூறுவதாக இப் பருவக் குறிப்புகள் அமைவதோடு கிருத்திகை தோறும் முருகனைப் பற்றியான சொற்பொழிவினை பாலய சுவாமிகள் நிகழ்த்துவது, இயற்கை அமைவினை எழிலோடு எடுத்துக் கூறி பால சித்தி முருகப்பெருமானை நோக்கி தவமிருந்தவர்கள் எல்லா வளமும் நலமும் அடைவர் என்றும் இப்படிப்பட்ட இறைவனான வேலவன் உறங்குக என்று தாலேலோ தாலேலோ என்று தாலாட்டுகின்றனர்.

முப்புறம் எரித்த சிவபெருமானின் புராண சிறப்புகளையும் தேவர்களின் மகிமைகளையும் மையமாக கருதி அகன்று விரிந்துள்ள குறிஞ்சி மலையில் வாழுகின்ற சுப்பிரமணியரே சப்பாணி கொட்டி அருள வேண்டும் என்று கூறும்படியாகவும், ஆயுத எழுத்தினை மூன்றுடைய சிவபெருமானின் புதல்வனே உயர்ந்த மலை முகடுகளையும் கொண்ட மயிலம் மலையில் வீற்றிருக்கும் குழந்தையான இளமுருகனே நீர் எனக்கு ஒரு முத்தம் தருவாயாக என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

முருகனின் அங்க அடையாளங்களான நெற்றிபட்டை, பிறை அணிகள், காப்புபொற்சரம், மதாரை, சிலம்புதண்டை அணிந்திருக்கும் ஒளியுடைய பகலவனே மயிலம் மலையினை காப்பவனே நீர் தளர்நடை நடந்து காட்டுவாயாக என்றும் வேண்டுகோள் விடுப்பது போன்றும்

ஐம்பூதங்களையும் கட்டுப்படுத்தும் கடவுளாகவும் பிறை வளர்ந்து முழு நிலவை போன்ற மென்மையாக காட்சியும் கொடுக்கின்ற ஆற்றல் மிகுந்த அரசனான மயிலம் வேலனுடன் நீர் ஒன்றுபட்டு விளையாடி வருவாயாக என்று வருணிக்கப்படுகிறது.

திருஞானசம்பந்தர் உமையுடன் ஞானப்பால் உண்டு தமிழ் பாலை கற்று ஆலயம் தோறும் பாமாலை பாடி இறைவனையும் மக்களையும் மகிழ்வித்த சிறப்பு உரியவன் ஆவான். இவைனைப் போன்று பல்வேறு சிறப்புகளை உடைய மயிலத்தில் வீற்றிருக்கின்ற குழந்தைவேலனுடன் சிறிய இல்லத்தை சேதப்படுத்தாமல் அவற்றைக் காத்து நின்று நீர் அருள் புரிய வேண்டுமென கூறுகின்றனர்.

முருக அடியார்கள் வேண்டிய கோரிக்கைகளை உடனே நிறைவேற்றி உலக உயிர்களுக்கெல்லாம் நிலையாமை தத்துவத்தை எடுத்தியம்பி துன்பத்தை போக்கி இன்பத்தை தரும் முருகப் பெருமானே உனது சிறுபறையை முழங்கி அருள்கவே என்றும் பலவிதமான வேடங்களில் பக்தர்களுக்கு அருகில் இருந்து இவ்வுலகத்தில் அனைவரையும் காத்து நிற்பவராகவும் ஞானம் சங்கீதம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியவராகவும், தாம் அடைந்த துன்பங்களை போக்கி வாழ்வில் ஒளிபெறச் செய்ய கூடியவனாக இருக்கின்றார் இப்படிப்பட்ட இறைவனான முருகப்பெருமான் சிறுதேரினை உருட்டு வாயாக என்று விண்ணப்ப செய்வதாய் இப்பிள்ளைத்தமிழில் புலவர் மு.வல்லாளன் என்பவர் இயற்றியுள்ளார்.

முடிவுரை

ஒரு இலக்கை முன்னிறுத்தி அவற்றை ஒரு முழுவதோர் படைப்பாக உருவாக்கி அவற்றிற்கு இலக்கண இலக்கியங்களை கூறி தகுந்த கருப்பொருளை புகுத்தி அமைந்ததே பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியமானது எவ்வாறு தோற்றம் பெற்றன அவற்றின் வளர்ச்சியாது? என்பதனையும் அறமடங்களின் அருட்பணியையும் ,புலவர் மு.வல்லாளன் இயற்றிய மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பற்றி படைக்கப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளையும் விளக்கங்களையும் பற்றி இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

துணை நூற்பட்டியல்

1. முனைவர் சு.ஈசுவரன்,தமிழ் இலக்கிய வரலாறு,நிர்மலா பதிப்பகம் -2022
2. ஸ்ரீலஸ்ரீ அ.வே சாந்தி குமார சுவாமிகள்,முத்துக்குமார சுவாமி பிள்ளை தமிழில் சைவ சித்தாந்த கருத்துக்கள், திருப்பதி தேவஸ்தானம், 2006
3. ஞா. மாணிக்கவாசகன்,மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மூலமும் உரையும்,அம்மா பதிப்பகம், 2016
4. தமிழ் தென்றல் திரு.வி.க,முருகன் அல்லது அழகு , பூம்புகார் பதிப்பகம், 2002.
5. முனைவர் ஹரி.விஜயலட்சுமி, தமிழ் இலக்கிய வரலாறு, செல்லப்பா பதிப்பகம், 2024

புதுவைத் தமிழ்க் கவிஞர்களின் பாக்களில் வெளிப்படும் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணி

இரா. பாரதிராஜா,
ஆசிரியர்மனை எண்: 2, 8 ஆவது குறுக்குத் தெரு,
வெண்ணிசாமி நகர்,
குருவப்ப நாயக்கன் பாளையம்,
புதுச்சேரி-605110. பேசி: 9600515187
bharathi164@gmail.com

முன்னுரை

தமிழ்க்கடவுள் முருகன் சந்நிதி கொண்டு எழுந்தருளியுள்ள மயிலம் பொம்மபுரத் திருமடத்தை உடையது மயிலம் திருத்தலம். முருகரைக் காட்சியாகக் கண்ட பாலசித்தர் வழிவந்த சிவஞான பாலய சுவாமிகள் மரபு குருமகா சந்நிதானங்கள் இறைப்பணியோடு தமிழ்ப்பணியையும் கல்விப் பணியையும் சமுதாயப் பணியையும் இன்னும் பற்பல அரும்பணிகளையும் ஆற்றி வருகின்றனர். மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணியினைப் புதுவையின் ஆகச் சிறந்த சமகால கவிஞர்கள் பாக்களாக வடித்துள்ளனர். அவை "செந்தமிழ் வளர்க்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம்" என்னும் தலைப்பில் மயிலம் பொம்மபுர ஆதீனத்தால் நூறாம் வெளியீடாக 2017 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர் ச. திருநாவுக்கரசு அவர்கள். முப்பது கவிஞர்கள் முப்பது கவிதைகளைப் படைத்துள்ளனர். அக் கவிதைகளில் சொல்லாலும் பொருளாலும், ஓசையாலும் வெளிப்படும் கவிச்சுவை பருக பருக இனிமை பயக்கின்றன. பாரதி, பாரதிதாசன், வாணிதாசன், தமிழ் ஒளி, புதுவைச் சிவம் என்று தமிழின் ஆகச் சிறந்த கவி முன்னோடிகள் வாழ்ந்த மண் புதுவை மண். அந்தக் கவி மரபின் தொடர்சியைத் தளர்ச்சியுறாது முயற்சியோடு முன்னெடுத்துச் செல்லும் கவிஞர்கள் இக்காலத்தே மிகுந்து காணப்படுகின்றனர். அத்தகு வியத்தகு புதுவைக் கவிஞர்களின் எழுத்தில் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணி எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

செந்தமிழ் வளர்க்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம்

கவிதை: 1

இறையருளார் இருபதாம் சன்னிதான மேலோர்
இயக்கமுறும் அன்பொன்றே அவர்காணும் இன்பம்!

மறையோரின் வழிவந்து மாப்புகழும் பெற்றே;
மனமொன்றி மாத்தமிழை வளஞ்செய்ய நின்றார்!
மறைந்த பாவலர் மரபுமாமணி தியாகி மு. அப்துல்மஜித் அவர்கள்

ஆதீனத்தின் தமிழ்ப்பணிகளைச் சுட்டிக்காட்டும் வேளையில் இருபதாம் குருமகா சன்னிதானங்களின் சிறப்புகளையும் கூறுகிறார். வீரசைவம் செழிக்கச்செய்யும் குருமகா சந்நிதானம் அவர்கள் அன்புருவாய் நின்று தமிழ்ப்பணி ஆற்றுவதை தம் எழில் கவிதையில் கூறிச்செல்கிறார்.

கவிதை: 2

தமிழ்வளரும் இனம்வளரும் அன்பு தோயும்!
அழுக்ககற்றும், உளம் வெளுக்கும், அருளும் பூக்கும்,
அறம் வளரும் சிவஞான சித்தி ஓங்கும்!

பொம்மபுர ஆதினத்தின் இருபதாம் பட்ட குருமகா சந்நிதானங்களின் தமிழ்ப்பணியால் தமிழ் வளரும், அத்தமிழ் வளரும் போது தமிழினம் வளரும், அவர் அருளாட்சியில் அன்பு தோயும், அழுக்கு நீங்கி உளத்தூய்மை அடைந்து அருள் பூத்து அறம் வளர்ந்து சிவஞான சித்தி ஓங்கும் என்று கூறுகிறார் கலைமாமணி கல்லாடன் அவர்கள். அன்பு, அறம், சித்தி என்னும் ஆன்மீகப்பயணத்தின் பாதையில் முதலில் தமிழ் வளர்ச்சி நிற்கின்றது. தமிழர்க்குத் தமிழே சிவஞான சித்திக்கு தொடக்கமாக விளங்குகின்றது என்று இதன்மூலம் எண்ணப்படுகின்றது.

கவிதை: 3

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிர காசரின்
நற்றமிழ் நூல்களை நன்கு கொணர்ந்தவர்
வற்றா வளந்தரு வண்டமிழ் வளர்த்திடும்
நற்றாய் மயிலம் தமிழ்க்கல் லூரியே!

இருபதாம் பட்ட குருமகா சந்நிதானம் அவர்கள் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரின் அரும் நூல்களை பதிப்பித்து வெளியிட்டுத் தமிழ்த்தொண்டாற்றியவர் என்று கலைமாமணி இலக்கியன் கூறுகிறார். வளம் என்பது வற்றும் தன்மையுடையதே. மிகச் சில வளங்களே வற்றாத இயல்பு கொண்டவை. அவற்றுள் ஒன்றாக தமிழை இணைத்து, அத்தமிழை வளர்த்திடும் நற்றாயாக மயிலம் தமிழ்க்கல்லூரி விளங்குகின்றது என்று தமிழுக்கு அக்கல்லூரியை தாயாக்கும் சிந்தனை தமிழ் அறிந்த சான்றோர் அனைவராலும் ஒற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். அக்கல்லூரி

தமிழ்ச் சான்றோர் பலரைத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அளித்துள்ளதை தமிழை நன்கு அறிந்தோர் அனைவரும் அறிவர்.

கவிதை: 4

மயிலம் முருகன் மாந்தமிழ்க் கல்லூரி
உயிர்களைக் காக்கும் உயர்விட மாகும்;

வீர சைவமும் வியன்தமிழ் வளர்ப்பும்
தீரமாய்ச் செய்தது தீந்தமிழ்க் கல்லூரி

மயிலம் தமிழ்க்கல்லூரியை உயிரைக் காக்கும் உயர் இடம் என்று கலைமாமணி சு. வேல்முருகன் அவர்கள் கூறுகிறார். இதன் மூலம்,

தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளோடு தொடர்புபடுத்திப் பார்க்க வாய்ப்பை ஏற்படுத்திவிடுகிறார் பாவலர். வீர சைவத்தையும் தமிழையும் துணிவுடன் வளர்த்த தமிழ்க்கல்லூரி என்று புகழுங்கால் அதனை உருவாக்கி மேலாண்மை செய்யும் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ்ப் பணியே வெளிப்படுகின்றது.

கவிதை: 5

நல்லதாம் நூலென்று நன்னெறி பதிப்பித்தீர் - நால்வர்
நான்மணி மாலையும் நன்குவரப் புதுப்பித்தீர்!
வல்லதாம் சோணசைல மாலையை அணிவித்தீர் - மனம்
மகிழ்வுறப் பிரபுலிங்க லீலையை வெளியிட்டீர்

பாவலர் கலைமாமணி பாவலர் தே. சனார்த்தனன் அவர்கள் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் வெளியிட்ட நூல்களைப் பற்றி மேற்கண்ட வரிகளில் கூறுகிறார். பொம்மபுர ஆதீனம் நூல்கள் பலவற்றைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. தமிழ், வீர் சைவம், சித்தாந்தம் உள்ளிட்ட நூல்களை வெளியிட்டு தமிழ்ப்பணியாற்றி வருகின்றது. நால்வர் நான்மணி மாலை, பிரபுலிங்க லீலை போன்ற நூல்களைக் குறிப்பிட்டுள்ளமையால் குருமகா சந்நிதானத்தின் தமிழ்ப் பற்றும் அவர்தம் தமிழ்ப் பணியும் அவ்வரிகளின் வழி காட்சியாக்கப்பட்டுள்ளன.

கவிதை: 6

மந்திரத் தமிழ்மொழிக் கழகான கல்லூரி
மயிலத்தில் பெருமைகொள்ள

வளமிகு முனைவர்கள் படிப்பையே உருவாக்கி
வைத்திட்ட ஞானகுருவே

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் முனைவர் பட்டப்படிப்பு வழங்கப் படுகின்றது என்ற செய்தியை கூறுகிறார் மறைந்த பாவலர் கோனேரி பா. இராமசாமி அவர்கள். தேர்ந்த முனைவர் பட்ட ஆய்வாளர்களை உருவாக்குவதன் மூலம் சிறப்பான தமிழ்ப்பணியை மயிலம் கல்லூரியின் வாயிலாக பொம்மபுர ஆதீனம் செய்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

முடிவுரை

"செந்தமிழ் வளர்க்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம்" என்ற கவிதைத் தொகுப்பில் காணப்படும் முதல் ஆறு பாடல்கள் மட்டுமே கட்டுரையின் நீளம் கருதி இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. மீதம் இருபத்து நான்கு பாடல்கள் உள்ளன. இந்த ஆறு பாடல்களின் மூலம் பொம்மபுர ஆதினத்தின் வழியே ஸ்ரீலஸ்ரீ இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணிகளை அறியமுடிகின்றது. அரும்நூல்கள் வெளியீடு, தமிழ்க்கல்லூரியின் கல்வி மற்றும் தமிழ்ப்பணி, முனைவர் பட்ட ஆய்வு, தமிழ் வழியே வீரசைவ தத்துவ விளக்கப்பணி உள்ளிட்டவை ஆறு பாடல்களிலேயே கிடைக்கின்றன. இதன் மூலம் மயிலம், முருகனின் ஏழாம் படைவீடாக அமைந்து இறைப்பணி ஆற்றிவரும் அதே வேளையில் தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு தலைவீடாக இயங்கிவருதலையும் அறிய முடிகின்றது.

சிவனுக்கு நிகர் சிவஞானியே!

முனைவர் மு. மகாலட்சுமி
உதவிப் பேராசிரியர் & தமிழ்த்துறை தலைவர்
கொ. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி,
கடலூர். 9677389329
Mahalakshmi18270@gmail.com

அன்பு, அருள், அமைதி, ஞானம், நற்கதி எனப் பல்வேறு சிறப்புகளும் நிறைந்த ஞானாசானாக விளங்குபவர் சிவஞானி. வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளுபவர். பொம்மபுரப் பதியிலும், குறிஞ்சி நிலமான மயிலம் மலையிலும் வீற்றிருந்து அமரர் போற்றும் பெருமையில் சிறந்தவராகத் திகழ்ந்தவர் சிவஞானி. ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க பிறருக்கு உதவி செய்து மகிழ்ந்தவர். எளியவர் முதல் செல்வந்தர் வரை நன்கு பழகியவர். புன்னகை தவழும் அன்பு முகம் கொண்டவர்.

ஆன்மீக நெறிப்பரப்பும் தொண்டுள்ளம் கொண்டு, மண்ணின் மைந்தராய் ஆலயம் அமைத்தார். அறப்பணிகள் பல செய்தார். நாடும், மொழியும் இருகண்ணாகப் பாவித்து செயல்பட்டார். தான் வாழும் வாழ்க்கையை வரலாறாய், கவி அமுதமாக, கடமையின் சின்னமாக, சாதனை நாயகராக, உன்னத குருவாக, உரிமையின் காவலராக வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

ஞான நெறி

மக்களுக்குப் புரியும் வண்ணம் சமயத்தைப் போற்றியும் சமுதாயத்தைப் போற்றியும் மாதந்தோறும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். வீரசைவ, சமய, சமுதாய மேம்பாட்டுக்கான நிலையினை மக்களிடையே பரப்புவதற்கு மொழி, சமயம், சமுதாயம், பண்பாடு சார்ந்த கருத்துகளைக் கொண்டு சிறந்த முறையில் "சங்குகன்ன பாலசித்தர்" மாத இதழை நடத்தினார். ஆலயங்கள் தோறும் சென்று குடமுழுக்கு, விழா, வேள்விகள், சமய நிகழ்வுகள் முதலானவற்றை முன்னின்று நடத்தி அருள்நெறிக் காவலராக விளங்கினார். "ஞான நெறியினைப் பரப்புவதில் சிவஞானிக்கு நிகர் சிவஞானியே."

சிவனே சிவஞானி

கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள், ஞானாசிரியரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஐந்து சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். அவை, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், தாலாட்டு என்பனவாம்.

கயிலை மலையில் அருள் பாலிக்கும் சிவபெருமானே, மயில மலையில் சிவஞானியாகக் காட்சியளித்து அருளாட்சி செய்கிறார் என்பதை ஸ்ரீ சிவபிரகாசர் உலகத்தின் கண்ணுள்ள மலைகள் யாவற்றையும் கங்கையைத் தாங்கி நிற்கும் சிவபெருமான் உறையும் கயிலை மலையாகவும், சூரியனைச் சந்திரனாகவும், கடல்களைத் திருப்பாற் கடலாகவும், யானைகள் அனைத்தையும் இந்திரனது ஐராவதமாகவும், பாம்புகள் அனைத்தையும் பாம்புகளுக்கு எல்லாம் இறையாக விளங்கும் ஆதிசேடனாகவும் மாற்றுகின்ற சக்தி மிக்கவராய்த் திகழ்ந்து பெரும்புகழ் பெற்றவராய் விளங்கினார் எனச் சிவஞானியின் பெருமையைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

சிவஞானியின் மேன்மை

நீர்தாங்கு சடாமவுலி நெடும்மயிலைக் கிரியாகப்
பார்தாங்கு வரையெல்லாம் பனிக்கலை வெண்மதிஆக
(சி. பா. கலம். 1)

இத்தகைய மாண்புடைய மலைமீது நீர்வளத்தை ஏற்படுத்திய பெருமை 18 ஆம் பட்டம் சந்நிதானம் அவர்களையே சாரும். நமக்கு நீர் மிக அவசியம். கடல் பெரிதாக இருப்பினும் அதனால் பயனில்லை. எனவே, மழை பொழிதல் வேண்டும்.

வீண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி **(குறள். 10)**

என மழையின் அவசியத்தைத் திருவள்ளுவர் வான்சிறப்பு எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார். தண்ணீருக்கு இயல்பான குணம், மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும். ஆனால் மயில மலையில் கீழிருந்து தண்ணீர் மேலே கொண்டு வரப்படுகிறது. இச்செயலின் வழியால் சிவஞானியின் மேன்மை விளக்கப்படுகிறது.

சுப்பிரமணிய அய்யர் சிவனே சிவஞானி என்பதை உணர்ந்து, சிவபிரானுக்குரிய மான் ஏந்தும் கை முதலிய அடையாளங்களை மறைத்து, மனித வடிவில் நீ வந்தாலும், உன் உண்மைத் தன்மையைக் காட்டி அடியவர்க்குச் சிவவொளியின் இயல்பை உணர்த்தி

அவருக்குத் தனிச் சிவப்பேறளிக்கும் சிவஞான தேசிகனே! எனப் போற்றி பாடியுள்ளார்.

மான்காட்டும் கரதலமும் மதிநதிகாட்
டும்முடியும் வாமந் தன்னில்
தேன்காட்டும் பொழிற்பொம்ம புரிவாழ் எம்
சிவஞான தேவே போற்றி (போற்றி பஞ்சகம். 3)

திருநீலகண்டரும், அவர் மனைவியும் சிவப்பற்றுடையவர்கள். அவர்களுக்குப் குழந்தைப்பேறு கிட்டவில்லை. அவர்களின் இளமை கழிந்து மூப்பினை அடைந்தனர். சிவபிரான், அவரின் பக்திப்பேற்றை உணர்ந்து மூப்பினைப் போக்கி இளமை உண்டாக்கினர். ஆதி சிவஞான பாலய சுவாமிகள், மதுரையில் இருந்த தையல் தொழிலாளியின் மனைவி முதுமையடைந்தும் பிள்ளைப் பேறில்லாமல் வருந்திய போது, அவர்கள் இருவர் முதுமையையும் போக்கி, இளமையுறச் செய்து, பிள்ளைப் பேறடையும் சிறப்பையும் அருளினார். இதன்கண் பெண்ணுக்கு இளமையளித்த வகையில் சுவாமிகள் சிவபிரானை ஒத்தவராகக் திகழ்ந்ததை அறியமுடிகிறது.

மேலும், உலக மக்களின் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைப் போக்கி அருளை வாரி வழங்க வந்த செங்கதிரோன் சிவஞானியே என்பதை,

எங்கள் மலஇருளுக்கு ஈண்டு மயிலை மிசைச்
செங்கதிர்போல் தோன்றும் சிவஞான தேசிகனோ
(சிவ. தாலாட்டு. 93)

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. மலங்கள் அற்றவனே மலங்களைப் போக்க முடியும். எனவே விமலனாகிய சிவனே இங்குச் சிவஞானியாக வந்து எங்கள் மலங்களைப் போக்கினார் என்பதைப்

பவப்பிணிக்கு மருந்துனது பார்வையே தானற்றோ

எனச் சிவஞான பாலய தேசிகர் கலம்பகத்திலும் இதே கருத்தைக் கூறியுள்ளார்.

மேன்மை யுள்ளசிவ ஞானதே சிகனிவனெனும்
மிக்க நாமமொடு மேதினி தழைக்குமுறையால்
மானி டப்புதிய கஞ்சுக மணிந்து தமிழ்தேர்
மயிலை மால்வரை வளம்பெருக வந்த பரிசும் (பாச. ப. 221)

மேன்மையுற்ற சிவஞான தேசிகன் சிவனெனும் மிக்க பெயர் தாங்கி நாமமொடு மேதினி தழைக்கும் முறையால் மானிடச் சட்டை தாங்கிச் தமிழ்த்தேர் மயிலமலையின்மீது ஞானகுருவாக எழுந்தருளி வளம் பெருக்க அவதரித்தார்.

அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைத் தரவல்லவர். உலக மக்கள் உச்சரித்துக் கடைத்தேற்றம் பெற சிவஞானதேசிகன் என்ற திருப்பெயர் பெற்றவர். கலியுக ஆபத்துகளிலிருந்து நீங்கி நன்னிலை பெறுவதற்கு இறைவனுடைய நாமாவளிகள் துணையாக நிற்கின்றன. நாவுக்கரசரும், நற்றுணையாவது நமச்சிவாயவே என்று பாடியுள்ளார். அதே போல சிவஞான பாலய தேசிகன் எனும் திருப்பெயர் உச்சரிப்பவரைக் காப்பாற்றவல்லது.

அலையெகுத்த வுலகி னருந்த தவம்
தலையெ டுப்பத் தலையெடுத் துந்தியே

அஞ்ஞானத்தால் இடையறவு படாத பிறவிகள் பல எடுத்த உலகினர் அருந்தவம் செய்து மேன்மையுற வந்து உதித்தவர் சிவஞானியே.

சிவஞாணியைப் போற்றி பாடிய புலவர்கள்

17 ஆம் நூற்றாண்டில் சிவஞானி மீது ஐந்து நூல்களைப் பாடித் தமிழுக்கும், மொழிப் புலமைக்கும் இறவா நெறியைத் தம் கவித்துவத்தால் வழங்கினார்கள் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள், அருணகிரிநாதர், வைத்திகநாத தேசிகர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், இராமலிங்கச் சுவாமிகள், தியாகராஜக் கவிராயர், பண்ருட்டி மணி அப்பாவு அய்யர், பாரதிதாசன், ஆ. சிவலிங்கனார், இரத்தின முதலியார், வேங்கடாசல நாயக்கர், உருத்திரசாமி முதல் சமகாலப் புலவர் பெருமக்கள் வரை பலராலும் சிறப்பித்துப் பாடப்பெற்றது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடமாகும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது அவ்வையின் வாக்கு. ஒரு நாளில் குறிப்பிட்ட நேரமாவது இறைவனை வழிபடும்போது மனம் உலக நடப்புகளை மறந்து அமைதி பெறும். அந்த அமைதியானது மக்களுக்குத் தெய்வ உணர்வை உண்டாக்கி நல்லற வாழ்வை மேலோங்கச் செய்யும்.

அரிது அரிது மானிடராம்ப் பிறத்தல் அரிது

எனும் ஔவையார் தனிப்பாடலுக்கேற்ப ஞானத்திலும்,

கல்வியிலும், தானத்திலும், தவத்திலும் தலைசிறந்த திருமடமாக மயிலம் பொம்மபுர ஆதீனம் திகழ்கிறது.

ஆன்மீக மருத்துவர்

மனிதர்களுக்கு உடலின்கண் வந்துள்ள நோயை அறிய மருத்துவர் நோயாளியின் கையைப் பிடித்து நாடியை ஆராய்வர். வாத, பித்த, சிலேத்துமம் என்ற மூன்று நாடிகளில் பித்த நாடி ஏனைய இரு நாடிகளில் சென்று கொண்டிருக்குமாயின் உயிர்க்கு அழிவில்லை என்று கூறி நோயாளியைத் தேற்றுவர். ஏற்ற உணவினை உண்ணுமாறு பணிப்பர். இம்முறையிலேயே சிவஞான தேசிகரும், "இடகலை பிங்கலை நாடிகளில் செல்லும் வலியைத் தடுத்து கழுமுனையாகிய நாடியில் செலுத்தினால் உயிர் அழிவதில்லை என்று கூறி, அரிய வேத மந்திரங்களோடு சிவபெருமானைத் தியானிக்கச் செய்து திருநீற்றினை உடலிற் பூசச் செய்து உருத்திராக்க மணியை உடலிற் தருப்பித்துத் திருவைந் தெழுத்தாகிய மருந்தை உபதேசித்து பிறவியாகிய பிணியைப் போக்கிடும் ஆன்மீக மருத்துவராகத் திகழ்ந்தார்.

சிவஞானியின் திருவடி

சிவஞானியின் திருவடிகளுக்கு இணை ஏதும் இல்லை. துன்பம் வரும் வேளையில் தெப்பமாக வந்து அருள் புரிவது சிவஞானியின் திருவடியே என்பதை,

> **இணையாது மில்லா இடர்ப்பவ வேலைக்குப்**
> **புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானோ (சிவ. பா. தா. 90)**

என்ற பாடல் உணர்த்துகிறது. பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் வணங்குகின்ற சிவனே! சிவஞானியாய் எழுந்தருளி, அனைவரும் விரும்பும் கார்மேகமானது வறுமையில் வாடுபவன் நிலத்தில் நீரைப் பொழிதலைப் போல, உலகில் வாழும் மக்களை ஆட்கொண்டவர்.

உலகில் உள்ள அடியவர்களின் பிறவிப் பிணியைப் போக்கும் சிவஞானியே! சிவன் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

சிவஞானியும் நல்லாற்றூர் சிவபிரகாசமும்

இளம்முனைவர் வ. கமலா
'தாமரை இல்லம்' 203/45, 13-வது குறுக்குத்தெரு,
த.வீ.வ.வாரியம், பகுதி-1, ஆற்காடு 632503,
செல் : 9442233902
E-Mail: v.kamala.27@gmail.com

முன்னுரை

பழங்கால சைவ இலக்கியங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சுக்குக் கொண்டு வரும் திருப்பணியைத் தொடங்கி வைத்தது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் எனலாம். நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் பலவும் மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடாகவே பதிக்கப் பெற்றுள்ளன. கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் சிற்றிலக்கியப் புலவர். தமிழகத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட சமய குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் "நால்வர் நான்மணிமாலை" என்ற கவிதை நூலை எழுதியவர் இவரே.

சிவபிரகாசரின் பிறப்பு

தொண்டை நாட்டின் தலைநகராம் காஞ்சியிலே சைவ வேளாலர் குலத்தில் தீட்சா குருவாய் விளங்கிய குமாரசாமி தேசிகருக்கு இறையாகிய அண்ணாமலையாரின் திருவருளால் சிவபிரகாசர், வேலையர், கருணைப்பிரகாசர் எனும் மூன்று புதல்வர்களும், ஞானாம்பிகை எனும் பெண் மகவும் பிறந்தனர். சிவப்பிரகாசர் இயற்கையிலேயே மதிநுட்பமும், இறையருளும் உடையவராய் திகழ்ந்தார். தந்தையின் வழியே இறை நம்பிக்கை உடையவராய் விளங்கினார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள் எண் 236)

தாம் தோன்றிய குலத்திற்கு ஏற்ப சைவத்தின் மீது பற்றும், தமிழில் புலமை கொண்டவராகவும் இருந்தார். ஒருநாள் அவர் தம்முடைய இளவல்களுடன் திருவண்ணாமலை சென்றார். அங்கு தெற்கு வீதியில் இருந்த தம் குருதேவரைக் கண்டு வணங்கி சிலநாள் தங்கியிருந்தார். அப்போது சிவப்பிரகாசர் அம்மலையை வர்ணித்தும், பெருமானை துதித்தும் 'சோணசைலமாலை' எனும் நூலை எழுதினார்.

பின்னர் பெரம்பலூர் அருகில் உள்ள துரைமங்கலம் எனும் ஊரில் பக்தியில் சிறந்து விளங்கிய இலிங்காரெட்டியார் எனும் செல்வந்தர் அமைத்துத் தந்த திருமடத்தில் சிலகாலம் தங்கி இருந்தார். திருநெல்வேலிக்குச் சென்று தங்கி சிவத்தலங்கட்குச் சென்று வழிபாடு செய்தார். பின்னர் சுவாமிகள் சிதம்பரத்திற்கு சென்றார். அவ்வமயம் சிவப்பிரகாச விகாசம், தருக்கட்பாஷை, சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை ஆகிய நூல்களைச் செய்தருளினார்.

அங்கிருந்து காஞ்சிபுரத்திற்கு புறப்பட்டுச் செல்கையில் வழியில் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளை சந்தித்தார். அவர் மூலம் பொம்மபுரத்தில் இருந்த சிவஞான பாலயதேசிகர் குறித்து அறிந்தார். அவ்வேளையில், "மானுடரைப் பாடேன்" என்றிருந்த சிவப்பிரகாச சுவாமிகள் முருகப் பெருமானுடைய ஆணையின்படி, அக்காலத்தில் சிவாநுபூதிச் செல்வராய் பொம்மபுரத்தில் விளங்கிய ஸ்ரீசிவஞானபாலய தேசிகரைத் தம் ஞான குருவாகக் கொண்டார். அவர்கள் மீது நெஞ்சு விடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி ஆகிய ஐந்து நூல்களை இயற்றினார்.

பாலசித்தர் தோன்றுதல்

திருக்கைலாயத்தில் மேற்கு வாயில் கணத்தலைவராக விளங்கியவர் சங்குகன்னர். இவ்வுலகத்தை உய்விக்கவும், வீட்டின்பத்தை அருளும் எழில் வீரசைவத்தை வளர்க்கவும் வேண்டி, திருமார்பில் இட்டலிங்கம் முதலான சிவவேடப் பொலிவழகுடன் இளம் வயதினராய் பாலசித்தர் எனும் திருநாமத்தோடு பொம்மையபாளையம் கடற்கரையில் எழுந்தருளி, சில நாட்கள் சென்ற பின் பெருமுக்கல் முதலான மலைகளில் தங்கி, தவம் செய்து மயிலமலைக்கு எழுந்தருளி தவம் செய்து முருகப் பெருமான் திருவருளினால் சிவஞான சித்தமாதவர் எனப்பட்டனர். இவரே பாலசித்தர் எனவும் அழைக்கப்பட்டார்.

சிவஞானி பாலய சுவாமிகள்

முருகனின் அருள்பெற்ற பாலசித்தர் தனக்குப் பிறகு திருமடத்தை பரிபாலனம் செய்ய தக்கார் ஒருவரை முருகனிடம் வேண்டிய நிலையில், பச்சைக் கந்தமரலைச் சேர்ந்த குழந்தை பேறு இல்லாத தம்பதியர் வந்து பாலசித்தரை வேண்டி தொண்டும் செய்யும் காலத்தே திருவருளும், குருவருளும் வாய்க்கப் பெற்று முருகனே சிவஞானியாக அம்மவை வயிற்றில் தோன்றினார்.

பாலசித்தரிடம் அக்குழந்தை வளர்ந்து வந்தது. பின்னர் தக்க உபதேசம் செய்து சீடராகக் கொண்டார் பாலசித்தர். இவரே சிவஞான பாலய சுவாமிகள் ஆவார்.

சிவஞாணி குருவாக

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் முதற்புலவரும் அருட்சீடரும் ஆகிய 'கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்' தம் ஞானாசிரியராகிய சிவஞானியை,

கயிலை மலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலை மலை மீதிருக்கும் வள்ளல்

என்று சிவஞானியைப் போற்றுகின்றார்.

உலகியல் வாழ்க்கையில் தன்னலம் இன்றி உலக நலம் விரும்பும் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கையில் குரு மிக இன்றியமையாத இடமாக கருதப்படுகிறார். அவ்வாறே திருவாசகம் அருளிய மாணிக்கவாசகருக்கு சிவபெருமானே குருவடிவாக குருந்த மரநிழலில் காட்சி தந்து உபதேசம் செய்தருளியதை நாம் எல்லோரும் அறிந்த உண்மை. இவ்வாறே சிவப்பிரகாசர் தம்முடைய குருவாக சிவஞானியை கொண்டனர். மேலும் அவரைப் போற்றும் விதமாக பாடல்களும் இயற்றி சிறப்பித் துள்ளார்.

சிவஞாணியின் அருளல் தன்மை

செஞ்சி மன்னனாகிய திரியம்பகன் மகள் இளம் பருவத் திலேயே நரைத்த கூந்தலையுடையவளாயிருந்தாள். சுவாமிகள் திருநீரிட்டு நரையை மாற்றி கருங்கூந்தல் ஆகுமாறு செய்தனர். இதனைப் பிள்ளைத் தமிழில் "இளைக்கு மருங்குல்" என்று தொடங்கும் காப்புப்பருவச் செய்யுளிலும், அம்புலிப் பருவத்தில் மூன்றாம் செய்யுளிலும் சிவப்பிரகாசர் அறிவித்துள்ளார். சுவாமிகள் தம்முடைய இரவலர்க்குப் பொருளை வழங்கினர். அரனடியார்க்கு அறுசுவைப் போனகம் இட்டனர். தம் அன்பர்க்கு மெய்ப்பொருளை உபதேசித்தருளினர். இவற்றை,

பொன்னை நரர்க்குக் கொடுத்து நீர்போமென்று தன்னை
யெனக்கருளுந் தம்பிரான் (நெஞ்சு-9)

மொண்டுபொய்ப் பொருளென்று பொருளையிரவலர்
வரின் முத்திரை செய்யாமல் உதவி (பிள்ளை, சப்பா-2)

என வருவனவற்றாலும் பிள்ளைத்தமிழ் தாலப்பருவம் "ஆற்றற் பெரியோர்" என்று தொடங்கும் செய்யுளாலும் நன்கறியலாம். மேலும் சுவாமிகள் அரனடியார்களைப் பேணிய திறத்தைக் கூறுங்கால் கர்நாடக தேசத்தில் சங்கமபத்தியில் சிறந்து விளங்கிய வசவண்ணரையே சிவப்பிரகாசர் ஒப்பிட்டு கூறுவார்.

முருகப்பெருமான் திருவருள் பெற்றவர்

சிவஞானி பாலய சுவாமிகள் முருகப் பெருமானின் திருவருள் பெற்றவர் என்பதை, பிள்ளைத்தமிழ் முத்தப்பருவம் "களரிமுளைத்த" என்று தொடங்கும் செய்யுளில் "சிறுதண்டைத்தாள் என்றலை மேல் வைத்த பிரான்" என்பதிலிருந்து சிவஞான தேசிகருக்கு முருகப் பெருமான் திருவடி சூட்டி அருளினார் என்பதும்,

ஒரு வெற்றிவேற் சேவகப்பிள்ளை துணையாக விளையாடுவாய் (பிள்ளை, செங்-4)

மயிலை முருகனுடன் அமரும் இறை (பிள்ளை, சிறுதேர்-2)

என வருவனவற்றுள் சிவஞானி உலகில் முருகப் பெருமான் துணை கொண்டே உலகில் அரிய செயல்களை நிகழ்த்தினாரென்பதும், முருகனுக்கு ஒப்ப விளங்கினார் என்பதும் தெரியவரும். முருகப் பெருமானின் அருளினைப் பெற்றவராய் திகழ்ந்தார் சிவஞான தேசிகர். இதனை சிவப்பிரகாசர் தம்முடைய பாடல் வழி தெளிவுபடுத்துகின்றார்.

சிவப்பிரகாசர் போற்றுந்திறன்

சிவப்பிரகாசர் சிவஞானியை "அருந்தமிழ் - நாடொரு கோடி தவஞ்செயவந் ததிர்வெள் ளருவி தூங்குயர் மயிலை வரையினமர் விளக்கு" எனவும் தம்முடைய நூலில் பலவிடத்தும் அவரைப் போற்றுகின்றார். மேலும் தம்மைச் சிவஞானதேசிகர் ஓம்பிய இயல்பை "பாடியுந் தன்சீர்த்தி பரவியுந் தன் பாதமலர், சூடியுமிக் காலந் தொலைக்கவருள் செய்தானே" என்று தம்முடைய தாலாட்டுப் பாடலில் புலப்படுத்துகின்றார். சிவப்பிரகாசர் பரமசிவன் கயிலையில் நால்வர்க்கு யோகநிலையை உணர்த்தினார். சிவஞானி உலகில் அளவற்றோர்க்கு வேத முடிவை உணர்த்தினார். மன்மதன் பரமசிவனுடைய யோக நிலையைக் கலைத்தான். மன்மதன் சிவஞானி முன் ஒரு கணமும் நின்றிலன் என்று சிவஞானியின் பெருமையை தம்முடைய மதித்திறனால் உரைக்கின்றார்.

பவப்பிணி மருத்துவன்

வேத மந்திரங்களோடு சிவபெருமானைத் தியானத்தல் பாலுடன் பழத்தினை உண்ணுதலையொக்குமாதலின் "அருமறைப் பாலொடு தீநிறப் பெருமுக்கண் தீஞ்சுவைக் கணிதன்னை யுட்கொள்ளெனத் தெருட்டி" என்றும் பிறரைப் பிணி நீங்க ஏற்ற மருந்தினை அதாவது "மருந்துப் பையினைச் சோதித்து வெண்பொடி மருந்தெடுத்து" என்றும், "உடலிற் பூசும் பூச்சு ஒன்றே பிணியைப் போக்கும் அருமருந்து" என்றனர். ஔடதமேயன்றி மணி மந்திரங்களும் பிணியைப் போக்குமாதலின், உருத்திராக்கழாகிய மணியை அணிந்து ஐந்தெழுத்து மந்திரத்தை 'பிறழாமல் உரைத்திட்டு' என்றும், நோய் பலவகைப்பட்டதாயினும் அந்நோய்க்கு ஏற்ற மருத்துவர் உலகில் உளராதல் போல் இம்மருத்துவன் பிறவியை நோயைப் போக்கும் மருத்துவரென்பதால் "பவப்பிணி மருத்துவன்" என்று சிவப்பிரகாசர் உரைக்கின்றார்.

கொள்ளும் வன்பவப் பிணியினராகிய குவலயத் தவரெல்லாம்
எள்ளும் வெந்துயர்ப் 'பவப்பிணி மருத்துவன்

(சிவ-கலம்-செய்-9)

தவப்பல இடர்செய் பவப்பிணி மருத்துவன்

(சிவ-கலம்-செய்-46)

எனப் பல இடத்தும் குறிப்பிடுதல் காண்க. இதனையே பொய்யா மொழியார், இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முழயாது என்கின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் **(குறள்-10)**

இதனையே தன்னுடைய இளமை வாழ்வினைத் துறந்திட்ட காரைக்கால் அம்மையார், "பிறவாமை வேண்டும்" என்கின்றார். நம்முடைய பிறவிப் பிணி போக்கிட உருத்திராட்சம் அணிவதும், திருநீறு பூசிக் கொள்வதும், ஐந்தெழுத்தை பிறழாமல் ஓதுதலும் ஆகும். இதனையே சிவஞானி வலியுறுத்திக் கூறுதல் பொருட்டு 'பவப்பிணி மருத்துவன்' என்கின்றார் சிவப்பிரகாசர்.

சிவத்தொண்டின் பெருமை

செந்தமிழ்ப் புலவர்கள் தாம் இயற்றும் செய்யுளில் இலக்கண முடைய செந்தமிழ்ச் சொற்களோடு வழுவமைதியாக ஆன்றோரால்

கொள்ளப்பட்ட சொற்களையும் அமைத்துக் கொள்வர். முற்றிலும் வழுவான சொற்களைக் கொள்ளார். அதுபோல சிவஞானதேசிகர் சிவத்தொண்டில் ஈடுபட்டுள்ள தம் அடியார்களுடன் அடியேனையும் சேர்த்துக் கொண்டு சிவத்தொண்டில் ஈடுபடாத ஏனையோரைத் தம் அடியார் குழாத்துள் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கியுள்ளார். இதனை,

புகவே தகேன்உனக் கண்பருள் யானென் பொல்லா மணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மை
(திருவா-திருச்சதகம்-செய்-10)

என்னும் மணிவாசகர் திருவாக்கின் கருத்தை இப்பாடல் கொண்டிருத்தலை அறியலாம்.

சிவத்தொண்டினை செய்திட்ட அறுபத்து நாயன்மார்களும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதை நாம் அறிவோம். இவ்வாறாக சிவப்பிரகாசர் தம்முடைய குருவாகிய சிவஞான பாலய சுவாமிகளை பாடல்களில் மக்கள் அறிந்துணரும் பொருட்டு அவரது திருவருளையும், செயல்தனையும் எடுத்து இயம்பியுள்ளார்.

முடிவுரை

முருகனின் அருள் பெற்ற சிவஞானி பாலசித்தரால், "நீ பாலை உணவாகக் கொண்டு சீடபரம்பரையோடு சிவஞான பாலய தேசிகன் என வாழ்வாயாக" என்று அருள் பெற்றவர். இத்திருமடம் பாலய சுவாமிகள் திருமடம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. பாலசித்தரின் சீடர் பரம்பரை மயிலம் திருமடத்தில் வீர சைவ நெறி போற்றிச் சிவத்தொண்டை வாழையடி வாழையாக வளர்த்து வருகிறது என்பதை நாம் சிவப்பிரகாசர் எழுதிய நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே (திருமூலர்)

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் போற்றிய சிவஞான பாலய சுவாமிகள்

முனைவர் மு.துர்க்கா
தமிழ்ப் பேராசிரியர்
எண் 61.சிவனார் தெரு எண் 1
குகை சேலம் 636 006. 8838846675

தமிழும் சைவமும் மந்திரமாகக் கொண்டு தழைத்து இனிது ஓங்குக என்னும் உயரிய மந்திரத்தை மூல வாழ்ந்த புலவர் பெருமக்களுள் தனிப்பெரும் புலவர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர்ஆவார். இவர் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சிறந்த தமிழ்ப் புலவர்களில் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்ந்தவர் எனில் மிகையாகாது. இவர் 32 ஆண்டுகள் வாழ்ந்து 34 நூல்களைப் படைத்த பெருமைக்குரியவர். இவர் பேரிலக்கியம் எனும் காப்பியம் மற்றும் சிற்றிலக்கிய வகைகளை மிகுதியாகப் பாடி பல நூல்களைத் தமிழன்னைக்கு அணிகலன்களாகச் சூட்டி மகிழ்ந்தவர். அத்தகைய வரிசையில் மயிலம் பொம்மபுர ஆதினத்தின் தலைசிறந்த முதன்மைச் சீடராகத் திகழ்ந்தவர் எனலாம். இவர் சிவஞான பாலய சுவாமிகள் மீது ஐந்து நூல்களைப்பாடியுள்ளார். அந்நூல்களில் காணலாகும் சிவஞானியின் சிறப்புகளை எடுத்தியம்புவதே நோக்கமாகும்.

தமிழுலகில் பாடல்களில் கற்பனைகளை மிகுதியாகப் பாடியதால் கற்பனைக்களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர் என்றும் துறைமங்கலத்தில் சிறிது காலம் வாழ்ந்ததால் துறைமங்கலம்ஸ்ரீ சிவப்பிரகாசர் என்றும், தம் வாழ்வின் நிறைவுக்காலத்தில் நல்லாற்றூரில் தங்கி இருந்து பாடியதால் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் என்றும் இவருக்கென தனி முத்திரையினைப் பெற்றுள்ளார். இவர் மயில மலையில் எழுந்தருளி சிவனாக வந்த சிவஞானி எனவும் முருகனே சிவஞானி எனவும் தவசீலராகவும் வாழ்ந்து மானிட சமுதாயத்தை உய்விக்க வந்தவரே சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றி, கலம்பகம், பிள்ளைத்தமிழ்,தூது, தாலாட்டு, அலங்காரம் ஆகிய ஐந்து நூல்களைப் பாடினார். அவர் பாடியுள்ள நூல்களில் சிவஞானியின் சிறப்புகள், பெருமைகள், அருள்நலங்கள் முதலானவற்றுள் சிலவற்றை மட்டும் கூறவிழைகின்றேன்.

கயிலைக்கு நிகரான மயிலமலைக்குத் தலைவர் சிவஞான பாலய சுவாமிகள். இவர் மயிலமலையின்கண் விளங்கும் இரத்தின தீபமே ! ஐம்புலன்களையும் வென்ற ஞானிகளுள் பெரியோனே! என்று உலகினர் சிவஞானியை வணங்கிப் புகழ்கின்றனர். மேருமலையை வலமாகச் சுற்றுகின்ற சூரியனால் விளக்கமுறும் உலகில் வாழ்வோர் சிவஞானியை அடைந்து கேட்பவற்றை இல்லை என்று கூறாமல் கொடுக்கின்ற வள்ளல் தன்மை உடையவராக சிவஞானி விளங்கியுள்ளார்.

ஸ்ரீசிவஞாணபாலய தேசிகர் கலம்பகத்தில் சிவஞானி

பிரம்மன் விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவரும் வணங்குகின்ற சிவபெருமான் சிவஞான தேசிகனாய் அழகியமயில மலையில் எழுந்தருளி, அனைவரும் விரும்பும் கார்மேகமானது வறுமையில் வாடுபவன் நிலத்தில் நீரைப் பொழிதலைப் போல என்னைக் காட்டிலும் உயர்ந்த தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் மற்றும் உள்ளோரும் அவன் அருளை அடைவதற்கு அரியவர்களாய் இருக்க உலகில் வாழும் மக்களுக்கு உபதேசித்து ஆட்கொண்டார்.

வேலுடையானொடு மயிலை மலைமேவு சிவஞானி

(சி.பா.சு. கலம்ப.பா11)

நினைத்தாலே முக்தி தரக்கூடிய தலம் திருவண்ணாமலை தலம். சிவஞானியின் திருக்கோலத்தைத் தரிசிக்கும் எண்ணத்தை மனதில்நினைத்தாலே பெறலாம். அதுபோல முக்தி

சிவஞானி கோலங் காணுங் கொள்கை கருத்திற் குறியீரே

மெய்ஞ்ஞானிகளுடைய பெயர் எதுவாய் இருப்பினும் அப்பெயரினை உச்சரித்தால்அளவற்ற நன்மைகளை அளிக்கும் என அறநூல்கள் உரைக்கின்றன. எனவே சிவஞானி என்னும் பெயரை உச்சரித்தாலே போதும். அதுவே மந்திரம் போல உச்சரிப்பவரைக் காப்பாற்றி துன்பங்களைப் போக்கவல்லதுஎன்று பாடுகின்றார் சிவப்பிரகாசர் (சி.பா.சு.கலம்.12)

சிவஞானி நாமம் சிவஞானி என்னா (சி.பா.சு.கலம்.14)

உலகில் உள்ள அடியவர்களின் பிறவிப்பிணியைப் போக்கும் சிவஞானி ஐயமின்றி சிவனே ஆவார் என்று தமது ஞான குருவாகிய சிவஞானியைப் போற்றுகின்றார். பவநோய் அகற்றும் சிவஞான தேசிகன் (சி.பா.சு.கலம்.15)

ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூதில் சிவஞானி

காதில் சங்குக் யானைத்தோலைக் சிவபெருமான் திருமுடியில் பிறையையும் கங்கையையும் தரித்தவர். குழைகளையும் கழுத்தில் பாம்பணியையும் கொன்றை மாலையையும் அணிந்தவர். கீழாடையாகவும் அணிந்தவர்.

உள்ளம் கவர்கள்வன் மண்மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை
மலிந்தவரை மார்பில் பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மா னிவனன்றே
(சம்.தேவா.4)

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தால் சிவபெருமான் கழுத்தில் பாம்பணியையும் கொன்றை மாலையையும் அணிந்தவர் என்பதை அறியலாம்.

சிவன் அணிந்திருக்கும் அணிகலன்களாகிய பாம்பைப் பார்த்தால் அடியார்கள் அருகே வரஅ ஞ்சுவர். எனவே, பாம்பினை மறைத்து பாம்பு உமிழும் மாணிக்கமாக ஒளி உடம்பினைப் பெற்றுச் சிவஞானயாக அவதரித்திருக்கிறார் என்பததை,

தேசு உணர்த்த வேண்டித் திருமுடிமேல் மேவிவாழ்
மாசுணத்தைத் தான் ஒளித்த மாணிக்கம்
(சி.பா.சு. நெஞ்சு.தூது.3)

என்று சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் பிள்ளைத்தமிழில் சிவஞானி

சிவனே சிவஞானியாக இப்பூவுலகில் அவதரித்துள்ளார். அவருடைய திருவடியைப் பற்றினால் வள்ளுவர் கூறுவது போல பிறவியாகிய பெரிய கடலை எளிதில் கடக்க முடியும்

மனிதர்களுக்கு உடலின்கண் வந்துள்ள நோயை அறிய மருத்துவர் நோயாளியின் கையைப் பிடித்து நாடியை ஆராய்வர். வாத பித்த சிலேத்துமம் என்ற மூன்று நாடிகளில் பித்த நாடி ஏடைய இரு நாடிகளில் சென்று கொண்டிருக்குமாயின் உயிர்க்கு அழிவில்லைஎன்று கூறி நோயாளியைத் தேற்றுவர். ஏற்ற உணவினை உண்ணுமாறு பணிப்பர். மருந்து அருந்துதல், மேற்பூச்சு பூசுதல், முதலிய வகைகளில் ஏற்றவாறு மருந்தினைப் பயன்படுத்துவர். உருத்திராக்கம் அணிவித்தும் மந்திரித்தும் பொருத்தமான வகைகளில் நோயைப் போக்க முயல்வர். இம்முறையிலேயே சிவஞானதேசிகரும், இடகலை பிங்கலை நாடிகளில் செல்லும் வலியைத் தடுத்து சுழுமுனையாகிய நாடியில் செலுத்தினால் உயிர்

அழிவதில்லை என்று கூறி அரிய வேத மந்திரங்களோடு சிவபெருமானைத் தியானிக்கச் செய்து திருநீற்றினை உடலில் பூசி உருத்திராக்க மணியை உடலில் அணிவித்து திருஐந்தெழுத்தாகிய மருந்தை உபதேசித்து பிறவியாகிய பிணியைப் போக்கிடும் ஆன்மீக மருத்துவராக விளங்குவதனைச் சிவப்பிரகாசர். பின்வரும் பாடலில் அழகுறப் பாடுகின்றார்.

கருத்தில் காண்குறு நாடிகள் முன்றையும் கண்டுனள் நடுநாடி
கலந்து இயங்குறும் உயிர்க்கு அழிவு இல்லை எனக் காட்டி நோ
யினர் நெஞ்சம்..... .மந்திரம் பிறழாமல்
உரைத்திட்டு ஒம்புறும் பவப்பிணி மருத்துவர் உருட்டுக சிறுதேரே
உலக அவாம் சிவஞான மாமுனிவரென் ருட்டுகசிறுதேரே
(சி.பா.கூ.பிள்ளைத்தமிழ்.97)

ஸ்ரீசிவஞாணபாலய தேசிகர் தாலாட்டில் சிவஞானி

சிவஞான பாலய தேசிகரைக் குழந்தையாக பாவித்துத் தாலாட்டு நூலைப் பாடுகின்றார் சிவப்பிரகாசர். சிவஞானியின் பெருமைகளைக் கூறும்போது சிவஞானியின் திருவடிகளுக்கு இணை ஏதும் இல்லை என்று கூறிச் சிறப்பிக்கிறார். உலகத்தின் பெரிய நிதியாக சிவஞானியைப் போற்றி அவரது திருவடியே நம் தலைமேல் ரத்தினமாக ஒளிவீசத் தக்க சிறப்புமிக்கது என்பர். சிவஞானியின் திருவடிப் புகழ்ச்சியைக் கூறும் சிவப்பிரகாசர் சிவஞானியின் திருவடிகளே நம்மை அறியாமை என்னும் நிலையிலிருந்து மாற்றி ஞானமாகிய பெருஞ்செல்வத்தைத் தந்து துணை நிற்கும். இது தெரியாமல் பேதைமையால் இன்னும் திருவடியைத் துதியாமல் இருப்பர் துயர்கண்டு நெஞ்சுருகி அவர்கள் வாழ்வு சிறக்கும் வண்ணம் வழிகாட்டி அழைக்கின்றார் சிவப்பிரகாசர்.

இணையாது மில்லா இடர்ப்பவ வேலைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானோ (சி.பா.கூ.தா,90)

மேலும்

அவஞானம் போக்கிஅருள் ஞானம் ஆக்குஞ் சிவஞான தேவன்
(தாலாட்டு 1)

திருவருளால் என்னைத் தெரிவிக்க இங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனோ (தாலாட்டு 2)

ஸ்ரீசிவஞாணபாலய தேசிகர் அலங்காரம்

இந்நூல் சிவப்பிரகாசர் சிவஞானியின்மீது பாடியுள்ளார். ஆனால் கிடைத்திலது.

இன்றுவரை நமக்கு இறுதியாக கற்பனைக்களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாசர் தமது ஞானாசிரியராக விளங்கிய சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடிய ஐந்து நூல்களின் வழியாக நாம் பெறும் செய்திகளாவன:

- குருநாதராகிய சிவஞானியிடம் பெற்ற ஞான அனுபவங்களைத் தம் பாடல்கள் மூலம் நமக்கு வழங்கி யிருக்கிறார்.
- ஞானாசிரியராக விளங்கும் சிவஞானி கயிலை மலையி லிருந்தது போல் மயிலமலைமீத காட்சி தரும் வள்ளல் என்றும் பிறவிப்பிணி நீக்கும் மருத்துவர் என்றும் அவர் திருவடி பிறவிக்கடலைக் கடக்கும் தெப்பம் என்றும் ஐம்புலன்களை வென்ற மெய்ஞ்ஞானி என்றும் சிறப்பித்துக் கூறுகிறார்.
- அவர் கூறிய செய்திகளை நாம் படிப்பதோடு மட்டு மல்லாமல் நம் வாழ்வில் கடைபிடித்து வாழ்வில் உய்வோமாக என்று கூறி கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

பண்பாட்டு நகர்த்தலில் நவீனத்தை நோக்கி
(20 ஆம் பட்டம் குருமகா சன்னிதானம்)

திருமதி ப. செல்லியம்மாள்.
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்
கலை அறிவியல் கல்லூரி, மயிலம். 8668078136
selvimurugan8136@gmail.com

உலக மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் நிறுவனங்களாக விளங்குபவை சமயங்கள். 'எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே' என்ற கொள்கைக்கு உரம் சேர்க்கும் வகையில் அன்பு, கருணை, இரக்கம், அறப்பண்புகளின் உறைவிடமாய் தோற்றத்தில் இறை உருவத்தை தாங்கியவராய் தனித்துவத்தின் அடையாளமாய் புரட்சியின் விடிவெள்ளியாய் நமக்கெல்லாம் நல்லதொரு வழிகாட்டியாய் எல்லோரையும் ஊக்குவிக்கும் உந்துசக்தியாய் நம்முடன் ஒருவராய் பயணித்துக் கொண்டிருக்கும் இருபதாம் பட்டம் குருமகா சன்னிதானம் அவர்கள் தற்போது ஆற்றிவரும் பணிகளைப் பண்பாட்டு நகர்த்தலின் நவீனத்தை நோக்கி என்ற பொருண்மையில் இவ்வாய்வு ஆராய்வு அமைகிறது.

திருமடங்கள் அன்றும் இன்றும்

மயிலம் பொம்மபுர ஆதீனமானது தொன்மையானது, மிகவும் பண்பட்டது. இம்மடமானது பாலசித்தரின் முதிர்ந்த பக்தியின் தொடக்கமாக உள்ளது. அவர் விதைத்த சிறு விதையே 2-ஆம் பட்டம், 3-ஆம் பட்டம் குருமகா சன்னிதானம் எனத் தொடர்ந்து இருபதாம் பட்டம் குருமகா சன்னிதானங்கள் வரை நீர் விட்டு, வேலி அமைத்து பல படிநிலைகளில் வளர்ந்து இன்று பலருக்கும் பயனைத் தரும் விருட்சமாக மாறி இருப்பது போற்றுதலுக்குரியது.

குறிக்கோள்

குருமகா சன்னிதானங்கள் சமயத்தை வளர்ப்பதை மட்டுமே உயரிய குறிக்கோளாகக் கொள்ளாமல் சமூக முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு கல்வி நிறுவனங்கள் அமைத்தல், இலக்கியங்களை வளர்த்தெடுத்தல், ஆலயப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுதல் என்ற பரந்துபட்ட சிந்தனையின் வெளிப்பாட்டின் பொது நோக்கை காண முடிகிறது.

18-ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு திண்ணைப் பள்ளி ஆசிரியராக இருந்து பலரின் அறிவுக் கண்களுக்கு ஒளியூட்டி வந்தார். இவரது தணியாக விருப்பத்தினால் அருளாசியார் விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் 1938-ஆம் ஆண்டில் முருகன் செந்தமிழ் கழகத்தின் வழி ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரித் தோற்றம் பெற்றது. இக்கல்லூரியே மடங்கள் வைத்து வளர்த்தெடுத்த முதல் தமிழ்க் கல்லூரி என்ற செம்மாந்த சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இச்செய்தியைப் போட்டித் தேர்வுகளில் வினாக்களில் ஒன்றாக இன்றும் படித்து வருகிறோம். அதைத்தொடர்ந்து ஆதீனத்துப் புலவர் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் பெயரில் மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு வருவது கூடுதல் சிறப்பு. தலைமை சான்ற புலவர்களான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் போன்ற பல புலவர் பெருமக்களே உருவாக்கிய மடமாகவும் இன்றும் பலரை உருவாக்கும் மடமாகவும் விளங்கி வருகின்றது.

19-ஆம் பட்டம் குருமகா சந்நிதானத்தின் குருவருளாலும் இறையருளாலும் கோவிலின் திருப்பணி வளர்ச்சியும் மேன்மை யுற்று தமிழ்க்கல்லூரி என்பது கலை அறிவியல் கல்லூரியாக விரிவடைந்தது. உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றம் பெற்றது. மயிலம் திருமடத்தைச் சார்ந்த விநாயகர், பாலசித்தர், வள்ளி தெய்வானை உடனுறை சிவசுப்பிரமணிய சுவாமிகள் திருசன்னதிகள் அமைக்கப்பட்டு பழமை மாற சந்நிதியாக எல்லோர் மனங்களிலும் பதிந்திருந்தது. இதன் வளர்ச்சியைத் தொடர்ந்து பொம்மையார்பாளையத்திலும் சித்தர் சிவஞானி கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு இன்றுவரை சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. அத்தோடு நில்லாமல் சிவப்பிரகாச சுவாமிகள் படைப்புகள் அனைத்தையும் பதிப்பித்து வெளியிடப்படுகின்றன..

அன்னச் சத்திரங்கள் ஆயிரம் வைத்தல்

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல். பாரதி

பெண்கள் மிகுதியும் கல்வி பெறக்கூடிய கல்லூரியாக சிறப்புடன் திகழ்ந்து வருகிறது.

செயல்வீரர்

20-ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பொறுப்பை ஏற்பதற்கு முன் 2010-ஆம் ஆண்டு நான் கல்லூரியில் முதுகலைப் படித்துக் கொண்டிருந்த போது கல்லூரிச் செயலராக வெண்ணிற வேட்டி சட்டையில் மிக கம்பீரமாக பலமுறை மிடுக்கான நடை, ஆங்கிலம் பேசுவதில் சிறந்த புலமை, எதையும் பிறருக்குக் கொண்டு சேர்ப்பதில் வலிமை, நடைமுறைச் செய்திகளைத் தருவதில் புதுமை, புன்சிரிப்போடு வரவேற்கும் திறமை, அவர் கருத்தில் என்றுமே இருக்காது வறுமை, உரையைக் கேட்பது எங்களின் செவிக்குப் பெருமை என்று சொல்லும் அளவிற்கு செயல் வீரராகத் திகழ்ந்தவர்கள்.

20-ஆம் பட்டம் குருமகா சன்னிதானம்

19-ஆம் பட்டம் சன்னிதானம் அவர்கள் செய்த பணிகளில் இருந்து சிறிதும் விலகாமல் இன்றைய நவீன உலகத்திற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப உத்திகளின் ஊற்றாய் செழுமையான அறிவு நிரம்பப் பெற்று விளங்கிவருபவர் சுவாமிகள்.2011 இல் 20-ஆம் பட்டம் குருமகா சந்நிதானமாக பொறுப்பேற்றப் பறிகு மனதால் பக்குவப்பட்ட உயர்நிலை, கண்களில் தீட்சண்யமான அருட்பார்வை, திருநீறு அணிந்த அருள் பார்வை,இறை அனுபவத்தில் திளைக்கும் செழுமை இவற்றை ஒருங்கே காண்டோம். புத்தகத்தில் படித்த மகான்களைக் காட்டிலும் நம்மோடு வாழும் மகானாக விளங்கும் ஒருவரைப் பற்றி எழுதுவதும் படிப்பதும் நாம் செய்த புண்ணியமே.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே (நன்னூல்)

என்ற வரிகளுக்கு விடயமாய் இன்றைய இளைய சமூகமே நாளைய எதிர்காலம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர். மரபுச் செல்வங்களை இன்றைய நவீன முறையில் கடத்துவதில் நயம் மிக்கவர். தான் மேற்கொள்ளுகின்ற ஆலயப்பணி, சமுதாயப்பணி, திருக்குடமுழுக்கு,கல்விப்பணி, நூலாக்கப் பணி, பதிப்புப் பணி, இதழ்ப் பணி என அனைத்தையும் இன்றளவும் தொய்வில்லாமல்,

மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்ர்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்
செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார் (குமரகுருபரர்)

என்ற குமரகுருபரரின் பாடலுக்கு விளக்கமாய்த் திகழ்பவர்.

கல்விப் பணி

மயிலம் தமிழ்க் கல்லூரி என்றும் பழமை மாறா புதுப் பொலிவுடன் புதுப்புது துறைகளான அறிவியல் துறை, வணிகத்துறை, கணிதத்துறை போன்ற பல்துறைகள் இளங்கலை தொடங்கி முனைவர் பட்ட ஆய்வு வரை மேற்படிப்பு பெரும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இன்றும் மயிலத்தைச் சுற்றியுள்ள மாணவர்களை இக்கல்லூரியில் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் பெரும் முனைப்பு காட்டுவது கவனிக்கத்தக்கது. அதிலும் தற்போது பெண்பிள்ளைகள் மிகுதியும் இக்கல்லூரியில் படிப்பது குறிப்பிடத் தக்கது. இக்கல்லூரியில் படித்தவர்கள் பெரும்பான்மையும் போட்டித் தேர்வுகளிலும் முதுகலை ஆசிரியர் தேர்வுகளிலும் தேர்வாகி வருவது கல்லூரிக்கே உரிய தனிச்சிறப்பு. விளையாட்டுப் போட்டிகளிலும் பேச்சுப் போட்டிகளிலும் மாணவர்கள் தனக்கென தனி முத்திரையைப் பதித்து வருகின்றனர். மாணவர்கள் தங்கள் துறை தொடர்பான புதுப்புது செயலிகளை உருவாக்குவதில் திறன் பெற்று வருவதும் நோக்கத்தக்கது. வார மாதக் கூட்டங்கள் வாயிலாக துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் மாணவர்களால் வாசிக்கப்பட்டு வருவது மேலும் சிறப்பானது இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இன்றைய தேவைக்குத் தகுந்த புதுப்புது நூல்கள் நூலகத்தில் இடம்பெற்று இருப்பது தனிச்சிறப்பு.

நீர் செல நிமிர்ந்த மாஅல் போல. **(முல்லைப்பாட்டு)**

என்ற அடிகள் இருபதாம் பட்டம் சுவாமிகளின் காலத்தில் கல்லூரி வாமன வளர்ச்சி அடைந்த நிலையைக் காட்டுகின்றது.

சமூகப் பணி

சாதி, சமய, இன வேறுபாடுகள் காணாமல் விழுப்புரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள அனைத்து விழாக்களிலும் கலந்து கொண்டு சமய நல்லிணக்கணம் காணும் நோக்கில் தன்னுடைய அருளுரைகளால் நல்வழிகாட்டுதலை வழங்கி வருபவர் சுவாமிகள். இதுவரை ஆயிரம் திருக்கோயில்களுக்கு மேல் திருக்குடமுழுக்கு விழாக்களை தலைமையேற்று நடத்தியுள்ள சிறப்புக்குரியவர். அனைவரிடமும் அன்பையே பிரதானமாகக் கொண்டு விளங்குபவர். இதற்கு அவர் கற்ற கல்வியே சாட்சி ஆயிரம் அரங்கம் கண்ட அருளாளர்.

நீதி உயர்ந்த மதி கல்வி
அன்பு நிறைய உடையவர் மேலோர்

ஆலயப் பணி

எப்படியும் வாழலாம் என்ற இன்றைய சமூகத்தை மாற்ற உயரிய ஆயுதமாக இருப்பது பக்தி நெறியே என்பதை உணர்ந்து அதை வளர்த்தெடுக்க ஆலயப் பணிகளைத் திறம்படச் செய்தும் ஊக்குவித்தும் வருபவர். பிற மொழியில் புலமை பெற்றிருந்தாலும் வீரசைவத்தை வளர்த்தெடுக்க செந்தமிழே சிறந்த துணை என திண்ணமாக நம்பியவர் 2012, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே மயிலம் முருகன் சன்னிதானத்தையும் புதுப்பித்து திருக்குடமுழுக்கு நீராட்டுப் பெருவிழா செய்தவர்.

இதைத் தொடர்ந்து பொம்மையார்பாளையத்திலும் ஆலயத்தைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்துள்ளார். மடத்திற்கு உரிய இடங்களில் ஸ்ரீ பூமி நீலா சமேத லக்ஷ்மி நரசிம்மர் ஆலயம், ஸ்ரீ கருடன், ஸ்ரீ அரங்கநாதன், ஸ்ரீ ஆஞ்சநேயர் பெயரில் வைணவ சமய ஆலயங்களையும் நிறுவி சமரச நெறியில் புரட்சி செய்துள்ளார். வீரத் துறவியான விவேகானந்தர் புரட்சித் துறவியான வள்ளலார் சுவாமிகளையும் ஒத்துள்ளதை அறிய முடிகிறது. அனைவரிடமும் இன்முகத்தோடு அறிவுரை வழங்குவதில் வல்லவர்.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை;
யாவருக்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போழுது ஒரு கைப்பிடி
யாவருக்குமாம் பிறருக்கு இன்னுரை தானே. (திருமந்திரம் 252)

நூலாக்கப் பணிகள்

மாணவர்கள் மற்றும் பாமர மக்களும் அறியும் வகையில் தமிழ்ப் பயிரை வளர்க்க தமிழ்ப் புலவர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களை மாதம் தோறும் அழைத்து சிவப்பிரகாச சுவாமிகள் நூல்களிலிருந்து ஆராய்ச்சிக் கருத்துக்களையும், திருக்குறள் தமிழ் புலமையையும் பரப்பி வருகிறார். சுவாமிகள் மாதக் கூட்டங்கள் நடத்துவதன் நோக்கம் தமிழ்ப் பயிரை வளர்ப்பதோடு அல்லாமல் மொழியையும், மனித இனத்தையும் அழிவிலிருந்து காப்பது ஆகும். எவ்வாறெனில் ஒரு இனத்தை அழிப்பதற்கு அவர்களுடன் போரிடத் தேவையில்லை அவர்களின் நூல்களை எரித்து விட்டால் போதுமானது. அவர்கள் அறிவு மங்கிவிடும் என 'ஃபாரன்ஹீட் 451' என்ற நூல் குறிப்பிடுகிறது. அதாவது மனிதனின் அறிவைச் சாகடித்து விட்டால் மனிதன் அழிந்து விடுவான். இதை உணர்ந்து,

இன்சொல் விளைநிலனாக ஈதலே வித்தாக
வன்சொல் களைக்கட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலை செய். **(முனைப்பாடியார்)**

என்ற பாடலுக்குப் பொருந்த தமிழ்ப் பயிர் வளர்ப்பவர் நம் சுவாமிகள். தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக 'பாலசித்தர்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடத்தியும் இதழ்களை வெளியிட்டும் வருகிறார்கள்.

வெளிநாடு மற்றும் உள்நாடு பயணச்சிறப்பு

இருபதாம் பட்டம் குருமகா சன்னிதானம் அவர்களின் முப்பெரும் பணிகளாக சமுதாயப்பணி, சமயப்பணி, இலக்கியப் பணி இவற்றைக் குறிப்பிடலாம். கேரளா, கர்நாடகா, ஆந்திரா, உஜ்ஜைனி, மலேசியா, குஜராத், ராஜ்கோட், இங்கிலாந்தில் லண்டன் பகுதி, ஆஸ்திரேலியா, ராஜஸ்தான், இலங்கை, சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம், தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை இவ்வாறு அவரின் வெளிநாடு மற்றும் உள்நாட்டுப் பயணங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. மற்றைய குருமகா சந்நிதானங்களுடன் நல்ல நட்புறவைப் பெருக்குவது .

பொழுதுபோக்கிற்காக பல்வேறு நாடுகளுக்குச் செல்வோர் மத்தியில் புதுமையைப் புகுத்துபவராக சுவாமிகளின் பயணத்தை நோக்கும்போது பாரதியாரின் பாடல் நினைவுக்கு வருகிறது.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்ற அடிகளுக்குப் பொருந்தி இருப்பவர் நம் சுவாமிகள்.

பட்டங்களும் சிறப்புகளும்

வாரணாசியில் மாண்பமை பாரதப் பிரதமர் தலைமையேற்று நடத்திய காசி தமிழ்ச் சங்கத்தில் கலந்து கொண்டமை சிறப்பிற் குரியது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்படும் பல்வேறு விழாக்களிலும் கலந்து கொண்டு தனக்கே உரிய ஆளுமைத் திறத்தால் நடப்பு நிகழ்வுகளைப் பதிவு செய்து உரையாற்றி வருபவர். 2018-இல் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம் "சைவ சித்தாந்த பெருமன்றக் காவலர்" என்ற உயரிய விருதை அளித்து சிறப்பித்துள்ளது.

இயற்றிய நூல்

தமிழர் திருமண முறையும் வழிபாட்டுப் பாடல்களும் என்ற பெயரில் நூல் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஊசி நுழைந்த மணித்துளியில் கடல் நீர் ஓடாது,

ஆயினும் அத்துளை வழியே செல்லும் சிறிய நீர் போல் மக்கள் செய்யும் அறம் சிறிது சிறிதாகப் புகும் என்ற அறவணடிகளின் கருத்தை ஒத்த ஞான நெறியினைப் பரப்பும் சிவஞானியாக நம் 20-ஆம் பட்டம் சுவாமிகள் இருப்பது மகிழ்ச்சி.

நிறைவுரை

ஆன்மீக உலகம் போற்றும் திருத்தலமாக மயிலமும் பண்பாடும் பாரம்பரியமும் மாறாத தமிழ்க் கல்லூரியாக ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரியும் விளங்குவதற்கு முக்கியக் காரணமாக இருப்பவர்கள் நம் 20-ஆம் பட்டம் குருமகா சன்னிதானங்கள் என்று சொன்னால் மிகையாகாது.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (குறள் 68)

என்ற குறளுக்கு ஏற்ப தன்னைச் சார்ந்தவர்களையும் அறிவு படைத்தவர்களாக மாற்றும் புரட்சியைச் செய்து வருபவர் நம் சுவாமிகள்.

துணை நின்ற நூல்கள்

1. முனைவர் ச.திருநாவுக்கரசு, சிவஞானியின் மகிமை, மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு, ஆண்டு 2024.
2. சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, குரு பூசை மலர், மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு, ஆண்டு 1966.
3. மயிலம் பொம்மபுர ஆதீனம் திருமடம் வரலாறு, ஆண்டு 2018.
4. செந்தமிழ் வளர்க்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம் (புதுச்சேரி கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு), ஆண்டு 2017.

சிவஞானியும் நல்லாற்றூர் சிவப்பிரகாசரும்

முனைவர் ப. லாவண்யா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய இருதய கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பேரணி, திண்டிவனம்.அலைபேசி எண்: 7010877926
sachandrasekaran.77@gmail.com

முன்னுரை

தொண்டை நாடு என்ற சிறப்பிற்குரிய காஞ்சிபுரத்தில் பிறந்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவரோடு உடன்பிறந்தவர்கள் மூவர். இவர்கள் மூவரும் இல்லற வாழ்வைத் தொடர, சிவப்பிரகாசர் மட்டும் துறவறத்தை மேற்கொண்டார். மானுடத்தைப் பாடேன் சிவனை மட்டுமே பாடுவேன் என்ற குறிக்கோள் கொண்ட சிவப்பிரகாசரை, முருகப்பெருமான் கனவில் ஆட்கொண்டு சிவஞானியின் மீதுப் பாமாலை பாடச் செய்தார். பின் சிவஞானியைத் தனது ஞான குருவாக ஏற்று அவர் மீது ஐந்து நூல்களைப் பாடியருளினார். பல்வேறு சிவத்தலங்களுக்குச் சென்று பல நூல்களைப் பாடிய சிவப்பிரகாசர் தனது ஞான குருவின் இட்டலிங்க ஐக்கியத்திற்குப் பிறகு தன் இறுதிக் கால வாழ்வை நல்லாற்றூரில் வாழ்ந்து பின் இவரும் இட்டலிங்க ஐக்கியமானார். இவர் நல்லாற்றூரில் ஜீவசமாதி அடைந்ததால் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் என அழைக்கப்படுகிறார். சிவப்பிரகாசர் தன் குரு சிவஞானி மீது கொண்ட பக்தி நெறியால் அவர் மேல் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். இவர் மொத்தம் 34 நூல்களைப் பாடியுள்ளார். மிகுதியான சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். இக்காரணத்தினாலே இவரைச் "சிற்றிலக்கிய வேந்தர் "பிரபந்த வேந்தர்" என்று அழைப்பார்கள். சிவஞானி மீது இயற்றிய நூல்களைப் பற்றி ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்க மாகும்.

ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் வரலாறு

கயிலாயத்தில் உள்ள சங்குகன்னர் பாலசித்தராக 10 வயது பாலகனாகப் புதுச்சேரிக்கு அருகே பொம்மபுரக் கடற்கரைப் பகுதியில் பலரும் தன்னைக் காணுமாறு சிவபெருமானின் கட்டளைப்படி தன்னைப் புலப்படுத்திக் கொண்டார். இவர் பல சித்து வேலைகளைப் பால வயதிலே மேற்கொண்டதால்

அனைவராலும் "பாலசித்தர்" என அன்போடு அழைக்கப்பட்டார். பாலசித்தர் "வீரசைவ நெறியைப்" பரப்பி வந்த காலத்தில், "அம்மவை" என்பாள் தனக்கு மகப்பேறு இல்லை என்று வருந்தி யிருந்தார். அப்போது அவர் தம் கணவரோடு பாலசித்தருக்குப் பல தொண்டு புரியலாயினர். இவர் பாலசித்தருக்குச் சதுரக்கள்ளிப் பாலைக் கறந்து வந்து கொடுக்கும் தொண்டினை மேற்கொண்டனர். பாலசித்தர் உண்டு எஞ்சிய, கள்ளிப்பால் பிரசாத சேடத்தால் அம்மவை குருவருள் வழி ஓர் அழகிய ஆண்மகவினை ஈன்றெடுத்தார்.

அம்மகவே ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். பாலசித்தர் தன் அறிவுரைப்படி தமது திருவருட்பார்வையிலே அக்குழந்தையை வளர்த்து, தனது சீடராக்கினார். பின்னர் ஞான உபதேசம் தந்து, நீ பாலை உணவாகக் கொண்டு சீட பரம்பரையோடு, சிவஞான பாலய தேசிகன் என வாழ்வாயாக, என்று அருள் புரிந்தார். மேலும், இத்திருமடம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் என வழங்குவதாகுக என்றும் அருள்புரிந்தார். ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பல இடங்களுக்குச் சென்று பலருக்கும் ஞான உபதேசம் தந்தும், பல திருவிளையாடல்களையும் மேற்கொண்டார். இவர் வைகாசி விசாகப் பௌர்ணமியில் பொம்மையபாளையத் திருமடத்தில் உள்ள ஒடுக்கத்தில் இருந்து தம் உடலைத் திருநீறாக்கி இலிங்க ஐக்கியம் ஆனார். குருமரபில் முதலில் தோன்றியவர் சங்குகன்ன பாலசித்தராவார். இவரின் வழிவந்தவர் ஆதிசிவஞானி ஸ்ரீ ஆவார்கள்.

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் புலமை

இலக்கணம் கற்க வேண்டும் என்ற வேட்கையால் சிவப்பிரகாசர், திருநெல்வேலிக்கு அருகே உள்ள சிந்துபூந்துறையில் இருந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் அவர்களைக் கண்டு தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்கு அவர், உமது இலக்கியப் பயிற்சியை அறிந்த பிறகே இலக்கணம் கற்பிக்க முடியும் எனக் கூறி "கு "என்னும் எழுத்தையே முதலும் முடிவுமாக அமைத்து ஊருடையான் என்னும் சொல் இடையே வர, ஒரு வெண்பா பாடுக எனச் சிவப்பிரகாசரிடம் கூறினார். உடனே சுவாமிகள் பாடத்தொடங்கினார்,

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னம்அணி வாற்கு - வடக்குஓடு

தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊர்உடைஆன் என்னும் உலகு[1]

என்ற பாடலைக் கேட்ட தம்பிரான் அவர்கள் பாடலின் யாப்பமைதி, சொல்லாட்சித்திறன், அணிநலம் ஆகியவற்றைக் கண்டு வியப்படைந்து சிவப்பிரகாசரைப் பாராட்டினார். *(கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு, ப.18)*

ஸ்ரீசிவஞானி மீது சிவப்பிரகாசர் பாடிய நூல்கள்

சிவப்பிரகாசர், ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மீது ஐந்து நூல்களைப் பாடினார். அவை, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் கலம்பகம், ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி, ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ். இந்நூல்களை ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் முன் அரங்கேற்றம் செய்தபோது அவரின் ஞான உபதேசம் சிவப்பிரகாசருக்குக் கிடைக்கப்பெற்றது. பின் சுவாமிகள் மகிழ்வுற்று "சிவனே சிவஞானி" என்னும் குரு வழிபாட்டு நெறியைக் கடைபிடிக்கத் தொடங்கினார். அன்றிலிருந்து தன் ஞானாசிரியராகச் சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றிப் பாடினார்.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம்

சிவப்பிரகாசர் இயற்றிய ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம் 93 பாடல்களைக் கொண்டது. ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகத்தில் சிவஞானியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சிவப்பிரகாசர் சிறப்புறப் பாடியுள்ளார். இந்நூலில் திருநீற்றின் மகிமை, பிரணவ உபதேசம் போன்ற பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சிவப்பிரகாசர் தனது குரு சிவஞானியின் அருட்திறத்தை,

குன்றுஎடுத்த புகழ்இருப்பச் சிறுசிலை ஒன்று
எடுத்தபுகழ் கூறல் போல் மான்
கன்று எடுத்த கரம்மறைத்துச் சிவஞானிப்
பெயர்படைத்த கருணைக் குன்றே"
(சிவஞான பாலய தேசிகர் கலம்பகப் பாடல் எண். 40)

என்ற பாடல் வழி பாடியுள்ளார். இதில் மேருமலையை வில்லாக வளைத்து திரிபுரத்தை அழித்ததோடு, பெரியமலையைத் தூக்கியதால் உண்டான புகழ் இருக்க அதனைக் கூறாது, சிறிய கல் ஒன்றினை எடுத்த புகழைக் கூறுதலுக்கு ஒப்பாகும் என்று உவமை

பொருத்தியும் மேலும், "கருணைக் குன்றே" என்று சிவஞானியை உருவகப்படுத்தியும் அணிநயம் பொருந்தவும் பாடல்களைப் பாடியுள்ளார்.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது

சிவப்பிரகாசர் தன்னைத் தலைவியாகவும், ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளைத் தலைவனாகவும் கொண்டு, தன் நெஞ்சையே தூதாக அனுப்பி வைத்துப் பாடியுள்ளதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூல், சிவப்பிரகாசர் முதன்முதலாக ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளைத் தரிசனம் செய்ய பொம்மபுரம் சென்ற பொழுது கையுறையாகப் பாடப்பெற்றது. இந்நூல் 255 கலிவெண்பாக் கண்ணிகளால் பாடப்பட்டுள்ளது. இந்நூலில் சிவஞானியின் சிறப்பியல்புகள், சிவஞானி எழுந்தருளி ஆட்சிபுரிந்த இடங்கள், பொம்மபுரத்தின் பெருமைகள், நெஞ்சின் மேன்மைகள் எனப் பலவற்றை எடுத்தியம்புகிறது.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி

இந்நூலைச் சிவப்பிரகாச சுவாமிகள் தனது ஞானாசிரியரான ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் திருவருளை வேண்டித் துயில் எழுப்புவதாக அமைத்துப் பாடியுள்ளார். இந்நூல் ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பில் 4 பாடல்களைக் கொண்டது. திருப்பள்ளி யெழுச்சியில் 10 பாடல்கள் இருக்க வேண்டும் என்பது மரபு. ஆனால், இங்கு 6 பாடல்கள் கிடைக்கவில்லை என்பது அறிஞர்களின் கருத்து. இந்நான்கு பாடல்களும் சமயத் தத்துவங்களை எளிதில் விளக்குவனவாகும்.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் தாலாட்டு

இந்நூல் சிவஞானி என்னும் குழந்தையைத் தாலாட்டும் முறையில் பாடப்பெற்றுள்ளது. வெண்பா யாப்பில் அமைந்த விநாயகர் காப்புப்பாடலுடன் குறள் வெண்செந்துறை யாப்பினால் 100 கண்ணிகளால் பாடப்பட்டது இந்நூல். இதனுள் வீரசைவத் தத்துவ நுண்பொருள்கள் விரிவாகக் காணப்படுகின்றன. குறிப்பாகப் பஞ்சாசாரம், அட்டாவரணம், சடுத்தலம் முதலியன கூறப்பட்டுள்ளன. வீரசைவத் தத்துவ நெறியின் பிழிவாக இந்நூல் காணப்படுகிறது.

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ்

இந்நூல் சிவஞானியைக் குழந்தையாகப் பாவித்து, ஆண்பாற் பிள்ளைப்பருவங்களான காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனும் பத்து

நிலைகளில் பாடப்படுவதாகும். இந்நூல் விநாயகர் காப்புப் பாடல் முதலில் அமைய, ஆசிரிய விருத்த யாப்பினால் 101 பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. இந்நூலில் சிவஞானியின் பல்வேறு சிறப்பியல்புகள், முருகப்பெருமானின் திருவருள் பெற்ற திறம், வீரசைவ தத்துவக் கருத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முடிவுரை

- சிவப்பிரகாசர் தான் வாழ்ந்த 32 அகவையில் 34 நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 5 நூல்கள் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் மீது பாடப்பட்டுள்ளது. சிவப்பிரகாசருக்கு ஞான குருவாக விளங்கியவர் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆவார்.
- சிவப்பிரகாசரின் வாழ்க்கை காஞ்சிபுரத்தில் தொடங்கி, நல்லாற்றூரில் நிறைவுற்றதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.
- சிவஞானியைக் குழந்தையாகவும், ஞான குருவாகவும், சிவனாகவும் கருதி தன் நூல்களில் நயம்பட சிவப்பிரகாசர் பாடியுள்ளதை இக்கட்டுரை வழி அறிய இயலுகிறது.

துணைநின்ற நூல்கள்

- இராசேந்திரன்.குமாரசிவ(ப.ஆ), கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2005.
- இராசேந்திரன்.குமாரசிவ(ப.ஆ), கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீசிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்களில் திருக்குறள் ஆட்சி, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2002.
- சிவப்பிரகாசர் ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகம், குமாரசாமி ஐயர்.வீ(உ.ஆ), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2015.
- ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் தாலாட்டு, குமாரசாமி ஐயர்.வீ (உ.ஆ), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1992.
- ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி, குமாரசாமி ஐயர்.வீ (உ.ஆ), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1993.
- ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, குமாரசாமி ஐயர்.வீ (உ.ஆ), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1995.

போற்றிப் பஞ்சகத்தில் இறையருள்

முனைவர் க. பூங்கோதை,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மஹேந்ரா பொறியியல் கல்லூரி,
மின்னாம்பள்ளி,சேலம். 636106ஸ்ஸ்.
அலைபேசி எண்: 95974 64278

முன்னுரை

சங்க காலத்தைத் தொடர்ந்து சங்கமருவிய காலம் அதற்கு அடுத்ததாக பல்லவர் காலத்தைப் பக்தியின் பொற்காலம் என்று கூறப்படுகிறது.கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் பாண்டியர்கள் ஆண்டு வந்தனர். ஆனால் பல்லவர்களின் வருகைக்குப் பின்பு தான் பக்தி இலக்கியம் வளர்ச்சி அடைந்தது. தமிழ் மொழியினைப் பக்தி மொழி என்று மறைத்திரு தனிநாயக அடிகளார் கூறியுள்ளார். சங்க இலக்கியங்கள் மன்னர்களையும் மக்களையும் பாடுகின்றன. பத்தி இலக்கியங்கள் இறைவனையும் இறை அடியவர்களையும் பற்றிப் பாடி சிறப்பித் துள்ளது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று "திருநீறு இல்லா நெற்றி பாழ்" என்றும் மக்களின் மனதில் விதையாக ஊன்றப்பட்டது. தமிழகம் முழுவதும் கோயில்கள் பல எழுப்பப் பட்டு சைவ சமய அடியார்கள் நாயன்மார்கள் பல பக்தி இலக்கியங்களைப் படைத்தனர்..

இறையருள் விளக்கம்

இறைவனின் அருளைப் பெறுவதே இறையருளின் நோக்கமாகும். இவர் முருகப் பெருமானைக் குருவாக நினைத்து வாழ்ந்தவர்...

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (திருக்குறள்,பா.எண்.247)

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்., இதன் மூலம் பொருள் இல்லாதவர்களுக்கு இந்த உலகில் வாழ்வு இல்லாததைப் போலவே, மற்ற உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்களுக்கு மறு உலகத்தில் வாழ்வு இல்லை என்று கூறுகிறது. அதாவது, இவ்வுலக இன்பத்திற்குப் பொருள் எப்படி முக்கியமோ, அதுபோல மறுவுலக இன்பத்திற்கு அருள் முக்கியம் என்பதனை எடுத்துரைக்கின்றது.

வான்இடு வில்லின் வரவு அறியா வாய்மையால்
கால் நிலம் தோயாக் கடவுளை யாம் நிலம்
சென்னி உற வணங்கிச் சேர்தும் எம் உள்ளத்து
முன்னியவை முடிக என்று. (நாலடியார்,கடவுள் வாழ்த்துப் பாடல்)

என்று நாலடியார் கடவுளின் சிறப்பினை உணர்த்துகிறது.

சமயம்

சமயம் என்பதற்கு பக்தி, கடவுள் நெறி, இறை வழிபாடு என்றெல்லாம் பொருள் கூறுவர். மனிதன் சக்திக்கும் மீறி ஒரு சக்தி இருப்பதாகவும் மனிதனை அது கட்டுப்படுத்தி ஆட்கொள்வதாகும் மக்கள் இன்றுவரை நம்புகின்றனர்.

"மனிதன் கட்புலனாகிய இயற்கையின் பாற்பட்டவன் .கடவுள் கட்புலனாகாது இயற்கைக்கும் புறம்பானது. இவ்விரண்டுக்கும் இடையே உறவை உருவாக்கும் முயற்சியே சமயம்" என்று கூறுகிறார். (கா.சுப்பிரமணியன்,சங்க இலக்கிய வாழ்வியல்,ப.420)

இட்டலிங்கத்தின் சிறப்பு

அன்பே சிவம் சிவமே அன்பு என்று அடியவர்கள் பலர் உணர்ந்து நமக்கு உணர்த்துகின்றனர். நம்முடைய முன்னோர்கள் இயற்கையை இறைவனாகக் கருதி வழிபட்டனர். அந்த இறைவன் சிவன் என்றும், சிவனை அடைந்தவர்கள் சித்தர் என்றும் கருதுகின்றனர் . கடவுளை வழிபடுவதைப் போன்று சித்தர்களையும் இன்று வரை வழிபட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். நம்முடைய முன்னோர்கள் கட்டி வைத்திருக்கின்ற கோயில்தான் நம்முடைய உடம்பின்றி வேறு எதுவும் இல்லை. அதனை நாம் அனைவரும் உணர்ந்தவர் இல்லை. அதனால்தான் கோயில் கோயிலாகச் சென்று கொண்டிருக்கின்றோம். மனித உடம்பின் மகத்துவத்தை இப்பாடலின் வழி நம் மனதில் பதிய வைக்கிறார் பண்ணுருட்டி, மணி- சுப்பிரமணிய அய்யர்.

கண்ணோங்கு மணிவடம்சிற் கனலிங்கம்
பூதியோடு கல்தரசு ஆர்த்துத்
தெண்ணோங்கு வருள்காட்டும் (போற்றிப் பஞ்சகம், பக்.10-11)

இந்தப் பாடலின் மூலம் கழுத்தில் உருத்திராட்ச மணிமாலை அணிந்தவனும் ,உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொண்டு இருப்பவனும் ஆகிய கன லிங்கமும் குடி கொண்டிருக்கும் இடம் நம்முடைய உள்ளமே என்று உணர்த்துகிறார் .

இறையருளை வெளியே தேடாமல், தன்னைத்தானே தேடி, தனக்குள் ஆத்மார்த்த இறைவனைக் காணுவதே இறையருள் ஆகும். திருமூலர் கூறிய ஞான லிங்கம் சில சமயங்களில் இட்ட லிங்கமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உடையனவாகும்

உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே
(திருமூலர், திருமந்திரம், பா.எண்.1823)

இப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துவது ,உள்ளம் தான் கோவில் .உடம்பு ஒரு ஆலயம் .வாய்தான் கோபுரம் .தெளிந்த மனம் உடையவர்க்கு சிவன் வேறு எங்கும் இல்லை நம் உள்ளத்தில் தான் குடி கொண்டு இருக்கிறான். ஐம்புலன்களையும் அடக்கி ஆட்கொள்ளும்போது இறைவனை மனதில் காணமுடிகின்றது..

பிறவிக் கடலை நீந்தச் செய்பவர்

மனிதனுடைய வாழ்வில் பிறப்பு மகத்தானது. பிறப்பில் இன்பம்,துன்பம் ஆகியவை அடங்கியது.துன்பத்தில் உழன்றால் மட்டுமே பிறவிக்கடலை நீந்த முடியும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் (திருக்குறள், பா.எண்.10)

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.இதன்மூலம் இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.

கறையினையே கொண்டுகறை கழித்திடல்போல்
காசினியில் கடலில் தோன்றித்
துறையினையே அகன்றுபவத் திரைநீந்தித்
தனையடைந்த தொண்டர்க்கென்றும்
இறையடியாம் துறைகாட்டும் (போற்றிப் பஞ்சகம்,ப.39)

இந்த பாடலின் மூலம் அழுக்கைக் கொண்டு அழுக்கைப் போக்குவது போல்,நின்னையடைந்த தொண்டர்க்குப் பிறவிக்கடல் எனும் துறையை நீந்துவதற்கு சிவபிரானின் திருவடிகளை அடைகின்றனர் என்பதாகும்.

சிவனுக்குரிய அடையாளங்கள்

மான்காட்டும் கரதலமும் மதிநதிகாட்
டும்முடியும் வாமந் தன்னில்
கான்காட்டும் குழற்குமிலும் கறைகாட்டும்
பெருமிடறும் கரந்தும் (போற்றிப் பஞ்சகம்,பக்.40-41)

இதன்மூலம் மான் பிடித்த கையும்,பிறையும் கங்கையும் உள்ள சடையும், உமையம்மை தங்கிய இடப்பாகமும், நீலமிடறும் சிவபிரானுக்குரிய அடையாளங்களாகத் திகழ்வதனை அறிய முடிகின்றது.

வீர சைவக் கடவுளாகத் திகழ்பவன்

அயில்முனியும் விழிக்கிளமை அளித்தருணை ஒத்தும்
(போற்றிப் பஞ்சகம்,பக்.42-43)

சிவபிரான் வீரசைவக் கடவுளாகத் திகழ்பவர்.இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டர் அவர் மனைவியர் இருவருக்கும் மூப்பினைப் போக்கி இளமையினைத் தந்தருளியதனை இந்த பாடலின் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆணவ இருளை அகற்றுபவன்

மன்னியசீர் செயல்நாமக் குறியதனால்
சிவமாகி மருவும் தொண்டர்த்
துன்னுமயல் இருள்மாய்த்து மெய்ஞ்ஞான
ஒளிநிறுவித் தூய்மை செய்தே (போற்றிப் பஞ்சகம்,ப.44)

இந்தப் பாடல் உணர்த்தும் கருத்தானது,நின்னை அடையும் அடியவர்களுக்கு ஆணவ இருளைப் போக்கி,மெய்ஞ்ஞான ஒளியைத்தந்து தூய்மைப்படுத்துதலைக் காட்டுகின்றது.

அறுமுகணாகிய முருகப் பெருமான்

அறுமுகன் சொல்லாற்றால்
மயிலனையும் அனையபெரு மானேயவ்
விருவரையும் மகிழ்வாய் ஏத்தும் (போற்றிப் பஞ்சகம், ப.42)

போற்றிப் பஞ்சகத்தில் இடம்பெற்றுள்ள நான்காம் பாடலில், சிவபிரான் மற்றும் முருகப்பெருமான் இரு கடவுள்களும் வீரசைவக் குலக் கதிரவனாகத் திகழ்வதாக நூலாசிரியர் இயம்பியுள்ளார்.

தொகுப்புரை

போற்றிப் பஞ்சகத்தில் ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முதல் பாடலில் சிவபிரானின் இட்டலிங்கத்தின் சிறப்பு

கூறப்படுகின்றது. இரண்டாம் பாடலில் பிறவிக்கடலைக் கடக்கும் இயல்பு நிலையினைச் சித்தரிக்கின்றது. மூன்றாம் பாடலில் சிவனுக்குரிய அடையாளங்கள் விளக்கிக் காட்டப்படுகின்றது. நான்காம் பாடலில் சிவபிரான், முருகப்பெருமான் வீரசைவக் கடவுள்களாகத் திகழ்வதனைக் காட்டப்பட்டுள்ளது. ஐந்தாம் பாடலில் ஆணவ இருளை அகற்றி, மெய்ஞ்ஞான அருளை அடியவர்களுக்கு வழங்குபவனாகத் திகழப்பட்டு வருவதனை உணரமுடிகின்றது. கடவுள் மனிதனாக உருவெடுக்கலாம். ஆனால் மனிதனோ இறைவனைப் போல அற்புதங்கள் செய்யலாம். இருந்தாலும் மனிதன் கடவுளாக மாறுவதில்லை என்பதனைத் தெள்ளத் தெளிவாக அறியமுடிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. சிவலிங்கனார், (உரையாசிரியர்) போற்றிப் பஞ்சகம் மூலமும் உரையும், மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 1999.
2. பெரியண்ணன், திருக்குறள், பாண்டி பஜார், சென்னை, 2026.
3. சிதம்பரனார், சாமி, நாலடியார் மூலமும் உரையும், தீபம் வெளியீடு, சென்னை,
4. சுப்பிரமணியன், கா., சங்க இலக்கிய வாழ்வியல், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
5. திருமூலர், திருமந்திரம், சுடர்மணி பதிப்பகம், சென்னை.

வீரசைவமும் திருநீற்றின் மகிமையும்

முனைவர் ஜெ ஜெயஸ்ரீபிரதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தட்சசீலா பல்கலைக்கழகம்,
ஓங்கூர், திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்,
jayasanjai23@gmail.com

முன்னுரை

உலகத்தில் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்தனர். இயற்கைச் சீற்றங்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம் , வெப்பம் போன்றவற்றால் பாதிப்பு ஏற்பட்டபோது மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி உண்டு அது தெய்வீக சக்தி என நம்பினர். ஐம்பூதங்களையும் கடவுளாக வழிபட ஆரம்பித்தவன் பின் உருவ வழிபாட்டைத் தொடங்கினான். இயற்கையைப் புரிந்து கொள்ள வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்ற ஒழுங்கான சமூகத்தைக் கட்டமைக்க சமயங்கள் உருவானது. சமயங்கள் என்பது மனிதர்களின் பயமும் நம்பிக்கையும் அறிவும் ஆன்மிகத் தேடலும் சேர்ந்த ஒன்றாக தோன்றியது.சமய ஈடுபாடு கொண்டவர்களுக்கு மன அமைதியும் வாழ்வைப் பற்றிய நல்ல சிந்தனையும் அன்பும் உருவாக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தனர்.

சமயங்களால் பல திருமடங்கள் சமூகத்திற்கு தேவையான கல்வி நிறுவனங்களையும் மருத்துவமனைகளையும் உருவாக்கி மனித இனம் ஒற்றுமையுடன் வாழ வழி வகுத்தன. நம் நாட்டில் சைவம், வைணவம், கிருத்துவம், இஸ்லாமியம், சமணம், பௌத்தம் எனப் பல சமயங்கள் தோன்றி இலக்கண இலக்கியங்களை உருவாக்கி தமிழையும் அறத்தையும் பேணிப் பாதுக்காத்து வந்தன. அவற்றுள் சைவ சமயத்துள் ஒன்றான வீரசைவம் அளப்பரிய பணிகளைச் செய்துள்ளன. அவ்வீர சைவத்தின் சிறப்பையும் வீரசைவ நெறியில் முதன்மையானதாக விளங்கும் திருநீற்று மகிமையையும் இவ்வாய்வில் காண்போம்.

வீரசைவம்

வீரசைவ சமயத்தைக் கன்னடத்தில் பொ. ஊ. 1125 - 1165 ஆண்டுகளில் வாழ்ந்த பசவண்ணர் தோற்றுவித்தார். இவர் கன்னட

பிராமணர் குலத்தில் தோன்றியவர்.வீரசைவர்கள் லிங்கத்தைக் கழுத்தில் அணிபவர்கள் கையிலே வைத்துப் பூசிப்பார்கள். தமிழகத்தில் உருவான சித்தர்மரபினர்களே வீரசைவர்களாக அறியப்படுகிறார்கள். தமிழகத்தில் வீரசைவம் என்பது 1500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட மிக நீண்ட வரலாற்றை உடையது. 5 ஆம்நூற்றாண்டைச் சார்ந்த திருமந்திரம் ஒரு வீரசைவ நெறிநூல் என்றே வீரசைவ ஆய்வாளர் திரு. இரத்தினசபாபதி குறிப்பிடுகிறார்.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தும் வாதுளம்
மற்றவ் (வி) யாமளம் ஆகுங் காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே (திருமந்திரம்)

இதில் திருமூலர் இருபத்தெட்டு சைவ ஆகமங்களில் ஒன்பது ஆகமங்களைச் சிவனிடம் நந்தியம்பெருமான் பெற்றதாக குறிப்பிடுகிறார்.இதில் வீரசைவர்களின் சிறப்பிற்குரிய ஆகமங்களாக வீர ஆகமமும் வாதுள ஆகமமும் மட்டுமே திருமந்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் வீரசைவம் திருமூலர் காலத்திலே தமிழகத்தில் உள்ளது என்பதை அறியலாம். 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாணிக்கவாசகரும் ஒரு வீரசைவ லிங்கதாரியே ஆவர்.

உடலிடங்கொண்டாய் யான் இதற்கு இலன் ஓர் கைமாறே

என்ற வரிகள் ஆதாரமாய் உள்ளது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தை வீரசைவ மடங்களே பாதுகாத்து உள்ளன. வீரசைவம் பழங்காலந்தொட்டே தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியது. சைவர்கள் கடைபிடிக்கும் தீட்டுக்களை வீர சைவர்கள் கடைபிடிப்பதில்லை. பால் பேதம் சொல்லி பெண்களை ஆன்மீகத்தில் இருந்து ஒதுக்கி வைப்பதுமில்லை. அவற்றோடு வீரசைவர்கள் பல மடங்களைத் தோற்றுவித்து கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்ற சமூகப் பணியையும் செய்து வருகின்றனர் மயிலம் பொம்மபுர ஆதீனம் பாலசித்தர் அருளால் தோன்றிய காலம் முதல் இன்று வரை பல சேவைகளைச் செய்து கொண்டு வருகின்றது.

திருநீற்றின் மகிமை

சிவ சின்னங்களில் ருத்ராட்சத்திற்குப் பிறகு மிகவும் சக்தி வாய்ந்ததாகப் போற்றப்படுவது திருநீறு. திருநீறு இல்லா நெற்றி பாழ் என்பார்கள் அந்த அளவிற்கு திருநீறு மகிமை பொருந்தியது ஆகும். திருநீறு அணிவது ஞானத்துடன் தொடர்புடையது என்றும்

மனத்தெளிவைத் தரக்கூடியது என்றும் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சமய நெறியிலும் சமயச் சின்னங்கள் முதன்மை பெறுகின்றன.அவ்வகையில் வீரசைவ நெறியில் முதன்மையாக விளங்குவது திருநீறு என வீரசைவ நெறியில் எட்டு வகைக் கோட்டைகள் குறிப்பிடப்படுகின்றன . அவற்றில் முதன்மையானது திருநீறு ஆகும். திருநீற்றை எந்தை. சிவ சாதனங்களில் முந்தும் திருவெண்ணீறு என்று போற்றுகிறார் சிவப்பிரகாசர். சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருஞானச ம்பந்தர் மதுரையில் கூன் பாண்டியனின் தீராத வயிற்று வலியைப் போக்க திருநீற்றுப் பதிகம் பாடி திருநீற்றால் அந்நோயினை நீக்கினார்.

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு (திருநீ பதி.பாடல்-1)

என்று பாடுகின்றார் மேலும்,

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே (திருநீற்.பதி.பா5)

பூசுவதற்கு இனிமையானது புண்ணியம், தருவது பேசுவதற்கு இனிமையானது தவம் செய்பவர்களுக்கு ஆசையைக் கெடுப்பது ,மானிடர்களுக்கு முடிவாக அமைவதும் திருநீறே. நாடு புகழ்வதும் திருநீறே என்கிறார். இதேபோல் திருநாவுக்கரசர்

பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு

என்று பாடுகின்றார் "மந்திரம் "என்ற சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பது எனப் பொருள்படும் புறத்தாருக்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர் மந்திரம் எனப்படும். இதனைத் தொல்காப்பியம்

நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறை மொழிதானே மந்திரம் என்ப (தொல்.சொல். 480:1-2)

எனக் கூறுகிறது. தமிழில் முதலில் தோன்றிய மந்திர நூலான திருமந்திரம் சிவபெருமான் விரும்பிப் பூசும் திருநீற்றை அணிபவர்

வினைகள் நீங்கி சிவகதி கிட்டும் வாய்ப்பைப் பெற்று மகிழ்வார் என்கிறார். இதனை,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே (திருமந்திரம் 6ஆம் தந்திரம்- 2)

என்று திருநீற்றின் மகிமையைக் கூறுகிறது. சிவப்பிரகாச சுவாமிகள் மயில மலையின்கண் எழுந்தருளியுள்ள சிவஞானி திருக்கரத்தால் வழங்கப்படும் திருநீற்றின் சிறப்பைக்கூறும் பொழுது வறுமை நீங்கும், அரச வாழ்வு கிடைக்கும், மரண பயத்திற்கு மருந்தாகும், நஞ்சு நீங்கும் பிள்ளைப்பேறு பெறும் செல்வம் பெருகும் என்றெல்லாம் கூறுகின்றனர் இதனை ,

இளைக்கு மிடியற்கு உறுபொருளாம்
இறைவர்க்கு அரசாம் கூற்றுவனை
விளிக்கும் பிணிக்கும் மருந்தாகும்
விடத்திற்கு அருஞ் சீர்க் கலுழன் ஆம்
வளைக்கும் பகைக்குப் படை ஆகும்
மலடர்க்கு அரிய மகவாகும்
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே (சி.பா.கூ.தே.கலம் 44)

என்று பாடுகின்றார் .மேலும் ஒரு பாடலில் வேதங்கள் எல்லாம் விபூதி என்ற சொல்லிற்குக் குன்றாத செல்வம் என்கிறது. அப்படிப்பட்ட பெருமைக்கும் மகிமைக்கும் உரிய திருநீற்றினைப் பெறுவதற்காக பிறப்பு ஒழுக்கத்தில் வழுவாத அந்தணரும் சிவஞானியின்தன் தாமரை மலர்க் கை திருநீற்றைப் பெற்று அணிவதற்குத் தவம் புரிவர் என்பர் இதனை,

குன்றாமறைபுள் விபூதி என் றேசொலும் கூற்றினுக்குப்
பொன்றாத செல்வம் எனப்பொருள் கூறும் வன்பூசுரரும்
தண்தாமரை மலர்க்கைந்நீறு சாற்றத் தவம்புரிவர்
என்றால் எவர் சிவஞானி தன் சமன்மை இசைப்பவரே
(சி.பா.தே.கலம். 41)

என்ற பாடல் வழி திருநீற்றின் சிறப்பை அறியலாம். மயிலம் பொம்மபுர ஆதீனம் வீரசைவச் சிறப்பை நிலை நாட்டுவதுடன் சிவஞானி திருநீற்றை உடல் முழுவதும் பூசிக்கொண்டு அன்பர்களுக்குக் காட்சியளிக்கவும் செய்கின்றனர்.திருநீற்றைப் புனிதமாகக் கருதி அனைவரும் பூசிக் கொள்கின்றனர். பவப் பிணியை அறுக்கும் மாமருந்தாக திருநீறு விளங்குகிறது.

முடிவுரை

இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த மனிதர்களுக்கு சமயங்கள் நம்பிக்கையையும் அன்பையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தந்தன. சமயங்களால் மடங்கள் தோன்றின. அவற்றுள் வீரசைவம் மனிதநேயத்துடன் பால் பேதம் இன்றி பெண்களைப் போற்றியது. கல்வி நிறுவனங்களை நிறுவி, சமூகப் பணியாற்றியது மடங்களில் இருந்த குருக்கள் மக்களுக்கு தன்னலமற்ற அன்பையும் அறிவையும் புகுத்தினர்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும் **(குறள் 268)**

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப எல்லா உயிர்களையும் போற்றினார்கள்.

வீரசைவத்தின் முதன்மையான திருநீறு சைவர்களால் போற்றப்பட்டது. சிவஞானி திருநீற்றை உடல் முழுவதும் பூசிக்கொண்டார். திருநீறு செல்வத்தை தந்து பாவத்தைப் போக்கியது நோய் தீர்க்கும் அருமருந்தாகவும் போற்றப்பட்டது. வீரசைவர்களால் இன்றும் திருநீறு புனிதமாகக் கருதி அணியப் படுகிறது.

துணை நின்ற நூல்கள்

1. திருக்குறள் - முனைவர் கொ.மா கோதண்டம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை-2011
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம், ச.திருஞானசம்பந்தம், கதிர்பதிப்பகம் - திருவையாறு - 2020
3. திருமந்திரம் - பத்தாம் திருமுறை திருமூலர் - காசித் திருமடம் திருப்பனந்தாள்-2005
4. ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர்கலம்பகம் -ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் , மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு, மயிலம் - 2015
5. திருஞானசம்பந்தர் தேவாரம் - புலவர் பி.ஏ. நடராசன், உமாபதிப்பகம்

சிவஞானியின் மகிமை

முனைவர் ந.மோகன்ராஜ்
பட்டதாரி ஆசிரியர்
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி
திருவாண்டார்கோயில் புதுச்சேரி.
9786688305
Srimoniragav2011@gmail.com

அறிமுகம்

உலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் வாழ்ந்து, அனுபவித்து, இறுதியில் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே பரம்பொருளின் நோக்கமாக உள்ளது. அந்த உண்மையை அனுபவித்து உணரும் நிலையே சிவஞானம் என்று கூறுகிறோம். இந்நிலையை அடைந்து வாழ்பவரே சிவஞானி எனப்படுகிறார். அதாவது மனித வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் ஆன்மிக விடுதலை என்றால். அதனை அடையும் பாதையில் வழிகாட்டுபவ ராக நிற்பவர் சிவஞானி. உலக சுகங்களையும், இன்பங்களையும், துன்பங்களையும் தாண்டி பரம்பொருளான சிவனின் ஞானத்தை அடைந்து வாழ்பவர்தான் சிவஞானி எனப்படுகிறார்.

இவர்களின் வாழ்வு எளிமையானதாய் தோன்றினாலும், அவர்களின் உள்ளம் பரமசத்தியோடு ஒன்றிணைந்திருக்கும். ஆகையால், சிவஞானியின் மகிமையைப் பற்றிப் பேசுவது மனித குலத்திற்கு வழிகாட்டும் ஒளியாக இங்கு கருதப்பட்டு இக்கட்டுரையானது அமைகிறது.

சிவஞானியின் பண்புகள்

சிவஞானியின் மகிமையை உணவர்வதற்கு முதன்மையாக கருதப்படுவது அவர்களுடைய குணநலன்களாகும். மக்களின் நெஞ்சில் நிறைந்திருக்கக்கூடிய சிவஞானியின் பண்புகள் சிலவற்றைக் கீழே காண்போம்.

1. அன்பு - எல்லோரிடமும் ஒரே அளவில் அன்பு செலுத்துபவர்.
2. சமநிலை - சுகம், துன்பம், புகழ், பழி என எதிலும் சமநிலையில் இருப்பர்.
3. கருணை - மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிர்களுக்கும் கருணை காட்டுவார்.

4. எளிமை - செல்வம், புகழ் ஆகியவற்றால் கவரப்படமாட்டார்.

5. ஞானம் - பிறருக்கு அறிவும், ஆன்மிக ஒளியும் வழங்குபவர்.

இதுபோன்று பல்வேறு பண்புநலன்களைக் கொண்டிருப்பதே சிவஞானியின் சிறப்புகளாகும்.

சிவஞானியின் மகிமை - சமூகத்திற்கான பங்களிப்பு

சிவஞானியின் மகிமை தனிப்பட்ட வாழ்வை மட்டுமல்லாமல் சமூகத்திற்கும் பேருதவியாக அமைகிறது. அவர்களின் உபதேசம் மனிதன் உன்னத நிலை அடைய வழிநடத்துகிறது.

- சமூகத்தில் வேறுபாடுகளை அகற்றி, சமத்துவம் காண முற்படுகிறார்.
- சாதி, மதம், மொழி, பாலினம் ஆகிய தடைகளைக் கடந்து மனிதனை ஒரே உயிராகக் காண்கிறார்கள்.
- உலகியலான சண்டைகள், பேராசைகள், பொறாமை ஆகியவற்றை விட்டு விடுதலை பெறும் வழியைக் காட்டு கிறார்கள்.

இலக்கியங்களில் சிவஞானி

சைவ சித்தாந்தத்தில் சிவஞானம் மிக உயர்ந்த நிலையாகக் கருதப்படுகிறது.

திருவள்ளுவர், மாணிக்கவாசகர், திருமூலர், தாயுமானவர் போன்ற சான்றோர்கள் சிவஞான நிலையை அடைந்து வாழ்ந்தவர்கள். அவர்களின் பாடல்கள் மனித வாழ்க்கையை எளிதாக விளக்கும் ஒளிக்கதிர்களாக உள்ளன. அவர்கள் கூறிய சிந்தனைகள் தலைமுறைகளாக மக்களை வழிநடத்தி வருகின்றன.

அழிவந்த செய்யுனும் அன்பரால் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் **(குறள்.807)**

அன்பே சிவஞானியின் அடையாளம். அன்பின்றி ஞானமும் இல்லை.

அரியர்க் அரியனவாம் ஆனந்தமே
எளியர்க் எளியனவாம் எம்பெருமான்

மேற்கண்ட வரிகளின்படி எளிமையாக வாழ்பவர்களுக்கு சிவஞானம் எளிதாகக் கிட்டும் என்று திருவாசகம் குறிப்பிடுகிறது.

சிவஞானி யாரெனின் தீங்கில்லை நன்றே
அவஞான மேயினும் அஞ்சார் அவனே.

அதாவது, சிவஞானி எதிலும் பயப்படமாட்டார்; தீமையும் நன்மையுமென்கிற இரண்டையும் கடந்து நிற்பவர் என தாயுமானவர் தனது பாடல்களில் எடுத்துரைத்துள்ளார்.

மனித குலத்திற்கு தரும் பாடம்

சிவஞானியின் மகிமை நம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய வழிகளை வெளிப்படுத்துகிறது.

1. மனிதனை எல்லாம் வல்ல சிவனின் உருவமாகக் காண வேண்டும்.
2. பிறருக்குச் சேவை செய்வது கடவுளுக்குச் சேவை செய்ததற்குச் சமம்.
3. சுக துன்பங்களில் சமநிலையில் வாழ வேண்டும்.
4. அன்பு, அமைதி, சகிப்புத் தன்மை என்பவை வாழ்வின் அடிப்படையாக இருக்க வேண்டும்.

சிவனே சிவஞானி

கயிலை மலையில் வீற்றிருக்கும் மும்மூர்த்திகளில் ஒருவரான சிவபெருமானே மயிலை மலையில் சிவஞானியாகக் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறார். மயிலை மலையில் மக்களுக்கு அருள் கொடையைத் தந்து கொண்டிருக்கக்கூடிய சிவபெருமான் சிவஞானியாக அவதரித்து காக்கும் கருணைக் கடவுளாக திகழ்ந்துக் கொண்டிருக்கிறார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

என்னும் வள்ளுவன் வாக்கு இங்கே மெய்ப்பிக்கப்படுகிறது. கடலைக் கடந்து கரையை அடைவதற்கு மரக்கலம் ஒன்று எவ்வாறு தேவைப்படுகிறதோ அதுபோன்று இவ்வாழ்க்கை என்னும் தத்துவ கடலைக் கடப்பதற்கு இறைவன் திருவடியின் அருள் கிடைக்கப் பெற வேண்டும் என்னும் உண்மை புலப்படுகிறது. அதன்படி சிவஞானியாக விளங்கக்கூடிய சிவபெருமானின் திருவடியை வணங்கினால் வீடுபேறு அடைய வழிவகுக்கும் என்பது தெளிவாகிறது.

முடிவு

சிவஞானியின் மகிமையை வார்த்தைகளால் முழுமையாக விவரிக்க முடியாது. அது அனுபவிக்கத்தக்க ஒன்றாகும். இருப்பினும், அவர்களின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியது என்னவென்றால் - அன்பும், கருணையும், சமத்துவமும் கொண்ட வாழ்வே உண்மையான ஆன்மிக வாழ்க்கை என்பதை உணர வேண்டும். மனித குலம் அமைதி, ஒற்றுமை மற்றும் செழிப்பு அடைய வேண்டுமெனில் சிவஞானிகளின் போதனைகள் ஒளிவிளக்காக விளங்கும்

எனவே, மக்கள் தங்கள் வாழ்வில் நலம் பெற வேண்டுமெனில் சிவஞானியின் போதனைகள் இன்றியமை யாததாகும். போதனைகளை வாழ்வில் கடைபிடித்து சுகமான வாழ்வைப் பெற சிவஞானியைப் போற்றி வணங்கி வருகின்றனர்.

THE PHILOSOPHY OF MANNIKKAVASAKAR AS EVOKED IN NALVAR NANMANI MALI

DR. T. SEBASTHI JOHN BASKAR,
M.A., M.A., M.A., M. Phil., M.Th., D.E.L., PhD.
Associate Professor Department of Tamil
A.V.C. College (Auto.)
Mannampandal - Mayiladuthurai.
johnbaskar2012@gmail.com Cell: 8667029895

Introduction

Manikkavasakar is among the chief Tamil Saiva saints (Nayanars), ranked often as the fourth (after Appar, Sambandar, Sundarar). His devotional poetry, especially Tiruvasakam and Tirukkovaiyar, forms a crucial part of the Saiva Siddhanta canon (the Tirumurai) which integrates bhakti (devotion), philosophy, experience and ritual. Nalvar Nanma?i Malai is a later work by Siva Praka?ar which praises the four great Nayanars - Appar, Sambandar, Sundarar, and Ma??ikkavasakar - setting them up as gems (ma?i) in a garland. It contains forty stanzas, in four different metres.

In Nanma?i Malai, the philosophical ideas of Ma??ikkavasakar are evoked not in systematic treatise-form but through poetic allusion, praise, and structuring of his image; the themes of grace, bondage (pasa), impurity (mala), the role of the Guru, the longing of the soul, and transformation through devotion appear subtly, reflecting core Saiva Siddhanta philosophy as developed by Ma??ikkavasakar in his own works. Now we turn to Nalvar Nanma?i Malai. The text is a later praise work, but Godsakes, it reflects the philosophical images and helps perpetuate certain ideas. Below are the main themes and how Manikkavasakar's philosophical thoughts are mirrored.

1. Praise as philosophical transcription

Nalvar Nanma?i Malai positions Ma??ikkavasakar (and the other three Nayanars) as gems, precious, transcendent. This framing is itself philosophical: the idea that saints are embodying the highest truth, i.e. God's grace, purity, insight. Nanma?i Malai alludes to his functions as teacher, guide, and voice of truth. That highlights not just devotional admiration but philosophical recognition of his role in unveiling truth.

2. Allusion to Grace and Spiritual Light

In the Malai, there are stanzas that describe Ma??ikkavasakar's words as luminous, heart-melting, capable of dispelling darkness, etc. These images invoke grace, illumination, transformation-core philosophical notions in Saiva Siddhanta. While I don't have all the stanzas' English translations here, these metaphors are in many of the verses.

3. Bondage, Impurity, Longing

The poem refers to impurities, darkness, ignorance that beset souls, and implies that the saint has either transcended or is a model for escaping them. For example, references like "karunkal manamum karandhuka ka?kal…" - a dark heart melting eyes etc., showing that the soul's impurity or bondage is real. The longing for spiritual purification is inherent in praising someone as one who has gone beyond these impurities yet continues to be compassionate. The Malai's admiration for Ma??ikkavasakar's hymn "Vacakam" suggests the poet sees in Ma??ikkavasakar the model of ascent.

4. The role of the Guru / Divine Knowledge

Even in praise poetry, one emphasizes that Ma??ikkavasakar had the experience of divine grace and knowledge; that he is one who has heard, understood, sang divine truth. The very fact of praising his words and their power situates him as transmitter of knowledge beyond ordinary human perception. The Malai's structure, metre, language - celebrating not just the person but the teaching, suggests that knowledge is not abstract but poetic/liturgical. (i.e. philosophy as lived, felt, sung.)

5. Union, Liberation, Transcendence

The praise suggests that Ma??ikkavasakar has achieved a state of lightness, freedom from worldly impurity, mastery over sense, etc. The appreciation is not just for his poetry but for the spiritual height from which he speaks - implying liberation. Also implied is that through him, devotees can approach that liberation; that his works and life serve as a path. This reinforces the philosophical view in Saiva Siddhanta that moksha is possible, and grace + devotion are means.

6. Dualism & Qualified Non-dualism

While Nanma?i Malai doesn't set out doctrines, the way Ma??ikkavasakar is seen as both distinct (a saint, a devotee) and yet deeply joined with Shiva (through his insight, his revealed song) echoes the Saiva Siddhanta's position: soul is distinct but union is possible. The metaphorical language - darkness/light, impurity/purity, bondage/freedom - speaks of polarity but also of crossing over, transcendence.

7. Emotional Intensity and Ethical Undertone

The admiration is not aloof; it is full of emotional response-melting hearts, tears, longing. This emotional intensity is part of the philosophical structure: one cannot reach truth by mere logic, but through feeling, devotion, and transformation. Ethical undertones: though not deeply treatise-style, Nanma?i Malai by praising the saint emphasizes purity, renunciation of worldly vanity, the turning of the heart to divine, etc. These are implied ethical prescriptions.

8. Poetic Form as Reflection of Philosophy

The fact that Nanma?i Malai uses four metres, each dealing with one saint, mirrors the idea that though the path may have many facets (different saints, different contexts), they converge in the same truth. Poetry becomes vehicle of philosophical teaching: the image, metre, rhythm draw us into experience of devotion and longing.

Conclusions

Nanma?i Malai serves both literary and philosophical purposes: it is an aesthetic piece of devotional literature, and a vessel for philosophical ideas rooted in Ma??ikkavasakar's Saiva Siddhanta vision. It testifies to how philosophy in this tradition is not separate from devotion, ritual, poetry: the philosophical truths (bondage, impurity, longing, grace, liberation) are embedded in lived, affective discourse. For modern readers, Nanmai Malai helps illuminate how Makkavasakar has been received, what aspects of his thought have been most admired (grace, purity of vision, transformative power of words), and perhaps which ideas have become more symbolic over time.

சிவஞானி தங்குமிடங்கள்
(சிவப்பிரகாசர் தன் நெஞ்சிற்கு உரைத்தது)

முனைவர் சு. பிரபாவதி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கொ. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி,
கடலூர் - 607 001.

சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியரும் குருநாதருமாகிய சிவஞான பாலய சுவாமிகள் மீது நெஞ்சுவிடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள், "சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது" என்னும் நூல் சிவனும் குருவும் வேறல்லர் என்றும், சிவஞானியே முத்தி பதம் அருள்வார் என்றும் கூறுகிறது. சிவப்பிரகாசர் தன்னைத் தலைவியாகவும் சிவஞான பாலய சுவாமிகளைத் தலைவனாகவும் எண்ணி அவரிடம் தம் நெஞ்சைத் தூது விட்டதாகப் பாடிய பாடல்களே நெஞ்சுவிடு தூது ஆகும். நெஞ்சைத் தூதாக விடும் போது தலைவன் எங்கு இருப்பான் என்பதையும் தலைவி கூற வேண்டும். அந்த வகையில், சிவஞானி தங்கும் இடங்கள் சிலவற்றைச் சிவப்பிரகாசர் இந்நூலில் சுட்டுவதோடு மட்டுமல்லாமல் அவ்வூரின் பெருமையை எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆதீன மடங்கள்- காஞ்சிபுரம்

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் திருமடங்கள் இருந்த இடங்களில் குறிப்பிடத்தகுந்தவை, காஞ்சிபுரம், நல்லாற்றூர், மயிலம், பொம்மையார்பாளையம் ஆகியவை. இவை தவிர சிதம்பரம், செய்யூர், பெருமுக்கல், பழநி, திருக்கழுக்குன்றம், பெரும்பேற்றுக் கண்டிகை, திருவண்ணாமலை முதலிய பல்வேறு திருத்தலங்களில் திருமடங்கள் இருந்துள்ளன. இத்திருமடங்களில் குருமகா சந்நிதானங்கள் வீற்றிருந்து தம்மிடம் வந்த சீடர்களுக்கு உபதேசம் செய்துள்ளனர். சிவப்பிரகாசரின் ஞான ஆசிரியரான சிவஞானி, காஞ்சிபுரத்தில் தங்கி அன்பர்களுக்கு அருளாசி வழங்குவதில் பெரு விருப்புற்றிருந்தார் என்பதை,

குருபரன் காஞ்சி வாஞ்சை
கொள்சிவஞான தேவன்

திருவடி வாழி அன்னான்
திருப்புகழ் வாழி (சி.ப.தே.கலம். வாழ்த்து)

இப்பாடல் சுட்டுகிறது. காசி என்ற ஊர்ப்பெயர் இடையில் ஞ் என்ற எழுத்திட்டதான காஞ்சி என்ற ஊர் ஒன்று.

- ஞாலமெலாம்
நண்ணவொரு காசி நடுமெய்ஞ் ஞகரமுறும்
எண்ண வரிய வெழில்நகரும் (181)

அதன் பெருமையை முருகன் கால் பங்கும், விநாயகன் அரைப் பங்கும் உமையம்மை முக்காற் பங்கும் சிவபிரான் முழுவதும் உரைப்பர் என்றால் என்னால் எப்படிச் சொல்ல முடியும் என்று நினைத்த ஆதிசேடன் வெட்கப்பட்டுக் கடலின் கீழ் விழுந்தான். திருமாலும் அதன் பெருமையைச் சொல்ல முடியாதவனாய் அப்பாம்பின் மீதே கிடந்தான் (காஞ்சியில் கிடந்த கோலத்தில் திருமால் கோயில் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது). இத்தகைய பெருமையை உடையது காஞ்சி நகரம். அந்நகரில் இருக்கக் கூடியவன் என்தலைவன்.

விருத்தாசலம்

முன்னோர் தொடுத்த செய்யுளின் பொருளை முழுதும் பிறர் அறியாமல் மறைத்துப் பின்னால் வருபவர்கள் அதனையே தாம் உரைத்து இது எமது என்று கூறுவதைப் போல, சிவஞான பாலய சுவாமிகள் தங்கியிருக்கக்கூடிய மற்றொரு இடம் விருத்தாசலம். இவ்விடம் முதுகாசி எனப்படுகிறது இடம். தன்பால் வந்து இறப்பார்க்கு முத்தி தருவது. அச்செயலைப் பின்னர்த் தோன்றிய காசி என்ற நகரம் திருடிக்கொண்டு வடக்கே சென்றிருந்தது என்கிறார். காசியிலே இருக்கக்கூடிய கங்கை ஆறானது,

நன்பதியைச் சேரவரு நங்கைபோற் சென்று மலி
தன்பதியைச் சார்ந்தணைந்த தண்கங்கை - யென்பதுதான்
புத்தா றெனத்தான் புராதனவா றென்றுமணி
முத்தா றுடுத்த முதுகிரியும் - செய்ததாம்

காசி விருத்தாசலத்திற்குப் பிறகு வந்தது ஆதலின் அங்குள்ள கங்கையும் புதிதாகத் தோன்றியதாகும். விருத்தாசலம் பழையதாதலின் அங்குள்ள பழைய ஆறான மணிமுத்தாறு சூழ்ந்த இடத்தில் சிவஞான பாலய சுவாமிகள் இருப்பார். அவர் அங்கு இருந்தால் அவரிடம் என் காதலைச் சொல்லிவிட்டு வா என் நெஞ்சே என்று சிவப்பிரகாசர் பாடுகிறார்.

சேயூர்

சேயூர் என்ற ஊரும் என் தலைவன் இருக்கக்கூடிய இடம்தான். அவ்வூரின் வளத்தைக் கூற வந்த சிவப்பிரகாசர்,

அன்னமாய் முற்றும் விளைய வளங்களெலாம்
துன்னுநாட் டிற்குச் சுவைவிளைய

அவ்வூரின் வயல்கள் எல்லாம் சோறாகவே விளையக்கூடியது. சோற்றுக்குச் சுவைதரும் உப்பு விளையக்கூடிய இடமாகவும் விளங்குகிறது. மிக ஆழமான பொய்கைகள் நிறைந்தது. முருகனை மகனாகப் பெறும் வாய்ப்புற்ற கங்கை, "உங்கள் உடன்பிறந்தார் ஊரைக் கண்டு வருவீர்" என்று தன் மக்களை விடுக்கக்கூடிய அளவிற்குச் சிறப்பு வாய்ந்தது அவ்வூர். அங்கே மறையவர் முத்தீ வளர்ப்பர். அவர் மனைவியர் பசித்தீயை விருந்தினால் அவிப்பர்.

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

என்று கம்பர் கோசலை நாட்டைப் பற்றிக் கூறுவதைப் போல் சிவப்பிரகாசர் சிவஞானி தங்கும் இடமான சேயூரைப் பற்றிக் கூறும்போது, பெண்களுடை மார்புகளைத் தவிர பிறரை வருத்துதல் செய்யக்கூடியது வேறு ஏதும் இல்லாதது அவ்வூர். பெண்களுடைய இடையைத் தவிர அங்கே துவளுதல் என்பதும் இல்லை. கந்தவேலினுடைய தேரைத் தவிர அவ்வூரில் ஓடுதல் என்பதில்லை. அவ்வூரார் ஏற்பார்க்கு கொடுக்கக் காத்திருப்பர்; ஆனால் இல்லை, கொடு என்று கேட்பார் அவ்வூரில் இல்லை. எக்காலத்தும் விழாவுடன் கூடியது அவ்வூர்.

இல்லென்பதுமொருவர் ஈயென் பதும்வினையாம்
சொல்லென்ப தின்று பெயர்ச் சொல்லாக - நல்லவள
மிக்கெலா நாளும் விழவறா வீதியணி
திக்கெலா மேத்தமலி சேயூரும்
(199-200)

என்று சிவஞானி தங்கியிருக்கக்கூடிய சேயூர் எல்லா நாளும் விழாக்கோலம் பூண்டிருக்கும் சிறப்புடையது. அப்படிப்பட்ட ஊரிக்குச் சென்று சிவஞானியைப் பார்த்து என் காதலைச் சொல்லிவிட்டு வா என் நெஞ்சே என்று பாடுகிறார்.

மயிலம்

மயிலம் என்ற ஊர் சிவபிரானின் மந்திரமாகிய பஞ்சாட்சரத்தை ஒருமுறை ஓதின் ஆயிரமுறை ஓதியதின் பயனைத் தருக்கூடியது. இதனை,

-முக்கணனார்
மந்திர மொன்றாயிரமாய் வளர்ந்து பயன்
தந்திடு மொண்மயிலைத் தண்மலையும் (201)

என்ற அடிகளில் குறிப்பிடுகிறார். அற ஆழிக் கடலாக மயிலம் மலையில் அமர்ந்து துறவு நெறி போற்றுபவர்க்கும் இல்லற நெறியில் ஈடுபடுபவர்க்கும் ஆசி நல்கும் ஞான ஆசிரியன் சிவஞானி. அவர் பிறப்பெனும் பேதைமை நீங்க வழிகாட்டும் ஞான குரு. அவர் இருக்கும் இடம் முருகன் வள்ளி தெய்வானையுடன் கோயில் கொண்டிருக்கக் கூடிய மயிலம் என்பதை,

அறஆழிக்கடல் அந்தணனாய்
அமர்ந்து மயிலமலை மீதில்
துறவாம் ஒழுக்க நிலையினர்க்கும்
துறவா வாழ்க்கை உடையார்க்கும்
பிறவா நெறியை விளக்கிடவே
பெம்மான் சிவஞானிக் காணக்
குறமாது அவள் வான்மகள் விளங்கக்
கோயில் கொண்ட குருகுகனே (மயிலத் திருவாயிரம் - 8)

இப்பாடல் மூலம் அறியமுடிகிறது. மேலும், குருவருளும், திருவருளும் நிறைந்த சித்தர் பீடமாக மயிலம் திருத்தலம் விளங்குகிறது என்பதைப் பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது.

தெய்வம் பாலசித்தருடன்
சிவஞானிப்போர் குருஅமரும்
தெய்வமலையாம் மயிலமலைத்
தேவே அடியேற்கு அருள்கவே (மயிலத் திருவாயிரம் - 55)

இத்தகு சிறப்பு வாய்ந்த மயிலம் மலையில் சிவஞானி இருப்பார் அவரை அங்கே நீ கண்டால் என் நிலையை எடுத்துக் கூறுவாயாக என் நெஞ்சே என்று தன் நெஞ்சை சிவஞான பாலய சுவாமிகளிடம் தூதாக விடுகிறார் சிவப்பிரகாசர்.

பொம்மபுரம்

பிரமபுரம், பொம்மபுரம் என்னும் பெயர் பெற்ற ஊர் இன்று பொம்மையர்பாளையம் என்னும் பெயர் பெற்று விளங்குகிறது. பிரம்மமாக விளங்கும் சிவஞானி தன்னை அடைந்தவரைத்

தன்னைப்போலவே ஆக்கும் தன்மை உடையவர். அவர் வாழக்கூடிய இடமாதலால் அவ்வூர் பிரமபுரம் எனப் பெயர் பெற்றது.

தன்னை மருவினரைத் தானாக்குந் தன்மையுடை
மன்னுசிவஞானி மருவிவாழ் - நன்னிலையில்
அம்ம பிரமபுரமாகும் பொருள்படவே
பொம்மபுர மென்னும் புகழ்ப்பதியும்

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. பொம்மபுரத்திலே திருமடம் அமைத்து அங்கே வரும் சீடர்களுக்கு உபதேசம் செய்து வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளும் எம் அரசனான சிவஞானி இருக்கும் இடத்திற்கு என் நெஞ்சே நீ செல் என்று தன் நெஞ்சிற்கு வழி கூறி அனுப்புகிறார் சிவப்பிரகாசர். தொடர்ந்து, அங்குள்ள திருமடம் எவ்வாறு இருக்கும் என்பதையும் விளக்குகிறார்.

திருமடக் காட்சி

பொம்மபுர ஆதினத் திருமடம், அரிசி கழுவிய நீர் ஒரு பெரிய தடமாய்த் தேங்கி அதில் கழுநீர்ப் பூக்கள் பூக்கும். அட்டிற் புகையானது மகமாகச் சென்று மூவுலகும் காக்கும்படியாகும். கோடி மறையவர்க்கு இடும் உணவின் புண்ணியத்தை ஒரு சில யோகிக்கு இடும் உணவால் அடையலாம். அந்த நிலையில் கோடி சிவயோகிகட்கும் அங்கே உணவு சமைப்பவர் உண்டு. அவர்களைக் காண்பாய். சிவனடியார்களுக்குப் பூசைக்கு வேண்டிய பொருள்கள் தருவாரும், நறுமலர் கொய்து வருவாரும், பூசை செய்வாரும், ஞானநூல் கேட்பாரும், உருகி அந்நூலை ஓதுவாரும், நீறணிந்து கண்டி புனைந்து கமலாசனத்திருந்து சிவனைச் சிந்திக்கும் யோகியரும் ஆகியவர்களை நீ பார்த்து மனமுருகிப் போற்றி வணங்கித் திருமடத்தின் உள்ளே புகுவாயாக. அங்கே இருக்கக் கூடிய எம் தலைவனைப் பார்த்து என் நிலையைக் கூறி மாலை வாங்கி வா என தன் நெஞ்சைத் தூது விடுகிறார் சிவப்பிரகாசர்.

முடிவாக

சிவப்பிரகாசர் சிவஞான தேசிகர் மீது கொண்ட பற்றின் காரணமாக தன் நெஞ்சைத் தூது விடுகிறார். அப்படி தூது செல்லும் நெஞ்சிற்கு சிவஞானி தங்கியிருக்கும் இடங்கள் எவை என்பதையும் அவற்றின் பெருமைகளையும் அவ்விடத்திற்கான அடையாளமாகக் கூறிச் செல்கிறார். பிரம்மமாக (சிவனே) விளங்கும் சிவஞானி, சிவன் உறையும் இடங்களிலெல்லாம் இருப்பார் என்பதை விளக்குவதாக நெஞ்சு விடு தூது அமைந்துள்ளது.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் தமிழ்ப்பணி

முனைவர். வே. மகேஸ்வரி,
தமிழ்த்துறைத் தலைவர்
லட்சுமி பங்காரு கலை, அறிவியல் கல்லூரி - மேல்மருவத்தூர்
181- டீ, அண்ணா நகர், கூட்டேரிப்பட்டு,
திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.
அழைத்திட - 9442086150, 7010826780.

பாரததேசம் செய்த தவத்தின் காரணமாய் தொண்டை நாட்டில் பல்லவ மன்னர்களின் தலைநகராய் விளங்கிய கோயில்கள் நிறைந்த காஞ்சி மாநகரில் 17 - ம் நூற்றாண்டில் குமாரசாமி தேசிகருக்கு திருமகனாகவும் மூத்த மகவாகவும் அவதரித்தவர் ஸ்ரீ சிவப்பிரகாசர். இவர் கற்பனை களஞ்சியம், சிற்றிலக்கிய வேந்தர், நல்லாற்றூர் சிவப்பிரகாசர், துறைமங்கலம் சிவப்பிரகாசர் எனப் பல பெயர்களில் வரலாற்றில் நிலைபெற்றிருக்கக் காரணம், இவரது படைப்புகளில் காணப்படும் கற்பனை, உவமை, ஒரு பொருளை ஆராயும் நோக்கில் உருவாக்கும் புதுமையான உத்திகள் முதலியனவும் இவரை இத்தகைய உயர்ந்த இடத்திற்கு அழைத்துசெல்வதாய் அமைந்தன. மேலும் இவர் படைப்புகளில் இறைவனைப் போற்றும் திறமும் அதனொடு சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் முறைமையும் குறிப்பிடத்தக்கவையாக அமைந்தன. இவரது படைப்புகளிலிருந்து அவரின் தமிழ்ப் பணியினை ஆய்வோம்.

பன்மொழிப்புலமை

சிவப்பிரகாசர் தமிழ்மொழி மட்டுமன்றி தெலுங்கு, வடமொழி, கன்னடம் போன்ற மொழிகளிலும் தேர்ந்தவராக விளங்கினார். அதனால்தான் பிரபுலிங்கலீலை என்ற கன்னட மொழி நூலை முதல் நூலாகக்கொண்டு சிவப்பிரகாசர் தமிழ்மொழியில் அதே பெயரிலேயே வழிநூலாக நமக்குத் தந்தார்.

பவப்பிணி மருத்துவர்

சிவப்பிரகாசர் சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழில் மருத்துவரையும், மருந்து முதலானவற்றையும் அழகாகக் கூறுகிறார். மருத்துவர் நோயாளியின் நாடியைப் பார்ப்பர். வாதம், பித்தம், சிலேத்துமம், என்ற மூன்று நாடிகளில் நாடி சரியாகச்

சென்றுகொண்டிருக்குமாயின் உயிர்க்கு அழிவில்லை என்று கூறுவர் குறை இருப்பின் நோயாளியை நோயிலிருந்துத் தேற்றுவர். எற்ற உணவினை உண்ணுமாறு பணிப்பர். மருந்து அருந்துதல், மேற்பூச்சுப் பூசுதல் முதலிய வகைகளில் ஏற்றவாறு மருந்தினைப் பிரயோகம் செய்வர். மற்றும் இரசமணி அணிதல், மந்திரித்தல் ஆகியவற்றாலும் நோயைப் போக்க முயல்வர்.

அவ்வாறே சிவஞான தேசிகர் பிள்ளைத்தமிழில் இடகலை பிங்கலை நாடியினிற் செல்லும் வளியைத் தடுத்துச் சுழுமுனையாகிய நாடியில் வளியைச் செலுத்தும் உயிர்க்கு அழிவில்லை என்று கூறி, அரிய வேத மந்திரங்களால் சிவபெருமானைத் தியானிக்கச் செய்து, திருநீற்றினை உடலிற் பூசைச் செய்து, உருத்திராக்கமணியை உடலில் அணியச் செய்து திருவைந்தெழுத்தாகிய மந்திரத்தை உபதேசித்துப் பிறவியாகிய பிணியைப் போக்கலாம் என்று கூறுவதிலிருந்து சிவப்பிரகாசர் மருத்துவப் புலமை நிரம்பியவர் என்பதை உணரலாம். அப்பாடல்,

கருத்திற் காண்குறு நாடிகள் முன்றையுங் கண்டுநன் னடுநாடி
கலந்தியங்குறு முயிர்க்கழி வினைக் காட்டிநோ யினர்நெஞ்சந்
திருத்திக் கைப்புவிட் டருமறைப் பாலொடு தீநிறப் பெருமுக்கண்
தீஞ்சு வைக்கனி தன்னையுட் கொள்கெனத் தெருட்டுபு னங்கூட்டு
மருத்துப் பையினைச் சோதித்து வெண்பொடி மருந்தெடுத் துடல்பூசி
மணிய ணிந்தருள் அஞ்செழுத் தாகிய மந்திரம் பிறழாமல்
உரைத்திட் டோம்புறும் பவப்பிணி மருத்துவன்[1]

தர்க்கர்

சிவப்பிரகாசர் தர்க்கம் செய்வதிலும் வல்லவராய் இருந்துள்ளார். தர்க்க நூலில் திரவியம் என்ற தலைப்பில் நிலம் முதலான பூதங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தேயுவாகிய நெருப்பைக் கூறும்போது அது வெள;ளை ரூபம் உடையது என்று கூறப்படுகின்றது.

மாயை, அல்லமனை விரும்பிக் காமத்தால் துன்பப் படுகின்றாள். அப்போது சந்திரனைப் பார்த்துப் பழித்துக் கூறுகின்ற பகுதி பிரபுலிங்கலீலையில் பிரபுதேவர் வந்த கதியில் உள்ளது. அதில்

உருப்பமிகு வன்றழல் சிவப்புற்று உலகர்காண ஒளிதரவும்,
நெருப்பு வெண்மையென்பது நல்நியாயர் நின்னைக் குறித்தன்றோ
பொறுப்பு நறுஞ்சந்தனச்சேறு புலர்ந்து பெரியப் பூவனையும்
விருப்பமலரும் கொளுந்த அழல் வீசியெழுந்த வெண்டிங்கள்[2]

என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் நெருப்பு, சிவந்த சுவாலையுடன் இருப்பதைப் பலரும் பார்க்கின்றார்கள். அதனால் தான் அதனை செந்தழல் என்கின்றனர். ஆனால், தருக்க நூலார் நெருப்பு வெள;ளை நிறம் உடையது என்று கூறுகின்றனர்.

இந்நிகழ்ச்சியைக் கூறும் சிவப்பிரகாசர் மாயை அணிந்த சந்தனக் குழம்பும் மலர்மாலையும் கருகும்படியாகக் காய்கின்ற சந்திரனை நோக்கி மாயை கூறுவதுபோல். நெருப்பை வெள;ளை நிறமுடையது என்று தர்க்கநூலார் கூறுகின்றனர். ஆனால், உலகத்தில் காணப்படும் நெருப்பு சிவப்பாகத்தான் உள்ளது. என்னைச் சுட்டு வருந்துகின்ற திங்களாகிய உன் நிறத்தைக் கருதித்தான் தர்க்க நூலார் நெருப்பை வெள;ளை என்று கூறுகின்றார்கள் போலும் எனச் சுவை தோன்ற வருணிக்கின்றார். இதிலிருந்து இவரின் கற்பனைத் திறனையும் தர்க்கம் செய்யும் திறனையும் நன்கறியலாம்.

சோதிடர்

சிவப்பிரகாசர் சோதிடப் புலமை வாய்ந்தவர். இதற்கு அவர் பாடிய பாடல்களே அகச்சான்றுகளாக அமைகின்றன. பிரபுலிங்க லீலையில் இடம்பெற்ற பாடல் ஒன்றைக் காணலாம்.

பிரபுலிங்கலீலையில் தோழியர் மாயைக்கு அலங்காரம் செய்யும் பகுதி, சிவப்பிரகாசரின் கற்பனைத் திறத்திற்குச் சிறந்த சான்றாக உள்ளது. மாயையின் கைகளில் ஒரு தோழி, மாணிக்கம் பதித்த ஒரு பொற்கடகத்தை அணிவித்தாள். கையில் ஏற்கெனவே அணிந்துள்ள வளையல்கள் கழன்று விடாதபடி தடுப்பதற்காக, இக்கடகம் அணியப்படுவதாக இருந்தது. மாயையின் எழிற்கை, மாணிக்கங்கள் கடகத்தில் பொருந்தியிருப்பதைத் தோழியர் கண்டனர். கன்னி அத்தம், இனமணி கற்கடகத்தில் மன்னியுள்ளது அற்புதம் என்று வியந்து பாராட்டினர்.

வானவீதியில் எண்ணற்ற நட்சத்திரங்கள் இருந்தாலும், அவற்றுள் 27 நட்சததிரங்களே சோதிடக் கலைக்குப் பயன்படுத்தப் படுகின்றன. அந்த 27 நட்சத்திரங்களும் 12 ராசிகளில் அடங்கும். ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பாதங்களைக் கொண்டது. ஒரு ராசி என்பது இரண்டே கால் நட்சத்திரம் கொண்டது. இரண்டே கால் நட்சத்திரம் அதாவது 9 பாதங்களைக் கொண்டது ஒரு இராசியாகும்.

கடக ராசியில் புனர்பூசத்தின் 4 ஆவது பாதமும் பூசத்தின் 4 பாதங்களும் ஆயில்யத்தின் 4 பாதங்களும் அடங்கும். கன்னி ராசியில் உத்திரத்தின் 3 (2, 3, 4) பாதங்களும் அஸ்தத்தின் 4 பாதங்களும் சித்திரையின் 2 (1,2) பாதங்களும் அடங்கும்.

கன்னியத்தம்வந் தினமணி கற்கட கத்தின்
மன்னி யுள்ளதுஅற் புதமென் வளைபல காக்க
வின்னு தற்கருங் கண்மட மாதுகை விறங்க
பொன்னின்நற்கட கம்புனைந் தனள் ஒரு பூசை[3]

இப்பாடல், கன்னியாகிய மாயையின் கைகள் வந்து ஓர் இனமான மாணிக்கக் கற்கள் பதிக்கப் பெற்ற கங்கணத்துள் பொருந்தியிருப்பது வியக்கத்தக்க நிலையில் அழகாய் உள்ளது என்று பலரும் கூறுமாறு, ஒளி பொருந்திய நெற்றியும், கரிய விழிகளும், மடப்பமும் வாய்ந்த மாயையின் கை. அழகு பெறவும் வளையல்களைக் காக்கவும், பொன்னாலாகிய, அழகிய மாணிக்கமணிகள் பதித்த ஒரு கடகத்தை மாயைக்கு அணிவித்தாள் ஒரு தோழி என்றும் கன்னியா இராசிக்கு உண்டான அஸ்தம் நட்சத்திரமானது கூட்டமான மாணிக்கக் கற்கள் போன்ற புனர்பூசம், பூசம், ஆயில்யம் ஆகிய நட்சத்திரங்களைப் பெற்றிருக்கும் கடக இராசியில் வந்து சேர்ந்திருப்பது, வியத்தகு புதுமை என்று சோதிட நூலோர் கூறுமாறு மாயைக்குக் கடகம் புனைந்தாள் ஒரு தோழி என்றும் இரு பொருட்பட சிலேடை நயத்துடன் அமைத்துள்ளார்.

ஸ்ரீ சிவப்பிரகாசர் நூல்களின் வகைப்பாடு

1. சோணசைலமாலை (101 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் திருவண்ணாமலை
2. திருச்செந்திலந்தில் நிரோட்டக யமக அந்தாதி (31 பாடல்கள்) சிற்றிலக்கியம் திருச்செந்தூர்
3. திருவெங்கைக்கோவை(426 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் திருவெங்கை நகர்
4. திருவெங்கைக்கலம்பகம்(103செய்யுட்கள்) சிற்றிலக்கியம் திருவெங்கை நகர்
5. திருவெங்கையுலா (3 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் திருவெங்கை நகர்
6. திருவெங்கை அலங்காரம் (நூல் கிடைக்கப்பெறவில்லை) சிற்றிலக்கியம் திருவெங்கை நகர்

7. நால்வர் நாண்மணிமாலை. (41 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் சிதம்பரம்

8. சதமணிமாலை. (880 பாடல்கள்) வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு நூல் சிதம்பரம்

9. தருக்க பரிபாடை உரைநடை நூல் சிதம்பரம்

10. சிவப்பிரகாச விகாசம் (333 பாடல்கள்) சிற்றிலக்கியம் சிதம்பரம்

11. சிவநாம மகிமை (11 பாடல்கள்) சிற்றிலக்கியம் சிதம்பரம்

12. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது (3 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் பொம்மபுரம்

13. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு (101 கண்ணிகள்) சிற்றிலக்கியம் - ஞானாசிரியர் மீது பாடியது. பொம்மபுரம்

14. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் (102 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் - ஞானாசிரியர் மீது பாடியது. பொம்மபுரம்

15. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் (95 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் - ஞானாசிரியர் மீது பாடியது. பொம்மபுரம்

16. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி (4 பாடல்கள்) சிற்றிலக்கியம். - ஞானாசிரியர் மீது பாடியது. பொம்மபுரம்

17. நன்னெறி (41 செய்யுட்கள்) நீதிநூல் பொம்மபுரம்

18. திருக்கூவப்புராணம் (703 பாடல்கள்) தல புராணம் திருக்கூவம்

19. பழமலை அந்தாதி (101 பாடல்கள்) சிற்றிலக்கியம் விருத்தாசலம்

20. பழமலை நாதர் பிச்சாடன நவமணிமாலை (9 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் விருத்தாசலம்

21. பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை (19 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் விருத்தாசலம்

22. பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடில் ஆசிரிய விருத்தம் (10 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் விருத்தாசலம்

23. கொச்சக கலிப்பா. (கிடைக்கப்பெறவில்லை) சிற்றிலக்கியம் விருத்தாசலம்

24. இட்டலிங்க அபிடேக மாலை (10 செய்யுள்) சிற்றிலக்கியம் நல்லாற்றூர்

25. நெடுங்கழி நெடில் (10 பாடல்கள்) சிற்றிலக்கியம் நல்லாற்றூர்

26. குறுங்கழி நெடில் (10 செய்யுள்) சிற்றிலக்கியம் நல்லாற்றூர்

27. நிரஞ்சன மாலை (31 செய்யுட்கள்) சிற்றிலக்கியம் நல்லாற்றூர்

28. கைத்தல மாலை(10 செய்யுள்) சிற்றிலக்கியம் நல்லாற்றூர்

29. சீகாளத்தி புராணம் - இரு சருக்கங்கள் (315 செய்யுட்கள்) புராணம் நல்லாற்றூர்

30. தல வெண்பா (கிடைக்கவில்லை) நல்லாற்றூர்

31. ஏசுமத நிராகரணம் (3 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன) இந்து மத கருத்துக்கள் அடங்கிய நூல் புதுச்சேரி

32. பிரபுலிங்க லீலை (1158 செய்யுட்கள்) தழுவல்இலக்கியம் காஞ்சிபுரம்

33. வேதாந்த சூடாமணி (184 பாடல்கள்) வேதாந்த நூல் காஞ்சிபுரம்

34. சித்தாந்த சிகாமணி (100 பாடல்கள்) காப்பியம் காஞ்சிபுரம்

மற்றும் தனிப்பாடல்கள் (12 செய்யுட்கள்)

தொகுப்புரை

தமிழ் இலக்கிய உலகில் சமயத்தையும் மொழியையும் இணைத்து ஏராளமானோர் பலவிதப் படைப்புகளைத் தந்துள்ளனர். அவ்வகையில் தொண்டாற்றியவர்களில் தமக்கென ஓரிடத்தைப் பெற்றவர் ஸ்ரீ சிவப்பிரகாசர் ஆவார். முப்பத்து இரண்டு அகவையில் (சிற்றிலக்கியம், மொழி பெயர்ப்பு, நீதி, உரைநடை, தர்க்கம், வேதாந்தம், காப்பியம் முதலான) முப்பத்து நான்கு நூல்களை இயற்றிய இவரால் தமிழும் சைவமும் பொலிவு பெற்றது

என்பது உண்மையான செய்தி. இவரது படைப்புகளில் ஆன்மீகம் மட்டுமல்லாது சமூக ஒழுக்கம், அறம், நீதி, தத்துவம், தோத்திரம், சாத்திரம், புதுமை, சோதிடம், கற்பனை, உவமை, தர்க்கம் முதலான பலவும் நிறைந்து பெருகிற்று என்பது தமிழுலகம் அறிந்த செய்தியாகும். உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றாகிய நம் தமிழ் மொழியைக் கட்டிக்காத்து வளர்த்த பெருமைக்குரிய பெரியவர்களுள் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு முக்கிய இடம் உண்டு என்பதை உணரமுடிகின்றது.

அடிக்குறிப்பு

1. சிவப்பிரகாசர் சிவஞானபாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் பக் 191 - 193.

2. மோகன சுந்தர். கு. சிவப்பிரகாசரும் தர்க்கமும், சிவப்பிரகாசர் ஆய்வுமாலை பக் 594-598.

3. சாந்தா. மா. சு. சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஓர் திறனாய்வு.

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் காப்புப்பருவச் சிறப்பு

ச. சந்தோஷ்குமார்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தட்சசீலா பல்கலைக்கழகம்,
ஓங்கூர், திண்டிவனம் - 604305.
9500463540
santhoshbavani15@gmail.com

முன்னுரை

மயில மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் மீது பல்வேறு இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளது. அந்த வகையில் பிள்ளைத்தமிழ் என்பது பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகப் பாவித்துப் பாடக் கூடியது. முருகன் என்றாலே அழகு என்பது பொருள். முருகப் பெருமானை குழந்தையாகப் பாவித்து வைத்தியநாத தேசிகர் பிள்ளைத்தமிழ் ஒன்றை இயற்றியுள்ளார். இந்நூலில் பத்துப் பருவங்கள் உள்ளன. அவற்றில் முதல் பருவமான காப்புப்பருவம் பற்றியும், முருகனின் சிறப்புகள் பற்றியும் பேசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், புலவர் பெருமக்கள், அரசர்கள், புரவலர்கள் மற்றும் அவர் அவர்கட்கு உகந்தவர்கள் ஆகியோரைக் குழந்தையாக உருவகித்துக் கற்பனை பல அமையப் பாடப்படுவது பிள்ளைத்தமிழாகும்.

கடவுள் மீது காமம் கொண்டு பாடுவதும் கைக்கிளை. கைக்கிளையின் புறம் பாடாண் திணை ஆகையால் கடவுள்மீது காமம் கொண்டு பாடுவதும் பாடாண் திணை. இதில் கடவுளைக் குழந்தை வடிவமாக்கிப் பாடும் மரபும் உண்டு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

காமப் பகுதி கடவுளும் வரையார்

ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர். (தொல். புறத். 23)

குழவி மருங்கினும் கிழவது ஆகும். (தொல்.புறத்.24)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

காப்புப் பருவம்

காப்புப் பருவம் என்பது பிள்ளைத்தமிழில் வரும் முதல் பருவமாகும். இதில், குழந்தை பிறந்த இரண்டாம் மாதத்தில், நோய்கள் வராமல் காக்க வேண்டும் என கடவுள்கள் மற்றும் பிற தேவர்களைப் பிரார்த்தித்து வேண்டிக் கொள்வர்.

முருகன் வள்ளியை எவ்வாறு திருமணம் செய்தான்

முருகப்பெருமான் குறவர் குலத்தில் பிறந்த வள்ளியை எவ்வாறு திருமணம் செய்து கொண்டார் என்பதை வைத்தியநாத தேசிகர் மிக அழகாக எடுத்துக்காட்டுகிறார். அவளது கொவ்வைக்கனியும் பவளம் போலும் இதழ்களில் பெருகும் ஊறலைப் பருகப் பொய்யாகக் கிழக்கோலம் மேற்கொண்டார். பசி எனச் சொல்லி தேனும் தினைமாவும் தரச் சொல்லி உண்டார். தாகம் எனச் சொல்லிச் சுனைநீர் வேண்டி நின்றார். அவளோடு தொடர்ந்து பழக வேண்டும் என்பதே அவர் விருப்பமாக இருந்தது என பிள்ளைத்தமிழில் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்.

..... குற மடக்கொடிப்
பைந்தொடிப் பேதை நனியிற்
பாயாத வேங்கையாய் நீழல்செய் தவள்கனிப்
பவளவா யூறல் பருகக்
கள்ளங் கொளுங்கிழக் கோலமேற் கொண்டு.. (ம.மு.பி.காப. பா. 1

என்ற பாடலடியின் மூலம் காணமுடிகின்றது.

முருகனின் செயல்கள்

முருகனின் வீரச்செயல்கள் பல இருந்தாலும் ஒவ்வொரு புலவர்களும் அவற்றை தங்களின் புலமைக்கு ஏற்ப பாடல்கள் பாடியுள்ளனர். அந்த வரிசையில் வைத்தியநாத தேசிகர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

உலகம் முழுவதையும் ஒரு நொடியில் வலம்வரும்படியாக மயிலைச் செலுத்தக் கூடியவர். ஆறுமுகங்களைக் கொண்டிருப்பவர். அடியவர்களுக்கு உற்ற துணையானவர். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர். கடல் வற்றுமாறும் சூரபதுமன் கலங்குமாறும் வேலாயுதத்தை ஏவியவர். இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரனாரின் உரையே சிறந்தது எனத் தெளிவித்தவர். பழநி மலையில் வீற்றிருக்கும் அரசர் எனப் பலவாறு உவமையாக எடுத்துக்காட்டுகின்றார்.

அவனிமுழு வதுநொடியில் வருகலப மயில்கடவு
மறுமுகனை யுறுதுணையை வண்கதிர்ச் சேப்பனை
((ம. மு. பி. கா. ப. பா. 4)

என்ற அடிகளின் வாயிலாக முருகனின் செயல்கள் அறியமுடிகின்றது.

முருகனைக் கடலோடு ஒப்புமைப்படுத்துதல்

முருகப்பெருமான் எத்தகு பொருளுக்கும் ஒப்புமையற்றவர் ஆதலால், வைத்தியநாத தேசிகர் கடலோடு முருகனை ஒப்புமைப் படுத்திக் காட்டியுள்ளார்.

கடலில் வாழும் மீன்கள் அழிவுடையது. முருகன் அழிவற்றவன். கடல் முழு நிலவு நாளில் பொங்கும். ஆனால் முருகனோ மக்களைத் தவியான். கடல் கதிரவன் ஒளியால் வேறுபடும். முருகன் கதிரவன் ஒளியால் வேறுபடாதவன். கடல் தன்னை அணுகியவர்க்கு அமுதை அளிக்கும். ஆனால் முருகனோ, தன்னை நாடி வரும் அடியார்களின் நெஞ்சில் அமுதூறச் செய்பவன். கடலோடு இத்தகு மாறுபட்ட தோடு மட்டுமின்றி, சூரபதுமனுக்கு உதவிய காரணத்தால், அதனோடு மாறுபட்டு வேல் எறிந்தவன் ஆவான் என்று பலவாறு கடலோடு ஒப்புமைப்படுத்தி முருகனின் சிறப்பினை உலகறியச் செய்திருக்கிறார்.

கேடுமீ னமுமடா துவாபட்டு வட்டாது
கிட்டினர்க் கமுத முறிக்
கெம்பீர முற்றாறு முகமருவி மணிவெயில்.... (ம.மு.பி.கா.ப.பா. 5)

என்ற பாடலடி நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

யாவர்க்கும் அஞ்சாத முருகப்பெருமான்

எண்ணற்ற தேவர்களையும், எட்டுத்திசையில் உள்ளோரையும், திருமாலையும், பிரமனையும், பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும், தில்லையில் நடனமாடுகின்ற சிவபெருமானையும், பெரும் மலைப் போன்றும், பெருங்கடல் போன்றும் தன்னை எதிர்த்துப் போரிடச் சேனையுடன் வந்த இந்திரன் எனப் பலரும் கண்டு அஞ்சும் முருகப்பெருமான் மயிலமலையில் சிறப்பாக வீற்றிருக்கிறார் என்பதை,

அலகிலும் பருமும்பர் பொற் காக்களு
மகிலவண்டமு மெண்டிசைத் தோர்களும்.....(ம.மு.பி.கா.ப.பா. 9)

என்ற அடியின் வாயிலாக முருகப்பெருமானைப் பற்றி தெரிய முடிகின்றது.

முடிவுரை

இவ்வாறாக, மயிலம் முருகன் பிள்ளைத்தமிழில் பத்துப் பருவங்களாகப் பிரித்து முருகனின் வளர்ச்சி நிலைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறுகின்றார். அவற்றிற்கு முதல் பருவமாக விளங்குவது காப்புப் பருவமாகும். அதாவது, முருகப்பெருமானைக் காக்க வல்ல இறைவனை எடுத்துக் கூறி, அதற்கும் முதன்மை யானவராகத் திகழ்பவர் ஆவார் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக காணமுடிகின்றது.

துணைநூற் பட்டியல்

1. வ. வைத்தியநாத தேசிகர், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், மயிலம் பொம்மபுர ஆதினம், மயிலம்.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. மு. அருணாச்சலம், தமிழ் இலக்கிய வரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி.

பாசத்தை வென்ற சிவஞானி

முனைவர் ஜெ. சந்திரிகா
உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணாநகர், சென்னை-600040.

முன்னுரை

உலகில் பல்வேறு சமயங்கள், மனிதர்களின் மனம், வாக்கு, செயல் ஆகியவற்றை நல்வழியில் கொண்டுச் செல்ல கற்பித்து அவர்களைப் பக்குவப்படுத்துகின்றன. இவ்வாறு மானுடத்தை உய்விப்பதற்கென்றே சிறந்த கொள்கைகளை வகுத்தும் பகுத்தும் தொகுத்தும் அளித்த சமயம் வீரசைவம்.

மானிடரே தெய்வநிலை ஆகின்ற
மறுபிறப்பும் காணாத வீரசைவம்
சிவனாரின் சிவாயநம மந்திரமே
சிவனியத்தின் கருமூலம் வீரசைவம்

எனும் சிறப்புடைய வீரசைவசமயத்தின் ஞானாசிரியராக எழுந்தருளியவர் சிவஞான பாலய தேசிகர். மயிலை முருகனின் திருவருளையும் ஸ்ரீ பாலசித்தரின் குருவருளையும் பெற்றவர். கயிலை மலையிலிருந்து அனைவருக்கும் காட்சி கொடுத்த சிவபெருமான், தன்னை நாடிவரும் அன்பர்க்கு மயிலை மலை மீது சிவஞானி என்னும் வள்ளலாக வீற்றிருந்து அருளைப் பொழிகிறார் என்பதை,

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல்
(சிவ.பா.தே.நெஞ்.தூது.கண்ணி.28)

என நல்லூற்றூர் சிவப்பிரகாசசுவாமிகள் பாடியுள்ளார். புறப்பகையை வெல்லுதலைக் காட்டிலும் ஐம்புலன்களையும் அடக்கி, அகப்பகையாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை வெல்லுதல் உயர்ந்த வீரமாகும். இத்தகு வீரத்தை உலகுக்கு உணர்த்த வீரசைவத்தின் பேரொளியாய்த் தோன்றியவர் சிவஞானதேசிகர். பதி, பசு, பாசம் எனும் இம்மூன்றனுள் பாசத்தை வதைக்கும் பணியை மேற்கொண்டு பேரின்பத்தை அருளும் ஞானவள்ளலாக சிவஞானதேசிகர் திகழ்வதை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

பரணிக்கோர் பரம்பொருள்

புறத்துலகில் நடக்கும் போரைப்பற்றிப் பாடும் சிற்றிலக்கியம் பரணி. இதற்கு மாறாக அகப்போரைப் பற்றிப் பாடும் பரணி இலக்கியமாகப் படைக்கப்பட்டது பாசவதைப் பரணி. இந்நூலில் மனிதனின் குணங்கள் பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளன. இப்பரணிநூலுள், பாசம் - பாசமன்னன், புல்லறிவு - துன்மதி எனும் மந்திரி, காமம், கோபம், உலோபம், மோகம், அகங்காரம், மாற்சரியம் ஆகிய உட்பகை விளைக்கும் குணங்கள் ஆறு - பாசமன்னனின் படைத்தலைவர்கள், ஞானம் - சிவஞான தேசிகருடைய தண்டநாயகர், நிருபகம், பொறை, சந்தோடம், விவகார பராமுகம், சாந்தம், சீலம் ஆகியன - தண்டநாயகரின் படைத்தலைவர்கள் என உருவகித்துப் பாடப்பட்ட முறை சிறப்புக்குரியது.

தீய குணங்களைக் கொண்ட பாச மன்னனின் பழிபாவங்களைக் களைய சிவபெருமான், சிவஞான தேசிகராக மயிலத்தில் அவதரித்தார். அகங்காரம் கொண்ட பாசமன்னனின் படைகளுடன் தேசிகரின் தண்டநாயகரான ஞானவிநோதர் படைகள் மோதியதில் மன்னனைத் தவிர அனைவரும் மாய்ந்தனர். இறுதியில் ஞான விநோதரை வணங்க மறுத்த மன்னனின் முன் வந்த அவர், தனது திருவடியை வைத்து ஞானம் பெற வைத்தார். அவனுடைய படைகளும் ஞான நிலையை அடைந்தன. உண்மை ஞானியின் இயல்புகளும் அறிவற்றவர் நடத்தையையும் தெளிவாக உணர்த்தும் பாசவதைப் பரணி, பாசத்தை வென்று ஞானத்தைப் போதிக்கும் சைவச்சித்தாந்த நூலாக உள்ளது. பரம்பொருளாகிய சிவபெருமான், சிவஞானதேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி எனும் இரண்டும் திகழ்கின்றன எனலாம்.

இருவராய் ஒருவர்

குணங்களை மையமிட்டு அமைந்த பாசவதைப் பரணியில் சிவஞானியின் குணநலன்கள் வெவ்வேறு விதங்களில் சுட்டப் பட்டுள்ளன.

ஆவதும் அழிவதும் அடைவதும்
அகல்வதும் இகல்வதும் அருள்வதும்
போவதும் வருவதும் இன்றிய
பொருளை மணந்தவர் திறமினோ (பா.ப.51)

ஆக்குதல், அழித்தல், பெறுதல், இழத்தல், வெற்றி, தோல்வி, போதல், வருதல், அருளுதல் எனும் தன்மைகள் இல்லாதவர் இறைவன். இதனையே

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய், அருள் தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பில் (சிவபுரா.9)

என மாணிக்கவாசகரின் கருத்தாகவும் பார்க்க முடிகிறது. இறைவனே ஞானியாக அவதரித்ததால் இறைவனின் குணங்கள் அனைத்தும் சிவஞானியிடம் இருப்பதில் வியப்பில்லை. ஊரும் உயர்ந்த நாடும் குலமும் உறவுமுறைகளும் இல்லாதவன் சிவகுருநாதன். (பா.ப.54) இக்கருத்தினைத் திருவெம்பாவையில்,

ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவரைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் (திருவெம்.164)

என்பதில் காணலாம். ஆணவம் கன்மம் மாயை எனும் இம்மூன்று மலங்களை நீக்குவதற்கு வந்த ஞானசூரியனாக விளங்குபவர் சிவஞானதேசிகர். பரிபூரண ஞானத்தை அருளும் நெறியினைக் காட்டுபவர். பிறப்பு இறப்பொடு மாறுபட்டவர், உள்ளத்துக்குள் மெய்யொளியைக் கண்டவர், நல்வினை தீவினை எனும் இருவினைகளும் நீங்கப் பெற்றவர், வெம்மைமிக்க பிறப்பு எனும் பகையை வென்றவர் எனும் அடையாளங்களை உடையவர் சிவஞானதேசிகர். சிவபெருமானுக்குரியதாகச் சொல்லப்படும் குணநலன்கள் அனைத்தும் சிவஞானியாரிடம் இருக்கின்றன. இதுவே இருவரும் வேறல்ல ஒருவரே என்பதை மெய்ப்பிக்கின்றது.

சிவஞாணியின் வருகைச் சிறப்பு

மூடப்பழக்க வழக்கங்கள் களைய தனது திருக்கரங்களால் அருள் வழங்குபவர் சிவஞானி. அவர், தத்துவ ஞானநூலை ஆராய்ந்து சமதர்ம நெறியில் நிற்பவர். உலகமக்களுக்கு நன்மை செய்வதே தனது பணியென வாழ்ந்து காட்டியவர். இதனையன்றி வேறொன்றின் மேல் தனக்கு இச்சை இல்லையென்று தவவாழ்வு வாழ்பவர். அவர் எப்படி வருகை புரிந்தார் என்பதைப் பாசவதைப்பரணி அழகுற எடுத்துக்காட்டுகிறது. அஞ்ஞன் அழியும்படி தமது திருத்தோள்களில் பொருந்திய ஞானமாகிய வாகுவளையம் தாங்கி வந்தவர். தூய்மை, ஞானம், இன்ப ஆனந்த முத்திரை பொருந்திய அழகிய விரல் தாங்கி வந்தவர். எங்கும் வாசனை மணக்க, மெய்ஞ்ஞானம் மிக்கு குளிர்ச்சி பொருந்திய குங்குமாதி குளிர் சந்தனம் பூசி வந்தார் சிவஞானி.

குணம் அறாது குலவுகின்ற மெய்ஞ்ஞானமாம் வாசம் மாறாத மலர்மாலையைச் சூடி வந்தவர் சிவஞானியார். அஞ்ஞானமாகிய பாசம் குலைவுபட மெய்ஞ்ஞானமாகிய வீரச்சங்கிலி பூண்டு விருப்பத்தோடு வந்தார். குற்றமில்லாத அருளைப் பொழிகின்ற ஞானமாம் மாசில்லாத மணிவடம் தாங்கியே வந்தார். துன்பமில்லாது முழுவதும் ஆனந்த கடலாகி, சங்குகள் எங்கும் முழங்க தழைய வந்தார். மாறுபாடற்ற கொடிகள் அசைய ஞானமே வடிவாக விண்ணிலிருந்து மண்ணில் இறங்கிவரும் சிவஞானி, எல்லைகளைக் கடந்த பேரருளாளர். கடக்கமுடியாத பிறவிக் கடலைக் கடப்பதற்குப் படைகளோடு கூடிய பதாகினி சூழ வருகை புரிந்தார். வலிமை மிக்க மலை போன்ற பேராசையைக் கடந்து உலகம் வியக்கும்படி மாட்சிமையோடு சிவஞானதேசிகர் விளங்கினார் என்கிறது பாசவதைப்பரணி. யானைத்தோல், புலித்தோல், தந்தம், மான், மழு முதலிய சுமைகளை நீக்கிவிட்டு சிவபெருமான், மானிட உருவம் கொண்டு எழுந்தருளினார் என்பதை சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழும் கூறுவது இங்கு ஒப்புநோக்கற்குரியது.

சிவஞானியின் திருவடித்தீட்சை

பாசவதைப்பரணியில் சிவஞானியின் திருவடிகளின் சிறப்பு பலவிடங்களில் சுட்டப்படுகிறது. பாசக்கயிற்றோடு வந்து உயிரைக் கவர்கின்ற காலனை அழிக்க சிவந்த திருவடிகளோடு சிவஞானி வந்தார். மிக்க துன்பமுற்று அங்கு தேவர்களெல்லாம் தேடிக் கொண்டிருக்க, எங்கும் அடியவர் போற்றும் வண்ணம் மண்ணுலகிற்கு அருள் செய்ய இறங்கிவந்தார் சிவஞானி. பழியுற்ற பாச மன்னனால் உலக மக்கள் படும் துன்பத்தைக் கேட்ட அவர், கருணைமழை பொழிகின்ற தமது திருக்கடைக்கண் சாத்தி திருவடித் தாமரை மலர்களை அடியார் பெருமக்களின் தலையில் பொலிய வைத்தே நின்றார். அவரது திருவடிகள் பிரமனும் நாராயணனும் அறியாதவை.

எம்பிரான் எங்கோமான் எம்களையன்
எமைஆளும் சிவஞான குரவன் என்னும்
தம்பிரான் அடி சூடப்பெற்றார் அன்றோ
தற்சொரூப ஆனந்தம் தனைப் பெற்றாரே (பா.ப.456)

சிவஞானக் குரவனின் திருவடி சூடப்பட்டவரே ஆன்ம தரிசனம் அடைந்து ஆனந்தம் பெற்றவர் ஆவார். தேவர்களுக்கும்

எட்டாத சிவஞானியின் திருவடித் தாமரைகளை நீங்காமலிருப்பவர், இந்த மாய உலகிலிருந்து விடுபட்டவர் ஆவார். திருவடிகளைப் பற்றாது யார் இருக்கிறார்களோ அவர்கள் மாயையில் சிக்கி உலகியலுக்குள் மூழ்கிக் கிடப்பர். சிவஞான குருவின் திருவடி பற்றியவர்க்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, தவம், மென்மை, வன்மை முதலிய எவையும் இல்லை. திருவடியைப் பற்றியவர் ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே நினைப்பர். கருணை நிறைந்த ஆலயமாகத் திகழ்வது குருவின் திருவடி. அத்திருவடியை விருப்பத்துடன் முழுமனதுடன் பற்றியவர்க்கு குலம், குணம், குறி, கோலம், கரணம், குளிர்புனல், நலம், வழி, ஆச்சிரமம் போன்ற ஏதும் இல்லை. இவையனைத்தும் கடந்த ஏகாந்த நிலையை உறுதியாக அடைவர் என்று சிவஞானியின் திருவடிச் சிறப்பு பாசவதைப்பரணியில் சுட்டப்படுகிறது.

முடிவுரை

மனித உடலுள் அழியாது இருக்கும் மெய்ப்பொருளை அறிந்து கொள்ளும் மெய்யுணர்வை உண்டாக்குபவர் சிவஞானியார். அத்தகு சிவஞானியார் பாசத்தை வென்று உலக உயிர்கள் ஆன்ம தரிசனம் பெற அவதரித்த சிறப்பினை பாசவதைப்பரணி தெளிவாக உணர்த்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. *டாக்டர். உ.வே.சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), வைத்திய நாத தேசிகர், பாசவதைப்பரணி, சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர், 1933*
2. *வைத்தியநாத தேசிகர், பாசவதைப்பரணி, மயிலம் பொம்மபுரம் ஆதீனம், 2024*
3. *நல்லாவூர் ச. திருநாவுக்கரசு, சிவஞானியின் மகிமை, மயிலம் பொம்மபுரம் ஆதீனம், 2024*
4. *நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், சித்தாந்த சிகாமணி, மயிலம் பொம்மபுரம் ஆதீனம், 2023*

வீரசைவ நெறியும் பொம்மய பாளைய பால சித்த மரபும்

முனைவர் ப. வனிதா
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணா நகர் சென்னை-40
9600074338, vanitharavivishwa@gmail.Com

சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அருளிய நவமணி மாலை மற்றும் உயிர் வருக்க மணிமாலை உணர்த்தும் வீரசைவ நெறி பற்றியும் பொம்மபுரம் பால சித்த மரபு பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

பாலசித்த மரபும் ஆதீன வரலாறும்

"சீலமின்றி நோன்பின்றிச் செறிவே இன்றி அறிவின்றித் தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனே மாலுங் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக் கோலங் காட்டி ஆண்டானைக் ' கொடியேன் என்றோ கூடுவதே."

நற்பண்பும், நோன்பும், அறிவும் இல்லாமல், தோல் பொம்மையைப் போலச் சுழன்று விழுந்து கிடக்கும் மனித இனத்தை, இறைவன் அன்புடன் வழிகாட்டி, ஞானம் தந்து, மேலான உலகத்திற்கு அழைத்துச் சென்று ஆளும் அருளாளன் சிவன். அப்பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம். இத்தகு மரபில் உதித்தவர் பாலசித்தர்.

முக்கண்ணனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் கைலாய மலையின் மேற்குக் கோபுர வாசலில் பாதுகாவலராக இருக்கும் சிவகணங்களின் தலைவனான சங்கு கன்னர் சிவனின் ஆணைப்படி திருநீறு, அக்கமணிமாலை, இட்ட லிங்கம், காவியாடை தரித்து அலைநிறைந்த கடல் நடுவே வீற்றிருக்கும் பொம்ம பாலையத்தில் குரு வடிவில் அவதரித்துச் சைவநெறி வளர்த்து வந்தார். இச்சூழலில் தெலுங்கு தேச சீசைலத்தில் நிலைபெற்றுள்ள இலிங்கத்தில் உதித்தவர் எகோராம ஆராத்தியர். வீரசைவ நெறி வளர்த்த பஞ்சாச்சரியர்கள் ஐவரில் ஒருவர்.

பாலசித்தரை பாலயன் எனக் கூறுவது காரணப்பெயராகும். பால்+அயன் (அயன் - உணவு). பால் உணவையே உண்பவர் என்பதும் இன்றும் சிவனடியார்கள் பால் உணவையே

அருந்துவார்கள் என்பது நூல்வழிச் செய்தியாகும். மேலும் கள்ளிச்செடி நிறைந்த மயிலமலையில் கள்ளிப் பாலை விரும்பியே கொண்டார் என்பதும் தல வரலாறாகும்.

பாலசித்தரைக் குருவாகக் கொண்டு அவர் வழிவந்த சிவஞான பாலய சுவாமிகள் மயிலமலையில் அமர்ந்தமையின் அவர் சிவபெருமானாகவே கருதப்படுகிறார். சிவனின் மறுபிறப்பாக அமர்ந்திருக்கும் சிவஞான பாலய சுவாமிகள் அவதரித்த பொம்மபுரம் மற்றொரு கைலாயமாகவே போற்றப்பட்டு வருகிறது. மயிலமலையிலும் பொம்மய புரத்திலும் மாறி மாறி எழுந்தருளும் சிவஞான பாலய தேசிய சுவாமிகளின் பெருமையையும், புகழையும் போற்றிப்பாடுவதாக நவமணி மாலையும் உயிர் வருக்க மணிமாலையும் விளங்குகின்றன.

வீர சைவ நெறி

- சிவலிங்கம் சிவபெருமானின் அருவுருவத் திருமேனி,அது ஞானசோதி வடிவானது. பீடம் சக்தியையும் இலிங்கம் சிவத்தையும் குறிப்பது."பரமசிவம் என்பதே அங்கமாகிய உயிராகவும் லிங்கமே இறை வடிவாகவும் போற்றுகின்ற நிலையை "அங்கலிங்க நிலை" எனலாம்.சிவனடியார்கள் உயிரை இறையோடு கலந்து, காவியுடை உடுத்தி, திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து உடம்பாலும் தன்னை அடியாராக மாற்றிக்கொள்வதும் ஒரு வித தியான நிலையாகும்.
- காவியுடை வறுமை,பில்லி, சூனியம் நீக்கும்.
- திருநீறு சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது. சிவச் சின்னங்களில் ஒன்றாகிய திருநீறு அணிதலாகும். "திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம். இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு. தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தலினால் விபூதி எனவும், ஒளியைக் கொடுப்பதினால் பசிதம் எனவும், பாவங்களை எரித்து நீராக்குவதால் பசுமம் எனவும். தன்னைத் தறித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால்- காப்பதனால் இரட்சை எனவும், உயிர்களது மலத்தை நீக்குதலால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது".
- "உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள் படும். திரிபுரத்து அசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட

துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டபோது, சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்திய மணியே உருத்திராக்கம் என்பர். எனவே, ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங் கருணையைச் நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகின்றது" .

- மூவகை அடியார்கள்; இறையாகிய சிவத்தைப்போற்றும் அடியார்கள் மூவகைப்படுவர்.

  1. நிலையாக ஓரிடத்தில் மடாலயம் அமைத்து சைவ நெறியைப் போற்றிப் பாடுபவர்கள் "சுயம்" என்பார்.
  2. பல பதிகளுக்குச் சென்று அங்குள்ள தலங்களில் அடியவர்க்குத் தொண்டு செய்பவர்கள் "சரம்" என்பர்
  3. பல பதிகளிலுமிருந்து தம்மைத் தேடி வரும் அடியவர்க்குத் தொண்டு செய்பவர்கள் "பரம்" என்பர். இம்மூவகை அடியார்களும் மயில மலையிலும் பொம்ம புரத்திலும் சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றி பரவுகின்றனர்.

- தத்துவமசி; தத்--அது, துவம்--நீ, அசி--ஆனாய். ஆம் நீ லிங்கமானாய் அதனால் உனை வணங்குகிறோம் என அடியார்கள் போற்றுகின்றனர்.

- ஐந்தெழுத்து மந்திரம்; "சிவாயநம என சிந்தித் திருப்பவர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" . சி--சிவன், வா--சக்தி ,ய--உயிர், நம --உயிரைப்பற்றிய மலங்கள் என ஐந்தெழுத்து மந்திரம் நம் மனத்தை அமைதிப்படுத்தி அவனோடு ஐக்கியமாக்குபவை.

- குரு லிங்க சங்கமம்; "குரு என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றுபவர்" என்பது பொருளாகும். இவ்வாறு சிவஞான பாலைய தேசிகேந்திர சுவாமிகள் அருளிய இவ்விரு மணி மாலைகளும் குருமரபில் தோன்றி பத்தொன்பதாம் பட்ட சந்நிதானத்தை பேருடனும் புகழுடனும் போற்றிக் காத்திட்ட சிவஞான பாலைய சுவாமிகளைப் போற்றி வணங்குவதாகவும் மயில மலை வரலாற்றினையும், பொம்மபுர ஆதீனத்தின்

மேன்மையயும் குருமரபினைப் பேணுவதாகவும் வீரசைவ நெறியைப் பரவுவதாகவும் விளங்கும் அற்புதக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மேலும் பன்னிரு உயிர் எழுத்துக்களை முதல் எழுத்தாகக் கொண்டிருக்கும் உயிர் வருக்க மணிமாலை லிங்கமாகியவானின் அங்கத்தை அலங்கரிக்கும் ஆபரண மாக விளங்குவதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. திருவாசகம் -மாணிக்கவாசகர்
2. ப.41, சைவ சமயம், கொழும்பு விவேகானந்தா சபை வெளியீடு.
3. ப.34, சைவ சமயம், கொழும்பு விவேகானந்தா சபை வெளியீடு.
4. ப.36, சைவ சமயம், கொழும்பு விவேகானந்தா சபை வெளியீடு.
5. பா .15, நல்வழி, ஔவையார்
6. ப.40, சைவ சமயம், கொழும்பு விவேகானந்தா சபை வெளியீடு.

திருப்பள்ளியெழுச்சியில் தொன்மம்

முனைவர் சி. பாரதி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5.
அலைபேசி எண் : 80563 84275
msbharathislm@gmail.com

முன்னுரை

திருப்பள்ளியெழுச்சி என்பது இறைவனைத் துயில் எழுப்புவதாகவும் நம்மில் ஆன்மீக விழிப்பின்றி உறங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாவைத் துயிலெழுப்பி இறைவனின் கருணையை உணரச் செய்வதாகவும் பாடப்படும் பாடல்கள் ஆகும். 'சுப்ரபாதம்' என்பது இதன் இணையான சமஸ்கிருத சொல்லாகும். திருப்பள்ளியெழுச்சியாவது கடவுளரையும் பெரியோர்களையும் படுக்கையில் இருந்து கண் விழித்தெழுமாறு பாடப் பெறுவதாகும். கடவுளர்மீது பத்துப் பாடல்கள் பாடுவது வழக்கம். இதற்கு இவ்வளவுதான் பாடல்கள் என்று எல்லையில்லை. இங்கு அடிகளார் நான்கு பாடல்கள் பாடுகின்றார்.

தொன்மம்

தொன்மம் (Myth) என்பதற்கு பழமை என்று பொருள். மேலும் இது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினர் உண்மை என்று நம்பும் பழங்கதைகள், புராணக் கதைகள், அல்லது செவிவழிக் கதைகளின் தொகுதியாகும். இந்த தொன்மங்கள் இயற்கை நிகழ்வுகளையும், மனித வாழ்வின் இயல்புகளையும் விளக்குவதோடு, அடுத்த தலைமுறைக்கு அறிவுரைகளையும் தகவல்களையும் கடத்தவும் உதவுகின்றன.

தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.
(தொல்காப்பியம்,செய்யுளியல்,நூ.எண்.234)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதன்மூலம் தொன்மை என்றால் பழமை என்பதாகும்.

தொன்மத்தைப் பற்றி விளாடிமிர் பிராப் அவர்கள் "தெய்வத் தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாகும்; அவர்களையும் அவர்களைப் பற்றிய

இக்கதைகளையும் உண்மையென்று மக்கள் நம்புகின்றனர்." எனக் குறிப்பிடுகின்றார். (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 150)

திருமாலின் சிறப்பு

பாற்கடலில் பாம்பின் மேல் பள்ளி கொண்டு இருப்பவன். வைணவக் கடவுளாகத் திகழ்பவன்.

காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கற்
கனலருகி னரிசனப்பொற் றூசுமிசை போர்த்துக்
கோல்தொடி மென்முலை மடந்தைதனை மார்போ டணைத்துக்
குளிர்குடையா னுந்திமிடைக் கண்டுயில்வோ னெழுந்து
போற்றிநின்தெதிர்குறிப்பச்சங்கொடும்வந்துற்றான்
(திருப்பள்ளியெழுச்சி,பக்.11-12)

என்று கூறியுள்ளார்,இதன்மூலம் வீசும் காற்றுக்கு மறைப்பைச் செய்கின்ற படத்தோடு கூடிய?ஆதிசேடன் பாம்பின் மேல் படுத்து உறங்கக் கூடியவன்.குதிரைமுக வடிவாக இருக்கின்ற நெருப்பின் அருகில் மஞ்சள் நிறப் பொன்னாடையினைப் போர்த்திக் கொண்டு இருப்பவன். திரண்ட வளையலை அணிந்தும்,மென்மையான முலைகளைக் கொண்டு இருக்கின்ற திருமகளினை மார்போடு அணைத்தவன். குளிர்காற்றுக்கு வருந்தாதவன். திருப்பாற் கடலில்கண் உறங்குபவனாகிய திருமாலும் உறக்கத்தை விட்டு எழுந்து வந்து,உன்னை வணங்கி எழுப்புவதற்காக பாஞ்சசன்னியம் எனும் சங்கொடு வந்து நிற்கின்றான்.என்பதாகும்.இறைவன் மனிதனை எழுப்ப வருவதாகப் பாடியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

நான்முகன்

நான்முகன் என்பவர், நான்கு முகங்களை உடைய, இந்து மதத்தின் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவைக் குறிக்கும் ஒரு சொல். பிரம்மா இந்த உலகத்தைப் படைக்கும் தொழிலைச் செய்பவர், மேலும் அவர் படைப்பின் தொழிலுக்கு அதிபதியாகத் திகழ்பவர். விஷ்ணுவின் நாபிக்கமலத்திலிருந்து தோன்றிய தாமரை மலரின் மீது பிரம்மா தோன்றியவர்.

புண்டரிகன் கரகநீர் கொண்டுதவ நின்றான்
(திருப்பள்ளியெழுச்சி,பக்.11-12)

இந்த பாடலடிகளின் மூலம் திருமாலின் மகனான நான்முகனும் கரகநீரைக் கொண்டு வந்து பாத பூஜை செய்வதற்காகக் காத்து நிற்கின்றான் என்று கூறப்படுகின்றது.

நம்பியாரூரன்

தேவாரத்தைப் பாடியவர். இவருக்கு இரு மனைவியர்கள். ஊடல் மிகுதியால் இறைவனாகிய சிவபிரான் மனைவியார்பால் தூது சென்றவன்.

தூதுவிடு நம்பிவரு கிலன் (திருப்பள்ளியெழுச்சி, பக்.14-15)

இதன் மூலம் உன்னை எழுப்புவதற்கு பரவையாரிடம் தூது விட்ட நம்பியாரூரனும் வரவில்லை என்று கூறியுள்ளார்.

சாக்கிய நாயனார்

சைவ சமயத்தவரால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

சிலையா லெறிந்த தொண்டனிலை (திருப்.யெழுச்சி, பக்.14-15)

இவற்றின் மூலம் உன்னைத் துயிலிருந்து எழுப்புவதற்காக சிவபிரானைக் கல்லால் எறிந்து வழிபட்ட சாக்கிய நாயனாரும் வரவில்லை என்பதனை அறியமுடிகின்றது.

விசயன்

வில்லுக்கு விஜயன் என்று மகாபாரதத்தில் போற்றப்படுபவன். பஞ்ச பாண்டவர்களில் ஒருவன். குந்தியின் மகன்

விசயனும்வில்லோடும் வந்தா னில்லை
(திருப்பள்ளியெழுச்சி, பக்.14-15)

என்று கூறுவதிலிருந்து அர்ச்சுனனும் உன்னை வழிபடுவதற்காக வில்லோடு வரவில்லை என்பதாகும்.

இயற்பகையார்

சோழ நாட்டில் காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்தவர்.இவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்பவர்.

ஏதமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தா ரில்லை
(திருப்பள்ளியெழுச்சி, பக்.14-15)

என்று கூறியுள்ளார். இதன் மூலம் உன்னை உறக்கத்தில் இருந்து எழுப்புவதற்காக குற்றமில்லாத இயற்பகையார் உறவினர்களோடு வரவில்லை என்று உணர முடிகின்றது.

பாண்டிய மன்னன்

நினை மண்சுமவென் றொருபிரம்பா லடித்தோன் போதிலன்
(திருப்பள்ளியெழுச்சி, பக்.14-15)

இந்தப் பாடலடிகளின் மூலம் வைகையாற்றில் வெள்ளப் பெருக்கை அடைப்பதற்காக மண் சுமக்க வந்திருந்த (சிவபிரான் மனிதனாக வந்திருந்த காட்சி) இறைவனைப் பிரம்பால் அடித்த பாண்டியனும் உன்னைத் துயில் எழுப்புவதற்காக வரவில்லை என்று நூலாசிரியர் கூறியுள்ளார்.

அடியவர்கள்

நின் றிருவடியிற் போதுகள் தூய்ப் பரவிப்
போற்றலுறு மடியவரே பொருந்தினரெம் மருங்குஞ்
(திருப்பள்ளியெழுச்சி, பக்.14-15)

என்று கூறியுள்ளார். இதன் மூலம் உன்னுடைய திருவடிகளின் அருகில் மலர்களைத் தூவி வழிபாடு செய்வதற்காக போற்றுவதற் குரிய அடியவர்கள் அனைவரும் நான்கு திசைகளிலும் காத்துக் கொண்டு இருக்கின்றனர் என்பதனைச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளதனைக் காண முடிகின்றது.

தொகுப்புரை

திருப்பள்ளியெழுச்சி நூலில் நான்கு பாடல்கள் உள்ளன. அவை சிவஞான தேசிகனை உறக்கத்திலிருந்து எழுப்புவதற்காக துயிலெடை நிலையில் பாடப்பட்ட பாடல்களாகும். இதில் பாற்கடலில் திருமகளோடு பள்ளி கொண்டு இருக்கின்ற திருமாலும் சங்கோடு வந்து ஊதி துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது.

திருமாலின் மகனான நான்முகனும் கரகத்தில் நீர் கொண்டு பாதபூஜை செய்யக் காத்திருக்கிறான் என்று கூறப்படுகின்றது.

நம்பியாரூரன், சாக்கியநாயனார், விசயன், இயற்பகையார், பாண்டிய மன்னன், அடியவர்கள் ஆகியோரும் துயில் எழுப்ப வரவில்லை என்பதிலிருந்து திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் அனைத்தும் சிறப்பிற்குரியதாகக் கருதப்படுகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. இராஜேந்திரன்குமாரசிவ, (பதிப்பாசிரியர்), மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம்.
2.. திருஞானசம்பந்தம், ச., தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.
3. சக்திவேல், சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1979.

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அருளிய சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்

முனைவர் மா. வசந்தகுமாரி
முனைவர் மா. வசந்தகுமாரி
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை,
அருள்மிகு அர்த்தநாரீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருச்செங்கோடு.. நாமக்கல் மாவட்டம்.

தமிழ் மொழியின் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தவை இலக்கியங்கள். பழம்பெரும் நூல்கள் பல அச்சுருவாக்கம் பெற்று தமிழ் ஆர்வலர்களுக்குப் பேருதவிப் புரிந்து வருகின்றன. இவ்வகை நூல்கள் யாவும் முன் சுவடிகளில் எழுதப்பட்டனவாக இருந்தவை. பெரும்பான்மை சுவடிகள் வீடுகள், கோயில்கள், மடங்கள், சுவடி நூலகங்கள் ஆகியவற்றில் பாதுகாக்கபடுகின்றன. மேலும் பிற்காலத்தில் அச்சுவடிகளை அச்சு நூல்களாகக் கொண்டு வருதல் இன்றியமையாத பணியாகவும் காலத்தின் தேவையாகவும் இருக்கிறது. அவ்வகையில் மயிலம் பொம்மபுர ஆதீனம் பதிப்பித்து வெளியிட்ட சிவஞான பாலய தேசிகர் பனுவல் திரட்டு என்னும் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் என்னும் பெயரிலான நூல் எதிர்வரும் 19 ஆம் பட்டம் சிவஞான பாலைய சுவாமிகள் நூற்றாண்டு விழா மாநாட்டுப் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மயில மலையில் முருகப்பெருமானுடன் வீற்றிருந்த சிவஞான பாலய சுவாமிகளுக்கு, "சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்" எனும் நூலைப் பாடி வீடுபேறு வாழ்வை அடைவதற்குத் தன்னைச் சிவபெருமான் ஈன்றெடுக்கப்பட்ட நிலையில் தமிழ்க்கடவுள் முருகப்பெருமானின் அருட்சிறப்பினையும் பெருமைகளையும் சிவஞான பாலய சுவாமிகளின் நற்பேறுகளையும் எடுத்துரைப்ப தாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

நூலாசிரியர் வரலாறு

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் 1839 ஆம் ஆண்டு கார்த்திகை திங்கள் 16ஆம் நாள் திருநெல்வேலியில் பிறந்தார். தந்தையார் பெயர் செந்தினாயகம் பிள்ளை, தாயார் பேச்சி முத்தம்மை ஆவார். இவருக்குப் பெற்றோர் வைத்த இயற்பெயர்

சங்கரலிங்கம் என்பதாகும். இவரின் தமிழ்ப்புலமை கருவிலேயே வந்தது. தன்னுடைய ஒன்பதாவது வயதிலேயே தென்காசிக்குப் பக்கத்தில் உள்ள சுரண்டை என்னும் ஊரில் எழுந்தருளி இருக்கும் பூமிகாத்தாள் என்னும் அம்மனைப் பற்றிய பாடலாக,

அமுதம் கடையும் நாள் ஆலம் வெடித்துத்
தீமுதம்எனத் தீஎரித்து சென்ற - தழுதம்

எனத் தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத்தைப் பிடித்துக் காத்ததனால் பூமிகாத்தாள் என்ற இந்த வெண்பா பாடல் இயற்றியுள்ளார். இப்பாடல் தொடங்கி தான் இறைவனடி சேரும் வரையிலான 50 ஆண்டுகளில் நூறாயிரம் பாடல்களுக்கு அதிகமாகப் பாடியிருக்கிறார். தாம் பாடிய பாடல்களைத் தானே ஓலைச்சுவடிகளில் எழுதியும் வைத்துள்ளார்.

படைப்புத் திறன்

தமிழுக்கு எழுச்சியூட்டும் பல சந்தப்பாக்களை சுவாமிகள் இயற்றியுள்ளார். சந்த ஓசையுடன் கூடிய தமிழ்ப் பண்கள் வண்ணங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இத்துறையில் சுவாமிகள் மிகுந்த திறமை கொண்ட காரணத்தால் அவரை வண்ணச்சரபம் என்னும் பெயரால் மக்களால் அழைக்கப்பட்டார். மேலும் தமிழ் இலக்கண நூலான, "அறுவகை இலக்கணம்" என்னும் நூலையும் எழுதியுள்ளார். அருணகிரிநாதர் முதலாக பல அருளாளர்களின் சந்த, வண்ணப் பாடல்களுக்கு இலக்கணம் வகுத்தருளிய நூலே. வண்ணத்தியல்பு எனப்படுகிறது. முன்னோர்கள் இலக்கண நூல்களில் சொல்லப்பட்ட செய்திகளுடன் காலவளர்ச்சிக்கேற்ப வண்ணம், கீர்த்தனை போன்ற இசைப்பாக்களுக்கும் இலக்கணம் வகுத்திருக்கிறார். இதனைப் பற்றிக் குறிப்பிடும் தண்டபாணி சுவாமிகள்,

தொல்காப்பியனா தியர்தாமும் சொற்றா ரிலாச் சூட்சமியல்
நல்கார் வத்தால் நூல்பகரும் அதனைக் காணேன் நானிலத்தில்
வில்கால் வேலன் அருட்டுணையால் யானே விதித்தேன்...

என்று தம்முடைய குருபர தத்துவத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியிடத்து மிகுந்த பற்றுடையவராய்ச் " செந்தமிழே உயர்வென்று சீட்டு எனக்கு தந்தனன் கந்தன்" என்ற தமிழ் அலங்காரம் என்னும் நூலில் மகிழ்ச்சியுடன் கூறியவர். நாட்டில் அயலவர் ஆட்சிக்கும் ஆதிக்கத்திற்கும் மறுத்துக் குரல் கொடுத்தவர். சமுதாய மறுமலர்ச்சியினை விரும்பிப் போற்றியவர். தனக்கென்று

ஒரு நெறியினை வகுத்தமைத்துக் கொண்டு தெளிவாக எடுத்துக்கூறும் திறன் படைத்தவராகவும் முன்னோர் காட்டிய நெறிமுறைகளைப் பின்பற்றி வழிகாட்டியாகவும் விளங்கியவர்.

சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் நூல் அறிமுகம்

பதிகம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி ஒரே யாப்பில் பத்துப் பாடல்களால் பாடப்பட்ட பாடல்களாகும். பதிகத்தின் இலக்கணம் குறித்து,

"பப்பதாம் எத்துறையும் பாடல்பதி கமதே"(168)

என்று சுவாமிநாதம் வரையறை செய்கிறது. ஒரு பொருளை அமைத்து தனிப்பாடல் ஒன்றினைப் பாடிய புலவன் அடுத்துவரும் பத்துப் பாடல்களையும் ஒரே யாப்பினில் பாடுவது இயல்பானது. சங்க இலக்கிய காலத்தில் பதிக இலக்கியம் தோற்றம் பெற்றிருந்தாலும் ஆழ்வார், நாயன்மார்கள் தோற்றத்திற்குப் பின்னரே தமிழில் தனிச் செல்வாக்குடன் இப்பதிக இலக்கியம் உருப்பெற்றது. அந்தவகையில் தண்டபாணி சுவாமிகள் பதிக இலக்கியங்களை அதிகளவில் இயற்றியுள்ளார். இன்று கிடைக்கக் கூடிய இவரின் படைப்புகளில் பாதியளவு பதிக நூல்களாகும்.

சிவஞான பாலைய சுவாமிகள் பதிக நூலின் அமைப்பு

சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் என்னும் இந்நூல் காப்புப் பாடல் ஒன்றும் பதிகப் பாடல்கள் பதினொன்றும் அமையப்பெற்றதாக இருக்கின்றது. நூல் முழுமையும் சிவஞான பாலய சுவாமிகள் குறித்தப் பாடல்களாக அமையப்பெற்றுள்ளன. இந்த ஒரு பதிகத்தில் உள்ள பாடல்கள் வெண்டளைக் கலிப்பா யாப்பு வகையானதாக வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நூலின் கருத்து

தண்டபாணி சுவாமிகள் தான் இயற்றிய சிவஞான பாலய சுவாமிகள் என்னும் இந்நூல் முழுமையும் முருகப்பெருமானின் அருட்சிறப்பினையும் சிவஞானியாகிய பாலய சுவாமிகளின் அருட்சிறப்பினையும் போற்றிப் புகழ்ந்து கூறி முருகனின் அருளானது தனக்கும் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று வணங்கி வேண்டுவதாகப் பாடலினை பாடியிருக்கிறார்.

சிவஞானிக்கோர் பதிகம்

தவஞானத் தோர்பரவும் தண்மயில வெற்பில்
சிவஞானிக் கோர்பதிகம் செப்பிப் - பவவேலைக்(கு)

அப்புறத்து மெய்வாழ் வடைய அரன்ஈன்ற
துப்புறழ்மால் வேழம் துணை

தவத்தால் பெற்ற சிவஞானம் உடையவர்கள் எல்லாம் போற்றுகின்ற குளிர்ந்த மயில மலையில் வீற்றிருக்கும் சிவஞான பாலய சுவாமிகளுக்கு, "சிவஞான பாலய சுவாமிகள் பதிகம்" எனும் பெயரில் ஒரு பதிகம் பாடி வீடுபேறு வாழ்வை யடைவதற்குச் சிவபெருமானே தன்னை ஈன்றெடுத்த நிலையில் அப்பணிக்கு பவளம் போன்ற நிறமுடைய பெரிய யானைமுகக் கடவுள் துணை நின்று காப்பர் என்று விநாயகரைத் துதித்து தன்னுடைய காப்புப் பாடலிலே பாடியிருக்கின்றார்.

சிவஞானி சேரும்இடம்

பதிகத்தின் முதல் பாடலிலே,

எவ்வே ளையுந்தன் இதயத் தெழில் வேற்கைச்
செவ்வேளை வைக்கும் சிவஞானி சேரும்இடம்
வெவ்வேளுக் கஞ்சி வியன்சாரல் எங்குநித்தம்
மைவேழம் ஆட வயங்குமயி லாசலமே.

சிவஞானி தங்குமிடம் மயிலாசலமாகும். இனிவரும் பாடல்களுக்கும் இப்பொருளே பொருந்தும் என்கிறார். சிவஞானி சேரும் இடம் மயிலாசலமே என்று குறிப்பிடுவது மயிலாசலத்தில் பாலசித்தர் இலிங்க ஐக்கியமானதையும் அவர் சீடர் ஆதிசிவஞான பாலய சுவாமிகளும் அவர் வழியினரும் ஓராண்டில் பெரும்பாலான நாட்கள் மயிலத்தில் தங்கியிருத்தலையும் கருதியேயாகும். ஆகையால் தண்டபாணி சுவாமிகள் சமகாலத்தில் வாழ்ந்த சிவஞானியை மயிலத்தில் நேரில் கண்டு வணங்கியபோது பாடியது இப்பதிகம் என்று தெரியவருகிறது.

சீர்உணரச் செய்யுமிடம்

அடுத்து வருகின்ற பாடலான,

பொம்ம புரமும் புவியும் புரந்தருளும்
செம்மல் சிவஞானி சீர்உணரச் செய்யுமிடம்
கைம்மலரால் செவ்வேற் கடவுளையே பூசிப்பார்
மம்மர் அறுப்பான் வளர்ந்தமயி லாசலமே (பாடல்,2)

பொம்மயபாளையம் என்னும் பெயருடைய பொம்ம புரத்தையும் பிற ஊர்களையும் காத்தருளும் தலைமைச் செம்மலாக விளங்கி வருபவர் சிவஞான பாலய சுவாமிகள். இவ்விடம் மக்கள்

சிறந்த பொருளாகக் கருதக்கூடிய வீடுபேற்றினை உணர்ந்து கொள்ளும் விதமாக அருள் தருகின்ற இடமாகவும் மலர்கொண்ட சிவப்பு நிறமுடைய வேலினை வைத்திருக்கும் முருகப் பெருமானைப் பூசிப்பவர்களின் பிறவிக்கு ஏதுவான மயக்கத்தைப் போக்குவதற்கு என்றே உயர்ந்த மலையாக இருப்பது என்று உரைக்கின்றார். பாடலிலே சீர் உணரச் செய்தல் என்றுரைக்க காரணம் தன்னுடைய உபதேசத்தின் காரணமாக அனைவருக்கும் வீரசைவ நெறியினை உணரச் செய்ய வேண்டும் என்கிற கொள்கையாகும். அந்நெறியின் மூலமே சிவஐக்கியமாக இருக்கக் கூடிய வீடுபேற்றினை அடையச் செய்ய முடியும் என்றுரைக் கின்றார். அப்படி உணரச் செய்விக்கின்ற இடமாக இருப்பது முருகப்பெருமான் வீற்றிருக்கும் மயில மலையாகும் என்றும் எடுத்துரைக்கின்றார்.

அருள்சீர் அருவின் மேம்பாடு

அருள்சீர் அருளின் மேம்பாடாவது - அறிவில் சிறந்த புலவர்களால் அளவில்லாத ஆராயும் தன்மை கொண்டதும் சுவை தருகின்ற பாடல்களைக் கொண்டிருக்கின்ற சிவஞான பாலய சுவாமிகள் வாழுகின்ற இடமாகவும் இருப்பது எதுவென்றால்

கான்ற மதுமலர்ப்பூங் காவுலகம் காக்கும் வைவேல்
தோன்றல் அருட்சீர் துலங்குமயி லாசலமே. (பாடல், 3)

தேன் சொரிகின்ற மலர்களையுடைய பொலிவுடன் திகழ்கின்ற கற்பகச் சோலையுள்ள தேவர்களின் உலகத்தையே காக்கின்ற தன்மை பொருந்திய கூரிய வேலினைக் கொண்ட தலைவனாக இருக்கும் முருகப்பெருமான் வீற்றிருக்கும் இடமாகும். அப்படியான முருகப்பெருமானின் இடம்தான் மயிலமலை. இதுவே அருள் தருகின்ற அருளிடமாக இருக்கின்றது என்று தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

கோடி மயில்கள் ஆடும் பெருமை

ஈடு இணையற்ற சிவப்பிரகாசரால் நீண்ட புகழினைக் கொண்டிருக்கும் செவ்வேள் முருகனின் கனவிலே வந்து சொன்ன சொல்லைக் கேட்டுப் பாடுகின்ற சிவஞான பாலய சுவாமிகளும் அவரின் பக்தர்களும் தங்குமிடம் எதுவென்று பார்த்தால்,

ஈடுரைக்க ஒண்ணா எழிலார் மயில்கோடி
ஆடும் பெருமை அவிர்ந்தமயி லாசலமே (பாடல், 4)

அது எவரொருவராலும் ஒப்புமை கூறா வண்ணம் மிகுதியான அழகுப் பொருந்திய கோடி மயில்கள் ஆடுகின்ற பெருமை விளங்குகின்ற மயில மலை என்று தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

மெய்ப்பொருள் உணர்ந்த புண்ணியம்

உண்மைப் பொருளை உணர்ந்த புண்ணியம் பெற்றதனா லேயே அழிவற்று உயர்வு பெற்ற சிவஞானி சிறப்புற்ற இடமாகச் சிவஞான பாலய சுவாமிகள் பெற்றிருக்கும் இடம் எதுவென்றால்,

காரணமும் எண்ணில்பல் காரியமும் ஆனதென்னும்
ஆரணத்தோ னைப்புடைத்தோன் ஆடுமயி லாசலமே

(பாடல், 5)

அளவில்லாத செயல்கள் உருவாவதற்குக் காரணங்களாகவும் என்னாலதான் நிகழ்ந்தன என்று வாதிடுகின்ற பிரமனைத் தலையில் குட்டிச் சிறை வைத்தவனாகவும் இருக்கக் கூடியவன் முருகப் பெருமான். அம்முருகப் பெருமான் விளையாடிக் கொண்டிருக்கும் இடமே மயில மலையாகும். இவ்விடமே மெய்ப்பொருளை உணர்த்துவதாகவும் இருக்கின்றது என்கிறார் சுவாமிகள்.

அம்புவிக்கோர் ஆதரம்

தன்னைக் கண்டு பொறாமையால் வெதும்புகின்ற இழிந்தவர்களுக்குத் தம்மைப் பற்றிய உண்மை நிலையை விளக்கிக் காட்டும் சிம்புள் பறவையை ஒத்த சிவஞான பாலய சுவாமிகளாகிய செல்வந்தர் வாழுகின்ற இடம் எதுவென்றால்,

வெம்பு குணத்து மிலேச்சருக்கு மெய்விளக்கும்
சிம்புள் அனைய சிவஞானச் செல்வர் இடம் (பாடல், 6)

பரவியுள்ள கடலை ஆடையாகச் சுற்றியிருக்கின்ற அழகிய இவ்வுலகிற்கு ஒரு பற்றுக்கோடாகவுள்ளது மயில மலையாகும் என்று தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுகின்றார். அதேபோல கல்லையும் மணலையும் கரும்பினுடைய சாற்றினால் வந்த சருக்கரையாகக் காட்டுமாறு தம் மனதில் இறை மந்திரத்தைச் சொன்ன சிவஞானியாகிய சிவஞான பாலய சுவாமிகள் மனம் சோராமல் தங்கியருளும் இடம் எதுவென்று பார்த்தால்,

அல்லும் பகலுமற்ற ஆனந்த வீட்டுள்வைத்துப்
புல்லும் குகன்சீர் பொலிந்தமயி லாசலமே (பாடல்,7)

இரவும் பகலும் அற்ற ஆனந்த மயமான வீட்டில் இருத்தி அன்பர்களைத் தன்னொடு ஐக்கியப் படுத்துகின்ற முருகப் பெருமானது புகழ் விளங்குகின்ற மயில மலையாக இம்மலை விளங்குவதாக சுவாமிகள் உரைக்கின்றார்.

வெற்றியையுடைய விசயன் என்னும் பெயருடைய அர்ச்சுனன் விரும்பிச் செய்யும் தவத்திற்காக பன்றியின் பின் சென்று வந்த சிவஞான பாலய சுவாமிகள் பற்றுக் கொண்டு தங்கும் இடம் எதுவென்று பார்த்தால்,

மின்திகழும் வைவேல் விகிர்தன் விரும்பிநிற்கும்
குன்றினத்துள் மேலாக் குலவுமயி லாசலமே (பாடல்,8)

ஒளி விளங்கும் கூரிய வேல் உடைய விகிர்தன் முருகப் பெருமான் விரும்பி எழுந்தருளி இருக்கின்ற மலைக் கூட்டங்களுள் மேலாக விளங்கும் மயில் மலையாகும். தன் எண்ணற்ற பல புகழ்செயல்கள் யாவும் எடுத்துப் புகழ்ந்து போற்றும் அடியவர் யாவருக்கும் அவரவர்களுக்குப் பொருந்திய சிறப்புகளைக் கொடுத்த சிவஞான பாலய சுவாமிகள் என்றும் விரும்பித் தங்கும் இடம் எதுவெனின்,

விண்ணினர்க்கோர் ஆதரமாம் வேற்பெருமான் வேழமுகப்
புண்ணியனோ டாடும் பொருவில்மயி லாசலமே (பாடல்,9)

விண்ணுலகத்துத் தேவருக்கு ஒரு பற்றுக் கோடாக இருக்கும் வேலுடைய முருகப்பெருமான் யானை முகப் புண்ணியனாகிய விநாயகப் பெருமானோடு விளையாடுகின்ற ஒப்பற்ற மயிலத்தில் இருக்கக் கூடிய மலையாகும் என்றுரைக்கின்றார்.

மெய்ப் பொருளையே வாழ்க்கையாகக் கொண்ட அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வரும் அதிகளவிலே வெற்றிச் சித்துகளைச் செய்து சிவபிரானாகிய தெய்வத்தின் திருவருள் நலத்தைக் காணும்படிச் செய்த சிவஞான பாலய சுவாமிகள் தங்கும் இடம் யாதெனின்,

மெய்வழக்கர் நால்வர்என வென்றிமிகும் சித்தியற்றித்
தெய்வநலம் கண்ட சிவஞானத் தேவன் இடம்
பொய்வலிமைத் தானவராம் பொல்லார்க் கெமன்போலும்
கய்வடிவேற் கந்தன் கவின்றமயி லாசலமே (பாடல்,10)

பொய் சொல்வதில் வலிமையுடைய அசுரராகிய தீயவர்களுக்கு எமன் போன்றுள்ள கையிலே கூரிய வேலினைக் கொண்ட

கந்தப்பெருமான் அழகுறத் தங்கியுள்ள இடமாக இருப்பது மயில மலையாகுமென்று தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

பதிகநூலின் பயன்

திருப்புகழோன் என்றழைக்கப்படும் தண்டபாணி சுவாமிக ளாகிய நான் வல்லவர்கள் போற்றும் மயிலாசலத்தினையும் வல்லவர்கள் துதிக்கின்ற மயில மலையையும் நல்ல புகழ் பெற்ற சிவஞானியையும் புகழ் பெற்றுள்ள சிவஞான பாலய சுவாமிகளையும் தேடிவந்து நேரில்கண்டு,

வல்லவர்கள் போற்றும் மயிலா சலத்தினையும்
நல்லபுகழ் பெற்றசிவ ஞானியையும் நாடியின்று
செல்லனைய ஓசைத் திருப்புகழோன் செப்பும்இவை
சொல்லறிஞர் தம்மைத் துகள்சிறிதும் தோயாதே

அவரின்கண் அவருக்காகப் பதிகமாகப் பாடப்பட்ட பாடல்களைப் பாடுகின்ற அறிஞர்களைத் துன்பமானது சிறிதும் நெருங்காமல் இருக்கும் என்பது போலவும் திருஞானசம்பந்தர் இயற்றிய திருக்கடைக் காப்புப் பதிகம் போன்றதும் இப்பதிகம் என்று தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

முடிவுகள்

சமய சகிப்புத் தன்மையும் அதனைச் செயல் வடிவில் தம் வாழ்வினில் பின்பற்றுவதும் தண்டபாணி சுவாமிகளின் கொள்கையாக அமைகிறது. முருகனை வழிபாடு செய்பவர்களுக்கு அவன் என்றென்றும் அருள் வழங்குபவனாகத் திகழ்பவன். அவ்வாறு சிவபெருமானின் மெய்ப்பொருளைக் காட்டுகின்ற அருள்பெற்ற சிவஞானியான சிவஞான பாலய சுவாமிகள் வீற்றிருக்கின்ற சிறப்புடையது மயில மலை. இம்மயிலம் மலையில் முருகப் பெருமானுடன் வீற்றிருந்த சிவஞான பாலய சுவாமிகளுக்குப் பதிகம் நூலைப் பாடியதனால் தனக்கும் இப்பாடலைப் பாடுகின்ற பிறருக்கும் வீடுபேறு என்னும் வாழ்வு கிட்டும் என்றுரைக்கின்றார்.

துணை நூல்கள்

1. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பனுவல் திரட்டு மூலமும் உரையும், மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், பதிப்பாண்டு, 2000.
2. தண்டபாணி சுவாமிகள், பதிகவருடம் மூலம், கௌமார மடாலயம், கோயமுத்தூர்.

மயிலம் பொம்மபுர ஆதினத்தின் கொடையும் வரலாறும்

முனைவர் அ. கோகிலா,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
சோகா இகெதா கலை மற்றும்அறிவியல்
மகளிர்கல்லூரி, மாதனாங்குப்பம் சென்னை.
Kohilasv2016@gmail.com

மயிலம் பொம்ம புறா ஆதீனத்தின் முக்கியத்துவம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் ஏற்படுத்திய சமூக மாற்றங்கள், திருமடங்கள் தோன்றியதற்கான காரணங்கள், திருமறீத்தின் வாயிலாக அரும்பணி ஆற்றியப்புலவர்களின் முக்கியத்துவம் ஆகியவற்றை விவாதிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சமய நெறிகளின் அடிப்படையில் சமூக ஏற்றத்திற்கு பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பெற்ற அருள் நிலையங்களே திருமடங்களாகும். பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றில் ஏற்றம் மிக்க நிலையில் சமூக செயல்பாடுகளை உயர்த்தும் நோக்கத்திலேயே திருமடங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக எனும் கொள்கையில் சாதி மத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தைப் பொலியச் செய்வதே வீரசைவ பெரிய திருமடத்தின் நோக்கமாக திகழ்கிறது.

சைவம் தழைக்கவும் வீர சைவ வேத ஆகமங்கள் விளங்கவும் நல்லற நீதிகள் ஓங்கவும் இல்லறம் முதலிய சிவ சமய சாதனங்கள் மக்கள் வாழ்வில் இன்றியமையா இடம் பெறவும் அருளுமாறு மடத்தின் தொன்மம் தோன்றியது.

மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கைலாய ஞான பரம்பரை வழி வந்தது. சிவபெருமானின் அருளோடு உதித்த சங்கு கன்னர் பால சித்தர் என்ற பெயரில் வீர சைவ ஆகம நெறிகளை உணர்த்திவந்தார். அவர் தங்கி இருந்த மடம் திருமடம் பொம்மைய பாளைய திருமடம் என்று அழைக்கப்படுகிறது.

பால சித்தர் முருகனின் வாக்கிற்கிணங்க சிவாசாரம், லிங்காசாரம், பிருத்வியாசாரம் கணாசாரம், சதாசாரம் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் திருநீறு உருத்திராக்கம்

ஐந்துஎழுத்து குருலிங்கம், சங்கமம்பிரசாதம், பாததோதகம், ஆகிய எண்வகை காப்புகளின் சிறப்புகளையும் லிங்க அங்கங்களின்

அறுவகை இணைப்புகளையும் விளக்கி வீரசைவ நெறியை பரப்பி இட்டலிங்க பரசுர வழிபாட்டால் அன்றி வேறு எவ்வகையாலும் முக்தி அடையஇயலாது என்பதை உணர்ந்து சிவ ஞானத்தை பரப்பி வந்தார். பிரமபுரம் என்னும் பொம்மபுரம் ஆகிய இடங்களில் உள்ள திருமடங்களுக்கு சென்று தங்கி தம்மை அடையும் சீடர்களுக்கு உபதேசம் செய்து வந்தார். பால சித்தரின் அருள் பெற்ற சீடர் சிவஞான பாலய தேசிகன் என்ற பெயரில் திருமடத்தில் வளர்ந்துவந்தார்.

சிவஞான பாலய சுவாமிகள்

சிவஞான பாலய சுவாமிகள் காஞ்சிபுரம், சிதம்பரம், செய்யூர், காஞ்சிபுரம், சிதம்பரம் பெருமுக்கல் ஆகிய இடங்களில் மடங்களை அமைத்து தம் சீடர்களுக்கு உபதேசம் செய்து வந்தார். சிவஞான பாலய ஸ்வாமிகள் விடம் நீக்கி அருளியது, சூலை நோய் நீக்கியது, மணலை சர்க்கரையாய் மாற்றியது, மகப்பேறு வாய்க்க அருளியது, நரையை மாற்றியது வெல்லும் வீரத்தை அருளியது முதலிய திருப்பணிகளைச் செய்து வந்தார்.

18ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் எனப் போற்றி 1938 ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ்கழகத்தின் வழி ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியை விழுப்புரம் மாவட்டத்தில் தோற்றுவிக்க அருளாசி வழங்கினார்கள். கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு ஜாதி மத பேதமின்றி உணவளித்து உடை கொடுத்து உறைவிடமும் தந்து தமிழில் புலமை மிக்க தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் இக்கல்லூரியை இயக்கி வந்தார். இவருடைய காலத்தில் தந்தை பெரியார் தமிழ் மீது கொண்ட ஈடுபாட்டால் இவரை சந்தித்து ஆசி பெற்ற நிகழ்வு குறிப்பிடத்தக்கதாகும்..

மயிலம் பொம்மை புரம் ஆதீனத்தின் பூர்வ பெயர் திரு குமார சிவராஜேந்திரன் என்பதாகும். மயிலம் திருமடத்தில் சமயமும் சமுதாயமும் என்னும் பொருண்மையில் மாதந்தோறும் கிருத்திகை திருநாளில் சொற்பொழிவு நடைபெற்றது. பால சித்தர் என்ற இதழும் அந்தச்சொற்பொழிவில் வெளியிடப்பட்டது. ஊருக்கு உழைப்பதை யோகம் எனக் கொண்டு செயலாற்றுபவர்கள் தமது அருட்பார்வையால் தவ ஞானம் இல்லாதவரை சிவ ஞானத்தால் பொழிய செய்பவர்கள் தன்னை மருவினாரை தானாக்கும் சிவன் ஞானியனும் சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கியத்திற்கு ஏற்ப மக்களோடு மக்களாக சென்று பழகி மானுட வாழ்வு வளமாக்கி

தருபவர்கள். ஜாதி மத பேதமின்றி எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என உள்ளன்போடு அனைவரையும் அரவணைத்து செல்பவர்கள் .

யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப சோலைகள் வளர்த்தல், குளங்கள் வெட்டுதல், அன்னசத்திரம் வைத்தல் முதலான திருப்பணிகளை மேற்கொண்டு கல்வி முக்கியத்துவம் கொடுத்துத் தொண்டாற்றி வந்தனர்.

கல்வியோடு மெய்ஞானத்தையும் சேர்த்து கரையேற்றும் தோணியாக செயல்பட்டு வந்தார்கள் பால சித்தர். உலகியலில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் வேற்றுமைகள் யாவும் நீங்கி சன்மார்க்க நெறியாம் சமத்துவ நெறியை உருவாக்கிட அரும்பாடுபட்டு வந்தவர்கள் .

சமுதாயத்தினை வீரசைவ நெறி கொண்டு சீர்மைப்படுத்த வேண்டும் என்று எண்ணி கற்று அறிந்தவர் கல்லாதவர் என அனைவரும் பயன் பெறும் வகையில் சிவப்பிரகாசரின் சீர்மிக்க சிறந்த கருத்துக்களைச் செவிமடுத்து கற்றலில் கேட்டல் என்று வாய்மொழிக்கு ஏற்றவாறு இறைவனின் பெருமைகளை உணர்த்தி வந்தார்.

திருமடத்தை பாடிய புலவர்கள்

திருமடத்தை பாடிய புலவர்கள் ஆக சிவப்பிரகாசர், அருணகிரிநாதர், வைத்தியநாத தேசிகர், தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோரைக் குறிப்பிடலாம். பால சித்தரின் அறிவுரைப்படி சிவ ஞானத்தைப் போதித்து நல் ஆற்றுர் சிவப்பிரகாசர் என்று அழைக்கப்பட்டார். ஆதி சிவஞானி மீது ஐந்து நூல்களை சிவ ஞான தேசிகர் நெஞ்சு விடு தூது, தாலாட்டு, கலம்பகம், பிள்ளைத்தமிழ், திருப்பள்ளி எழுச்சி என பாடி பரவி உள்ளார்.

சிவஞான சுவாமிகள் பிள்ளைத்தமிழ் சிவஞானியைக் குழந்தையாகப் பாவித்து பத்து பருவங்களாக பாடப்பட்டது இந்நூல் ஆதீன வரலாறு முதல் ஆதீன ஆட்சி சிறப்பு வரை முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்கள் கொண்ட கருவூலமாக திகழ்கிறது.

சிவஞானி பழுத்த பனைமரம் போன்று எந்த பலனையும் எதிர்பாராமல் எல்லோருக்கும் பொருள் வழங்கக்கூடிய ஈகை

தன்மையை உடையவர். சிவ ஞானி தமிழன் வரும் இரவலர்க்கு தமது இன்றி எந்த அடையாளமும் குறிப்பிடாமல் அவர்களுடைய தாகவே நினைத்துக் கொள்ளும்படி பெரும் பொருளை அளவின்றி கொடுப்பவர் என்பதை அறியலாம். குருவானவர் தீக்கையின் மூலம் தம் மாணவருக்கு உண்மைப் பொருளை உபதேசிப்பார். தீக்கை அளிக்கும் விதம் ஏழு பிரிவாக பிரிக்கப்பட்டு அதில் நயனதிக்கை திருவடிக்கு ஆகியவற்றை சிவன் பெற்றுள்ளார். குரு தன் திருவடியை மாணவரின் தலைமீது வைத்து அருளுதல் திருவடி தீக்கையாகும்..

மலரடி மடிக்கழித்து திருவாய் மலர்ந்தன
கொடருமொழியில் அருள் பவா

என்ற பாடல் வழி சிவப்பிரகாசர் ஞான பாலய சுவாமிகளிடம் திருவடி தீட்சைப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

சிவ ஞான பாலய தேசிகர் கலம்பகம்

சிவப்பிரகாசர் அருளிய கலம்பகம் இரண்டு ஒன்று திருவேங்கைக் கலம்பகம் சிவ ஞான பாலை தேசிகர் கலம்பகம் 93 பாடல்களை தன்னகத்தேக் கொண்டுள்ளது. சிவப்பிரகாசர் தம் குருநாதராகிய ஆதி சிவ ஞானி ஆணைப்படி 45 பாடல்கள் பாடிய நிலையில் யோக நிலையில் இருந்து திருநீறு மயமாக்கிக் கொண்டு அந்த திருநீற்றை யாவரும் கண்டு வணங்கிப் பயன்படும்படி மறைந்தார்.

சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி

பள்ளியெழுப்பி துயில் கலைவித்தல் என்ற ஒற்றை நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு வழங்க வருகின்ற சிற்றிலக்கிய வகை திருப்பள்ளி எழுச்சியாகும். சிவஞான பாலய சுவாமிகளை முற்றிலும் சிவபெருமானாகவே பாவித்து வணங்குகின்ற சிவப்பிரகாசரின் சங்கமகுரு பத்தி இந்நூலில் பெரிதும் சிறப்பிக்கப்படுகிறது. சிவஞான தேசிகளுக்கு அமுதபாணி என்ற ஒரு பெயர் உண்டு அமுதம் என்பது பால் அந்த பாலை உணவாக உண்பதால் பாலையும் என்றும் அமுதபாணி என்று பெயர் உண்டாயிற்று. அமுதபாணியாக உள்ளவனை அமுதம் அருளுகிறான் என சிவப்பிரகாசம் நயன் பட உரைக்கின்றார்.

சிவப்பிரகாசரது படைப்புகளில் முதலாவதாக அருளப்பெற்ற நூல் சோன சைலமாலையாகும் திருவண்ணாமலையில் எழுந்தருளி யுள்ள அருணாச்சல பெருமாள் மீது இயற்றப்பட்ட நூலே சோண சைல மாலை ஆகும்.

தமிழால் இறைவனை பாடுவதற்கும் இறைவனை ஒப்பு அடைவதற்கும் சிவ ஞானி அருள் செய்ய வேண்டும் என சிவப்பிரகாசர் வேண்டுவதைக் காண முடிகிறது சிவஞானியின் திருவடிகள் மூன்று மாயை கடந்து முக்திப்பேற்றைஅழிக்க வல்லன என்பதை

அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்குவது
சும்மா தலை மீது சுமத்தினனால்
கைமார் உள்ளதே கடையேயிடையே (சிவஞான கலம்பகம் 24)

என்ற பாடல் விளக்குகிறது.

சிவப்பிரகாசரின் பிறநூல்கள் சோனசைல மாலை திருவண்ணா மலையில் எழுந்தருளியுள்ள அருணாச்சலப் பெருமான் மீது இயற்றப்பட்டது சோன சைல மாலை ஆகும். இந்நூலில் முதல் இரண்டு அடிகள் இறைவனிடம் வேண்டுவதாகவும் பின் இரண்டு அடிகள் திருவண்ணாமலையின் பலத்தினை கற்பனை நகத்தோடு விளக்குவதாகவும் பாடப் பெற்றுள்ளது. இந்நூலின் வாயிலாக சிவப்பிரகாசர் காலத்தில் திருவண்ணாமலையை வலம் வரும் வழக்கம் இருந்து வந்துள்ளமை அறிந்து கொள்ள முடிகிறது. திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி , திருவெங்கை கோவை திருவெங்கை உலா, சிவப்பிரகாச விலாசம், நால்வர் நான்மணி மாலை திருக்குவ புராணம், வேதாந்த சூடாமணி, பழ பெரியநாயகி அம்மைக்கழித்துறை இட்டலிங்க நிரஞ்சன மாலை, மழை அந்தாதி ஆகிய நூல்கள் பொம்ம புர ஆதீனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் எழுந்திருப்பதை அறிய முடிகிறது.

வைத்தியநாத தேசிகர்

மயிலம் பொம்மபுர வீர சைவ ஆதின தலைவராய் வைத்தியநாத தேசிகர் விளங்கினார். மயிலமலையில் எழுந்தருளி யுள்ள முருகப்பெருமான் மீது சங்கத்தமிழால் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை குருநாதரின் கட்டளைக்கு இணங்கி பாடி அருளினார்.

திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள்

தமிழ் பண்பாடு, தமிழ்ச்சமுதாயம், தமிழ் இலக்கிய இலக்கணம், தமிழர் சமயம் என பல துறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பைந்தமிழ் வளப்படுத்தியவர். முருகனைப் பற்றிய அருட்பாக்கள் பாடியதால் முருகதாசர் எனவும் திருப்புகழ்

பாடல்களை பாடிய மையால் திருப்புகழ் சுவாமிகள் எனவும் புகழ்பெற்றவர்.

பாம்பன் சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முருகப்பெருமான் மீது 6666 பாடல்களை பாடியுள்ளார் மயிலம் தலத்தைக் குறித்து பாடிய பதிகத்தில் பத்து பாடல்கள் அடங்கியுள்ளன. தியாகராஜ கவிராயர் மயிராசல புராணம் என்னும் நூலினை பாடியுள்ளார் இந்நூலில் திருமடம் குறித்தும் சிவ ஞானிகுறித்தும் பாடியுள்ளார் .

பாரதிதாசன் புதுவை கவிஞராக தகுந்த இவர் மயிலம் குறித்து சுப்பிரமணியர் துதி அமுது மயிலம் சண்முகம் அன்ன பாடல்கள் பஞ்சரத்தின கீர்த்தனம் என மூன்று நூல்களைப் பாடியுள்ளார்.

ஆ. சிவலிங்கனார் மயிலம் திருமடத்துப் புலவராகவும் கல்லூரிப் பேராசிரியராகவும் விளங்கினார் மயிலக் களவியல் மாலை மயிலத் திருவாயிரம் ஆகிய நூல்களை பாடினார்.

தொகுப்புரை

- சைவம் தழைப்பதற்கு திருமடங்கள் எழுந்தமை.
- சிவ ஞான பாலைய சுவாமிகள் திருமடங்களின் வழி ஆற்றிய அரும் பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறியமை.
- திருமடம் சார்ந்த பணிகளை மேற்கொண்ட புலவர்களின் முக்கியத்துவத்தை எடுத்து இயம்பியமை.
- திருமடங்களின் பெருமையைத் தழைக்கவும் அதன் சிறப்பை ஓங்கவும் செய்த நூல்களின் வாயிலாக சைவ நெறியின் முக்கியத்துவத்தை எடுத்து மொழிந்தமை.

துணை நூல்

மயிலம் பொம்மபுர திரு மட வரலாறு.

தித்திக்கும் சிவஞானி

முனைவர் ஞா. சுபஸ்ரீ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,
தமிழ் கலை அறிவியல் கல்லூரி, மயிலம்.
தொடர்பு எண்:9786004277

முன்னுரை

"எங்கும் உள தென்தமிழ்" எனும் கம்பரின் கூற்றுக்கும், "கன்னடமும் களிதெலுங்கும் மலையாளமும் உன் உதிரத்தே உதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும், ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமை திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே" எனும் மனோண்மணியம் சுந்தரம்பிள்ளையின் வாக்கிற்கும் உரியது நம் தன்னேரில்லாத் தமிழ்மொழி.

உலக மொழிகளில் முதன்மையானதாகவும், சிறப்புப்பெற்றதாகவும் பாரில் பல நாட்டவரால், பல இனத்தவரால் போற்றப்படும் செழுமைக்கும் சீர்மைக்கும் உரிய மொழி செம்மொழியாம் தமிழ்மொழி. தமிழின் அருமையையும் பெருமையையும் உணர்ந்தவர்கள் தான் கற்றக் கல்வியை இலக்கியமாகவும், இலக்கணமாகவும், காப்பியமாகவும், கவிதையாகவும் ஏட்டில் வடித்து, படிக்கும் பழக்கத்தைக் கற்பனையால் புனைந்து இயற்கையின் அழகினையும், ஆற்றலையும், வாழ்வியல் நெறியினையும் நமக்கு வகுத்தருளி பண்பாட்டோடும் பாரம்பரியத்தோடும், இறைநெறியோடும் வாழ வைத்த பெரும் மதிப்பிற்குரியவர்களாவர்.

அத்தகைய சிறப்பிற்குரிய ஆசிரியர்களுள் கற்பனையால் கலைநயத்தையும், அறிவால் அற்புதத்தையும், வர்ணிக்கும் வகையால் வாழ்வியலையும், இயற்கையால் இறைவனையும் படம்பிடித்துக்காட்டி சிந்தையால் சிகரத்தைத் தொட்டவர் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் தாம் வாழ்ந்த 32 ஆண்டுகளில் 34 அரிய கருத்துகள் பொதிந்த நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அளித்த பெருங்கொடையாளர்.

இவர் சிவஞான பாலய சுவாமிகளை ஞான குருவாக ஏற்றுக்கொண்டு பாடிய ஐந்து நூல்களின் வழி சிந்தை மகிழ

சிவஞானியைப் போற்றும் அழகியல் திறத்தைத் தித்திக்கும் சிவஞானி எனும் தலைப்பில் வழங்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

அன்பும், பக்தியும்

கடவுள் அல்லது தெய்வத்தின் மீது வைக்கும் அளப்பரிய அன்பு, மரியாதை மற்றும் நம்பிக்கை பக்தி என வழங்கப்படுகிறது. அப்படி ஒருவர் மீது வைக்கும் அன்பு என்பது உன்னதமானது. கல்லையும் கனிவாக்கும் வல்லமை உடையது. அதனால்தான் "அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே" என்று இறைவனைப் பாடியிருக்கிறார் அருட்பிரகாச வள்ளலார். அம்மையே அப்பா ஒப்பிலா மணியே என்று அன்பில் குழைந்திருக்கிறார் மாணிக்க வாசகர்.

மானிக் குரலனே தாலேலோ; வையம் அளந்தானே தாலேலோ என்று கொஞ்சி மகிழ்ந்திருக்கிறார் பெரியாழ்வார். இப்படி அன்பு பெருக்கெடுத்ததால் இறைவனைத் தன்னில் ஒருவனாய், இனியவனாய், அன்பிற்கரியவனாய்ப் பாவித்து கொஞ்சும், மிஞ்சும், கெஞ்சும் வழக்கம் அருளாளர்களிடையே இருந்திருக்கிறது என்பதை யாவரும் அறிவோம். அவ்வகையில் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞான குருவாம் சிவஞான பாலய சுவாமிகளை,

தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள்(தமிழ்விடுதூது)

எனத் தமிழ்விடு தூது ஆசிரியர் தமிழின் இனிமையைச் சுவைத்து சுவைத்து அனுபவித்த்து போல், நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளும் தன் குருவின் மேன்மையை, இறை தத்துவத்தை, ஞானத்தைச் சிந்தை இனிக்க, இனிக்க பாடியிருக்கும் தன்மையைக் கீழ்வரும் தலைப்பின்வழி காணலாம்.

பிள்ளைத்தமிழில் சிவஞானி

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் தன் ஞான குருவாம் சிவஞான பாலய சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து பத்துப் பருவங்கள் அமைய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ் எனும் நூலைப் படைத்து சிவஞானிபால் கொண்ட அன்பின் வெளிப்பாட்டை மிக அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறார். அதனடிப்டையில், வருகை பருவத்தில் சுந்தரலைத் தோழமையாகக் கொண்ட சிவபெருமான் அவருக்காகப் பரவை நாச்சியாரிடம் தூது

செல்லும்போது யாரேனும் தன்னைப் பார்த்துவிடுவார்களோ? என அச்சங்கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்துச் சென்ற இறைவனே! இன்று எங்களுக்காக வந்தால் உமக்குப் பழியேதும் உருவாகுமா? என வினவி இனிய கனிபோன்ற சிவஞானியே வருக! மயிலை மலையில் வீற்றிருந்து வரும் அன்பர்க்கெல்லாம் அருளாகிய ஞான இன்பத்தை அளிக்கும் சிவஞானியே வருக! வருக! என அன்று சிவனாய் வந்தவர், இன்று சிவஞானியாய் வந்திருக்கிறார் என்பதைச் சிந்தை மகிழப்பாடும் திறத்தை,

பைந்தாது குக்கின் நறுங்கொன்றை
பனிமா மலரும் குழவி இளம்
பயில்வெண் மதியும் துளை எயிற்றுப்
பாம்பும் சுமக்கும் அன்றுநீ
செந்தா மரைச்சே வடி நோவத்
திரும்பித் திரும்பி ஒரிரவில்
.....
.....அடியேம்பால்
வந்தால் வருமோர் பழியுண்டோ?
மதுரக் கனியே! வருகவே
மயிலை வரையிற் சிவஞான
மணியே! வருக வருகவே. (சி.பா.தே.பிள்.53)

இப்பாடல் மூலம் அறியலாம். இதை மேலும் உறுதிபடுத்தும் வகையில் "துங்கவெம் புகர்முக்க் களிநல் யானையின்" எனத் தொடங்கும் (பிள். பா.11) பாடலில் சிவனுக்குரிய அடையாளங்கள் எல்லாம் "சுமையினோடு போகட்டும்" (பிள்.பா.11)நீக்கிவிட்டு சிவஞானியாக வந்திருக்கும் இறைவனே! எங்கள் குருவே! செங்கீரை ஆடி அருளுக எனப் போற்றும் பாடல் இதற்கு மேலும் அரண்சேர்க்கும் எனலாம்.

கலம்பகத்தில் சிவஞானி

கலம்பகம் என்பது 18 உறுப்புகளை உடைய 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. இச்சிற்றிலக்கிய வகையில் தம் ஞானாசிரியன் மீது "ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்" எனும் பாமாலையைப் பூமாலையாகக் கட்டி வீரசைவக் கருத்தையும், வழிபாட்டையும், பக்தி நிலையையும், சிவஞானியின் அருட் கொடையையும் நாமணக்கப் பாடிப் பரவியிருக்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். வைணவத்தில் "சரணாகதி" என்ற நிலை பேசப்படும்.

இதற்கு முழுவதும் இறைவனே கதியென வாழும் நிலை என்பர். இந்நிலையை அடைந்த நாவுக்கரசர்,

தன்னை மறந்தார் தன் நாமங் கெட்டார்
தலைப்பட்டார் தலைவன் தாட்கே (அப்பர் தேவாரம்)

எனப் பாடியிப்பதும்,

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே (பிடித்த பத்து)

என ஊனுறுகப் பாடிப் பதம்பெற்ற மாணிக்கவாசகப் பெருந்தகையின் இக்கூற்றுகளும் இதற்குச் சான்றாய் அமைந்ததைச் சுட்டலாம்.

நம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் பெருந்தகையும், சிவஞானியைக் குருவாக ஏற்றபின் சிவனே சிவஞானி என்பதை முற்றுணர்ந்து தந்தையாகவும், தாயாகவும் விளங்கும் உன்னத தன்மையைச் சிந்தை சிலிர்க்க உரைத்திருப்பதை,

அன்னையே அனைய சிவஞான தேவன் (சி.பா.தே.கலம்.61)
தந்தையினும் இனிய சிவஞான தேவன் (சி.பா.தே.கலம்.83)

எனப் பதிவு செய்வதன்வழி உணரலாம்.

மேலும், உள்ளத்தைப் பெருங்கோயிலாகக் கொண்டு வழிபட்ட திருமூலர் பாதையிலும் சென்று சிவஞானியை,

ஆலயம் எனக்கொண்டு என்மனத்து அமர்ந்த
அருட்சிவ ஞானதேசிக (சி.பா.தே.கலம்.73)

என உயிர் உருக பாடும் இவ்அற்புதத்தையும் கண்டு மகிழலாம்.

திருப்பள்ளியெழுச்சியில் சிவஞானி

தம் ஞானகுருவாம் சிவஞான பாலய சுவாமிகளின் திருவருளைப் பெறுதல் வேண்டி துயில் எழுப்புவதாகப் படைக்கப் பட்ட இலக்கியம் "ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி யெழுச்சி" என்பதாகும். இந்நூலில் நான்கு பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு செய்தியை மிக அருமை யாகப் பதிவு செய்துள்ளது. அவ்வகையில் அமையப்பெற்ற மூன்றாவது பாடலில், நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள், திருப்பாற்கடலில் உறங்கும் திருமாலும் தன் உறக்கத்தை

விட்டுவிட்டுப் பஞ்சசன்னியம் எனும் சங்கோடு உன்னைத் தொழும் விருப்பத்தோடு துயில் எழுப்ப வந்திருக்கிறான். திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய நான்முகனும் உன்னுடைய பாதபூசைக்குத் தேவையான நீரை எடுத்துக்கொண்டு உம்மை வணங்க வந்திருக்கிறான். சாந்தமே குணமுடைய எங்கள் சிவஞானியே! அருள் பொழியும் மலை போன்றவனே! உம் உறக்கத்தைவிட்டு எழுவாயாக! எமக்கும் அருள்வாயாக எனப் போற்றுவதை,

குளிர்க்குடையான் உத்தியடைக் கண்துயில்வோன் எழுந்து
போற்றிநினது எதிர்குறிப்பச் சங்கொடும் வந்துற்றான்
புண்டரிகண் கரகநீர் கொண்டு உதவ நின்றான்
அறும் தவக்களிறே எங்கள் சிவஞான
தேவனே! அருள்மலையே! பள்ளி எழுந்தருளே.
(சி.பா.தே.திரு.எழ.3)

எனச் சிந்தை தித்திக்கும்படி சிவனே! சிவஞானியாய் வந்திருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறார்.

நெஞ்சுவிடுதூதில் சிவஞானி

அகப்பொருள் இலக்கியத்தில் தூது என்பது தனிச்சிறப் புடையது. தலைவன் மீது அன்பு கொண்ட தலைவி அஃறிணைப் பொருளையோ, உயர்திணைப் பொருளையோ தூதாக விடுத்து விரும்பிய தலைவனிடத்து மாலை வாங்கி என விடுப்பதாய் அமையும் சிற்றிலக்கியமாகும்.

பிறகு இத்தூது இலக்கியமானது பக்தியில் ஊடுருவி இறைவனைத் தலைவனாகப் பாவிக்கும் அடியவர்கள் தன்னைத் தலைவியாகப் பாவித்துக் கொண்டு தமிழ், கிள்ளை, நெஞ்சு போன்றவற்றைத் தூதாக அனுப்பி மாலையாகிய அருள் வேட்கையை வேண்டுவதாக மலர்ச்சி அடைந்தது. அவ்வகையில் சிவப்பிரகாசராகிய தலைவி, தன் குருவாகிய சிவஞானியிடத்து மாலை பெற்றுவர நெஞ்சமே சிறந்தது எனக் கருதிப் படைக்கப் பட்ட இலக்கியமே "ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது" ஆகும்.

கயிலை மலை மீதிருந்த காட்சிபோல்
மயிலை மீதிருக்கும் வள்ளல் (சி.பா.தே.நெஞ்.19)

எனும் பாடலில் சிவனே சிவஞானி என்பதைப் பதிவு செய்த சிவப்பிரகாசர். அப்படி அவர் வருவதற்கான காரணத்தையும் மிக அழகாக எடுத்துரைக்கும் திறம் படித்து சுவைக்கத்தக்கது.

அதாவது, தலைவனாகிய சிவஞானி உலக உயிர்களை யெல்லாம் காணுதல் வேண்டியே மானுட வடிவம் தாங்கி வந்திருக்கிறார் என்றும், அவர் வீடுபேறு அருளும் வித்தகர் என்றும் கூறியதோடு, சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் இயல்பு எனும் விதிக்குத்தக, தமை வணங்கும் அடியவரைத் தமதாக்கிக் கொள்ளும் நிலைத்த புகழை உடையவர் என்பதை,

நாம் காண வந்தருளும் நாயகன்
நரர்மேனி சார்த்திவரும் நம்பன்
தன்னை மருவினரைத் தானாக்கும்
தன்மையுடை மன்னு சிவஞானி (சி.பா.தே.நெஞ்.12-14)

இப்பாடல் மூலம் உணர்த்துகிறார். மேலும் நெஞ்சிடம் சில உபாயங்களைச் சொல்லி அனுப்புகிறார். நெஞ்சே! நீ தலைவனைக் கண்டவுடன் விரைந்து சென்று அவன் தாளைப் பற்றிக் கொண்டால் பற்றற்றவாழ்வாம் வீடு அருளும் வித்தகவன், பக்தியால் உருகும் அடியவர் சிந்தைக்குத் தித்திக்கும் தேன்போன்றவன் எனச் சிவஞானியைப் போற்றுகிறார். இதை,

ஆளாத அன்பர்க்கு அமராபதம் போல
மீளாத வீடுதவும் வித்தகனே!
.....
பத்திக் கடவுள் படிந்த அடியார்க்குத்
தித்திக்கும் கோதிலாத் தேலறே! (சி.பா.தே.நெஞ்.225-230)

எனும் பாடல் தெற்றென விளக்குகிறது.

முடிவுரை

- இவ்வுலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் எடுக்கும் அருள்வடிவம் குருவடிவமாகும். குருவே அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானம் வழங்கும் சிவமாய் சிவஞானியாய் வந்திருக்கிறார் என்பதைத் தம் இலக்கியங்கள் வழி நல்லாற்றூர் சிவப்பிரகாசர் புலப்படுத்திய பாங்கு ரசனைக்குரியது.
- தித்திக்கும் தேறலாய்(தேனாய்) சிவஞானி அடியவர்களின் பாவமாகிய துன்பத்தை நீக்கி, வீடுபேறாகிய இன்பம் அருளும் வித்தகனாய் திகழும் மேன்மைக்குரியவர் என்ற செய்தியை உணர வைக்கிறார்.

- *தித்திக்கும் ஞானமும், தெவிட்டாத இன்பமும் தரும் நாதனே சிவஞானி என்பதைச் சிந்தை திகட்ட, திகட்ட நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ள திறம் வியந்து போற்றுதற்குரியது.*
- *கயிலை மலையில் இருக்கும் சிவன்தான் சிவஞானியாக மயிலை மலையில் வீற்றிருந்து குருவருளையும் திருவருளையும் பொழிகிறார் என்ற நல்லாற்றூர் சிவப்பிரகாசரின் கூற்று, சிவஞான பாலய சுவாமிகள் மரபின்வழி இன்றுவரை மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடங்களில் அருள்பாலித்து வையம் செழிக்க சமுதாயப் பணியே சமயப்பணியே எனும் நோக்கில் செயல்பட்டு வரும் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் அருளாசியோடு பொருந்தியிருப்பது "சித்தன் வாக்கு சிவன் வாக்கு" என்ற உண்மையை நிரூபிப்பதாய் உள்ளது.*

மயிலை பதியும் சிவஞானியும்

திருமதி சரிதா
முனைவர் பட்டம் ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,
தமிழ் கலை அறிவியல் கல்லூரி மயிலம்
தொடர்பு எண்: 7339097113

மனிதனையும் அவன் சார்ந்து வாழக்கூடிய சமுதாயத்தையும் வழிநடத்திட தோன்றியவையே ஆன்மீகம் சார்ந்த இலக்கியங்கள் அத்தைகைய இலக்கியங்கள் மனிதனுடைய வாழ்க்கையினை நெறிப்படுத்தி வாழ்வதற்கு இறைவனுடைய திருவருள் இருந்தால் மட்டும் போதாது குருவருளும் துணை நிற்க வேண்டும். என்பதற்கேற்ப வீர சைவ சமயத்தின் ஞான குருவாக விளங்கும் கௌமார சமயத்தில் மயில மலையில் உறைந்துள்ள சிவஞானியை முருகனாவே கருதி போற்றி வந்துள்ளனர்.

சிவஞானி அவர்கள் மயிலமலைப் பதியில் எழுந்தருளி அடியார்களுக்கு அருளாட்சி செய்யும் தன்மையினை உணர்த்தும் நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

குருவாக விளங்கும் சிவஞானி

குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்ற திருமூலரின் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில் ஆதிசிவஞானியாகவும் மயிலம் திருமடத்தை அருளாட்சி புரியும் 2 ஆம் பட்ட குருமகா சந்நிதானங்கள் எனவும் போற்றப்படுகின்றார்.முருகன் வேறு சிவஞானி வேறு என்ற பாகுபாடு பாராமல் முருகனே சிவஞானியாக வந்து மயிலமலை எழுந்தருளிய திறத்தினை பல்வேறு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

தமிழ் வளர்க்கும் சிவஞானி

கல்வி, கேள்வி, ஞானம் என்ற மூன்றினையும் ஒருங்கே பெற்று இட்டலிங்கத்தை பூசித்து மயிலத்தை சுற்றியுள்ள உள்ளோர் அனைவரும் செந்தமிழை பருகிட தமிழ்க்கல்லூரியை வளர்க்கும் அருள் குருவாக சிவஞானி விளங்குகிறார்.

சிவஞானியின் அருள்தன்மை

சிவபெருமான் கயிலைமலையில் அன்பர்களுக்கு காட்சி கொடுத்ததைப்போல குறிஞ்சி நிலமான மயிலத்திருத்தலத்தில்

தன்னை நாடி வரும் அன்பர்களுக்கும் அருளை அள்ளித்தரும் வள்ளலாக சிவஞானி விளங்குவதை.

கயிலை மலை மீதிருந்த காட்சி போல்வந்து
மயிலமலை மீதிருக்கும் வள்ளல் (சி.பா.சு.நெ.வி.தூது - 28)

என்று சிவப்பிரகாசர் சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சு விடுதூதில் ஞான வள்ளலாக சிவஞானியைப் போற்றுகின்றார்.

பிறவா நெறியை போக்கல்

மனிதர்களின் பாவ புண்ணியங்களுக்கேற்ப அடுத்தடுத்து வரக்கூடிய பிறவி என்னும் பெருங்கடலை நீந்தி கரைசேர் துறுவு நெறியினை போற்றுபவர்களுக்கும், இல்லறநெறியில் உள்ளவர்களுக்கும் , இல்லறநெறியில் உள்ளவர்களுக்கும் பிறவாமை என்னும் நெறியினை அறிவுறுத்தும் ஞான ஆசானாக மயில மலை மணக் கோல முருகனுடன் சிவஞானியும எழுந்தருளியுள்ளார். இதனை.

அறஆழிக் கடல் அந்தணனாய்
அமர்ந்து மயிலைமலை மீதில்
துறவாம் ஒழுக்க நிலையினர்க்கும்
துறவாழ்க்கை உடையார்க்கும்
பிறவா நெறியை விளக்கிடவே
பெம்மான் சிவஞானிக் காணக்
குறமாது அவன் வான்மகள் விளங்கச்
கோயில் கொண்ட குருகுகனே. (மயிலத்திருவாயிரம் பா. 8)

என்ற பாடல் அடிக்களில் துறவியாக விளங்கும் சிவஞானியின் திருவடியே அன்பர்களுக்கும் கருவியாக விளங்கும் தன்மையினை . சிவலிங்கனார் மயிலத் திருவாயிரத் திருவாயிரத்தில் பதிவு செய்கின்றார். இதனையே திருவள்ளுவர்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

என்ற குறட்பாவில் பிறவி நோயை போக்கும் மருந்தாக இறைவனுடைய திருவடியே மேலானது என்று குறிப்பிடுகின்றார்.

ஐம்புலன் அடக்கம்

மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகில் நிலைபெற்று வாழ வேண்டுமென்றால் ஐம்புலன்களால் வரக்கூடிய அனைத்து பற்றுகளையும் நீக்கிய மயில மலையில் வீற்றிருக்கும் துறவியாகிய சிவஞானியினை அடைந்தால் ஐம்புலன்களால்

மக்களுக்கு ஏற்படும் மயக்கத்தை நீக்கி குற்றமில்லாதவராக வாழலாம் என்பதை

ஐந்தவித்தார் சிவஞானி
ஐந்தவிக்கப் பலர் தேற்ற
வந்துவாழும் மயிலமலை
வாழ்வே வானோர் பெருமானே.

என்ற பாடலடிகள் வாயிலாக சிவலிங்கனார் புலப்படுத்துகின்றார்.

திருவருளும், குருவருளும்

மணக்கோல முருகனாகிய திருவருளும், சிவஞானியாகிய குருவருளும் சேர்ந்து விளங்கும் திருத்தலமாக மயில மலையினை சுட்டுகின்றார். இதனை.

தம்பம்பால சித்தருடன்
சிவஞானிப்பேர் குருவ மரும்
தெய்வ மலையாம் மயிலமலைத்
தேவே அடியேற்கும் அருளுகவே. **(மயி.திரு. - 55)**

என்றும்

துறவோர் பாலசித்தருடன்
தூய சிவஞானிக் குரவர்
உறவாய் வாழும் மயிலமலை
உரவோ னே வடி வேலவனே. **(ம. தி. பா - 47)**

என்ற பாடலடிகளில் முருகனாகிய திருவருளும், குருவருளாக எழுந்தருளியுள்ள பாலசித்தரும் , சிவஞானியும் என்று மூவரும் குருவருளும் திருவருளுமாக விளங்கும் தன்மையினையும் ஒருங்கே நின்றுமக்களுக்கு தொண்டாடற்றும் சிறப்புக்குரியவர் சிவஞானி என்பது தெரிவுறுத்தப்படுகின்றது.

கருணைத்தன்மை

உலகில் உள்ளவர்கள் எவ்வளவு அறிவுத்திறன் படைத் திருந்தாலும் உன் திருவடியினை சரண் என்று பற்றுபவர்களுக்கு துன்பத்தைபோக்கி இன்பத்தை நாளும் வழங்கி வீடுபேற்றினை அளிக்கும் கருணைத்தன்மையுடையவன் என்று சிறப்பிக்கப் படுகிறார்.

எனைத்துணை அறிவினர் ஆனாலும்
ஏத்திவந்து அடியினை அடைவரேல்

கனத்தருள் புரிசிவ ஞானிமகிழ்
கார்மா மயிலக் காவலனே

என்ற பாடலடிகளில் சிவஞானியின் கருணைத்தன்மையினை உணர்த்தப்படுகின்றது.

அடியார் போற்றும் திறம்

மும்மலங்களில் ஒன்றான ஆணவத்தை ஒழித்து பிறரை மதித்து ஒழுகும் அடியார்கள் போற்றும் அருள்வள்ளலே. சிறியேனாகிய என் உள்ளத்தில் நீ வந்து சேர்வதால் இவ்வுலகில் பகை என்பதே எனக்கு கிடையாது என்று அடியார்களில் ஒருவராக இருந்து சிவஞானியை போற்றுகின்றார் சிவலிங்கனார்.

ஆணவத்தால் அழியாத
அடியார் போற்றும் சிவஞானி
மாண உளத்து மன்னுதலால்
மன்னாப் பகைதான் ஏதெனக்கே.

என்ற பாடலடிகளில் சிவஞானியினை அடியேனாக இருந்து. போற்றுகின்ற மரபினை காணமுடிகிறது. மெய்பொருளான சிவஞானியே முருகனாகக் கருதி வழிபடும் மரபும் மயில மலையின் மாண்பினையும் அறியமுடிகிறது.

உயிர்களின் பாவ புண்ணியங்களுக்கேற்ப பிறப்பினை அறுக்கும் மருந்தாக சிவஞானியின் திருவடியே துணையாக இருப்பதை காணமுடிகிறது.

ஐம்புலன்களால் ஏற்படும் பற்றுகளை நீக்கிய சிவஞானியைப் போன்று அவரை வணங்குபவர்களையும் அப்பற்றினை இல்லாதவர்களாக அறிவுறுத்தி வாழ்விக்கும் சிவஞானியின் மகிமையினை தெரிவுறுத்தப்படுகின்றது.

மயிலை என்னும் பதியில் குருவருளும் திருவருளும் ஒருங்கே அமையப்பெற்று அன்பர்களை அருளாட்சி செய்யும் ஞான சித்தர் சிவஞானியின் காட்சினையும், பக்தர்கள் மேல் அவருக்கு இருந்த கருணைத்தன்மையும் புலனாகின்றது.

சிவஞானியின் திருவடியே வீடுபேற்றினை அளிக்கும் மார்கமாகவும் ஆணவத்தை நீக்கிய அடியார்கள் போற்றும் புண்ணியனாக விளங்கும் போற்றி வணங்குவோம்.

தொல்காப்பியம் சுட்டும் அகத்திணைக் கருத்தாக்கமும்: மயிலம் முருகன் பிள்ளைத்தமிழும்.

சி. பூவிழி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014.
அலைபேசி: 9363163476.
poovizhi0306@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் மூலமும் உரையும்' என்ற இந்நூல், பக்தி இலக்கியமான பிள்ளைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது. அதிலும் குறிப்பாக, மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளைத் தாண்டி, உள்ளத்து உணர்வுகளையும், வாழ்வியல் நெறிகளையும் ஆராயும் அகத்திணைக் கருத்தியலின் தேவையை நூலின் உரைப்பகுதி வலியுறுத்துகிறது. மேலும், பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் இலக்கணம் குறித்த தொல்காப்பியத்தின் குறிப்பையும் இந்நூல் மேற்கோள் காட்டி விளக்கியுள்ளது.

'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூலின் உரைப்பகுதியில் உள்ள தொல்காப்பிய அகத்திணைக் கருத்துக்கள் குறித்த தரவுகளை எவ்வாறு தொல்காப்பியத்தின் இலக்கணத் தொடர்போடு நிலைநிறுத்துகிறது என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அதே போல நூலின், உரையாசிரியரின் பதிப்புரையில் காணலாகும் தொல்காப்பியத்தோடு தொடர்புடைய கருத்தும் இங்கு ஆராயப்படவுள்ளது. இதனை,

1. *'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூலின் உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள தொல்காப்பியத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்டுதல்.*
2. *பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கும், மனித வாழ்வின் அடிப்படைகளை விளக்கும் அகத்திணைக் கருத்திற்கும் உரை ஆசிரியர் ஏற்படுத்தியுள்ள தொடர்பை ஆய்வு செய்தல்.*

3. பிள்ளைத்தமிழுக்கான இலக்கணமாகத் தொல்காப்பியத்தில் காணப்படும் "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற சான்றினை ஆய்வு செய்த என்ற மூன்று நிலைகளில் இக்கட்டுரை அமைகின்றது.

மனித வாழ்வும் அகத்திணையும்

'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூலின் உரைப்பகுதி குறிப்பிடுவதாவது, மனிதர்கள் உணவு, உறக்கம், போன்ற அடிப்படைத் தேவைகளுடன் நின்றுவிடாமல், இவற்றிற்கும் மேலாக, உள்ளத்தின் ஆழமான உணர்வுகளைக் குறிப்பாக அன்பு, காதல், நெறி சார்ந்த வாழ்வு போன்றவற்றை விளக்கும் அகத்திணையை நாடி ஆராய முற்பட்டனர். இதுவே, மனித வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக அமைந்தது. இதனை,

"மனிதர்கள் மட்டும் மேற்கண்டவற்றோடு நிறைவடையாமல் தன் நல்வாழ்வு தன்னுள்ளேயே இருக்கிறது என்று எண்ணி அகத்தை நாடி தேடி ஆராய முற்பட்டனர்" (சி.சிவக்குமார் .11) என்ற சிவக்குமாரின் பதிப்புரை விளக்குகின்றது.

தொல்காப்பியம் சுட்டும் அகத்திணைக் கருத்தாக்கம்.

தொல்தமிழரின் வாழ்வியலையும் இலக்கியத்தையும் புரிந்து கொள்வதற்குத் தொல்காப்பியப் பொருளதிகாரம் அடிப்படையாக விளங்குகின்றது. வாழ்வியல், இலக்கியம் பற்றிய கருத்துகள் அகம், புறம் என்ற இரண்டு பிரிவிற்குள் அமைத்து விளக்கப்பட்டிருக்கிறது. அகம், கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக ஏழு பிரிவிலும்; புறம், வெட்சி முதலாகப் பாடாண் ஈறாக ஏழு பிரிவிலும் தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. அகம், புறம் என இரண்டும் அடிப்படையில் மனிதர்களின் உணர்வு சார்ந்த கருத்தாக்கமாகவே அமைந்துள்ளது.

பிள்ளைத்தமிழுக்கான தொல்காப்பிய இலக்கணம்

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் இலக்கண மூலமாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. பிள்ளைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்த பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம், 'குழவி மருங்கினும் கிழவதாகும்'(தொல்.புறம்.24) என்று இலக்கணம் வகுத்துள்ளது. இந்நூற்பா குழந்தையாவது தெய்வக் குழந்தையும் மக்கட் குழந்தையும் என்று கொள்ளப்படும். இக்கருத்திணை அடிப்படையாக் கொண்டே பிற்கால பிள்ளைத்தமிழ் நூல்கள்

இறைவனையும் அரசர் முதலியவரையும் குழந்தையாகக் கொண்டு பாடப்பட்டன. இதன் மூலம், பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகை தொல்காப்பியர் காலத்திலேயே இலக்கணக் குறிப்பைப் பெற்றுவிட்டது என்ற வரலாற்றுத் தகவல் உறுதிப்படுத்துகிறது. இதற்குச் சான்றாக சான்றாக பல சமயம் சார்ந்த பிள்ளைத்தமிழ் நூல்கள் இருப்பதைக் காண முடிகிறது.

அகத்திணைத் தத்துவமும் முருகன் பிள்ளைத்தமிழும்.

நூலின் உரையாசிரியர்கள், மனித வாழ்வின் உயர்வுக்குத் தேடப்பட்ட அகத்திணை என்பது உள்ளத்தின் உண்மைத் தேடலையே குறிப்பதாகக் கருதுகின்றனர். இந்தத் தேடலின் இலக்கைக் குறிக்கும் வகையில், பாடல் 21-ற்கு பதவுரை மற்றும் பொழிப்புரைகள் எழுதிய ச. திருநாவுக்கரசு, உரை வீரசைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குகிறது.

"அரும்புக் கருணை மாரிசொரிந்து
அன்பு பூண்டோர் அனைவருக்கும்
ஆணவ ஆதிப் பாசங்கள் அகற்றித்
தாபத் திரையம் தணியஞ்" **(21)**

இப்பாடலானது, மயிலம் முருகன் பாலசித்தருக்குக் குருவாக வந்து அருள்புரிந்தமையைக் கூறுகிறது. அன்புடன் நாடி வரும் அடியார்களுக்கு முருகன், அருள்மழை பொழிந்து, அவர்களின் பிணிகளைப் போக்கி, ஆனந்தப் பயனைத் தந்தருளும் கருணைத் திறத்தைச் சிறப்பிக்கிறது. மேலும்,

- மும்மலங்கள் (மும்மல நீக்கம்): முருகன், தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை நீக்கி அருளுகிறார் என்று உரை விளக்கம் அளிக்கிறது. உள்ளத்தின் மாசு நீங்குவது, அகத்திணையின் உயர்வுக்கு அவசியமான ஒரு தேடலாகும். (முருகன் பிள்ளைத்தமிழ்.109)
- தாபத்திரயம் (மூவகைத் துன்பம் நீக்கம்): மேலும், பாடல் 21-இன் உரை, மனிதர்களுக்கு வரும் தாபத்திரயமாகிய (மூவகைத் துன்பங்களாகிய) ஆதி ஆத்மீகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்விகம் ஆகிய துன்பங்களும் தணியும் என்று விளக்குகிறது. எனவே அகத்திணை என்பது உலகியலில் உள்ள அடிப்படைத் தேவைகளைத் தாண்டிய உள்ளத்தின் அமைதி

மற்றும் ஆனந்தத்தை நாடுவது. பாடல் 21 விளக்கும் மல நீக்கமும், தாபத்திரய ஒழிப்பும். (முருகன் பிள்ளைத்தமிழ்.110) அத்தகைய உள்ளத்து அமைதியையும், பேரின்பத்தையும் (பேரின்பப் பயன்) அடைவதையே சுட்டிக் காட்டுகிறது, இதுவே, நூலின் உரைப்பகுதி சுட்டும் உயரிய அகத்திணைக் கருத்தாக்கத்தின் தத்துவார்த்தப் பிணைப்பாகக் கொள்ளப் படுகிறது. மன உணர்வின் வெளிப்பாடே அன்பு என்பதும் அதன் நீண்ட நீட்சியே உள்ளத்தின் அமைதியாகிய இறை தேடலைக் குறிக்கிறது எனலாம்.

தொல்காப்பிய அகக் கருத்தாக்கத்தை ஒட்டி, தாலாப்பருவம் பகுதியிலிருந்து ஒரு பாடலையும், அதன் விளக்கத்தையும் சான்றாகக் காணலாம்.

தொல்காப்பியம் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்

1. அகத்திணையியல் -செவ்வியல் அகம் (தத்துவார்த்த அகம்)
2. இன்பம் - காதல் ஒழுகலாற்றால் விளைவது. "பொருள்முதல் ஆறே" (அகத்திணையியல், நூற். 54). பேரின்பம் அல்லது வீடுபேறு - மும்மலங்கள் நீங்குவதால் கிடைப்பது. அருளு மழையைச் சொரிந்து அன்பு பூண்டோர்... (தால் பருவம், பா. 21).
3. மக்கட்குரிய ஒழுகலாறு - என ஐந்திணை நெறிகளை வகுத்தல். உணவு, உறக்கம் தாண்டி அக உணர்வை ஆராய்தல் மூலம் ஆன்மீக உயர்வைத் தேடுதல்.
4. அறநெறி பிறழாத இல்வாழ்க்கை அமைதல்.
   தாபத்திரயம் தணிதல் மற்றும் ஆன்மீக விடுதலை அடைதல்.

முடிவுரை

'மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்' நூலின் உரைப்பகுதியானது, ஒரு பக்தி இலக்கிய நூலின் மையக்கருத்திற்கு விளக்கம் அளிப்பதற்கும் பழம்பெரும் இலக்கணமான தொல்காப்பியம் மற்றும் அதன் அகத்திணைக் கருத்தியல் எவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கும் துணைநிற்கிறது. பிள்ளைத்தமிழை, வெறும் பக்திப் பாடலாகக் காணாமல், தொல்காப்பியம் வரையறுத்த 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்ற இலக்கிய இலக்கணத்தின் அடிப்படையிலும், மனிதர்களின் அக உணர்வுத் தேடலின் ஒரு பகுதியாகவும் அணுக

வேண்டும் என்ற விரிவான தரவினை இந்நூல் முன்வைத்துள்ளது. குறிப்பிடப்பட்ட அகத்திணைக் கருத்தாக்கத்தின் மனிதர்கள் அடிப்படைத் தேவைகளைத் தாண்டி, உள்ளத்து உணர்வுகளை ஆராய்ந்து, வாழ்வியல் நெறிகளை அறிய தொல்காப்பியம் துணைநின்றது தெரிய வருகிறது.

தொல்காப்பியத்தின் அகத்திணையியல் (செவ்வியல் அணுகு முறை) என்பது தலைவன்-தலைவியின் உலகியல் காதல் ஒழுகலாற்றுக்கு இலக்கணம் வகுக்கிறது. ஆனால், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் நூலின் உரைப்பகுதி, அகத்திணையின் அடிப்படைக் கருத்தாக்கத்தை (உள்ளத்து உணர்வுகளுக்கான தேடல்) எடுத்துக்கொண்டு, அதை ஆன்மீகத் தேடலுக்கான தத்துவார்த்த அடிக்கருத்தாகப் பயன்படுத்துகிறது

துணை நூற் பட்டியல்

1. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் மூலமும் உரையும், வ.வைத்தியநாத தேசிகர்.2021. மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம்.

2. தொல்காப்பியம் பொருளதிகாரம் உரைவளம், சிவ லிங்கனார். ஆ.,1983, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் தாலாட்டுப் பாடல்களில் ஆன்மீகச் சிந்தனைகள்

முனைவர் க. விஜயராகவன்,
தலைவர்-தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம்-5, 9994337501
sonaragavan@gmail.com

இந்தப் பிரபஞ்சம் ஆற்றல் நிறைந்தது. அது உலகின் மையமாகவும் உலகமாகவும் உருபெற்று அதனுள் மானுடச் சமுதாயமாகவும் பல்லுயிர்களாகவும் இயற்கை அரண்களாகவும் பல்வேறு பரிணாமங்களில் வியாபித்திருக்கிறது. ஆன்மீகம் என்பது நல்வழிப்பாதைக்கான வழிகாட்டுதல். ஆன்மீகக் கூறுகள் மானுடச் சமுதாயம் நயமுடனும் ஒழுங்கமைவுடனும் தீர்க்கமுடனும் செல்வதற்கான நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்து அழகுடனும் பாங்குடனும் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு கால கட்டங்களிலும் இலக்கியங்கள் சூழலியலுக்குத் தகுந்தாற்போல மாற்றங்களையும் போக்குகளையும் அடைந்து வருகிறது. எனினும் மனித வாழ்வியலில் வாழ்க்கை முறையில் பெரிதாகப் பண்பாடு சார்ந்த மாற்றங்களைக் காண முடியாது. நாகரீக வளர்ச்சிகளுக்கான மாற்றங்கள் நிகழுமே அல்லது பிற மாற்றங்கள் இல்லை எனலாம்.

மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே வரும். மனித இனத்தில் அவர்தம் மனங்களை ஒருங்கு நிலையில் நிலை நிறுத்திக்கொள்ள ஆன்மீக சிந்தனைகள் அவசியமாகிறது. அதற்கான சிந்தனையாளர்கள் பற்றாளர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களும் அந்தச் சிந்தனைகளும் இல்லையெனில் இந்தப் பிரபஞ்சம் நிலைத்த தன்மையுடன் இருந்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்றே சொல்லலாம். அப்படி ஆன்மீகத்தைத் தனது அழகு தமிழால் மானுட இனம் நலமும் வளமும் பெற எண்ணற்ற இலக்கியங்களை இந்த உலகிற்கு அளித்த கொடை வள்ளல் ஸ்ரீ சிவஞான பாலய தேசிக சுவாமிகள். அவரது எழுத்துப்பணியில் சிந்தி தெளித்த கருத்துகள் ஒவ்வொரு மானிடரின் வாழ்வியலுக்குமான ஆன்மீக நெறி. அவர்மீதான அளவுகடந்த அன்பின் பற்றின் காரணமாக ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள் தனது குரு ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளின் மீது பாடியருளிய 'தாலாட்டு' எனும் நூலில் வெளிப்பாடும்

ஆன்மீகச் சிந்தனைக் கூறுகளைகளையும் அன்பையும் ஆய்ந்து வெளிக்காட்டுவதை மையமாகக் கொண்டு இந்த ஆய்வுச் சிந்தனை களம் விரிந்து அமைகிறது.

தாலாட்டு இலக்கியம்

மண்ணில் மனித குலம் தோன்றிய காலத்தில் இருந்தே ஒரு இலக்கிய வடிவம் இருந்தது என்றால் அது 'தாலாட்டு' தான். உலகின் முதல் இலக்கியமே "எழுதா இலக்கியம்" என்று கூறப்படும் 'தாலாட்டு' இலக்கியமாகும். தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி, அக்குழந்தை உறங்குமாறு இனிய பாடல்களைப் பாடுவதாகும். 'தால்' என்பது நாவினைக் குறிக்கும். நாவினை அசைத்துப் பாடுவதால் 'தாலாட்டு' எனப்பட்டது. பிற பாடல்களும் நாவினை அசைத்து பாடப்பட்டாலும் குழந்தைகளுக் காகப் பாடப்படும் பாடல்களைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது. தொல்காப்பியர்

'குழவி மருங்கினும் கிழவதாகும்'

என்று தொல்காப்பியத்தில் குழந்தைக்குரிய பருவகளைச் சுட்டிக்க ாட்டுகிறார். மேலும், சங்க இலக்கியத்தில் புறப்பாடலாக விளங்கும்,

பரிபாடலில் 'வரையழி வாலருவி வாதாலாட்ட'

என்ற பாடல் வரிகள் தாலாட்டினைப் பற்றிக் கூறுகிறது. ஏட்டில் எழுதா இலக்கியமாக உலா வந்த தாலாட்டுப் பாடல்களை முதன்முதலில் முதன்மைக் கருத்தியல் வழக்காகப் பதிவு செய்தவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களுமே ஆவர். கடவுளைக் குழந்தையாகப் பாவித்து, தங்களைத் தாய் நிலையில் வைத்து தாலாட்டு வடிவத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். ஆழ்வார்களின் பாசுரங்களிலும் நாயன்மார்களின் திருமுறைகளிலும் பற்பல தாலாட்டுப் பாடல்கள் கிடைக்கப் பெறுகின்றன. சிற்றிலக்கிய வகையான பிள்ளைத் தமிழ் மூலமாக தாலாட்டு இலக்கியம் தன் நெடிய பயணத்தை தொடங்கியது. 'தாலப் பருவம்' வாயிலாக ஒவ்வொரு பிள்ளைத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு தாலாட்டுப் பாடல் நிச்சயமாக இடம்பெறத் தொடங்கியது. தற்காலத்திலும் புதுக்கவிதைகள் வடிவத்தில் நிறைய தாலாட்டுப் பாடல்கள் இயற்றப்படுகின்றன.

தாலாட்டில் பாடுப்பொருளாக வருவன

- குழந்தைப் பேற்றை வேண்டி செய்த அறங்களைக் கூறல்.

- பிள்ளைப்பேறு கிட்டியமைக்கு நன்றி கூறல்.
- தெய்வம் தொடர்பான கதைகளைக் கூறல்.
- குழந்தையை வர்ணித்துக் கூறல்.
- குழந்தையின் எதிர்காலத்தை எண்ணி வர்ணித்தல்.

தாலாட்டு - நூற் சிறப்பு

சிவஞானி, சிவஞானதேவன் என்றெல்லாம் நூல்வழக்கில் சிறப்பிக்கப்படும் ஸ்ரீ சிவஞானபாலய தேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவர் ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள். முதல் சீடரும் ஆவார். தன் ஆசிரியர்பால் கொண்ட அன்பினால் அவர்வழி அறிந்த தத்துவ நுண்பொருள்களை உள்ளடக்கி 'தாலாட்டு' எனும் பொருண்மையில் நூலை உருவாக்கினார். இத்தாலாட்டு நூலில் ஆன்மிகம் சார்ந்த தத்துவார்த்தக் கருத்துக்களும், இறைநிலை, இறையுணர்வு ஆகியவற்றை மனமும், அறிவும் அறியும் வண்ணம் இருக்கும் அறிவார்ந்தக் கோட்பாட்டுக் கருத்துகளும் விரவிக் கிடப்பதைக் காண முடிகிறது. மேலும்,

> **"அவஞானம் போக்கி அருள்ஞானம் ஆக்குஞ்**
> **சிவஞான தேவன் திருமுன் - தவஞானத்**
> **தாலாட்டு எனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையாம்**
> **மாலாட்டு மாமுகத்தான் வந்து"**

என காப்பு செய்யுளில் 'சிவஞான தேவன் திருமுன்' எனப் பாடியிருப்பதால் தனது ஞானகுருவின் முன்னிலையிலேயே இந்நூலை ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள் பாடியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

- 1 முதல் 59 வரை , 63, 72 முதல் 80 வரையுள்ள கண்ணிகள் சிவயோகிகளின் ஷட்ஸ்த சித்தாந்தத்தை விளக்குகிறது.
- 91, 98, 100 எனும் மூன்று கண்ணிகளும் தனக்கும் தனது ஞான ஆசிரியருக்கும் உள்ள ஆகச்சிறந்த அன்பினை தொடர்பினை மனமுருகிப் பாடியிருக்கும் கருத்துகளை விளக்கி நிற்கிறது.
- ஏனைய கண்ணிகள் வள்ளன்மை, இடப்பெருமை முதலானவற்றை விளக்குகிறது.

இலிங்கம் சார்ந்த சிந்தனைகள்

காப்பு செய்யுளில் முறையாக விநாயகரைப் போற்றி வணக்கி நூலை தொடங்கியிருக்கிறார். இம்மரபு பழந்தமிழ் இலக்கண

மரபை தெய்வ வழிபாட்டு நித்தியத்தை வலியுறுத்திக் காட்டியுள்ளது. "நிகழ்பிரம்மம்" எனும் சொல் மூலமாக மாறுபாடின்றி ஒரே தன்மையில் இருக்கும் பாங்கினை விவரித்து போகிறார். அதனை, நித்தியம், பூரணம், இன்பம், அறிவு (சித்து), உண்மை (சத்து) என உரைத்து நிற்கிறார். சிவம் சார்ந்த கோட்பாடுகளை மரபு மீறாமல் தனது பாடல்களில் சிவபிராகச சுவாமிகள் பாடியிருப்பது அவரது பக்தி மேன்மையை உலகுணர செய்கிறது.

நன்பாகும் இட்டலிங்க நன்றாம் பிரானலிங்கம்
ஒண்பாவ லிங்கமாம் ஒர்பொருளிங் கென்றனே

எனும் பாடலடிகள் பரசிவம் எனும் ஒன்று இஷ்டலிங்கமாகவும், பிராணலிங்கமாகவும், பாவலிங்கமாகவும் இருப்பது உணர்த்தப் பெறுகிறது.

- இஷ்டலிங்கம் என்பது புறத்தில் தோன்றும் ஸ்தூல தத்துவத்தை உணர்த்துவது.
- பிராணலிங்கம் என்பது அகத்தில் தோன்றும் சூஷிம தத்துவத்தை உணர்த்துவது.
- பாவலிங்கமானது அகத்திலும் புறத்திலும் அகண்ட ஆகாரமாய் விளங்குவது.

என்றும், மேலும்

ஆசார லிங்கமுடன் ஆருங் குருலிங்கந்
தேசரும் இட்டலிங்கம் சேர்ந்தாகும் என்றானோ"

அந்த பிராணலிங்கத் தாகும் சிவலிங்கம்
இந்த சரலிங்கம் என்ரசிவ ஞானியோ"

பாவலிங்கத் தன்னில் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கந் சார்ந்துவரும் என்றானோ

அதாவது இஷ்டலிங்கம் என்பது ஆசாரலிங்கம் மற்றும் குருலிங்கம் என இருவகையாகவும். பிராணலிங்கம் என்பது சிவலிங்கம் மற்றும் சங்கமலிங்கம் எனும் இருவகையாகவும். பாவலிங்கம் என்பது பிரசாதலிங்கம் மற்றும் மகாலிங்கம் எனும் இருவகையாகவும் உணரப் பெறுகிறது.

ஒன்பது வகையான ஆன்மாவும் - இலிங்கமும்

அங்க நவவிதமும் அந்தநவ லிங்கமோடு
தாங்கும் என எனக்கு சாரரும் பெருமானே

மேற்கூறிய ஒன்பது அங்கமும்(ஆன்மாவும்), ஒன்பது இலிங்கங்களுடன் தாங்கும் என்பதை உரைக்கின்றார். அவை முறையே,

ஒன்பது அங்கங்கள்

தியாகாங்கம், போகாங்கம், யோகாங்கம், பத்தன், மகேசன், பிரசாதி, பிராண லுங்கி, சரணன், ஐக்யன்

ஒன்பது இலிங்கங்கள்

இஷ்டலிங்கம், பிராண லிங்கம், பாவலிங்கம், ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவா லிங்கம், சங்கம லிங்கம்,

பிரசாத லிங்கம், மகா லிங்கம்

ஆதார பீடங்கள் - அகப்பூசை

ஆதார பீடங்கள் ஆறினும் அவ்வாறிலிங்க
மீதா வைத்து விளங்கச்செய் வித்தகனே

ஆசார லிங்கம் முதலிய ஆறு இலிங்கங்கள் ஆதார பீடங்கள் ஆறின் மீதும் பொருத்திக் காட்டப்பட்டுள்ளது. அதனை பின்வருமாறு அறிய முடிகிறது.

ஆறு இலிங்கங்கள்

ஆசார லிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாத லிங்கம், மகாலிங்கம்

ஆறு ஆதாரங்கள்

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை

- மூலாதாரம் - ஆசாரலிங்கம் - கிரியா சத்தி
- சுவாதிட்டானம் - குருலிங்கம் - ஞான சத்தி
- மணிபூரகம் - சிவலிங்கம் - இச்சா சத்தி
- அநாகதம் - சங்கமலிங்கம் - ஆதி சத்தி
- விசுத்தி - பிரசாத லிங்கம் - பராசத்தி
- ஆக்ஞை - மகாலிங்கம் - சிற்சத்தி

ஆறு ஆதாரங்களும் இருக்கும் இடங்கள்

- மூலாதாரம் - குதத்திற்கும் லிங்கத்திற்கும் நடுவில் உள்ளது.

- சுவாதிட்டானம் - லிங்கத்திற்கும் நாபிக்கும் நடுவில் உள்ளது.
- மணிபூரகம் - நாபியை இடமாகக் கொண்டது.
- அநாகதம் - இதயத்தை இடமாகக் கொண்டது.
- விசுத்தி - தானத்தை இடமாகக் கொண்டது.
- ஆக்ஞை - புருவத்தி மையப்பகுதியை இடமாகக் கொண்டது.

ஓம் எனும் பிரணவ ரூபம்

அகராதி மாலிங்கத் தாகியவை கூடித்
தகவாம் ஒங்கார சதாசிவமா மென்றானோ

மகாலிங்கத்தில் அகர உகர மகரம் சேர்ந்து அ+உ+ம்=ஓம் எனும் பிரணவமாகி சதாசிவபிர்மம் ஆகும் எனும் நிலைப்பாட்டினை உணர்த்துகிறார்.

பஞ்ச பூத மெய்மைகள்

சதாசிவத்தின் ஐம்முகத்தும் ஐம்பூதம்
வந்துற்று இதயத்து ஆன்மாவருமிங் கென்றானோ

நிலம், நீர், காற்று, நெருப்பு, வான் எனும் பஞ்ச பூதங்களின் தன்மையாக இருப்பவன் இறைவன் எனவும் அதன் பொருண்மையை இறைவனின் ஐந்து திருமுகமாக இருகிறது என்பதையும் பதிவு செய்கிறார். இப்படி சிவதத்துவத்தின் கூறுகளை உணத்தும் குருவை போற்றிய நிலையில் தாலாட்டு பாடி சிறப்பிக்கிறார் சிவபிரகாச சுவாமிகள். பொதுவான, தாலாட்டு முறை இலக்கியங்களைப் போல் இல்லாமல் தனித்த சிறப்புடன் ஆகமங்களையும் அதற்கான விளக்கங்களையும் தத்துவ நிலையில் உணர்த்தி செல்கிறார். உடல், மனம், ஆன்மா, வாழியல் இறைக் கோட்பாடுகள் ஆகியவற்றை சிறப்புற தனது தாலாட்டு பாடல்களின் வழி எடுத்துரைக்கின்றார். இரண்டு வரிகளில் ஆயிரமாயிரம் தத்துவங்களை பகர்கிறார். இந்த தாலாட்டு நூல் உறக்கம் கொள்வதற்கான பாடல்கள் என்பதைவிட நம்மையும் நமக்குள் இருக்கும் இறை சார்ந்த பிரபஞ்ச கோட்பாடுகளையும் உறங்க விடாமல் அவற்றிற்கான தெளிவை கொடுப்பது என்றால் மிகையாகாது.

பொம்மாயை என்னும் புளிமின்வாய்ப் பட்டேனைக்
கைம்மா றிலாமல் கருணைகொட்பு மீட்டான

என்று முடியும் இத்தாலாட்டு நூல் அவரை மட்டுமல்லாமல் ஒவ்வொருவரின் உள் இருக்கும் மாயைகளை களைந்து இறைவனின் திருவருள் நல்கும் பாதத்தினைப் பற்றி கொண்டு வாழும் அன்பு நிலையை உணர்த்துகிறது.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் அறப்பணிகள்

வே. சிவா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம்-05. 90950 73012

தமிழ் மண்ணில் மனிதனாகப் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று மாபெரும் ஆளுமையாக தனி மனித ஒழுக்கங்களோடு வாழக் கூடியர்களை சான்றோர்களாக கருதப்படுகிறது. அவற்றில் சான்றோராக மக்களை நல்வழிப்படுத்தும் விதமாக மக்களுக்கு ஆன்மீக வழியாக புதிய மாற்றத்தை மன அமைதியை ஏற்படுத்தும் வண்ணம் பல துறவிகளும், ஞானிகளும் தமிழ் மண்ணில் தோன்றினார்கள். பிறப்பு என்பது அனைத்து உயிர்களுக்கும் பொது ஆனால் சிறப்பாக வாழ்வதுதான் சுவாமிகளின் மரபு இவ்வரிசையில் ஸ்ரீ சிவஞானபாலய அவர்களின் அறப்பணிகள் மூலம் எப்படியெல்லாம் மனிதர்களை சமூகத்தை நலம் பெற வைக்கிறது என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

சிவஞாணபாலய சுவாமிகள் வருகை

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி! மி
அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்குமது
சும்மா தலைமீது சுமத்தினனால்
கைம்மாறு உளதோ கடையே னிடையே(ப-2)

இவரது வருகையின் நோக்கமானது சைவம் சமயம் வளர்ச்சி அடைய மக்கள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவும், தமிழை செம்மைப்படுத்தவும் ஆன்மீகத்தை அழகுப்படுத்தவும் இப்பூவுலகில் அவதரித்தார்.

சிவஞாணபாலய சுவாமிக்கு முருகன் காட்சி கொடுத்தல்

முருகப்பெருமான் பாலசித்தருக்கு அருள்புரியும் காலம் கனிந்தமையால் பிரிந்த தேவியரைத் தேடிவருவார்போல, மயில மலையை அடைந்து தேவியர் இருக்கும் இடம் இதுவெனத் துணிந்து போர்க்கோலம் கொண்ட அரசர் வடிவத்தில் அம்மாளிகையில் நுழையச் சென்றார். அங்கிருந்த பாலசித்தர், "கன்னியர் இருக்குமிடத்து ஆடவர் புகுதல் தகாது" எனத் தடுத்தும் முருகன் நுழைய முற்பட்டபோது இருவருக்கும் போர் ஏற்பட்டது. பாலசித்தர் முருகன் எய்திய படைகள் அனைத்தையும் தடுத்ததோடு, இறுதியாக முருகன் ஏவிய வேலினையும் கன்னியர் அருளால் தம்வசப்படுத்திக் கொண்டார். முடிவில், முருகப்பெருமான் படைக்கருவிகள் அற்றநிலையில் சித்தருடன் நேருக்கு நேராக மற்போர் புரியத் தொடங்கினார். பாலசித்தரது மார்பில் அறைந்து அவரைக் கீழே தள்ளியும் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரண்டும் காலால் உதைத்தும் போர் புரிந்து அருளினார்.(ப-11)

தான் நேசிக்கும் முருகனை கண்டறிய அவருடைய ஆசியை பெற பல வருடம் தவமிருந்து முருகனின் துணைவியார்களின் முயற்சியால் போர் புரிந்து முருகனைக் கண்டார்.

பாலசித்தரின் சீடராம் ஆதி ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள்

ஒருகால் பாலசித்தர் பொம்மபுரத்தை அடுத்த பெருமுக்கல் மலையில் தங்கியிருந்து வீரசைவத் திருநெறி பரப்பி வந்த காலத்தில் சிதம்பரம் பச்சைக் கந்தமரபைச் சார்ந்த அம்மவை என்பார் மகப் பேறின்றி வருந்தினர். இனிச் 'சிவநெறித்தொண்டே மேற்கொள்ளற் பாலது என்னும் திண்ணிய எண்ணத்தோடே பாலசித்தரை அணுகி அவருக்குத் தம் கணவரும், தாமும் தொண்டு புரியலாயினர். அம்மவை அம்மையார், பாலசித்தருக்குத் தாமே சதுரக் கள்ளிப்பாலைக் கறந்து வந்து கொடுக்கும் திருத்தொண்டினைச் செய்துவந்தார். ஒருகால் அவ்வாறு கள்ளிப் பாலைக்கறந்து தர, அதனை உண்ட பாலசித்தரின் கள்ளிப்பால் பிரசாத சேடத்தால் அம்மவையார், குருவருள்வழி ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தார். பாலசித்தருடைய அறிவுரைப்படி அவருடைய திருவருட் பார்வையில் அக்குழந்தை வளர்ந்து தொண்டு செய்துவர, அவர்தம் பக்குவநிலை உணர்த்த அவரைச் சீடராக அமைத்துக் கொண்டார் பாலசித்தர்.(ப-13)

எந்த ஒரு மனிதனும் சீடராக பணி செய்து பின்புதான் குருவாக மாற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் சிவஞான பாலய அவர்கள். குருவின் கட்டுப்பாட்டில் அரவணைப்பில் இருந்து கல்வி கற்று அவரின் ஆசி பெற்று பின் சாமியாக மலர்ந்தார்.

ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் அருட்செயல்கள்

1.விடம் நீக்கியருவியது

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதரைத் தரிசித்து அங்கு சிவயோகத்தில் இருந்த போது விடந்தீண்டியிறந்த ஒருவனை அன்பர்களின் வேண்டுகோளின் படித் திருநீற்றை உடலில் தடவி உயிர்ப்பித்தார். மேலும், அங்கே எக்காலத்திலும் விடவாதனை இல்லாதிருக்கவும் அருள்செய்தார்.

2.சூலை நோய் நீக்கியது

விடம் நீக்கிய செய்தியைக் கேட்டு அப்பகுதியை ஆண்ட நவாபு, தன் மனைவியை வாட்டி வருத்திய சூலை மி நோயை நீக்கியருள, சுவாமிகளிடம் வேண்டினான். ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் அந்தநவாபினை நோக்கி ஏகாம்பரநாதர் திருச்சந்நிதி முதலியவற்றில் உம்மால் குறைக்கப்பட்ட நித்திய நைமித்தியங்களை முன்போல நடத்தி வந்தால் இந்நோய் நீங்கும் என்றுரைத்துத் திருநீறளித்து நோயினைத் தீர்த்தருளினார்.

3.மணலைச் சருக்கரையாய் மாற்றியருளியது

காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு வீரசைவ நெறியை விளக்கும் பொருட்டு யாத்திரை மேற்கொண்டு செய்யூரை அடைந்தனர். அங்கே வேளாளருள் சிலர் ஒரு புதுக்குடத்தில் மணல் நிறைத்து, மறைத்துக் கொண்டு வந்து தம்திருமுன்பு வைத்ததைத் தம் யோக ஆற்றலால் அறிந்து வெண்மணலைச் சருக்கரையாக்கி யாவருக்கும் அளித்தருளினார். (ப-15)

இயற்கைக்கு மாறாக செய்வது அதிசயமாக கருதப்படுகிறது. அவ்வகையில் சுவாமி அவர்கள் அதிசயங்களை கூட அறவழியில் பிறர் நலம் போன்று வகையில் அதிசயங்களை நிகழ்த்தி உள்ளார். அதிசயங்களை நிகழ்த்தி வாழியடி வாழயென வந்த திரு கூட்ட மரபான சித்தர் வழியில் காட்சி தருகிறார் என்றால் அவை மிகையாகாது.

மயிலம் பொம்மபுர ஆதீனம் : திருமடம்

பொம்மைய பாளையத்தை அடுத்துள்ள பெருமுக்கல் முதலிய மலைகளுக்கும் வனங்களுக்கும் தம் யோக வல்லமையால்

உலாவிச்சென்று ஆங்காங்கு உள்ள சித்தர்களுக்கும் அடியார்களுக்கும் வீரசைவ ஆகம நெறிகளை உணர்த்தினார். பலவித் சித்துக்களையும் செய்தருளினார். பால வயதினராய் சித்துக்கள் பல செய்தமையால் பாலசித்தர் எனப் பெயர் கொண்டார். பிரம்ம நிலையை உணர்ந்து தங்கியிருந்தமையால் இவ்வூர் பிரம்மபுரம் என வழங்கலாயிற்று. (நாளடைவில்) பிரம்மபுரமே பொம்மபுரம் ஆயிற்று. பாலசித்தரின் தவ ஆற்றல் உலகில் பரவியதால் சீடர்கள் பலர் உருவாயினர். அச்சீடர்களின் பக்குவ நிலையறிந்து ஞான உபதேசம் செய்தருளி தாம் தங்கி சிவயோகம் புரிவதற்கு அமைத்துக்கொண்ட திருமடம் பொம்மையப் பாளையத் திருமடம் என்ற பெயரில் அழைக்கப்பட லாயிற்று.

சுவாமி அவர்கள் மடம் அமைத்து ஆன்மீகப் பணி,தமிழ் பணி, சமூகப் பணி செய்துள்ளார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் படைப்புப் பணிகள்

பழங்கால சைவ இலக்கியங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சுக்குக் கொண்டு வரும் திருப்பணியைத் தொடங்கி வைத்தது மயிலம் பொம்மபுர ஆதீனம் எனலாம். நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் பலவும் மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடாகவே பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

ஆதியில் தோன்றிய சைவ இலக்கிய நூல்களை ஓலையிலிருந்து நூலாக ஒளி பெறச் செய்து மேலும் பல அறியநூல்களை அச்சேற்றி வெளியிட்ட பெருமை நமது சாமிகளையும் மடத்தையும் சாரும்.

பசிப்பிணி மருத்துவன் சிவஞானி

ஆற்றல் பெரியோர் ஆற்றுவார்க்கு
ஆற்றல் பசியை ஆற்றுதல்என்று
அறைந்த மொழியைக் கடந்துசிவன்
அடியார் எனும்நல் விருந்து அழைத்துச்
சோற்றுக் குவடு தொலைத்தசிறு
தொல்லைப் பூதம் ஒருகோடி
தொலைத்தற்கு அரிய செஞ்சாலிச்
சோறும் கறியும் கைகவிப்ப
ஊற்றற்கு அமைந்த பால்தயிர்நெய்
உதிர்தீம் கனியும் முறைமுறையே
ஒழுகு பந்தி பலஇருத்தி

உவந்து படைத்துத் தீப்பசியை
மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு
வல்லாய் தாலோ தாலேலோ
மயிலை வரையில் சிவஞான
மணியே தாலோ தாலேலோ. **(சி.பா.தே. பிள்ளைத்தமிழ். 21)**

பசியைப் பொறுத்துக்கொள்ளும் பெரியவர்களை விட அப்பசியைப் போக்கும் இல்லறத்தார் பெரியர் எனும் வள்ளுவர் மொழியை மாற்றி சிவஞானியாகிய துறவி செஞ்சாலிச்சோறும், கறியும், கனியும், பால், தயிர், நெய் எனப் பல விருந்து படைத்து தீப்பசியை மாற்றும் ஆற்றல் உடையவர் ஆகிறார்.(ப-23)

ஸ்ரீசிவஞான பாலய சுவாமி அவர்கள் மக்களுக்குப் பசிப்பிணி போக்கு விதமாகக் காய்கறிப் பழங்கள் பால், தயிர், நெய் கலந்து உணவுகளைக் கொடுத்து பசிப்பணியைப் போக்கி உள்ளார் அப் பசிப்பிணி போக்கு அரிய செயல்கள் இன்றும் நடந்து வருகிறது.

ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் கிளைமடங்கள்

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் இவ்வாறு வழிபாடாற்றி வருங்காலத்து மீண்டும் ஆதிபூர்வீகத் தலமாகிய பொம்மபுரத்தில் சிவயோகம் புரிய எழுந்தருளினார்.

இக்காலத்தில் தம் சீடர்களோடு காஞ்சிபுரம், சிதம்பரம், செய்யூர், நல்லாற்றூர், புதுவை, பெருமுக்கல், பழநி, திருக்கழுக் குன்றம். பெரும்பேற்றுக்கண்டிகை, திருவண்ணாமலை முதலிய இடங்களில் திருமடங்கள் அமைத்தும், தம்மிடம் வந்த சீடர்களுக்கு உபதேசம் புரிந்தும் தொண்டு செய்தனர்.

மயிலை திருமடத்தை தலைமையாகக் கொண்டு சிவஞான பாலய அவர்கள் ஆன்மீகப் பணியும் தமிழ் பணியில் சமூகப் பணியும் செய்தார். அவரைப் பின்பற்றிய சீடர்களும் தமிழுக்கும் ஆன்மீகத்திற்கு சமூகத்திற்கும் தொண்டு செய்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது.

மயிலமலையில் பாலசித்தரின் ஜீவசமாதி

முருகன் அருள்பெற்ற பாலசித்தரும் பாலசித்தரின் சீடராகிய ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளும் பொம்மபுரத்தினின்று மயிலமலையை அடைந்தனர். தங்களின் ஆன்மார்த்தமாகிய இட்டலிங்கப் பரசிவத்துவ பூசையுடன், தமக்குக் குருவாகச் சங்கமத் திருக்கோலத்தில் எழுந்தருளித் தீட்சைசெய்தும், தம்மால் தரப்பெற்ற

இருபுதல்வியர்களை ஏற்று. மணம் செய்தும் விளங்கும் முருகனை வள்ளி தெய்வானையுடன் திருமடத்தில் எழுந்தருளச் செய்து, நித்திய நைமித்தியப் பூசைகளுடன் மக்களுக்குத் தொண்டு செய்து வழிபாடாற்றி வந்த நிலையில் சிவயோகப் பெருவாழ்வு வாழ்ந்த பாலசித்தர் ஓர் ஆனிமாதத் திருவாதிரை நன்னாளில் தம் விருப்பப்படியே தம்மால் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி மகிழ்ந்த மணக்கோல முருகனின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி கூடினார்.

தன் உயிரை உடலை சமாதியாக மாற்றுவது தான் சித்தர்களின் அரும்பணியாக இருந்தது. அவ்வகையில் சுவாமி அவர்கள் தனது உடலை இறைவனோடு கலந்து சமாதி அடைந்தார் அவர் மறைந்தாலும் அவருடைய எண்ணங்கள் அவருடைய பணிகள் என்றும் மறையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவருடைய சீடர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

முடிவுரை

மனிதனாகப் பிறந்து மாணவனாக, சீடனாக,அறிஞனாக, ஆன்மீக அன்பராக, சமூக சீர்திருத்தவாதியாக தன்னை மாற்றி என்றால் அவை மிகையாகாது. சைவ சமயம் வளர்ச்சி அடைய, சமூகம் வளர்ச்சி அடையவும் தமிழ் புத்துணர்ச்சி அடையவும் கடவுளின் அருளைப் பெற்று மண்ணுலகில் அவதரித்தவர் தான் சிவஞான பாலய சுவாமி அவர்கள். அவதரித்த நோக்கத்தை அறுவடை செய்து அறப்பணி ஆற்றியதால் அவர் மறைந்தும் என்றும் மறையாமல் மக்கள் மனதில் சீடர்களில் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிறார். சுவாமிகள் செய்த அறப்பணிகள் சாதாரண மனிதனை அறப்பணி செய்ய தூண்டு விதமாகச் சுவாமிகளின் நற்பணிகள் அமைந்துள்ளது.

துணை நூற்பட்டியல்

1. மயிலம் பொம்மபுர ஆதீனம் திருமட வரலாறு வெளியீடு மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் 604 504.

மயிலாசல அனுபூதி' தரும் மன அமைதி

கு. திருமுருகன்,
உதவிப் பேராசிரியர், உடல்கல்வித் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம்,. பேசி - 9345639542

முன்னுரை

மயிலம் திருத்தலம் மிகவும் பழமையானாதும் சிறப்பு மிக்கதும் ஆகும். இக்கோவில் வழிப்பாட்டால் நல்லறிவையும், மன அமைதியையும் பெற முடியும் என்பது எல்லோருடைய நம்பிக்கையாகும். புராணக் கூற்றுப்படி சூரபத்மன் மயிலத்தில் வடக்கு நோக்கி தவம்புரிந்து பின் முருகனின் வாகனமாக மாறியதாகக் கூறப்படுகிறது. மயிலம் மலைக்குன்றின் அமைப்பு மயில் வடிவத்தில் அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இச்சிறப்புமிக்க மயிலம் மயிலத்தில் பொம்மபுர ஆதீனம்இந்த ஆதீனம் தமிழ்மொழி வளர்ச்சியிலும் சமய இலக்கியங்களை வெளியிடுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனது. இதனை வெளிக்கொணரும் நோக்கிலும் தமிழ் என்றால் முருகன் என்று அனைவராலும் போற்றி வழங்கப்படும் தமிழ்க் கடவுளான முருகனை வழிபட்டால் மனம் அமைதி அடைகிறது என்பதைக் காட்டும் நோக்கிலும் இக்கட்டுரைப் போக்கு அமையப் பெறுகின்றது. ஸ்ரீமயிலாசல அனுபூதி நூலின் வழி சாமிநாதப்பிள்ளை அவர்களின் கூற்றாய் அமையப் பெற்ற பொருண்மையை ஒட்டிக் கட்டுரை அமைகின்றது.

அடியாருக்குப் பாதுகாவலன்

மயிலை மலையின் உச்சியில் வீற்றிருக்கும் முருகக் கடவுளின் கடவுளின் சிறப்புகள் மயிலாசல அனுபூதியல் விளக்கம் பெறுகின்றன.

திருமால் மருகா சிவ சண்முகவா
வருவாய் மயிலாசல அனுபூதி **(பா.1)**

திருப்பாற்கடலில் வீற்றிருக்கும் திருமாலின் மருமகன் சிவனது இளைய மைந்தன் ஆறுமுகம் கொண்ட காவலனே குருவாய் நின்று திருவருளைப் பொழிந்து மயிலாசல அனுபூதி என்னும் உயர்ந்த ஞானப்பனுவலை இயற்றிட அருள் புரிய வேண்டும் என்று ஆசிரியர் மேற்கூறிய பாடலின் வழி இறைவனை வேண்டி நிற்கின்றார்.

இறைவனிடம் இருக்கும் அருளினைப் பெற அவனிடம் அன்பு கொண்ட அடியவர்கள் உலகில் பிற துன்பத்தால் இன்னலுறும் மானிடப் பிறவிகளை ஆற்றுப்படுத்தல் இறைவனிடம் இட்டுச்செல்லும் பாதையைக் காட்டுபவர்களே குருநாதர். மனம் மொழி, மெய் ஆகிய மூன்றையும் சமநிலைப் படுத்த ஞானகுரு தேவை, ஆகையால்தான் தெய்வத்தை விடவும் மிஞ்சியவர் குருநாதர் எனப் போற்றுகின்றோம். திருவருள் ஒன்றினால்தான் திருவருளைப் பெற முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியவர். முருகப்பெருமானிடம் அருளைப் பெற்று மயிலம் திருமடத்தில் எழுந்தருளியவர் பாலசித்தர் ஆவார். இந்த ஞானபரம்பரையில் வீரசைவத்தையும் தமிழையும் தழைத் தோங்கச் செய்வது மயிலம் பொம்மபுர ஆதீனம் என்பதைப் பறைசாற்றுகின்றது. ஒருவரின் கர்மவினைகளை நீக்கி இறைவனைக் காட்டக் கூறியவர் குருநாதர். எனவே,

தொழுது வழிபடும் அடியார்
காவற் காரப் பெருமானே **(பழநி - திருப்புகழ்)**

என்ற பாடல் வரிகளில் அருணகிரிநாதர் தன்னை வணங்கும் அடியார்கள் மீது அன்பு கொண்டு அவர்களைப் புறத்தாலும், உள்ளத்தாலும் காத்து தீய எண்ண அலைகள் தோன்றாமல் தடுக்கும் கந்தனைப் போற்றுகின்றார். சான்றோர் வாக்கினை நினைவுகூறும் வகையில் ஞானகுருவான சிவஞான பாலய சுவாமிகள், இறைவனை அடைவதற்குறிய பாதைகளை நமக்குக் காட்டினாலும் மனித மேன்மையின் பல்வேறு சிறப்புகளை எடுத்துரைத்தும் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் இவை பயன்படுகின்றன என்பதையும் நமக்குள்ளே அவர் விதைத்துச் சென்றுள்ளார். 'அன்பே சிவம்' என்ற நோக்கில் மனித இனம் அன்பு நிறை வாழ்வு வாழ வேண்டும் என்றும் இதுவே இறைவனை அடையும் வழி என்றும் அறியப்படுகிறது.

அளவிடமுடியாத அளவுடையான்
நிலையற்ற உலகில் நிலை பெற்றவன்
வெற்றி வடிவேலன் அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
துள்ளி வருகுது வேல்" **(பாரதி, தெய்வப்பாடல்)**

எந்தக் கடவுளின் பெயருக்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ்க்கடவுள் முருகப் பெருமானுக்கு உண்டு. நம்முடைய தீவினைகளை நீக்கி மகிழ்வு பெறவே ஒளி வீசும் வேலினைக் கரத்தில்

ஏந்தி துன்பங்கள் யாவையும் தீர்ப்பான் என்பதனை மகாகவி கூறுகின்றார். பகை என்பது நமக்குள்ளே குடி கொண்டிருக்கும் பகை மட்டுமல்ல. சுற்றி இருக்கும் பகை என நாம் கருதும் அனைத்தையும் மாற்றி அருளும் வல்லமை அவனுக்கு மட்டுமே உண்டு என வழிபடும் அன்பர்களுக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறார். தீராத வினைகள் யாவையும் தீர்க்கும் கந்தனே! நம் சொந்தம் என்பார் வாரியார் சுவாமிகள். எல்லாம் வல்ல பரம்பொருளுக்குத் தற்பரம் என்று கூறுவர். தற்பரம் என்னும் சொல்லுக்கு மேம்பட்டது என அகராதிகள் பொருள் தருகின்றன. இவ்வுலகில் மாயைகளைக் கடந்து தன்னந்தனியாய் நிற்கும் பிரம்மமே தற்பரமாகி அடியார்க்கு அருள்புரிய முருகனாக அவதரித்தான்.

தன்னந் தனி தற்பரமே அடியார்
மின்னும் பரிபுர பவனே முருகா (மயிலாசல அனுபூதி)

தமிழ்க்கடவுள் எனப் பெரும்பேறு பெற்ற வடிவேலனைச் சூடாமணி நிகண்டு *31* பெயர்களாகச் சுட்டுகிறது. அதில் முதல் பெயர் முருகன் என்பது ஆகும். இத்திருப்பெயரை உச்சரிப்பதால் உண்டாகும் பயன்கள் பற்பலவாகும்.

ஆனா அமுதே! அமில்வேல் அரசே!
ஞானாகரனே! நவிலத் தகுமோ!
யானாகிய என்னை விழுங்கி
வெறும் தானாய் நிலைநின்றது தற்பரமே! (கந்தர் அனுபூதி)

என்ற பாடலில் அருணகிரிநாதர் இறைவன் தன்னை ஆட்கொண்ட திறத்தை விளக்குகின்றார்.

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து (குறள் 24)

என்ற குறட்பாவில் தமிழ்ப்புலவர் புலனடக்கம் உடையவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு வாழ்வியல் போக்கை நன்கு உணர்ந்தவர்கள் நல்லறமான வாழ்க்கைக்கு ஒரு விதையாகவும் வீடுபேறு அடைவதற்கான வழியினை நன்கு அறிந்தவர்களாகவும் விளங்குவார்கள் என்பதை வலியுறுத்துகின்றது. மனிதன் தன் வாழ்க்கை முறையினை வடிவமைக்க கற்றவனே இவ்வையத்தை ஆட்டுவிப்பவனாகத் திகழ முடியும். அந்தத் தத்துவத்தை விளக்கும் பொருட்டே கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளின்

தூண்டுதலுக்கு ஆட்படாமல் எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் தன்னை எவ்வாறு காத்துக் கொள்ளலாம் என்பதை நன்குணர்ந்தவனாய்த் திகழ்கின்றான்.

தன்னைப் பற்றிய தெளிந்த புரிதலை உடைய தங்கள் உணர்வுகளின் போக்கில் அடித்துச் செல்லாமல் அனைத்து நிலைப்பாட்டிலும் பதற்றமில்லாமல் தெளிவாகச் சிந்தித்து சிறந்த முடிவுகளை எடுக்கக் கூடியவனாகத் திகழ்கின்றார். மற்றவர்களின் பலம் பலவீனங்களைப் புரிந்து கொள்வதற்கு முன் தனது பலவீனத்தை ஏற்றுக் கொள்பவர் மற்றவர்களை எளிதில் புரிந்து கொண்டு அவர்களுடன் நன்றாகப் பயணிக்க முடியும்.

வெளியுலகைக் கட்டுப்படுத்துவதற்கு முன் ஒருவர் தன் உள்ளுலகத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும். ஒருவர் தன்னைக் கட்டுப்படுத்தும் போதுதான் தனது வாழ்க்கையின் மீது முழு அதிகாரத்தையும் பெறுகிறார். அதுவே இவ்வுலகை ஆள்வது போன்றதாகும். சிக்கல் நிறைந்த உலகத்தில் சமூகச் சீர்திருத்த சிந்தனை கொண்டவர்களாகவும் புறநலம் பேணும் நல்லெண்ணம் கொண்டவர்களாகவும் திகழ்வதற்கு நற்சிந்தனைகளை மக்கள் மத்தியில் பதிய வைக்க சமூகப் பொறுப்பினை ஆற்றியவர் சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். அவரின் மொழிப்பற்றும் தமிழரின் கலாச்சாரச் சீர்திருத்தப் போக்கும் மானிட இனத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக விளங்குகின்றது. மாறுபட்ட சூரனை வென்று அதர்மத்தை அழித்தும் தர்மத்தை நிலைநாட்டும் நல்ல வாழ்வியல் போக்கை நமக்கெல்லாம் அனைத்து காலத்திற்கும் ஏற்படுவதாய் விளங்கிக் கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது.

முடிவுரை

புகழ் கல்வி வலிமை வெற்றி
நன்மக்கள் பொன்நெல் நல்லூழ்
நுகர்ச்சி அறிவு அழகு பெருமை
இளமை துணிவு நோயின்மை வாழ்நாள்

என்னும் 16 பேறுகளும் பெற்று இவ்வண்டத்தின் நன்மக்களாய் வாழ அனைத்து வழியினையும் காட்டுகின்ற மயிலம் பொம்மபுர ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் சிவஞான பாலய சுவாமிகளை முதற்கொண்டு இக்கால கட்டத்தில் நம்மோடு நம்மில் அனைவரும் நற்கதி பெற வேண்டி சமயத்தொண்டும் சமூகத்தொண்டும் ஆற்றும் ஆதீன மடத்தின் பெருமையைப் போற்றுவோம்! மன அமைதி அடைவோம்!

மயிலம் முருகன் மீது பாடப்பட்ட அறியப்படாத திருப்புகழ் பாடல்: மயில் நடனம்

க. அருள்பாண்டியன்
முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.

தமிழகத்தின் முதல் வீரசைவத் திருமடம் என்று புகழப்படுவது மயிலம் வீரசைவ பெரிய திருமடமாகும். திருக்கயிலாய பரம்பரையில் வந்தருளிய பாலசித்தர் என்னும் அருட்குருநாதனின் வழியில், ஆதி சிவஞான பாலய சுவாமிகள் இப்பெருநெறியை உலகெங்கும் பரவும் வகை செய்தார். வீரசைவம் என்னும் உயர் தத்துவம் உலகில் பொம்மபுரக் கடற்கரையில்தான் முதன்முதலில் தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மரபில் பல்வேறு ஞான குரு, மாணவர் பரம்பரையினர் தோன்றினர். அவர்களுள் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கற்பனைக் களஞ்சியம், திருக்குறள் களஞ்சியம் என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர்.

நல்லாற்றூர் என்னும் திருப்பதியில் ஜீவசமாதி அடைந்த சிவப்பிரகாச சுவாமிகளின் திருவருளால், தன் கவிக்கு எண்ணியதை எய்தும் ஆற்றல் கிடைத்தது என்கிறார் புதுவை மாநிலம், லிங்காரெட்டிப்பாளையத்தைச் சார்ந்த கோ. சீ. நடேசன் என்னும் புலவர். (முகவுரை, குன்றுதோராடும் குழந்தை திருப்புகழ், கோ.சீ.நடேசனார்) இவர் இயற்றிய "குன்றுதோராடும் குழந்தை திருப்புகழ்" என்னும் நூலில், 160 திருப்புகழ்ப் பாடல்களை இயற்றி உள்ளார். இக்கட்டுரையானது இந்நூலில் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் அறியாத மயிலம் முருகப்பெருமான் மீது பாடப்பட்ட "மயில் நடனம்" என்னும் திருப்புகழ்ப் பாடலைக் கண்டறிந்து, அதனை வண்ணப்பா இலக்கணப்படி தருவதாக அமைகிறது.

மயில் நடணம் திருப்புகழ்ச் சிறப்பு

விழுப்புரம் மாவட்டம், மயிலம் வட்டத்தில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர் வீடூர் என்பதாகும். அங்கு 20.12.1959இல் கட்டப்பட்ட "வீடூர் அணை" என்று ஒரு நீர்த்தேக்க அணை உள்ளது. இதனைக் கட்டியும் இதில் மழைநீர் தேங்காமையினால் வேளாண்மை வெறிச்சோடிப் போயிற்று. இதனால் மனம் வருந்திய

மக்கள், கோ.கீ.நடேசன் அவர்களிடம் முறையிட, அவர் மயிலம் முருகன் மீது மனம் உருகி மயில் நடனம் என்னும் இத்திருப்புகழ்ப் பாடலைப் பாடினார். அதில் சங்கராபரணி என்னும் ஆற்றின் வழி நீர் பாய்ந்து நிறைய வேண்டும். மயிலம் முருகப்பெருமானின் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் மயிலே! நீ நடனம் ஆடினால் மழை பொழியும் எனப் பாடலைப் பாட, மயிலினங்கள் வீடூர் அணையில் அமர்ந்து பாடல் கேட்டதாகவும், அதன் விளைவாக முதல் முறையாக மழைநீரால் அவ்வணை நிறைந்தது என்று இன்றளவும் விழுப்புரம் பகுதிகளில் நிகழ்த்தப்படும் தெருக் கூத்துகளிலும்1 அப்பகுதியில் வாழும் மக்களிடமும்2 வாய்மொழி வழக்குக்கதை ஒன்று சொல்லப்படுகிறது. அத்திருப்புகழ்ப் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

தான தானனா தன தான தானனா தன
தான தானனா தன தான தானனா தன
தந்தந் தந்தன தந்தந் தந்தன
தந்தந் தந்தன தந்தந் தந்தன
தான தானனா தன தான தானனா தன
தான தானனா தன தான தானனா தன தனதனதான

ஆடு மாமயிலே வினை யாடி வாமயிலே கனி
வோடு நீமயிலே வெதி ரோடி வாமயிலே சரி
யன்றுன் நிந்தை யடங்குங் குன்றிட
விங்குன் றின்புரு மன்பும் பொங்கி
வாவ லோடினிதா வொரு சேவ லேகொடியா யடி
யாரு மேதனதா கர ராதி யோருளதாம மதை கெடவொளிவீசி

வாறு மாமுகனோ டழ கான மாதருமா மனை
யாளு மேறிடவே வுல காசை வோடிடவே முன
மந்தந் தந்தவி டஞ்சென் றுஞ்சின
முங்கொண் டிந்திர னுங்கண் டுந்தனை
வாசி கூரிடவே பல வோசை மீரிடவே வெதி
பாலி பாடிடவே மட மாத ராடிடவே திரி புவனமதுவாட

நீடு மானிலமே ருட னாட யோகினியோ டெதி
ராடு மீசனோடேகன நாத பூதமதோ கலை
நின்றன் றுஞ்சொல வஞ்சுங் கஞ்சனு
டன்சொன் றங்கும ணங்குஞ் சம்ரம
நீத மாமனுமே திரு மாது மாமிசதா சுக

நேய மாமனே டதிரூப தேவிரதா ருட னெதிரவராட
நேரு பாறொடுலா வரு ணோத யாநிதியா நில
வோடு கூடினமா பல கோரூ மேவலமா வர
நின்கண் விண்ணெழி லுந்தன் பண்பென
வண்ணம் பொன்னொளி மின்னுந் தன்சிவ
நீறு பூசிடுவோ ரொரு கோடி கோடிசதா சடை
தாடி யோடுகுகா குகா தியே ததிவா வென புகழதுபாட
நாடு சீருறவே தவ ஞான மோதிடவே வரு
னோடு பாடிடவே சிவனோடு கூடிடவே மிக
நம்பும் பன்னறு மும்மன் சின்மய
சன்மன் பன்பரு முன்வந் தின்புர
சாது வீணையினே யிசை பாடும் மாமுனிவோர் மரை
நாலு மோதிடவே மலர் மாலை சூடிடவே வரு மவரளவேதோ
நாக மாடுதுசீ ரொரு வோதை தேடுதுபா ரதை
நாடி வூணிடவே லொளி வீசு மாதலினா லதை
நன்றென் றெண்ணிட லுந்தன் பந்துவை
கொன்றுன் னின்றப மென்றென் றின்புர
தாத மோடினிதா வடி போடு மேவெளிதா கலை
யாவு மேவுறிதா குறி யான தேபெரிதா வல மிடமதுமாறி
கூடு பாய்வதுபோ லுட லுரடு தாவிடுநீ கொடி
போடு போடெனவே சிற கோடு வாடிடவா பல
குன்றங் குன்றிடு மென்றெண் ணுங்கிரி
சிங்கஞ் செந்தமிழ் பொங்குந் துங்களின்
கோடு மீறிடவே தகா துவா திடவே நட
மாட வேயெதிரே கவி பாட வேசதிராய் (வருமொரு பரிவேபோல்)
தான தானனனா தன தான தானனனா டுடு
டுடு டுடுடுடு டுடு டுடு டுடெனதா சணு
டுண் டுண்டிண் டிகு டிங் குண்டின் டென
பொங் குஞ்சங் கொலி தங் குஞ்சங் கர
னாரு பாயுதுபா ரணை நீரு சாயுதுநே ரெழி
லான கோபுரமே லெனை யாட கூவுது சீர
(மயிலமலை பெருமாளே) [108]

தொகுப்புரை

குன்றுதோராடும் குழந்தை திருப்புகழ் என்னும் நூல், தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் அறியாத ஓர் வண்ணப்பா இலக்கிய மாகும். இதில் மயிலம் முருகனின் மீது பல பாடல்கள்

பாடப்பட்டாலும் வரலாற்றுச் சிறப்புமிக்க மயில் நடனம் என்னும் பாடல் மட்டும் கள ஆய்வின் மூலம் சேகரித்துத் தரப்பட்டுள்ளது. மேலும், குன்றுதோறாடும் குழந்தை திருப்புகழ்ப் பாடல்களின் அருட்தன்மைக்கு நல்லாற்றூர் சிவப்பிரகாசர் மற்றும் சிவஞான பாலய சுவாமிகளின் மரபில் வந்த குருஞான அருட்தன்மையே காரணம் என்பதை கோ. சீ. நடேசனார் கூற்றின் வழி அறிய முடிகிறது.

தகவலாளர் பட்டியல்

1. *மணிகண்டன், வயது 43, தெருக்கூத்துக் கலைஞர், வீடூர், விழுப்புரம் மாவட்டம், நாள்: 15.09.2025.*
2. *பெரியசாமி, வயது 59, தெருக்கூத்துக் கலைஞர், வீடூர், விழுப்புரம் மாவட்டம், நாள்: 15.09.2025.*

துணைநின்ற நூல்

1. *குன்றுதோறாடும் குழந்தை திருப்புகழ், கோ.சீ.நடேசனார், மூன்றாம் பதிப்பு, ஔவை அச்சக சாலை, கடலூர்.*

மயிலம் பொம்மபுர ஆதீனங்களின் இலக்கியப் பணியும் சமுதாயப் பணியும்

இரா. குமார்
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்.
கலை அறிவியல் கல்லூரி - 604 304

ஆய்வுச்சுருக்கம்.

உலக மக்களிடை வழங்கப்பெறும் பல்வகை மொழிகளுள் தொன்மை மிக்கது தம் மொழி. இத்தொன்மையான மொழி இலக்கிய வளம், இலக்கணச் செறிவு , தத்துவப் பான்மை முதலான பல்வகைச்சிறப்புகளால் ஆனது. தொன்மையும் சிறப்புமிக்கத் தமிழ்மொழியைத் திருநெறிய தமிழ், தெய்வத்தமிழ் எனப் போற்றுகின்றார் அருளாளர் சேக்கிழார். செந்தமிழும் சிவநெறியும் பரப்பும் வீர சைவ ஆதினங்களுள் ஒன்று மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகும். தமிழகத்தில் வீரசைவ நெறிக்குத் தாயகமாகவும் நாயகமாகவும் நிகழும் இவ்வாதினத்தின் ஆதி குரு முதல்வர் ஸ்ரீ பாலசித்தரின் முதற்சீடர் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். அவர்தம் அருட்சீடர் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். சிவப்பிரகாசர் அருளியவை 34 நூல்கள் ஆகும். இந்த நூல்கள் எல்லாம் சமுதாயத்திற்கு பயனளிக்கும் வகையில் சமுதாயத்திற்காகத்தான் சமயமே தவிர சமயத்திற்காக சமுதாயம் அன்று என்னும் உயரிய நோக்கத்தோடு மயிலம் பொம்மபர ஆதினங்கள் செயல்பட்டு வருகிறார்கள். அவருடைய இலக்கியப் பனுவல்கள் சமுதாயம் மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை தோன்றச் செய்கிறது. அவ்வகையில் சந்நிதானங்களில் பொற்பாதங்களை வணங்கி இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

கருணைக் கடவுள்.

தமிழ் மொழியில் உள்ள எல்லாப் புராணங்களும் இதிகாசங்களும் வடமொழியில் இயற்றப்பெற்றன. இராமாயணத்தை ஆதியில் வால்மீகி வடமொழியில் இயற்றினார். மகாபாரதமும் கந்த புராணமும் மூலத்தில் வியாசமுனிவரால் வடமொழியில் பாடப்பட்டது. ஆனால் பெரியபுராணம் மட்டும் தமிழ் மொழியில் பாடப்பட்டது. தென்மொழியில் இருந்து

வடமொழிக்குச் சென்ற ஒரே நூல் பெரியபுராணம் ஆகும். அதுபோல் சுவாமிகளின் அருளாசியால் சமுதாயப் பணியே சமயப்பணியாக சங்குகன்னப் பாலசித்தர் என்னும் இதழ் உலகெங்கும் செல்கின்றது. இவ்விதழில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் கட்டுரை வழங்குகிறார்கள். வீர சைவத்தின் கொள்கைகள், சமுதாயத்திற்கு பயணளிக்கும் எல்லா செய்திகளும் உலகில் உள்ள எல்லோரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு , சுவாமிகளின் அருளாசியால் தமிழுக்குக் கிடைத்த பொக்கிஷம் சங்கு கன்னப் பாலசித்தர் இதழ் ஆகும் . எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்ற சுவாமிகளின் எண்ணம் தோன்றும் போது கருணைக் கடவுளாக காட்சி அளிக்கிறார்கள்.

மாணவர்கள் மீது கொண்டுள்ள பாசம்.

ஒவ்வொரு மாதமும் கிருத்திகை நன்னாளில் மயிலம் முருகன் கோவிலில் சங்கு கன்னப் பாலசித்தர் இதழ் வெளியீட்டு விழாவில் ஸ்ரீமத் சிவஞான பாலய பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு , இதழில் உள்ள முக்கிய கருத்துரைகளை எடுத்துரைக்கிறார்கள். சுவாமிகள் இலக்கியத்தின் மீது உள்ள தாக்கத்தால் மாணவர்களுடன் கலந்துரையாடும் சிறப்பு கண்கொள்ளாக் காட்சியாகும்ஃ மாணவ - மாணவிகளுடன் கணிவுடன் பேசி எதிர்கால வாழ்க்கையில் நாம் எப்படி வாழ வேண்டும் , ஒவ்வொரு மாணவர்களின் குடும்பங்களை விசாரித்து நலமுடன் உள்ளார்களா என்று கேட்கும் போது மெய்சிலிர்க்கச் செய்கின்றது. அதுவே மாணவர்களின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது.

கொடை வள்ளல்.

ஏழை எளிய மாணவர்களுக்கு கல்விக்கண் திறக்கும் கொடை வள்ளலாக திகழ்ந்து வருகிறார்கள். உலகெங்கும் அறப்பணிகளை செய்து வருகிறார்கள். அவர்களுடைய பார்வை மட்டும் கிடைத்தால் போதும் மென்மேலும் வாழ்க்கையில் வளர்ச்சி அடையலாம்.

என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகச்
தமிழ் செய்யுமாறே

என்னும் திருமூலரின் வரிகளுக்கு ஏற்ப , சமுதாய வளர்ச்சிகாகவும் சமய வளர்ச்சிக்காகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உலகெங்கும் அறப்பணிகள் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பொற்பாதம் தொட்டு நாம் எல்லோரும் வழிபட வேண்டும்.

சமுதாயப் பணி

சமுதாய உணர்வு வேறு, சமுதாய அறிவு வேறு சமுதாய நோக்கு இரண்டிலும் உண்டு என்றால் குறிக்கோள் நிலையில் இரண்டும் தம்முள் மாறுபடும். குறிக்கோள் நிலைச் சமுதாயம் இது என வரையறை செய்யவும் அவ்வரையறையின் வண்ணம் அத்தகைய சமுதாயத்தை அமைக்கவும் வழிவகை செய்வது சமுதாய உணர்வு.

சமுதாயத்தின் அடிப்படையில் கோயில்கள் கட்டி, குளம் வெட்டினர். அங்கு இயல், இசை, நாடகங்களை படைத்தனர். இவை சமுதாயத்தின் மன வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக இருந்தன. இயற்கையின் அடிப்படையில் பல்வேறு தொழில் செய்யும் மக்கள் ஒன்றுபட்ட சமுதாயத்தை அமைத்தனர். அவர்களிடையே பண்ட மாற்று தொழில் வளர்ச்சி போன்றவற்றைக் கொண்டு உறவுமுறை ஏற்பட்டது மற்றும் நாகரிகம், பண்பாடு , மொழி கொள்கை போன்றவற்றால் ஒன்றுபட்ட பகுதியே சமுதாயம் எனப்படும்.

இத்தகைய நெறியில் நின்று உலக மக்களுக்காக தன்னை அர்ப்பணித்தவர் சுவாமிகள் அவர்கள். சமுதாயப்பணியே சமயப் பணியாக தன்னை ஈடுபடுத்தி வருகிறார்கள். இந்த பாரததேசம் நன்றாக இருக்க வேண்டும் எல்லோருடைய குடும்பங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற உயரிய கருணை உள்ளம் சுவாமிகளிடம் மட்டுமே உள்ளது. இவை எல்லாம் நம் வாழ்விற்கு ஒளிவிளக்காகத் திகழும்.

முடிவுரை.

பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நூற்றாண்டு விழாவில் இவ்வாய்வு உரை வழங்க அனுமதித்த குருமகா சந்நிதானங்களை மனம் மொழி மெய்களால் வணங்கிக் கொள்கிறேன். சங்குகன்னப் பாலசித்தர் இதழ் உலகெங்கும் தழைத்தோங்கி உள்ளது. சுவாமிகள் கருணைக் கடவுளாகவும் , கொடை வள்ளலாகவும், சமுதாயப்பணியோடு தன்னை அர்பணித்தும் சமுதாயப் பணி செய்து வருகிறார்கள். அவர்களின் பொற்பாதங்களை வணங்கி வழிபடுகிறேன்.

சிவ பாலய சித்தர் தொன்மை

முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை -117
செல் : 8610928727

முன்னுரை

சித்தர்கள் என்றால் பதினெட்டு சித்தர்கள் மட்டுமே என்று நாம் பலரும் நினைக்கிறோம். அந்தப் பதினெட்டு சித்தர்களும் ஆரம்ப காலத்தில் இருந்த முதன்மை சித்தர்கள் ஆவார்கள். ஆனால் இப்போது இணையதளங்களில் 108 முதல் 175 சித்தர்கள் வரையிலான பெயர்களும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் பக்கத்து மாநிலமான புதுச்சேரியில் மட்டும் கடந்த 500 ஆண்டுகளில் 32 சித்தர்கள் இருந்துள்ள தகவலும் நம்மை வியப்பில் ஆழ்த்தும் தன்மை கொண்டது. அந்த 32 சித்தர்கள் அனைவருமே புதுச்சேரியில் பிறந்து வளர்ந்து சித்தர்களானவர்கள் அல்ல. ஆனால் உலகின் பல்வேறு இடங்களில் இருந்தும் இங்கு வந்து கடும் தவம் புரிந்து தாம் வாழ்ந்த இடங்களிலேயே சமாதியும் அடைந்து புதுச்சேரியைப் புண்ணியப் பூமியாக்கி உள்ளார்கள். எனவே புதுச்சேரியை ஞான பூமி அல்லது சித்தர்கள் பூமி என்று கூறலாம்.

இத்தகைய பெருமை வாய்ந்த புதுச்சேரியில் பொம்மய பாளையத்தில் தோன்றிய சித்தரால் உருவாக்கப்பட்டதே மயிலம் பொம்மபுர ஆதீனம் எனும் வீரசைவ மரபைச் சேர்ந்த ஆதீனமாகும். இது சென்னை மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் இடையில் அமைந்துள்ளது. ஆதீனங்கள் அனைத்துமே ஆன்மீகம் மற்றும் பக்திநெறி போன்றவற்றையும், அவற்றோடு சேர்த்து தமிழ் மொழியினையும் வளர்க்கவே ஏற்படுத்தப்பட்டன. அதனால்தான் ஆதீனங்களின் கட்டுப்பாடுகளில் உள்ள ஆலயங்களில் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே அர்ச்சனைகள் செய்யப் படுகின்றன. இந்த வழியில் வந்த மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் ஆதீனத்தாருடைய வரலாறும் ஆலய எழுச்சியும் சுவையானது. இது ஏற்படக் காரணமானவரே தேவலோகத்தில் இருந்து வந்த ஒரு சிவகணம் என்பது அறியத்தக்க செய்தியாகும். இத்தகைய சிவகணம் குறித்த தொன்மைப் பதிவுகளை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

சங்குகண்ணர்

உலகில் சைவத்தின் ஒளியை மறைக்கும் விதமாகப் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. இதனால் சித்தர்களும் முனிவர்களும் மனம் வருந்தி, மீண்டும் சைவத்தைத் தழைக்கச் செய்யுமாறு சிவபெருமானிடம் வேண்டினர். உடனே சிவகணத் தலைவரான சங்குகன்னரை அழைத்த சிவபெருமான், ''தென்னாடு சென்று சைவநெறியைத் தழைக்கச் செய்வாயாக!'' என்று பணித்தார். அதற்குச் சங்குகன்னர் சம்மதித்து சிவபெருமானிடம் வேண்டுகோள் ஒன்றை வைத்தார். பூமிக்குச் சென்றாலும் அங்கும் சிவபெருமானுடன் தனக்கு நெருக்கமான உறவு இருக்க வேண்டும்' என வேண்டிக் கொண்டார்.

அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் தக்க நேரத்தில் முருகனின் மூலம் சங்குகன்னர் விரும்பியது நிறைவேறும் என்றும் அந்த நேரம் வரும்போது முருகப் பெருமான் அவர் முன் தோன்றி அவருக்கு அருள் புரியும்போது சங்குகன்னர் சிவயோக சமாதியை அடைந்து சிவலிங்கமாகித் தன்னுடன் ஐக்கியம் ஆகிவிடுவார் என்றும் கூறி அருள் புரிந்தார். அதைக் கேட்ட சங்குகன்னரும் பெரும் மகிழ்ச்சி அடைந்து பூலோகத்தில் தோற்றம் கொண்டார்.

அதன்படி சங்குகன்னர் புதுவைக்கு வடக்கில் இருக்கும் பொம்மபுரம் (தற்போதைய பொம்மையர் பாளையம்) கடற்கரைப் பகுதியில் 10 வயது பாலகனாக, நெற்றியில் திருநீறு, கழுத்தில் உத்திராட்சம், குண்டலம் அணிந்த காதுகள், சின்முத்திரையுடன் கூடிய வலக்கை, திருநீற்றுப் பையைத் தாங்கிய இடக்கை, முகத்தில் புன்முறுவல், எப்போதும் 'நமசிவாய' என உச்சரிக்கும் உதடுகள்... இப்படிப்பட்ட தோற்றத்துடன் அவதரித்தார். சிவபெருமான் தனக்கு ஆணையிட்டது போலவே சிவநெறியைப் போதித்தார். ஆகம முறைகளை விளக்கினார். பல ஆச்சரியப்படும் சித்துக்களையும் அற்புதங்களையும் அவ்வப்போது நிகழ்த்தி வந்தார்.

பாலசித்தர் அருளால் மகப்பேறு இன்றி வருந்திய அம்மவைக்குக் குழந்தைச் செல்வம் கிட்டியது. அம்மகவிற்குச் சிவஞான பாலய தேசிகர் எனப் பெயர்சூட்டியதோடு உபதேசமும் வழங்கி அருள்புரியலானார்.

மயிலம் முருகன் தொன்மை

பல ஆண்டுகளுக்கு முன்னரே சூரபத்ம யுத்தம் நடைபெற்ற போது சூரபத்மன் முருகப் பெருமானால் இரண்டாக பிளக்கப் பட்டான் அப்போது 'நான் உமக்கு மயில் வாகனமாக அமைய வேண்டும்' என வேண்டிக் கொண்டான். ஆகவே அவனிடம் நீ பொம்மபுரத்துக்கு மேற்கே உள்ள மயிலத்தில் மயில் உருவத்தில் ஒரு மலையாக இருந்தபடி என்னை நினைத்து தவம் புரிந்தால் உன்னை என்னுடைய மயில் வாகனமாக மாற்றிக் கொள்வேன் என்று முருகன் உறுதி கொடுத்தார். ஆகவே சூரபத்மனும் மயிலத்துக்குச் சென்று அங்கு மயில் உருவில் ஒரு மலையாக மாறி இருந்தபடி முருகனை வேண்டிக் கொண்டு கடும் தவத்தில் இருந்தது. சூரபத்மனின் கடும் தவத்தைக் கண்டு மனம் மகிழ்ந்த முருகனும் அவனைத் தனது மயில் வாகனமாக ஏற்றுக் கொண்டார். அப்போது அவனுக்குத் தோற்றம் தந்த முருகனிடம் சூரபத்மன் தான் மயிலாக இருந்த மலையில் முருகன் தனது மனைவிகளோடு நிலையாக தங்கி இருக்க வேண்டும் என இன்னொரு வேண்டு கோளை வைக்க முருகனும் தக்க நேரத்தில் அவனுடைய ஆசையை நிறைவேற்றுவதாக உறுதி அளித்து இருந்தார். அப்போது முருகனின் வாக்கு நிறைவேறும் நேரத்தில் சிவகணமான சங்குகன்னராகிய பாலசித்தரும் உடனடியாக மயிலம் மலைக்கு அருகில் சென்று அங்கிருந்த சுனைகளில் நீராடிய பின்னர் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு சுமார் முப்பத்தி இரண்டு வருடங்கள் தவத்தில் இருந்தார்.

அவரது தவத்தின் நேர்மையைக் கண்ட முருகனின் மனைவி களான தெய்வானை மற்றும் வள்ளி இருவரும் முருகனிடம் சென்று பால சித்தருக்கு அருள் புரியுமாறு வேண்டிக் கொண்டார்கள். ஆகவே அவர்கள் கோபத்துடன் அங்கிருந்து கிளம்பி மானிட உருவெடுத்து தம்மை வேண்டிக் கொண்டிருந்த பாலசித்தரிடம் சென்று விட்டார்கள். அவரிடம் தாம் தேவ லோகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தம் இருவரையும் அவருடைய மகள்களாக ஏற்றுக் கொண்டு தம்மை பாதுகாத்து வர வேண்டும் என்று வேண்டினார்கள். ஆனால் உண்மையில் தாம் யார் என்று கூறவில்லை. வந்துள்ளவர்கள் தெய்வ கன்னிகைகள் என்ற அளவில் அறிந்து கொண்டார் பாலசித்தர். ஆனால் அவர்கள் வள்ளி மற்றும் தெய்வானை என்பதை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை என்பதும் விதியின் விளைவாகவே இருந்தது. தேவ ரகசியம்

தம்மிடம் வரும் மனிதர்களைப் பற்றிய அனைத்து உண்மைகளையும் சித்தர்களால் அறிந்து கொள்ள முடியும். ஆனால் வேற்று உருவில் வந்திருக்கும் தேவ கணங்களை அவர்களால் அறிந்து கொள்ள முடியாது. அதுவே தேவ ரகசியம் ஆகும். அவர்களை எந்த நேரத்தில் வெளிப்படுத்த வேண்டுமோ அப்போது மட்டுமே அவர்களை அடையாளம் காண முடியும். இந்த தேவ ரகஸியத்தினால்தான் சிவகணத்தின் அவதாரமான சிவஞான பாலசித்தரால் கூட அந்த நேரத்தில் அவர்களது உண்மையான நிலையை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் இருவரையும் தம்முடைய மகள்களாக ஏற்றுக் கொண்டதும் அல்லாமல் தனது சக்தியைக் கொண்டு தேவ புருஷர்களை வரவழைத்து அந்த இருவரும் தங்கிக் கொள்ள ஒரு மாளிகையையும் அமைத்துக் கொடுத்து அவர்களை அதில் தங்க வைத்தார். அது மட்டும் அல்லாமல் அவர்களுக்கு தாமே காவலாக இருக்கலானார்.

சிவஞான பாலசித்தரின் சாப விமோசன காலமும் நெருங்கிய நிலையில் முருகன் ஒரு வேடர் உருவம் கொண்டு அவர்கள் மூவரும் தங்கி இருந்த அந்த வனப் பகுதியில் சுற்றித் திரியலானார். அப்படி சுற்றித் திரிந்தவர் ஒருமுறை அந்த மாளிகையில் நுழைய முயன்றபோது அவரை 'பெண்கள் தனியே உள்ள இடத்தில் ஆடவர் நுழையலாகாது' என சிவஞான பாலசித்தர் தடுத்து நிறுத்தினார். சங்குகன்னர்- முருகன் போர்.

முருகன் பாலசித்தர் இடையே போர் மூண்டது. ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் போரைத் தொடர்ந்தனர். முருகன் தனது வேலாயுதத்தை எடுத்தார். அதனை பாலசித்தர் மேல் வீசினார். யாரிடமும் எவரிடமும் சரணடையாத வேலாயுதம் பாலசித்தரிடம் சரணம் அடைந்தது.

வந்திருப்பது யாரோ மன்னர் அல்ல. நாம் தேடி வந்த முருகனே என அவருக்கு தெளிவு பிறந்தது. போர்க் கருவிகளை தூர எறிந்தார். கையெடுத்து முருகனை வணங்கி தன்னை மன்னிக்குமாறு வேண்டினார். தன்னை நம்பி வந்த இரண்டு பெண்களுக்காக அவர்களது தகப்பனாராக நின்று உங்களை எதிர்த்து சண்டையிடும் சூழல் உண்டானது, தாங்கள் எனது இரண்டு மகள்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார்.

மயிலத்தில் வள்ளி, தெய்வானையை ஸ்ரீ முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் செய்து வைத்தார். தேவர்கள் சிவபெருமான் திருக்கல்யாணத்திற்கு வந்திருந்து ஆசிர்வாதம் செய்தனர். சூரபத்மன் மயிலம் மலையில் மலையாக மாறி தவம் செய்து மயில் வாகனமாக ஆனார். அப்போது தம்பதி சமேதரராக இந்த மலையில் நீங்கள் காட்சி தர வேண்டும் என்றார். அதற்குரிய காலம் பாலசித்தரால் பிறக்கும் என்றார் முருகன். சூரபத்மனின் ஆசையை பாலசித்தர் மூலம் நிறைவடையச் செய்தார் முருகன். பல காலம் பொறுத்து பொம்மபாலய ஆதீன மடாதிபதி கட்டிய ஆலயமே மயிலம் மலை மீது உள்ள ஆலயம் என்கிறார்கள்.

சிவபெருமான் "பாலசித்தரே இன்னும் பல்லாண்டு காலம் பூமியில் இருந்து மக்களுக்கு தொண்டாற்றி முருகனுக்கு அருகே ஜீவ சமாதி அடைந்து என்னிடம் வா" எனக் கூறி ஆசிர்வதித்தார். பக்தி நெறி தழைக்கவும், தமிழ் வளர்க்கவும், மனித நிலையில் இருந்து இறைநிலையை அடைய உதவும் வாழ்வியல் ஒழுக்கலாறுகளை போதிப்பதற்காக ஆதினத்தை உருவாக்கினார் பாலசித்தர். பொம்மபுரத்தை அடுத்த பெருமுக்கல் மலையில் தங்கி சிவதொண்டு புரிந்தார்.

தன் மூலம் சாபம் விலகிய சிவஞான பாலசித்தரையும் இன்னும் ஐந்து நூற்றாண்டு காலம் அங்கேயே தங்கி இருந்து கொண்டு வீர சைவ சித்த நெறியையும் பக்தி மார்கத்தையும் பரப்பிக் கொண்டும், சித்த முனிவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டும் இருக்குமாறு அருள் புரிந்தப் பின்னர் தமது மனைவிகளான தெய்வானை மற்றும் வள்ளியுடன் முருகப் பெருமான் அங்கிருந்து கிளம்பிச் சென்றார். சிவஞான பாலசித்தரும் அங்கு பல காலம் தங்கி இருந்து வீர சைவ நெறியை பரப்பி வந்த காலத்தில் அவருக்கு பக்தர்கள் குவிந்தார்கள். சிதம்பரத்தைச் சேர்ந்த அம்மவை அம்மையாரும் அவரது கணவரும் தங்களுக்கு குழந்தை பிறக்கவே இல்லை. அதற்கு எனக்கு கொடுப்பினை இல்லை.

நாங்கள் இருவரும் உங்களுக்கு சேவை செய்வதற்கு அனுமதி தர வேண்டும் என வேண்டினர். பாலசித்தருக்கு தினம் சதுரக்கள்ளிபாலை கறந்து வந்து கொடுத்தார் அம்மவை. பூஜையில் வைத்துதான் அருந்தியது போக மீதமுள்ளதை அம்மவையும் அவரது கணவரையும் தினம் அருந்த சொன்னார். பாலசித்தர் தன் வாழ்நாள்

முழுவதும் பால் தவிர வேறு எதையும் சாப்பிட்டது இல்லை. அம்மவைக்கு ஓர் அழகிய ஆண் மகன் பிறந்தார். அச்சிறுவனுக்கு சந்நியாசம் தந்து ஞானோபதேசம் செய்து தனது சீடராக ஆக்கி மயிலம் பொம்மபுர ஆதினத்தின் சீடர் பரம்பரையாக ஆக்கி அவருக்கு "சிவஞான பால்ய தேசிகன்" என பெயரை வைத்தார். இன்றும் 20ம் பட்டமாக ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தொண்டாற்றி வருகிறார்.

முடிவுரை

முருகப் பெருமானின் அருளால் மயிலம் மலையில் முருகப்பெருமான் வீற்றுள்ள சன்னிதானத்தின் தென்பகுதியில் இருந்த குகை ஒன்றில் ஆத்ம சமாதி அடைந்தார். அங்கு அமர்ந்திருந்தவர் அப்படியே வீபுதி லிங்க வடிவாகி விட்டதாக கூறுகிறார்கள். சிவஞான பால சித்தர் சுவாமிகள் மொத்தம் 500 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்திருந்தார் என்று நம்புகிறார்கள். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மயிலத்தில் உள்ள அவருடைய சமாதி பாண்டிச்சேரி சமாதிகளில் மேன்மையானது. அவர் அருளை பெறுபவர்கள் பல நன்மைகளை அடைவதாக நம்புகிறார்கள் என்பதே உண்மையாக நிலவிவருகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீனமும் குருமார்களும்

முனைவர் சே. ஏழுமலை
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி
அரும்பாக்கம், சென்னை - 600106.

முன்னுரை

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மயிலமலை குருபீடமாக விளங்குகின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசையில் பழந்தமிழகத்தில் தொன்று தொட்டு முன்னோர் வழிபாடு சிறப்பாக போற்றப்படுகின்றது. வீரசைவ பெரிய திருமடம் மயிலம் பொம்மபுர ஆதீனமாகத் திகழ்ந்து சமுதாயப் பணிகளை செவ்வனே ஆற்றி வருகின்றது. இவற்றில் மயிலம் பாலைய சுவாமிகள் உடைய குருவருளையும் இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

மயிலம் திருமடம்

திருமடப் பணிகளுள் முதன்மையானதாக மயிலம் மணக்கோல மாமுருகன் வழிபாடு நிகழ்த்தப் பெறுகின்றது. குருவை வணங்கி இறையருளைப் பெறும் மக்களுக்கு மனம் பக்குவப்பட்டு அனைத்து வகையான பேறுகளும் கிடைக்கின்றன. சமய நெறிகளின் அடிப்படையில் சமூக ஏற்றத்திற்கு பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பெற்ற அருள் நிலையங்களே திருமடங்களாகும். பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றில் ஏற்றமிக்க நிலையில் சமூகச் செயல்பாடுகளை உயர்த்தும் நோக்கத்திலேயே திருமடங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

எல்லாம் வல்ல சிவபெருமான் அனைத்துயிர்களும் தன்னை வழிபட்டு இம்மை, மறுமை இரண்டிலும் நன்மை பெறுவதன் பொருட்டு, மன்னும் இமயமலையில் உள்ள திருக்கயிலையில் கருணைத் திருமேனி கொண்டு எழுந்தருளி இன்னருள் புரிகின்றான். பண்டைக் காலந் தொடங்கி இந்தியத் திருநாட்டினை ஆண்ட மன்னர்களின் ஆட்சி மாற்றங்களால், மக்கள் வாழ்வில் சமயநிலை, நாகரிகம், பண்பாடு, மொழி முதலானவற்றில் வேறுபாடுகளும், மாறுபாடுகளும் நிகழலாயின. இந்நிலையில் கயிலையில், திருநந்தி தேவரின் அனுமதியுடன் சிவபெருமானின் திருமுன்பு சித்தர்,

முனிவர் முதலானோர், பணிந்து வணங்கித் தொன்மைச் சமயமாகிய சைவம் தழைக்கவும், வீரசைவ வேத ஆகமங்கள் விளங்கவும் நல்லற நெறிகள் ஓங்கவும், இல்லறம் முதலிய சிவசமய சாதனங்கள் மக்கள் வாழ்வில் இன்றியமையா இடம்பெறவும் அருளுமாறு முறையிட்டு வேண்டி நின்றனர்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தோற்றம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கயிலாய ஞானப் பரம்பரையின் வழிவந்தது ஆகும். திருக்கயிலையில் சிவபெருமானுக்கு மேற்குத்திசைக் காவலராக விளங்கிய பூதகணங்களுள் ஒருவர் சங்குகன்னர். இவரை சிவபெருமான் அழைத்து "தென்னாட்டு வீர சைவ நெறி தழைத்தோங்கவும் சித்தர் கொள்கைகள் வலுப்பெறவும் செய்க" என்று அருளாணை இட்டார். அதற்குச் சங்குகன்னர் கயிலையில் "தான் இருப்பது போன்றே மண்ணுலகிலும் இறைவனுக்கு அருகில் இருக்கும் நிலையை அடைந்திருக்கவேண்டும்" என்று சிவபெருமானிடம் வேண்டினார். அவ்வேண்டுதலை சிவபெருமான் ஏற்று தாம் அமைத்த ஆசிரமத்தில் முருகப் பெருமாளின் அருளோடு அவருக்கருகில் சிவயோக சமாதியுற்று சிவலிங்க வடிவம் எய்தி அடியார்களால் வணங்கப்பெறும் நிலை பெறுக! என்று வாழ்த்தி அருளினார்.

சங்குகன்னர் அவதாரம்

அவ்வழியே சங்குகன்னர் உலகில் கருவழித் தோன்றாமல் திருநீறு, உருத்திராக்கம், கல்லாடை, இட்டலிங்கம் அணிந்த மார்பு, செஞ்சடை, குண்டலமணிந்த திருச்செவிகள், சின் முத்திரையுடன் கூடிய வலக்கை, திருநீற்றுப்பை, மந்திரக்கோல் வீரசைவ ஆகமம் கூறும் திருவாய், ஐந்தெழுத்தை ஒலிக்கும் திருவாய் ஆகியவற்றுடன் கூடிய திருக்கோலத்துடன் பத்து வயது பாலகனாகத் தோன்றினார். திருமடங்களுக்கும் சென்று தங்கி, தம்மை அடையும் சீடர்களுக்கு உபதேசம் செய்தும், அற்புதங்கள் பல செய்தும் வருவாராயினார்.

பாலசித்தரின் சீடராம் ஆதி ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள்

ஒருகால் பாலசித்தர் பொம்மபுரத்தை அடுத்த பெருமுக்கல் மலையில் தங்கியிருந்து வீரசைவத் திருநெறி பரப்பி வந்த காலத்தில் சிதம்பரம் பச்சைக் சுந்தமரபைச் சார்ந்த அம்மவை என்பார் மகப்பேறின்றி வருந்தினர். இனிச் 'சிவநெறித்தொண்டே மேற்கொள்ளற் பாலது என்னும் திண்ணிய எண்ணத்தோடே

பாலசித்தரை அணுகி அவருக்குத் தம் கணவரும், தாமும் தொண்டு புரியலாயினர். அம்மவை அம்மையார், பாலசித்தருக்குத் தாமே சதுரக்கள்ளிப்பாலைக் கொடுக்கும் திருத்தொண்டினைச் செய்து வந்தார். ஒருகால் அவ்வாறு கள்ளிப் பாலைக் கொடுக்க அதனை உண்ட பாலசித்தரின் கள்ளிப்பால் பிரசாத சேடத்தால் அம்மவையார். குருவருள்வழி ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தார். பாலசித்தருடைய அறிவுரைப்படி அவருடைய திருவருட் பார்வையில் அக்குழந்தை வளர்ந்து தொண்டு செய்துவர, அவர்தம் பக்குவநிலை உணர்த்த அவரைச் சீடராக அமைத்துக் கொண்டார் பாலசித்தர்.

முருகனருள் பெற்ற பாலசித்தர் பொம்மபுரமடத்தில் அச்சீடருக்குச் சந்நியாசிரமம் தந்து, ஞான உபதேசம் புரிந்து பின்னர் ஆசாரிய அபிடேகமும் செய்து ஞானஉபதேசமும் புரிந்து, தமது அம்சம் அவரிடத்தில் பதியும்படித் திருவருள்புரிந்து, அவர் தம்மை நோக்கி, 'நீ பாலை உணவாகக் கொண்டு, சீடபரம்பரையோடு 'சிவஞான பாலய தேசிகன் என வாழ்வாயாக" என்று அருள்புரிந்தார். மேலும் இத்திருமடம் 'பாலய சுவாமிகள் திருமடம்' என வழங்குவதாக என்றும் அருள்புரிந்தார்.

மயிலமலையில் பாலசித்தரின் ஜீவசமாதி

முருகன் அருள்பெற்ற பாலசித்தரும் பாலசித்தரின் சீடராகிய ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளும் பொம்மபுரத் தினின்று மயிலமலையை அடைந்தனர். தங்களின் ஆன்மார்த்தமாகிய இட்டலிங்கப் பரசிவத்துவ பூசையுடன், தமக்குக் குருவாகச் சங்கமத் திருக்கோலத்தில் எழுந்தருளித் தீட்சைசெய்தும், தம்மால் தரப்பெற்ற இருபுதல்வியர்களை ஏற்று, மணம் செய்தும் விளங்கும் முருகனை வள்ளி தெய்வானையுடன் திருமடத்தில் எழுந்தருளச் செய்து, நித்திய நைமித்தியப் பூசைகளுடன் மக்களுக்குத் தொண்டு செய்து வழிபாடாற்றி வந்த நிலையில் சிவயோகப் பெருவாழ்வு வாழ்ந்த பாலசித்தர் ஓர் ஆனிமாதத் திருவாதிரை நன்னாளில் தம் விருப்பப்படியே தம்மால் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி மகிழ்ந்த மணக்கோல முருகனின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி கூடினார்.

ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் கிளைமடங்கள்

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் இவ்வாறு வழிபா டாற்றி வருங்காலத்து மீண்டும் ஆதிபூர்வீகத் தலமாகிய பொம்மபுரத்தில்

சிவயோகம் புரிய எழுந்தருளினார். இக்காலத்தில் தம் சீடர்களோடு காஞ்சிபுரம், சிதம்பரம், செய்யூர், நல்லாற்றூர், புதுவை, பெருமுக்கல், பழநி, திருக்கழுக்குன்றம், பெரும்பேற்றுக்கண்டிகை. திருவண்ணாமலை முதலிய இடங்களில் திருமடங்கள் அமைத்தும், தம்மிடம் வந்த சீடர்களுக்கு உபதேசம் புரிந்தும் தொண்டு செய்தனர்.

திருமடத்தைப் பாடிய பிற புலவர்கள்

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், மயிலாசலக் கலம்பகம் பாடிய திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடிய பாசவதைப் பரணி ஆகிய நூல்களைப் பாடிய வைத்தியநாத தேசிகர், பாம்பன் சுவாமிகள், மயிலம் சுப்பிரமணியர் துதியமுது, மயிலம் ஷண்முகன் வண்ணப்பாடல்கள் ஆகிய நூல்களைப் பாடிய பாவேந்தர் பாரதிதாசன், மயூராசல புராணம் பாடிய தியாகராஜக் கவிராயர், பாலசித்தர் பாமாலை, சிவஞான பாலய தேசிக மாலை, மயிலத் திருவாயிரம் முதலான நூல்களைப் பாடிய நம் ஆதினப் புலவர் வித்துவான் ஆ. சிவலிங்கனார் ஆகியோர் முருகனருள் பெற்ற ஆதீன முதல் குரவர் ஸ்ரீ பாலசித்தர், ஆதிசிவஞான பாலய சுவாமிகள் மீது பாமாலை சூட்டி மகிழ்ந்தவர்கள் ஆவர். மயிலவேல் அகவல், மயிலம் மாலை, மயிலத்து அந்தாதி, கார்த்திகை கதம்பம் திருமயிலைச் சந்நிதி முறை, மயிலாசல மாலை, மயிலத்து இரட்டைமணி மாலை, அருள்வேட்டல் முதலிய நூல்களும் மயிலத்தைக் குறித்த அருட்பனுவல்களாகத் திகழ்கின்றன.

அருணகிரிநாதர்

15ஆம் நூற்றாண்டின் இறுதியில் முருகப்பெருமானின் அருள் பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அருணகிரிநாதர். திருவண்ணாமலை கம்பத்து இளையனாரால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற அருணகிரிநாதரின் அருட்பனுவல்களுள் "திருப்புகழ்" ஒன்று. குன்றுதோறாடலில் உறையும் முருகனது திருப்புகழைப் பாடுகையில் கொலைகொண்ட போர்விழி எனத் தொடங்கும் மயிலத்தைக் குறித்த பாடலில் சுவாமிமலை முருகன் தனது தந்தை சிவனுக்கு உபதேசம் செய்ததைப் போல மயிலம் திருமடத்தில் எழுந்தருளும் குருமகா சந்நிதானங்களான சிவஞானிக்கு (சிவபெருமான்) முருகன் உபதேசம் செய்தமையை

மகிழ் சம்புவே தொழ பாதா

என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றார் அருணகிரிநாதர். முருகனது

திருவடிகளைப் பணிந்து சிவஞானியாகிய சிவன் உபதேசம் பெற்றமையைப் பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது.

குமரேசா
மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே
மகிழ்கின்ற சம்பு தொழுகின்ற பாதனே!

ஈண்டுச் சம்பு என்ற சொல் சிவனைக் குறிக்கும். சிவன் என்பது பாலசித்தரின் சிவ ஐக்கியச் சொரூபத்தைக் குறிக்கும்.

வைத்தியநாத தேசிகர்

மயிலம் பொம்மபுர வீரசைவ ஆதினத் தலைவராய் தம் காலத்து விளங்கிய சுவாமிகளின் தொடர்பைப் பெற்ற, 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாசவதைப்பரணி என்னும் நூலைப் பாடியருளினார். பின்பு ஆதீனத்தைச் சார்ந்த மயில மலையில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது சந்தத் தமிழால் மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ் என்னும் நூலைக் நாதரின் கட்டளைக்கிணங்கிப் பாடியருளினார். சிவஞான தேசிகருக்கு முருகப்பெருமான் உபதேசம் செய்தமையைப் பின்வரும் பாடலில் பதிவு செய்துள்ளார்.

தான்மாரி பெய்து அன்ன நிதிமாரி பெய்யுஇரு
தயவாளி சிவஞான தேசிகர்க்கும் பழம்
சதுர்மறைப் பொருள்விரித்துத்
தேன்மாரி பெய்து அன்ன உரைத்த குரு தேசிகா
தென்மயிலை தழையவரு சேனாபதித் தலைவ
செங்கீரை ஆடிஅருளே
-வைத்தியநாத தேசிகர், மயிலம் முரு. பிள்.தமிழ், பா.113

சிவபெருமான், அகத்தியர், சிவஞான பாலய தேசிகர் ஆகிய மூவர்க்கும் நான்மறைப் பொருளை உணர்த்திய முருகப் பெருமானே! தென்மயிலை மலைமீது வீற்றிருப் பவனே! செங்கீரை ஆடியருளே என்பது இப்பாடலின் திரண்ட கருத்தாகும்.

திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

தமிழ்ப்பண்பாடு, தமிழ்ச்சமுதாயம், தமிழ் இலக்கிய இலக்கணம் தமிழர் சமயம் எனப் பலதுறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பைந்தமிழை வளப்படுத்தியவர் சொல்லேர்

உழவர் திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளாவார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமிகள் வண்ணம் பாடுவதில் வல்லவர் என்பதால் வண்ணச்சரபம் என்றும் கையில் தண்டத்தைக் கொண்டிருந்தமையால் 'தண்டபாணி சுவாமிகள்' என்றும் போற்றப்பெற்றவர். முருகனைப் பற்றிய அருட்பாடல்கள் பாடிய இவரை 'முருகதாசர்' எனவும் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியமையால் 'திருப்புகழ்ச் சுவாமிகள்' எனவும் உலகினரால் புகழப்பெற்றவர்.

அறுவகைச் சமயநெறியில் 'கௌமாரம் எனும் முருக வழிபாட்டு முறையை மேற்கொண்டவர் வண்ணச்சரபம். 'மனிதரைப் பாடுவதில்லை' எனும் கொள்கையில் இருந்த இவர் மயிலம் பொம்மபுரச் சிவஞானியைப் பாடியது அற்புதமான நிகழ்ச்சியாகும். முருகன் வேறு, சிவஞானி வேறு எனப் பேதம் இல்லாமல் 'முருகனே சிவஞானி' என்பதை உணர்ந்து அனுபவித்த சுவாமிகள் 'சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் எனும் நூலைப் பாடியருளினார்கள். வீரசைவ நெறியைப் போற்றும் சிவஞானியும், வீரசைவர்கள் வழிபடும் இட்ட லிங்கமும் (சிவன்), ஆறுமுகனாகிய முருகப்பெருமானும் ஒன்றே என்பதை உணர்ந்து மயிலம் பொம்மபுரத் திருமடத்து சிவஞானியைப் பாடிப் பரவசப்பட்டுள்ள பாங்கினை இவரது பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

பூரணமாம் உண்மைப்
பொருளுணர்ந்த புண்ணியத்தால்
சீரணமற் றுய்ந்த
சிவஞானி சீர்த்த இடம்
காரணமும் எண்ணில்பல்
காரியமும் ஆனதென்னும் ஆரணத்தோ னைப் புடைத்தோன்
ஆடுமயி லாசலமே

(சிவ பாலய சுவாமிகள் பதிகம், பா.5)

மயில மலையில் ஸ்ரீ பாலசித்தர் மெய்ப்பொருளாகிய சிவத்தை முருகப்பெருமான் உபதேசத்தால் உணர்ந்து அவரது தொடர்ச்சியில் சிவஞானியின் அருளாட்சியால் சித்தர் பீடமாகத் திகழ்கின்றமையை மேற்கண்ட பாடல் விளக்குகின்றது. முருகப்பெருமான் சிவபெருமான் சிவஞானி என்னும் மூவரும் ஒருவரே என்ற முப்பரிமாணத் தன்மையை வண்ணச்சரபம் பாடல்கள் தெளிவுபடுத்து கின்றன.

1. மயிலம் திருப்புகழ் பதிகம் 14 பாடல்கள்
2. மயிலம் பதிகம் 12 பாடல்கள்
3. மயிலம் முருகன் கலம்பகம் 105 பாடல்கள்
4. சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் 12 பாடல்கள்
5. குமரவேள் பதிகம் 13 பாடல்கள்
6. குமரேசன் வகுப்பு 1 பாடல்
7. வினாப் பதிகம் 13 பாடல்கள்
8. சேய் வெண்பா 1 பாடல்
9. முருகன் பதிகம் 13 பாடல்கள்
10. படைவீட்டுப் பதிகம் 13 பாடல்கள்
11. படைவீட்டுத் திருப்புகழ் 1 பாடல்

தெள்ளுதமிழ்ப் புலவர்களின் பாமாலைகளைத் தோள்களில் சூடும் அயில்வேலா! உன் திருப்புகழைப் பாடும் திருநெல்வேலிக் காரன் நான். எனக்கு உயர்வையும், உய்வையும் தருவாயாக என வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சிவஞானியைப் பாடுகிறார்.

பார்வை நூல்கள்

1. மயிலம் பொம்மபுற ஆதீனம் திருமட வரலாறு - வெளியீடு - மயிலம் பொம்மபுற ஆதீனம், மயிலம் 604 304
2. சிவனான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் - உரையாசிரியர் குமாரசாமி ஐயர். வெளியீடு - மயிலம் பொம்மபுற ஆதீனம், மயிலம் 604 304.
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் பதிப்பாசிரியர் நல்லாவூர் முனைவர் சா. திருநாவுக்கரசு வெளியீடு - மயிலம் பொம்மபுற ஆதீனம், மயிலம் 604 304

சான்றோர் போற்றும் சிவஞானி

திருமதி ந. தவமணி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம் - 604 304
தொடர்பு எண்:9095078578
maniappu1973@gmail.com

முகவுரை

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை உலக மாந்தர்கள் அனைவரும் இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் இறைவனே காரணம் என்ற மேலான நம்பிக்கை உடையவர்கள். இத்தகைய பக்தி நெறியினால் அன்பு, கருணை, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளை மனிதர்கள் கடைபிடித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும் என்பதைச் சமயங்கள் வலியுறுத்து கின்றன.

அன்பே சிவம் என்பார் திருமூலர். அன்பின் வழியது உயிர்நிலை என்பார் வள்ளுவர். மக்களினத்தை நல்வழிப்படுத்தும் அன்பின் பாதையைக் காட்டுபவர்களே குருமார்கள் 'அன்பே அழகிய நெறி என்கிறது வீரசைவம்' அன்பே கடவுளின் வடிவம் என்பதைக் காலந்தோறும் குருமார்கள் அவதரித்து ஆதியும் அந்தமும் இல்லா இறைவனை அழைக்கவும் அன்பில் மனம் குழைந்து உருகியும் உள்ளார்கள். திருஞானசம்பந்தர் திருக்கடைக் காப்பில் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ' என்று இறைவனை மனம் ,மொழி ,மெய் என்ற மூன்று நிலைகளிலும் நினைந்து உருகுகின்றார். இத்தகைய ஆன்மீகப் பெரியோர்கள் பலர் தோன்றி தன் படைப்புகள் மூலம் பக்தி நெறியை வளர்த்துள்ளார்கள். அதனால்தான் ' தமிழைப் பக்தியின் மொழியென்று' தனிநாயக அடிகள் கூறுவார்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய குருமகா சந்நிதானம் ஸ்ரீ பாலசித்தரின் அருட்சீடரான ஆதிசிவஞானியை ஞான குருவாக ஏற்றுக்கொண்டு, 17 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் சிவஞானி மீது ஐந்து நூல்களைப் பாடியுள்ளார். அருணகிரிநாதர்,

வைத்தியநாத தேசிகர். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தியாகராஜக் கவிராயர், ஆ.சிவலிங்கனார் ஆகிய சமயச் சான்றோர்கள் சிவஞானியைச் சிவனாகவும், முருகனாகவும் பாவித்து மயில மலையில் அமர்ந்து அருளாசி செய்து வருவதாகப் பல சிற்றிலக்கியங்களில் சிவஞானியைப் பாடித் தமிழுக்கும் மொழிப் புலமைக்கும் இறவா நெறியைத் தம் கவித்துவத்தால் வழங்கினார்கள். அவ்வகையில் மயிலமலையில் வீற்றிருந்து அருள்புரியும் சிவஞானியைப் போற்றும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

சிவஞான பாலய நற்குருமரபு தோற்றம்

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி **(குருமரபு வாழ்த்து)**

மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கயிலாய ஞானப் பரம்பரையின் வழிவந்ததாகும். திருக்கயிலாய மலையில் சிவபெருமானுக்கு மேற்குத் திசை காவலராகத் திகழ்ந்தவர் சங்குகன்னர். இவரைச் சிவபெருமான் அழைத்து ''தென்னாட்டு வீரசைவ நெறி தழைத்தோங்கவும் சித்தர் கொள்கைகள் வலுப்பெறவும் செய்க'' என்று அருளாணை இட்டார். அதனை ஏற்று சங்குகன்னர் பத்து வயது பாலகனாகப் பொம்மபுரக் கடலருகே தோன்றிச் சித்தர்களுக்கும் அடியவர்களுக்கும் வீரசைவ ஆகமநெறிகளை உணர்த்தினார். அவர் பொம்மபுரத்தில் திருமடம் அமைத்து பால வயதில் பல சித்துகள் செய்ததினால் பாலசித்தர் என்று அழைக்கப்பட்டார்.

முருகன்மீது கொண்ட பற்றினால் முருகனின் அருள் காட்சியைக் காண வேண்டும் என்பதற்காக வடமேற்கு நோக்கி புறப்பட்டு பெருமுக்கல் மலையில் தங்கிக் கடுந்தவம் புரியும் காலத்தில் ''தென் மேற்கே உள்ள மயிலமலைக்குச் சென்றால் முருகனைக் காணலாம்'' என்று சொல்லி நாரதர் மறைந்தார். அவர் வாக்கின்படி மயில மலைக்கு வந்து கள்ளிப்பாலை

உணவாகக் கொண்டு 32 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அத்தவத்தின் பயனாக முருகன் திருமணக்கோலத்தில் காட்சி தந்தார். தம்மால் எழுந்தருளிய மணக்கோல மாமுருகனுக்கு வழிபாடு செய்து முருகனின் தெற்குப்பக்கத்தில் சிவயோக சமாதியானார். அவரே ஸ்ரீ பாலசித்தர் என்று அழைக்கப்படுகிறார்.

பாலசித்தரும் சிவஞானியும்

பச்சைக்கந்த தேசிகன் என்பவர் தென்னாட்டிற்கு யாத்திரை வந்தபோது சிதம்பரத்தில் தங்கியிருந்து வீரசைவ நெறியை வளர்த்தார். அச்சீடர் பரம்பரையில் அம்மவை எனும் அம்மையார் குழந்தைப்பேறு இல்லாமல் இருந்த நிலையில் தம் கணவருடன் பாலசித்தரைத் தரிசித்து அவர்க்குத் தொண்டு பல செய்து வந்தார். கள்ளிப்பால் பிரசாதத்தால் அம்மையார் கருவுற்று ஆண் குழந்தை பெற்றார். பாலசித்தர் அக்குழந்தைக்கு ஞானோபதேசம் செய்து சீடராக ஆக்கி நீ பாலை உணவாகக் கொண்டதால் சீடர் பரம்பரையோடு சிவஞான பாலய தேசிகன் என்ற திருப்பெயரோடு திகழ்க என்று அருள்புரிந்தார்.

சிவஞானியின் பேரருளைப் பற்றி அறிந்த செஞ்சியை ஆண்டு வந்த திரியம்பக மகராஜன் சுவாமியிடம் தன் மகளுக்கு உண்டான நோய் போக்கக் கோரினார். அதன்படி சுவாமிகள் நோயைத் திருநீற்றின் மூலமாக நீக்கி அருளினார். அதனால் மகிழ்ச்சியடைந்த அரசன் மயிலத்திலும் பொம்மபுரத்திலும் திருமடங்கள் கட்டிக்கொடுத்து சுவாமிகளின் அன்றாட பூசைக்காகச் சில கிராமங்களை நிவந்தமாகக் கொடுத்தான்.

ஆதி சிவஞானியான இவரே 2-வது பட்டம் குருமகா சந்நிதானம் எனப் போற்றப்பட்டவர். இவர் பல்லாண்டுகள் திருமடத்தைப் புரந்தும், மக்களுக்குச் சமய உணர்வுகளைப் போதித்தும், நோய் நொடிகளைத் தீர்த்தும், மக்கள் நலமுடன் வாழவும் செய்து, பின் பொம்மபுரத் திருமடத்தில் உள்ள ஒடுக்கத்திற்குச் சென்று தம்மைத் திருநீற்று மயமாக்கிக் கொண்டு, பரம்பொருளுடன் இரண்டறக் கலந்தார். இன்றும் இவரது திருநீறு வெள்ளிப் பேழையில் வைத்து, சிவலிங்க பூசை இருகாலமும் அடுத்தடுத்து எழுந்தருளிய சந்நிதானங்களால் பூசிக்கப்பட்டு வரப்படுகிறது. சிவனே சிவஞானி எனும் வழிபாட்டு நெறி இவர்கள் காலத்தில் தான் விளக்கம் பெற்றது. (சிவஞானியின் மகிமை) பக்-22.

முருகப்பெருமான் சிவபெருமான் சிவஞானி

ஒரு மனிதன் தன்னை முழுமையாகப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்திக் கொள்ள குருவருளே துணை நிற்கிறது. இத்தகைய குருவை இறைவனாக நினைத்து சமயச் சான்றோர்கள் பலர் தமிழ் பாமாலை படைத்தருளியுள்ளார்கள். 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞானி மீது பாடிய =சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது என்ற நூலின்,

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் (சிவ.பா.தே.நெஞ். தூது.28)

என்பதான பாடல் வரிகளில் கயிலை மலையில் காட்சி கொடுத்த சிவபெருமான் தற்போது மயிலமலையின் மீது சிவஞானி என்னும் வள்ளலாக வீற்றிருந்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருளைப் பொழிவதாகக் கூறுகிறார்.

கி.பி.1643 முதல் 1695 வரையுள்ள காலத்தில் 3-ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அருளாட்சி செய்த போது இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் என்பவர் சுவாமிகளைத் தரிசனம் செய்து பாசவதைப் பரணி என்னும் நூலில் சிவபெருமான் கயிலைமலையை விட்டு நீங்கி மேன்மையுற்ற சிவஞான தேசிகன் என்ற நாமம் பெற்று மானிடச்சட்டை தாங்கி, தமிழ்த்தேர் மயில மலையின் மீது ஞானகுருவாக எழுந்தருளினார் என்பதை,

மேன்மை யுற்றசிவ ஞானதே சிகனிவனெனும்
மிக்க நாமமொடு மேதினி தழைக்குமுறையால்
மானி டப்புதிய கஞ்சுக மணிந்து தமிழ்தேர்
மயிலை மால்வரை வளம்பெருக வந்தபரிசும். (பா.வ.ப. 221)

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சிவஞான பாலய தேசிகர் பதிகத்தில், சிவனே மயில மலையில் சிவஞான பாலயனாக முருகப்பெருமானுடன் இணைந்து குருவருளைத் திருவருளாகத் தருகிறார் என்பதை,

வென்றி வீசையன் விரும்பும் தவத்தினுக்காப்
பன்றியின் பின் ஏகி வரும் பாலையன் பற்றும் இடம்
இன்றி கழும் வை வேல் விகிர்தன் விரும்ப நிற்கும்
குன்றினத்துள் மேலாக் குலவும் மயிலாசமே.
(சி.பா.தேசிகர்.பதிகம்.8)

இப்பாடலில் பஞ்ச பாண்டவர்களில் ஒருவன் அர்ச்சுனன் பாசுபதம் என்ற அஸ்திரத்தைப் பெறுவதற்குக் காட்டில் கடுந்தவம் புரிந்தான். அவன் தவத்தை இடையூறு செய்த பன்றியை, வேடர் உருக்கொண்டு தாக்கிய சிவனே இன்று மயிலமலையில் சிவஞானியாக மாமுருகனுடன் பேரருள் புரிகிறார் எனப் பாடப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் அருள்பனுவலான திருப்புகழில் குன்றுதோறாடலில் உறையும் முருகக்கடவுள் சுவாமி மலையில் தனது தந்தைக்கு உபதேசம் செய்ததைப் போல மயில மலையில் சிவஞானியாகிய சிவனுக்கு உபதேசம் செய்கிறார் என்பதனை,

..... குமரேசா
மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலத்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே
(திருப்புகழ்,பா.330)

இப்பாடலில் சம்பு என்ற சொல் சிவனைக் குறிக்கும். சிவன் என்பது பாலசித்தரின் சிவ ஐக்கியச் சொரூபத்தைக் குறிக்கும்.

ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே. (திருப்புகழ்,பா.1328)

என்ற பாடலில் முருகனும் சிவனும் ஒன்றே என்று போற்றுகிறார் அருணகிரிநாதர்.

பொம்மபுரமும் புவியும் புரந்தருளும்
செம்மல் சிவஞானி சீர் உணரச் செய்யுமிடம்
(சிவ.பால.சுவா.பதிகம்.பா.2)

இப்பாடலில் முருகப்பெருமான், சிவபெருமான், சிவஞானி ஆகிய மூவரின் முப்பரிமாணத் தன்மையை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போற்றுவதும் குறிப்பிடத்தக்கது. ஆக வீரசைவ நெறியைப் போற்றும் சிவஞானியும், வீரசைவர்கள் வழிபடும் இட்டலிங்கமும் (சிவன்) முருகப்பெருமானும் ஒன்றே என்பதை இப்பாடல்கள் வழி அறியமுடிகிறது.

பவப்பிணி நீக்கியருளும் சிவஞானி

'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உனை மறவாமை வேண்டும்" எனப் பாடுவார் காரைக்கால் அம்மையார்.

உலக மக்களுக்கு நன்மை செய்வதற்காகப் பிறவி வேரறுத்து பிறவாமை எனும் முக்திப்பேற்றை அருளுவதற்காக இறைவன் கொண்ட வடிவமே ஞானகுரு வடிவமாகும்.

கொடிய பிறவிநிலை குலைய வுலகின் வரு
குருசி லருளுத்தி குறுகியே
நெடிய விழியருவி சொரிய நிரதிசய
நிமல மணையுமவர் திறமினோ . (பா.வ.ப. 36)

கொடிய பிறவி நிலைகுலைந்து போக, விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடிக்க நிமலனாக நம்மை ஆண்டு கொண்டு அருள்புரியும் சிவஞான குருவை நாடி வந்தோம் கதவைத் திறந்திடுங்கள் என்பதாகப் பாசவதைப் பரணி பாடல் சுட்டுகிறது.

மலங்கள் அற்றவனே மலங்களைப் போக்க முடியும். நிமலனாகிய சிவனே இங்குச் சிவஞானியாக வந்து உலக மக்களின் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைப் போக்கி அருளை வாரி வழங்குகிறார் எனப் பாடுகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

எங்கள் மல இருளுக்கு ஈண்டு மயிலை மிசைத்
செங்கதிர் போல் தோன்றும் சிவஞான தேசிகனோ
(சிவ. தாலாட்டு.பா.93)

பாச வஞ்ஞன் பழிமா சுலகெலாம்
படர்ந்த முடும் பரிசு பரானந்தத்
தேசு பெற்றுய ருங்கரு ணாலயன். (பா.வ.ப. 228)

பாசமாகிய அறியாமை என்கிற மாசு உலகெல்லாம் படர்ந்ததனால் ஏற்படும் குற்றங்களை நீக்கி அழிக்கும் பரிசாகப் பராபரமாகிய கருணாலயன் சிவஞானி என்கிறார் வைத்தியநாத தேசிகர்.

பவப்பிணி மருத்துவ னெனப் படுசிவ ஞான
வள்ளல் வந்து வண்மயிலை மலைமேல்
வாழ்தலை மணி விளக்கெனக் கண்டு
முள்ள நைந்து சென்றுரைக்கிலர் என்கொலோ
வுண்டு உடுத்து உழல்வோமே (சிவ.பா.தே.கலம்பகம்.பா.9)

சிவஞானியை மணிவிளக்கென்று உணராமல் நாமத்தை உச்சரிக்காமல், குரு உபதேசம் பெறாமல், பவப்பிணி?

போக்கியருள வேண்டாமல் இருப்பவர்கள் இவ்வுலகில் உழல்வார்கள் என்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

.....முந்து
தவஞானம் இல்லாதார் சாற்றினும் வீடெய்தும்
சிவஞான தேவெனும் பேர்ச்செல்வன் (சி.பா..நெ.தூது50.51)

தவஞானம் இல்லாதவரும் சிவஞானி என்ற நாமம் சொன்னால் அவர்களுக்கு வீடுபேறு அளிக்கும். மந்திரமாகிய சூக்கும தூல பஞ்சாட்சரம் போல சிவஞானி எனும் சொல் அமைந்திருப்பதாகப் போற்றுகிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.

ஐந்த வித்தார் சிவஞானி
ஐந்தவிக்கப் பலர் தேற்ற
வந்து வாழும் மயிலமலை
வாழ்வே வானோர் பெருமானே. (மயிலத். திருவாயிரம்-25)

ஐம்புலன்களை அடக்கிய தூய துறவி சிவஞானியின் திருவடிகளை வணங்கி, ஐம்புலன்களை அடக்கி வாழ்வாங்கு வாழலாம் என்பதைப் பதிவு செய்கிறார்.

நிறைவுரை

ஆதிசிவஞானி மயில மலையில் சிவ ஐக்கிய சொரூபமாக விளங்குகிறார். சிவனே, சிவஞானியாகவும், முருகனே சிவஞானி யாகவும் நினைந்து சமயச் சான்றோர் பெருமக்கள் போற்று கிறார்கள்.

ஆணவம். கன்மம், மாயை என்ற மும்மலங்களிடம் மனிதர்களின் ஐம்புலன்கள் சிக்கிக்கொண்டு பழி, பாவங்களுக்கு உட்பட்டு உழல்பவர்கள் சிவஞானியின் திருநாமத்தைச் சொன்னால். அவர் மாயை என்னும் இருளைப் போக்கி வீடுபேறு அடைய பேரருள் புரிவார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் 20-ம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் புதிய ஆலயங்கள் உருவாக்குதல், ஆலயங்களைப் புதுப்பித்தல், திருக்குடமுழுக்குப்பணி, புதியநூலாக்கப்பணி, பதிப்புப்பணி, இதழ்ப்பணி, தமிழ்ப்பணி, கல்விப்பணி ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர்கள். சமயம் போற்றும் வகையிலும் சமுதாயம் போற்றும் வகையிலும் சுவாமிகளின் பணிகள் யாவும் சிறந்து விளங்குகின்றன.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை

திரு. பூ. தியானேஷ்வரன்
23/24, காந்திஜி வீதி, வி.வேலம்பாளையம்
மொடக்குறிச்சி(Po), ஈரோடு-638104.
தொடர்பு : எண் 8072601893
மின்னஞ்சல் : bbthiyaneshwarann@gmail.com

முன்னுரை

சைவநெறி தழைத்தோங்க சிவபெருமானின் திருவருளால் ஆதீனங்கள் பூவுலகில் தோற்றம் பெற்றன. சைவசமயம் சிவபெருமானை முதன்மைத் தெய்வமாக வழிபடும் தன்மையது. வீரசைவ நெறியும் சிவபரம்பொருளை வணங்கும் நிலையினது. திருக்கயிலாய பரம்பரை வழி வந்ததாக மயிலம் பொம்மபுர ஆதீனம் விளங்குகிறது. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை பற்றிக் கூறும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

சங்குகன்னர்

சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாய மலையின் மேற்கு வாயிலைக் காவல் செய்யும் பூதகணமாகச் சங்குகன்னர் விளங்குகிறார். சிவபெருமான் தென்னாட்டில் வீரசைவநெறி தழைத்தோங்க ஆதீனம் அமைத்து திருப்பணி செய்ய சங்குகன்னருக்கு அருளாணை இட்டார்.

சிவபெருமானின் அருளாணையினை சிரமேற் கொண்ட சங்குகன்னர், சிவபெருமானிடம் "தேவரீருக்கு அணுக்கத் தொண்டராகத் திருவடி நீழலில் வைகி திருமடப்பணி செய்ய விழைவதாக" விண்ணப்பம் செய்தார். சங்குகன்னரின் விண்ணப்பத்தை ஏற்ற சிவபெருமான், நம் குருவருளும் குமரப் பெருமானின் திருவருளும் சேர்ந்து உம்மை வழிநடத்தும் என்று அருளினார். சங்குகன்னர் பூவுலகில் கருப்பவாசம் செய்யாது, திருநீறு, உருத்திராக்கம், துவராடை, இட்டலிங்கம், செஞ்சடை, குண்டலம் பூண்டு சின்முத்திரையோடு பத்து வயதுப் பாலகனாக அவதரித்தார்.

பொம்மையபாளையம் திருமடம்

சங்குகன்னர் பொம்மையபாளையத்தில் திருமடம் அமைத்து, சிவானுபூதிச் செல்வராய், சிவயோகநெறி நின்று, சமாதிநிலை பூண்டு சிவானுபவத்தை அனுபவித்து பரிபக்குவம் பெற்ற தமது

சீடர்களுக்கும் அருளுபதேசம் செய்து வந்தார். பெருமுக்கல் முதலிய மலைகளுக்கும், வனங்களுக்கும் சென்று வீரசைவ ஆகம நெறிகளை உணர்த்தியதோடு சித்துக்களையும் செய்து காட்டினார். ஆதலால் இவர் பாலசித்தர் எனப் பெயர் பெற்றார்.

மயிலம்

சங்குகன்னரைத் தேவரிஷி நாரதர் சந்தித்து மயிலமலை பற்றி உரைத்தார். முன்பொரு சமயம் சூரபதுமன் மயில் வடிவ மலையாக இருந்து முருகனை நோக்கி தவம் செய்து தம்மை மயில் வாகனமாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். குமரவேல் அருள்புரிந்தார். ஆதலால் மயிலமலையை அடைந்து தவம் செய்வோர் எண்ணிய யாவும் எய்துவர் என்று கூறினார்.

வள்ளி, தெய்வானை

சங்குகன்னர் மயிலத்தை அடைந்து சுனைகளில் நீராடி முருகனைத் துதித்து பத்மாசனத்தில் அமர்ந்து முப்பத்தியிரெண்டு ஆண்டுகள் தவம் செய்தார். பிறகு தட்சணாக்னி, காருகபத்தியம், ஆகவனீயம், கேவலாக்னி, சிவாக்னி என்னும் பஞ்சாக்கினிகளுக்கு நடுவே இருந்து கடுந்தவம் புரிந்தார். முருகப்பெருமான் அருளாததால் வள்ளி, தெய்வானையரை நோக்கித் தவம் செய்தார். தேவியர் சங்குகன்னருக்கு அருளுமாறு முருகனிடம் வேண்டினர். அருளுவதற்குத் தக்க காலம் கனியாத காரணத்தால், சுரக்காததை உணராத தேவியர் முருகனைவிட்டு நீங்கி பாலசித்தரிடம் அடைக்கலம் ஆயினர்.

முருகப்பெருமான் மணக்கோலம்

வள்ளி, தெய்வானையர் சித்த கன்னியராகச் சங்குகன்னரின் திருமடத்தை அடைந்தனர். வள்ளி தெய்வானையரே சித்த கன்னியராக வந்திருப்பதை ஞான நாட்டத்தால் உணர்ந்த சங்குகன்னர் தேவதச்சனைக் கொண்டு ஒரு மாளிகையைச் சமைத்து, கன்னியரை அங்கு இருத்தி தம் புதல்வியராகப் பாவித்து வந்தார்.

அருள் செய்ய காலம் கனிந்ததால் முருகப்பெருமான் கன்னியர் இருக்கும் இடத்திற்கு வந்து தோன்றினார். இவ்வாறு ஆடவர் புகுவது தகாது என முருகனைத் தடுத்து சங்குகன்னர் முருகனோடு போர் செய்தார். பின்னர் வந்திருப்பது முருகனே என உணர்ந்து பிழை பொறுக்க வேண்டினார். முருகன் அருளுபதேசம் செய்தார். பாலசித்தர் வேண்டுகோளை ஏற்று கன்னியரை மணந்து மணக்கோலத்தில் முருகன் அருள் செய்தார்.

சதுரக்கள்ளிப்பால்

பாலசித்தருக்குச் சிதம்பரம் பச்சைக்கந்த மரபைச் சார்ந்த அம்மவை அம்மையார் சதுரக்கள்ளிப்பாலைக் கொண்டு வந்து தரும் திருத்தொண்டைச் செய்தார். கள்ளிப்பாலின் பிரசாதத்தால் அவதரித்த அவ்வம்மையாரின் குழந்தையைப் பாலசித்தர் சீடராக ஏற்றுக்கொண்டார்.

சிவஞாணபாலய சுவாமிகள் திருமடம்

பாலசித்தரால் தோற்றுவிக்கப்பட்ட இத்திருமடம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் என்று அழைக்கப்பெறும் என்றும், சிவஞான பாலய தேசிகர் ஆதீனத்தின் இரண்டாவது பட்டமாக வீற்றிருந்து அருளாட்சி செய்வார் என்றும் ஆணையிட்டு, சிவசோதியுள் கலந்தார்.

முடிவுரை

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் என்னும் பெயரினை உடையது. பாலசித்தர் இத்திருமடத்தைத் தோற்றுவித்து வீரசைவ நெறியினைப் பரப்பினார் என்னும் முடிவுகளை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

சிவப்பிரகாசர் போற்றும் சிவஞானி

ர. ரம்யா
முதுகலைத்தமிழ் இரண்டாமியாண்டு
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க் கல்லூரி - பேரூர்
தொடர்பு எண் 8838364173
ramyaranganathan45@gmail.com

முன்னுரை

சைவ மணம் கமழும் தமிழகத்தின் தொன்மையான வீரசைவத் திருமடமாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனமாகும். அதன் ஆதிகுரு முதல்வராகத் திகழ்பவர் ஸ்ரீபாலசித்தர் ஆவார். இவ்வாதீனத்தின் ஞான சீடராகத் திகழும் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞான பாலய தேசிகரைக் குருவாகக் கொண்டு எழுதிய ஐந்து நூல்களை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொல்

சிவஞான பாலய தேசிகர் - சிவப்பிரகாச சுவாமிகள் - சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ் - திருப்பள்ளி எழுச்சி - தாலாட்டு - நெஞ்சுவிடு தூது - கலம்பகம்.

சிவஞான பாலய தேசிகர்

தமிழகத்தில் உள்ள வீரசைவத் திருமடங்களில் பழமையான திருமடம் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் ஆகும். அதன் ஆதிகுரு முதல்வராக விளங்கியவர் ஸ்ரீபாலசித்தர் ஆவார். கயிலையின் மேற்குத்திசை வாயில் காவலராக இருந்தவர் சங்குகன்னர். இவர் சிவபெருமானின் ஆணையின்படி உலகில் வேதசிவாகம நெறிகளை விளக்கவும், சைவ சமயத்தை வளர்க்கவும் புதுச்சேரி கீழ்க்கடலில் பத்து வயது இளம் பருவத்தினராய் திருநீறு, உருத்திராக்கம், கல்லாடை, இட்டலிங்கம் ஆகிய சிவசின்னங்கள் பொருந்த இளங்கதிரவன் போல் தோன்றினார். கடற்கரைக்கு அருகில் உள்ள பொம்மையபாளையத்தில் திருமடம் அமைத்துக் கொண்டு சிவயோகம் புரிந்து பல சித்துகளையும் செய்தார். அதனால் அவரைப் பாலசித்தர் என்றழைத்தனர். பாலசித்தரைத் தொடர்ந்த ஞானபரம்பரையில் சிவஞான பாலய சுவாமிகள் பெயரால் இத்திருமடம் வழங்கப் பெறுகிறது.

நல்லாற்றூர் சிவப்பிரகாசர்

நல்லாற்றூர் சிவப்பிரகாசர், நன்னெறி சிவப்பிரகாசர் என்றெல்லாம் அழைக்கப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். கவிஞர் திலகராகிய இவர் சிவஞான பாலய தேசிகருடைய அருமை பெருமைகளைத் திருவருளால் அறிந்து வந்து பொம்மபுரத்தில் சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகள் சிவப்பிரகாசருடைய உயர்நிலையை அறிந்து அவரைத் தம் ஞான சீடராக ஏற்றருள் புரிந்தார். இவர் பல அரிய தமிழ் நூல்களை இயற்ற சிவஞான பாலய சுவாமிகள் அருள் புரிந்தார். தம் ஞானாசிரியர்பால் கொண்ட பேரன்பு மற்றும் பக்தியின் காரணமாகச் சிற்றிலக்கிய வகைமைகளில் நூல்களை இயற்றினார். அவை,

1. சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ்
2. சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி
3. சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு
4. சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது
5. சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்

என்பவை ஆகும்.

சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ்

சிவப்பிரகாசர் தனது ஞானகுருவினைச் சிறு பிள்ளையாகப் பாவித்து காப்பு முதலாக சிறுதேர் ஈறாகப் பத்து பருவங்களை உள்ளடக்கிய ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை இயற்றினார்.

உலகமக்கள் தம் வினைப்பயனால் உற்ற இடர்களைத் தம் அருட் பார்வையாலும் திருவருளாலும் போக்கியுள்ளார். என்பதை,

பெருமுடக் காளிமிர்ந் ததுகூன் நிமிர்ந்தது
பிணிகள்பல போயின
பிடித்திருந் தெவராலும் அகலாது துயர்செய்த
பேயகன் றிட்டதம்மா." **(சிவ.பிள்.செங்- 5)**

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

சிவஞான சித்தர் தம்மையடைந்த இரவலர்க்குப் பொருளை வழங்கினார். அடியார்களுக்கு அறுசுவை உணவினை வயிறாரப்

படைத்தார். தம் அன்பர்களுக்கு மெய்ப்பொருளை உபதேசித் தருளினார். இதனை,

மொண்டுபொய்ப் பொருளென்று பொருளைமிரவலர் வரின்
முத்திரை செயாமல் உதவி
முழுமறைப் பொருளை மெய்ப்பொருளென்று தொண்டர்க்கு
முத்திரைசெய் தீங்கருள்வது. (சிவ. பிள். சப்பா-2)

என்னும் பாடல் வரிகளின் வழி அறியமுடிகிறது.

சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி

ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி என்னும் நூல் நான்கு பாடல்களைக் கொண்டது ஆகும். இது பாடாண் திணையை அடிப்படையாகக் கொண்டு துயிலெடை நிலை என்னும் துறையால் அமைக்கப்பட்டது ஆகும்.

முதல் பாடலில் சமயசம்பந்தமான ஓர் ஐயவினாவை எழுப்பி இதற்கு உண்மைப் பொருள் கூறுவதற்காக உன்னைத் துயிலெழுப்புகிறோம் எனப் பாடப்படுகிறது. இதனை,

இறந்துமல சத்திவிடில் சிவசமா கதையாய்
இருக்குமென அறைவர் சிலர் எதுவழக்கென்றடியேம்
செறிந்தனநின் தனைவினவ எங்கள் சிவஞான
தேசிகனே அருண்மலையே பள்ளிஎழுந் தருளே. (சிவ.திரு.எழு-1

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

நான்காம் பாடலில் உன்னைத் துயில் எழுப்புவதற்குத் துன்புறுகின்றவர்கள் எவரும் வரவில்லை. உன்னை வழிபடுகின்ற அடியவர்கள் வந்து துயில் எழுப்புகின்றனர் என்று கூறப்படுகிறது. இதனை,

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையால் எறிந்த
தொண்டன்இலை விசயனும்வில் லோடும் வந்தான் இல்லை.
(சிவ. திரு. எழு.4)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியர்பால் அறிந்த தத்துவ நுண்பொருள்களை அடக்கி இந்நூலை இயற்றியுள்ளார். இது குறள் வெண்செந்துறை யாப்பிலாகிய நூறு கண்ணிகளைக் கொண்டது.

சிவஞானியின் சித்தாந்தக் கருத்துகளைப் பல கண்ணிகளில் சுட்டிக் காண்பித்துள்ளார். இதனை,

ஆதார பீடங்கள் ஆயினும் அவ்வாறிலிங்க
மீதாக வைத்து விளங்கச்செய் வித்தகனோ. (சிவ. தா- 38)

என்னும் கண்ணியின் மூலம் விளக்குகிறது.

தன் ஞானாசிரியரோடு உள்ள இணக்கத்தை என் உயிர்க்கு உயிராய் உள்ள இறைவனே, சிவானந்தமாகிய இனிய தேனே, உறுதி பயத்தலின் அமுதமானவனே, சிவஞான தேசிகனே என்று பாடுகிறார். இதனை,

ஊனோ உயிரோ உயிர்க்குயிரோ ஆனந்தத்
தேனோ அமுதமோ சிவஞான தேசிகனோ. (சிவ. தா- 91)

என்ற கண்ணியின் மூலம் அறியமுடிகிறது.

சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் தம்மைத் தலைவியாகவும் குருநாதரைத் தலைவராகவும் எண்ணி அவரிடம் தன் நெஞ்சினைத் தூதுவிடும் பாங்கில் கலிவெண்பா யாப்பில் 255 கண்ணிகளுடன் இந்நூலினை அமைத்துள்ளார்.

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் சிவவடிவமாகத் தோன்றிய தனது குருவின் பெருமையை எடுத்துரைக்கும் விதமாகச் சிவஞான தேவனாக வந்து தோன்றிச் சிவபெருமானுக்குரிய புலித்தோல் ஆசனத்தில் இருந்து அருள் செய்த தன்மையைப் போற்றுகிறார். இதனை,

-------பெருமான்
எடுத்திருந்த வாசனையால் ஒங்குபுலித் தோல்மேல்
அடுத்து இருந்து வாழும் அரசு. (சிவ.நெ.தூ-5-6)

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

தூதாக அனுப்புவதற்குத் தக்கதாக அமைவன எவையும் இல்லை, நீயே தூதாகச் செல்ல வேண்டும் என நெஞ்சினைத் தூதராக அனுப்பும் பாங்கினை

--------- வதக் கிளியை விடின்
காண்டல் அரிதுஅதனால்;கண்டாலும் - ஆண்டு அதுதான்
ஒன்றாக ஓதாது உரைக்கும் பல மயங்கச்

சென்றாலும் நீயேதான் செல்லாமல் - நின்றாலும்
நீயே பிரிதுஇல்லை நெஞ்சமே! - என்பயந்த
தாமே அவன்இடங்கள் சாற்றக்கேள். (சிவ.நெ.தூ- 173-175)

என்னும் பாடல் வரிகளின் வழி அறியமுடிகிறது.

சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்

கலம்பகம் என்பது பல்வேறு வகையான பாடல்களும் பலவிதமான இலக்கிய உறுப்புகளும் கலந்து வரும் ஒரு சிற்றிலக்கிய வகை. இது இறைவனையோ அரசனையோ அல்லது தலைவனையோ கொண்டு பாடப்படுவதாகும். சிவப்பிரகாசர் இவை அனைத்துமாகத் திகழும் தம் குருவின் மீது சிவஞான பாலய தேசிகர் கலம்பகம் பாடினார்.

வாரியங் கரையீர் வாள் இலைக் கைதை
மலரெனத் தோன்றுவர் சிலர்தாம்
மதுரவீர்ங் கரும்பின் மலரெனச் சிலர்தாம்
வருவர் நீகற்பக மலர்போற்
காரியங் களத்தன நடஞ்செய் தாமரையின்
கழலொலி யாவுமூர்போகி
கண்களாற் கண்டு கேட்குமூர்ப் பச்சைக்
கந்தமா முனிகரத் துதித்தாம் (சிவ.கலம்-50)

கள்ளும் வண்டும் அறாமலர்ப்பூம் புலீயூர்ப் பச்சைக் கந்தமுனி
(சிவ.கலம்-57)

என்பவற்றால் சிதம்பரம் வீரசைவ பச்சைக்கந்த தேசிகர் மரபில் தோன்றியவர் சிவஞான பாலய தேசிகர் என்பதை அறிய முடிகின்றது.

முடிவுரை

மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடத்தின் குருமகா சந்நிதானங்கள் ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் பற்றிப் பலர் நூல்களை இயற்றியுள்ளார்கள். அதிலும் சுவாமிகளின் சீடராகத் திகழ்ந்த நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் தனது குருவின் சிறப்பு, அவரது தன்மை, அவரது மரபு, அவரது உயரிய சித்தாந்தக் கருத்துகள் போன்றவை பற்றி தாம் இயற்றிய நூல்களில் செவ்வனே விளக்கியுள்ளார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம்: ஆன்மிகம், தமிழ், கல்வி மற்றும் சமூக சேவையின் ஒருங்கிணைந்த மையம் ஓர் ஆய்வு

முனைவர் சா. லதா
இணைப் பேராசிரியர்
முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர்
இந்திய பண்பாடு & சுற்றுலாவியல் துறை
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் - 612001
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

செல்வி சு.சூரியா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
இந்திய பண்பாடு & சுற்றுலாவியல் துறை
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612001
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
suryadevi157@gmail.com

அறிமுகம்

தமிழக வரலாறு மதம், சமயம், கலாச்சாரம், கல்வி ஆகியவற்றோடு ஓர் ஒருங்கிணைந்த அடையாளமாக விளங்குகிறது. பண்டைய காலத்திலிருந்தே நம்நாடு மதம் சார்ந்த கல்வி, தத்துவம், கலை, இலக்கியம், சமூக நலச் சேவை ஆகிய துறைகளில் தனித்துவமான முன்னேற்றத்தை அடைந்தது. இவ்வளர்ச்சிக்கு அரசர்கள் அளித்த ஆதரவோடு, சமய மடங்களும் முக்கிய பங்கு வகித்தன. குறிப்பாக, சைவ சித்தாந்தத்தை நிலைநிறுத்தும் வகையில் தமிழகத்தில் தோன்றிய ஆதீனங்கள் ஆன்மீகச் செயல்பாடுகளுக்கு மட்டுமல்லாமல், கல்வி, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கும் அடிப்படை மையங்களாக இருந்தன. ஆதீனங்கள் வெறும் மதக்கூடங்கள் என்ற நிலையைத் தாண்டி, ஆன்மிக வழிகாட்டுதல், தமிழ் இலக்கியப் பரவல், சமூக நலச்சேவை, புலவர்களுக்கு ஊக்குவிப்பு, கல்விக் கூடங்கள் நடத்துதல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டன. திருமுறை பாடல்கள் மற்றும் சைவ சித்தாந்த நூல்கள் பொதுமக்களிடம் பரவச் செய்வதில் ஆதீனங்கள் பிரதான பங்கு வகித்தன. மேலும், அக்கால சமுதாயத்தில் கல்வி பரவலுக்கு வாய்ப்புகள் குறைவாக இருந்தபோது, ஆதீனங்களே பண்டிதர்களுக்கு உழைப்பிடமாகவும், மாணவர்களுக்குக் கற்றல் மையமாகவும் விளங்கின.

மயிலம் பொம்மபுர ஆதீனம்

தமிழகத்தில் ஆதீனங்களின் தோற்றம் வரலாற்றின் ஒரு அத்தியாயமாக மட்டுமல்லாமல், தமிழகத்தின் ஆன்மீக, கல்வி மற்றும் கலாச்சாரச் சின்னமாகவும் விளங்குகிறது. மயிலம்

பொம்மபுர ஆதீனம் இந்த மரபின் ஒரு சிறப்பு பகுதியாக உருவெடுத்து, அப்பகுதி மக்களின் ஆன்மீக வாழ்வையும் சமூக வளர்ச்சியையும் நிலைநிறுத்தி வருகின்றது. மயிலம் பகுதி பண்டைய சைவத் தலங்களால் சூழப்பட்டுள்ளது. இங்குப் பொம்மபுர ஆதீனம் சங்குகன்னர் நிறுவிய மடம், அப்பகுதியில் சைவ மரபை வலுப்படுத்தியதோடு அல்லாமல் அங்கு வாழ்ந்த மக்களுக்குக் கல்வி, சமயம், ஆன்மீக வழிகாட்டுதல், சமூக நலன் ஆகியவற்றில் பெரும் பங்களிப்பு வழங்கி வருகிறது. ஆன்மீக ஞானத்தாலும், சைவ சித்தாந்தப் புலமையாலும் பிரசித்திப்பெற்ற பொம்மபுர ஆதீன சுவாமிகள் சங்குகன்னர் ஆவார். அவர் தோற்றுவித்த இந்நிறுவனம், தொடர்ந்து வந்த குருபரம்பரை வழியாக இன்றுவரை பல்வேறு சமய, கல்வி, சமூக பணிகளைச் செய்து வருகிறது.

சமயப் பணிகள்

மயிலம் பொம்மபுர ஆதீனம் தேவாரம், திருமுறை சிவப்பிரகாசர் நூல்கள் போன்ற பக்தி நூல்களை வெளியிட்டு மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டல் செய்தது. மயான கொள்ளை திருவிழா மூலம் மக்களுக்கு ஆன்மீக அனுபவத்துடன், சமூக ஒற்றுமை, கலாச்சார பரம்பரை மற்றும் பக்திப் பங்களிப்பையும் உணர்த்துகிறது. ஆலய வழிபாட்டில் தமிழ் இசை, நாட்டுப்புற ஆடல்கள், பாடல்கள் உள்ளிட்ட பண்பாட்டு அம்சங்கள் இணைக்கப்பட்டன. இதனால் மக்கள் மதக் கருத்துக்களையும், தமிழின் பண்பாட்டையும் ஒரே நேரத்தில் கற்றுக் கொண்டனர்.

சமயக் கல்வி கற்பித்தல்

சைவ சித்தாந்தம், ஆகமம், திருமுறை ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொம்மபுர ஆதீனம் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியும் தங்கும் வசதியும் வழங்கியது. பண்டிதர்கள் மாணவர்களைப் பயிற்றுவித்து, சைவ தத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துரைத்தனர். பொருளாதாரம், நிர்வாகம் போன்றவற்றை ஆதினம் பண்டிதர்களால் ஒழுங்கு முறைப்படுத்தியது. திருத்தல்ங்களில் நடைபெறும் திருவிழாக்கள், பூசைகள் மற்றும் ஆராதனைகள் முறையாக நடைபெற பொம்மபுர ஆதீனம் உதவியது. பக்திப் பாடல்கள் மற்றும் திருமுறை பரப்புதல் திருமுறை பாடல்கள் பொதுமக்களிடம் பரவ, பொம்மபுர ஆதீனம் முக்கிய பங்கு வகித்தது. பொம்மபுர ஆதீனம் தமது புலவர்களை ஊக்குவித்து, பாடல்கள் பாடப்பட்டன. நாயன்மார்கள் பாடல்கள்,

சைவச் சித்தாந்த நூல்கள் பொதுமக்கள் மத்தியில் வலுவாகக் கற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறாகச் சமய கல்வியினைப் பொம்மபுர ஆதீனம் வளர்த்து வருகின்றது.

தமிழ்மொழி பாதுகாப்பும் வளர்ச்சியும்

பொம்மபுர ஆதீனம் தொடக்கத்திலிருந்தே கல்வியை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது. தமிழ்மொழி பாதுகாவலர்களாக இருந்து பழைய தமிழ் நூல்கள் பாதுகாக்கப் பட்டு புதிய தலைமுறைக்கு வழங்கப்பட்டன. புலவர்கள் மற்றும் பண்டிதர்கள் இலக்கியத்தையும், தமிழ்மொழியையும் பரப்பி வந்தனர். பொம்மபுர ஆதீனம் கல்வி மையங்கள் அமைத்து கல்வியை முக்கியத்துவமாகக் கொண்டு, மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம் ஆகிய பாடங்களைக் கற்றுத்தந்தது. தமிழ் இலக்கிய விழாக்கள், திருவள்ளுவர் நாள் கொண்டாட்டங்கள் மற்றும் புலவர் கூடங்கள் மூலம் தமிழ் அறிவியலையும் பண்பாட்டையும் ஊக்குவித்தது. தேவாரம் மற்றும் சைவ சித்தாந்த நூல்கள் போன்றவற்றின் நூல்கள் உரை, ஆய்வுக் குறிப்புகள் மற்றும் விளக்க உரைகளுடன் வெளியிடப்பட்டன. இதனால் பழைய அரிய தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட்டதுடன் புதிய தலைமுறைக்கும் பத்திரமாகக் கொண்டு செல்லப்பட்டது.

கல்வி பங்களிப்பு

தமிழ்க் கல்லூரி தொடங்கி உயர் படிப்புகள், தமிழ் படிப்புகள், ஆராய்ச்சி மையங்கள் அமைத்து மாணவர்களுக்கு ஆழ்ந்த கல்வி வழங்கி வருகின்றது. ஏழை மாணவர்களுக்குத் தங்குமிடம், உணவு மற்றும் கல்வி உதவித்தொகைகள் வழங்கி சமத்துவமான கல்வி வாய்ப்பை உருவாக்கி தருவனவாக உள்ளன.. சைவ சித்தாந்தம் மற்றும் புனித தமிழ் பாடல்களை ஆய்வு செய்து மாணவர்களுக்கு கற்றுத்தந்து ஆய்வேடு மற்றும் ஆய்வு நூல்களை வெளியிட உதவியது. கல்விப் பணிகள் மாணவர்களின் சமூக விழிப்புணர்வு மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வு ஆகியவற்றினை இணைத்து வளர்த்தது.

சைவ மதக் கல்வி மையம்

சைவ சித்தாந்த நூல்கள் - சிவஞானபோதம், திருமந்திரம், சிவசங்கரியம் போன்றவற்றை முறையாகக் கற்பிக்கும் வகுப்புகள் நடத்தப்பட்டன. திருமுறைப் பாடல்கள் - தேவாரம், திருவாசகம், திருக்கோவையார் போன்ற பாட்டுகள் நாள்தோறும் ஓதப்பட்டன.

இவை மாணவர்களுக்கு மனப்பாடமாகவும், அர்த்தம் விளக்கமாகவும் கற்றுக்கொடுக்கப்பட்டன. இதனால், பொம்மபுர ஆதீனம் ஒரு சமய கல்வி மையமாக மட்டுமல்லாமல், சைவச் சித்தாந்தப் புலவர்களை உருவாக்கும் தளமாகவும் வளர்ந்தது. இன்றளவும் தேவாரம் திருமுறை மற்றும் சைவ சித்தாந்த நூல்கள் போன்ற புனித நூல்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டும் அதன் தொடர்பான பல மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் புலவர் கூட்டங்கள் நடத்தியும் தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்தையும் பொம்மபுர ஆதீனம் பாதுகாத்து வருகிறது. மேலும் மயிலம் பொம்மபுர ஆதீனம் தனக்கான ஆன்மீகப் பணியுடன் மட்டுமல்லாமல், தமிழ் இலக்கியம், இசை, நடனக்கலை, ஓவியங்கள், சிற்பம் ஆகிய துறைகளிலும் முக்கிய பங்கு வகித்தது. ஆதீனத்தின் குருமார்கள், புலவர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்குத் தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பரப்புவதில் முன்நிலை வகித்தனர்.

முடிவுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம் தமிழாய்வு, இலக்கியம் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு அளிக்கிறது. ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பக்திப் பாடல்கள் மாணவர்களுக்கும் பக்தர்களுக்கும் வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு, புதிதாக எழுதுபவர்களின் ஆராய்ச்சி திறன்களை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் சைவச் சிந்தனை மற்றும் தமிழ் இலக்கியம் பரப்பப்படுகின்றது. இணையவழி சொற்பொழிவுகள் உலகளாவிய தமிழ் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பக்தர்களுக்குக் கிடைக்கின்றன. இதனால், உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும், ஆதீனத்தின் அறிவுப்பயிற்சி மற்றும் ஆன்மீகச் செய்திகள் அணுகக் கூடியதாக இருக்கின்றன. ஏழை மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகைகள், கல்வி பொருட்கள், தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படுகிறது. இத்தகைய உதவிகள் கல்வி வளர்ச்சியையும் சமுதாய நலத்தையும் ஊக்குவிக்கின்றன. அன்னதானம், மூலம் சமூகத்தின் வறுமை நிலையைச் சற்று குறைக்கிறது. நாட்டுப்புற இசை, ஆடல் கலை போன்ற பண்பாட்டு நிகழ்ச்சிகள் திருவிழாக்களில் இணைக்கப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் மற்றும் பண்பாட்டு மரபைப் பரப்பும் பணியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாணவர்கள், புலவர்கள் மற்றும்

பக்தர்கள் இதில் நேரடியாக ஈடுபட்டு, பண்பாட்டு மரபின் தொடர்ச்சியை உறுதி செய்கின்றனர். இவ்வாறாக மயிலம் பொம்மபுர ஆதீனம் ஒரு ஆன்மீகம், தமிழ்க் கல்வி மற்றும் சமூக சேவையின் ஒருங்கிணைந்த மையமாக உள்ளது.

துணைநூல்பட்டியல்

- அன்பழகன், பி. தமிழக சைவ ஆதீனங்கள் வரலாறு. சென்னை: தமிழ் ஆராய்ச்சி மையம், 2005.
- ராமநாதன், எஸ். சைவ சித்தாந்தம் மற்றும் ஆதீனங்கள். மதுரை: அகில இந்திய சைவ அமைப்புகள், 2010.
- ரங்கராஜன், எம். தமிழ் இலக்கியம் மற்றும் பக்தி பாடல்கள். சென்னை: சுவாமி பதிப்பகம், 2012.
- சந்திரசேகர், டி. பொம்மபுர ஆதீனச் செயல்பாடுகள் மற்றும் சமூக பங்களிப்பு. விழுப்புரம்: ஆதீன ஆய்வு மையம், 2015.
- பாலசுப்பிரமணியம், ஜி. திருமுறை மற்றும் தேவாரம் ஆய்வு. சென்னை: தமிழ்க் கல்வி நிறுவனம், 2008.
- தாசன், வி. தமிழ் மொழி மற்றும் கல்வி வளர்ச்சி. சென்னை: தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி நிலையம், 2011.
- சிவநாதன், ஆர். மயிலம் பொம்மபுர ஆதீனம்: ஆன்மிகம், கலாச்சாரம் மற்றும் சமூக சேவை. சென்னை: தமிழ் பண்பாட்டு வெளியீடுகள், 2018.
- Subramanian, K. Saiva Monastic Institutions in Tamil Nadu: History and Cultural Contributions. Chennai: Institute of South Indian Studies, 2013.
- Rajendran, P. Tamil Monastic Education and Literary Traditions. Madurai: Tamil Research Academy, 2016.
- Official website of Mayilam Pommapura Adheenam. (<https://www.mayilamadheenam.org>)

காஞ்சிப் பதியில் சிவஞானி

திருமதி. ரேணுகா பிரபாகரன்.
தமிழ் ஆசிரியர், (அலைபேசி. 99946 92603)
எஸ்.எஸ்.கே.வி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,

காஞ்சிபுரம்

செந்தமிழும் சிவநெறியும் பரப்பும் வீரசைவ ஆதீனங்களுள் ஒன்று மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகும். தமிழகத்தில் வீரசைவ நெறிக்குத் தாயகமாகத் திகழும் இவ்வாதீனத்தின் ஆதிகுரு முதல்வர் ஸ்ரீ பாலசித்தரின் முதற்சீடர் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்.

சிவப்பிரகாசர் வணக்கம்

எவர்க்கும் மெய்ஞ்ஞான சோதி ஈயும் மாணிக்க மாகி
உவப்பொடு வெறுப்பு மாகி உற்றிடும் விடயத் தெய்தும்
பவப்பெரும் புணரி நீந்தப் பாரதி யாரும் எங்கள்
சிவப்பிர காச தேவன் திருவடி சென்னி வைப்பாம்.

செந்தமிழ்ச் சிவஞானி

உலகம் போற்றும் உயர்தனிச் செம்மொழிகள் பல அவற்றுள் அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி ஒன்றாகும். பழம்பெரும் சிறப்புமையுடைய அம்மொழியின்கண் தோன்றிய நூல்கள் பற்பல வகையினவாகும். தமிழ் மக்களின் அறியாமையாலும், அலட்சியத்தாலும் நீருக்கும், நெருப்புக்கும், கரையானுக்கும் இரையானவை போக இன்றுள்ள தமிழ் நூல்களை எண்ணிப் பார்த்தாலும் அவற்றின் விரிவும், பரப்பும், எண்ணிக்கையாலும் எண்ணற்றவைகளாகவே விளங்குகின்றன. இத்தகு உயர்தனிச் செம்மொழிக்கு சிவஞானி அவர்கள் ஆற்றிய பங்கு எண்ணிலடங்கா.

சிவப்பிரகாசச் செங்கதிரோன் தோற்றம்

செந்தமிழ்நாடு செய்த தவப்பயனால் ஊனமிலா ஞானநெறி காட்டி உலகை உய்விக்கும் மெய்ஞ்ஞானியர்கள் காலந்தோறும் வாழையடி வாழையெனத் தோன்றுகின்ற வரிசையில் பதினேழாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தின் தென்திசை ஸ்ரீ வைகுண்டத்தில் குமரகுருபரரும், வடதிசைக் காஞ்சியில் சிப்பிரகாசரும் சிவஞானச் செங்கதிரோனாகத் தோன்றிப் புறச்சமயப் பனிமூட்டத்தைப் போக்கிச் சைவ, வீரசைவ சமயநெறிகளைப் புலப்படுத்திக் காட்டினர்.

தோகை மயில் காஞ்சி

நல்லுலகில் காஞ்சி ஒரு பழமையான நகரம். கல்வியில் சிறந்ததோர் காஞ்சி என்னும் வழக்குச் சொல்லிலிருந்தே இந்நகரின் பெருமை புரியும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பதஞ்சலி முனிவர் தனது சமஸ்கிருத நூலான மாபாடியத்தில் காஞ்சிப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். "கல்வியில் கரையில்லாத காஞ்சி" எனத் திருநாவுகரசரும், "நகரேஷி காஞ்சி" என்று வடநாட்டுக் கவிஞரான மகாகவி காளிதாசரும் புகழும் அளவிற்கு சிறப்பு பொருந்திய நகரமாக விளங்கியது. பல்லவ மன்னவர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சி மாநகரத்தை பல்லவர்கள் பல்லவேந்திரபுரி என்று அழைத்துள்ளனர். சங்க இலக்கியமான பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சிபுரமானது, 'கச்சிமூதூர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பாடல் ஒன்று காஞ்சிபுரத்தை மயில் போல அமைந்த ஊர் என்று விவரிக்கிறது.

ஏரியிரண்டும் சிறகா எயில் வயிறா
காடுடைய மீலி கடிகாவா - நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு

காஞ்சியில் ஏரி, கோட்டை, சோலை மற்றும் அத்தியூர் மற்றும் நான்கு பகுதிகளை இணைத்து காஞ்சியின் அமைப்பானது மயில் போல இருந்தது என புலவர் விவரிக்கிறார். காஞ்சியின் இருபுறமும் அமைந்திருந்த ஏரியானது மயிலின் சிறகைப்போலவும், கோட்டை மதிலின் சுவரானது மயிலின் வயிறு போலவும், அடர்த்தியான காடானது மயிலின் தோகையைப் போலவும், அத்தியூரான சின்ன காஞ்சியானது மயிலின் தலை போல இருந்ததாகவும் பாடி காஞ்சியை தோகைமயில் என்று குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சி மாநகரானது புண்ணியக் கோட்டம், ருத்ர கோட்டம், குமரக் கோட்டம் மற்றும் காம கோட்டம் என நான்கு கோட்டங்களாகவும் பிரித்து அறியப்படுகிறது. அருள்மிகு வரதராஜப் பெருமாள் எழுந்தருளியுள்ள கோயில் புண்ணியக் கோட்டம் என்றும், அருள்மிகு ஏகாம்பர நாதர் எழுந்தருளியுள்ள கோயில் ருத்ர கோட்டம் என்றும், அருள்மிகு சுப்பிரமணியர் எழுந்தருளியுள்ள கோயில் குமரக் கோட்டம் என்றும், அருள்மிகு காமாட்சி அம்மன் எழுந்தருளியுள்ள கோயிலானது காம கோட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகு சீர்மிகு மண்ணில்

சைவகுரவர்கள் வாழ்ந்து அருளியிருப்பினும் இக்காஞ்சிப் பதியில் இருள்ஞானக் குரவர் செந்தமிழ்ச் சிவபிரகாசர் சிவஞானியின் அரும்பணி அளவிடற்கரியது.

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தின் அரும்பெரும் பணி

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக' என்னும் தனிப்பெருங் குறிக்கோளுடன், தமிழுக்குக் கோயில் என்னும் தண்டமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்து, எண்திசையும் புகழ்பரப்பி நூற்றாண்டு விழாக் காணும் இவ்வாதீனத்துக்குப் பதினெட்டாம் பட்டம் - குருமகா - சந்நிதானம் அவர்கள் சிவப்பிரகாசரின் நூல்கள் முப்பதையும் ஒரே நூலாக அச்சிட்டுச் சிவப்பிரகாசர் 'செந்தமிழ் நூல்கள்' என்னும் பெயரில் தந்தருளிய தொண்டுக்கு நிகரானது, தரணியில் பிறிதும் உளதோ? முன்னோர் காலந்தொட்டு வழிவழியாக வரும் ஞானத்தொடர்பு கொண்ட பேரூர் ஆதீனத்துக் குருமகா சந்நிதானம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மற்றும் அறிஞர் பெருமக்கள் ஆகியோரின் பெருவிருப்பத்திற்கிணங்க 'சிவப்பிரகாசர் செந்தமிழ் உயராய்வு மையம்' என்னும் ஒன்றினை நிறுவித் தம் கல்லூரியில் தமிழ்ப்புலமைபெறும் மாணவர்கள் சிவப்பிரகாசர் நூல்களிலும் புலமைபெற வழிவகை செய்திருக்கிறார்கள்.

நால்வர் நாண்மணி மாலை அருளிய ஞானியர்

பூழியர்கோன் வெப்பொழிந்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி
--- உமாபதி சிவாச்சாரியார்.

சிவபெருமானின் முக்கட்சுடர் போன்று திகழ்வன பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் ஆகியனவாகும். வலக்கண்ணெனத் திகழும் பெரியபுராணத்துள் விரிவாகப் போற்றித் துதிக்கப் பெறுகின்ற தேவாரமூவர், திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் அருளிய திருமுறைகள், நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றைத் திறனாய்வு அடிப்படையில் போற்றித்துதிக்கும் அருள்நூல் இது. இந்நூலினைப் படைத்து நால்வரையும் அடியார்களுக்கான புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றவர் சிவஞானியாவார்.

பாடும் பிறவியை நாடிய துறவி

இறைவன் பால் பிறவாமையை வேண்டுவர் அடியார்கள். ஆனால், சிவப்பிகாசரோ, இறைவனின் பொருள்சேர் புகழைத் தமிழ்ச் சொல்மலரால் துதிக்கும் பிறவியையே வேண்டுகின்றார். பாடும் நெறியில் அவர்கண்ட ஈடுபாடும், பாட்டின் வாயிலாக இறையருளின்பம் எய்திட இயலும் என்றெண்ணிய தேற்றமும் இதனால் தெரியவருகின்றது.

சிவப்பிரகாசரைத் துதிக்கும் பாடலொன்று, 'இன்தமிழ்ப் பாமாலை சினவீடையவர்க்கே சாத்தும் சிவப்பிரகாசதேவன்' என்று அவர்தம்மைப் புகழ்கின்றது.

சிவபெருமானே சிவஞானியாகிய தம் குருநாதர் என்னும் உணர்வு சிவப்பிரகாசருக்கு இருந்தது போலவே அவர்க்கு முன்னர் வாழ்ந்த அருணகிரிநாதரும் எண்ணியிருந்தார். அதனால்தான், அவர் மயிலம் முருகப் பெருமானைத் தரிசித்துப் பாடிய ஒப்பற்ற ஒரு திருப்புகழில், முருகன்பால் உபதேசம் பெற்ற அடியாராகிய சிவஞானி முருகனை வணங்குவதைக் கண்டு சிவபெருமான் வந்து வணங்குவதாகவே எண்ணி

'மதி மிஞ்சு போதக! வேலா! ஆளா
மகிழ்சம்பு வேதொழ பாதா! நாதா!
மயிலந்தண் மாமலை வாழ்வே! வானோர் பெருமானே!

என்று துதித்துள்ளார்.

வழங்கிய இலக்கியச் செல்வங்கள்

கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் வீரசைவ சமயத்தைச் சார்ந்த சிவப்பிரகாச சுவாமிகள், தொண்டை நாட்டுத் துறைமங்கலம் என்னும் ஊரைச் சார்ந்தவர்.

நிரோட்டக யமக அந்தாதி, நால்வர் நான்மணி மாலை, பிரபுலிங்க லீலை, நன்னெறி, மந்திரக் கோவை, திருவெங்கைக் கோவை, அருணாசல புராணம், அருணைக் கலம்பகம், திருவெண்காட்டுப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், சௌந்தர்ய லகரி உரை நூல் ஆகியவை செந்தமிழுக்கு சிவப்பிரகாசர் அளித்த செல்வங்களாகும்.

திருச்செந்தூர் முருகன் மேல் பாடப்பட்ட நிரோட்டக யமக அந்தாதி இதழ்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் வரும் சொற்களை அமைத்துப் பாடப்பட்ட சிறப்புடையதாகும். நால்வர்

நான்மணி மாலை சமயக்குரவர் நால்வரின் அருமைகளை எடுத்துரைக்கிறது. வீரசைவத்தின் பெருமையினைப் பிரபுலிங்க லீலைப் பேசுகிறது. திருக் கோவையார்க்கு அடுத்த நிலையிலே திருவேங்கைக் 'கோவை' போற்றப்படுகிறது.

சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம், இல்லெனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மைவைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த் துணையே

என்ற கொள்கையுடையவர் சிவப்பிரகாசர். நால்வர் நான்மணி மாலையில் சுந்தரரைப் புகழ்ந்து பாடும் ஒரு பாடல், சிலேடை அணியுடன் சிறப்பான நயம் பெற்று விளங்குகிறது.சிவபெருமான சங்கிலி நாச்சியாரால் சுந்தரரைக் கட்டினாலும், கடலாகிய பரவை நாச்சியாரிடத்தில் மூழ்க வைத்தாலும், அவரையே நம்பி, அவரடி எய்தி இன்புற்று இருப்பார் சுந்தரர் என்னும் அழகான கருத்தை இவ்வாறு பாடுகிறார்.

"செல்வநல் ஒற்றியூரன் செய்ய சங்கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற அயிழ்த்து மேலும்
அல்லுநன் பகலும் நீங்காது அவன்மகிழ் அடியில் எய்தி
நல்ல இன் படைந்தி ருப்பன் நம்பியாரூரன் தானே."

சங்கிலி என்றால் இரும்புச் சங்கிலியையும் குறிக்கும், சங்கிலி நாச்சியாரையும் குறிக்கும், பரவை நாச்சியாரையும் குறிக்கும். இவ்வாறு இரு பொருள்படப் பாடுவதில் சிவப்பிரகாசர் வல்லவர். சிவநெறியில் சிறந்தோங்கிய சிவப்பிரகாசர், மக்கள் அனைவருக்கும் பொதுவாக நன்னெறி புகட்டுகிறார். பெரியோர், பிறருக்குத் துன்பம் வந்தால், தமக்கு வந்ததாகக் கருதி நெருப்பிலிட்ட நெய்போல் உருகுபவர் பெண்ணே தெரிந்துகொள்! எந்த உறுப்பு வருந்தினாலும், கண்ணல்லவோ கலங்குகிறது? என்று பெரியோரைப் போற்றுவதோடு நாமும் அவர்களைக் கண்போல் கருதிப் போற்ற வேண்டும் என்பதையும் சொல்லாமல் சொல்கிறார். அந்த அழகிய பாடல்:

பெரியவர் தம்நோய் போல் பிறர்நோய் கண்ட உள்ளம்
எரியின் இழுது ஆவர் என்க: - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண்

காஞ்சிப் பதியில் பிறந்த சிவஞானி அவர்களைப் போல நாமும் பிறர்துன்பம் கண்டு உருகும் பெருந்தன்மை பெறுவோம்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தொன்மை

செல்வி பெ. சுவேதா.
முனைவர் பட்ட ஆய்வாளர்.,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மயிலம்.
Contact Number: **9345544084**
Email: sunswethaa2001@gmail.com

முன்னுரை

மயிலம் பொம்ம புர ஆதீனம் வீர சைவ மரபைச் சார்ந்த ஆதீனம் ஆகும். ஆதீனங்கள் பக்தி நெறி தழைக்கவும், தமிழ் மொழியை வளர்க்கவும் தோன்றின. மனிதன் நிலையிலிருந்து இறைநிலையை அடைய உதவும் வாழ்வியல் ஒழுகலாறுகளைப் போதிப்பவை ஆதீனங்கள் ஆகும். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் தெளிவாக காணலாம்

ஆதீணங்களின் சிறப்பு

தமிழகத்தில் பல்வேறுபட்ட ஆதீனங்கள் தோன்றியுள்ளன . அவற்றில் சிறப்புமிக்கதாக காணப்படும் மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கைலாய ஞான பரம்பரையின் வழி வந்தது ஆகும். தமிழகத்தில் உள்ள தொன்மையான ஆதீனங்களில் குறிப்பிடத்தக்கதாக இருப்பது மயிலம் பொம்மபுர ஆதீனம் . ஆதீனங்கள் அனைத்துமே ஆன்மீகம் மற்றும் பக்தி நெறி போன்றவற்றோடு சேர்த்து தமிழ் மொழியையும் வளர்க்கும் விதமாக தோன்றியதே.

அதனால் ஆதீனங்கள் சார்ந்த பெரும்பாலான கோவில்களில் தமிழிலே அர்ச்சனை செய்யப்படுகின்றன. இந்த வழியில் இருக்ககூடியதே மயிலம் பொம்ம புர ஆதீனம்.

கைலாய வரலாறு

மயிலம் பொம்மபுர ஆதீனம் தோன்ற காரணமாக இருந்தவர் தேவலோகத்தில் வாழ்ந்த சிவகாணங்களில் ஒருவர் ஆவார். திருக்கைலாயத்தில் சிவபெருமானுக்கு மேற்கு திசையில் காவல் பணியைச் செய்து வந்த பூதகணங்களுள் ஒருவர். சங்கு கண்ணர் என்பது அவரின் பெயர். ஒரு நாள் அவர் செய்த தவறுக்காக

சிவபெருமான் சாபம் அளித்து பூமியில் பிறக்கும்படி கூறினார். அதனால் மனம் வருந்தி மன்னிப்பு கேட்ட சங்கு கன்னர் சிவபெருமானிடம் சாப விமோசனம் வேண்டினார் இறைவனும் மனமிறங்கி தென்திசையில் வீரசைவ நெறியை வளர்த்து வந்தால் உமக்கு சாப விமோசனம் கிடைக்கும் என்றார். இதனைக் கேட்ட சங்கு கன்னர் எப்பொழுதும் உங்களின் அருகிலேயே இருந்து காவல் பணி செய்த எனக்கு மண்ணுலகிலும் உங்கள் அருகிலே வாழும் வரம் வேண்டும் என்று வேண்டினார் . அவரது வேண்டுகோளுக்கு இணங்க சரியான நேரம் வரும் பொழுது முருகனின் மூலம் உன் விருப்பம் நிறைவேறும் என்றும், முருகப்பெருமான் சங்கு கண்ணர் முன்பு தோன்றும் பொழுது சிவயோக சமாதி அடைந்து சிவலிங்கம் ஆகி சிவனோடு ஐக்கியம் ஆவாய் என்று சிவபெருமான் கூறினார்

சங்கு கண்ணனின் அவதாரம்

சிவபெருமான் அருளால் சங்கு கண்ணர் கருவின் வழியாக தோன்றாமல், சிறு பிள்ளையாக பொம்மையார்பாளையம் கடற்கரை பகுதியில் தோன்றினார்.

சங்கு கண்ணனின் உருவமைப்பு

பத்து வயது பிள்ளையாய் நெற்றியில் பால் போன்ற வெண்மையான திருநீறும், செம்மையான சடையின் அருகே இருக்கும் அழகிய காதில் அணிந்த குண்டலமும், கழுத்தில் உருத்திராட்சமும் , இட்டலிங்கமும் அணிந்து இருக்கும் அழகிய மார்பை உடையவராகவும் , சின்முத்திரையுடன் இருக்கும் வலது கையும், திருநீற்றுப் பையுடன் மாத்திரை கோலையும் இடது கையில் கொண்டவராகவும், இடையில் காவி நிறத்தில் ஆடைகளை அணிந்து வாய் நிறைய வீர சைவ ஆகமங்களைக் கூறிக் கொண்டும், நாவினால் எப்பொழுதும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஒலிக்க கூடிய அருள் வடிவமாக பூமியில் அவதரித்தவர் சங்கு கண்ணர்

திருமடத்தின் தோற்றம்

பாலனாக இருந்தும் பக்தியில் சிறந்து பெருமுக்கல் மலையில் தங்கி பல சித்துக்களையும், அடியவர்களுக்கு வீர சைவ ஆகமங்களையும் கூறி நல்வழி காட்டியதால் பாலசித்தர் என்று அழைக்கப்பட்டார்.

பிரம்ம நிலையில் இருந்து தவம் மேற்கொண்டதால் பிரம்மபுரம் என்றும் ஊர் தோன்றியது. பின்னர் தவஆற்றல் நிரம்பி சீடர்களின் நிலை அறிந்து ஞான உபதேசம் வழங்கியதாலும்

சிவயோகம் புரிய அமைத்துக் கொண்ட திருமடம் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் என்றானது.

பெருமுக்கல் மலையில் தங்கி தவம் செய்து பல சித்துக்களைச் செய்துள்ளார் என்று மயூராசல புராணம் கூறுகின்றது.

பால வயது ஆக வளை பாரதியின் மே வரும் பான்மையும் அழாது அளவு இலா சீலம் ஒரு செத்துப் பொறி செய்கணுமே பாலசித்தன் என நாமம் நிறுவி

அத்த அத்தன் அருள் பெற்றவர்கள் வற்ற பெருமுக்கல் மலை ஆதியம் வரைக்கண் அணுகி சித்தர் கடமக்க அரிய அற்புதம் உட்ப புனித சித்த நிலை முற்றும் உதவி தொற்றளர் வனத்து அமரும் நாட் அவர்களுக்கும் ஒரு தூய சிவபோத நல்கி என்று இப்பாடலின் கருத்தானது பால சித்தரின் சித்துக்களை பற்றி எடுத்துரைப்பதாக உள்ளது.

மயிலம் தல வரலாறு

பால சித்தர் திருமடத்தில் இருந்தபோது நாரதர் அங்கு தோன்றி பொம்மையார்பாலத்திற்கு மேற்கே மயூராசலம் என்னும் ஊர் உள்ளது அங்கு சூரபத்மன் என்பவன் மயில் மலையாக இருந்து தவம் செய்து முருகனிடம் வரம் பெற்று மயில் வாகனமாக மாறினான். ஆதனால் அம்மலை மயிலை மலை என்றானது. பின்னர் முருகப்பெருமான் தேவியரோடு இணைந்து அருள் பாலித்துக் கொண்டு உள்ளார்.அங்குள்ள முருகப்பெருமான் அருளினை பெற மயிலம் செல்லுங்கள் என்று கூறி மறைந்துள்ளார்.

மேலும் கந்தபுராணத்திலும் இது பற்றிய தகவல் ஒன்று உள்ளது .முருகனோடு அசுரரான சூரபத்மன் போர் செய்து தோற்றான். அப்படி தோற்றவன் நல்லறிவு பெற முருகனுக்கு வாகனமாக இருக்க வேண்டும் என்று விரும்பி தவம் மேற்கொண்டான் என்ற செய்தியைக் கந்தபுராணம் குறிப்பிட்டுள்ளது.

பால சித்தரின் தவக்கோலம்

பாலசித்தர் மயிலம் மலையை அடைந்து சுனைகளில் நீராடி பின்னர் முருகப்பெருமானை வழிபட்டார் . 35 ஆண்டுகள் பத்மாசனத்தில் தவம் இருந்தார் . முருகனருள் கிடைக்கவில்லை. பின்னர் பஞ்சாக்கினி (ஆன்மா மறு பிறவி எடுக்கும் செயல்முறை) முறையில் சில காலம் தவம் இயற்றினார் . அப்பொழுதும் இறைவனின் அருள் கிடைக்காமல் போனதால் , தேவியரை

நினைத்து தவம் செய்தார். பாலசித்தரின் கடுமையான தவத்திற்கு மனம் இறங்கிய தேவியர்கள் இறைவனிடம் பாலசித்தருக்கு அருள் புரியுமாறு முறையிட இறைவனோ அதற்கு இன்னும் நேரம் வரவில்லை என்று கூறியதால் , முருகனிடம் ஊடல் கொண்டு தேவியர்கள் சித்தரிடம் அடைக்கலம் புகுந்தனர்.

முருகப்பெருமானின் அருள்

சித்தரின் மகள்களாக இருவரும் வளர்ந்து வரும் வேளையில் பாலசித்தருக்கு அருள் புரியும் நேரம் வந்ததால் இறைவன் பால் சித்தர் இருப்பிடம் வந்தார் . பின்னர் தேவியர்களின் மீது இருந்த ஊடல் நீங்கி முருகப்பெருமான் அரசன் கோலத்தில் தேவியர் இருக்கும் குடிலுக்குள் நுழைந்தான். பெண்கள் இருக்கும் குடிலுக்குள் ஆடவர் நுழையக்கூடாது என்று சித்தர் தடுக்க இருவருக்கும் இடையில் போர் நடந்தது. இறுதியில் பாலசித்தர் முருகப்பெருமானுடன் தான் போயிட்டோம் என்று உணர்ந்து மன்னிப்பு கேட்டார். பின் தேவியர் இருவரையும் மணந்து கொள்ளுமாறு வேண்ட முருகப் பெருமான் சிவபெருமான் பார்வதி தேவி மற்றும் தேவர்களின் முன்னிலையில் திருமண கோலத்தில் காட்சி அளித்தார்.

அப்பொழுது சிவபெருமான் பாலசித்தரை நோக்கி 500 ஆண்டு காலம் வீர சைவ நெறியை ஓங்கச் செய்து பின் முருகனின் வலப்பாகத்தில் ஜீவசமாதி அடைந்து பின் அருள் வழங்குக . இத்தளத்தில் எழுந்தருளிய முருகப்பெருமான் என்றும் குருவருளையும், திருவருளையும் மக்களுக்கு வழங்கிக் கொண்டு இருப்பதைப் போல பால சித்தர் ஆகிய நீங்களும் இருப்பீராக என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

முடிவுரை

மனக்கோளத்தில் வள்ளி தெய்வானை சமேதராக முருகப் பெருமான் மக்களுக்கு அருள் பார்த்து வருகின்றார். அவருக்கு அருகிலேயே பாலசித்தர் ஜீவசமாதியும் அமைந்துள்ளது. இவர்கள் இணைந்து குருவளையும், திருவருளையும் அளித்து மக்களின் மன குறையைப்போக்க கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் இங்குள்ள முருகனுக்கு மட்டும் நொச்சி இலை மாலை அணிவது இப்பொழுதும் வழக்கமாக உள்ளது. மயிலை முருகப் பெருமானை வணங்கி வாழ்வில் எல்லா வளமும் பெற்று இன்பமாக வாழ்வோமாக.

தவத்திரு சிவஞானி

ச. திவ்யா
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ் கலை அறிவியல் கல்லூரி மயிலம் - 604 304

தமிழகத்தில் உள்ள தொன்மையான ஆதீனங்களில் குறிப்பிடத் தக்கதாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனம். இம்மடம் வீர சைவத்தை முதன்மையாகக் கொண்டு சைவமும் தமிழும் தழைத்தினிது வளர வேண்டும் என்ற நோக்குடன் செயல்படும் ஆதீனம் ஆகும்.

சமுதாயப் பணியே சமயப் பணி என்னும் பொருண்மையில் சமுதாய மக்களை நல்வழிப்படுத்தும் வகையில் மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம் வாயிலாக பல நிகழ்வுகளை நமது குருமகா சன்னிதானம் அவர்கள் நிகழ்த்தி வருகிறார்கள்.

அனைத்து நிகழ்வுகளிலும் பொதுமக்களும் மாணவர்களும் பயனடையும் வகையில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமாக இருக்கிறது.

பதினெட்டாம் பட்டம் குருமகா சன்னிதானம் அவர்கள் தமது காலத்தில் பல புலவர் பெருமக்களைக் கொண்டும் தாமும் ஒரு புலவராக விளங்கியும் பல சொற்பொழிவுகளை ஆற்றிவந்தார்கள்.

தமிழ் மீது கொண்ட அளப்பரிய அவாவின் பொருட்டு 1937-ஆம் ஆண்டில் முருகன் செந்தமிழ்க் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி வைத்தார்கள். அதோடு 1938-ம் ஆண்டு ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்னும் பெயரில் தமிழ் வளர்க்கவும் கிராமப்புற மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி பயனடையும் பொருட்டும் கல்லூரி ஒன்றை தொடங்குவதற்கு அருளாசி வழங்கினார்கள்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்ற பாரதியார் கூறியதற்கிணங்க இன்று உலகம் முழுவதிலும் தமிழ் மொழியையும் சைவத்தையும் பரப்பிய பெருமை நமது மயிலம் பொம்மபுர ஆதீன குருமகா சன்னிதானம் அவர்களையும் மயிலம் தமிழ்க் கல்லூரியையும் சாரும்.

சிவஞானி

உலகில் மனிதம் என்பது சிறந்து விளங்க காலந்தோறும் பல அடியார்பெருமக்கள் இப்பூவுலகில் அவதரித்து மக்களை நல்நெறி படுத்துகிறார்கள். அதிலும் தமிழகம் பல அருளாளர்கள் தோற்றம் பெற்ற புண்ணிய பூமியாக விளங்குகிறது.

அத்தகைய அருளாளர் வரிசையில் மெய்ஞானச்சுடராகவும், தத்துவச்சுடராகவும், தமிழின் கலங்கரை விளக்கமாகவும், அருட்பெரும் சோதியாகவும் விளங்கி மக்களுக்கு திருவருளை குருவருளாக வழங்குபவர் நமது சிவஞானி ஆவார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே

இவ்வரிகள் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

குருவின் திருமேனியைக் காண்டல், திருநாமத்தைச் செப்பல், திருவார்த்தையைக் கேட்டல், திருவுருவைச் சிந்தித்தல் ஆகியவை ஞானம் அடைவதற்கான வழிகள் என்று கூறுகின்றன. இந்த நான்கு செயல்களும் நம் வாழ்வில் தெளிவை ஏற்படுத்தும் வழிகள் என திருமூலர் குறிப்பிடுகிறார்.

அவ்வகையில் தன்னை நாடிவரும் அடியார் பெருமக்களுக்கு முக்தியினை வழங்கும் மெய்ஞான சுடராக விளங்குபவர் நமது சிவஞானி. தொன்றுதொட்டு வீரசைவத்தின் வழி சமுதாய பணியை ஆற்றிவரும் சிவஞானியின் மகிமைகளை பல அடியார்களும் , புலவர் பெருமக்களும் தமது நூல்களில் பதிவு செய்துள்ளார்கள்.

பால சித்தரும் சிவஞானியும்

திருக்கையிலையில் எம்பெருமானுக்கு மேற்கு திசை காவலராக விளங்கிய பூதகணங்களுல் ஒருவர் சங்குகன்னர். சிவபெருமானின் அருளாணைக்கிணங்க தென்னாட்டில் வீரசைவ நெறியையும், சித்தர் கொள்கையையும் வலுப்பெற செய்ய 10 வயது நிரம்பிய பாலகனாகத் தோன்றி பொம்மபுர கடலருகே சித்தர்களுக்கும் அடியார்களுக்கும் வீரசைவத்தின் நெறியை உணர்த்தினார். பாலகனாய் சித்துக்கள் பல செய்தமையால் பாலசித்தர் என பெயர் பெற்றார்.

முருகப்பெருமானின் மீது பற்றுக் கொண்ட பாலசித்தர் முருகப் பெருமானின் அருளினைப் பெற 32 ஆண்டுகள் கள்ளிப்பாலை உணவாக உண்டு கடுந்தவம் புரிந்ததால் முருகப்பெருமான் திருமண கோலத்தில் வள்ளி தெய்வானையுடன் மயிலம் திருமலையில் திருகாட்சியளித்தார்.

பச்சை கந்த தேசிகரின் சீடர் பரம்பரையில் அம்மவை என்னும் அம்மையார் பிள்ளைப் பேறில்லாமையால் தம் கணவருடன் பாலசித்தரை சரணடைந்து அவருக்கு பல தொண்டுகள் செய்து அவரளித்த கள்ளிப்பாலை பிரசாதமாக உண்டார்கள். அவ்வருளால் அம்மையார் கருவுற்று ஆண் பிள்ளையைப் பெற்றார்.

சித்தர் ஞானோபதேசம் செய்து தமது சீடராக்கினார். அவரே ஆதி சிவஞான பாலய தேசிகர் ஆவார். பிறவி பெருங்கடலை நீந்தி கரையேற துணை நிற்பவர் துறவி பாலசித்தரும் தூய சிவஞானியும் ஆவார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கே
இறைவ நின்னடி சேர்வதற்கே
துறவிப் பால சித்தரவர்
தூய சிவஞானிப் பேரார் **(மயிலத் திருவாயிரம்.10)**

நல்லாற்றூர் சிவப்பிரகாசரும் சிவஞானியும்

சிவப்பிரகாசர் கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் என்றும் துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்றும் அழைக்கப்படுகிறார்.

சிற்றிலக்கியம் பல படைத்து இலக்கிய உலகில் சிற்றிலக்கிய புலவராக வலம் வந்தவர் பிரபந்த மும்மூர்த்திகளில் ஒருவராக விளங்கியவர் சிவப்பிரகாச சுவாமிகள்.

பேரூர் சாந்தலிங்க சுவாமிகளுடன் கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் புத்துப்பட்டில் தங்கியிருக்கும் போது அருகாமையிலுள்ள பொம்மபுரத்தில் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் உள்ளது அவர்களிடம் சென்று பாமாலை பாடி வழிபடலாம் எனக் கூற மனிதரை பாடுவதில்லை என்று நல்லாற்றூர் சிவப்பிரகாசர் மறுத்துரைத்தார்.

இந்த நிகழ்வை ஞானத்தால் உணர்ந்த சிவஞானி அன்றிரவு ஸ்ரீ சிவப்பிரகாசரின் கனவில் முருகன் வடிவில் தோன்றி உதிரி

மலர்களைக் கொடுத்து மாலை தொடுத்துவா என கூறி மறைந்தார். சிவப்பிரகாசர் உண்மையை உணர்ந்து பொழுது புலர்ந்தவுடன் பொம்மபுரம் சென்று ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளை வணங்கிய போது உள்ளத்தின் கண் பேரொளி தோன்றி இவரே தமது ஒப்பற்ற ஞானகுரு என தெளிந்து ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சை விடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி யெழுச்சி ஆகிய தமிழ் பாமாலையினை சூட்டியுள்ளார். தமிழ் உலகிற்கும் சமயத்திற்க்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சிவப்பிரகாசர் தனது 32 அகவையில் 34 பனுவல்களை இயற்றியுள்ளார்கள்.

மயிலம் பொம்மபுர ஆதீன சீடராகவும் புலவராகவும் விளங்கிய இவர் நல்லாற்றூரில் இட்டலிங்க பரசிவத்தில் கலந்து அருளினார். மயிலம் பொம்மபுரம் திருமடத்து கர்தர் 19-ஆம் பட்டம் குருமகா சன்னிதானங்கள் சந்நிதி எழுப்பினார்கள். சீடருக்கு சந்நிதி எழுப்பிய குருநாதர் என்ற வழிபாட்டிற்கு உரியவர் நமது சிவஞான பாலய சுவாமிகள்.

சிவனே சிவஞானி

கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சாமிகள் தமது ஞானாசிரியரைப் பாட்டுடைத் தலைவராக கொண்டு பாடிய நூல்கள் ஐந்து. மான்,மழு கலைந்து மானுடம் தாங்கி வையகம் உய்விக்க மயிலம் திருமலையில் அவதரித்தவர் சிவஞானி.

கையிலை மலையில் அருள் புரியும் சிவபெருமான் மயிலை மலையில் சிவஞானியாக காட்சியளித்து அருளாட்சி செய்கிறார் என்பதை ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தனது பனுவல்களில் பதிவு செய்துள்ளார்கள்.

சிவபெருமான் தன் திருமேனியில் போர்த்திய யானையின் தோலும், இடையில் தரித்த புலித்தோல் ஆடையும், மார்பில் அணிந்திருந்த தந்தமும், கரங்களில் ஏந்திய இளைய மான், தீ, மழுவும், மாலையாக அணிந்துள்ள தலை மாலையையும், கங்கணமாக அணிந்துள்ள ஆதிசேடனும், தலையின்கண் தாங்கியுள்ள கங்கை ஆறு மற்றும் வெண்மதியையும் துறந்துவிட்டு எங்களை உய்விக்க மானுட சட்டை தாங்கி வந்த சிவஞானி என்பதை,

துங்கவெம் புகர்முகக் களிநல்யா னையின் அதன்
சுமையும் பெரும்புலிதரும்

துகில்சுமையும் வெண்மருப் புச்சுமையும் இளையாது
துள்ளிஎழு சிறுகன்றுமான்
வெங்கனல் மழுச்சுமையும் வெண்முளரி மலர்வென்ற
வெண்தலைச் சுமையும் மணிகள்
வெயில் எறித்து இருள்விழுவது ஓரா யிரம்படம்
விளக்கும்அர வச்சுமையும்நீள
அங்கம் புரண்டுவலம் ஆலயம் புரியும் அவர்
அணிஎனத் திரைகள் புரளும்
ஆயிரம் திருமுகக் கங்கைஅம் சுமையும் ஒழுகு
அமுதகிர ணங்குழவி வெண்
திங்கள் அம் சுமையினோடு போகட்டு உலாவும்இது
செங்கீரை ஆடி அருளே
திமிரமலம் அகல வருசிவஞான மாமுனிவ
செங்கீரை ஆடி அருளே **(சி.பா.தே.பிள்ளை.11)**

சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ் செங்கீரைப் பருவப்பாடலில் சிவபெருமான் தமக்குரிய அடையாளங்களை விட்டு விட்டு சிவஞானியாய் எழுந்தருளியமையை சிவப்பிரகாசர் சுட்டியுள்ளார்.

திருமுடியில் பிறை, கங்கை, காதில் சங்கு குழைகள், கழுத்தில் பாம்பு ஆபரணம், கொன்றை மாலை, மேலாடை யானை தோல், கீழாடை புலித்தோல் இவை அனைத்தும் சிவபெருமானை அடையாளப்படுத்துவனாக அமைகின்றன. இவை அனைத்தையும் துறந்து பூவுலகில் சிவனே சிவஞானியாக அவதரித்தர் என்பதை சிவப்பிரகாச சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார்.

தேசுணர்த்த வேண்டி திருமுடி மேல் மேவி வாழ்
மாசுணத்தைத் தான் ஒளித்த மாணிக்கம்
(சிவ.பா.தே.நெஞ்சு.விடுதூது.கண்ணி.11)

இவ்வாறு சிவனே சிவஞானியாகவும் குருவாகவும் கையிலை மலை மீதிருந்த காட்சி போல் வந்து மயிலை மலை மீதிருக்கும் வள்ளல் என்று சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார்கள்.

முருகனே சிவஞானி

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுக்கு முதன்மை யானவன் முருகக்கடவுள். மயில் வாகனத்தையும் சேவல் கொடியையும் கொண்டு தரணி போற்றும் தமிழ் கடவுளாக விளங்கும் எம்பெருமான் முருகன் மயிலம் திருமலையில் திருமண

கோலத்தில் வள்ளி தெய்வானையுடன் காட்சி தந்து மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். பால சித்தரின் மகிமையால் சிவஞானபாலய சுவாமிகள் என்னும் திருநாமத்துடன் எம்பெருமான் முருகனே குழந்தையாக அவதரித்தார்.

கொலை கொண்ட போர்விழி எனத் தொடங்கும் மயிலத்தைக் குறித்த திருப்புகழ் பாடலில் சுவாமிமலை முருகன் தனது தந்தை சிவனுக்கு உபதேசம் செய்ததைப் போல மயிலம் திருமடத்தில் எழுந்தருளும் குருமகா சந்நிதானங்களான சிவஞானிக்கு (சிவபெருமான்) முருகன் உபதேசம் செய்தமையை "மகிழ் சம்புவே தொழு பாதா" என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றார். முருகனது திருவடிகளைப் பணிந்து சிவஞானியாகிய சிவன் உபதேசம் பெற்றமையைப் பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது

....குமரேசா
மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர்பெருமாளே
(திருப்புகழ். பா.546)

இவ்வாறாக சிவனாகவும் முருகப்பெருமானாகவும் சிவஞானி அவர்கள் அடியார் பெருமக்களுக்கும் பொது மக்களுக்கும் ஞானகுருவாக விளங்கி அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ மயிலாசல அனுபூதியில் குருவருள்

முனைவர் து. அமரதீபா
மேனாள் உதவிப் பேராசிரியர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி, மயிலம்

முன்னுரை

குன்றுதோறாடலில் ஒன்றாகத் திகழும் மயிலமலை முருகனைக் குறித்த சமயப் பனுவல்கள் பல. இவற்றுள் மயிலவேல் அகவல், மயிலமாலை, மயிலத்து அந்தாதி, கார்த்திகைக் கதம்பம், மயிலாசலமாலை, மயிலத்து இரட்டைமணிமாலை, அருள் வேட்டல், திருமயிலைச் சந்நிதி முறை முதலிய நூல்கள் தொகுக்கப்பட்டு மயிலம் முருகன் அருட்பனுவல்கள் எனும் பெயரில் 2015ஆம் ஆண்டு மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களால் வெளியிடப்பெற்றது.

திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பாவின் 23-வது நூலாகத் திகழ்வது ஸ்ரீமயிலாசல அனுபூதி என்பதாகும். திரு. சாமிநாதப் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற இந்நூலில் 50 பாடல்களும் காப்புச்செய்யுள் ஒன்றும் அமைந்துள்ளன. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இயற்றிய கந்தர் அனுபூதியைப் போலவே பாடல் அமைப்பிலும் பொருண்மையிலும் ஒப்புடையதாக ஸ்ரீமயிலாசல அனுபூதி அமைகின்றது. இந்நூலில் அமைந்த குருவருள் திறத்தை இக்கட்டுரை பதிவு செய்கிறது.

இறையுணர்வு உணரப்பெறுவது, அறியப்பெறுவது, உணர்வை ஊற்றாக்க வல்லது. அவன் அருளாலே அவன் தாளை வணங்கப் பெறும் வல்லமையைத் தருவது பக்திமார்க்கம். அதனாலேயே அந்தந்தச் சமயத்து உயிர்ப்பாகிய இறையுணர்வை ஞானப் பனுவல்கள் மூலம் அறிய வைத்து உரம் சேர்த்தனர் சமயச் சான்றோர்.

ஞான நூல் தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் என்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை சிவஞான சித்தியார்)

மேற்கூறப்பெற்ற ஐந்து வழிகளும் இறைவன் திருவடியாகிய வீடுபேற்றினை அடைவதற்கு உரிய மேலான நேர் வழிகளாகும்.

மனம் செம்மையானால்தான் மாற்றங்கள் நிகழும். இச்சமுதாயம் மேம்படும். வேதங்களும், ஆகமங்களும், இதிகாசங்களும், சமயப் பனுவல்களும், புராணங்களும் மனதைத் திறக்க எழுந்தவைகளே ஆகும். அதற்காகவே மகான்களும் பெரியோர்களும் சிறந்த கருத்துகளை மொழிந்துள்ளனர்.

நற்றுணையாவது நமச்சிவாயவே!
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா! எனும் நாமம்.
மொழிக்குத் துணை முருகா! எனும் நாமங்கள்

இறைவனது திருப்பெயர்களின் உயர்வையும், மந்திரங்களின் மகத்துவத்தையும் காலந்தோறும் அருளாளர்கள் பாடிப் பரவி யுள்ளனர். நதி மலையில் ஓரிடத்தில் ஊற்றங்கொண்டு பல கிளைகளுடன் கூடிய நதிகளாகப் பிரிந்தும் கூடியும் இறுதியில் ஒரே கடலைச் சென்றடைவதைப் போலவே ஒவ்வொரு சமயமும் ஒரே குறிக்கோளுடன் பல்வகையில் வேறுபட்டும் ஒன்றுபட்டும் ஒரே பரம்பொருளுடன் ஆன்ம இணைப்புப் பெற உதவுகின்றன.. பல்வகை தெய்வ வழிபாட்டுள்ளும் முருகப்பெருமான் வழிபாடு தொன்மையுடையது. முருகப் பெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம் கௌமாரம் எனப்பட்டடது. கௌமாரம் எனும் சமயப்பெயரைத் தாங்குவதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே முருகப்பெருமான் வழிபாடு பரவலாக விளங்கி வந்துள்ளது.

சேயோன் மேய மைவரை உலகு (தொல். பொருள்)
கழல்தொடி சேஎய் குன்றம் (குறுந்.1)

என இலக்கண இலக்கியங்கள் முருக வழிபாட்டைக் குறிப்பிடு கின்றன. முருக அவதாரத்தின் பெருமையை விரிவாக விளக்கும் நூல் கந்தபுராணம். வடமொழியில் வியாசரால் எழுதப் பெற்றதாகக் கருதப்பெறும் புராணங்கள் பதினெட்டில் ஒன்றானதும், பெரியது மானதாகக் கருதப்பெறுவது ஸ்காந்தம். இலட்சம் பாடல்களைக் கொண்டது, பலவகைக் கிளைக் கதைகளையும் உபதேசங்களையும் உடையது. எந்தப்பொருளும் கந்தபுராணத்தில் என்ற பழமொழியே ஸ்காந்தத்தின் பெருமையைச் சொல்வது.

கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம், சங்கப்பாடல்களில் முருகனைக் குறித்த பதிவுகள், குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ், அருணகிரிநாதரின் திருப்புகழ்,

கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி எனக் காலந்தோறும் முருகனைக் குறித்த இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன.

மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து
பயன்தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை (சிவ.நெஞ்.தூது)

என மயிலமலையைப் போற்றிப் பரவுவார் நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள். முருகப்பெருமான் உறையும் மலைகளுள் தனித்துவம் வாய்ந்தது மயிலமலை. முருகன் என்கிற திருப்பெயரில் முருகன், திருமால், ருத்திரன், பிரம்மன் அவர்களுடன் உறையும் முப்பெரும் தேவியரும் அடங்கி உள்ளதால்தான், நாமங்கள் எனப் பன்மையில் கூறியிருப்பதை அறியமுடிகிறது. வேண்டுதல் வேண்டாமைக்கு அப்பாற்பட்ட பராபரன் முருகன் வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்கிறான். அருள்பேற்றுக்குத் திறவுகோலாக அமையும் முருகவழிபாட்டை பணிவும், உண்மை அன்பும் நிறைந்த அடியார் பெருமக்கள் ஞானப் பனுவல்களாகப் பாடிவைத்தனர்.

முருகப்பெருமானின் அவதார நோக்கம், மயிலமலையின் சிறப்பியல்புகள், ஸ்ரீ பாலசித்தர் சிவஞானி உறையும் சித்தர்பீடம் மயிலம் திருத்தலம். ஓம்சரஹணபவ எனத் தொடங்கும் ஆறெழுத்து மந்திரத்தின் மேன்மை, முருகனது திருவிளையாடல்கள், இச்சை, கிரியை, ஞானம் என்னும் முருகனின் முப்பெரும் சக்திகள், சூரபதுமனை வென்று தேவர்களைக் காத்த நிகழ்வு, வேலும் மயிலும், சேவலும் ஆன்மாக்களுக்குத் துணையானவை என்பன போன்ற பல அற்புதப் பதிவுகள் ஸ்ரீமயிலாசல அனுபூதியில் இடம்பெற்றுள்ளன.

அருள் மிக்க மயிலமலை கயிலைக்கு நிகரானது என்பார் இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர், கயிலைபோல் சிறந்த மயிலமால் வரையில் சிவஞானி உறையும் சிறப்புடையது என்பதைப் பதிவு செய்துள்ளார்.

கயிலை மால்வரை நீங்கிக் கனிவினால்
மயிலை மால்வரை வந்துதித்து ஒங்கியே
ஆனநாமம் அவனியுளோர் சிவ
ஞான தேசிகன் என்று ஏத்த நண்ணியே"
(பாசவதைப் பரணி.300,301)

உலகில் தோன்றிய நாகரிகங்களில் உயரிய பண்பாடும், ஒப்பற்ற நாகரிகமும் கொண்டது தமிழர் இனம் ஆகும். சங்க காலத்தில் குறிஞ்சிநில மக்களின் தெய்வமாகச் சேயோனாகப் போற்றப்பெற்றவன் முருகன். சங்க இலக்கியங்களில் முருகப் பெருமானைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. தொன்று தொட்டு வந்த முருகவழிபாடு தொடர்ந்து வந்து முருகனைப் பற்றிய இலக்கியங்களும் பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

நெஞ்சை உருக்குவதற்கு முருகனின் நாமங்களைச் சொல்லிச் சொல்லி உருகவேண்டும் என்கிறார். அந்த நாமங்களை வாயால் கூறும்போது நமது உள்ளம் உருகும். முருகன், குமரன், குகன் என்ற மூன்று நாமங்களின் தத்துவத்தை அறியவேண்டும். முருகு என்றால் அழகு, இளமை, மணம், கடவுள் தன்மை தெய்வீகத் தன்மையோடு திகழ்பவன் சடாட்சரம் (ஆறெத்து) போல முருகா என்கிற சொல் ஒரு மந்திர அட்சரமாகக் கருதப்படுகிறது. முருகன் என்கிற சொல்லில் பிரணவத்தில் அடங்கிய "அ" உ 'ம்" என்கிற மூன்று அட்சரங்கள் (எழுத்துகள்) உள்ளதை உணரலாம். கந்தரலங்காரத்தில் (பா.70) மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் என்கிறார் அருணகிரிநாதர்.

மயில் வாகன மந்திர சடாக்கரமே
மயிலாசல மண்டல பூபதியாய்
அயில் பாணியனாகியவா அறுமுக
செயிர் தீர்ந்து எனை ரெட்சியும் சேவலனே (ஸ்ரீமயி. அனு.42)

ஞானமே வடிவான மயிலை வாகனமாகக் கொண்ட முருகப் பெருமானுக்குரிய மந்திரம் சடாக்கரம். ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து மயிலம் முருகனை வணங்கிப் பேறு பெரும் வழிமுறைகளைக் கூறுகிறார் ஆசிரியர். சமுதாயம் உயர்ந்தோங்க, வீரசைவ நெறி தழைக்க தமிழகத்தில் தொண்டாற்றி வரும் திருமடங்களுள் முதன்மையாக விளங்குவது மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம். காலந்தோறும் புலவர் பெருமக்களை ஆதரித்து வரும் இத்திருமடத்தில் தற்போது அருளாட்சி புரிந்து வரும் 20ஆம் பட்டம் சுவாமிகளின் சமயப்பணியும் சமூகப்பணியும் இம்மண்ணில் தொடங்கி விண்ணுயற உயர்ந்து வருகிறது.

சீர்வளர் சீரார் சிவஞான பாலய
பேராம் சுவாமிகளின் பேற்றினால் - நேர்ந்திட்ட
கல்லூரி கண்டவர் கல்விக்கண் தந்திட்ட
நல்லறம் என்றுமே நன்று (வெண்பா வேள்வி.ப.17)

தமிழும் சைவமும் தழைத்து இனிது ஓங்க வேண்டும் எனும் நல்லறத்துடன் தமிழ்க் கல்லூரியில் தமிழ்த்தொண்டினைப் போதித்து சிவஞான பாலய சுவாமிகள் ஆசி வழங்குவதைப் புலவர் பெருமக்கள் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளனர். மக்கள் உள்ளத்தில் குருபக்தி தங்குமானால் உணர்வாலே வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகப் பெருமான் விரும்பி உறையும் குன்றுதோறாடலில் மயிலமலையும் ஒன்று. இம்மலையில் முருகன் ஸ்ரீபாலசித்தருக்குக் காட்சி கொடுத்து சிவஞானியைத் தமது அம்சமாக்கியது உலகறிந்த உண்மை. வீரசைவநெறி மண்ணுலகில் தழைப்பதற்கு வந்துதித்த ஸ்ரீபாலசித்தர் பரம்பரையில் இன்று அருளாட்சிபுரிந்து கொண்டிருக்கும் 20ஆம்பட்டம் குருமகா சந்நிதானங்கள் முருக வழிபாட்டின் மேன்மையை உணர்ந்தமையாலேயே மயிலம் பொம்மபுரம் ஆதீனத் திருமடம் தமிழகத்தில் மட்டுமின்றி உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

உள்ளன்போடு மயிலமலை முருகனை வழிபடும் அடியவர்க்கு பலத்தை அளிப்பது கண்கூடு. நாயேனை ஆட்கொண்டு நலமே புரியும் முருகனால் எனது நெஞ்சத்தில் ஏற்படும் சஞ்சலங்கள் யாவும் நீங்கிவிடும். எண்ண அலைகளால் தாக்குண்டு அலைக்கழிப்புக்கு ஆளான எனது நெஞ்சத்தை நிலை நிறுத்தியது மயிலம் முருகன் திருவடியே ஆகும். திருநீலகண்டப் பெருமானாகிய சிவனின் இளைய மைந்தன் காங்கேயனைக் கருத்தில் கொண்டு காலத்தைப் பயனுள்ளதாக்க சிவலிங்கனார் வேண்டும் என்று தொல்காப்பியச் செம்மல் ஆ. கார்த்திகைக் கதம்பம் எனும் நூலில்

கண்டம் கண்ட கண்டபடி பேசிக் காலத்தைப் போக்காமல்
கொண்ட மட்டும் நின்னைக் குறிக்கொண்டு -கண்டம்
கருத்தவன் நன்மகனே காங்கேயா வாழ
இருத்து இங்கு என்னை இனிது. (பா.8)

என வேண்டுகிறார்.

நிலையாய் மயிலை பதி நெஞ்சகமே
வலையாய் மல மாயையிலே மிகநின்
அலையா ஒரு வண்ணமுமே அமரும்
கலையாய் வரும் ஞான கிருபாகரனே. (பா.37)

என்றும் நிலையாக வீற்றிருப்பவன் மயிலமலை முருகன். எனது நெஞ்சக்கமலத்தில் பதியாக வீற்றிருக்கும் முருகன் கருணைக் கடலாக விளங்குபவன். ஆணவம் கன்மம் மாயை எனும் மூன்று மலங்களால் சிக்கித் தவிக்கும் வலையாகி நின்ற மலமாயைதனை நீக்கி மிகவும் நன்மை செய்யும் வண்ணமாகி அமரும் பூரண சந்திர கலையாய் வரும் ஞான கிருபாகரனே! முருகா! குருவாய் வந்து அருள்பொழியும் ஞான கிருபாகரன் முருகன் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. குருவின் மூலமாகவே இறைவன் திருவருளைப் பெற முடியும். கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர் கல்விக் குரு ஆகிறார். ஞானத்தைப் போதிக்கும் ஆசிரியர் ஞானாசிரியராகிறார். அவ்வகையில் ஒவ்வொன்றையும் கற்றுத் தரும் ஒவ்வொருவரும் ஆசிரியரே. ஞானாசிரியர், சமயாசிரியர், குலகுரு, குடும்ப குரு எனப் பலவகையில் அமைகின்றனர்.

குரு இல்லா வித்தை பாழ் என்பது ஆன்றோர் வாக்கு. ஞால குருவானவர் இறைவனை அடைவதற்குரிய வழிகளைக் காட்டினாலும், மனித மேன்மையின் பல்வேறு சிறப்புகளை எடுத்துரைத்து சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் அவை எவ்வாறு பயன்பெறுகின்றன என்பதையும் அவர் நமக்குள் விதைக்கின்றார். மனிதர்கள் அன்பு நிறை வாழ்வு வாழ வேண்டும். அன்பே சிவம் என்பதே குருவின் உபதேச மொழி.

அன்பினால் இன்பம் ஆர்ந்து இன்பத்தையே அன்பாகக் கொண்டு கூடும் அன்பினால் கும்பிடுவதையே தமது நோக்கமாகக் கொண்டு வீடும் வேண்டாத விறலின் விளங்கியவர்களே வீரசைவ நெறியுணர்த்தும் ஞான குரு ஆவார். அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரனாகிய (சிவஞான பாலய சுவாமிகள்) பெருமையைக் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்,

அருவாகி நின்ற சச்சிதானந்த ஈசன்
குருவாகி தன்னைக் கொடுக்கும் எனச் சொன்னானோ
(சிவ தாலாட்டு)

என்று போற்றுகின்றார். மயில மலையில் வீற்றிருக்கும் முருகனும் சிவஞானியும் ஒருவரே என்பதை ஞானகிருபாகரன் என ஆசிரியர் பாடிப் பரவுகின்றார்.

வேலே வினை பொடிபட மாமயிலின்
மேலே நிலையாகிய வெற்றிதரும்

காலே நிலையாகிய நற்கருணைப்
பாலே மொழியாகிய பாஸ்கரனே. (பா. 38)

வேலும்! மயிலும்! முருகப் பெருமானின் அடையாளங்கள். வினையைப் பொடியாக்குவது வேல். மாமயிலின் மேலே நிலையாக வீற்றிருந்து வெற்றி தரும் காற்றாகி நிலையாகிய நற்கருணையைப் பொழியும் வேலனாகி தமிழ் மொழியாகி விளங்கும் பாஸ்கரனே.!

சுற்றி நில்லாதே போ
பகையே துள்ளி வருகுது வேல்

என்பது பாரதியின் வாக்கு. எந்தக் கடவுளின் பெயர்க்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ்க்கடவுள் முருகப்பெருமான் என்பதாகும். அகத்தியர், ஔவையார், அருணகிரிநாதர், பாலசித்தர், சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர்க்குத் தமிழில் உபதேசம் செய்து அருள்புரிந்தவன் முருகன். பக்திமொழியான தமிழ்வேறு தான் வேறு என்றில்லாது ஒன்றுபட்டவன் என்பதையே மொழியாகிய பாஸ்கரன் என்கிறார் ஆசிரியர்.

மன்னா உனை நெஞ்சக மாமயிலைப்
பன்னா பவனாகிய பஞ்சமகா
சின்னா பவன் என்றிடு தீஞ் சொலிலா
நன்னாவு தரும் கருணா நயமே. (பா.39)

மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக விளங்குபவன் முருகன். எனது நெஞ்சத்தில் வீற்றிருக்கும் மயிலைத் தலைவன். பஞ்சமா பாதகங்கள் எனப்பெறும் பொய், கொலை, கள், களவு, காமம் எனும் ஐந்தையும் என்னிடமிருந்து நீக்கி நன்மையே புரியும் கருணாகரனாக விளங்கும் எம்பெருமான் முருகனை வணங்கிப் பாடுகின்றேன்.

முடிவுரை

முன்னியது முடிக்கும் முருகனது திருவருளால் முருகன் குருவாக வந்து, மயில் வடிவான மலையில் அமர்ந்து சித்தர் மரபைச் சிறப்பிப்பதை ஸ்ரீ பாலசித்தர் சிவஞான பாலய சுவாமிகள் குருமரபு மெய்ப்பிக்கின்றது. எல்லாம் வல்ல குருவருளும் திருவருளும் நிறைந்த திருத்தலமாக மயிலமலை விளங்குவதை ஸ்ரீமயிலாசல அனுபூதி விளக்குகின்றது. திரு.சாமிநாதப்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற இந்நூல் தற்போது உரையுடன் வெளிவர அருளாணை வழங்கிய 20ஆம் பட்டம் சுவாமிகளின் திருவடித் தாமரையைப் பணிந்து வணங்குகிறோம்!

பரம்பொருளே சிவஞானி

மா. ஷகிலா
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி -
மயிலம் - 604 304
தொடர்பு எண்:6379800790
mail id::shakilamarimuthu2003@gmail.com

முன்னுரை

தமிழ்நாடு செய்த தவப்பயன் காரணமாக தமிழகத்தில் இறைவனின் அருள்பெற்ற ஞானியர்கள் தோன்றினர். அவர்கள் மக்கள் சமய நெறி சார்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழவும் சிறக்கவும் வழிகாட்டி உள்ளனர். அவ்வாறு சார்ந்த சமுதாயத்தை உயர்த்துவதற்காகவே தோன்றியது மயிலம் திருமடம் ஆகும்.

"குருவருளின்றேல் திருவருள் இல்லை" என்னும் வாக்கிற்கு ஏற்ப திருமடங்களில் குருவாகத் தோன்றி திருக்கோயில்களையும் தன்னிகரற்ற தொண்டுகளை செய்து வருகின்றனர்.

மனிதனின் அறிவு தன்னை அறியும் அறிவாக விளங்க வேண்டும் என்னும் நோக்கில் வீரசைவம் "உன்னை முதலில் அறி" (தன்னை அறியும் அறிவு) என்னும் குறிக்கோளை வலியுறுத்துகிறது. உயரிய குறிக்கோளை நிலைநாட்டும் விதமாக பல்வேறு நூல்களும் தோன்றின. அந்நூல்களுக்கு உரையுடன் இருபதாம் பட்டம் குருமாக சந்நிதானங்கள் இன்றளவும் நூல்களை வெளியிட்டு வருகின்றனர்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் முதற் புலவரும் அருட்சீடரும் ஆகிய கற்பனை களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் இயற்றிய நூல்கள் 32 அதில் ஐந்து நூல்கள் சிவஞான பாலய தேசிகரைப் பற்றியது.

சிவப்பிரகாசர் நூல்கள் அனைத்தையும் 18 ஆம் பட்டம் சுவாமிகள் 1944 இல் "சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்" என்ற தலைப்பில் ஒரே நூலாக வெளியிட்டு அருளினார்கள் அதுமட்டு மில்லாமல் இருபதாம் பட்டம் சுவாமிகள் தனித்தனி நூல்களாக உரையுடன் வெளியிட்டு வருகின்றனர்.

1938 ஆம் ஆண்டு *18* ஆம் பட்டம் சுவாமிகள் தமிழ் கல்லூரியை தோற்றுவித்தார். இக்கல்லூரியின் மூலம் இன்றும் பல்வேறு சுற்றுப்புற கிராம மாணவர்கள் கல்வி பெற்று சிறப்படைந்து வருகின்றனர். அவர் தொடங்கிய கல்லூரியில் இன்னும் பல பிரிவுத்துறைகளைக் கொண்டு வந்து பல சிறப்புடன் கல்லூரி மேம்படுத்தி நம் இருபதாம் பட்டம் குருமாக சன்னிதானங்கள் கல்லூரியை நடத்தி வருகின்றனர். இதன் மூலம் சுற்றியுள்ள கிராமப் புற மாணவர்கள் மேற்படிப்பு மேற்கொள்வதற்கு பெரிதும் துணை புரிகின்றது.

ஸ்ரீ பாலசித்தர்தோற்றம்

திருக்கயிலையில் (சிவபெருமானுக்கு) மேற்கு திசைக் காவலராகவும் பூதகணங்களுள் ஒருவராகவும் விளங்கியவர் சங்குகன்னர். அவர் சிவபெருமானின் அருளாணையின் வண்ணம் தென்னாட்டில் வீரசைவ நெறி தழைத்தோங்கவும் சித்தர் கொள்கை வலுப்பெறவும் செய்ய வேண்டிய, கருவிழி தோன்றாமல், திருநீறு, உருத்திராகம், கல்லாடை, இட்டலிங்கம் அணிந்த திருமார்பு, செஞ்சடை, குண்டலம் அணிந்த திருச்செவிகள், சின்முத்திரையுடன் கூடிய வலக்கை, திருநீற்றுப்பை, மந்திர கோல் கொண்ட இடக்கையுடன் பாலவடிவாக பொம்மைய பாளையத்திற்கு நேரே கீழ்க்கடலின் கரையில் தோன்றினார்.

சங்குகன்னர் இளம் பாலகனாகத் தோன்றியமையாலும் பல சித்துக்களை செய்து மக்கள் உய்வெய்த நன்மைகள் செய்தமை யாலும் கள்ளிப்பாலினை உணவாக கண்டமையாலும் "ஸ்ரீ பால சித்தர்" என்னும் திருநாமம் பெற்றார்.

பாலசித்தரும் சிவஞானியும்

முருகன் அருள் பெற்ற பாலசித்தர் அருட்சீடருக்கு சன்னி யாசிரமம் தந்து ஞானஉபதேசம் புரிந்து தமது அமிசத்திலே ஓர் அமிசம் அவரிடத்தில் பதியும்படி திருவருள் புரிந்து நீ பாலை உணவாகக் கொண்டு சீடப் பரம்பரையோடு சிவஞான பாலய தேசிகன் என வாழ்வாயாக என்று அருள்புரிந்தார்.

ஸ்ரீ பால சித்தரின் முதல் சீடராகவும் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தின் இரண்டாம் பட்டம் சுவாமிகளும் ஆகிய சிவஞான பாலய சுவாமிகள் தமது அருளாட்சி காலத்தில் விடந்தீண்டி இறந்த ஒருவனை தம் அளித்த திருநீற்றின் தெய்வ நலத்தால் விடம் நீக்கி அருளினார். இவ்வாறு பல்வேறு பெருமைகளை உடையவர் சிவஞானி ஆவார்.

இவர் கருவிலே கவி பாடும் திருவுற்ற நல்லாற்றூர் கற்பனை களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளுக்கு தீட்ச குருவாகவும் ஞான குருவாகவும் விளங்கினார். மரபு வழி வருகின்ற குருமகா சந்நிதானங்களால் ஆத்மார்த்த வழிபாடு செய்யப்பெற்று வருவதும் ஆகிய ஸ்ரீ பாலசுப்பிரமணியன் சன்னிதியில் திருப்பணி சிவஞான பாலய சுவாமிகளின் மரபில் வந்த குரு மூர்த்தங்களும் பொம்மையார் பாளையத்தில் சிவயோக சமாதி நிலையுற்ற 3, 14, 15, 16, 17, 18, 19 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர்களின் சமாதி திருப்பணிகள் செய்யப்பட்டு 2014இல் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. ஆகியவையும் இருபதாம் பட்டம் சுவாமிகளின் திருவருளாலும் குருவருளாலும் இனிதே சிறப்பு பெற்று விளங்குகின்றன.

சிவனே சிவஞானி:

அஞ்ஞானத்தால் இடையரவு படாத பிறவிகள் பல எடுத்த உலகினர் அருந்தவம் செய்து மேன்மையுற வந்து உதித்தவர் சிவஞானி

பிறவி பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவ னடி சேராதார் **(திருக்குறள் 10)**

என்ற குறட்பாவில் இறைவனடி பற்றியவர் பிறவி எனும் கடலை கடப்பர் என வள்ளுவர் கூறுகின்றார். முன்னோர் மொழி பொருளை பொண்ணே போல் போற்றுவோம் என்னும் தொடருக்கிணங்க திருவள்ளுவரின் கருத்துக்களை மிகுதியும் தமது நூல்களில் எடுத்தாண்டவர் நல்லாற்றுர் சிவப்பிரகாசர் இதனால் வள்ளுவர் பிரகாசர் என அறிஞர் உலகம் இவரை போற்றுகிறது. அவ்வகையில் சிவனே சிவஞானியாக இப்பூலகில் அவதரித்துள்ளனர். அவரது திருவடியை பற்றினால் வள்ளுவர் கூற்றுக்கிணங்க பிறவிக் கடலை எளிதில் கடக்க முடியும் என்பது நமது உள்ளக்கிடக்கையாகும்.

அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை தரவல்லவர் குருநாதர். எல்லாம் வல்ல சிவபெருமான் கயிலை மலையை விட்டு நீங்கி நம் மீது கருணை கொண்டு மயிலை மலைக்கு வந்து உதிர்த்துள்ளார்.

கயிலை மலை மீது இருக்கும் காட்சி போல் வந்து
மயிலை மலை மீது இருக்கும் வள்ள (நெஞ்சு விடு தூது)

என்னும் பாடல் அடி குறிப்பிடுகிறது.

முருகனே சிவஞானி

முருக பெருமான் இடத்தில் தனக்குப் பிறகு அன்பர்களுக்கு அருளாட்சி வழங்கவும் திருமடத்தை அருளாட்சி செய்யவும் ஒருவர் தேவை என வேண்ட குழந்தைப்பேறு இல்லாத முருகன் மீது பற்று கொண்ட அம்மவைக்கு சிவஞானபால சுவாமிகள் எனும் பெயரில் முருகனே குழந்தையாக அவதரித்தார். அவர்களைத் தொடர்ந்து தற்போது இருபதாம் பட்டம் குருமாக சந்நிதானங்கள் அருளாட்சி செய்து வருகின்றனர்.

உமையம்மையின் அழகிய நகிலிற் சுரந்த தண்ணிய பாலையருந்தி அழகிய திருவடிகள் சிவக்கும் படி சிவபெருமானின் திரு மார்பில் உலவி பிரம்மனது தலையை குட்டி உலகை தாங்கும் ஆதிசேடன் தன்னிடம் விட்டுப் பெயறுமாறு, தம் செம்மையான கரங்களால் சிறுதேரினை உருட்டி அசுரர்களின் தலைகளை வெட்டி வட்டாடும் வீரனாகிய முருகப்பெருமான் சிவஞானி ஆகிய குழந்தைக்கு துணைவன் என்பதை,

பாவாக படுபெரும் புகழிமய மலைபெறு
பவானி வளர் திருமுலைத்தண்
பாலுண்டு..... (பிள்ளைத்தமிழ்.பா.93)

என்னும் பாடல் தெரிவிக்கிறது.

முருகன் வேறு சிவஞானி வேறு என பேதமில்லாமல் முருகனே சிவஞானி என்பதை உணர்ந்து அனுபவித்த சுவாமிகள் "சிவஞான பாலய சுவாமிகள்" பதிகம் எனும் நூலை பாடியருளினார்கள். வீரசைவ நெறியை போற்றும் சிவஞானியும் வீரசைவர்கள் வழிபடும் இட்டலிங்கமும் ஆறுமுகனாகிய முருகப் பெருமானும் ஒன்று என்பதை உணரமுடிகிறது.

பூரணமாம் உண்மைப் பொருளுணர்ந்த புண்ணியத்தால்
சீரணமற் றுய்ந்த சிவஞானி சீர்த்த இடம்
காரணமும் எண்ணில்பல் காரியமும் ஆனதென்னும்
ஆரணத்தோனைப் புடைத்தோன் ஆடுமயி லாசலமே.
(சில.பால.சு.பதிகம்.பா. 5)

இப்பாடல் மயில மலையில் ஸ்ரீ பால சித்தர் மெய்ப்பொருளாகிய சிவத்தை முருகப்பெருமான் உபதேசத்தால் உணர்ந்து அவரது தொடர்ச்சியில் சிவஞானியின் அருளாட்சியால் சித்தர் பீடமாக திகழ்கிறதை விளக்குகின்றது.

மயில மலையில் சிவஞானி

தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின் என்னும் பெரியோர் வாக்கிற்கிணங்க தெய்வ நலம் கண்டவர் சிவஞான பாலய சுவாமிகள். பொய் வலிமை கொண்டும் அணுகும் பொல்லாத தீமையாளருக்கு எமன் போன்று விளங்கும் கை வடிவேலினை கொண்ட கந்த பெருமான் உறைவது மயிலம் திருத்தலமாகும்.

கல்வி கேள்வி ஞானம் மிக்கு இட்டலிங்கத்தை பூசித்து உலகினரை நேசித்து நானிலம் புகுந்த இடம் தமிழ் கல்லூரியில் பாம்புடன் செந்தமிழ் வளர்த்திட மயில மலையில் அருள் புரிபவர் சிவஞானி. பிறப்பெனும் பேதமை நீங்க வழிகாட்டும் ஞானகுரு சிவஞானியும் வள்ளி தெய்வானை உடனுறை மணக்கோல மாமுருகனும் உறையும் மலை மயிலம். அற ஆழி கடலாக மயிலமலையில் அமர்ந்து துறவு நெறி போற்றுபவருக்கும் இல்லற நெறியில் ஈடுபட்டவர்க்கும் ஆசி நல்கும் ஞானாசான் சிவஞானி ஆவார். இதனை,

அறஆழிக் கடல் அந்தணனாய்
அமர்ந்து மயில் மலை மீதில்
துறவாம் ஒழுக்க நிலையினர்க்கும்
துறவா வாழ்க்கை உடையார் கற்கும்
பிறவா நெறியை விளக்கிடவே
பெம்மான் சிவஞானிக் காணக்
குறமாது அவள் வான்மகள்விளங்கக்
கோயில் கொண்ட குருகுகனே (மயிலம் திருவாயிரம் 8)

காஞ்சி பதியில் சிவஞானி

மயிலம் பொம்மபுர ஆதினம் திருகைலாய பரம்பரை ஸ்ரீமத் ஞானராசதானியான இனாம் பொம்மையார்பாளையம் வீரசைவ பெரிய திருமடம். "சிவகாஞ்சி மயூராசல நிவாச எத்தீஸ்வர கர்த்தரான மயிலம் தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இனாம்தார்" என்று அழைக்கப்படுகிறது. இதில் காஞ்சிபுரம் திருமடத்தின் சிறப்பு பெறப்படுகிறது.

காஞ்சிபுரம் திருக்கோயில்கள் நிறைந்த நகரமாகும். காஞ்சிபுர திருமடத்தில் கொலுவீற்றிருந்து அன்பர்களுக்கு அருளாசி வழங்குவதில் பெருவிருப்பம் கொண்டவர்கள் சிவஞான பாலய சுவாமிகள்

குருபரன் காஞ்சி வாஞ்சை
கொள் சிவஞான தேவன்
திருவடி வாழி அன்னாள்
திருப்புகழ் வாழி

சிவஞானியின் திருவடி தீட்சை

சிவஞானியின் திருவடிகளுக்கு இணை ஏதும் இல்லை. நாம் துன்பப்படும் வேளையில் தெப்பமாக வந்து அருள் புரிவது சிவஞானியின் திருவடியாகும். சிவஞான தேசிகரது திருவடியின் ஆற்றலால் நமக்கு நாளால், கோளால், எமனின் ஆற்றல் இவற்றால் வரும் துயரங்கள் பறந்து போகும் என்றும் சிவஞானியின் திருவடியே அவற்றை அழிக்கும் படையாகும் என்பதை,

கோள்வலி செய்வதென் கொடியவாகிய
நால்வழி செய்வதென் நம்மை கூற்றெறு
மால்வலி செய்வாதன்று பாணி தன்
தாள்வழி யவைகளை கொளும் தண்டு கொண்டேரே
(சிபா.தே.கலம் 22)

இப்பாடல் மூலம் அறிய முடிகிறது

முடிவுரை

மொழியின் வளர்ச்சிக்கு இன்றளவும் பெரிதும் பங்காற்றி வருவது மயிலம் பொம்மபுர திருமடம் ஆகும். தமிழகத்தில் பழம்பெரும் சான்றோர்களையும் புலவர் பெருமக்களையும் உருவாக்கியது இத்திருமடம். நவில்தோறும் நூல்நயம் போலும் பயில் தோறும் பண்புடையாளர்களையும் உருவாக்கிய பெருமைமிக்க ஆதினம் மயிலம் திருமடம் ஆகும். குரு பார்க்க கோடி நன்மை கலியுகத்தில் ஞானகுருமார்கள் தோன்றி உலகிற்கு ஒலியூட்டி வழிகாட்டுகின்றனர். இறைவனே மனித அவதாரம் எடுத்திருந்தாலும், அவருக்கு நல்ல அறிவையும் நல்லுணர்வையும் வழங்க கூடிய ஞானகுரு யுகந்தோறும் இருக்கின்றனர். இன்னார் இனியர் என்று பார்க்காமல் அனைவருக்கும் குருவருளை வழங்கும் கருணை உள்ளம் கொண்டவர் இருபதாம் பட்டம் குரு மகா சந்நிதானங்கள் ஆவார்.

மக்கள் பணிய மகேசன் பணி என்பதை உணர்ந்து சமயத்தின் நெறி நின்று சமுதாய பணியாற்றி வரும் சுவாமிகளின் கருணை நிறைந்த நெஞ்சத்திற்கு என்றும் கடமைப்பட்டவர் களாவோம்.மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது பிறப்பின் நோக்கத்தை அறிந்து தனிமனித ஒழுக்கத்தைப் போற்றி கொள்ளா நெறியையே குருவருள் நெறி என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

தமிழ்ச் சந்த மரபில் மயிலாசல அனுபூதியும் முருகத் தொன்மங்களும்

ஆய்வு நெறியாளர்
முனைவர் பெ.இளையாப்பிள்ளை
பேராசிரியர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

ச.வாசுதேவன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை, மொழிப்புலம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613010
nadunattutamizhan150@gmail.com

முன்னுரை

மெய்ஞ்ஞான மரபில் இறை அனுபவம் இறைசார் அறிவு ஆகியவை மேலோங்கியச் சூழலில் உருவான பனுவல்கள் தமிழில் ஏராளம். ஏனெனில் அருளாளர்களின் உள்ள வெளிப்பாட்டைச் செய்யுள் தொகுதியாகக் கட்டமைத்துள்ளனர். தமிழிலக்கிய வரலாற்றில் அனுபூதி என்ற ஓர் இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தவர் அருணகிரிநாதர் ஆவார். கந்தவேளின் மீது கொண்ட பக்தியையும் அநுபவத்தையும் வெளிப்படுத்தும் சந்தப் பாத்தொகுதி கந்தர் அநுபூதி. இந்நூல் அநுபூதி நூல்களுக்கெல்லாம் முதனூலாகும். அனுபூதி இலக்கியங்கள் வேலனைப் பற்றியே அமைந்துள்ளன. மற்ற கடவுளர்கள் பற்றி அமைந்ததாகத் தெரியவில்லை. மயில்களாடும் அழகிய மலைக்குத் தலைவனான மயிலம் முருகன் மீது தான் கொண்ட அவாவினையும் அன்பினையும் அனுபவத்தின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார் சாமிநாதப்பிள்ளை. அம்மயிலாசல அனுபூதியில் காணலாகும் பண்பாட்டுக் குறிப்புகளையும் முருகன் பற்றிய தொன்மச் செய்திகளையும் இக்கட்டுரை வெளிக்கொணர்கின்றது.

அனுபூதியின் இலக்கணம்

அனுபவமும் ஞானமும் சேர்ந்த ஒரு ஆழ்ந்த, தொடர்ந்த ஒன்றே அனுபூதியருள் என்பதாகும். இது மனதிலிருந்து நீங்காத, மறக்க முடியாத, இறைவனுடன் நேரில் ஒன்றிணைந்த ஒரு ஆனந்த நிலை ஆகும். அனுபவத்தால் விளையும் ஞானப்பூரிப்பு அல்லது அனுபவத்தின் உச்சக்கட்டமாக இது கருதப்படுகிறது. அனுபவம் மற்றும் ஞானம் கலந்த ஒரு நிலை. இது ஒரு குறிப்பிட்ட தருணத்தில் மட்டும் வந்து மறையாமல், மனதோடு நீங்காமல் நிலைத்திருக்கும் ஒரு ஆழ்ந்த உணர்வாகும்.

தமிழ்ச் சந்த மரபும் மயிலாசல அனுபூதியும்

சந்த மரபென்பது தொன்று தொட்ட மரபாகும். ஏனெனில் சங்க காலந்தொட்டு சமகாலம் வரை அம்மரபு நீண்டுள்ளதைக் காணமுடிகிறது. சங்க காலப் பண் மரபே சந்த மரபிற்கு அடிகோளியது. சங்கப் பாலையெனும் பெரும்பண்ணிலிருந்து தோன்றிய 'நைவளம்' என்ற பண் 'நாட்டிய பாஷை (அ) நாட்டிய பாஷா' என்று பெயர் மாற்றம் பெற்றது. இதனைப் பக்தி இலக்கியப் பெரியாரான பேயார் (காரைக்காலம்மையார்) 'நட்டப்பாடை' எனத் தமிழ்ப் படுத்தினார். இப்பண் நாட்டியப்பண் மட்டுமல்ல பண்களுக்குத் தோற்றுவாயாகும் என்ற நுட்பத்தை மூத்த திருப்பதிகத்தின் வாயிலாக வெளிக்கொணர்ந்தார்.

சந்த மரபு ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரிலிருந்து திருஞானசம்பந்தருக்குக் கடத்தப்பட்டது. திருஞானசம்பந்தர் சந்தம் மிகுந்தப் பாடல்களைப் பாடக் கூடிய வல்லமை பெற்றவராக விளங்கியுள்ளார். இதனைத் திருமுறைப்பதிகப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. தமிழ்ச் சந்தப் பாடல்களின் தந்தையாகப் போற்றப்படுகிறார் சம்பந்தர். சம்பந்தர் பலவகையான சந்தங்களிலும் யாப்பு வகைகளிலும் இசைகளைக் கட்டமைத்துப் பாடியிருக்கிறார். ஞானசம்பந்தருக்கு அடுத்து இசை உலகைத் தன்வயப்படுத்தி இறையருளால் இசைஞானம் பெற்ற ஆளுமையாக வெளிப்பட்டவர் அருணகிரிநாதர். அருணகிரிநாதர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்தக் குழிப்புகளையும் பல வகையான சந்தங்களையும் பயன்படுத்தித் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, வேல் விருத்தம் - மயில் விருத்தம் - சேவல் விருத்தம், மும்மணிக்கோவை போன்ற நூல்களைப் பாடியுள்ளார். தமிழ்ச் சந்த இலக்கியங்களுக்கு ஓர் மணிமகுடமாகத் திகழ்வது திருப்புகழ் எனும் அரிய பனுவலாகும். தமிழ்ச் சந்த மரபிற்கு சாமிநாதப்பிள்ளை அளித்த கொடை ஸ்ரீ மயிலாசல அனுபூதி. இந்நூல் கந்தர் அனுபூதியை ஒத்துள்ளது. அருணகிரிநாதர் என்ன வகையான சந்தத்தைப் பயன்படுத்தினாரோ அதே சந்தத்தில் சாமிநாதப் பிள்ளையும் செய்யுளியற்றி உள்ளார். சில இடங்களில் கந்தர் அனுபூதிப் பாடல்களா இவை, எனுமளவிற்கு மயிலாசல அனுபூதிப் பாடல்கள் உள்ளன. இந்நூல் திருமயிலை சந்நிதி முறையாயிரப்பாவின் 23-ஆவது ஸ்ரீ மயிலாசல அனுபூதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மயிலம் தளத்தைக் குறித்த ஞானப்பனுவல்களில் திரு.சாமிநாதப்பிள்ளை அவர்கள் இயற்றிய ஸ்ரீ மயிலாசல அனுபூதி என்னும் நூல் தனித்துவம் மிக்கதாகத் திகழ்கிறது. அருணகிரிநாதர் கந்தப்பெருமானிடம் தான் பெற்ற திருவருளை வியந்து போற்றிய நூல் கந்தர் அனுபூதி. அரிய தத்துவங்களைப் பகரும் அந்நூலைப் போலவே அமைந்திருப்பது ஸ்ரீ மயிலாசல அனுபூதி"1 என்று தனது ஆசியுரையில் சிவஞான பாலய சுவாமிகள் இருபதாம் பட்டம் குரு மகா சந்நிதானம் அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. (ம.அ.ப.9)

"முருகப்பெருமானின் அவதார நோக்கம், மயிலையின் சிறப்பு இயல்புகள், ஸ்ரீபால சித்தர் சிவஞானி உரையும் சித்தர் பீடம், மயிலம் திருத்தலம், ஓம் சரவணபவ எனத் தொடங்கும் ஆறெழுத்து மந்திரத்தின் மேன்மை, முருகனது திருவிளையாடல்கள், இச்சை, கிரியை, ஞானம் எனும் முருகனின் முப்பெரும் சக்திகள், சூரபதுமனை வென்று தேவர்களைக் காத்த நிகழ்வு, மேலும் மயிலும் சேவலும் ஆன்மாக்களுக்குத் துணையானவை என்பன போன்ற பல அற்புதப் பதிவுகள் மயிலாசல அனுபூதியில் இடம்பெற்றுள்ளன"2 என இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர் ச.திருநாவுக்கரசு குறிப்பிடுகின்றார். (மேலது.ப.13)

மயிலாசல அனுபூதியும் பண்பாட்டுப் பதிவுகளும்

மயிலாசல அனுபூதி முருகன் குறித்தும் மானுடப் பண்பாடு, முருகத் தொன்மம் குறித்தும் பதிவு செய்துள்ளது. சாமிநாதப்பிள்ளை நூலாசிரியர்களுக்கே உரிய முறைமையில் காப்புப் பாடுதல் மரபைப் பின்பற்றியுள்ளார். காப்பு பாடல் கந்தர் அனுபூதிப் பாடலொன்றை அப்படியே எடுத்துக்கொண்டார் போலவே உள்ளது. அப்பாடல்,

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் புனை மாலை உணர்ந்திடவே
வருகும்படி மாமமயிலா சனனை
சருவும்படி ஐங்கரனே சரணம். (மயிலாசல அனுபூதி.காப்புப்பாடல்)

கந்தர் அனுபூதியில்,

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. (கந்தரனுபூதி.பா.15)

மயிலாசல அனுபூதியின் காப்புப்பாடல் கந்தர் அனுபூதியின் பாடலை நினைவுகூர்கின்றது. கம்பர் பூனைக் கடலைக் குடிக்க முயன்றதைப் போல என்று பதிவு செய்வதைப் போல், மயிலாசல அனுபூதியை அடியேன் இயற்றிட அருள் புரிய வேண்டும் முருகா என்று மயிலம் பதிவாழ் முருகனைப் போற்றி மகிழ்கின்றார்.

திருமால் மறுகா சிவ சண்முகவா
வருவாய் மயிலாசல அனுபூதி
தருவாய் நிலை சஞ்சல நீக்கி அருள்
(மயிலாசல அனுபூதி.பா.1)

திருமால் மருகன் என்ற தொன்மச் செய்தி இப்பாடலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கந்தன் எனும் திருப்பெயர் இரக்கத்திற்கு இலக்கணமாய் திகழும் பெயராகும். இதனை மயிலாசல அனுபூதியில் 'கந்த கிருபாகரன்' என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

கையிலே வளர்ந்த கிருபாகரனே **(மேலது.பா.2)**

பாவம் எனும் துன்பக் கடலைக் கடப்பதற்கு உன் அருளால் வேறொன்றில்லை என்பதை

சகமாயை உள்நீன்று தயங்கு மனம்
வெகுவாய் தூய சாகரமே கூழலா
நகம் எங்கும் நாமமும் துதிய
தரவே புரி மாமயில் ஆசலனே. **(மேலது.பா.4)**

மாயை எனும் சித்தாந்த உட்பொருளை இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். மற்றோர் பாடலில்,

பவர் சாகரம் என்னுள் பறந்து நிலை
தவறாமலே சாஸ்விதமாய் புரியும். **(மேலது.பா.5)**

முருகன் தமிழ்ப் பாவலர்களுக்கு உதவுகின்றான் என்ற செய்தியை,

பண்ணும் தமிழ் பாவலருக்கு உதவி
மின்னும் சில மீமிசை வந்தருளே **(மேலது.பா.6)**

பாடலில் காணமுடிகின்றது. முருக வடிவைக் காட்டுகின்றார் சாமிநாதப்பிள்ளை. முருகன் கொடியில் சேவலும் பன்னிரு கைகளும் வடிவேலும் தாங்கிருக்கும் கருணை வடிவு கொண்டவன். மெய்ஞ்ஞான வடிவானவன் என்பதை,

ஐயா திருமா மயில் ஆசனமே
செய்யாய் கொடி சேவலனே பன்னிரு

கையாய் வடிவேல் முருகா கருணை
மெய்யாய் மனநற்பத மேலிடுமே (மேலது.பா.8)

வெளிப்படுத்துகின்றார். முருகன் பன்னிரு கைகளிலும் பன்னிரு ஆயுதம் ஏந்தியிருக்கிறான் என்பதை,

மயில்வாகனனே திருமா மயிலை
அயிலே முதல் பன்னீர் ஆயுதமே
செயலே அறியாச் சிறு பாலகனின்
மயலேஒலி மாவினை அற்றிடவே (மேலது.பா.10)

குறிப்பிடுகிறார். கந்தவேளை அழகாக வர்ணிக்கின்றார் ஆசிரியர். மயிலம் எப்படிப்பட்டத் தலம் என்பதை,

தருமாபுரி மாம மயிலை தலைவா
அருமறை அந்த முதல் பொருளே
குருவாய் உபதேசம் உணர்ந்திட நீ
வருவாய் பசரகன பூபதியே. (மேலது.பா.21)

எனும் வரிகள் புலப்படுத்துகின்றன. மாபெரும் அறங்கள் செய்த மயிலை எனப் பதிவு செய்துள்ளார். பண்ணார் மொழி அம்மையின் குழவி என்ற தொன்மையை,

பொன்னார் மொழி திரிபுர பவ முருகா
கண்ணார் அமுதே கருணை கடலே
உண்ணாமுலை ஆளருள் உத்தமனே என்
என்னால் துதிமா மயிலுக்கு அரசே. (மேலது.பா.25)

இவ்வரிகள் விளக்குகின்றன. மயிலம் நகருக்கு அணியாக விளங்குகின்ற இறைவன் பரமேஸ்வரி ஈன்ற அருள் பாலகனாவான் என்பதை,

பரமேசுரி ஈன்ற அருள் பாலகனே
சுரமே அயிலேந்திய காரணனாய்த்
திரமான் மயில்ஏறிய சேவக நன்
வரமே அருள் மா மயிலா பதியே. (மேலது.பா.29)

இந்தப் பாடலில் விளக்குகிறார். உணவில்லாமல் இருப்பவற்கும் இறை உணர்வில்லாமல் இருப்பவற்கும் அன்னத்தையும் அருளையும் வாரி வழங்கக்கூடிய வல்லமை பெற்ற மயிலை வாழ் வேலன் என்பதை,

அன்னம் தரும் மா மயிலாசலமே
தன்னம்தனி வேலவனே தமிழைப்

பன்னும்படி பாவலருக்கு அருள்வாய்
சின்னம் பவ தீவினை பற்றறவே. (மேலது.பா.31)

பாடல் வரிகள் விளக்குகின்றது. கண்ணுக்கு ஒளியாக இருக்கும் மயிலம் முருகா என்று முருகனை நினைத்து உருகிப் பாடுவ தோடல்லாது மக்களின் முருக நம்பிக்கைப் பண்பாட்டினையும் ஆவணமாக்கியுள்ளார். இதனை,

மதியே தரு மா மயிலைக் கருணை
நிதியே வரும் நெஞ்சகம் நின்றுணரப்
பதியா உரை பத்தியுள் நன்னிலையில்
கதியே பரமாகிய கண்ணொளியே. (மேலது.பா.33)

கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர் சொற்பொருள் பின்வொரு நிலை அணியில் பாடல்களை அமைத்திருப்பார். சில பாடல்களில் சாமிநாதப் பிள்ளை எதுகை, மோனை அமைய சந்தப்பா வகையாக அமைத்திருப்பது சிறப்பாகும். அதனை,

ஒளியாய் நிறை எங்கணுமே உறையும்
வளியாய் கனன் மண்ணோடு நீர் முதலா
வெளியாய் அழியா உருவாகிய வேள்
வழியாய் வரும் மாவினை தூள்படவே. (மேலது.பா.34)

இப்பாடலில் குறிப்பிடுகின்றார். முன்னொரு பாடலில் 'கந்த கிருபாகரன்' என்ற பெயரில் மயிலம் முருகனை அழைத்த ஆசிரியர் மற்றோர் பாடலில் 'ஞானகிருபாகரன்' என்று குறிப்பிடுகிறார். அப்பாடல்,

நிலையாய் மயிலை பதி நெஞ்சகமே
வலையாய் மல மாயையிலே மிகநின்
அலையா ஒரு வண்ணமுமே அமரும்
கலையாய் வரும் ஞான கிருபாகரனே. (மேலது.பா.37)

முருகனை அங்கமாக வருணிக்கின்றார் சாமிநாதப்பிள்ளை. முருகன் மீது அலாதியான அன்பு கொண்ட அருணகிரிநாதரின் வழியில் நின்று பாடல் இயற்றியிருக்கிற தன்மை போற்றுதலுக் குரியது. ஏனெனில் முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றுகின்ற மரபில் நின்றுள்ள தன்மையைக் காணமுடிகின்றது.

வேலே வினை பொடிபட மாமயிலின்
மேலே நிலையாகிய வெற்றிதரும்

காலே நிலையாகிய நற்கருணைப்
பாலே மொழியாகிய பாஸ்கரனே. (மேலது.பா 38)

ஞான வடிவான மயிலை ஊர்த்தியாகக் கொண்ட பெருமானே! ஆறெழுத்து மந்திரத்தை உடைய பூபதியே! என் துயர் தீர்த்து இரட்சிப்பாய் சேவல் கொடியோனே என்பதற்குச் சேவலனே என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. அப்பாடல்,

மயில்வாகன மந்திர சடாக்கரமே
மயிலாசல மண்டல பூபதியாய்
அயில் பாண்டியனாகிய வா அறுமுக
செய்யுள் தீர்த்துணை இரட்சியும் சேவலனே.(மேலது.பா.42)

பன்னிரு கண்களைக் கொண்டு என்னைக் காத்தருள்வாய் கருணை செய்வாய் மயிலைப் பதியில் வாழ்கின்ற இறைவா என்று மனம் உருகி வேண்டிப் பாடுகிறார். அப்பாடல்,

போரும் துயர் போர் புரி புற்பவமும்
நேரும் பகை நெஞ்சம் வளைந்த யனை
காரும் பன்னிரு கண்ணில் ஒரு கருணை
பாரும் திருமணம் இலை பதியே. (மேலது.பா.47)

நீ! மயிலாசலம் வாழ்கின்ற மன்னவன் என் வினையை அகற்றுவது உன் கடன் என்று முருகனைப் போற்றிப் பரவுகின்றார். அதனை,

மயிலாசல மன்னவனே உனது
செய்யலாம் எனத் தேர்ந்திலனே மனதில்
முயலால் பணி முடு தன் மாவினையை
அகிலா அருபட்டிடவே அருள்வாய். (மேலது.பா.49)

சூரர்களை வதைத்ததோடு மட்டுமல்லாது, அவர்களை வேலால் துணித்த வேலவனே என் பிழை அத்தனையையும் தீர்த்துருள்வாய் மயிலை நகர்வாழும் அரசே! சூரபத்மன் போன்ற அசுரர்களை வேரறுத்த தொன்மச் செய்தியைக் காட்டுகிறார். அதனை,

வாதித்திடு சூரரை வென்ற சுக அ
தீத பொருளாகிய திருமயிலை
நாதக்கழல் சென்னையில் நாட்டிடுவாய்
கோதப் பிழை அற்றிடு கொற்றவனே. (மேலது.பா.50)

இப்பாடல்களை விளக்குகின்றார். முருகனைப் பலவாறு போற்றிப் புகழ்ந்ததோடு மட்டுமல்லாது, மயிலம் என்ற திருத்தலம் எவ்வாறு சிறந்தது என்பதையும் அதனோடு இணைத்து அனுபூதியில் வெளிப்படுத்தியத் திறம் போற்றுதலுக்குரியது. சாமிநாதப் பிள்ளை கந்தர் அனுபூதியில் உள்ளப் பாடல் எண்ணிக்கையைப் போலவே 51 பாடல்களில் திருமயிலாசத்துப் பெருமானைப் பாடிப் பரவியுள்ளார். அதோடன்றி அப்பாடல்களில் முருகன் வினையறுப்பவன், வேல்கொண்டு வாதித்திடும் அசுரரை அழித்தவன், குன்றின் மீது கோயில் கொண்டவன் என்ற முருகத் தொன்மச் செய்திகள் பலவற்றை மயிலாசல அனுபூதியில் ஆவணப்படுத்தியுள்ளார்.

முடிவுரை

மயிலாசல அனுபூதி மயிலம் பதியில் வாழ்கின்ற முருகப்பெருமானின் அழகு, அருள், அன்பு, ஆக்கம் எல்லாவற்றையும் பதிவு செய்கின்ற ஒப்பற்ற நூல். முருகனின் புராண இதிகாசச் செய்திகளாகப் பல இதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. முருகன் நிகழ்த்திய அசுரவதம், திருவிளையாடல்கள் ஆகியவை நுணுக்கமாகப் பேசப்பட்டுள்ளன. சாமிநாதப்பிள்ளை தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்த அனுபவப் பகிர்வு நூல் எனலாம். என்றாலும் மயிலம் முருகனின் திருவருள் பரிபூரணமாக நிறையப் பெற்ற நூலும் ஆகும். சந்தக் குறிப்புகளும் சந்த வகைகளும் முறையே பின்பற்றப்பட்டுப் பாடிய பாடல்கள் இவை. இவற்றுள் நுணுக்கமான முருகத் தொன்மங்களும் பண்பாட்டுக் கூறுகளும் நிறைந்துள்ளன என்பதை அருள் வெளிக்கு இக்கட்டுரை எடுத்துச்செல்கின்றது.

சான்றெண் விளக்கம்

1. மயிலாசல அனுபூதி, சாமிநாதப்பிள்ளை, ப.09
2. மேலது, ப.13
3. மேலது, காப்புப் பாடல்
4. கந்தரனுபூதி, அருணகிரிநாதர், பா.15

துணை நின்ற நூல்கள்

1. ச.திருநாவுக்கரசு.(ப.ஆ)., ஸ்ரீ மயிலாசல அனுபூதி, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், பதிப்பு : 2025 (மு.ப)
2. கோபால் நாயகர்.டி.(ப.ஆ)., கந்தரனுபூதி, கோள்டன் அச்சியந்திர சாலை, மதராஸ், பதிப்பு : 1914 (மு.ப)

குவலயம் போற்றும் குருவருள்

செ. சுகந்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீமத்சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி.மயிலம்-604304.

முன்னுரை

குவலயம் போற்றும் குருவருள்" என்பது உலகத்தால் போற்றப்படும் குருவின் அருள் அல்லது வழிகாட்டுதலைக் குறிக்கும் ஒரு தமிழ் சொற்றொடராகும். குவலயம்- என்ற சொல் உலகம் அல்லது பாராட்டுதல் என்பதைக் குறிக்கும். போற்றும்- என்ற சொல் போற்றுதல் அல்லது பாராட்டுதல் என்பதைக் குறிக்கும்.குருவருள் இது ஒரு குருவின் ஆசிர்வாதம் வழிகாட்டுதல் அல்லது அருள் என்பதைக் குறிக்கிறது.இது பெரும்பாலும் விநாயகர் அல்லது பிற தெய்வீக குருமார்களின் அருளைப் பற்றிக் கூறும் பக்திப் பாடல்கள் மற்றும் மந்திரங்களில் பயன்படுத்தப் படுகிறது. எனவே இந்த சொற்றொடர் உலகத்தால் போற்றப்படும் ஒரு குருவின் அன்பு, கருணை மற்றும் அறிவொளியின் வழிகாட்டுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. தெய்வீக குருமார்களுள் ஒருவரான சிவானியின் குருவருளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இறைவன் ஆன்மாக்கள் பாசப் பிணிப்பினின்றும் விடுபட்டு உய்வு பெற வகுத்தருளிய உபதேச நெறியாகிய குருநெறி ஒன்று உள்ளது.அதுதான் சிவமாம் தன்மை பெருவாழ்வை நல்கும் சிவநெறியாகும் என்பார் திருமூலர். இதனை,

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள்ளார்க்கு வகுத்துவைத் தானே (திருமந்திரம் 1559)

என்னும் அடிகள் புலப்ப்படுத்தும். தக்க குருவை நாடி நல் உபதேசம் பெற்று உய்தல் வேண்டும் என்பதை,

பெருநெறியான பிரணவம் ஓர்ந்து
குரு நெறியால் உரைகூடி நால்வேத

என்னும் அடிகளும் தெளிவுபடுத்தும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசை முறையில் குருநாதரை நம்மைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் அடையாளம் காட்டுவர். ஞான ஆசானாக விளங்கும் குருவே தெய்வத்தைக் காட்டுவர். எனவேதான் மயிலம் பொம்மபுர ஆதினத் திருமடத்தில் முதலில் ஸ்ரீசிவஞான பாலய தேசிகரை வணங்கிய பின்பு முருகப் பெருமானை தரிசித்தல் மரபு என்பதையே, "தனிமுதல் நின்னையே கண்டு பின் தன்மையும் தரிசிக்க வாவென அருளினான்" என்ற தொடரால் புரிந்து கொள்ள முடிகிறது.

மனத்தை ஆன்மீகப் பாதையில் செலுத்துவதற்கு மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும் சமநிலைப்படுத்த நமக்குக் குரு தேவை. அதனால்தான் குருவை தெய்வத்தை விட உயர்ந்தவராகப் போற்றுகிறோம். ஒருவரின் கர்ம வினைகளைக் களைந்து இறைவனைக் காட்டக் கூடியவரே குரு. குரு இல்லாத வாழ்க்கை குருட்டு வாழ்க்கை என்பார்கள். அத்தகைய குருவாக மயில மலையில் வீற்றிருந்து அருளாசி வழங்குகின்றார்கள் இருபதாம் பட்டம் சுவாமிகள். என்பதனை,

அவஞானம் போக்கி அருள்ஞானம் ஆக்குந்
சிவஞான தேவன் **(சி.பா. தா.1)**

எனும் பாடலின் மூலம் அறியலாம். தம்மை அடைந்தவரின் தாழ்வான அறிவைப் போக்கி, தான் அருளிச் செய்யும் உபதேசத்தால் சிவஞானம் பெறச்செய்யும் வள்ளல் சிவஞானி ஆவார்.

கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்ற பரந்தாமனின் வாக்கிற்கு ஏற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் இருபதாம் பட்டம் சுவாமிகள். இதனை,

ஆதிபால சித்தரின் மரபினைக் காத்தொழுக
மேதினியில் வந்துதித்த வேதநாயகர் தாம்

இருபதாம் பட்டத்து இணையற்ற சுவாமிகள் என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

காரணப் பொருளாக விளங்கும் சிவபெருமான், கௌரி உமையாள் இருவரும் இணைந்தே உலகிற்குக் கனிவுடன் தந்த சக்திகள் இரண்டு பேர் ஆவார். யானைமுகப் பெருமானாகிய விநாயகன், கோழிக்கொடியானாகிய முருகப்பெருமான் இவ்விரு சக்திகளும் விரும்பி வந்து அமர்கின்ற திருத்தலம் மயிலமாமலை. பாற்கடலில் பள்ளிகொண்ட நாராயணனும், வெண் தாமரையில்

வீற்றிருக்கும் படைப்புக் கடவுளான பிரமதேவனும் வந்து வணங்கக்கூடிய திருத்தலம் மயிலமாமலை ஆகும். மயில மலையில் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்து சந்நிதானங்களை வணங்கி குருவருளையும், மணக்கோல மாமுருகனையும் வணங்கி திருவருளையும் பெற்றுச் செல்கின்றனர். இதனை,

காரணப் பொருளானும் கௌரியுமைத் தானும்
காசினி தனக்கே கனிவாய்த் தந்த
வாரண முகத்தானும் வாரணக் கொடியானும்
வந்தமர் மயில மாமலை தன்னில்
நாரணன் பிரமன் நாளுமே மகிழும்
நற்றிரு மடமும் பொம்ம புரத்துத்
தோரண வாயிலாய்த் திருமடம் கொண்ட
தூயநல் சிவஞான பாலய தேசிகரே

(ஸ்ரீ சி.பா.சு.சதமணி மாலை பா.102)

எனும் பாடலின் மூலம் அறியலாம்.

சிவஞானியின் குருவருள்

மயிலம் பொம்மபுர ஆதீனப் புலவர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் குருநாதர் சிவஞானியிடம் தாம் பெற்ற இன்ப அனுபவத்தைப் பாக்களாகப் புனைந்து நா மணக்கும் பாமாலையாகச் சூட்டி மகிழ்ந்தார்கள் என்பதனை,

"நரனென் றிருந்தாலும் ஞானமிலா தாரும்
பரனென் றறியப்படுவான் ஒருநன்றி
பாவிக்கு உதாசனர்க்குப் பக்தர்க்கு சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையான்

(சி.பா.நெஞ்சு.தூது. கண்ணி-20,21)

என்ற பாடல் வரிகளின் மூலம் ஞானகுருவைப் போற்றுகின்றார்.

தம்மை வணங்கி நிற்கும் சீடனுக்குத் தீட்சை அளித்து பிறவிப் பிணியைப் போக்கி இருவினையும் மும்மலமும் கெடுத்து கருணையோடு பரமானந்தத்தை அருள்பவரே ஞானகுரு என்பதை,

புனித மாணாக்கன் இன்ன புகன்று அருள் இரந்து நிற்ப
அனையவன் தனது சக்தி பாதம் உற்று அறிந்து மின்னர்
வினைதபு தீக்கையோடு மேவுவித்து அருள்வன் என்ப
தனிவரு பரமா னந்த தத்துவக் குரவன் அன்றே (சித். சிகா. 123)

என்ற சித்தாந்த சிகாமணி பாடலின் மூலம் அறியலாம்.

முடிவுரை

குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. வாழும் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள இறைபக்தி முக்கியப் பங்கு ஆற்றுகின்றது. ஏதோ பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்று இல்லாமல் சமயச் சிந்தனையும், சமுதாயச் சிந்தனைகளையும் மனிதன் தனது உள்ளத்தில் ஆழ்ந்து பதிய வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்ற பயணம் கடினமாகத் தோன்றினாலும் நாம் நம்முடைய குருவருளை நினைத்துப் பகுத்தறிவைப் பக்குவப்படுத்திக் கொண்டு முன்னோர்கள் காட்டிய வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதனை இவ் ஆய்வுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

புலவர்கள் போற்றும் சிவஞானி

வி. இளையபாரதி,
தமிழ் மாணவி
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், தமிழ் கலை அறிவியல் கல்லூரி
மயிலம் - 604 304
செல்: 6379050966
மின்னஞ்சல்:ilayabharathi829@gmail.com

.

"சிவனே சிவஞானி " எனும் கூற்றிற்கு இணங்க தனது அருட்செயலால் அன்பர் பெருமக்களை அனுதினமும் போற்றி வழிபடுமாறுச் செய்து பல அற்புத நிகழ்வுகளை நிகழ்த்தி காட்டியவர்கள் சிவஞானி. இத்தகைய பெருமைக்குரியவர்களை சான்றான்மை மிக்க புலவர் பெருமக்கள் தங்களுடைய கவித்திறத்தால் பாமாலைகளைக் கொண்டு பாடிதுதித்துள்ளனர்.

"கற்பனை களஞ்சியம்" நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், அருணகிரிநாதர், வைத்தியநாத தேசிகர், தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், தியாகராஜ கவிராயர், பண்ருட்டி மணி அப்பாவு ஐயர், பாரதிதாசன், ஆ. சிவலிங்கனார், இரத்தின முதலியார், வேங்கடாசல நாயக்கர், உருத்திரசாமி எனப் பலப் புலவர் பெருமக்கள் சிவஞானியின் மகிமைகளைப் போற்றி புகழ்ந்துள்ளனர்.

புலவர் பெருமக்கள் இயற்றிய இவ்வரிய நூல்களின் மூலம் சிவஞானி அவர்களின் தொன்மை வரலாற்றை அறிவதோடு, அவர்தம் பெருமைகளையும், புகழுரைகளையும் அறியமுடிகிறது.

சிவஞானியும் சுப்பிரமணிய ஐயரும்

ஸ்ரீ ல ஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம், போற்றி பஞ்சகம் எனும் நூல், பண்ருட்டி சுப்பிரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்டு 1999 - ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு ஆ.சிவலிங்கனார் அவர்களின் உரையையும் காணமுடிகிறது.

ஸ்ரீ ல ஸ்ரீ சிவஞானபாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம் எனும் இப்பகுதியில் எட்டு பாடல்கள் அமைந்துள்ளன.

தெருள்ஓங்கு சோலைசென்றிலகுகதிர் துகள்நீக்கிச்
சிறந்திடும் பொம்மபுரிச்சேர் **(சி. பா. தே. கு. அ - 12)**

எனும் முதல் பாடலின் இவ்வடிகள் பொம்மபுர ஆதீன மடத்தின் தோற்றமாக விளங்கும் (பொம்மையார்பாளையம்) பொம்மபுரம் எனும் ஊரின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. "பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்" என்பது போல ஆதி சிவஞானியின் தோற்று வாயால் பொம்மபுரம் எனும் அவ்வூரும் பெரும்பேர் பெற்று விளங்குவது நோக்கத்தக்கதாகும்.

பகர்சிவாத் தூவிதவீர சைவசம யாசார்ய
பரமசற் குருமூர்த்தியாம் **(சி. பா. தே. கு. அ - 15)**

எனும் இரண்டாம் பாடலின் இவ்வடிகள் வீரசைவ வழிபாட்டில் இன்றியமையாதப் பங்குவகிக்கும் இட்டலிங்கம் பற்றியக் குறிப்பை எடுத்துரைக்கிறது. இறைவனோடு இரண்டறக் கலக்கும் " இலிங்காங்க சமரசம் " என்பதையே " சிவாத்துவித சமயம் " என அழைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சத்திசா தாக்கிய நிலைதன்னிற் கிலக்கதாய்
சார்ந்திடும் நவபேதமாய் **(சி. பா. தே. கு. அ - 26)**

ஆறாவது பாடலின் இவ்வடிகள் இட்டலிங்கம் என்பதற்கான விளக்கத்தை விவரிக்கிறது. சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், பிரம்மன் என இட்டலிங்கமே நவபேதமாக விளங்குவதாக கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ ல ஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் போற்றி பஞ்சகம் எனும் பகுதியில் ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பிறவிப்பலனை அளித்து, தன்னுடைய மெய்ஞான ஒளியால் உயர்நிலையை அடையச் செய்யும் சிவஞான பாலய தேசிகனின் திருவடிகளைப் போற்றி வணங்கும் வண்ணம் இந்த ஐந்து பாடல்களும் அமைந்துள்ளன.

மான்காட்டும் கரதலமும் மதிநதிகாட்
டும்முடியும் வாமந் தன்னில்
கான்காட்டும் குழற்குயிலும் கறை காட்டும்
பெருமிடறும் கரந்தும் உண்மைத்
தான்காட்டி அடியவர்க்கே தனிச்சுடரின்
நிலைக்காட்டித் தனிப்பேறு ஈகும்
தேன்காட்டும் பொழிற்பொம்ம புரிவாழ்
சிவஞான தேவே போற்றி **(சி. பா. தே. கு. போ. ப - 40)**

சுப்பிரமணிய ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட இந்நூலின் மூலம் சிவஞானி அவர்களின் புகழுரைகளையும், இட்டலிங்கம் பற்றியானச் சில நெறிமுறைகளையும் காண முடிகிறது. அதோடு சிவஞானி அவர்களின் திருவடி மலர்களைப் போற்றி யுள்ளமையையும் அறிய முடிகின்றது.

கீதங்களாகும் சிவஞானியின் செயல்கள்

ஸ்ரீ ல ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் மணிவிழா மலரில், தியாகராச ஐயர் அவர்கள் சிவஞானி அவர்தம் செயல்களை கீதங்களாகப் பாடியுள்ளார்.

பாலய தேவா பாலய தேவா
பாஹி ஸ்ரீ சிவஞான பாலய தேவா
வேலைக்கரை மிளிரும் பாலய தேவா
வேந்தர்க்கருள் புரியும் பாலய தேவா
பாலையுணவாக்கும் பாலய தேவா
பச்சகந்தர்க்கருள் பாலய தேவா
கட்சிப்பதிமருவும் பாலய தேவா
கடலுள் மூழ்கிவரும் பாலய தேவா
நச்சுத்தவிர்த்து அருளும் பாலய தேவா
நவாப்புக்கருள் செய்யும் பாலய தேவா
மூப்புக்கிளமைத் தரும் பாலய தேவா
முதிர்நரையைப் போக்கும் பாலய தேவா
நீ?ப்பரும் நோய்களெல்லாம் பாலய தேவா
நீற்றினால் நீக்கியருள் பாலய தேவா
கண்டிகை பூண்டருளும் பாலய தேவா
கந்தன்றனை நிகரும் பாலய தேவா
கண்டிக்கையூர்ந்தருளும் பாலய தேவா
சங்குகன்னரான பாலய தேவா
சேயூரின் வெண்மணலைப் பாலய தேவா
பத்தியளித்தருளும் பாலய தேவா
தீஞ்சர்க்கரையாக்கும் பாலய தேவா
மயூரமாமலைமேல் பாலய தேவா
வாழ்வேவந்தருள் செய்யும் பாலய தேவா
சித்தி புரிந்தருளும் பாலய தேவா
தீமேற் றவம்புரியும் பாலய தேவா
பாரிலெவரும் பரவும் பாலய தேவா
செந்தமிழ்க்கல்லூரி பாலய தேவா
தீர்க்கமுடன் அமைத்தாய் பாலய தேவா

முந்துஞ்சமயநெறி பாலய தேவா
முன்னேற்றஞ்செய்ய வேண்டும் பாலய தேவா (சி.பா.சு.ம.ம-69)

இவ்வரிகளுள் " செந்தமிழ்க் கல்லூரி பாலய தேவா " எனும் வரிகள் "சமுதாயப் பணியே சமயப் பணியென " இன்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்கும் பொம்மபுர ஆதீன மடத்தின் கல்விக்கான அர்ப்பணிப்பு பணிகளை விளக்கி உரைக்கின்றன. இதற்கு சான்றாக 1965 - ஆம் ஆண்டு பட்டம் ஏற்ற 19 - ஆம் பட்டம் குருமகா சன்னிதானம் அவர்கள், " சித்தர் சிவஞானி " என்னும் கல்லூரியை நிறுவியதோடு மட்டுமல்லாமல் மயிலம் தமிழ் கல்லூரியை, கலை அறிவியல் கல்லூரியாக உயர்த்தியதோடு அங்குள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக வளர்த்தெடுத்துள்ளனர். கல்விக்காக அவர் ஆற்றிய இத்தொண்டுகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

நல்ல நூல்களே நல்ல மனிதர்களை உருவாக்கும், நல்ல மனிதர்களாலே நல்ல சமுதாயம் உருவாகும் எனும் உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில் " கற்பனைக்களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் " இயற்றிய நூல்களை உலகறியச் செய்த பெருமையும் இவரையேச் சாரும்.

சிவஞானியைச் சீராட்டும் சிவப்பிரகாசர்

ஒருவர், மற்றொருவரிடம் அன்பின் மிகுதியால் தான் கூற நினைப்பவற்றை வாயில்கள் மூலம் தூதாக அனுப்புவர். தோழி, பாங்கன் என மனிதர்களேயன்றி அன்னம், மயில், கிளி, முகில், குயில் முதலானவற்றையும் தூதாக அனுப்புவர். அவ்வகையில், சிவப்பிரகாசர் அவர்கள் சிவஞானியின் மெய்ஞானத்தை உணர்ந்து தன்நெஞ்சை தூதாக விடுத்து " ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது " எனும் நூலை இயற்றியுள்ளார்கள்.

சிவஞான பாலய சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து, "ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் ", " ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு " எனும் இரு நூல்களையும் இயற்றியுள்ளார்கள். ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் என்னும் நூலில் பத்து பருவங்களில் சிவஞானியைப் புகழ்ந்துரைப்பதோடு, தான் பெற்ற உபதேசங்களையும் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு எனும் நூலில் வீரசைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவுற விளக்கியுள்ளார்கள்.

கடவுளரையும், பெரியோர்களையும் படுக்கையிலிருந்து கண் விழித்தெழுமாறு பாடப் பெறுவதே திருப்பள்ளி யெழுச்சியாகும். அதனடிப்படையில் சிவஞான பாலய சுவாமிகளைத் துயில் எழுப்புகின்ற வகையில் நான்கு பாடல்களைக் கொண்டு " ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி " என்ற நூலையும் பாடியுள்ளார்கள்.

தனது இலக்கண புலமையை எடுத்தியம்புகின்ற வகையில் "சிவஞான பாலய தேசிகர் கலம்பகம் " எனும் நூலையும் இயற்றி அமைத்துள்ளார்கள். இந்நூலில் தருக்க நூல் முதலான குறிப்புகள் நோக்கத்தக்கவையாக உள்ளன.

கடவுளரையன்றி , மனிதர்களைப் பாடுவதில்லை என்றிருந்த சிவப்பிரகாசர் அவர்களையே சிவஞானி மீது ஐந்து நூல்களைப் பாடவைத்த நிகழ்வு சிவஞானியின் அருட்பெரும் செயல்களில் ஒன்றாகும்.

இவர்களேயன்றி தன் புலமையையும், சிவஞானி அவர்தம் பெருமைகளையும் உலகறியும் வண்ணம் பல்வேறு புலவர் பெருமக்கள் பாடியுள்ளனர். அவர்களின் புகழுரைகளுக்கு இணங்க, சிவனாகிய சிவஞானியின் சிறப்புகளை சிந்தையால் உணர்ந்து, சிரத்தால் தாழ்ந்து மெய்ஞானமாகிய சிவஞானத்தைப் பெறுவோமாக.

திருமயிலாசலக் கலம்பகம் காட்டும் மயில மலை முருகன் அருட்சிறப்புகள்

வி. மீனாம்பிகை,
கல்லூரி நூலகர்,
சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மஞ்சக்குடி, திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி : 97159 75182
s.meenambigaisdc@gmail.com

மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கயிலாய ஞானப் பரம்பரையில் வழிவந்தது. வீரசைவ பெரிய திருமடம் மயிலம் பொம்மபுர ஆதீனமாகத் திகழ்கிறது. இத்திருமடம் சமுதாயப் பணிகள் செவ்வனே ஆற்றி வருகிறது. திருமடத்துப்பணிகளுள் முதன்மையானதாக மயிலம் மலைக்கோயில் மாமுருகன் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீனம், ஆதீன குருமுதல்வர், 20 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் அருளாட்சி, திருமடத்தைப் பாடிய புலவர்கள், தண்டபாணிசுவாமிகள், மயிலாசலக் கலம்பகம், மயிலை மலைச்சிறப்பு, முருகப்பெருமானின் அருட்சிறப்புகள், கௌமார நெறி ஆகிய தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

ஆதீன குருமுதல்வர்

ஸ்ரீபாலசித்தர் மயிலம் பொம்மபுர ஆதீன குருமுதல்வர் ஆவார். இவர் மயிலம் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பொம்மைய பாளையத்தில் தங்கி இறைவன் அருளால் பல சித்துகள் செய்து மக்களுக்கு நன்மை செய்து வந்துள்ளார். இவர் பொம்மபுரத்தில் திருமடம் அமைத்து பல ஆண்டுகள் முருகன் மீது நீங்காப் பற்றுடன் தவம் புரிந்து வந்தார். இறைவன் அருளால் மயிலை மலைக்கு வந்து கடும் தவம் புரிந்து வந்ததில் இவருக்கு முருகன் திருமணக் கோலத்துடன் காட்சி தந்தார். இவ் பாலசித்தர் அவதரித்தத் தலமே பொம்மைய பாளையம் ஆகும்.

20 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் அருளாட்சி [2011 முதல்]

20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் ஜூலை 2011 முதல் மயிலம் பொம்மபுர ஆதீனமாகப் பொறுப்பேற்றார்கள்.

இவர்கள் ஆன்மீகப் பணிகள் மற்றும் சமுதாயப் பணிகள், நூல்பதிப்புப் பணிகள் இதழ்பணிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். இவர்கள் தமது முந்தைய அதிபர் 19 ஆம் பட்ட குருமகா சந்நிதானம் அவர்களின் நூற்றாண்டு விழாவை 17.10.25, 18.10.25 ஆகிய இரண்டு நாட்களில் மயிலம் புதுவைப் பல்கலைக் கழகத்தில் மிகச்சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

திருமடத்தைப் பாடிய புலவர்கள்

மயிலம் பொம்மபுர ஆதீனம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர், அருணகிரிநாதர், வைத்தியநாத தேசிகர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், தியாகராஜ கவிராயர், பண்ருட்டி மணி, அப்பாவு அய்யர், பாரதிதாசன், ஆ.சிவலிங்கனார், இரத்தின முதலியார், வேங்கடாசல நாயகர், உருத்திரசாமி முதலிய புலவர் பெருமக்களால் பாடப்பெற்றது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

பாரதநாட்டில் முருக வழிபாடு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகிறது. முருகன் தமிழ்க் கடவுளாகவும் மலைநிலைக் கடவுளாகவும் விளங்கியமை அவனது தொன்மைக்கும், தொன்மை வழிபாட்டிற்கும் காரணங்களாக அமைகின்றன. முருகனின் பெருமையினைச் சங்கத் தமிழில் பாடியவர் நக்கீரர், சந்தத் தமிழில் பாடியவர் அருணகிரியார், தமிழில் இலக்கியம் படைத்தவர் தண்டபாணி சுவாமிகள். முருகனின் திருவருட்செல்வம் கைவரப்பெற்று முருகனின் பெருமைகளை, சிறப்புகள் மற்றும் அவரது அருட்செயல்களை இலக்கியத்தில் பதிவு செய்தவர். தண்டபாணி சுவாமிகள் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். அவை அனைத்தும் பக்தி, தமிழ்மொழி, தமிழின் சிறப்பு, தமிழ்ச் சமுதாயம் என்ற அடிக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. மேலும் பல்வேறு இலக்கிய வகைகளாகவும் அவரது பாடல்கள் அமைந்துள்ளன.

தண்டபாணி சுவாமிகள் சமயம் என்பது தனி மனிதர்கட்குரியதல்ல, சமுதாய ஒருமைப்பாட்டிற்குரியது என்ற கருத்தினைக் கொண்டு சமய ஒருமைப்பாட்டிற்காகக் தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டவர். சமயப் பொதுமையை முருகனின் வடிவத்திலேயே கண்டு கொண்டவர்.

19 ஆம் நூற்றாண்டில் சமூக மரபுகள், மூடப்பழக்க வழக்கங்கள், ஆணாதிக்கப் போக்கு போன்றவைகள் எழுதாத சட்டங்களாகச் சமூகத்தில் காணப்பட்டன. இக்காலத்தில் தண்டபாணிச் சுவாமிகள் சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் புரட்சிகரமாக எடுத்துச் சொன்னார்.

சாதனை நாயகர் சரித்திர நாயகர்
தண்டமிழ் நாயகரே

என்று கவிஞர் சுரதா தனது படைப்பில் (தேன்மழை, ப.207) குறிப்பிடுகிறார்.

திருமயிலாசலக் கலம்பகம்

பல்வேறு யாப்புகளில் பல்வேறு கடவுளர்களைப் பாடினாலும் முருகப்பெருமான் மீது இவர் பாடிய பாடல்களே அதிகமானவை. அவற்றில் "திருமயிலாசலக் கலம்பகமும்" ஒன்று. இந்நூலில் பாயிரம், கலம்பகத்தில் உறுப்புகள் குறித்த பாடல்கள், எண் சீர் விருத்தமும் உள்ளிட்ட நான்கு பாடல்களும் நூலின் கண் நூறு பாடல்களும் நூலின் இறுதியில் நூற்பயன், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட நாள் ஆகிய மூன்று வெண்பாக்களாகவும் 107 பாடல்களாக அமைந்துள்ளது. இந்நூல் மயிலமலைச் சிறப்பு, சிவஞானி, முருகன் அருட்சிறப்புகள் முதலியன குறித்து இங்குக் காணலாம்.

மயிலை மலைச்சிறப்பு

மயில மலையானது மற்ற எல்லா மலைகளையும் விடச் சிறப்பினில் உயர்ந்திருக்கிறது. குறளனாகி வந்த மாவடி பால் அன்று மூவடி நிலம் கேட்டு, திரிவிக்ரம அவதாரம் எடுத்து முதண்ட கூட முகடுமுட்ட அளந்த போது திருமால் வளர்ந்த நிலை போல, மயிலை மலை வளர்ந்து திகழ்கின்றது.

மயில மலையை வணங்குவோர் கோள்களால் பீடிக்கப்பட மாட்டார்கள். "கோள் விலக்கும் மயில மலைக் கோயில்" பா.31 என்று குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை வளம், மலைவளம், பொழில் வளம், நீர்வளம், மழை வளம் முதலியன அனைத்து வளங்களும் கொண்டதாக மயிலமலை திகழ்கிறது.

சுவாமிகள் மயில மலையை வழிபடும் அன்பர்களைக் காலன் அணுக மாட்டாத வரம் அளிக்க வேண்டுமென முருகனை வேண்டுகிறார்.

முருகப்பெருமானும் சிவஞானியும்

பாலச்சித்தருக்கு அருள்புரிய வந்த முருகப்பெருமான் அவர்தம் வேண்டுதலுக்கு இணங்கி மணக்கோலத்துடன் காட்சியளிக்கிறார். அத்துடன் அவர் தம் சீட பரம்பரையினராகிய சிவஞான பாலய தேசிகர் மரபினருடன் உளமுவந்து வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். மயில மலையில் சித்தி விநாயகர், பாலசித்தர் முருகப்பெருமான் சந்நிதிகளை அடுத்தடுத்த அமைந்துள்ளன. பாலசித்தரின் ஜீவசமாதி முருகப்பெருமானின் வலப்புறத்தில் அமைந்துள்ளது.

அமலன்புகழ் மயிலாசலம் அதில்வாழ்சிவ ஞானிக்கு
அருள் செய்து அமில் (ம.க.64)

என்ற பாடல் மூலம் பாலசித்தரும் சிவஞானியும் வேறல்லர் சிவனும் என்ற கருத்து தெளிவாகிறது.

முருகப்பெருமான் அருட்சிறப்புகள்

பஞ்ச பூதங்களும் பரப்பிரமம் ஒன்றும் ஆகிய ஆறும் முருகனின் ஆறுமுகங்களாகத் திகழ்கின்றன. அகம், புறம் எனும் பன்னிரு சமயங்களாக அவனது பன்னிரு திருக்கரங்கள் விளங்கு கின்றன. பெருமானின் திருவடிகள் வேத ஆகமப் பொருள்களின் முடிவாகத் திகழ்கின்றன என எடுத்துரைக்கிறார்.

மின்னலென ஒளிவிடும் வேலும், பொன்போலும் மயிலும் ஆட்டு வாகனமும் கூளிரும், சேவலும் முதலானவற்றுடன் திருநீறு பொலியும் திருமேனியுடன் முருகப்பெருமானைச் செந்தகைப், பைந்தகைத் தேவியர் இருவரும் சூழப்பெற்றவனாய், அந்தணர் போற்ற, தென்றல் தவழும் மயில மலையில் முருகன் அமர்ந்திருக்கிறான். (பாடல்.99)

கௌமார நெறி

கந்தப் பெருமானை தவிர்த்து வேறு எந்தப் பெருமானைத் வணங்கிலும் அது நிலைத்ததாகவே பலன் விளைவிப்பதாக ஆகாது.

"சுப்பிரமணியனை அன்றி மாயவன், பிரம்மன், கணபதி முதலானவர் இலை என உணர்வோர் இம்மை மறுமைப் பயன் நுகர்ந்து வீடு பேறு அடைவோராவார். நிலையான தெய்வம் மலை மீது இருக்கும் தெய்வமே ஆகும். பிறசிலைத் தெய்வங்கள் எல்லாம் நிலைத்தெய்வ நெறிகாடும் கலைத் தெய்வங்களே ஆகும்" என்று சுவாமிகள் கூறுகிறார்.

தண்டபாணி சுவாமிகள் எழுத்தால் எல்லாத் துறைகளையும் தொட்டுச் சென்றாலும் அவரது படைப்புகளில் மிகுதியாக முருகனைப் பற்றிய செய்தியே மேலோங்கிக் காணப்படுகின்றன. முருகனே உலகிலுள்ள அனைத்துக்கும் ஆதாரம் என்பதும் முருகனை வழிபட்டால் பிற அனைத்துத் தெய்வங்களையும் வணங்கியதற்குச் சமம் என்ற உணர்வையே தம்முடைய படைப்பிலக்கியங்களில் இழையோடச் செய்துள்ளார்.

முடிவுரை

மயிலம் ஆதீனம் 20ஆம் பட்ட குருமகா சந்நிதானம் அவர்கள் சமுதாயத்தினை வீர சைவ நெறி கொண்டு சீர்மைப்படுத்த வேண்டும் என்று உயர்ந்த நோக்கத்தோடு கற்றறிந்தவர், கல்லாதவர் என அனைவரும் பயன்பெறும் வகையில் சிவப்பிரகாசரின் உயர்ந்த கருத்துகளை போற்றி பரவச் செய்து வருகிறார்கள். நாம் அனைவரும் அவர்களை வணங்கி வழிபடுவோம். அவர்கள் தமது முந்தைய அதிபர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகச் செயல்படுத்தி வருவதை நாம் அனைவரும் போற்றி வழிபடுவோம், சுவாமிகளின் குருவருளைப் பெறுவோம்.

பார்வை நூல்கள்

1. மயிலம், பொம்மபுர ஆதீனம், திருமடவரலாறு, மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 604304.

2. பரமசிவம் த.கோ. பதிப்பாசிரியர், தண்டபாணி சுவாமிகள் ஆய்வு மாலை தண்டபாணி சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழா வெளியீடு, கோயம்புத்தூர், 1998.

3. "சங்குன்ன பாலசித்தர்" மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம் 604304 மார்ச் 2025, ஏப்ரல் 2025, மே 2025, ஆகஸ்டு 2025, செப்டம்பர் 2025.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
தமிழ் மற்றும் சமுதாயப் பணி

ம. நந்திகா
முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ்
மருதர் கேசரி ஷெயின் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
வாணியம்பாடி 9003960415.
Mail Id- nandhiganandhiga4@gmail.com

முன்னுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம் வீரசைவ மரபைச் சேர்ந்த ஆதீனமாகும். இது புதுவையை ஒட்டிய தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்ட கடலோர எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. ஆதீனங்கள், பக்தி நெறி தழைக்கவும், தமிழ் மொழியை வளர்க்கவும் தோன்றின. மனித நிலையிலிருந்து இறைநிலையை அடைய உதவும் வாழ்வியல் ஒழுகலாறுகளைப் போதிப்பவை ஆதீனங்களாகும்.

ஆதீனத்தோற்றம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் திருக்கயிலாய ஞான பரம்பரையின் வழிவந்தது ஆகும். திருக்கயிலையில் சிவபெருமானுக்கு மேற்குத் திசைக் காவலராக விளங்கிய பூதகணங்களுள் ஒருவர் சங்குகன்னர் ஆவார். இவரைச் சிவபெருமான் அழைத்து, 'தென்னாட்டில் வீரசைவநெறி தழைத்தோங்கவும் சித்தர் கொள்கைகள் வலுப்பெறவும் செய்க! என்று அருளானை இட்டார்.

சிவ ஞானிகளின் தன்மைகள்

1. ஆன்ம ஞானம் - சிவஞானிகள் ஆன்மாவை அறிந்து, அதன் உண்மையான சொரூபத்தை உணர்ந்தவர்கள்.
2. கர்ம வினை அழிப்பு - கர்ம வினைகளை அழித்து, மீண்டும் பிறவாமல் தங்களைத் தற்காத்துக் கொள்வார்கள்.
3. இறைவனை உணர்தல் - இறைவனின் அருளைப் பெற்று, அவனோடு ஒன்றிணையும் ஆனந்த நிலையை அடைந்தவர்கள்.
4. உயரிய அறிவு - உலக மாயைகளிலிருந்து விடுபட்டு, உண்மையான மெய்யை உணர்த்தும் அறிவைப் பெற்றவர்கள்.

சிவஞானிகள்

சிவஞானிகள் என்பவர்கள், ஆன்மாவின் சொரூபத்தை அறிந்து, தியானித்து, கர்மவினைகளை அழித்து, இறைவனை உணர்ந்து உயரிய ஞானத்தை அடைந்தவர்கள் ஆவர். அவர்கள் இறைவனின் அருள் மற்றும் தன்னையே உணர்ந்ததனால், அனைத்து பந்தங்களிலிருந்தும் விடுபட்ட, ஒளிமயமான வாழ்வை பெற்றவர்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற தேவாரப் பாடல்கள் பாடியவர்கள். சிவபெருமானின் தத்துவங்களையும், ஆன்மிக நெறிகளையும் மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

- திருஞானசம்பந்தர் - சைவ சமயங்களின் வளர்ச்சிக்குத் துணை நின்ற முதல் திருமுறை ஆசிரியர். இவர் சிவபெருமானின் தத்துவங்கள், திருக்கோயில் வழிபாடு, திருவிழாக்கள் ஆகியவற்றை தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.
- திருநாவுக்கரசர் - தேவாரம் பாடிய மற்றொரு முக்கிய திருமுறை ஆசிரியர். இவரது தத்துவங்களையும் விளக்குகின்றன.
- சிவவாக்கியர் - பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் உடலியல், ஆன்ம ஞானம் மற்றும் தத்துவங்கள் பற்றி பாடல்கள் பாடியுள்ளார்.

தற்கால சிவஞானி

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898)

திருநெல்வேலியில் செந்தில் நாயகம் பிள்ளை, பேச்சிமுத்து அம்மை என்பவருக்கு மகனாக பிறந்தார். சங்கரலிங்கம் என்ற இயற்பெயரையுடைய இவர் தமது ஐம்பதாண்டுக் காலத்தில் நூறாயிரம் கவிதைகளுக்கு மேல் பாடியுள்ளார்.

"இறைவனைப் போற்றுதல், தமிழைப் பேணிக் காத்தல், மனத்தை நெறிப்படுத்துதல், இயற்கையின் எழிலை எடுத்தியம்புதல், புதுமைகள் படைத்தல் ஆகிய ஐவகை நோக்கங்களை தன் குறிக்கோளாகக் கொண்டு அவற்றைப் பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தி வாழ்ந்து மறைந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்" என்கிறார் டாக்டர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன்.

தமிழ் மற்றும் சமுதாயப் பணி

1. வடலூர் இராமலிங்க அடிகள், ஆறுமுக நாவலர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சபாபதி முதலியார், பூண்அரங்கநாத

முதலியார் ஆகியவரோடும் நெருக்கமாக உறவு பூண்டிருந்ததற்குக் காரணம் சுவாமிகள் நேசித்த தமிழே!

2. இவரை 'தமிழ் வெறியர்' என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்குப் பின்வரும் பாடல் சான்றாக அமைகிறது.

மதுரத் தமிழை இகழ் தீயோர் மணி
நா அறுத்துக் கனலில் இட.

தமிழ்ச்சுவை அறியாத்தெய்வம்
உளது எனில் அஃது உணர்

அவ்வகையில் தாழ்வு எனல் அறமே" எனப் பாடியதின் மூலம் அவரது தமிழ்ப் பற்றை நாம் உணரலாம்.

4. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தல், சிறு தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய மிருக பலியைத் தடுத்தல், சாதிக் கொடுமையை எதிர்த்தல், கைம்மைப் பெண்களின் ஊக்குவித்தல், தமிழில் அருச்சனையை ஊக்குவித்தல் ஆகிய கொள்கைகளைச் சுவாமிகள் தனது பாடல்கள் மூலம் வெளிப்படுத்தினார்.

5. தண்டபாணி சுவாமிகளின் இறைமைக் கொள்கை என்பது சமூகச் சீர்திருத்தப் பார்வை கொண்டதாகும்.

6. அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு இம்மூன்றும் சுவாமிகள் கை வண்ணத்தில் உருவானவையே!

7. முருக பக்தராக விளங்கியமையால் மக்களால் 'திருப்புகழ் அடிகள்' என்ற பெயரும், 'சந்தப் பாடவலப் பெருமான்','முருக தாச அடிகள்' ஆகிய பெயர்களும் சுவாமிகளுக்கு வழங்கப்பட்டன.

குருவின் கடமைகள் [ஆசிரியர்]

- அறத்தைப் போதித்தல் - குருவானவர் மாணவர்களுக்கு அறநெறி, ஒழுக்கம் ஆகியவற்றை போதித்து, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இது சமூகத்தில் நல்ல ஒழுக்கமும் அறமும் தழைக்க உதவியது.

- கல்வி மற்றும் பண்பாட்டை வளர்த்தல் - மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், தமிழ் பண்பாட்டின் மீது பற்றுடையவர்களாக வளரவும் குருவின் பங்கு இன்றியமையாததாக இருந்தது.

- மாணவர்கள் நலன் - மாணவர்களின் கல்வி குறித்த கவலைகளையும், கல்வி கற்பதில் உள்ள சவால்களையும் தீர்த்து. அவர்களுக்கு ஏற்ற கல்வி முறையைப் புகட்ட வேண்டும்.
- ஒழுக்க நெறிகளைப் போதித்தல் - மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை வளர்த்து, சமூகத்தின் பொறுப்புள்ள குடிமக்களாக அவர்களை உருவாக்க வேண்டும். மேலும், புற இலக்கியங்களில் கூறப்படும் போர் நெறிமுறைகள் மற்றும் அகம் சார்ந்த அன்பு, காதல், ஒழுக்கம் பற்றிய நெறி முறைகளையும் கற்பிக்க வேண்டும்

முடிவுரை

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் வாயிலாகத் தோன்றிய வீரசைவ வழிப்பாட்டின் மூலம் சிவஞானியின் குருவருளைப் பற்றியும், அவர்களின் சமுதாயப் பணியிணையும் இதன் மூலம் அறிந்து கொண்டேன்.

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் கல்விப்பணி

ரே. கா. லோஹண்யா,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர்-10.
8015723261
rklohanya@ gmail.com

முன்னுரை

மயிலம் பொம்மைய பாளையம் 19 ஆம் பட்டம் சிவஞான பாலைய சுவாமிகளின் நூற்றாண்டு விழா குறித்தும் ஆதீன செயல்பாடுகள், கல்விப்பணி, சந்நிதானங்களின் சிறப்புகள் ஆகியவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆதீனத்தின் சிறப்புகள்

மயிலம் பொம்மபுர ஆதீனம் என்பது தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் புதுவையின் எல்லையில் அமைந்துள்ள ஒரு வீர சைவத்திருமடம் ஆகும் திருமடத்தின் சிறப்பு பக்தி நெறியையும் தமிழ் மொழியையும் சிறப்புற அமைத்தும் பழங்கால ஓலைச்சுவடிகளில் உள்ள சைவ இலக்கியங்களை நூல்களாகவும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இத்திருமடம் விளங்கி நிற்கிறது. திருமடத்தின் 18 ஆம் பட்ட சுவாமிகள் அவர்கள் காலத்தில் புலவர் பெருமக்களைக் கொண்டும் தானும் ஒரு புலவராக விளங்கியும் சொற்பொழிவுகள் ஆற்றியும் விளங்கினார். தமிழின்மீது கொண்ட அளப்பறிய பற்றினால் கி.பி 1937 ஆம் ஆண்டில் முருகன் செந்தமிழ்க் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி வைத்ததோடு 1938 இல் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி என்னும் பெயரில் தமிழை வளர்க்கக் கல்லூரி ஒன்று தொடங்கக் குருவருள் பொழிந்தார்.

சிவஞான பாலய சந்நிதானங்களின் சிறப்பு

1965 ஆம் ஆண்டு 19 ஆம் பட்டம் சந்நிதானம் அவர்கள் பட்டம் ஏற்றார்கள். நல்ல நிறம், நல்ல உயரம், அருள் பொழியும் கண்கள், கம்பிரமான உடல்கட்டு, வித்துவான் பட்டம் பெற்றவர். இவர் நினைத்த செயல்களைத் தானே முன்னின்று நடத்தும் ஆற்றல் பெற்றவர் எனச் சிறப்புகள் பல சொல்லிக் கொண்டே போகலாம். மயிலம் திருமடத்தில் திருப்பணிகள் எது நிகழ்ந்தாலும் மகா

சந்நிதானம் அவர்கள் நேரம் தவறாமல் ஈடுபடுவார். 1991 ஆம் ஆண்டு விநாயகர், பாலசித்தர், வள்ளி தெய்வானை உடனுறை முருகன் திருச்சந்நிதிகளுக்குக் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. 19ஆம் பட்டம் சுவாமிகள் கலந்து கொண்ட விழாக்களில் எல்லாம் துதி பாடல்கள் பாடிய பின்னும் உரையாற்றுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

நூல் ஆக்கம்

நல்லாற்றூர் சிவப்பிரகாச சிவஞான பாலய தேசிகர் நெஞ்விடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி எனும் ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். மேலும் பயனூர் வரதராச பிள்ளை என்பவர் இயற்றிய பாலய சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் செய்யுள் நூலுக்கு அடியேனை உரை எழுதி சிவஞான பாலய சுவாமிகள் மகா குருபூசை மலராக 29 /5 / 1999 இல் உரை எழுதியுள்ளார். பிரமாதி ஆண்டின் பொங்கல் வெளியீடாகச் சிவஞான பாலய தேசிகர் பனுவல் திரட்டு மூலமும் உரையும் வெளிவந்ததுள்ளது. இன்று வரை சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது முதலிய ஒன்பது நூல்களுக்குச் சிவஞானியை உரை எழுதுவித்து வெளியிட்டு வந்த மகா சந்நிதானம் இந்நூலையும் வெளியிட்டருளுவதற்கு வணங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய வல்லேன் என்ற குறிப்பையும் கூறியுள்ளார். சிவபெருமான் மீதும் சிவனடியார்கள் மீதும் தமக்கிருந்த அளப்பரிய அன்பினைப் புலப்படுத்தும் வகையில் சமயக் குரவர் நால்வரைப் போற்றி நால்வர் நான்மணிமாலை எனும் சிறந்த நூலினையும் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் இயற்றியுள்ளளார். சைவ சமய வளர்ச்சியில் நால்வரின் பங்களிப்பை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்நூல் படைக்கப் பெற்றுள்ளது. ஒரு அடியாருக்குப் பத்துப் பாடல்கள் வீதம் நான்கு அடியாருக்கும் சேர்த்து நாற்பது பாடல்களையும் ஒரு காப்புச் செய்யுளையும் அமைத்து பாடியுள்ளார். சமயக்குரவரது வாழ்வியல் அனுபவங்களில் இறைவனிடம் பெற்ற அருள் திறத்தைத் தேவார திருவாசகத்தைப் படிப்பதால் ஏற்படும் நன்மைகளை நால்வரது திருவடிகளைப் போற்றி வணங்குவதால் உண்டாகும் மேன்மைகளை நல்லாற்றூர் சிவப்பிரகாசர் அற்புதமாகப் பாடியுள்ளார்.

இலவசக் கல்வி

ஆதீனத்தின் செயல்பாடுகளில் மட்டுமே இல்லாமல் இலவசக் கல்வி பணியிலும் முக்கிய பங்காற்றி உள்ளனர். இந்த ஆதீனம்

சைவ தமிழ் மற்றும் பொது கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்காக இலவசமாகக் கல்வியும் வழங்கியுள்ளனர். ஏழை குழந்தைகளுக்கு மட்டும் அல்லாமல் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகிறது. கல்வி என்பது அனைவர் உரிமை என்ற நோக்கில் ஆதினம் செயல்பட்டு வருகிறது. ஆசிரியர்கள் வழியாகவும் தமிழ் சைவம் வேதம் சமூகவியல் பொது கல்வி போன்ற பாடங்களில் பயிற்சி என்று இவை அனைத்தும் அமைந்து வருகிறது.

திருமடத்தின் கல்விப் பணி

பதினெட்டாம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் எனப் போற்றி அருளாட்சி செய்து வந்தார்கள். அவ்வப்பொழுது சுவாமிகள் ஆசிரியராக இருந்தமையால் தமிழ் கல்வியைப் போதிக்கும் நோக்கத்தோடு 1937 ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ் கழகத்தின் வழி ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியை விழுப்புரம் மாவட்டம் மயிலம் பகுதியில் தோற்றுவிக்க காரணமாகத் திகழ்ந்தது. இவைகளைத் தொடர்ந்து பள்ளிக்கல்வி, உயர்கல்வி எனச் சில கல்வி நிலையங்களை உருவாக்க ஆலோசனை வழங்கிச் செயல்படுத்தினார்கள்.

பள்ளிக் கல்வி

19 ஆம் பட்டத்து சந்நிதானம் அவர்களால் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளி ஆகவும் வளர்ந்தது. அது மட்டுமல்லாது ஆதீனத்தின் அருட்சிடர் சிவப்பிரகாசர் பெயரில் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் மயில மலை அடிவாரத்தில் இயங்கி வருகின்றது.

உயர் கல்வி

சென்னை, திருச்சி என்னும் இவ்விரு நகரங்களுக்கு இடையே உயர்கல்வியை போதிக்கும் கல்வி நிறுவனங்கள் அக்காலத்தில் இல்லாத சூழ்நிலையில் இக்கல்லூரி பதினெட்டாம்பட்டம் சுவாமிகளின் நல்லாசியுடன் தொடங்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றது. கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்குச் சாதி மத பேதமின்றி உணவளித்து, உடை கொடுத்து, உறைவிடமும் தந்து தமிழில் புலமை மிக்க தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் இயங்கி வருகின்றது என்றும், 1938 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக இணைப்பாணை பெற்று மானிய பிரிவில் தொடங்கப்பட்டது. 19 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் அருளாணையின் வண்ணம் புதுச்சேரிக்கு அருகில் உள்ள பொம்மைய பாளையத்தில் சித்தர்

சிவஞானி கலை அறிவியல் கல்லூரி தொடங்க பெற்று இயங்கி வருகின்றது. ஸ்ரீமத் சிவஞான பழைய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் 2004 முதல் 2017 வரை செயலராகப் பொறுப்பேற்று இருபதாம் பட்ட சுவாமிகளாக இவர் ஆற்றிய பணிகள் மிகப் பலவாகும். நூலாக்கப் பணி, பதிப்புப் பணி, இதழ் பணிகள் ஆகியவற்றையும் மேற்கொண்டு வருகிறார்கள். உண்மையாகவும் நேர்மையாகவும் வாழ வேண்டும் என்று மாணாக்கருக்கு அவ்வப்போது அறிவுறுத்திக் கொண்டே இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக,

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லைஎனைத்து ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற (குறள்-300)

தமிழ்ப்பணி

வித்துவான் தமிழ் பட்டைய படிப்பு நான்கு ஆண்டுகள் 1938-39 முதல் 1969-70 வரை சீரும் சிறப்புமாக இயங்கி வந்தது மேலும் புலவர் தமிழ் பட்டைய படிப்பு நான்கு ஆண்டுகள் 1970-71 முதல் 1974- 75 வரை இயங்கியும் பிலிட் தமிழ் பட்டைய படிப்பு நான்கு ஆண்டுகள் 1975- 76 முதல் 1979 -80 வரை நடைபெற்றது. பிலிட் தமிழ் பட்டைய படிப்பு மூன்று ஆண்டுகள் 1980-81 முதல் இன்று வரை சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

முடிவுரை

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் திருமடத்தின் 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் சீரிய வழிகாட்டுதலில் கல்விப் பணியும், தமிழ்ப்பணியும், சமுதாயப் பணியும் சிறப்புற அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. சந்நிதானங்களின் அருட்பணி, கல்விப்பணி குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

துணை நூற்பட்டியல்

1. சிவஞானியின் மகிமை நூலாசிரியர் முனைவர் ச திருநாவுக்கரசு.
2. ஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் மும்மணிக் கோவை., பதிப்பாசிரியர்- குமாரசிவ ராசேந்திரன்.
3. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் பனுவல் திரட்டு- ஆசிரியர்- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.
4. வீர சைவ நோக்கில் நால்வர் நான்மணிமாலை- பதிப்பாசிரியர்., நல்லாவூர் முனைவர். ச. திருநாவுக்கரசு முதல்வர்.

சிவஞானியின் பெருங்கருணை

கோ. ஜவகர்
முதுகலை முதலாமியாண்டு,
ஸ்ரீ.சி.பா.சு.த.க.அ.கல்லூரி, மயிலம்.

தமிழ்க் கடவுளான முருகன் உறைந்துள்ள பதிகளில் ஒன்றாக விளங்குவது மயிலம் மலை. இப்பதியினை சந்தத்தால் முருகனை சொந்தம் கொண்ட அருணகிரிநாதர் பாடுகையில் மயிலந் தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே என பாடி மகிழ்கின்றார்

இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்ட இப்பதியில் உள்ள மணக்கோல முருகப்பெருமானின் திருவருளினை நமக்கு குருவருளாக தரும் எம் சிவஞானியின் பெருமைகளையும் அவரைத் தொழுவதன் மூலம் நாம் பெறும் பேறுகளையும் இக்கட்டுரை முன்வைக்கிறது.

மயிலை மலையின் வரலாற்றைக் கூறுகையில் முருகக் கடவுள் சூரபதுமனை செந்தூரில் வதம் செய்தபின் அதாவது அவன் அரக்க குணத்தை மட்டும் அழித்த பிறகு அவன் அங்கு இருந்து வந்து மயிலையில் மயில் வடிவான மலையாக மாறி தவம் செய்தான் எனவும் அதனால் அகம் மகிழ்ந்த முருகப்பெருமான் தோன்றி அவனை ஏற்றார் என்பது வரலாறு. இப்படிப்பட்ட இப்பதியில் பால சித்தராகப்பட்டவர் வந்து கள்ளிப்பாலை மட்டுமே உண்டு முருகனை எண்ணி தவம் செய்து அவர் அருளைப் பெறுகின்றார்.

இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்ட பாலசித்தரிடம் பச்சைக்கந்த தேசிகரின் பரம்பரையில் உள்ள அம்மாவை என்ற அம்மையாரும் அவர் கணவரும் என இருவருமாக இவரிடம் சீடராக மாறினர். இவர்கள் அவரை நாள்தோறும் தொழுது பணிவிடை செய்து வருகின்றனர் அதன் பலனாக பாலசித்தர் அம்மாவை அம்மையாருக்கு தான் பருகும் கள்ளிப்பாளையே பிரசாதமாக வழங்கினார். அதன் பலனாக ஒரு ஆண் பிள்ளை அவதாரம் ஆகின்றார் அவருக்கு ஆதி சிவஞானி என பெயர் சூட்டியும் ஞான உபதேசங்களை செய்தும் தன் சீடராக ஏற்றுக்கொண்டார் பாலசித்தர்.

சிவஞாணி திருப்பெயர்ச் சிறப்பு

பொதுவாகச் சிவாயநம என்னும் சொல்லைச் சூக்கும பஞ்சாட்சரம் என்பர். அதையே முக்தி பஞ்சாட்சரம் என்றும்

கூறுவர். "திருவாய் பொலியச் சிவாயநம" என்று நீறணிந்தேன் என அப்பர் கூறுமாறு போலச் சிவஞானி எனும் நாமம் வீடுபேறு எய்துவிக்கும் திருப்பெயர் என்பது புதுமையாகும். இஃது எங்ஙனம் புதுமை எனில் ஞானம் இலாதவர்கள் கூடச் சிவஞானி எனச் சொன்னால் முத்தி உலகை அடைவிக்கும் தனித்தன்மையுடையது எனக் கூறுவதென்பதே புதுமையாகும். ஞானம் உடையவர்கள் முத்தியடைவர் என்பது இயல்பாயினும் ஞானமில்லார் தம்மையறியாமலே சிவஞானி எனக் கூறிவிட்டால் முத்தி கிட்டிவிடும் என்பதால் தான் சிவஞானியைப் பவநாசன் என்பதாகச் சிறப்புப் பெயருடன் கூறினர்.

தானியே சிவஞானியே எனான்!
மேனியோடு அபிமானி ஆகுமே! **(சி.பா.தே.கலம்.,63)**

வள்ளலே! சிவஞான தேசிகனே! என்று சொல்லித் துதியாதவன் உடலின் கண் மட்டுமே பற்றுடையவனாக விளங்குவான். மேலும் பிறவிநோய் தீரா நிலையை ஞானாசிரியர் உடையவனாகவும் திகழ்வான். சிவஞானியின் திருநாமம் கொள்வோம். பிறவிநோய் நம்மைத் தாக்காமல் இருக்க சிவஞானியின் குருவருள் பெறுவோம்.

பவப்பிணி நீக்கி அருளும் சிவஞானி

உலகில் பிறவி எடுத்தல் என்பது கொடியது. அருளாளர்கள் யாவரும் பிறவி வேண்டாம் என்றே இறையருளை நாடியுள்ளனர். 84 லட்சம் யோனி பேதங்கள் உள்ளதாகத் தத்துவ நூல்கள் பிறப்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. "பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உனை மறவாமை வேண்டும்" எனப் பாடுவார் காரைக்காலம்மையார். இப்படிப்பட்ட பிறவியாகிய பெருங்கடலை சிவஞானி எனும் படகு கொண்டு நாம் எவ்வாறு நீந்திக் கடப்பது என்பதனை நாம் பின்வருமாறு காண்போம்.

சிவஞானியை மணிவிளக்கென்று உணராமல் அவனது திருநாமத்தை உச்சரிக்காமல், குரு உபதேசம் பெறாமல் அவன் முன்னிலையில் சென்று மனமுருகி பவப்பிணியைப் போக்கியருள வேண்டாமல் இருப்பவர் யாவரும்,

பவப்பிணி மருத்துவ னெனப்படு சிவஞான
வள்ளல் வந்து வண்மயிலை மலைமேல்
வாழ்தலை மணிவிளக் கெனக் கண்டு
முள்ள நைந்து சென்றுரைக்கிலர் என்கொலோ
வுண்டுஉடுத்து உழல்வோரே **(சி.பா.தே.கலம்.9)**

என அடையாளப்படுத்தி அவர்களின் அறியாமையைப் புலப்படுத்தி குருவருள் பெற்றுய்ய வாருங்கள் என அனைவரையும் அழைக்கிறார். குறவஞ்சியிலே குறவர்கள் தாம் வாழும் மலையின்கண் வாழும் வளங்களைப் பாடுவது போல மயில மலையின்கண் வாழும் குறவர்கள் தூதுவனைப் பார்த்து தூதுவனே! வருக! நாங்கள் அகந்தையாகிய மலையை உடைக்கும் சிவஞான தேசிகரது மலையில் வாழும் குறவர்கள் என்பதை அறிவாயாக எங்களிடம் மணம் முடிக்கப் பேசி வருமாறு உன்னை அனுப்பிய கோமானிடம் சென்று இதற்கு அவன் தகுதிவாய்ந்தவனா என உணரச் செய்யுங்கள் என்று குறவர்கள் பேசுவதாக சிவஞானியின் பெரும் ஆற்றலை அவர் வாழும் மயில மலையின் சிறப்பை மிக அழகாகப் பதிவு செய்து நமக்கு உணர்த்தி ஞானாசிரியரின் பெருமைகளை வெகுவாகப் போற்றி மகிழ்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிவஞாணியின் திருவடி தீட்சை

சித்தமெல்லாம் சிவஞானியை எண்ணி சிவஞானியின் பேரருள் பெருங்கருணைத் திறத்தைப் போற்றி அவர் தம் பெருமைகளை நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீசிவப்பிரகாசர் தீந்தமிழில் நூல்களை யாத்து அருளி நாமெல்லாம் ஆனந்த வாழ்வு பெறுவதற்கான வழிகளை நமக்கு வழங்கியுள்ளார்கள். எல்லா மாந்தர்களும் தங்களது பிறவிப்பிணி அகலவும் அதனால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபடவும் ஆற்றுப்படுத்தி மனிதர்களைப் புனிதர்களாக்கிட ஸ்ரீசிவஞான பாலய தேசிகர் கலம்பகத்தில் பல்வேறு கருத்துகளைப் பதிவு செய்து நல்ல சமுதாயம் அமைந்திட நமக்கு அருளியுள்ளார்.

அம்மா சிவஞானி அடிக் கமலம்
மும்மாயை கடந்து முயங்கும்அது
கும்மா தலைமீது கமத் தினனால்
கைம்மாறு உளதோ கடையேன் இடையே. (சி.பா.தே.கலம்.24)

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்', வானகமும் ஆற்றலரிது', 'பயன் உ தவிநயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது' என்பர். ஆதலின் காரணமில்லாதும் பயன்தூக்காமலும் அன்பால் புரிந்த இந்நன்றிக்கு ஒத்தது ஒன்றும் இல்லை என்பார் 'கடையேனிடையே கைம்மாறுளதோ' என்றார்.

சிவஞாணியின் திருக்கரத் திருநீறு

தீமைகளை அழித்து நன்மைகளைப் பெருகச் செய்வதற்காகச்

சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து அக்னி ரூபமாக அவதரித்தவர் முருகப்பெருமான். இவரது அருள்பெற்று வீரசைவ நெறியைத் தழைக்கச் செய்தவர் மயிலம் பொம்மபுர ஆதீன முதற்குரவர் ஸ்ரீபாலசித்தர். ஸ்ரீ பாலசித்தரைத் தொடர்ந்து ஆதிசிவஞானி இத்திருமடத்தின் குருமகா சந்நிதானங்களாக வீற்றிருந்து மன்பதை உயிர்களைக் காத்து அருள்புரிந்து வந்தார்கள். மக்களோடு மக்களாகச் சமுதாயப் பணி ஆற்றி மண்ணுலகைக் காக்கின்ற திருமடமே மயிலம் பொம்மபுர ஆதீனம்.

மயில மலையின்கண் எழுந்தருளியுள்ள சிவஞானித் திருக்கரத்தால் வழங்கப்படும் திருநீற்றின் சிறப்பைக் கலம்பகத்தில் பல இடங்களிலே பதிவு செய்துள்ள சிவப்பிரகாசர் சிவஞானியின் திருக்கரங்களால் பெற்று பூசிக் கொள்ளும்போது கிடைக்கும் நன்மைகளைப் பட்டியலிடுகிறார்.

1. வறுமை நீங்கி செல்வம் சேரும்
2. அரச வாழ்வு கிடைக்கும்
3. மரண பயத்திற்கு மருந்தாகும்
4. கொடிய பாம்பின் நஞ்சுக்குக் கருடக் கிழங்காகும்
5. பகைக்குப் படையாகும்
6. மலடர்க்குப் பிள்ளைப்பேறு கிட்டும்

கருணையே வடிவமான சிவஞானதேவன் திருக்கரத் திருநீறு அனைத்து செல்வங்களையும் ஒருசேர அளிக்க வல்லது என்பதைப் பின்வரும் பாடல் சுட்டுகின்றது.

இளைக்கு மிடியற்கு உறுபொருளாம்
இறைவர்க்கு அரசாம் கூற்றுவனை
விளிக்கும் பிணிக்கு மருந்தாகும்
விடத்திற்கு அருஞ்சீர்க் கலுழன்ஆம்
வளைக்கும் பகைக்குப் படை ஆகும்
மலடர்க்கு அரிய மகவாகும்
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே. **(சி.பா.கு.தே.கலம்.44)**

இவ்வாறான சிறப்புகளைக் கொண்ட சிவஞானி ஆனவர் எம் மயிலம் பதியில் உறைந்து உள்ளார் என்பது இம்மண்ணுக்கும் இம்மண்ணில் வாழும் மக்களுக்கும் பெறும்பேறாகும் என்பதே சத்தியமாகும்.

என் வாழ்வும் சிவஞானியும்

கு. சரண்யா
முதுகலைத் தமிழ் முதலாமியாண்டு
சிவஞானி திருவடி சரணம் , குரு வாழ்த்து,

அன்புடன் நிழல் தரும் அரியல்நல் தருவே
அகந்தையை நீக்கி அருளிடும் கதிரே,
அஞ்ஞானம் போக்கும் அறிவுத் திருவே,
மெய்ஞ்ஞானம் நல்கும் விஞ்ஞான விரிவே,
உத்திகள் மனதினில் உரைத்திடும் கருவே,
புத்தி தெளிந்திட புகட்டிய மருந்தே,
கண்ணுக்குத் தெரியாத இறைவனின் உருவே,
மனத்தினில் நின்று காத்திடும் குருவே,
மாதவம் படைத்திட அருளிடுவாயே,

முன்னுரை

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலை மலை மீதிருக்கும் வள்ளல்

18 ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் எனப் போற்றி அருளாட்சி செய்தவர்கள், சுவாமிகள் திண்ணைப் பள்ளி ஆசிரயராக இருந்து தமிழ்க் கல்வியைப் பலருக்கும் போதித்தார். 1938 - ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ்க் கழகத்தின்வழி ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியை விழுப்புரம் மாவட்டம் மகிமை மிக்க மயிலம் மண்ணிலே தோற்றுவிக்க அருளாசி வழங்கினார்கள்.

பின்பு 19 - ஆம் பட்டம் சுவாமிகளின் காலத்தில்தான் தமிழ்க் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரியாக உயர்ந்தது. உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளியாக மிளிர்ந்தது 2011 - இல் மயிலம் பொம்மபுர ஆதீனமாகப் பொறுப்பேற்ற 20 - ஆம் பட்டம் சுவாமிகள். சமுகத்திற்கு ஆற்றிய பணிகள் ஏராளம் ஏராளம். ஆன்மீகப் பணிகள், மற்றும் சமுதாயப் பணிகள், நூலாக்கப்பணிகள், இதழ்ப்பணிகள் எனச் சமூகத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் 20 - ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்.

குருபார்க்கக் கோடி நன்மை

அகரம் முதலா அறத்தை வகுத்து , அருள் மொழி கொண்டு மாணவர்களின் அறிவுக்கண் திறந்தவர் 19 - ஆம் பட்டம் சுவாமிகள்.

மயிலின் மேல் மாசில்லா நாதன்
மயிலம் மலை மீது எழுந்தருளும் தேவன்
அருளமொழி சொல்பவர் ஆதீன குருமுனிவர்
அன்பால் ஆளும் ஆனந்தச் செல்வம்
அறிவின் ஒளிவீசும் மேன்மை தெய்வம்
மந்திரம் போல் ஒலிக்கும் திருவாக்கு
மனதைக் கவரும் நற்குரல் நாதம்
சித்தம் சுத்தமாகும் அவரின் தரிசனத்தில்
சிவம் வாழும் கருணை உள்ளம் கொண்டவர்
வாழ்வில் ஒளி தரும் வழிகாட்டி
உண்மை அறிவிக்க உன்மொழி போதும்

உளமெங்கும் கதிர் வீசும் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்.

கல்லூரிப் படிப்பும் எண்கண் திறந்தவரும்.

2022 - ஆம் கல்வி ஆண்டில் மயிலம் ஸ்ரீ.சி.பா.சு.த.க.அ. கல்லூரியில் . தமிழ்த்துறையில் இளங்கலை மாணவியாக அடி எடுத்து வைத்தேன். மயிலம் திருமடத்தில் சமயமும் சமுதாயமும் எனும் பொருண்மையில் மாதந்தோறும் கிருத்திகைத் திருநாளில் சொற்பொழிவு நடைபெறுகிறது. அச்சொற்பொழிவில் பாலசித்தர் என்னும் இதழும் 20 - ஆம் பட்டம் சுவாமிகளால் வெளியிடப் பெறுகின்றது. ஆசிரியப் பெருமக்களின் ஊக்கத்தினாலும் உதவி யினாலும் 20 - ஆம் பட்டம் சுவாமிகளின் கருணையினாலும் கிருத்திகைத் திருநாளில் பாலசித்தர் என்னும் இதழின் கருத்துக்களைப் பேசுவற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

அந்த வாய்ப்பே என் வாழ்க்கையில்
முன்னேற அடித்தளமாய் அமைந்தது

கிருத்திகை சொற்பொழிவில் கிடைத்த பயிற்சியினாலும், ஆசிரியப் பெருமக்களின் ஊக்கத்தினாலும் உதவியினாலும் சில பேச்சுப் போட்டிகளில் எனக்குப் பரிசும் கிடைத்து. அப்பொழுது காலத்தின் மாற்றத்தால் கணிக்க முடியாத பல துயரங்கள் எனது வாழ்வில் நேர்ந்த்து.

உயிரை அளித்த தாயின் பாதியாகிய இந்த உலகை உணர்த்திய தந்தையவர்களை தவறவிட்டு தடுமாறி நின்ற தருணத்தில் , என் வாழ்வு தழைக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் கல்லூரிப்பட்டமளிப்பு விழாவில் "கல்லூரி முதன்மை" எனச் சிறப்பளித்து, ஊக்கமும் உதவியும் அளித்து மேற்படிப்பிற்கான கல்விச் செலவுகள் அனைத்தையும் ஏற்று என் உயர்கல்வி தொடர்வதற்கு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் அருள்புரிந்தார்கள்.

கல்விக் கண்ணின் கருணை அருட்பார்வை.

20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களுக்குத் தமிழுணர்வையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி வருகிறார்கள். அவ்வகையில் இன்று தரணியெங்கும் ஆளும் தமிழறிஞர்களை உருவாக்கியதும் 20 ஆம் பட்டம் சுவாமிகளும், மயிலம் ஸ்ரீ.சி.பா.சு.த.க.அ. கல்லூரி என்றால் அது மிகையாகாது.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற "திருமூலர் அருளிய திருமந்திர பாடலுக்கு வித்திட்டவர்" நம் 20 -ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் ஆவார்கள்.

முடிவுரை

என்னையும் என்னோடு பயிலும் மாணவர்களையும் தமிழால் தழைக்கச் செய்தவர் நம் இருபதாம் பட்டம் சுவாமிகள். இத்தகு கல்விக்கான சிறந்ததோர் பணிகளை ஆற்றிவரும் 20 - ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவடிகளுக்கு என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

அதோடு துணை நின்று உதவிய எம் கல்லூரிச் செயலர் ஐயா அவர்களுக்கும், முதல்வர் ஐயா அவர்களுக்கும் மற்றும் தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் நானிலம் போற்றும் வகையில் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவஞானியின் திருக்கரத் திருநீறு

திருமதி சிவசங்கரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை அறிவியல் கல்லூரி, மயிலம்

முன்னுரை

சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து அக்னி ரூபமாக அவதரித்தவர் முருகப்பெருமான். இவரது அருள்பெற்று வீரசைவ நெறியைத் தழைக்கச் செய்தவர் மயிலம் பொம்மபுர ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர். ஸ்ரீ பாலசித்தரைத் தொடர்ந்து ஆதிசிவஞானி இத்திருமடத்தின் குருமகா சந்நிதானங்களாக வீற்றிருந்து உலக உயிர்களைக் காத்து அருள்புரிந்து வந்தார்கள். மக்களோடு மக்களாகச் சமுதாயப் பணி ஆற்றி மண்ணுலகைக் காக்கின்ற திருமடமே மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடமாகும். வீரசைவ நெறியில் முதன்மையாக விளங்குவது திருநீறு. சிவஞானியின் திருக்கரத் திருநீற்றின் ஆற்றலை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஒவ்வொரு சமய நெறியிலும் சமயச்சின்னங்கள் முதன்மை பெறுகின்றன. அவ்வகையில் வீரசைவ நெறியைப் பின்பற்றும் சாதகனுக்குப் பாதுகாப்பாக விளங்குபவை அட்டாவரணங்கள். அவை திருநீறு, உருத்திராக்கம், மந்திரம், இட்டலிங்கம், குரு, சங்கமம், பாதோதகம், பிரசாதம் என்பவையாகும். இவற்றுள் முதன்மை பெற்ற திருநீற்றை எந்தை சிவசாதனங்களுள் முந்தும் திருவெண்ணீறு என்று போற்றுவார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். தேவார மூவருள் முதன்மையாகப் போற்றப்படும் ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப்பதிகம் பாடி அதன் பெருமையைப் போற்றியுள்ளார். கூன் பாண்டியனின் வெப்பு நோயைப் போக்குவதற்குப் பாடப்பட திருப்பதிகமே இத்திருநீற்றுப் பதிகமாகும்.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே. (திருநீற்றுப்பதி.5)

என்ற பாடலில் பூசுவதற்கு இனிமையானது, புண்ணியத்தைத்

தருவது, பேசுவதற்கு இனியது, பெரிய தவசிகளுக்கு எல்லாம ஆசைக் கெடுப்பது, முடிவாக நிற்பது, உலகத்தாரால் புகழப் பெறுவது திருஆலவாயில் குடிகொண்ட சொக்கநாத பெருமான் திருநீறே எனப் பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

வேதங்கள் எல்லாம் விபூதி என்ற சொல்லிற்குக் குன்றாத செல்வம் எனப் பொருள் கூறும். அப்படிப்பட்ட பெருமைக்கும் மகிமைக்கும் உரிய திருநீற்றினைப் பெறுவதற்காகப் பிறப்பொழுக்கத்தில் வழுவாத அந்தணரும் சிவஞானியின் தண்தாமரை மலர்கை நீற்றைப் பெற்று அணிவதற்குத் தவம்புரிவர். இதன் மூலம் சிவஞானியின் மேன்மையை நமக்கு எடுத்துரைப்பதை,

குன்றா மறையுள் விபூதி என் றேசொலும் கூற்றினுக்குப்
பொன்றாத செல்வம் எனப் பொருள்கூறும் வன்பூசுரரும்
தண்தாமரை மலர்க்கைந்நீறு சாற்றத் தவம்புரிவர்
என்றால் எவர் சிவஞானி தன் சமன்மை இசைப்பவரே
.(சி.பா.தே.கலம்.41)

என்ற பாடல் மூலம் அறியலாம். திருஞானசம்பந்தரின் கோளறு பதிகத்திலும் திருநீறு செம்மை திடமே என்று போற்றியுள்ளார்.

அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகி
(போற்றித்திருவகல் 75)

என்ற பாடலில் ஒப்பற்ற பரம்பொருளே குருவாகி வந்து நமக்கு அருளாசி வழங்குவதை உணர்ந்து வாழ்வில் மேன்மை அடையலாம்.

சிவஞானியின் திருக்கரத்தால் வழங்கப்படும் திருநீற்றின் சிறப்பைக் கலம்பகத்தில் பல இடங்களில் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் கூறியுள்ளார். அத்தகைய திருநீற்றைப் பூசிக் கொள்ளும்போது, அரச வாழ்வு கிடைக்கும், மரண பயத்திற்கு மருந்தாகும், வறுமை நீங்கி செல்வம் சேரும், கொடிய பாம்பின் நஞ்சுக்குக் கருடக் கிழங்காகும், மலடர்க்குப் பிள்ளைப்பேறு கிட்டும் போன்ற நன்மைகளைப் பெறலாம் என்பதை,

இளைக்கு மிடியற்கு உறுபொருளாம்
இறைவர்க்கு அரசாம் கூற்றுவனை.....
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே (சி.பா.தே.கலம்.44)

என்ற பாடல் எடுத்துரைக்கின்றன. திருநீற்றுப் பிரசாதம் சர்வமங்களங்களையும் தரவல்லது. திருமந்திரத்தில்,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே. (6ஆம் தந்திரம் -2)

சிவபெருமான் விரும்பிப் பூசும் திருநீற்றை அணிபவர் வினைகள் நீங்கி சிவகதி கிட்டும் வாய்ப்பைப் பெற்று மகிழ்வர். பூசுவதும் வெண்ணீறு என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இதே போன்று பவளம் போல் மேனில் பால் வெண்ணீறு என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

சிவஞானி வீதியுலா வரும்போது தம் உடலில் திருநீற்றினைப் பூசிக் கொண்டாராம். மணப்பொருளான சந்தனத்தைவிட உடம்பின் அழுக்கையும் உள்ளத்தின் அழுக்கையும் ஒருசேரப் போக்கும் ஆற்றல் மிக்க திருநீற்றுக்கு உரியதாகும்.

முன்ஒரு நாள் சாதனத்துள் முந்துந்திரு வெண்நீறு
மன்னும் உயிரின்உறும் மாசுஒழிக்கும் துன்னும்
கலவையுடல் மாசாய்க் கழியும் எனக் கூறிப்
புலவர் இனம் போற்றப் புனைந்து (சித். சிகாமணி)

சந்தனம் பூசிக் கொள்ளாமல் திருநீறு பூசிக் கொண்டதென்பது வீரசைவக் கோட்பாட்டை நுட்பமாகக் கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது.

மூவரின் தொழிலினால் நமக்கு எதையும் வழங்காதிருக்கச் செய்யும் பேராற்றல் சிற்பரன் மெய்ச் சிவஞானி திருக்கை நற்பிரசாதமான திருநீறு அளிக்கும் என்பதை,

உற்பவ நிற்ப தொடுக்க அளிக்கும்
சிற்பரன் மெய்ச் சிவஞானி திருக்கை
நற்பிரசாத மலர்ப்பதம் நம்பால்
சொற்பெறும் மூவர் தொழில் புணராவே (சி.பா.தே.கலம்.29)

என்ற பாடல் உணர்த்துகின்றன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் சிவஞானியின் ஒவ்வொரு நிலையையும் பெருமைக்குரியவை எனக் குறிப்பிடுகையில் சிவஞானியின் செவ்வாயால் கூறப்பெறும் அருளுரைகள் எங்களுக்கு வேதமாகும் என்றும் எடுத்துரைக்கிறார்.

தொகுப்புரை

- குருவருளும் திருவருளும் ஒன்றே என்பதை உணர்த்தும் வகையில் ஆதிசிவஞானி வைகாசி விசாகத் திருநாளில் தமது தேகத்தைத் திருநீற்று மயமாக்கிக் கொண்டார்.
- சிவஞானியின் திருக்கரத்தால் வழங்கும் திருநீறு பல நன்மைகளைத் தருகின்றன.
- கருணையே வடிவமான சிவஞானியின் திருக்கரத் திருநீறு அனைத்து செல்வங்களையும் ஒருசேர அளிக்கவல்லது.
- பிறப்பொழுக்கத்தில் வழுவாத அந்தணரும் சிவஞானியின் தண்தாமரை மலர்கை நீற்றைப் பெற்று அணிவதற்குத் தவம்புரிவர்.
- திருநீறு இல்லா நெற்றி பாழ் என்பார்கள். அந்த அளவிற்குத் திருநீறு மகிமை பொருந்தியதாகும்.
- மணப்பொருளான சந்தனத்தைவிட உடம்பின் அழுக்கயும், உள்ளத்தின் அழுக்கையும் ஒருசேரப் போக்கும் ஆற்றல் வாய்ந்த்து திருநீறு.
- திருநீற்றினைப் பூசிக்கொள்ளும் மரபையே வழிவழியாகக் குருமகா சந்நிதானங்கள் இன்றும் மயிலம் மடாலயத்தில் கடைபிடிப்பதைக் காணலாம்.

மயிலம் பொம்புர ஆதீனத்தின் தொன்மை

சு.டிஷாலி,
முதுகலை தமிழ் முதலாமாண்டு,
ஸ்ரீ மத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்
9894832879
dishalishallu@gmail.com

முன்னுரை

தமிழகம் போற்றும் விழுப்புர மாவட்டத்தில் அமைந்துள்ள மயிலம் பொம்மபுர ஆதினத்தின் தொன்மையான வரலாறு குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

ஆதீன தோற்ற வரலாறு

மயிலம் பொம்மபுர ஆதினம் திருக்கயிலாய ஞானப் பரம்பரையின் வழி வந்ததாகக் கூறப்படுகிறது. கயிலையில் சிவபெருமானுக்கு மேற்குத் திசைக் காவலராக விளங்கிய பூதகனங்களுள் ஒருவராக விளங்கியவர் சங்குகன்னர். இவரை சிவபெருமான் அழைத்து, தென்னாட்டு வீர சைவ நெறியை பரப்பவேண்டியும் சித்தர் கொள்கைகள் வலுப்பெற வேண்டியும் தென்னாடு செல்லுமாறு கட்டளையிட்டார். அதற்கு சங்குகன்னர் கயிலையில் தான் சிவனருகில் இருப்பது போலவே மண்ணுலகிலும் இறைவனுக்கு அருகில் இருக்க வேண்டும் என வேண்டினார்.

இதனை ஏற்ற சிவபெருமான், மயில மலையில் முருகப்பெருமான் சன்னிதானத்தின் அருகே சிவலிங்க வடிவமாகத் தோன்றி உன் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்.

சங்கு கன்னரின் மானிட அவதாரம்

சாதாரண மானிடர் போல், கருவழித்தோன்றாமல், திருநீறு, உருத்திராக்கம், கல்லாடை, இட்டலிங்கம் அணிந்த மார்போடும், செஞ்சடை, குண்டலமணிந்த செவியோடும், சின்முத்திரை தாங்கிய வலக்கையோடும், திருநீற்றுப்பை, மந்திரக்கோல், வீரசைவ ஆகமத்தைக் கூறும் திருவாயோடும் பத்து வயது பாலகனாக தோன்றினார் என திருமடவரலாறு கூறுகிறது. பொம்மைய பாளையம், பெருமுக்கல், முதலான இடங்களுக்கு சென்று வீரசைவ நெறியைப் பரப்பினார்.

பால வயதிலேயே பல சித்துக்கள் புரிந்ததால் பாலசித்தர் எனப் பெயர் பெற்றார். பாலசித்தரின் தவஆற்றலால் சீடர்கள் பலர் உருவாகினர். அவர்களுள் பக்குவநிலை அடைந்தோரை உணர்ந்து, ஞானஉபதேசம் செய்தருளி, தான் தங்கி சிவயோகம் புரிவதற்காக அமைத்துக் கொண்ட திருமடமே பொம்மையப் பாளையத் திருமடம் என அழைக்கப்படுகிறது.

மயிலை மலையில் தவமேற்றல்

பாலசித்தர் பெருமுக்கல் முதலான மலைகளில் தவம் செய்த போது நாரதர் வாக்கின் படி மயில மலையை அடைந்து, நீராடி முருகனை நோக்கி 35 ஆண்டுகாலம் தவமிருந்தார். முருகன் அருள் புரியாததால் பஞ்சாக்னி நடுவில் இருந்து கடுந்தவன் இருந்ததாக திருமடவரலாறு பதிவுசெய்கிறது. இந்நிலையில் முருகன் மனமிறங்காததால் அவர் தம் மனைவியராகிய வள்ளி, மற்றும் தேவசேனையை நோக்கி பல நாள் தவம் புரிந்தார். தேவியர் இருவரும் சித்தரின் தவத்திற்கு மனமிறங்கி, முருகப்பெருமானிடம் அவருக்கு அருளுமாறு வேண்டினர். அருள் புரியும் காலம் வராததால், வற்புறுத்தும் தாம் இருவரும் என்னை விட்டு அகல்வீராக என கட்டளையிட்டார்.

அன்னையர் அருள்

பாலசித்தருக்கு அருள் புரியாத தன் கணவன் மீது ஊடல் கொண்ட இருவரும், பாலசித்தர் முன் சித்தக்கன்னியராக வடிவம் கொண்டு நின்றனர். அதனைக் கண்ட சித்தர் முருகப்பெருமானின் தேவியரே தம்மை ஆட்கொள்ள வேண்டி வந்துள்ளதை உணர்ந்தார். அவர்களை உபசரித்துவந்தார்.

முருகனோடு போர்புரிதல்

பாலசித்தருக்கு அருளும் காலம் வந்ததால், அரசர் கோளத்தில் மயிலையை அடைந்த முருகப்பெருமான், தன் மனைவியர் இருக்கும் ஆசிரமத்தில் நுழைய முற்றபட்டார். அங்கிறுந்த பாலசித்தர் கன்னியர் இருக்கும் இடத்தில் ஆடவர் நுழையலாகாது எனத் தடுக்க, இருவருக்கும் போர் தொடங்கியது. முருகன் ஏவிய எல்லாப்போர்கருவிகளையும் தடுத்ததோடு, வேலாயுதத்தையும் அன்னையர் அருளார் தன்வசப்படுத்திக்கொண்டார். முடிவில் ஆயுதமற்ற நிலையில் சித்தருடன் முருகப்பெருமான் மற்போர் புரியத்தொடங்கினார். பலமான போர் நடந்தது. போரின் இறுதியில் தம்மோடு போர் செய்தது தான் காணத்துடித்த முருகப்பெருமானே

என உணர்ந்துகொண்டார் தன் தவறை மன்னிக்குமாறு திருவடிபணிந்து வேண்டினார்.

சீடப்பரம்பரை தோற்றுவிக்க வேண்டுதல்

தனக்கு காட்சி தந்த முருகப்பெருமானிடம், ஐயனே அடியேனால் உண்டாக்கப் பெற்ற இத்திருமடத்தில் தாங்கள் இம்மணக்கோலத்தோடு எழுந்தருளி அருள்புரிய வேண்டும். அடியேனுடைய சீடனுக்கு ஆசாரிய அபிடேகம் செய்தும், மாணாக்கர்களுக்கு ஞானஉபதேசம் புரிந்துகொண்டும் விளங்கும் படி அருள்புரிய வேண்டும் என்றார். அப்படியே ஆகும் என அருள் வரம் தந்தார் முருகர்.

பாலசித்தரின் உபதேசங்கள்

- சிவாசாரம்
- லிங்காசாரம்
- பிருத்வியாசசாரம்
- கணாசாரம்
- சதாசாரம்

என்னும் ஐவகை ஆசாரங்களையும் (பஞ்ச ஆசாரம்),

- திருநீறு
- உருத்திராக்கம்
- ஐந்தெழுத்து
- குரு
- லிங்கம்
- சங்கமம்
- பிரசாதம்
- பாதோதகம்

ஆகிய எண்வகை காப்புகளின் சிறப்புகளைவும் லிங்க அங்கங்களையும், அறுவகை இணைப்புகளையும் விளக்கி வீரசைவநெறியைப் பரப்பினார்.

ஆதிசிவஞானி தோற்றம்

சிதம்பரம் பச்சை கந்த மரபைச்சார்ந்த அம்மவை என்பார் மகப்பேரு இன்றி வருந்தினார். இனி சிவநெறித் தொண்டே செய்யக்கடவது என உறுதியான மனதோடு பாலசித்தரை அணுகி

தன் கணவனோடு தொண்டு செய்து வந்நதார். பாலசித்தர் உண்ணும் சதரக்கள்ளிப்பாலை இவரே கொண்டு வந்து கொடுத்து வர ஒருநாள் பாலசித்தர் தான் உண்ட பிரசாத சேடத்தை அம்மவையாருக்கு கொடுத்தார். குருவருளாள் அழகிய ஆண் மகவை ஈன்றெடுத்தார். பாலசித்தரின் திருவருள் பார்வையில் அக்குழந்தை வளர்ந்து தொண்டு செய்து வர, அவர்தம் பக்குவநிலையை உணர்ந்து தமது சீடராக ஏற்றுக்கொண்டார். அவரை நோக்கி நீ சிவஞான பாலய தேசிகன் என சிறப்படைவாயாக மேலும் இத்திருடம் பாலய சுவாமிகள் திருமடம் என வழங்குவதாக எனவும் அருள் புரிந்தார். அன்று முதல் இன்று வரை திருமடம் சீறும்சிறப்புமாக இயங்கி வருகிறது. பாலசித்தரின் சீவசமாதி மணக்கோள முருகனின் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.

முடிவுரை

பாலசித்தர் தொடங்கி, 20 பட்டம் குருமகாசந்நிதானங்கள் வரை சமயப்பணியே சமுதாயப்பணி என சீரியநோக்கில் அருளாசிவழங்கி வருகிறது. மேலும், மக்கள் பணியே மகேசன் பணி என கல்விப்பணி, தமிழ் பணி, அன்னதானம், என பல பணிகளை சிறப்பாக செய்து வருகிறது.

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் வெளியீடுகள்

18ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் காலத்திலும் அதற்கு முன்பும் வெளியிடப்பெற்றவை (1 முதல் 19 வரை)

வெ.	நூல்களின் பெயர்	பதிப்பு
01	மயூராசல புராணம்	1931
02	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி யெழுச்சியும் கலம்பகமும்	1934
03	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பாடாண் பாட்டு	1936
04	சதமணி மாலை	1938
05	ஞாயிறு வாழ்த்து	1938
06	மயிலாசல மாது மூலமும் குறிப்பும்	1941
07	மயிலம் திருக்கோயில் - திருமட வரலாறு	1951
08	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மணிவிழா மலர்	1954
09	விவேக மணி	
10	பிள்ளைப்பாட்டு மூவர் உலா	

19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் காலத்தில் வெளியிடப்பெற்றவை (20 முதல் 80 வரை)

20	இட்டலிங்க அபிடேக மாலை (மூலமும் - பழைய உரையும்)	1965
21	காசி வழித்துணை விளக்கம்	1965
22	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது (மூலமும் - குறிப்புரையும்)	1966
23	நெடுங்கழி நெடில் குறுங்கழிநெடில் (மூலமும் - உரையும்) வீ.குமாரசாமி	1967
24	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் (மூலமும் - குறிப்புரையும்) வி.குமாரசாமி	1968

25	கைத்தல மாலை சிவநாம மகிமை (மூலமும் - உரையும்) வீ.குமாரசாமி	1969
26	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 1-ஆம் தொகுதி	1987
27	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 2-ஆம் தொகுதி	1988
28	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 3-ஆம் தொகுதி	1989
29	நிரஞ்சன மாலை (மூலமும் - உரையும்) வி.குமாரசாமி	1990
30	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 4-ஆம் தொகுதி	1990
31	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 5-ஆம் தொகுதி	1991
32	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 6-ஆம் தொகுதி	1992
33	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு (மூலமும் - உரையும்) வீ.குமாரசாமி	1992
34	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 7-ஆம் தொகுதி	1993
35	அல்லமபிரபு தேவர் சடுத்தலம் வி.குமாரசாமி	1993
36	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும் அடிகளாசிரியர்	1993
37	சோணசைலமாலை நால்வர் நான்மணிமாலை நன்னெறி மூலம் மட்டும்	1993
38	இட்டலிங்கப் பெருமான்தோத்திரத் திரட்டு மூலம் மட்டும்	1993
39	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 8-ஆம் தொகுதி	1994
40	மிசிர சடுத்தலம் (குறிப்புரை)	1994
41	சோணசைலமாலை (நூலாய்வு) க.விநாயகம், மா.சற்குணம்	1994
42	நால்வர் நான்மணிமாலை ஓர் ஆய்வு சு.திருநாவுக்கரசு, இரா.இலட்சாராமன்	1994
43	திருச்செந்தில் நிரோட்டகயமாக அந்தாதி பழமலை அந்தாதி (மூலமும் உரையும்) பழைய உரை	1994

44	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 9-ஆம் தொகுதி	1995
45	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது 2ஆம் பதிப்பு - ஆ.சிவலிங்கனார்	1995
46	பெரியநாயகியம்மை கலித்துறை (மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	1995
47	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 10-ஆம் தொகுதி	1996
48	பரம ரகசிய சடுத்தலம் (மூலமும் பழைய உரையும்) வீ.குமாரசாமி	1996
49	ஸ்ரீ பிட்சாடன நவமணிமாலை (மூலமும் உரையும்)	1996
50	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 11-ஆம் தொகுதி	1997
51	சிவ சடுத்தல சாரம், சிவயோக இலக்கணம் அக்கமாதேவி சிருட்டி - வி.குமாரசாமி	1997
52	திருவெங்கைக் கலம்பகம் (மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	1997
53	திருவெங்கை உலா (மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	1998
54	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தனிப்பாடல்கள் (மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	1998
55	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம் போற்றிப் பஞ்சகம் ஆ.சிவலிங்கனார்	1999
56	ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி ஆ.சிவலிங்கனார்	1999
57	திருக்கூவப்புராணம் (மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	1999
58	ஸ்ரீ மகான் பசவேசர் பொன்மொழிகள் முதல் பகுதி	1999
59	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீர்த்தி மாலைத்திரட்டு (6 தலைப்புகள்) ஆ.சிவலிங்கனார்	1999
60	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பனுவல் திரட்டு மூலமும் - உரையும்) (2 தலைப்புகள்) ஆ.சிவலிங்கனார்	2000

61	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மும்மணிக்கோவை ஆ.சிவலிங்கனார்	2000
62	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நூற்றிரட்டு மூலம் (5 நூல்கள் தொகுப்பு)	2000
63	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 101-200 இரண்டாம் பகுதி	2000
64	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் மூலமும் உரையும்) ஆ.சிவலிங்கனார்	2000
65	ஒருவாறும் இன்றி பாடல் விளக்கம் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் பாடல் விளக்கம்) ஆ.சிவலிங்கனார்	2001
66	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்களில் திருக்குறள் ஆட்சி - ஆ.சிவலிங்கனார்	2002
67	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறி வெண்பா நாற்பது (மூலமும் உரையும்) - ஆ.சிவலிங்கனார்	2002
68	ஸ்ரீமகான் பசவேசரின் பொன்மொழிகள் நான்காம் பகுதி	2003
69	குருகுகேசம் 1 வை.இரத்தினசபாபதி	2003
70	நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்களில் கற்பனைகள் ஆ.சிவலிங்கனார்	2003
71	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 3 ஆம் பகுதி	2003
72	சோணசைல மாலை (மூலமும் உரையும்) க.விநாயகம், மா.சற்குணம்	2003
73	நல்லாற்றூர் - துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் (இரண்டு தொகுதிகள்)	2004
74	குருகுகேசம் - 2 வை.இரத்தினசபாபதி	2005
75	நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்	2005

76	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு	2005
77	சோணசைல மாலை (மூலமும் உரையும்) பகுதி 2 க.விநாயகம் மா.சற்குணம்	2005
78	இட்டலிங்கப் பெருமான் தோத்திரத்திட்டு (5 நூல்கள் தொகுப்பு)	2005
78	பசவேசர் பொன்மொழிகள் - 5	2008
79	பசவேசர் பொன்மொழிகள் - 6	2009
80	பசவேசர் பொன்மொழிகள் - 7	2010

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் காலத்தில் வெளியிடப்பெற்றவை (81 முதல்)

81	பரசிவப் பாமாலை	2011
82	பிரபுலிங்க லீலை மூலமும் - உரையும் அடிகளாசிரியர்	2012
83	சித்தரும் சிவஞானியும் ஆ.சிவலிங்கனார்	2013
84	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் வ. வைத்தியநாததேசிகர்	2013
85	குருகுகேசம் - 3 வை.இரத்தினசபாபதி	2013
86	இட்டலிங்கப் பூசை முறைகள்	2013
87	மயூராசல புராணம்	2014
88	வீரசைவம் - சுருக்க வடிவமைப்பு	2014
89	சித்தாந்த சிகாமணி மூலம்	2014
90	சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் நவமணிமாலை மற்றும் சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் உயிர் வருக்கமாலை	2015
91	ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் நோக்கில் சமுதாயம் - முனைவர் பழ. முத்தப்பன்	2015
92	ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம்	2015

93	நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்	2015
94	சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம் - பேரா. தி. இராசகோபாலன்	2015
95	வழிபாட்டுப் பாடல்கள் - பாரதிதாசன்	2015
96	வீர சிங்காதன புராணம்	2015
97	நால்வர் நான்மணி மாலை மூலமும் உரையும்	2016
98	நிரஞ்சன மாலை & சிவநாம மகிமை	2016
99	மயிலம் முருகன் அருட்பனுவல்கள்	2016
100	முத்திக்கு முதலான முதல்வன்	2017
101	செந்தமிழ் வளர்க்கும் மயிலம் பொம்மபுர ஆதீனம் (புதுச்சேரி கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு)	2017
102	மயிலம் பொம்மபுர ஆதீனம் திருமட வரலாறு	2018
103	திருமால் வழிபாட்டு முறைகள்	2018
104	நன்னெறி வெண்பா நாற்பது	2019
105	காசி வழித்துணை விளக்கம்	2019
106	தமிழர் திருமண முறையும் வழிபாட்டுப் பாடல்களும்	2019
107	வழிபாட்டுப் போற்றி மலர்கள்	2021
108	நால்வர் நான்மணி மாலை மூலமும் உரையும்	2021
109	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் மூலமும் உரையும் - முனைவர் கி. சிவகுமார், முனைவர் ச. திருநாவுக்கரசு (உரை)	2021
110	வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணி மாலை - முனைவர் பழ. முத்தப்பன்	2022
111	சதமணி மாலை மூலமும் உரையும் - முனைவர் ச. திருநாவுக்கரசு (உரை)	2022

112	சிவஞான பாலய சுவாமிகள் பதிகம் மூலமும் உரையும் - முனைவர் ச. திருநாவுக்கரசு (உரை)	2022
113	நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் புலவர் வி.ச. சந்தானம்	2022
114	அருள்மிகு சுந்தர விநாயகர் வரலாற்றுப் பாமாலை முனைவர் ச. திருநாவுக்கரசு (உரை)	2023
115	அருள்மிகு மயிலியம்மன் வரலாற்றுப் பாமாலை முனைவர் ச. திருநாவுக்கரசு (உரை)	2023
116	19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் 12ஆம் ஆண்டு குருபூசைப் பெருவிழா மலர்	2023
117	சித்தாந்த சிகாமணி மூலமும் உரையும்	2023
118	அமுதவிழா காணும் வேரை விழுதுகள் வணங்கும் விழா மலர்	2023
119	இட்டலிங்க யோகா - மு. இளவழகன்	2024
120	சிவஞானியின் மகிமை - முனைவர் ச. திருநாவுக்கரசு	2024
121	பாசவதைப் பரணி - முனைவர் ச. திருநாவுக்கரசு	2024
122	அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் - புலவர் மு. வல்லாளன்	2025
123	ஸ்ரீ மயிலாசல அனுபூதி - சாமிநாத பிள்ளை	2025
124	சதமணி மாலை மூலமும் உரையும்	
125	வேதாந்த சூடாமணி மூலமும் உரையும்	2025